

உ
திருக்கோணமலை
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
கும்பாபிஷேக மலர்

உ

சக்தி துணை

# (சமர்ப்பணம்)





மகா சக்தியாகிய அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் கொண்டருளியிருக்கும் தலம் பாடல்பெற்ற திருக் கோணமலை பாதூர். அம்பாளுக்கு அருகில் வழிபடும் அடியார் இரந்திருக்கும் ஆலடி விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். அம்பாளுக்கு மக்களின் பக்தியின் சின்னமாக அமைக்கப் பெற்றதே சப்ததள இராஜ கோபுரம் "என்னமாதவம் செய்தனைத் திருநகர் என நினைக்கும் வண்ணம் எழுந்த ஒரு ஞானத்தின் திரு உருவத் தோற்றமாகும். இது அம்பிகையை நினைக்க தூண்டுதல் செய்யும். பெரு மாட்டியின் கருணை யினால் பூக்க எண்ணி லடங்கா மக்கள் கலந்து கொண்ட எண்ணைக் காப்பும் வேத ஆகம சிரோத்தமாக நடந்த குடமுழுக்கும், தொடர்ந்த மண்டலாபி ஷேகமும், அம்பாளின் திருவருளன்றி எனது செயல் அல்ல யான் காரணப் பொருளே தவிர காரியப் பொருளாக அம்பாள் நிகழ்கின்றாள். அருள்மிகு அம்பிகையின் திருவருளோடு எனது தந்தையார் பிரம்மஸ்ரீ சோமஸ் கந்த ஐயர் அவர்களின் நினைவலைகளே நிறைவு பெற்ற திருப்பணிகள் என்று கூற விரும்புகிறேன். கோவிலுக்கு அழகு **கோபுரம், கோபுர தரிசனம் கோடி புண்ணியம்,** என்னும் வாக்கிற்கு அமைய ஒளிபெற ஓங்கி வளர்ந்து நிற்கின்றது.

**கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகிய அற்புதக் கோலம் நீடு** என்னும் வாக்கிற்கு அமைய அம்பிகையும் **தால லிங்க வடிவில்** பக்தர்களுக்கு காட்சியளிக்கின்றாள். கும்பாபிஷேகத்திற்கு மகிழ், கொன்றை, கோங்கு, மந்தாரை சண்பகம், வெட்சி, காப்பு, அத்தி, குறிஞ்சி, போன்ற கொட்டுப் பூக்களும், அல்லி, வெள்ளெருக்கு, செம்பரத்தை, செவ்வந்தி, மருக்கொழுந்து போன்ற செடிப் பூக்களும் மல்லிகை, முல்லை, இருவாட்சி, போன்ற கொடிப்பூக்களும், செந்தாமரை, வெண்தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம் போன்ற நீர்ப்பூக்களும் கிரியைகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டன. இதனோடு மண்டலாபிஷேக புனித நன்னாளில் வாடா மலராக அருள் மணம் கமழ்ந்து மலர்ந்து நிற்கும் "சிலா சாசனம்" போன்று அழியாச் சின்னமாக விளங்க எழுத்துருவமான மலரொன்றை அம்பாளின் **பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.** இம்மலருக்கு புகழ் பெற்ற ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும், புராண இதிகாச வல்லுனர்களும் தினம் அம்பிகையைத் துதிக்கும் அடியார்களும் எழுத்தால், ஓவியத்தால் பாமாலை புனைந்த புகழாரம் சாத்தியுள்ளனர். பல மலர்கள் சேர்ந்தே ஆரமாக அமைந்துள்ளது. அம்பாளின் அருள் மணம் நம நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கமழ் கின்றது. கவிதைகள் பக்தி உணர்வைத் தூண்டுகின்றன. சொல் வடிவங்கள் உளத் தூய்மையை உண்டாக்கு கின்றது. இம்மலரை அம்பிகையின் திருவருளோடு தொகுத்து நிறை வேற்றியவர்கள் "**ஞான சிரோன்மணி**" பண்டிதர் **இ. வடிவேல்** அவர்களும், ஆலடி விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த "**சைவப் பேரறிஞர்**" **ஸ்ரீலஸ்ரீ. மு. சுந்தரலிங்க தேசிகர்** அவர்களும் **அருளாளர் வே. வரத சுந்தரம்** ஆசிரியரும் ஆவர். இவர்களுக்கு அம்பிகையின் திருவருட்பேறு கிடைக்கவேண்டுமென்று நினைந்து ஆசிகூறுகின்றேன். இம்மலர் உள்ள இல்லமெல்லாம் அருள்மணம் கமழும். **வளர்க இன் வையகம் வாழ்க சீர் அடியார்கள்.** ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் திருக்கோணமலை. இவ்வண்ணம் "வேதாகமமாமணி" **பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்** ஆலய ஆதீன கர்த்தா.

ஸ்ரீ கணேச அச்சகம் திருமலை

Justice of the Peace for All Island
Reg No. 2000/07/WA/E/311
31/1 1/1, Park Road, Colombo
255.12 பத்தி S4PR
Indexed
33876

உ



தெட்சண கைலாசத்தில்
அருளாட்சி புரியும்
சக்தி பீடங்களில் சிறந்தாக விளங்கும்
திருக்கோணமலை
அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
பிரமாண்டமான இராஜகோபுர,
திரிதள கற்பகிரக விமான நவகுண்ட பக்ஷிச

# மஹா கும்பாபிஷேக மலர்

**07 - 02 - 2001**


விக்கிரம வருடம் தை மாதம் 25ம் நாள்
புதன்கிழமை தைப்பூசத் திருநாள்



அருள்மிகு பத்திரகாளி அம்பாள்



A. திருக்கோணமலை அருள்மிகு ஆலடி விநாயகர்.



B. தாயினும் நல்ல தலைவர் திருக்கோணேஸ்வரரும் தலைவி மாதுமை அம்பாளும்.



ஆதீனகர்த்தா கு. கு. சோமஸ்கந்த ஐயர் அவர்கள் மானம்பூ உற்ஸவம் செய்தல்.



ஆதீனகர்த்தா கு. கு. சோமஸ்கந்த ஐயர் அவர்கள் கௌரி விரத பூஜை செய்தல்.

# ஆசீ பத்திரம்


| விடயம் | பக்கம் |
| --- | --- |
| ★ ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் ஆசிச்செய்தி | 01 |
| ★ சுவாமி ஆத்மகனானந்தாஜீ அவர்களின் ஆசியுரை | 02 |
| ★ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி | 03 |
| ★ பா. சண்முகரெத்தின சர்மா அவர்களின் ஆசிச்செய்தி | 04 |
| ★ சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களின் ஆசியுரை | 05 |
| ★ சிவஸ்ரீ உதயராகவக் குருக்கள் அவர்களின் ஆசியுரை | 06 |
| ★ திருவாவடுதுரை ஆதீன சிவப்பிரகாச பண்டாரசந்நிதி அவர்களின் வாழ்த்துரை | 07 |
| ★ பிரம்மஸ்ரீ இராஜராஜேஸ்வரக் குருக்கள் அவர்களின் வாழ்த்துச்செய்தி | 08 |
| ★ இரா. சம்பந்தன் அவர்களின் வாழ்த்துரை | 09 |
| ★ மு. கோ. செல்வராசா அவர்களின் வாழ்த்துரை | 11 |
| ★ K. K. சிவசுப்பிரமணியம் அவர்களின் வாழ்த்துரை | 12 |


★ ★ ★


| | |
| --- | --- |
| ★ கர்வமடக்கிய காளிகாதேவி | 13 |
| ★ அருள்மிகு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் | 22 |
| ★ கும்பாபிஷேகத்தின் சிறப்பு | 28 |
| ★ சப்ததள இராஜகோபுரமும், கருவறை விமானமும், ரசானுபவமும் பிரம்மானுபவமும் | 30 |
| ★ பூதசுத்தி அந்தர்யாகம் | 37 |
| ★ அன்னையின் அருளாட்சி | 39 |
| ★ மஹா கும்பாபிஷேகம் ஒரு நோக்கு | 42 |
| ★ பூத்து நிற்கும் பேரருள் | 45 |
| ★ ஸ்ரீ சக்கரம் | 48 |
| ★ சக்தி வழிபாடு பற்றிய சில வரலாற்றுச் சிந்தனைகள் | 49 |
| ★ ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப்பிறவியின் உயர்நோக்கத்தை நிறைவு செய்கின்றன. | 54 |

| விடயம் | பக்கம் |
|---|---|
| ★ அம்பிகை வழிபாட்டின் தொன்மை | 57 |
| ★ கும்பாபிஷேகமென்னும் பெருஞ்சாந்தி | 58 |
| ★ மங்களம் தரும் வேதம் - ஆகமம் - யாகம் | 61 |
| ★ குறுமுனியால் வரமுனி பெற்ற சாபமும் அதனால் ஜகத்திற்கு கிடைத்த போக்கிஷமும் | 69 |
| ★ கோபுர அமைப்பும் அதன் தத்துவங்களும் | 71 |
| ★ அருள் தரு அன்னை அம்பிகை | 73 |
| ★ சக்தி தாசன் காட்டிய பக்தி நெறி | 79 |
| ★ பாராயணஞ்செய்தற்குரிய தேவி ஸ்தோத்திர மாலை | 82 |
| ★ கண்டறியாதன கண்டோம் | 86 |
| ★ கோபுரமும் அதன் உடபொருள் விளக்கமும் | 89 |
| ★ கும்பகோனம் வலங்கைமான் ஸ்தபதி திரு. மாரிமுத்து இராஜேந்திரனுடன் செவ்வி | 91 |
| ★ இலங்கையில் காளி அம்மன் வழிபாடு | 93 |
| ★ கவிஞர்கள் வாழ்வில் காளி | 95 |
| ★ சக்தியின் மகத்துவம் | 98 |
| ★ சக்தி | 101 |
| ★ காலதேவதை அருள்மிகு காளிதேவி | 103 |
| ★ கும்பாபிஷேக மகிமை | 106 |
| ★ திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருப்பள்ளியெழுச்சி | 108 |
| ★ பத்திரகாளி அம்மன் திருவூஞ்சல் | 109 |
| ★ பத்திரகாளி அம்மன் காவியம் | 112 |
| ★ ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பதிகம் | 114 |
| ★ ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கலிவெண்பா | 117 |
| ★ அன்னை வடிவே அருட்கோபுரம் | 118 |
| ★ ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தோத்திரம் | 120 |
| ★ என்றம்மா தீர்வு? | 121 |
| ★ வாழ்த்துப்பா | 122 |
| ★ ஆவடிவிநாயகர் தேவஸ்தான வாழ்த்துப்பா | 123 |
| ★ காணாத கண்ணெனன்ன கண் ! | i |
| ★ காளி தேவியின் ரூபபேதங்கள் | iii |
| ★ எங்கள் பத்திரகாளி | 125 |
| ★ நன்றியுரை | |

உ

திருச்சிற்றம்பலம்

# துதிப்பாடல்

## விநாயகர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும் ஆம்தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## சிவபெருமான்

திருவருந் தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய்து அறிதற்கு அரும் பெற்றி எய்தி
அருவம்தனையும் உருவத்தையும் அன்றி நின்றான்
ஒருவன் தனது பதம்தனை உளத்துள் வைப்பாம்.

## தக்ஷிணாமூர்த்தி

கல்லானின் புடை அமர்ந்து நான் மறை ஆறங்கம் முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால் வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு அப் பாலாய்
எல்லாமாய் அல்லுதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்

## அம்பாள்

சுரும்புமுரல்கடிமலர்ப்பூங்குழல்போற்றி உத்தரியத்தொடித்தோள்போற்றி,
கரும்புவச்சிலைபோற்றி கவுணியர்க்குப்பால்சுரந்தகலசம்போற்றி
இரும்புமனங்குழைத்தென்னையெடுத்தாண்ட அங்கயற்கணெம்பிராட்டி
அரும்பு இளநகைபோற்றி ஆராண நூபுரஞ்சிலம்பு அடிகள்போற்றி

## மகிடாசுர மர்த்திநி

சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரை எல்லாம்
வந்திரி சிந்துர வண்ணத் தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே

## வைரவர்

பரமனை மதித்தடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டம்முன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## வீரபத்திரர்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்

## சுப்பிரமணியர்

ஈசுசேர் பொழுதினும் இறுதி இன்றியே
மாறிலாது இருந்திடும் வளங்கொள் காஞ்சியில்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம்வாழ்
ஆறுமா முகப்பிரான் அடிகள் போற்றுவாம்.

## நவக்கிரகம்

வேயுறு தோளி பங்கன் விடம் உண்டகண்டன் மிக நல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல. அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே

## நால்வர்

பூமியர் கோன் வெப் பொழித்த புகழியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக்கன் மிதப்பில் அணைந்த பிரான்அடி போற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழி மலிதிருவாதவூரர் திருத்தாள் போற்றி

## சேக்கிழார்

தில்லை வாழ் அந்தணரே முதலாகச் சீர் படைத்த
தொல்லையதாம் திருத் தொண்டத் தொகை அடியார் பதம் போற்றி
ஒல்லை அவர் புராணகதை உலகறிய விரித்து உரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடி போற்றி

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்கமலி வளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறை வல்லாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேல்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்

**- சுபமங்களம் -**

உ

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

## அவர்களின்

# ஆசிச்செய்தி

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஸப்ததள இராஜகோபுரமும், கருவறையின் மேல் த்ரிதள விமானமும் புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டிருப்பது அறிந்து சந்தோஷிக்கிறோம்.

அன்னை பராசக்தியை, மஹாகாளி – மஹாலஷ்மி மஹா சரஸ்வதி என்று மூன்று உருவங்களில் வழிபாடு செய்வது சம்பிரதாய மாக உள்ளது. நவராத்திரி நாட்களில் முதல் மூன்று நாட்களை, மஹிஷாசுர மர்தனி – துர்கை – காளி என்ற நாமங்களில் வழிபட்டுப் பேரருளை அடைகிறோம். தசமஹாவித்யை என்று கூறப்படும், தேவியின் பத்துவித உபாஸனை முறையில், காளியம்மன் முதல் இடத்தில் இருக்கிறாள்.

உக்ரமான ஸ்வரூபம் படைத்தவளாக இருந்தாலும், மென்மையான ஹ்ருதயம் கொண்டவள் காளி. சரணமடைந்தவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருபவள் பத்ரகாளி. பத்ர என்ற சொல்லுக்கு நல்லது க்ஷேமமானது என்று பொருள். பத்ரகாளி என்றால் எல்லா க்ஷேமங்களையும் வாரி வழங்கும் அன்னை என்பதாகும்.

வருகின்ற தைப்பூசத் திருநாளன்று ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் திருக்கோயில் கும்பாபிஷேகம் விமரிசையாக நடக்க விருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. திருப்பணியிலும், கும்பாபிஷேகத்திலும் ஈடுபட்டுள்ள அன்பர்களுக்கு அம்பிகையின் பரிபூரணமான அருள் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

எல்லாவகைத் துன்ப, துயரங்களிலிருந்தும் மக்களை விடுவித்து அமைதியான வாழ்க்கை அனைவருக்கும் அமையவேண்டுமென ஸ்ரீ சுந்தரமௌளீஸ்வரரைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்ம்ருதி

விக்ரம தக்ஷிணாயனம்
சரத்ருது விருச்சிக
சுக்லபக்ஷ த்விதியை

உ

## கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர்
## சுவாமி ஆத்மகனானந்தாஜீ அவர்களின்

# ஆசியுரை

திருக்கோணமலை திருநகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் 66அடி உயரமான சப்ததள இராஜகோபுரமும், அம்பிகையின் திரிதள விமானமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, 2001ஆம் ஆண்டு ஜனவரியில் தைப்பூசத் திருநாளன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளதென அறிகிறோம்.

அம்பிகையின் திருவருளினால் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புடன் நடந்தேறி மக்கள் மனதில் அன்பும், அமைதியும் நிறைய திருவடிகளை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

இறை நம்பிக்கையும், அதன் அடிப்படையில் செய்யப்படும் இறைவழிபாடும் காலங்காலமாக மனித குலத்தை நல்வழிப்படுத்தி வந்திருப்பதை சரித்திரம் பகர்கின்றது. மனிதன் ஆறறிவு படைத்திருப்பினும் அதன் அடிப்படையில் வாழ்க்கை வசதிகளைப் பலவாறாக பெருக்கியிருப்பினும் வாழ்க்கையில் இக்கட்டான நிலையை சந்திக்கும் போது தனது இயலாமையை உணர்ந்து இறைவனது துணையை நாட வேண்டிய நிலையில் அவன் உள்ளதைக் காண்கிறோம். இந்த இக்கட்டான நிலையில் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் இறைவனோடு எழுதில் தொடர்பு கொள்வதற்கு உதவும் இடமே ஆலயமாகும்.

நமது சமயத்தில் தோன்றிய எண்ணற்ற ஞானிகள், ஆலயந்தோறும் சென்று அங்கு வதியும் இறைவனை வழிபட்டு அவனது திருவருளைப் பெற்ற அற்புத வரலாறு சரித்திர உண்மையாகும்.

வழிபாட்டின் அடிப்படையாக விளங்குவது புறத்தூய்மையும், அகத்தூய்மையுமே இத் தூய்மையின் அடிப்படையின் மாத்திரமே இறையருளைப் பெற இயலும்.


எனவே நம் முன்னோர்கள் தாபித்த ஆலயங்களைக் காத்தும் வளர்த்தும் தூய்மையின் அடிப்படையில் இறைவழிபாட்டில் ஈடுபட்டும் இறையருள் பெறுவோமாக!

உ

## பிரதிஸ்டா பூஷணம்

# சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி



அலைகடல் சூழ்ந்த இப்பூவுலகின் கண் சிறப்புப்பொருந்திய தென் இந்தியாவிலே சைவம், வேதம், ஆகமம் வளர்த்த சமயசாஸ்திர ஆராய்ச்சியாளர்களான சைவ வைதிக சாஸ்திரசிரோன்மணிகளான சிவாசாரிய பெருமக்களும் அவர்களின் வழிவகுப்பில் நடைபெறும் சிவ தேவி, முருக விநாயகர், விஷ்ணு ஆலயங்களும், சரித்திர பெருமையுடன் போற்றப்படுகின்றன. அதே போல இலங்கைத் திருநாட்டில் சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற ஸ்தலம் திருக்கோணமலை கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், பெருமையுடனும் அருட்சக்தியுடனும் பொலிந்து விளங்குகின்றது. திருக்கோணமலைப் பதியில் சிறப்பும் அருளும் நிறைந்து விளங்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயம் அந்த ஆலய மூர்த்தி சமுத்திரத்தில் வந்து காட்சிகொடுத்து வந்த உருவச்சிலை இதற்கு விஷேசமாக அன்னை வந்ததுடன் அவரின் வாகனமாகிய சிம்ம வாகனமும் இவ்விதம் வந்து கரை சேர்ந்ததாக மூதாதையர் மூலம் அறியக்கிடக்கிறது. எனவே கன்னியா என்னும் தீர்த்த மகிமையான இடமும் உண்டு. இந்த அம்பாள் கோயிலுக்கு முன்பாக விக்கினம் தீர்க்கும் விநாயகர் ஆலயம் சிறப்புடன் காட்சியளிக்கிறது. அன்னை காளி அம்பாளின் அருள் திறனை எமது வாயால் விபரிந்துக் கூற முடியாது.

அன்னை ஆலயம் 1980ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்த அமரர் பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த குருக்களின் செயல்திறன் அம்பிகையின் திருவருள் சிறப்பாக நடந்தது. குருக்கள் துயிலும் போதும் அன்னையின் ஆலயத்தின் கருத்துடன் தான் இருப்பதைக் காணலாம். இப்போது அவரின் உத்தமபுத்திரன் வேதாகமமாமணி சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்களின் பரிபாலனத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. பங்குனி உத்தரத்தில் பிரமோற்ஸவம், நவராத்திரி, கௌரி காப்பு பூசை, லட்சார்ச்சனை என்பன நவராத்திரி யில் சிற்பாக நடைபெறும் .

தற்போது இறைவியின் திருவருள் கடாட்சத்தால் ஏழு தள ராஜகோபுரம் மூலஸ்தானம் என்பன புதிதாக அமைக்கப்பெற்று தென்னிந்திய சிற்ப கலைஞர்களாலும் அராலி கலைஞர் சிற்பகலாநிதி ரவி ஆசாரியாரின் கைவண்ணமாக சிறப்பாக அமைக்கப்பெற்று தைமாதம் தைப்பூச நன்னாளில் கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா நடத்த அன்னையின் அருட்கடாட்சம் அமைந்து இருப்பது பக்த பெருமக்களின் உற்சாக மெய்யுணர்வு தர்ம சிந்தை என்பன எடுத்துக்காட்டாக உள்ளது.

சிவசாயுச்சியம் பெற்றாலும் அமரர் சோமாஸ்கந்த குருக்களின் அருளாசியும், அன்பும் தேவியிடம் உள்ள பாசமும் அனுக்கிரகமாக இரவிச்சந்திரக் குருக்களுக்கு அமைந்துள்ளது. இறைவியின் திருக்கருணையென்றே போற்றலாம். உற்ஸவ காலங்களில் அம்பிகையை பலவிதமாகன அலங்காரங்களைச் செய்து பொது மக்களைபரவசமூட்டும் நிலையில் அவரின் செயல் திறன் அமைந்திருப்பது அவரிடம் பொருந்திய பக்தி, தயவு, அன்பு கருணையின் அமைதி என்பவை அன்னை ஆக்கிவைத்திருப்பது பெரும் வரப்பிரசாதம் எனலாம்.

வழிவழியாக பரம்பரை குருவாக அன்னையின் கைங்கரியத்தை ஆர்வமுடன் நடத்தும் பெரும் பாக்கியமான அருள் நாயகர் என்றே நான் கூற விரும்புகிறேன் அன்னாருக்கு அன்னையின் பரிபூரண அருளும், பக்தர்களின் அன்பும் குறைவுபடாது வாழவேண்டி அன்னையின் திருப்பாத மலர்களை மனமார தொழுது எனது நல்லாசிகளையும் பிரார்த்தனைகளையும் இம்மலர் வாடாத மலராக மக்கள் இல்லங்களில் அனுபூதியாக மலர வேண்டி அம்பாளை திரிகரண சுத்தியுடன் பிரார்த்தனை செய்வோமாக.

உ

பிரம்மஸ்ரீ

"வேதாகமமாமணி"

# பா. சண்முகரத்தின சர்மா அவர்களின்

# ஆசிச்செய்தி

சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குசல: ஸ்பந்திது - மம!
அதஸ் - த்வா - மாராத்யாம் ஹரி - ஹர ஷரிஞ்சாதிபி - ரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வாகதமக்ருத - புண்ய: ப்ரபவதி

அன்னை பராசக்தியை வழிபடுபவர்களுக்கு மறுபிறப்பில்லை. மூவரும் தேவரும் போற்றும் அவளை வழிபட பூர்வ புண்ணியம் வேண்டும் சிவம் வேறு சக்திவேறு அன்று ஒரே தத்துவத்தின் இணைபிரியாத இரண்டு அம்சங்களே மும்மூர்த்திகளுக்கும் ஆதாரம் சக்தியே. சக்தி இல்லையேல் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய செயல்கள் நடைபெறாது. இச்சையும், ஞானமும், கிரியையும் அவளே.

"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடறிய பேரறிவாய்" உயிருக்குள்

உயிராகி, அந்தர்யாமியமாய் அகண்ட ஜோதியாய்த் துலங்குகின்றாள். சிவனிடமிருந்து வெளிப்படும் சக்தியே புருஷர்களிடத்தில் விஷ்ணுவாகவும் போகத்தில் பவானியாகவும், கோபத்தில் காளியாகவும், போரில் கொற்றவையாகவும் அருள்பாலிக்கின்றாள். சகல விதமான மங்களங்களையும் மங்கள ரூபிணியாக, பத்திரகாளியாக திருமலையிலே எழுந்தருளி அன்னை அருள் வழங்குகின்றாள் காளிதத்தவம் அற்புதமானது காலம் கடந்து நிற்பவள். களிப்பின் எல்லையைத் தொடுபவள் அவள் தன்னை வணங்கியவர்களுக்கு வற்றாது அருள் சுரக்கும் ஜீவ ஊற்று

ஸ்ரீ பத்திரகாளியன்னைக்கு தமிழகத்தில் தஞ்சைக்கருகில் திருபுள்ள மங்கையும் காஞ்சிபுரத்தில் கருக்கிலமர்ந்தாள் கோயிலும் திருவாரூரில் இராஜமாகாளியம்மனும், அறந்தாங்கியில் வீரமாகாளியம்மனும், சென்னையில் காளிகாம்பாள் கோயிலும், கோவையில் குண்டத்துக்காளி யம்மனும், மிகவும் புகழ்வாய்ந்த ஆலயங்களாக விளங்குகின்றன. இலங்கைத் திருநாட்டில் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் மிகவும் பிரபலம் வாய்ந்தது.

அருட்சக்தி நிரம்பிய ஸ்ரீ பத்திரகாளி அன்னையின் ஆலயத்திற்கு மிகச் சிறந்த முறையில் தமிழ் நாட்டு சிற்ப வல்லுநர்களைக் கொண்டு 66அடி உயரத்தில் இராஜகோபுரமும் கற்பகிரகமும் அமைக்கப்பெற்று மஹா கும்பாபிஷேகவிழா தைப்பூசத்தினத்தில் நிகழ்வது மிகமிக உத்தமமானது வேதாகமமாமணி சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களது அயராத முயற்சியே ஆலயத்தின் இத்துணை சிறப்புக்களுக்கும் காரணம். இவரது தந்தையார் இட்ட விதையே இன்று வளர்ந்து பெரு விருட்ஷமாகி இராஜகோபுரம் அமைவதற்கு தோன்றாத்துணையாய் உள்ளது என்றால் அதுவே உண்மை.

ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற கும்பாபிஷேக மலர் மலர்ந்து அருள்மணம் பரப்ப எல்லாம் வல்ல ஸ்ரீ பால செல்வ விநாயகனின் பதமலர் பணிந்து ஆசீர்வதிக்கின்றேன்.

சுபமஸ்து

உ

**ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தான பிரதமகுரு**

**சைவசித்தாந்த பிரதிஷ்டா சக்கரவர்த்தி**

**சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களின்**

# ஆசியுரை

இலங்கையின் கிழக்கு மாகாணத்துத் திருக்கோணமலையில் பண்டுதொட்டு அருளாட்சி புரியும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் குடமுழுக்கு 07 – 02 – 2001 தைப்பூச நன்னாளில் நடைபெறும் இவ்வேளையில் எமது குலதெய்வமாம் இக்காளி அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ. கு. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் முயற்சியால் 06 – 02 – 1980 மிகச்சிறந்த முறையில் நடந்தேறியது . இப்பொழுது அவரது மகன் சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள் முயற்சியால் இராஜகோபுரம் கருவறை விமானம் எல்லாம் புதிதாக கட்டி அநேக திருத்தங்கள் செய்து முன்னிலும் விசேஷமாக நடைபெறும் கும்பாபிஷேகத்திற்கு எனது நல்லாசிகள்.

எது எப்படியானாலும் இவ்விரு குருமாரும் தமக்கென ஒன்றையும் எதிர்பாராது அம்பாள் தொண்டே தம் கடமையென்ற மன உறுதியுடன் செயல்படுவது அம்பாளின் திருவருளாகும். தேவி தொண்டில் ஈடுபட்டு வரும் சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் மனைவி மக்கள் எல்லோரும் ஆயுள் ஆரோக்கியம் ஐஸ்வரியயத்துடன் நீடூழி வாழ அம்பாளை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

காளி தேவியின் அடியார்கள் யாவரும் நல்வாழ்வு வாழ்வார்களாக!

சிவம்பவது

உ

**மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு**
**வேதாகமவித்தகசக்தி**
**உபாசகர் சிவஸ்ரீ உதயராகவக் குருக்கள் அவர்களின்**

# ஆசியுரை

யாதுமாகி நின்று உலகை ஆட்கொள்பவள் அன்னை மாகாளி, நம்சமயம் கூறும் பரம்பொருள் சிவமும் சக்தியுமாகி உலகை உய்விக்கிறது. அந்தமில் இன்பத்து அழிவில் பொருளாய் நிலைத்து நிற்கும் சிவத்தினை அடைதலே ஆன்மாக்களின் முடிவின்பமாம். மெய்யுணராது, பொய்மையுட் கலக்கும் தம் புன்மையால் ஆன்மாக்கள் சிவத்தை விடுத்து, மலவயப்பட்டு அறிவழிந்து பாடான நிலை அடைகின்றன. அச்சடநிலை எய்தியபின் அந்நிலையின் அவலம் உணர்ந்து விடுதல் நோக்கி விருப்புக்கொள்ளும் உயிர்களை, உய்வித்து அசைவற்ற சிவத்திடம் சேர்ப்பிப்பவள் அன்னை பராசக்தி அழுக்குற்றுத் துன்புறும் ஜீவாத்மாக்களை அன்னையாகி அருள் செய்து தூய்மைப்படுத்தி பரமாத்மாவிடம் சேர்க்கும் அப்பெரும் காரியத்தை தன் தாய்க்கருணையால் செய்து நிற்பவள் சக்தியே. சிற்சக்தியாகி ஆன்மாக்களை மாயையுள் மூழ்கச் செய்து தூய்மைப்படுத்தி தூய்மையற்ற ஆன்மாக்களை அருட்சக்தியாக்கி ஐயனிடம் சேர்ப்பித்து அருள் செய்கிறாள் அவள் 'தாயேயாகி வளர்த்தனை போற்றி" எனவும் முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே" எனவும் அடியார், அவள் தம் அற்புதத்தை வியந்து நிற்பர் இவ் அற்புதங்களைச் செய்யும் பராசக்தி, ஆன்மாக்களைக் காக்கும் பொருட்டு, நன்மையை வளர்க்கவும், தீமையை அழிக்கவும் பல வடிவங்கள் கொள்கிறாள். அவ்வடிவங்கள், சாத்வீக வடிவங்கள், ராஜஸ வடிவங்கள், தாமஸ வடிவங்கள் என மூவகைப்படும். இவற்றுள் அன்னையின் தாமஸ வடிவங்களுள் ஒன்றாய்த் திகழ்வதே, காளிகாம்பாள் வடிவமாம். பயங்கர ரூபம் கொண்ட இவ்வடிவத்தோடு அன்னை தோன்றினும், அவள் நல்லாரைக்காத்து அல்லாரை அழிக்கவே இவ் அச்சம்தரும் வடிவு கொள்கிறாள் என உணர்தல் வேண்டும். உண்மை அன்புற்று உள்ளத்தால் நினைவார்க்கு இடரழித்து, அருள் கொடுத்து, ஆள்வாள் நம் மாகாளி. அவள் பேரருளை கொழும்பு மயூரபதி ஆலயத்தில் பத்து ஆண்டுகளாய் அனுபவிக்கும் பாக்கியம் பெற்றேன். அக்காளியன்னை, பாடல் பெற்ற திருகோணமலையில் வீற்றிருந்து, ஆயிரக்கனக்கான அன்பருக்கு பல்லாண்டாய் அருள் செய்து வருகிறாள். அவ்வாலயத்தை அறநெறி நின்று வழிநடத்தும் அறவாழி அந்தணராய்த் திகழ்பவர் நம்முடைய மதிப்புக்குரிய பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக்குருக்கள் அவர்கள். உண்மை அன்பர்கள், சிறந்த தர்மகர்த்தா, நல்ல வழிபாடு என்பவை அமைய மாகாளி மனமுவந்து கண்வைத்தாள். ஆகா என்று எழுந்தது ராஜகோபுரம் . அன்னையின் அருள்போல, வான்முட்டி நிற்கும் இந்த ராஜகோபுரத்தைக் காண்பார், வினைநீங்கி வீடுறுவது திண்ணம். அவ் அரிய குத்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள அன்னை அருள் பாலித்தாள். அவ் அற்புத நிகழ்வினை ஒட்டி வெளியீடப்படும் இக்கும்பாபிஷேக மலர், அன்பர்க்கு மேலும் அருள் சோக்கும் என்பது திண்ணம். இந்நூல் மூலமும், அன்பர்கள் அன்னையின் அருள்பெற, என்னை வாழ்விக்கும் மயூரபதி மாகாளியின் அருள்வேண்டி ஆசி கூறுகின்றேன்.

உ

### குரு மகாசந்நிதானம் திருவாவடுதுறை ஆதீன

## சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்

*"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க*
*ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க*
*ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"*

# வாழ்த்துரை

தேவர் முதலாயினர்க்குத் தாருகாசூரனால் நேரிட்ட துன்பங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்ற சிவபெருமான் பெண்ணாலன்றி வேறெவராலும் இறவாத தாருகனை வெல்லச்சக்திக்குக் கட்டளையிட அது பொழுது தோன்றிய சக்தியின் ஒரு கலை, பெருமானின் விடக்கறை படிந்து கனல் கண்ணில் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுருகாளமாகிய விடக்கறைபடிந்து தோன்றியமையால் காளி எனப்பெயர் பெற்றது. காளி தேவி அசுரனை வென்று நீறாக்கி உயிர்களைக் காத்தனள் என்பது வரலாறு.

திருக்கோணமலையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருக்கோயில் நூதன திருப்பணிகளைப் பெற்று இவ்வாண்டு தைப்பூசத் திருநாளன்று திருக்குட நன்னீராட்டு விழாப் பொலிவு கொள்வதும் அது போழ்து சிறப்பு மலரொன்று வெளியிடப்பெறுவதும் தெரிந்து மகிழ்கிறோம்.

திருக்குட நன்னீராட்டு விழா சீரும் சிறப்புமுற நடைபெறவும், ஆன்மீகச் செய்திகளில் தெளிவெய்தி அன்பர்கள் அனைவரும் இருமையின் பங்களையுமெய்தி மேன்மையுறச் செய்யும் அரியபடைப்புகளுடன் விழா மலர் நல்லவண்ணம் மலர்ந்து இன்பம் பெருக்கவும் அருள ஆன்மார்த்தமூர்த்தி அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

சுபம்

உ
குகமயம்

**நியூஸிலாந்து திருமுருகன் கோவில் சபை**
**செயலாளர்**
**பிரம்மஸ்ரீ இ. இராஜ இராஜேஸ்வரக் குருக்கள்**
**அவர்கள்**

# வாழ்த்துச் செய்தி

மதிப்பிற்குரிய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக்குருக்கள் ஐயா அவர்கட்கு,

தங்கள் ஆலயக்கும்பாபிஷேகம் விஞ்ஞாபப் பத்திரிகை எமது குருக்கள் ஐயா மூலம் கிடைக்கப் பெற்றோம் மிக்க மகிழ்ச்சி.

இக்கட்டான இந்தச் சுழ்நிலையிலும் எவ்வளவோ சிரமத்தின் மத்தியிலும் " திரிதள தூபியும் " சப்ததள "ராஜ கோபுரத்தையும்" நிறுவிக் கும்பாபிஷேகம் செய்துவிப்பது அம்பிகையின் அருளும் தங்கள் விடா முயற்சியுமே. அம்பாளின் கும்பாபிஷேகம் சிறப்படைய எமதாலய பிரதம குரு வணக்கத்திற்குரிய வேதாகமமாமணி பிரமஸ்ரீ ராஜேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களும் எமது ஆலய நிர்வாகச் சபையினரும், நியுஸிலாந்து திருமுருகன் தாழ் பணிந்து ஆற்றும் பெரும் பணி சிறப்படைய வேண்டும் என்று அம்பிகையை வணங்கி வாழ்த்துக் கூறுகிறோம்.

**வணக்கம்**

**த. பாலதேவன்**
செயலாளர்
நியூசிலாந்து திருமுருகன் கோயில் சபை.

**இராஜ இராஜேஸ்வரக் குருக்கள்**
முன்னைநாள் பிரதம குரு
முத்துக்குமாரசுவாமி கோயில்
திருகோணமலை.

# வாழ்த்துரை

## திருக்கோணமலையின் காவல் தெய்வம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

-- இரா. சம்பந்தன் --

வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் வாய்ந்த திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம் இலங்கையின் முதன்மைச் சக்தி பீடமாக விளங்குகின்றது. சக்திச் சுடராகவும் அடியார்களின் துயர் போக்குபவளாகவும் தீராத நோய் தீர்க்கும் கருணைத் தெய்வமாகவும் அன்னை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் அருளாட்சி செய்து வருகின்றாள். கேடதனை நீக்கிக் கேட்ட வரம் தருவாள் என்று மகாகவி பாரதியார் பாடியிருக்கின்றார்.

ஈஸ்வரியாய், காமாட்சியாய் தயாபரியாய் கொற்றவையாய் லோகமாதாவாய் அடியார்களுக்கு அபயம் அளித்து வருபவள் அன்னை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள்.

இராமேஸ்வரத்தில் வாழ்ந்து வந்த அந்தணர் ஒருவர் அசரீரி கூறியபடி திருக்கோணமலை வந்தார். அசரீரியின் வாக்கில் சொன்னபடி குறிப்பிட்ட இடத்தில் தொங்கு செவ்வரத்தை ஒன்றைக் கண்டார். அவ்வந்தணர் அந்த இடத்தைத் தோண்டியபோது செப்புக்கிடாரம் ஒன்று வெளிப்பட்டது. அந்தணர் அக்கிடாரத்தைத் திறந்து பார்த்தார். அதனுள்ளே அழகிய அம்மன் விக்கிரகம் ஒன்று காணப்பட்டது. அவ்வந்தணர் அவ்விக்கிரகத்தை வைத்து வழிபடுவதற்கு ஆரம்பித்தார். அந்த அம்மன் விக்கிரகத்தின் அமைப்பு பதினொராம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுக் கோயில்களில் பூசிக்கப்பட்டு வந்த காளி அம்மன் திருவுருவங்களை ஒத்ததாகக் காணப்பட்டது என்று தொல்பொருளியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் பழைய சாசனங்கள் கர்ண பரம்பரைக் கதைகள் அவற்றோடு தொடர்புடையதாக தற்போது கோயிலில் வைக்கப்பட்டிருக்கும் விக்கிரகம் தகளி வாகனம் மற்றும் பொருள்கள் இந்த ஆலயத்தின் வரலாற்றுத் தொன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளன. இவற்றை ஆதாரமாக வைத்து வரலாற்றுப் பேராசிரியர் திரு.செ. குணசிங்கம் நடத்திய ஆய்வில் முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய பதினொராம் நூற்றாண்டில் ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலயம் சிறப்புற்று விளங்கியது வெளியாயிற்று. இராஜேந்திரசோழன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இந்துக் கோயில்களைக் கட்டி ஆதரித்து வந்துள்ளான் என்றும் அவ்வாறு கட்டப்பட்ட ஆலயங்களில் பல திருக்கோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ளன என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இக்கருத்தை வலியுறுத்துவதாக திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்தூண் ஒன்றில் காணப்படும் கற்சாசனம் அமைந்திருப்பதாக வரலாற்றுப் பேராசிரியர் திரு. குணசிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். அக்கற்சாசனம் இராஜேந்திர சோழ மன்னனின் கீர்த்தியைப் புகழ்கிறது என்ற கருத்தை அவர் தனது ஆய்வில் நிறுவியுள்ளார்.

அம்பாளின் அற்புதங்கள் அடியார்களின் அனுபவங்களாக வெளியாகியுள்ளன.

சக்தியானவள் தன்னை நாடி வந்து சரணடையும் அடியார்களுக்கு அருள்வாக்கு வழங்குகின்றாள். அம்பாளின் அன்புக்கரங்கள் ஆதரவற்றவர்களை அரவணைத்து ஆறுதல் கூறும் அருட்கரங்களாகின்றன.

இவ்வரலாற்றுப் பெருமைக்குரிய அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் இந்து மத முறைப்படி மிக நேர்த்தியாக பரிபாலிக்கப்பட்டு வருகின்றது என்ற சிறப்பைப் பெற்றுள்ளது.

ஆலயம், ஆலயச் சூழல், புனிதமும் தெய்வ சாந்நித்தியமும் நிறைந்த ஒன்றாகப் பேணப்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக இந்த ஆலயம் அமைந்துள்ளது.

ஆலய ஆதினகர்த்தாவும் பிரதம குருவுமாகிய பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்கள் காலத்தில் அம்பாள் ஆலயத்தின் திருப்பணிகள் போற்றதக்கனவாக அமைந்தன. பிரம்மஸ்ரீ சேமாஸ்கந்த ஐயர் அவர்களின் அம்பாள் மீதான பக்திப்பெருக்கு திறமையான ஆலய நிர்வாகம் அயராத உழைப்பு ஆகியன ஆலயத் திருப்பணிகள் சிறந்து விளங்கக் காரணமாயிற்று.

அன்னாரின் காலத்தில் ஆலயத்தில் போற்றத்தக்க திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. கிழக்கிலங்கையே பெருமைப்படும்படியான மூன்று சித்திரத் தேர்களும் மஞ்சமும் செய்யப்பட்டன. கர்ப்பக் கிரகத் தூபி நிர்த்த மண்டபம் புதிய கண்டாமணி பொருத்தப்பட்ட மணிக்கோபுரம் தேராலயம் வாகனசாலை முதலிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர் அவர்களின் விடாமுயற்சியினால் அன்னார் தனது காலத்தில் அம்பாளின் திருவருளின் துணையுடன் நான்கு மகா கும்பாபிஷேகங்களை நிறைவேற்றி வைத்தார்.

தந்தையாரின் வழியில் அவரது ஏக புதல்வன் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் ஐயா அவர்கள் ஆலய பரிபாலனத்தைச் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றார். ஆலயத்தில் பல திருப் பணிகளை அவர் நிறைவேற்றி வருகின்றார். இத்திருப் பணிகளில் உச்சமாய் அமைந்துள்ளது 66 அடி உயர நூதன லய சப்ததள ராஜகோபுர மகாகும்பாபிஷேகம் ஆகும். அன்னை ஜெகன்மாதா பத்திரகாளி அம்பாளின் பூரண அனுக்கிரகம் இப்புனித பாரிய திருப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற அவருக்கு உதவியுள்ளது. அதுமட்டுமல்ல - அம்பாளின் அருட்பலத்துடன் அடியார்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பும் இந்தத் தெய்வ கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான பாரிய நிதி உதவியை உள்ளூரிலும் வெளியூர்களிலும் திரட்டுவதற்கு அவருக்கு உறுதுணையாக அமைந்தது என்று கூற முடியும்.

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ராஜகோபுர மகா கும்பாபிஷேகம் திருக்கோணமலை மாவட்டத்தில் மட்டுமல்ல நாட்டின் சைவத் தமிழ் மக்களின் வரலாற்றில் நிலையான இடத்தைப் பிடித்துள்ளது. அடியார்கள் ஆனந்தக் கூத்தாட அன்னை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ராஜகோபுர மகா கும்பாபி ஷேகம் கண்ட திருக்காட்சி வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது.

இப்புண்ணிய கைங்கரியத்தைச் சிறப்பாக நிறைவேற்றி வைத்த வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் ஐயா அவர்களின் ஆலயத் திருப்பணிகள் எதிர்காலத்திலும்தொடர வேண்டும் என்று அருள்மிகு பத்திரகாளி அம்பாளை இறைஞ்சுகின்றேன்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ராஜ கோபுர மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழாக் கிரியைகளை பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து பிரதிஷ்டா சிரோன்மணி சாமி விஸ்வநாதக் குருக்கள் ( சிவாச்சாரிய துரந்தரர் - கிரியாகலாநிதி - சிவாச்சாரிய சக்கரவர்த்தி - சுவானுபூதி ) மிகச் சிறப்பாக பக்தி பூர்வமாக நிறைவேற்றி வைத்தார். அதற்காக அவரையும் அவருக்கு ஒத்தாசையாக இருந்து இப்புனித கைங்கரியத்தை நிறைவேற்றிய ஏனைய சிவாச்சாரியர்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருக்கோயிலின் திரிதள அற்புத விமானம் மற்றும் சப்ததள இராஜகோபுரம் ஆகியவற்றின் நிர்மாண வேலைகளை நிறை வேற்றிய சிற்பகலாபானு ஸ்தபதி கந்ததாஸ் இரவீந்திரராஜா (அராலியூர்) குழுவினர் - தமிழ்நாட்டிலிருந்து வந்து விக்கிரக சிற்ப வேலைகளை அழகுற கலைவண்ணம் மிளிர நிறைவேற்றிய கும்பகோணம் - வலங்கைமான் மா.இராஜேந்திரன் ஸ்தபதி குழுவினர் - வர்ண வேலைகளை மேற்கொண்ட திருநெல்வேலி இ.கனகராஜா குழுவினர் - நூதன மூர்த்திகள் கலச அமைப்பைச் செய்த சிற்பக் கலை அரசு ஸ்தபதி ச. சிவசோதிலிங்கம் ( சேனையூர்)ஆகியோரின் பங்களிப்பு போற்றுதற்குரியது.

இத்திருப்பணியில் ஆத்மார்த்தமாக ஈடு பட்டுழைத்த அம்பாளின் அடியார்கள் அனைவரும் அன்னையின் திருவருட்பார்வைக்கு உரியவர்கள் ஆவர்.

இத்தருணத்தில் - தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலும் உள்வீதி மற்றும் வெளி வீதிகளுடன் ராஜகோபுரம் அமையும் திருப்பணி ஆரம்பமாக வேண்டும் என்ற எண்ணம் அடியார்களின் உள்ளங்களில் துளிர் விட்டுள்ளது.

சிவமின்றேல் சக்தியில்லை சக்தியின்றேல் சிவமில்லை- என்கிறது இந்துமதக்கோட்பாடு. ஸ்ரீபத்திரகாளி அம்பாளும் கோணேஸ்வரப் பெருமானும் சக்தியும் சிவனுமாக அருளாட்சி நடத்தும் புனித தலமாக திருக்கோணமலை விளங்குகின்றது. சிவஸ்தலமும் சக்திப் பீடமும் ஒன்றையொன்று அருள்பாலித்துக் கொண்டிருக்கும் திருக்காட்சியை திருக்கோணமலைத் தலத்தில் காண்கின்றோம்.

எனவே கோணேஸ்வரர் ஆலயமும் இராஜகோபுரம் காணும் அத்திருநாளை அடியார்கள் கண்டு ஆனந்தக் கூத்தாட அருளுமாறு அன்னை ஜெகன்மாதா அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருப்பாதங்களை இறுகப்பற்றி இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

## இரதம் - தேர்

***இது அண்டம், பிண்டம் இரண்டையும் விளக்குகிறது***

| | |
|---|---|
| அச்சு | - மந்திர கலை. |
| சக்கரம் | - சூரிய சந்திரர் |
| தட்டுகள் | - 14 உலகம் |
| ஆசனம் | - ஆகாயம் |
| கொடிஞ்சி | - உதய, அஸ்தமன மலைகள் |
| கொடிகள் | - புண்ணிய நதிகள், குளங்கள் |
| விதானம் | - நட்சத்திரங்கள் |
| மேல்விரி | - மோட்சலோகம் |
| சட்டங்கள் | - யாகங்கள் |
| திரைச்சீலை | - ஏழு சமுத்திரங்கள் |
| கலன்கள் | - கருமேந்திரிய, ஞானேந்திரியங்கள் |
| முளைகள் | - 64 கலைகள் |
| மணிகள் | - வேத, உபாகம, தர்ம நூல்கள் |
| படிகள் | - வாயுக்கள் |
| வில் | - மகாமேரு |
| வில்நாண் | - வாசுகி |
| வில்லிற் கட்டிய மணி | - சரஸ்வதி |
| அம்பு | - விஷ்ணு |
| அம்பு இறகு | - வாயுதேவன் |
| அம்பின் கூர் | - அக்கினிதேவன் |

உ

## திருக்கோணேசர் ஆலய பரிபாலனசபைத் தலைவர்

# மு. கோ. செல்வராசா அவர்களின்

# வாழ்த்துரை

"அம்மா ! என்று கதறியது குழந்தை. குரல் எதிரொலித்ததே தவிர குழந்தைக்கு ஆறுதல் சொல்ல அங்கு பெற்றவள் வரவில்லை. ஏனெனில் அங்கு அவள் இல்லை வீட்டில் இருந்தாள்! வீட்டிலிருந்து ஸ்நானம் செய்ய வந்த தந்தையோடு அந்த மூன்று வயது தெய்வீகக் குழந்தை சேர்ந்து வந்தது. பால் மணம் மாறாத அப்பாலகனை குளக்கரையில் பத்திரமான ஓரிடத்தில் அமர்த்தி விட்டு, தந்தை நீராடச் சென்றுவிட்டார். நீரில் அவர் மூழ்கும்வரை வேடிக்கையாக பார்த்துக்கொண்டிருந்த குழந்தை அவர் மூழ்கியதும் பயந்து கத்தியது தந்தையோடு வந்த குழந்தை! அப்பாவைக் காணவில்லை! ஆனால் அது அப்பா என்று அலறவில்லை அம்மா! என்றே குரல் கொடுத்தது. இதற்கும் ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும்.

காரண காரியம் தெரியாத பச்சிளங்குழந்தைகளுக்கும் சரி எல்லாம் தெரிந்த வயதானவர்களுக்கும் சரி நல்லது கெட்டது இரண்டையும் சமமாக பாவித்து எந்த நிலையிலும் சேயைக் காப்பாற்ற ஓடிவருபவள் அம்மா! என்ற அன்னை என்பது தெரியும். அம்மையில் அப்பன் அடங்கியுள்ள ரகசியம் இது.!

அப்பாவைக் காணாது அம்மா என்று அலறிய குழந்தைக்கு ஆறுதல் அளிக்க பெற்ற தாயையும் பெற்றெடுத்த அன்னை பராசக்தி அங்கு தோன்றினாள். அழுத குழந்தைக்கு ஞான அமுது ஊட்டினாள் அக்காட்சியைக் கண்டு இன்புற அம்மையோடு அப்பனும் அங்கே வந்திருந்தான். ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தன் "அம்மையே அப்பா" என்ற சக்தி தத்துவத்தை மிகத்தெளிவாக உலகிற்கு விளக்கி தோடுடைய செவியன் விடையேறியென திருப்பதிகம் பாட ஆரம்பித்து எமது திருக்கோணமலையின் சிறப்பையும் திருக்கோணேஸ்வரப் பெருமானின் பெருமையையும் "நிரைகழலரவம்" எனபதிகம் பாடியருளினார். இத்தகைய தெய்வத்தன்மை பொருந்திய திருக்கோணமலை கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்தது சுனை என்பது பாபநாசம் ஆகும். இத்தகைய பெருமை வாய்ந்த திருநகரில் கோவில் கொண்டஎியிருக்கும் பத்திரகாளி அம்பாளின் அருளாட்சி எண்ணுதற்கரியது, சொல்லுதற்கரியது.

இவ்வாலயத்தில் கிழக்கிலங்கையில் 1992 ல் முதல் முறையாக மூன்று சித்திரத்தேர்கள் உட்பட மஞ்சம், பெரும் திருப்பணியாக நிறைவேறியது. ஆலயத்தில் கிரியைகள், பூஜைகள் திருவிழாக்கள் நேரந்தவறாமல் நடைபெறுவுது சிறப்பு அம்சமாகும். இவ்வாலயத்திற்கு அம்பாளின் அருட்பிரவாகத்தினாலும் தேவஸ்தான ஆதீனகர்த்தா வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக் குருக்களின் பெரு முயற்சியினாலும் அடியார்களின் பக்தி பரவசத்தினாலும் அம்பாளுக்கு ஏழு தள இராஜகோபுரமும், மூன்று தள மூலஸ்தான கர்ப்பக்கிரக விமானமும் திருப்பணிகள் நிறைவேறி மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் வேளையில் கும்பாபிஷேகத்தை நினைவுகூரும் முகமாக மலர்வெளிவருதை யிட்டு பெருமகிழ்ச்சி யடைகிறேன். இம் மலரில் வரும் கட்டுரைகள் வரலாறுகள் ஆக்கங்கள் என்பன உதிராத, வாடாத இதழ்களாக அமைந்து அருள் ஞானக்கமல மரலாக மணம் கமழ வேண்டும் என்று திருக்கோணேஸ்வரப் பெருமானை உளமுருகி நினைந்து வாழ்த்துகிறேன்.

உ

**சிவதர்மசுரபி**

# K. K. சிவசுப்பிரமணியம் அவர்களின்

# வாழ்த்துரை

எல்லாம் வல்ல திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் தைப்பூசத் தினத்தன்று 07 – 02 – 2001 நடைபெறுவதை இட்டு சைவ உலகம் நன்கு அறியும். இவ் ஆலயம் மிகச்சிறந்த முறையில் பரிபாலனம் செய்து வருவதை சைவ நன்மக்கள் என்றும் பாராட்டுகின்றார்கள். போற்றுதலுக்கும், வணக்கத்துக்கும் எங்கள் பேரன்புக்குமுரிய ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக் குருக்கள் காளி ஆச்சியின் ஆலய வளர்ச்சியிலும், நிர்வகிப்பதிலும் தனது வாழ்வையே அர்ப்பணித்து வருகிறார். தந்தை எப்படி பத்திரகாளி ஆலய நிர்வாகத்தை செவ்வனே செய்தது போல அவர் ஏக புத்திரனும் அவர் இட்ட பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார்.

“கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்” என்ற அருள் வாக்குப்படி 66 அடியில் சப்ததள இராஜகோபுரம் கலை வடிவில் காட்சியளிக்கின்றது. பாடல்பெற்ற தலமான திருக்கோணேஸ்வரத்தை பார்த்தபடி ஸ்ரீ பத்திரகாளி ஆலயம் அமைந்துள்ளமை ஒரு தனிச்சிறப்பு

இத்தகைய சிறப்பு வாய்ந்த இராஜகோபுர திருப்பணியும், ஏனைய திருப்பணிகளும், மக்களுக்கு சகல சௌபாக்கியங்களும் நல்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

“லோகா சமஸ்தா சுகினோபவந்து”

# தர்வமடக்கிய காளிகா தேவி



**பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்**
"பிரதிஸ்டா சிரோன்மணி"
கொழும்பு (நவாலி)

தாருகாசுரனால் துன்பமடைந்த தேவர் சிவமூர்த்தியை அடைந்து தமது குறை கூறினார். பெண்ணாலன்றி எவராலும் இறவாத தாருகனை வெல்லச் சிவமூர்த்தி சத்திக்குக் கட்டளையிட்டார். அக்காலையில் தேவியின் ஒரு கலை சிவமூர்த்தியின் விஷக்கறை படிந்து களற் கண்ணிற் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுருகாள மாகிய விஷக்கறை படிந்து வந்ததால் காளி எனப் பெயரடைந்தது. இவ்வகை பிறந்த காளி தனது கோபாக்கினியால் தாருகனை நீறாக்கினாள். இவளிடம் பிறந்த கோபத் தீ குழந்தையுருக் கொண்டிருந்தது. இதனை நோக்கிய காளி குழந்தைக்குப் பாலூட்டினாள். சிவமூர்த்தி குழந்தையையும் பாலையும் தம்மிலொடுக்கினார். ஒடுங்கிய சிவமூர்த்தியிடத்திருந்து எட்டுருக்கொண்டு வைரவமூர்த்தி தோன்றினார்.

மகிடாசுரன் செய்த துன்பத்தை தேவர் சிவமூர்த்தியிடம் கூறினர். அக்காலத்து சிவமூர்த்திக்குக் கோபமுண்டாயிற்று. அக்கோபம் பெண்ணுருவாய்த் திரண்டது. அதுவே காளியுரு என்பர். இவள் பீசன் என்னும் அசுரனை ஒரு துளி இரத்தம் கீழ் விழாது ஆகாயம் மேல் வாயாகவும், பூமி அடிவாயாகவும் அங்காந்து உண்டு மாய்த்தாள். சிவமூர்த்தியிடம் நிருத்தஞ்செய்து தோல்வியடைந்தவள் தக்ஷயாகத்தின் பொருட்டு இறைவியின் கோபத்தீயிற் பிறந்தவளென்றும் கூறுவர். காளனென்னும் வீரபத்திரனை மணந்தவள் இவளுடன் பகைகொண்ட, அசுரர் பாம்பு, தேள், முதலிய விஷ ஜென்துக்களை விட்டுக் கடிக்க ஏவ, இவள் அவை துன்பஞ் செய்யாமல் மரக்கால் கொண்டு ஆடினாள் ஆதலால் இவள் கூத்து மரக்கால் எனப்படும். இவளுக்கு ஊர்தி சிங்கம், கொடி அலகை, படை சூலம்.

சத்தமாதாக்களில் ஒருத்தி, வாயுருப்மான சத்தி, இவட்கீசர் காலம் அல்லது ஈசானர். வேதவியாசன் தாய் சத்தியவதி ஓர் பெயர். காளிதாசன் காளிதேவியின் உபாசனா பலத்தால் கவியானவன். வடமொழியில் காளிதாசன் போஜன் இராசாவின் சமஸ்தான வித்துவான்.

காளி என்பது யமுனை நதியில் உள்ள ஒரு மடு. இதில் உமை வலம்புரிச்சங்குருவாய்த் தவம் புரிந்தவள். இதைக் காளிந்தி நதியில் நீராடிய தக்கனும் வேதவல்லியும் எடுத்து வளர்த்தனர். தக்கன் செய்தவத்தின் பயனின் பயனாகும் கச்சியப்பரின் கந்தபுராணத்தினுள்ளவை. சக்திபீடங்கள் ஆலயங்களில் அமைக்கும் போது காளிபீடமும் இடம்பெறும்.

ததீசி முனிவர் முன்னிலையில் தக்ஷன் சிவனை இகழ்ந்தான். பலவித புத்திகள் கூறியும் தக்ஷன் தன்னிலையில் இருந்து மாறவில்லை. "இது விரைவில் அழிந்து போகக் கடவது என்று சபித்து அவ்விடம் விட்டு நீங்கினார். ஆனால் யாக அவிசை உண்ணக் கருதியதாலும் தேவர்கள் அவ்விடத்தை விட்டு நீங்கவில்லை. உமாதேவி தன் கணவனாகிய சங்கர பகவானைப் பணிந்து தம்மை இகழ்ந்து செய்யும் தக்ஷனுடைய யாகத்தை அழிக்கவேண்டும் என்று கூற சிவபெருமானும் தேவியினுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, மகா பராக்கிரமசாலியும் கணங்களுக்கெல்லாம் தலைவனும் ஆகிய வீரபத்திரனைப் படைத்தார். அந்த வீரபத்திரர் சிவபெருமானைப் பணிந்து அவர் சந்நிதியில் இருந்தார். அப்போ உடனே தேவியும் தன் கோபத்தால் ஆயிரஞ் சிரங்களும், கரங்களும் கரிய மேனியுமுடைய காளியைச் சிருஷ்டித்தாள். சிவபெருமானும் பார்வதிதேவியும் வீரபத்திரரை நோக்கி உனக்கு மங்களம் உண்டாக என வாழ்த்தினர். அப்போது வீரபத்திரர் எனக்கு என்ன கட்டளை என்று கேட்க, வீரா! பிரதேச புத்திரனான தக்ஷன் கங்கா துவாரத்தில் யாகஞ் செய்கிறான். நீ இந்தக் காளியுடன் சென்று அந்த யாகத்தை அழிப்பாயாக. நான் பார்வதி தேவியுடன் ரைப்பிய முனிவரின் ஆச்சிரமத்தில் இருந்து பார்க்கிறேன் என்று கட்டளை இட்டார். பார்வதிதேவி வீரபத்திரனையும் காளியையும் அணைத்து மூர்த்தா க்ரஹனஞ் செய்து புன்னகையுடன் 'குழந்தாய்! வீரபத்திரா எனக்கு பிரிய முண்டாக்க நீ பிறந்தாய்.

பார்வதி தேவியின் சரீரகோசத்திலிருந்து தோன்றிய அம்பிகை கௌசிசீ என உலகெங்கும் போற்றப் படுகிறாள்
பார்வதியின் சரீரத்திலிருந்து வேறாகப் பிரிந்து கறுப்பு வர்ணத்துடன் தோன்றியதால் காளிகா என்று கூறப்படுகிறாள்.

சண்ட முண்டர்களுடன் சண்டை செய்ததால்
சண்டிகை எனப் பெயர் வந்தது.

சண்டிகை - ஒரு மாயாதேவி அம்சம். பார்வதி தேவியின் கணத்தவருள் ஒருத்தி தாருணனைக் கொன்றவள். சண்டிகை என்னும் பெயரோடு காளியைக் கொண்டு சும்பன், நிசும்பன் என்ற அசுரர்களின் தலைவர்களைக் கொன்றவள்.

சண்டன் விட்ட பாணங்களை தேவியானவள் கூரிய சரங்களால் அழித்தாள். பெரியபாணக் கூட்டத்தைக் கண்டு தேவி கடுங்கோபம் கொண்டு அவளுடைய முகம் மேகம் போல் கறுத்தது. அவளுடைய நெற்றியில் இருந்து காளி வெளிப்போந்தாள். அவள் புலித்தோலை அணிந்து யானைத் தோலைப் போர்த்திருந்தாள்.

**வியாஸர் கூறியது**

அரசே! எல்லாப் பிராணிகளுக்கும் இன்பத்தை அளிப்பதும் அவர்களுடைய பாவங்களையெல்லாம் போக்குவதுமான தேவியின் உத்தம சரித்திரத்தைக் கூறுகிறேன் கேளும். பலம் மிகுந்தவர்களும் மகாவீரர்க ளுமான இரு சகோதரர்கள், சும்பன், நிசும்பன் எனப்பெயர் பெற்றவர்கள் எப்படிப்பட்ட ஆடவர் எவராலும் கொல்ல முடியாதவர்களாக ஆனார்கள் என்பதையும், அவர்கள் பரிஜனங்கள் அனைவருடனும் கடும்போரில் தேவர்களுக்கு நன்மைபுரிய விரும்பிய அம்பிகையால் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதையும் கூறுகிறேன்.

பாவமனைத்தையும் போக்குவதும், எல்லா நற்பயன் களையுமளிப்பதும், மங்களகரமானதும் தேவியின் லீலைகளை வர்ணிப்பதுமான தெய்வீகக் கதையைக் கேளும். ஆதிகாலத்தில் சும்பன், நிசும்பன் என்ற இரு அசுர சகோதரர்கள், கம்பீரமான தோற்றமுடையவர்கள், பாதாளத்திலிருந்து பூமண்டலத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் யௌவன பருவத்தையடைந்ததும் உலகைப் புனிதமாக்கும் புஷ்பநகரம் சென்று அன்னபானாதிகளைத் துறந்து மேலான தவஞ்செய்தனர். உலக பிதாமகராகிய பகவான் பிரம்மா அவர்களுடைய தவத்தால் மகிழ்ந்து ஹம்ஸ வாகனத்தில் ஏறிக்கொண்டு அங்கு எழுந்தருளினார். உலகின் சிருஷ்டிகர்த்தாவாகிய அவர் அவ்விருவரும் தியானத்திலாழ்ந்து நிற்பதைக் கண்டு, மகா பாக்கியசாலிகளே! உங்களுடைய தவத்தால் நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். எழுந்திருங்கள்' எனக் கூறினார்.

'உங்களுக்குப் பிரியமான வரத்தையளிக்கிறேன் கூறுங்கள். உங்களுடைய தவத்தின் வலிமையைக் கண்டு விரும்பியதையளிக்க நான் வந்துள்ளேன். இவ் வார்த்தையைக் கேட்ட அவ்விருவரும் எழுந்து வணக்கத்துடன் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தார்கள். தவத்தால் மெலிந்த அவர்கள் தடிபோல் கீழே விழுந்து நமஸ்கரித்து தழுதழுத்த இனிய குரலில் பணிவுடன் பின்வருமாறு கூறினார்கள். "தேவதேவா! கருணைக் கடலே! பக்தர்களுக்கு அபயமளிக்கும் பிரம்மதேவரே! பிரபுவே! தவத்தால் திருப்தியடைந்திருந்தால் எங்களுக்குச் சாகா வரம் அளியுங்கள், என்று கேட்க பிரமா "பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம். இறந்தவனுக்கு பிறவியும் நிச்சயம். இது உலகத்தை உண்டாக்கிய பரம்பொருளால் ஆதியில் உலகில் ஏற்படுத்திய வரம்பு. "எல்லாப்பிராணிகளும் எப்படியோ இறந்தே தீரும். இதில் சந்தேகமில்லை. உங்களுக்கு விருப்பமான வேறு வரத்தைக் கேளுங்கள், அளிக்கிறேன்" என்றார்.

அவ்வசுரர்கள் அவ்வார்த்தையைக் கேட்டு நன்கு ஆலோசித்து தம்முன் நின்ற பிரம்மாவை நமஸ் கரித்துவிட்டுக் கூறியதாவது. 'கருணைக்கடலே! தேவர்களோ மனிதர்களோ மிருகங்களோ பறவைகளோ எவர்களாயிருந்தாலும் ஆண்பாலால் எங்களுக்குச் சாவு ஏற்படா மலிருக்கும் வரத்தை விரும்புகிறோம். அதை அளியும்.' எங்களையழிக்கக்கூடிய பலம்படைத்த பெண்பால் எங்கே இருக்கும்? மூவுலகிலும் சராசரத்தில் உள்ள எந்தப் பெண்பாலிடமிருந்தும் எங்களுக்கு அச்சமில்லை.'' என்றிங்ஙனம் அவர்கள் கூறியதைக் கேட்டு பிரம்மா திருப்தியான மனதுடன் அவர்களுக்கு விருப்பமான அவ்வரத்தைக் கொடுத்துவிட்டுத் தமதுலகிற்கேகினார்.

பிரம்மா தமதிருப்பிடம் சென்றபின் அசுரர்களும் தங்கள் வீடுக்குச் சென்று பிருகு முனிவரை புரோகிதராய்க் கொண்டு அவரைப் பூஜித்தனர். அம் முனிவர் நல்ல நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் அவர்களுக்கு வெள்ளியாலான அழகிய திவ்ய சிம்மாஸனத்தை அரசாட்சிக்காக உண்டாக்கி வைத்தார். மூத்தவனான சும்பனுக்கு சுபமான ஆட்சிபீட்டத்தை அளித்தார். அப் பொழுது அவனுக்குச் சேவைபுரிவதற்காக அசுரசி ரேஷ்டர்கள் வந்து கூடினார்கள். மகாவீரர்களான இரு சகோதரர்கள் சண்டன், முண்டன் எனப்பெயர் பெற்றவர்கள் பலக்கொழுப்புடனும், தேர், குதிரை, யானை முதலியவற்றுடன் கூடிய சேனையுடனும் வந்து சேர்ந்தனர். தூம்ரலோசனன் எனப்பெயர் பெற்றவனும் பெயருக்கொத்த வடிவும், கொடுமையான பராக்கிரமும் உடையவனும், சும்பன் ஆட்சிபுரிபவன் எனக்கேட்டு தன் சேனாபலத்துடன் வந்தான். வரத்தால் அதிகமான பலம்பெற்ற சூரனாகிய ரக்தபீஜன் என்பவனும் இரண்டு அக்கிரோனி சேனைகளுடன் அங்கு வந்து கூடிக்கொண்டான்.

அரசே! அவனுக்கு ரக்தபீஜன் என்ற பெயருக்கு ஒரு காரணம் இதுவாகும். போர்க்களத்தில் அவன் யுத்தம் புரிகையில் ஆயுதத்தால் அடிபட்டு அவனுடைய உடலிலிருந்து இரத்தம் பூமியில் விழுந்தால் அதிலிருந்து அவனைப்போலவே ஆயுதபாணிகளாயும், கொடிய வர்களாயும் பலபேர் தோன்றுவார்கள். அவனைப்போல ஆகிருதியும் உருவமும் பராக்கிரமமும் படைத்தவர்களாய் இரத்தத்திலிருந்து எழுந்த அப்புருஷர்கள் மேலும் யுத்தம் செய்வார்கள். ஆகையால் அக்கொடிய அசுரனாகிய ரக்தபீஜன் எந்த ஜீவனாலும் கொல்ல முடியாதவனாய் மகா வீரனாய்ப் போரில் ஜயிக்க முடியாதவனாய் இருந்தான். இன்னும் பல சூரர்கள் சதுரங்க பலத்துடன் சும்பன் அரசன் என்பதைக் கருதி அவனைச் சேவிப்பவர்களானார்கள். சும்பன், நிசும்பன் ஆகிய இருவருடைய சேனை கணக்கற்றதாயிற்று. அப்படிப்பட்ட பலத்துடன் அவர்களால் உலகிலுள்ள எல்லா அரசர்களும் பிடிக்கப்பட்டனர். எதிரிகளின் வீரியத்தையழிக்கவல்ல நிசும்பன் சேனைகளைத் திரட்டிக் கொண்டு இந்திரனை ஜயிப்பதற்காக விரைவில் சுவர்க்கம் சென்றான். வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்டு இளையவனாகிய அவ்வசுரன் பூமியில் விழுந்தான். மகா பலசாலியாகிய அந்த நிசும்பனுடைய சேனாபலமும் சிதறடிக்கப்பட்டது. சகோதரன் மூர்ச்சித்து விழுந்தான் என்று கேள்விப்பட்ட பராக்கிரமசாலியான சும்பன் அங்குசென்று பாணங்களால் தேவர்களையெல்லாம் தாக்கினான். எளிதில் செயலாற்றும் சும்பனால் பெரிய யுத்தம் செய்யப்பட்டது. இந்திரனுடனும் திக்குப்பாலகர்களுடனும் தேவர்களெல்லாம் ஜயிக்கப் பட்டனர். ஆட்சி கவரப்பட்ட அவர்களெல்லோரும் ஜனசஞ்சாரமில்லாத வனத்தில் ஆதாரமற்றவர்களாய்ப்

பிடிக்கப்பட்டவர்களாய், ஆயுதமற்றவர்களாய் ஒளியிழந்தவர்களாய் அடங்கினார்கள். நூறு யாகங்களைச் செய்து உத்தமமான இந்திரப் பதவியையடைந்தும் மறுபடியும் மிகுந்த துக்கமடையப்பட்டது. காலத்தின் போக்கு இப்படியாயிற்று. அரசிழந்தவர்களும் கடக்க முடியாத கவலையிலாழ்ந்தவர்களும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களுமான தேவர்கள் தங்கள் குருவை நாடி ஆதரவுடன் பின்வருமாறு வினவினர். 'குருவே! தாங்கள் மகாமுனிவரும் எல்லாமறிந்தவரும் ஆவீர்கள். மகிமைமிக்கவரே! துக்கத்திலிருந்து விடுபடுவதற்கு வழி என்ன? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? அவர்களைப் பார்த்து பிருஹஸ்பதி பின்வருமாறு கூறுகிறார்.

முன்பு பகவதி உங்களுக்கிரங்கி மகிஷாசுரனை வதைத்தாள். உங்களால் துதிக்கப்பெற்று தேவியானவள் வரமும் அளித்திருக்கிறாள். அவ்வரமாவது 'இந்திரனே! எப்பெப்பொழுது தேவர்களுக்கு ஆபத்து ஏற்படுகிறதோ அப்பொழுது என்னை நினைத்தால் எல்லாக் காலத்திலும் நான் ஆபத்தைப் போக்குகிறேன்.' என்பதாம். ஆகையால் மனதிற்கினிய இமயமலை சென்று பக்தியுடன் சண்டிகையின் பூஜையைச் செய்யுங்கள் என்பதைக் கேட்டு தேவர்கள் தேவியை தியானித்துக்கொண்டு இமயமலை சென்றனர். எல்லோருமே (ஹ்ரீம்' எனும்) மாயா பீஜமந்திரத்தை உள்ளத்தில் எப்பொழுதும் ஜபித்துக் கொண்டு பக்தர்களுக்கு பயத்தைப் போக்கும் மகாமாயையை நமஸ்கரித்து மிகுந்த உள்ளன்புடன் ஸ்தோத்ர மந்திரங்களால் உலகநாயகி! உயிருக்குயிராகியவளே! எப்பொழுதும் ஆனந்தவடிவானவளே! தேவர்களுக்கு ஆனந்தத்தையளிப்பவளே! அசுரர்களை யழிப்பவளே! மனிதர்களுக்குப் பலவகைப் பொருள்களையளிப்பவளே! பக்தியால் அடையக்கூடிய ஸ்வரூபமுடையவளே! உனக்கு நமஸ்காரம். உன்னுடைய நாமங்கள் எண்ணற்றவை. உன் உருவம் இப்படிப்பட்டதென்று கூற இயலாது. ஆதி தெய்வ வடிவினளே! உன்னையறிந்தவர் யார்? பிரஜைகளின் சிருஷ்டி ஸம்ஹார காலங்களில் எப்பொழுதும் நீயே எல்லாரிடமும் சக்திஸ்வரூபமாகியிருக்கின்றாய். பாணம் போடாமலும் முஷ்டியால் தாக்காமலும் சூலம், வாள், சக்தி தண்டம் முதலிய ஆயுதங்களில்லாமலும் பகைவர்களை விளையாட்டாக அழிப்பதற்கு நீ சக்தியுள்ளவள். உலகிற்கு உபகாரம் செய்வது உனது லீலை என்று ஜெபித்தனர். கருணையுடன் கூடிய அம்பிகை தேவர்களனைவராலும் இவ்வாறு துதிக்கப்பட்டு அவர்கள் முன் யௌவன ரூபவடிவத்தில் சீக்கிரமே தோன்றினாள். உலகை மயக்கும் திவ்யமான அழகுடன் கூடிய தேவியானவள் கங்கையில் நீராடும் விருப்பத்துடன் மலைக் குகையினின்றும் வெளிப்போந்தாள்.

ஓ! தேவசிரேஷ்டர்களே! உங்களால் இங்கு வெகுவாய்த் துதிக்கப்படுபவள் யான் எதற்காக கவலை? ஆகவேண்டிய காரியம் என்ன? மேலும் எதனால் நீங்கள் கவலை மிக்கவர்களாயிருக்கிறீர்கள்? கூறுங்கள் என்றாள். அந்த வார்த்தையைக் கேட்டு அந்த தேவியினுடைய அழகுச் செல்வத்தால் கவரப்பட்டும் உள்ளத்தில் உற்சாகத்துடனும் பக்தியுடனும் தேவசிரேஷ்டர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள்.

இப்பொழுது சும்பன் நிசும்பன் என்ற இரண்டு கொடிய அசுரர்கள் இடையூறு விளைவிப்பவர்களாய்த் தோன்றியிருக்கிறார்கள். எந்த ஆண்மக்களாலும் அவர்கள் கொல்லமுடியாதவர்கள். ரக்தபீஜன் என்ற ஒரு பலசாலி; சண்ட, முண்டர்கள் என்ற அசுரர்கள்; இவர்களாலும் மகாபலவான்களான பிறராலும் தேவர்களுடைய ஆட்சி கவரப்பட்டுள்ளது. மகாவல்லமை வாய்ந்த நீயே எங்களுக்குப் புகலிடம்; வேறு கதியில்லை; இடையழகு வாய்ந்த தேவியே! துன்பத்திலாழ்ந்த தேவர்களின் காரியத்தை நீ செய்தருள வேண்டும், தேவியே! உலகெல்லாம் யுகத்தின் ஆதியில் உன்னால் உற்பத்தி செய்யப்படதென்பதை நினைத்து இப்பொழுது அதின் இரக்ஷணை உன்னால் செய்யப்பட வேண்டும். தாயே! கொழுப்பேறிய அசுரர்களை தங்களுடைய பலத்தின் கர்வத்தால் உலகிற்குப் பீடையை விளைவிக்கின்றனர். பகைவர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்களால் இவ்வாறு துதிக்கப்பெற்ற தேவியானவள் தன்னுடைய சரீரத்திலிருந்து இன்னொரு ரூபம் தோன்றும் படியாகச் செய்தாள். பார்வதி தேவியின் சரீர கோசத்திலிருந்து தோன்றிய அம்பிகை கௌசிகீ என உலகெங்கும் போற்றப்படுகிறாள். பார்வதியின் சரீரத்திலிருந்து வேறாகப்பிரிந்து கறுப்பு வர்ணத்துடன் தோன்றியதால் காளிகா என்று கூறப்படுகிறாள்.

மை வர்ணமாயும், மிகவும் பயங்கரமாயும் அசுரர்களுக்குப் பயத்தை வளர்ப்பவளாயும் தோன்றிய அவள் காலராத்ரீ எனவும் கூறப்படுவாள். அவள் (பக்தர்களுக்கு) எல்லா ஆசைகளின் பூர்த்தியையும் அளிப்பவள். அம்பிகையின் மற்ற வடிவம் மனதைக் கவர்வதாய் எல்லா ஆபரணங்களுடனும் கூடியதாய் அழகு நிறைந்ததாய் விளங்கிற்று. பின்னர் அம்பிகை புன்முறுவலுடன் தேவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினாள். நீங்கள் பயமற்றிருக்கலாம். நான் இங்கு பகைவர்களை யழிக்கிறேன். தேவியானவள் இவ்வாறு கூறிவிட்டு மிகுந்த கர்வத்துடன் சிங்க வாகனத்தி லேறிக்கொண்டு காளிகையைப் பக்கத்திலிருத்திக்கொண்டு பகைவரின் நகரம் சென்றாள். அச்சமயம் சும்பர்களின் சேவகர்களும் கொடியவர்களுமான சண்டன் முண்டன் என்பவர்கள் விளையாட்டாக அங்கு வரவே எதிர்பாராத வண்ணம் பாடிக்கொண்டு எதிரே நின்ற திவ்யரூபிணியான அம்பிகையையும் காளிகையையும் கண்டனர். அரசசிரேஷ்டர்களே! திவ்யரூபிணியான அம்பிகையைப் பார்த்து ஆச்சரியம் மிகுந்தவர்களாய் விரைவில் சும்பனை நாடிச் சென்றனர். தன் மாளிகையில் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்த அசுர ராஜனிடம் அவர்கள் சென்று அவனைத் தலையால் வணங்கி இனியமொழி பேசலாயினர்.

'அரசே! எதிர்பாராதவண்ணம் இமயமலையிலிருந்து சிங்க வாகனத்திலேறிக்கொண்டு எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவளாய்க் காமத்தைப் பெருக்கி மயக்குபவளாய் மனதைக் கவரும் ஒரு ஸ்திரி வந்துள்ளாள்'. 'இவளைப் போன்ற ஒரு உத்தம ஸ்திரி தேவலோகத்திலும் இல்லை., கந்தர்வ நகரத்திலும் இல்லை, பூமியில் எங்கும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை."அரச சிரேஷ்டரே! அவள் யாருடைய புத்திரி என்றும் எதற்காக இங்கு வந்துள்ளாள்

என்றும் உங்களால் அறியப்படவேண்டும். பின்பு கிரகிக்கப்பட வேண்டும். அவள் உங்களுக்குத் தகுதியான பெண்ணரசி. 'அரசசிரேஷ்டரே! தேவர்களுடைய சிறந்த பொருள்கள் ளெல்லாம் உம்மால் கவரப்பட்டுள்ளன. சிறந்த இந்த ஸ்திரியை நீங்கள் ஏன் கிரகிக்கக்கூடாது? 'அரசே உங்களுடைய மாளிகையிலுள்ள இரத்தினமாகப் போகின்றாள் என்றனர்.' இனியதும் இனிய சொற்களால் கூறப்பட்டதுமான அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்ட அவன் தன் முன் நின்ற சுக்ரீவனைப்பார்த்து முகமலர்ச்சியுடன் பின்வருமாறு கூறினான். 'திறமை வாய்ந்த தூதனாகிய சுக்ரீவா! நீ போய்க் காரியத்தைச் சாதித்துக் கொண்டு வா. மெல்லிடையாள் எப்படி இங்கு வந்து சேருவாளோ அப்படி நீ அங்கு சென்று அவளிடம் பேச வேண்டும்'.

பிரியமாகவும் சுருக்கமாகவும் சும்பன் கூறிய அவ்வார்த்தையைக் கேட்டு சுக்ரீவன் ஜகதாம்பிகை இருந்த அவ்விடத்திற்கு விரைந்து சென்றான். ஒளி வீசும் மலர்ந்த முகத்துடன் சிங்க வாகனத்தின் மேல் வீற்றிருந்த ஜகதாம்பிகையைக் கண்டு வணங்கி இனிமையான மொழியை அவன் பேசலானான். 'அழகிற் சிறந்தவளே! சும்பன் என்ற அரசன் தேவர்களை வென்றவன், எல்லா அங்கங்களிலும் அழகு படைத்தவன், மூவுலக நாயகன், சூரன், எல்லோரையும் ஜயித்தவனாய் விளங்குபவன். 'அந்த மகாத்மாவால் விரும்பி உன்னிடம் அனுப்பப்பட்டவன் நான். அவன் உன்னுடைய வடிவழகைப்பற்றிக் கேள்வியுற்று உன்னிடம் வைத்த ஆசையால் மிகவும் பீடிக்கப்பட்டுள்ளவன். 'மெல்லிடையாளே! அன்பின் மிகுதியால் அவன் சொல்லியனுப்பிய மொழியைக் கேள்.

அசுரர் வேந்தனாகிய அவன் உன்னை வணங்கிக் கூறுகிறான். ''காமினி! தேவர்களெல்லாம் என்னால் ஜயிக்கப்பட்டார்கள். நான் மூவுலகிற்கும் நாயகன். இங்கிருந்துகொண்டு யக்ஞ பாகங்களை எப்பொழுதும் நான் கிரகிக்கிறேன். 'என் காதிற்கெட்டி இருதயத்தினுட் புகுந்த உனது குணங்களால் நான் உன் வசமாகி உன் அடிமையாகி விட்டேன். என்ன செய்வேன்? ''பிரியே! நான் சாகும்வரை உன் கட்டளைப்படி நடப்பவனாயிருப்பேன். அழகிற் சிறந்தவளே! அசுரர்களாலோ மனிதர்களாலோ எப்பொழுதும் நான் கொல்லுவதற்கியலாதவன். 'சிறந்த முகம் படைத்தவளே! நீ எப்பொழுதுமே சௌபாக்கிய முடையவளாய் இருப்பாய். சுந்தரி! உனக்கு எவ்விடத்தில் சித்தம் மகிழ்கிறதோ அவ்விடத்தில் நீ இஷ்டப்படி இன்புற்றிருக்கலாம்.''அந்த தூதனுடைய அவ்வார்த்தையைக் கேட்டு தேவகாரியத்தைச் சாதிக்கவந்த தேவியானவள் இனிய புன்னகை பூத்து இனிமையான மொழியில் பின்வருமாறு பதிலளித்தாள்.

நான் நிசும்பனையும் மிகுந்த பலவானான சும்பனையும் அறிவேன். அந்த சும்பன் தேவர்களை யெல்லாம் ஜயித்தவன். பகைவர்களைக் கொன்றவன். எல்லாக் குணங்களும் நிறைந்தவன், எல்லாச் செல்வங்களையும் அனுபவிப்பவன், கொடையாளி, மகாசூரன், மன்மதனைப்போல் வடிவழகு படைத்தவன் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். தூதனே! மகாபாக்கியசாலியே! மகா பலசாலியான சும்பனிடம் போய் பின்வருமாறு (நான் சொன்னதாய்) சொல்: ''ராக்ஷஸ சிரேஷ்டனே! விவாக விஷயத்தில் எனக்கு ஒரு சிறிய காரணம் உளது. அரசே! முன்பு சிறுவயதில் சம வயதுள்ள தோழிகளுடன் தனிமையில் இஷ்டப்படி விளையாடுகையில் என்னுடைய உடல் வலிமையின் கர்வத்தால் தோழிகளின் முன்னிலையில். ஒரு சிறிய விரதத்தைக் கைக்கொண்டேன் இரகசியமாக எனக்குச் சமானமாக பலமுடைய சூரன் எவன் என்னைப் போரில் ஜயிக்கிறானோ அவனுடைய பலாபலத்தை அறிந்து அவனை விரும்பி நான் மணப்பேன் என்பது அவ்விரதம். என்னுடைய தோழிகள் அவ்வார்த்தை யைக் கேட்டு வியப்படைந்த மனமுடையவர்களாய்ப் பரிகசித்தார்கள். ஆகையால், அரச சிரேஷ்டரே அழகியவரே! இப்படிப்பட்ட என் பலத்தை அறிந்து என்னைப் போரில் இங்கு ஜெயித்து விவாகம் செய்து கொள்ளலாம்.' அசுர வேந்தனிடம் சென்று நன்றாக மேன்மேலும் ஆலோசித்து விட்டு அந்தத் தூதன் அவனுடைய பாதங்களில் வணங்கி அடக்கத்துடன் பின்வருமாறு கூறினான்.

அப்பெண்ணரசி உண்மையில் எங்கிருந்து வந்தாள், யாருடையவள், அவளுடைய பலம் எப்படிப்பட்டது என்ற எதுவும் சிறிதுகூட அறிவுக்கெட்டாமல் இருக்கிறது. அவளுடைய செயலைப்பற்றி நான் என்ன சொல்லுவேன்? அவள் கடுஞ் சொல்லுடையவளாயும், கர்வங் கொண்டவளாயும், போர் புரிய விரும்புபவளாயும் என்னால் காணப்பட்டாள். மதியிற் சிறந்தவரே! அவளால் கூறப்பட்டதைத் தெளிவாய்க் கூறுகிறேன். கேளுங்கள்.

'என்னுயைட விவாகத்தைப்பற்றி என் தோழிகள் முன்னிலையில் விளையாட்டாக என் இளமைப்பருவத்தில் நான் முன்புசெய்த பிரதிக்ஞை இதுவாகும். 'எவர் என்னைப் போரில் வெல்லுகிறாரோ' என்னுடைய கர்வத்தையும் அடக்குகிறாரோ அவரையே உண்மையில் எனக்கு சமமான பலம்படைத்தவரெனக் கருதி எனது பதியாக வரிப்பேன். 'அரச சிரேஷ்டரே! என்னுடைய பிரதிக்ஞை பொய்யாகிவிடக் கூடாது. தர்மந் தெரிந்தவரே! ஆகையால் நீங்கள் என்னை யுத்தம் செய்து ஜயித்து உங்களுடைய வசமாக்கிக் கொள்ளுங்கள். அவளால் சொல்லப்பட்ட இவ் வாக்கியத்தைக் கேட்டு நான் திரும்பி வந்துள்ளேன். மகாராஜரே! இனி உங்கள் விருப்பம் எதுவோ அதை இஷ்டப்படி செய்யலாம். இதைக் காதில் கொண்ட சும்பன், தூம்ரலோசனா! பெரிய சைனியத்தால் சூழப்பெற்று சீக்கிரம் செல். தன்னுடைய வீரியக் கொழுப்பால் மயங்கியிருக்கும் அந்தப்பெண்ணைப் பிடித்துக்கொண்டு வா. போர்க்களத்தில் ஆயுதபாணிகளாய் எவர்கள் அவளுக்குதவியாய் உள்ளவர்களோ அவர்கள் கொல்லப்பட வேண்டும். அவள் மட்டும் எப்படியாவது கொல்லப்படாமல், கவனத்துடன் இரக்ஷிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கட்டளையிட்டான். தூம்ரலோசனன் சும்பனை வணங்கிவிட்டு போய் தேவியைப்பார்த்து தகுந்த காரணங் காட்டி சுவையுடன் அலங்காரமாய்ப் பேசினான். 'மகா பாக்கியசாலியான தேவி! கேட்பாயாக. சும்பன் உன்னிடம் காமத்தால் துன்புற்று உன்னிடம் நீதியில் நிபுணனாக ஒரு தூதனை அனுப்பிவைத்தான். அழகிய முகம் படைத்தவளே! அவன் திரும்பி வந்த விபரீதமான வார்த்தையைக் கூறினான். ' பாக்கியசாலியான நீ சாமர்த்தியம் படைத்தவள். என்னுடைய இன்சொல்லைக் கேட்டு தேவர்களின் கர்வத்தை ஒடுக்கியவனும் மூவுலகையுமாள்பவனுமான சும்பனை அடைந்துவிடு'.

காளிதேவியானவள் சிரித்துவிட்டு அழகான வார்த்தையால் பதிலளித்தாள். 'நீ மூடன். கூத்தில் வரும் விகடக்கூத்தாடிபோல் பேசுகிறாய். மந்த புத்தியுள்ள இந்தச் சும்பன் எங்கே! உலகனைத்தையும் மயக்குபவள் எங்கே! இவ்விருவருக்கும் விவாக ஏற்பாடு என்பது இவ்வுலகில் சற்றும் பொருந்தாது. ஒரு பெண் சிங்கமானது காமத்தால் பீடிக்கப்பட்ட ஒரு குள்ளநரியை தனக்குக் கணவனாய் ஏற்குமா? ஒரு பெண் யானை ஒரு கழுதையைக் கணவனாய் கொள்ளுமா? காமதேனு கவயமெனும் மிருகத்தைக் கணவனாய்க் கொள்ளுமா? நீ அந்த சும்ப நிசும்பர்களிடம் போய் என்னுடைய இந்த உண்மையான வார்தையைத் தெரிவி: "யுத்தம் செய்; இல்லையேல் இப்பொழுது விரைந்து பாதாளம் போய்விடு."

இவ்வார்த்தையைக் கேட்டதும் அவ்வசுரன் (தூம்ரலோசனன்) தனது திடமான வில்லை எடுத்துக் காளிகாதேவியின் மேல் கூரான பாணங்களைப் பொழிந்தான். அப்பொழுது அவர்களிடையே மிகக் கொடிய போர், பாணம், வாள், கதை, சக்தி, முஸலம் முதலியவற்றால் ஏற்பட்டது. யமனைப்போன்ற அந்த முரடன் காளியை வார்த்தைகளால் பயமுறுத்தி 'குரூபி! பூனைக்கண்ணி! இப்பொழுதே நான் உன்னைக் கொல்லுகிறேன், என்று கூறிக்கொண்டு விரைந்து வந்து பரிசாயுதத்தை வீசிய பொழுது அம்பிகை உடனே அகங்காரத்தால் அவனைச் சாம்பலாக்கினாள். அவ்வசுரன் சாம்பலாக்கப்பட்டதைக் கண்ட சேனைகள் பயத்தால் நடுங்கி 'ஐயோ! அப்பா!' என்று வழியில் கதறிக்கொண்டு உடனே ஓட்டம் பிடித்தனர். போய் நடந்தவற்றை அரசனிடம் கூறினர்.

(அவர்கள் வந்து நிகழ்ந்ததைக் கூறவே) அவர்களுடைய வார்த்தையைக் கேட்ட அரசன் சும்பன், பகைவர் பலத்தை ஒடுக்குபவன், எதிரில் நின்ற சண்ட முண்டர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினான். "சண்ட முண்டர்களே! நீங்கள் இருவரும் உங்கள் சைனியங்களால் சூழப்பட்டவர்களாய்க் கொழுப்புப்பிடித்து கர்வித் திருப்பவளும் வெட்கங்கெட்டவளும் ஆகிய அவ்வற்பப் பெண்ணைக் கொல்லுவதற்குச் சீக்கிரம் செல்லுங்கள், 'மகா பலசாலிகளும் வீரர்களும் ஆகிய சண்டமுண்டர்வர்கள் இவ்வாறு கட்டளை இடப்பட்டதும் பெரிய சைனியர்களுடன் விரைவில் புறப்பட்டனர். தேவர்களுக்கு நன்மை புரியும் பொருட்டு எழுந்தருளியிருந்த தேவியைக் கண்ணுற்று அம் மகா வீரர்கள் சமாதானமாய்ப் பேசத்தொடங்கினர்.

"விசாலாட்சி! துன்பத்தைப் போக்குவதும் சுகத்தைத் தருவதும் உனக்கு நன்மை பயப்பதுமான பிரிய வார்த்தையைச் சொல்லுகிறோம். பெண்ணே! அப்படி நட. நீ கர்வப்படுவது வீண். 'தேவர்களை ஜயித்து ஆள்பவனும் உலக நாயகனும் சாமர்த்திய சாலியும், அழகு மிக்கவனும் சூரனும், காமசாஸ்திரத்தில் நிபுணனும் ஆகிய சும்பனை அடைந்துவிடு. 'சும்பனுடைய கட்டளையால் எல்லா உலகங்களின் ஐசுவரியத்தையும் அடைவாய். திடமான நிச்சயத்தைச் செய்துகொண்டு மங்களம் நிறைந்த அவனை உன் கணவனாக ஏற்றுக்கொள்."

குருட்டுப் புத்தியுடைய வீண் வார்த்தையைக் கேட்டு ஜகதாம்பிகை மேகத்தின் இடிபோல் கர்ஜித்து மறுமொழி கூறினாள். "எனக்கு எவரும் நாயகராக வேண்டியதில்லை; நாயகரால் ஆக வேண்டிய காரியமும் எனக்கில்லை; நானே எல்லா உயிர்க்கும் நாயகி என்று தெரிந்து கொள்.' 'நான் பல சும்பர்களையும் ஆயிரக் கணக்கான நிசும்பர்களையும் பார்த்தாயிற்று. நூற்றுக் கணக்கான தைத்திரியர்களும் தானவர்களும் என்னால் கொல்லப்பட்டிருக்கின்றனர். 'என் முன்னிலையில் யுகந் தோறும் பல தேவ சமூகங்களும் நாசமடைந்திருக்கின்றன. இப்பொழுது மீண்டும் அசுரர்களின் கூட்டங்கள் அழிவடையப்போகின்றன. 'அசுரர்களைக் கொன்று தீர்க்கும் யமனாகவே இங்கு நான் வந்திருக்கின்றேன். உன் சந்ததியைக் காக்க நீ செய்யும் முயற்சி வீண். 'மதிமிக்கோனே! வீரர்களுடைய தர்மத்தைக் காப்பதற்காக நீ போர் புரியலாம். ஆனால் வரப்போகிற மரணம் தடுக்கமுடியாதது. மகான்கள் புகழைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

'நிசும்பனாலோ, துராத்மாவான சும்பனாலோ உனக்கு இனி ஆகவேண்டியது என்ன இருக்கிறது.? வீர தருமத்தைக் கைக்கொண்டு தேவர்கள் இருப்பிடமான சுவர்க்கத்திற்குச் செல்லலாம். 'சும்பனும் நிசும்பனும் உன்னுடைய உறவினர்களான ஏனையோரும் இந்தப் போரிலேயே உன்னைப் பின்தொடர்ந்து வந்து சேருவார்கள்.' தேவியால் இவ்வாறு ஏவப்பட்ட சண்ட முண்டர்களாகிய அசுரர்கள் கோபம் மூண்டவர்களாய் பலத்தின் கொழுப்பால் விரைவாகக் கொடிய நாணொலியைக் கிளப்பினர். சண்டிகைக்கும் சண்டமுண்டர்களுக்கும் இடையில் பாணம், வாள், கதை முதலிய ஆயுதங்களின் தீவிரமான பிரயோகத்துடன் பேடிகளுக்கும் பயத்தைத்தரும் யுத்தம் ஆரம்பமாயிற்று. சண்டன் விட்ட பாணங்களை தேவியானவள் கூரிய சரங்களால் அழித்தாள். முண்டனும் சேனையுடன் போரில் இறங்கிக் கொடிய கோபத்துடன் பாணங்களை மழைபோல் பொழிந்தான். அந்தப் பெரிய பாணக்கூட்டத்தைக் கண்டு தேவி கடுங்கோபம் கொண்டாள். அவளுடைய முகம் மேகம் போல் கறுத்தது. அவளுடைய நெற்றியில் இருந்து காளி வெளிப்போந்தாள். அவள் புலித்தோலை அணிந்து யானைத் தோலைப் போர்த்தியிருந்தாள். முண்டமாலையணிந்து கோரமாகவும், உலர்ந்த குளம் போன்ற வயிறுடையவளாகவும், நாக்கை அடிக்கடி துளாவுபவளாகவும் விளங்கினாள்.

கோபத்துடன் அவள் விரைந்து மகா வீரர்களாகிய அசுரர்களைக் கையில் எடுத்து வாயில்போட்டுக்கொண்டு பற்களால் மென்று தின்றாள். சைனியம் அங்ஙனம் கொல்லப் படுவதைக் கண்டு மகா அசுரர்களாகிய சண்டமுண்டர்கள் இடைவிடாது பாணங்களைப் பொழிந்து அந்தத் தேவியைத் தாக்கினார்கள். அப்பொழுது சண்டிகாதேவி கூரிய சரங்களால் சண்டனைத் தாக்கினாள். தேவியின் பாணங்களால் மிகவும் தாக்குற்ற அவன் மூர்ச்சித்து பூமியில் விழுந்தான். சகோதரன் விழுந்ததைக் கண்டு துக்கத்தால் பீடிக்கப்பட்ட முண்டன் கோபத்துடன் காளியின் மேல் அம்புகளைப் பொழிந்தான். சண்டிகை முண்டன் விட்ட கொடிய பாணங்களை ஈஷிகாஸ்திரங்களால் ஒரு நொடியில் எள்ளைப்போல் பொடியாக்கினாள்.

பின்னர் அர்த்தசந்திர பாணத்தால் அவனை மறுபடி அடிக்கவே மகாவீரியம் படைத்த அவனும் கொழுப்படங்கி பூமியில் விழுந்தான். அப்பொழுது மூர்ச்சை தெளிந்தெழுந்த சண்டன் பெரியதொரு கதாயுதத்தைத் தூக்கி வேகமாக காளிகாதேவியை வலது புஜத்தில் அடித்தான். காளிகாதேவி அந்த அடிதன்மேல் படாமல் ஏமாற்றி அக்கொடிய அசுரனை மந்திரத்தால் விடுத்த பாசபாணத்தால் கட்டினாள். அப்பொழுது எழுந்த முண்டன் தனது தம்பி வலியடைக்கிக் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு கையில் திடமான சக்தி ஆயுதத்தை எடுத்துக்கொண்டு எதிர்த்து வந்தான். அங்ஙனம் வந்த அவ் அசுரனை காளிதேவி பார்த்து சகேதரர்களில் இரண்டாமவனாகிய அவனையும் விரைவில் வலியக்கட்டினாள். மகாவீரியம் படைத்த சண்ட முண்டர்கள் இருவரையும் முயல்களைப் போல் கட்டி இழுத்துக் கொண்டு அட்டஹாஸத்துடன் அம்பிகையின் முன் வந்தாள். வந்து அம்பிகையிடம் கூறியதாவது; ''பிரியே! போரில் வெல்லுவதற்கரிய அசுரர்களான இவ்விருவர் களையும் யுத்த யக்ஞத்தில் பலியிடும் பிராணிகளாகக் கொண்டு வந்துள்ளேன். ஏற்றுக்கொள்.' அவ்வாறு கொண்டு வரப்பட்டவர்களும் செந்நாய் போன்றவர்களுமான அவர்களைபபார்த்து அம்பிகையான சண்டிகாதேவி காளியிடம் இனிமையாகப் பின்வரும் வார்த்தையைக் கூறினாள். 'யுத்தத்தில் பிரியமுள்ளவளே! நீ சாமர்த்திய சாலியல்லவா? இவர்களைக் கொல்லவும் வேண்டாம். விடவும் வேண்டாம். உன்னால் தேவர்களுடைய காரியம் சீக்கிரத்தில் பூர்த்தி செய்விக்கப்படட்டும்.

அம்பிகையின் இவ்வார்த்தையைக் கேட்டு காளிகை மீண்டும் கூறுவாள்: 'பிரபலமான இந்த யுத்த யக்ஞத்தில் வாளையே யூபஸ்தம்பமாய்க் கருதி ஆலம்பம் செய்கின்றேன். அப்பொழுது வதை கொலையாய்க் கருதப்படமாட்டாது' இப்படிக் கூறிவிட்டுக் காளிதேவி வாளால் அவர்களுடைய தலையை விரைவில் வெட்டினாள். பின்பு மகிழ்ச்சியுடன் இரத்தத்தைப் பருகினாள். இவ்வாறு அசுரர்கள் கொல்லப்பட்டதைப் பார்த்து சந்தோஷத்துடன் அம்பிகை பின்வருமாறு கூறினாள். 'உன்னால் தேவ காரியம் பூர்த்தி செய்யப்பட்டது. இப்பொழுது உனக்கு ஒரு நல்ல வரம் தருகிறேன். காளிகையே! சண்டமுண்டர்களைக் கொன்ற காரணத்தால் பூமியில் உன் பெயர் சாமுண்டா என்று பிரசித்தமாய் விளங்கப்போகிறது.' அவ்வசுரர்கள் கொல்லப்பட்டு மடிந்தது போக எஞ்சியிருந்த சேனையானது தங்கள் அரசனை நோக்கி ஓட்டமெடுத்தது. அசுர ராஜனிடம் சென்ற அவர்களனைவரும் அடிக்கடி கூக்குரலிட்டுக் கதறி பிரபுவே! எந்த விதியின் வசத்தில் உலகுளதோ அதனுடைய வேடிக்கையைப் பாருங்கள். இந்த ஒரே ஒரு ஸதிரீயால் எல்லா ராக்ஷஸர்களும் கொன்று வீழ்த்தப்பட்டனர் என்று முறையிட்டார்கள். நான் இப்பொழுது யுத்தம் செய்கிறேன். எது வரவேண்டுமோ அது இங்கு வரட்டும். வெற்றியோ மரணமோ எது வந்தாலும் அப்படியே ஏற்றுக்கொள்வேன். பெருந்தோள் படைத்த ரக்தபீஜா! போர்க் களத்திற்கு நீ செல். மகா பாக்கியசாலியே! உன்னுடைய பலத்திற்குத் தக்கபடி யுத்தம் செய். மகாராஜனே! நீங்கள் கொஞ்சங்கூட கவலைப்பட வேண்டாம். நான் இவளைக் கொல்லுகிறேன். அல்லது உங்கள் வசமாக்குகிறேன். குருசிரேஷ்டனே! மகா அசுரனாகிய ரக்தபீஜன் இவ்வாறு கூறிவிட்டுத் தேரில் ஏறிக்கொண்டு தன் சைனியம் புடைசூழ்ந்துவரப் போர்க்களம் சென்றான். அவன் சிங்கத்தின் மேல் கொடிய பாணங்களை விரைவில் விட்டான். ஆகாயத்தில் பாம்புகளைப் போல் வரும் அந்தப் பாணங்களைக் கண்டு அம்பிகை தனது இலகுவான கையால் கூரிய பாணங்களைக் கொண்டு அவற்றை ஒரு நொடியில் வெட்டினாள். மகா அசுரனாகிய ரக்தபீஜனை அம்பிகை தனது வில்லில் கூரிய பாணங்களைக் காது வரை இழுத்துவிட்டுத் தாக்கினாள் தேவிவிட்ட பாணங்களால் அடிபட்ட அந்தப் பாவி தேரின் மேல் மூர்ச்சையடைந்தான். ரக்தபீஜன் விழுந்ததும் 'ஹா, ஹா' என்ற பெரிய சப்தம் எழுந்தது. மிகவும் பயங்கரமான அப்பெரிய சப்தத்தைக் கேட்டு சும்பன் எல்லாச் சேனைகளும் தயாராகும்படி கட்டளையிட்டான். இவ்வாறு சும்பனால் கட்டளையிடப்பட்ட நான்குவகை சேனாபலம் முழுவதும் போர் வெறியுடன் தேவியின் யுத்த மண்டலத்திற்குக் கிளம்பிச் சென்றன. நீண்டதும் மயிர்க்கூச்செறியும் படி பயங்கரமாகியதுமான அந்த யுத்தத்தில் பிரம்மா முதலிய தேவர்களின் சக்திகள் அம்பிகையை வந்தடைந்தார்கள். எந்தத்தேவனுக்கு என்ன ரூபமோ, பூஷணமும் வாகனமும் எப்படியோ அப்படி ரூபத்துடன் போர்க்களத்திற்கு அந்தந்தத் தேவிகள் வந்தார்கள்.

பிரம்மாணீ எனப் பெயர் பெற்ற பிரம்மசக்தி பெண் அன்னத்தின் மேலேறிக்கொண்டு அக்ஷமாலையும் கமண்டலுவும் தாங்கியவளாய் எழுந்தருளினாள். வைஷ்ணவீ கருடன் மேலேறிக்கொண்டு சங்கு, சக்கரம், கதை, தாமரைப்பூ ஆகியவற்றைத் தரித்தவளாய் பீதாம்பரத்தால் அலங்கரிக்கப்பெற்றவளாய் எழுந்தருளினாள். சிவசக்தியான தேவி சாங்கரீ விருஷப வாகனத்தின் மேல் திரிசூலத்துடன் வரமுத்திரை உடையவளாய் பாதிச்சந்திரனைச் சிரசிலணிந்து பாம்பைக் கங்கணமாய்ப் பூண்டு எழுந்தருளினாள். கார்த்திகேய ஸ்வரூபிணியான கௌமாரீ மயில்வாகனத்தின் மேல் வேலாயுதத்தைக் கைக்கொண்டு சிறந்த முகத்துடன் போரை விரும்புபவளாய் எழுந்தருளினாள். இந்திராணீ தெளிவான முகத்துடன் நல்ல வெள்ளையானை மீதேறிக் கொண்டு வஜ்ராயுதத்தைக் கையிலேந்தி மிகக் கோபத்துடன் போர் முகத்திற் கெழுந்தருளினாள்.

பன்றியுருக்கொண்ட வாராஹீ திறமைமிக்க பூதவாகனத்தின் மேலும், நாரசிம்மீ நரசிங்கத்திற் கொப்பான உருக்கொண்டவளாகவும் எழுந்தருளினார்கள். யமசக்தியானவள் யமரூபத்தில் சிரித்த முகத்துடன் எருமை வாகனமேறி கையில் தண்டாயுதத்துடன் பயத்தையளிப் பவளாய்ப் போருக்கு வந்துசேர்ந்தாள். அவ்வாறே வாருணீ சக்தியும், மிகுந்த பலம்வாய்ந்த குபேர சக்தியும் அவ்வாறே அந்தந்த வடிவங்களில் தங்கள் தங்கள் சேனாபலத்தால் சூழப்பட்டு எழுந்தருளினார்கள். எழுந்தருளிய அவர்களைப் பார்த்து தேவியானவள் மகிழ்ச்சியடைந்தாள்; தேவர்கள் கவலை நீங்கி ஸந்தோஷித்தார்கள்; அசுரர்கள் திகிலடைந்தார்கள். உலகிற்கு மங்களத்தைச் செய்யும் சங்கரர் அச்சத்திகளால் சூழப்பட்டுப் போர்க்களத்திற்கு வந்தவர் சண்டிகையிடம் பின்வருமாறு கூறினார். தேவர்களின் காரியசித்திக்காக அசுரர்கள் சீக்கிரம் கொல்லப்படட்டும். சக்திகள் மீண்டும் அவரவர்கள் ஸ்தானங்களுக்குச் செல்லட்டும். 'ஆபத்துக்கள் விலகட்டும்;

உபாதிபாதைகளும் ஒழியட்டும்; மேகங்கள் உரிய காலத்தில் மழை பொழியட்டும்; பயிர்த் தொழில் மிகுந்த பயனளிக்கட்டும். உலகிற்கு மங்களத்தையளிப்பவளும், தேவேசுரருமாகிய சங்கரர் இங்ஙனம் கூறியதும் சண்டிகையின் சரீரத்திலிருந்து அற்புதமான ஒரு சக்தி வெளிப்பட்டாள். பயங்கரமாயும் மிகக் கடுமையாயும் கோரவடிவினளாயும், நூறுநரிகளைப்போல் ஒலி செய்பவளாயும் இருந்த அந்த சக்தி சிரித்த முகத்துடன் சங்கரரிடம் பின்வருமாறு கூறினாள். 'தேவ தேவரே! காமனை வென்றவரே! காமத்தால் புத்திகெட்ட அசுர வேந்தனாகிய சும்பனிடமும் மதம்பிடித்த நிசும்பனிடமும் நீர் தூதுவராக விரைந்து சென்று நான் கூறும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். அதாவது "தேவலோகத்தைவிட்டு நீங்கள் விரைவில் பாதாளம் செல்லுங்கள். அல்லது உங்கள் பலத்தை நம்பிப்போர் புரிந்து சாக விரும்பினால் அப்படியே வாருங்கள். உங்களுடைய மாமிசத்தால் என்னுடைய சக்திகள் திருப்தியடையட்டும்." நன்மை செய்யும் சூலபாணியாகிய சங்கரர் தேவியின் அமுதம் போன்ற இவ்வார்த்தையை அசுர சிரேஷ்டர்கள் காதில் போட்டுவிட்டுத் திரும்பிப் போய்விட்டார். எந்தத் தேவியால் சம்புவானவர் அசுரர்களிடம் தூதராக அனுப்பப்பட்டாரோ அந்தத் தேவி மூவுலகனைத்திலும் சிவதூதீ எனப்பெயர் பெற்றவளானாள்.

சங்கரர் கூறிய தேவியின் வார்த்தையைக் கேட்ட அசுரர்கள் அப்படிச் செய்ய முடியாதென்று கவசம் பூண்டு ஆயுதபாணிகளாய்ப் போருக்குக் கிளம்பினார்கள். அவ்வசுரர்கள் போர்க்களத்திற்கு விரைந்து தேவியை எதிர்த்துக் கூரான அம்புகளைக் காதுவரை இழுத்து அவளைத் தாக்கினார்கள். காளிகாதேவி சூலம், சத்தி, கதை முதலிய ஆயுதங்களால் அசுரர்களைக் கொன்று வீழ்த்திக் கொண்டும் எடுத்து விழுங்கிக் கொண்டும் போர்க்களத்தில் நடமாடினாள். அவ்வாறே மாத்ரு கணங்களாலும் போரில் வீரியமும், பராக்கிரமமும் மிகுந்த அசுர சைனியம் தாக்கித் துரத்தப்பட்டது. அப்பொழுது தேவர்கள் கர்ஜித்ததைப் பார்த்த மகா தேஜஸ்வியமும் பலசாலியுமான ரக்தபீஜாசுரன் போர்க்களத்திற்கு வந்தான். அந்த அசுரசிரேஷ்டன் கருடவாகனத்தின் மேலிருந்த வைஷ்ணவீ சக்தியைப் பார்த்துத் தாமரைக் கண்ணியான அவளை வேலாயுதங்கொண்டு தாக்கினான். சக்திவாய்ந்த அவள் அந்த வேலாயுதத்தை கதாயுதத்தால் தடுத்து மகா அசுரனாகிய ரக்தபீஜனைச் சக்ராயுதத்தால் அடித்தாள். வஜ்ராயுதத்தால் அடிபட்ட மலைச்சிகரத்திலிருந்து காவிப்பொடிகள் உதிர்வதுபோல் சக்ராயுதத்தால் அடிபட்ட அவனுடைய உடலிலிருந்து இரத்தம் நிறையப் பெருகிற்று. இரத்தத்துளிகள் எப்பெப்பொழுது எங்கெங்கு சிந்தினதோ அங்கெல்லாம் அவனைப்போன்ற உருப்படைத்த புருஷர்கள் ஆயிரக்கணக்கில் கிளம்பினார்கள். கோபத்துடன் இந்திராணி வஜ்ராயுதத்தால் ரக்தபீஜனை அடிக்கவே அவனுடைய இரத்தம் பெருகிற்று. அதனால் அவனைப்போல் வீரியமும் உருவமும் படைத்தவர்களாய் ஆயுதங்களுடன் கொழுப்பு மிக்கவர்களாய் அநேகம் ரக்தபீஜர்கள் தோன்றினார்கள். ரக்தபீஜனும் கோபங் கொண்டு கூர்மையான பாணங்களால் சக்திகளைத் தாக்கினான். மாத்ரு கணங்களும் கோபம் மிகுந்தவர்களாய்த் தனித்தனியாகக் அவனை கதையாலும் பாணங்களாலும் தாக்கினார்கள். அதனால் ஏற்பட்ட இரத்த வெள்ளத்தால் உலகம் முழுவதும் ரக்தபீஜர்களால் வியாபிக்கப்பட்டதாயிற்று. அவர்கள் கூச்சலிட்டுக்கொண்டு ஆயுதந்தாங்கி அற்புதமாக யுத்தம் செய்யலாயினர். அநேகம் ரக்தபீஜர்கள் தாக்குவதைக்கண்டு தேவர்கள் பயமும் துன்பமும் கவலையும் மேலிட்டவர்களாய் நடுங்கினர். இவ்வாறு எப்பொழுது தேவர்கள் பயத்தால் கலங்கி மிகவும் கவலையடைந்தார்களோ அப்பொழுது அம்பிகை தாமரைக் கண்ணியான காளியைப்பார்த்துப் பின்வருமாறு கூறினாள்.

"சாமுண்டீ! மிகவிரைவில் உன் வாயை விரிவாகத் திறந்து கொள். என்னுடைய ஆயுதங்களின் தாக்குதலால் விழும் இரத்தத்தைச் சீக்கிரம் குடித்துவிடு.' இவ்வாறு அம்பிகையால் கூறப்பட்டவளும், மகா பராக்கிரமம் படைத்தவளுமான சாமுண்டாதேவி ரக்தபீஜ சரீரத்தில் ஏற்பட்ட காயங்களிலிருந்து பெருகிய இரத்தம் அனைத்தையும் பருகிவிட்டாள். மற்றும் இரத்தத்திலிருந்து தோன்றியவர்களும் மகா பலசாலிகளுமான ரக்தபீஜர்கள் எவர்கள் உண்டோ அவர்களும் வீழ்த்தப்பட்டு இரத்தத்தை இழந்தவர்களாகி பக்ஷிக்கப்பட்டனர். செயற்கை ரக்தபீஜர்களெல்லாம் பக்ஷிக்கப்பட்டபின் இயற்கை ரக்தபீஜாசுரனும் வாளால் வெட்டிக்கொன்று வீழ்த்தப்பட்டான். கொடிய ரக்தபீஜன் கொல்லப்பட்டதும் போர்க்களத்திலிருந்து ஏனைய அசுரர்கள் பயத்தால் நடுங்கி ஓட்டம் பிடித்து மறைந்தனர். ஆயுதங்களை இழந்து, மனமுடைந்து, இரத்தம் படிந்த மேனியுடன் பயத்தால் நடுங்கிக்கொண்டு அவர்கள் 'ஹா! ஹா' என்ற கூச்சலுடன் சும்பனையணுகி அவனிடம் பின்வருமாறு கூறினர்.

'அரசே! அம்பிகையால் ரக்தபீஜன் கொன்று வீழ்த்தப்பட்டான். அவனுடைய உடலிலிருந்து பெருகிய இரத்தம் அனைத்தையும் சாமுண்டா பருகிவிட்டாள்'. இவ்வாறு அவர்கள் உள்ளபடி கூறியதைக்கேட்டு காலத்தால் மதியிழந்தவனும், மரணத்தை நாடுபவனும் ஆகிய சும்பன் கீழுதடு துடிக்கப் பின்வருமாறு பதில் கூறினான். காலத்தால் கற்பிக்கப்பட்ட மரணம் பிராணிகளால் விலக்க முடியாதது. அந்தப்பயம் பிறவியுடன் வந்தது. அதற்காக அடைதற்கரிய நற்கீர்த்தியை எவன் துறப்பான்? நிசும்பா! நான் தேரில் ஏறிப் போர்க்களம் செல்லுகிறேன். அவளைக் கொன்றுவிட்டு வருகிறேன். வேறு விதமாய் வரமாட்டேன்.

இதைக்கேட்ட நிசும்பன் துஷ்டையான அந்தக் காளிகையை நான் போய்க்கொல்லுகிறேன். நான் சீக்கிரம் போய் அந்த அம்பிகையைப் பிடித்துக்கொண்டு வருகிறேன். அரசே! நான் இருக்கும் பொழுது நீங்கள் போருக்குப்போவது பொருத்தமாகாது. நான் போய் உங்களுக்கு வெற்றிச் செல்வத்தைக் கொண்டுவருகிறேன் என்றான்.

வெற்றி அல்லது மரணம் என்று நிச்சயித்துக் கொண்டு சூரனாகிய நிசும்பன் அதற்கான முயற்சியுடனும் சைனியத்துடனும் போர்க்களத்தற்கு தேவியை நாடிச்சென்றான். யுத்த ரஸத்தில் பண்டிதனான அரசன் சும்பனும் தன் சைனியத்தால் சூழப்பட்டுப் போர்க்களம் சென்று யுத்தத்தைப்பார்ப்பவனானான். நிசும்பன் போரைத்தொடங்கிக் கொம்பு போன்றவில்லை எடுத்து

அம்பிகையைப் பயமுறுத்த எண்ணி அம்புகளைப் பொழிந்தான். காளிகையைப்பார்த்து 'தேவி இவர்களுடைய முட்டாள் தனத்தைப் பார். காளீ! இவர்கள் அசுரர்களின் அழிவையும் ரக்தபீஜனுடைய முடிவையும் கண்டும் வெற்றியில் ஆசைகொண்டு இவர்கள் என் மாயையால் மோகமடைந்து இப்பொழுது மரணமடைய இங்கு என் பக்கம் வந்திருக்கின்றனர். இந்த ஆசை மிகுந்த பலமுடையது; தோல்வியடைந்தாலும், பலமிழந்தாலும், நஷ்டமடைந்தாலும், பக்கபலம்போனாலும், உணர் விழுந்தாலும் கூட அது மனிதனை விடுவதில்லை.. ஆசை என்னும் கயிற்றால் பிணிக்கப்பட்ட இவ்விருவரும் யுத்தத்திற்கு வந்திருக்கிறார்கள். காளி! சும்ப நிசும்பர்களின் இருவரும் போரில் என்னால் கொல்லப்படவேண்டியவர்கள். சண்டிகா தேவியானவள் காளியிடம் இவ்வாறு கூறிவிட்டுக் காதுவரை இழுக்கப்பட்டுவிட்ட பாணப்பொழிவால் தன் முன் நின்ற நிசும்பனை வேகமாக மறைத்தாள். அவ் வசுரனும் தேவியின் பாணங்களைத் தனது கூரிய பாணங்களால் வெட்டினான். மிகவும் பயங்கரமாக அவர்களிடையே யுத்தம் நிகழ்ந்தது. சும்பன் கோபத்துடன் காளிகையைத் தாக்கிவிட்டு ஜகதாம்பிகையைப் பிடிக்கும் எண்ணத்துடன் தனது படையுடன் அங்கிருந்து விரைந்து வந்தான். வேகமாய் ஓடிவந்து மதவெறிகொண்ட சிங்கத்தின் தலைமேல் அதிக பலத்துடன் வாளை வீசி ஜகதாம்பிகையை பிரமிக்கச் செய்தான்.

அப்பொழுது தேவி வாளின் வீச்சைத் தனது கதாயுதத்தால் தடுத்து அவன் தோள்பட்டையில் அடிக்கப்பட்ட போதிலும் கொழுப்பு மிகுந்த தோள்பட்டையில் கோடரியால் அடித்தாள். வாளால் தோள்பட்டையில் அடிக்கப்பட்ட போதிலும் கொழுப்பு மிகுந்த அவன் வேதனையைப் பொறுத்துக்கொண்டு மறுபடியும் சண்டிகையைத் தாக்கினான். இவ்வாறு ஒருவர்க்கொருவர் போர் நிகழ்கையில் தங்கள் தங்கள் வெற்றியை விரும்பும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அது மிகுந்த பயத்தைத் தருவதாக ஆயிற்று.

அசுரர்களின் வீழ்ச்சியைக் கண்டு கோபம்மிகுந்த நிசும்பன் கொடிய கதாயுதத்தைத் தூக்கிக்கொண்டு சண்டிகையை நோக்கி விரைந்தான். மதத்தால் கர்வம் பிடித்த அவன் கதையினால் சிங்கத்தைத் தலையில் அடித்து விட்டுச் சிரித்துக்கொண்டு மீண்டும் தேவியை அடித்தான். அப்பொழுது தேவியும் தன் முன் நின்று தாக்கும் நிசும்பனைப் பார்த்து மிகவும் கோபம் மூண்டவளாயப் பின்வருமாறு கூறினாள் ''புத்தி மழுங்கியவனே! இந்த என்னுடைய வாளை உன்னுடைய கழுத்தை நோக்கி ஏவுகிறேன்; அதனால் நீ யமஉலகம் செல்வாய்; அதுவரை நில்.'' சண்டிகாதேவி இவ்வாறு கூறிவிட்டு குறுவாளை வைத்துக் கத்தியால் நிசும்பனுடைய தலையை வெட்டினாள். பயங்கரமான பராக்கிரமம் படைத்த நிசும்பாசுரன் விழுந்ததும் பயத்தினால் நடுக்கமுற்ற அவனுடைய சேனைகளிடையே 'ஹா! ஹா!' என்ற பெருங் கூக்குரல் எழுந்தது. சைனியங்களில் இருந்தவர்களெல்லாம் ஆயுதங்களைப் போட்டுவிட்டு இரத்தம் பெருகும் உடல்களுடன் கூக்குரல் இட்டுக்கொண்டு அரச மாளிகைக்குச் சென்றனர். அரசே! தங்களுடைய சகோதரர் கொல்லப்பட்டு போர்க்களத்தில் விழுந்து கிடக்கிறார். தங்கள் தம்பியைப் பின்பற்றிய சூரர்கள் எவர்களோ அவர்களும் அந்தத் தேவியால் வீழ்த்தப்பட்டனர். அசுரர்களின் வேந்தனாகிய சும்பன் அவர்களுடைய இவ் வார்த்தையைக் கேட்டுக் கோபத்தால் கலங்கிய சித்தத்துடன் சைனியர்களிடம் வேகமாய்ப் பின்வருமாறு கூறினான். 'என்னுடைய தேர் விரைவில் சித்தமாகட்டும். நான் போர்க்களம் செல்கிறேன். விதி வசத்தால் இப்பொழுதே வெற்றியோ, அல்லது மரணமோ ஏற்படட்டும். இங்ஙனம் சைனியர்களிடம் கூறிவிட்டு சும்பன் விரைவாகத் தேரில் ஏறி இமயமலையில் அம்பிகை இருந்த இடத்திற்குச் சென்றான். அம்பிகையைப் பார்த்துக் காமத்தால் மயங்கிய சும்பன் மன்மதபாணங்களால் தாக்குண்டு மதியிழந்து மனதில் இவ்வாறு சிந்திக்கலானான்.

'ஐயோ! இது என்ன அழகு! அற்புதமான சாதூர்யம் தான் எப்படிப்பட்டது! இளமையின் மென்மையும் தைரியமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவை இவ்வாறு மனதால் எண்ணி விட்டுச் சும்பன் மீண்டும் மனோ பலத்தைக் கைக்கொண்டு போர் புரிய நிச்சயித்துத் தன் முன் நின்ற தேவியிடம் பின்வருமாறு கூறினான். 'தேவி! மனதிற்கினியவளே நீ இப்பொழுது போர் புரியலாம். ஆனால் உன்னுடைய இந்த முயற்சி வீண். நீ புத்தியில்லாதவள். ஸ்திரீகளுக்கு ஆயுதம் எடுப்பது ஒரு பொழுதும் தர்மம் ஆகாது வீணையின் நாதத்தைவிட்டுப் போர்மணியின் நாதத்தைச் செய்கிறாய். அழகிற் சிறந்தவளே! ரூபத்திற்கும் யௌவனத்திற்கும் இது அனைத்தும் விரோதம் அழகு மிக்கவளே! உனக்குப் போலில் விருப்பமிருந்தால் தொங்கும் உதடும் அவலக்ஷணமும் நகங்களும் கொடிய இயல்பும் காக்கை வர்ணமும் விகாரமான பார்வையும் உடயவளாய் குரூபியாகி கடுமையாய்ப் பேசு அப்பொழுது நான் உன்னுடன் யுத்தம் செய்கிறேன். மான் விழியாளே! ரதியைப் போன்றவளே! இப்படிப்பட்ட அழகிய பற்களை யுடைய உன்னைக்கண்டு யுத்தத்தில் உன்னைக் கொல்ல என் கை சம்மதிக்கவில்லை'' என்று இங்ஙனம் காமத்தால் பீடிக்கப்பட்டு பேசும் அவனைப் பார்த்து ஜகதாம்பிகை புன்முறுவலுடன் பின்வரும் வாக்கியத்தைக் கூறினாள். "புத்திமழுங்கியவனே! காமபாணத்தால் மயங்கி ஏன் கலங்குகிறாய். மூடா! நீ காளிகையுடன் போர் புரி நான் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். அல்லது சாமுண்டாவுட னாவது போர் புரி. இவர்கள் யுத்த களத்தில் உன்னுடன் போர் புரிய தகுதியானவர்கள் . உன் இஷ்டப்படி அவர்களை அடிக்கலாம். நான் உன்னுடன் போர் புரிய விரும்பவில்லை." இப்படிக்கூறிவட்டு தேவியானவள் இனிய மொழியில் காளிகையுன் "காளிகே! நீ குரூபமுடையவளாய் இருப்பதால் யுத்தத்தில் பிரியமுள்ள இவனுடன் போர்புரி என்றுரைத்தாள்.

இங்ஙனம் கூறப்பட்டவளும் காலனால் ஏவப்பட்டு காலரூபம் தரித்வளும் ஆகிய காளிகை விரைவில் கதையைத் தூக்கிக்கொண்டு போர் செய்ய ஆயத்தமாய் போர்க்களத்தில் நின்றாள். அவர்களிடையே பயங்கரமான யுத்தம் நிகழ்ந்தது. காளிகை அசுர வேந்தனை கதாயுதத்தால் மேன் மேலும் அடித்தாள். சண்டிகா காளி பொன்போல் ஒளிரும் அவனுடைய தேரை முறித்துவிட்டு கடுமையாய் சத்தம் செய்துகொண்டு அதில் பூட்டியிருந்த கழுதைகளை அடித்து சாரதியையும் அடித்தாள்.

அப்பொழுது அவன் கோபம்பொங்கப் பெரிய கதையை எடுத்துக்கொண்டு காலால் நடந்து வந்து காளிகையை மார்பின் மத்தியை நோக்கிக் கோபச்சிரிப்புடன் அடித்தான். அந்தக் கதையின் தாக்குதலை ஏமாற்றிவிட்டு விரைவில் கத்தியை எடுத்துச் சந்தனம் பூசியதும் ஆயுதம் தாங்கியதுமான அவனுடைய இடது கையை வெட்டினாள். தோிழந்து கையும் வெட்டப்பட்டு இரத்தம் பெருகுபவனாயினும் மற்றொரு கையில் கதையுடன் நெருங்கி வந்து காளிகையை அடித்தான். கதையும் தோள்வளையும் தாங்கிய அவனுடைய வலது கையைக் காளிகையானவள் சிரித்துக்கொண்டே தனது கைவாளால் வெட்டினாள்.

காளிகையை பயமுறுத்துபவன் போல் அவன் விரைந்து பாயவே தாமரைபோல் சிவந்திருக்கும் அவனைக் கண்ணுற்று அவனுடைய தலையைக் கழுத்திலிருந்து வெட்டித் தள்ளினாள். இரத்த வெள்ளம் பாய்ந்தது. வெட்டுண்ட தலை பூமியில் ஒரு மலைபோல் விழுந்தது.

பிராணன் போய் பூமியில் அசுரன் விழுந்ததைக் கண்டு இந்திரனுடன் கூடிய தேவர்கள் அப்பொழுது சாமுண்டா காளிகா தேவியைத் துதித்தார்கள். அரசே! கொல்லப்படாமல் எஞ்சிய அசுரர்கள் ஆயுதங்களை எறிந்து விட்டு ஜகதாம்பிகையை வணங்கிவிட்டு எல்லோரும் பாதாளம் சென்றனர். இவ்வாறு சும்பன் முதலியோரின் வதமும் தேவர்களின் இரக்ஷணமும் தேவியின் உத்தம சரித்திரமும் ஆகிய இதுவெல்லாம் ஓரளவு முடிவாயின.

**முற்றும்**

"பார்புரந்த திருவடியுமடியவர்களீடேறும் படிக்கு பைம்பொற்
றார்புரந்த வடிவழகு மழகெழுமங்கலநாணுந் தயங்குஞ்சோதிக்
கார்புரந்த கருங்குழலும் வெண்ணகையுஞ் செவ்விதழுங் கருணைக் கண்ணுஞ்
சீர்புரந்த பிடியன்ன மென்னடையம்பிகை பாதஞ்சிந்தை செவ்வாம்

(தக்ஷிண கைலாசபுராணம்)



## தமிழ் மறை கூறும் பொது அறங்கள்

★ தாயை வணங்கல்
★ தந்தையை வணங்கல்
★ ஆசிரியனை வணங்கல்
★ குருவை வணங்கல்
★ பெரியோர்களை வணங்கல்
★ உண்மை பேசல்
★ செய்நன்றி அறிதல்
★ அன்புடைமை
★ நடுவு நிலைமை
★ பொறுமை
★ தெய்வ நம்பிக்கை
★ தெய்வ வழிபாடு
★ சந்தோஷமுடைமை
★ ஒழுக்கமுடைமை
★ சுத்தமுடைமை
★ ஈகை – கொடுத்தல்
★ பிறர் பொருள் விரும்பாமை
★ களவு எடாமை
★ கள் உண்ணாமை
★ கோபியாமை
★ பிறர் மனை நயவாமை
★ வஞ்சனை இல்லாமை
★ பொறாமை இல்லாமை
★ கோள் சொல்லாமை
★ விருந்தினரை உபசரித்தல்
★ சுற்றத்தை உபசரித்தல்
★ தன்னைக் காத்தல்
★ மனைவி, மக்களைக் காத்தல்
★ புறங்கூறாமை

ஓம் சக்தி

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

உ

திருக்கோணமலை

# அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

''வேதாகமமாமணி'' சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள், ஆலய பிரதம குருவும்,
ஆதீன கர்த்தாவும், ஸ்ரீ பத்திரகாளி கோயில்.

## சக்தி வழிபாட்டின் தொன்மை

காளி வழிபாடு என்ற சக்திவழிபாடு இந்து மதத்தின் ஒரு முக்கியமான பகுதி என்பதற்கு மகாபாரதமும், புராணங்களும் ,ஆகமங்களும் தந்திரங்களும், சான்று தருகின்றன. பிற்காலத்தில் சமரசப் பெருஞானியாக விளங்கிய ஸ்ரீஇராமகிருஷ்ண பரம ஹம்ச குருதேவரும் சமீப காலத்தில் வாழ்ந்த மகாகவி சுப்ரமணிய பாரதியாரும் காளிவழிபாடு செய்தவர்களே.

தெய்வ வழிபாட்டிலே தேவி வழிபாடு மிகமிகத் தொன்மையானதென்பர். பண்டைய உலகத்தின் முக்கிய தேவதையான தேவி (சக்தி) இருக்குவேத காலத்திற்கும் முற்பட்ட தெய்வம் என்பது மொகஞ்சதாரோ என்னும் இடத்தைத் தொல்பொருளியலாளர்கள் அகழ்வாராய்ச்சி செய்து பார்த்தபோது கிடைத்த மிகப்பழைய நாகரீகச் சின்னங்களான நாணயங்களிலிருந்து தெரியவருகின்றது. நாணயங்களில் பெண்தெய்வம், திரிசூலம் என்பவை பொறிக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாயிருந்தது. தமிழர் நாகரீகத்துடன் அந்த நாகரீகம் தொடர்புடையதென்று கருதுவோருமுண்டு.

மொகஞ்சதாரோவில் கிடைத்த தொல்பொருள்களில் அம்பாதேவி (அம்பிகை) மிகப்பிரபலமாக இருந்ததென்று அறியக்கூடியதாயிருந்தது. அம்பாள்வழிபாட்டிலிருந்து காளி வழிபாடு தோன்றியிருக்க வேண்டு மென்பது ஆய்வாளர்களின் யூகம். அம்பா தேவிக்கு வாகனம் சிங்கம் என்றும், அவள் போரின் அதிதேவதை என்றும், வெற்றித்தெய்வமென்றும் அறிந்திருந்ததால் அம்பாதேவி வழிபாட்டிலிருந்து காளி வழிபாடு தோன்றியதாக யூகிக்கிறார்கள். அம்பாதேவி கன்னியாகவும் கல்யாணமானவளாகவும் ஆய்வாளர்களால் கருதப்பட்டாள் இந்த யூகம் தொன்மைக்காலத்திலிருந்து நிலை பெற்றுவந்ததால் 17ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வாழ்ந்த தாயுமான சுவாமிகள் ''அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையும் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலே'' என்று பாடியிருப்பது சிந்திக்கத்தக்கது.

காளி தேவியின் தோற்றம்பற்றிப் புராணங்கள் பின்வருமாறு கூறுகின்றன.

1. தாருகன் என்ற அசுரன் பெண்ணாலன்றி மற்றெவராலும் தனக்கு மரணம் வராதபடி வரம் பெற்றிருந்தான். ஆகவே தேவர்கள் வேண்டிக்கொண்டபடி சிவபெருமான் அருளால் தேவியின் ஒரு கலை சிவபெருமானுடைய கழுத்திலுள்ள நஞ்சுக்கறை படிந்து அக்கினிக்கண் (வன்னி நயனம்) வழியாக வெளிப்பட்டது. அவ்வுருவம் காளமாகிய நஞ்சு படிந்ததால் காளி என்ற பெயரைப் பெற்றது. காளி தனது சினத்தீயால் தாருகனை நீறாக்கினாள். தாருகனுடைய மார்பைப்பிளந்ததாக சிலப்பதிகாரம் வளக்குரை காதை தெரிவிக்கின்றது.

02.மகிஷாசுரன் செய்த துன்பத்தைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவன் மேல் சிவபெருமானுக்கு உண்டான சீற்றம் பெண்ணுருவாய்த்திரண்டது. அதுவே காளி உருவம். இவள் வானமும் பூமியும் அடங்க வாயைத் திறந்து இரத்தபீஜன் என்னும் மகிஷாசரனை ஒரு துளி இரத்தமும் கீழே விளாமல் விழுங்கினாளாம்.

03.தக்கன் செய்த வேள்வியை அழிப்பதற்காக உமாதேவியின் சினத்தீயிலே காளி தோன்றினாள். என்றும் இவள் வீரபத்திரனை மணந்தாள் என்றும் கூறுவர். காளியைச் சப்தமாதங்களில் ஒன்றாக நூல்கள் கூறும். இவள் வாயு வடிவமான சக்தி.

12ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரத்தில் சூலி, எண்தேவி, தாருக நாசினி, மாதரி, வீரி ,கௌரி, முக்கண்ணி, பைரவி, குமாரி, சாமுண்டி, சண்டிகை, யோகினி, வேதாளி, யாமளை, மாகாளி, ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. சக்தி தத்துவ அடிப்படையில் இப்பெயர்களால் அம்பிகை வழிபடப்பெற்றாள்.

சங்ககாலத்து நூல்களில் கொற்றவை வழிபாடு கூறப்படுகிறது. கொற்றவை வெற்றித்தெய்வம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரித்துப் பேசிய தமிழ் முன்னோர் நீரும் நிழலுமற்ற பாலை நிலத்துக்கு காளியைத் தெய்வமாக்கினர். களவு, வழிப்பறி, கொள்ளை முதலானவற்றைச் செய்துவாழும் கள்வர், வேடுவர் முதலான பாலைத்திணைமக்கள் வழிபட்ட காளியைக் காடுகிழார், காடுகிழவோள் என்று நூல்கள் குறிப்பிடுகின்றன. கொற்றம் அல்லது வெற்றியைத் தருபவளாகிய காளியை கொற்றவை என்று குறிப்பிடுகின்றது கலித்தொகை.

மேலே கூறிய நூலாதாரங்களைக் கொண்டு சக்தி வழிபாடு தோன்றிய வரலாறு அறியப்படுகிறது.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பது இந்துக்கோட்பாடு. பண்டைக் காலத்தில் வாழ்ந்த மகரிஷிகள் ஞானியர்களின் உள்ளத்தில் இந்தக் கோட்பாடு உறுதியாயிருந்த போதிலும் மக்களுடைய உள்ளப் பாங்கையும், நம்பிக்கையையும் ஸ்திரப்படுத்துவதற்காக அத்வைத வேதாந்தியாகிய ஆதிசங்கரர் சண்மதக் கோட்பாட்டை வகுத்து விரிவுபடுத்தினார். அதன்படி வளர்ந்தவையே சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் அறுவகை நெறிகள். ''அறுவகை நெறிகளும் பிறவுமாகிய இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்'' என்று அறுவகை நெறிகளையும் இறைவி மேலேற்றி துதிக்கப்படுபவள் பராசக்தியே.

## ஆலயத்தின் தொன்மை

ஈழநாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற க்ஷேத்திரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வர சிவ பூமியில் கோயில் கொண்டருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஈழத்திலுள்ள சக்தி பீடங்களில் தொன்மையும், முதன்மையும், மேன்மையும் உடையதாக விளங்குகின்றது.

திருகோணமலையின் இருதய ஸ்தானமாக விளங்குகின்ற ஸ்ரீ பத்திகாளி அம்பாளின் ஆலயத்திற்கெதிரே பரந்த மைதானமும் அதையடுத்துப் பரந்து விரிந்துகிடக்கும் இந்து சமுத்திரமும் .இவ்வாலயத்திற்கு இயற்கை அழகை ஊட்டிக் கொண்டிருக்கிறது. இவ்வாலயத்தில் நின்று கொண்டு திருக்கோணேஸ்வரத்தைத் தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய கோணேசப் பெருமானின் கிருபாகடாட்சம் அம்பாளுடைய ஆலயத்துள் நிறைந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு இவ்வாலயத்துள் நிற்கும்போது ஏற்படுகின்றது.

ஒரு ஆலயத்தின் தொன்மையை அறிய முயலும் ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் கல்வெட்டுகள், சாசனங்கள் என்பன முதலிடம் பெறுகின்றன. அடுத்து ஆலயச்சூழலில் கிடைத்த தொல்பொருளட்கள் உதவுகின்றன. ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வரலாறு தொடர்பாக செவிவழியாகப் பேணப்பட்டுவரும் மரபுக்கதை ஒன்றுண்டு.

மதுரையம்பதியில் பிறந்த பிராமண குலத்தைச் சேர்ந்த ஒருவர் இராமேஸ்வரத்துக்கு வந்து இல்லற வாழ்க்கையை நடாத்தி வந்தார். இவ்வாறு இருக்கும் காலத்தில் தெய்வ விக்கிரகம் ஒன்று பற்றி தெய்வீக வாக்கு அவருக்கு கிடைத்தது. திருகோணமலையிலுள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தெற்கு வீதியல் தொங்கு செவ்வரத்தை மரமொன்று இருக்கின்றது. இந்த மரத்தின் அடியில் நிலத்தினுல் ஒரு தெய்வ விக்கிரம் இருக்கிறது என்ற தெய்வ வாக்கின்படி அந்தப் பிராமண பக்தர் திருகோணமலைக்கு வந்தார். அவ்விடத்தை அகழ்ந்து பார்த்த போது ஒரு செப்புக் கிடாரத்தினுள் (தாளி) காளி அம்பாளின் விக்கிரகம் இருப்பது கண்டறியப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை இக்கோவிலில் நடைபெறுகின்ற பிரதான விழாக்களில் இந்தக் காளியம்பாள் விக்கிரகம் சிறப்பிடம் பெற்று வருகின்றது. காளி அம்பாளின் விக்கிரகம் தாளியிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட காட்சி இக்கோவிலின் சித்திரத் தேரில் புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இராஜ கோபுரத்திலும் இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களின் தோற்றக் காலத்தைப்பற்றி எதனையும் அறியமுடியாமலிக்கும் போது அதன் தோற்றத்தை விளக்குவதனை மையமாகக் கொண்டு பலகதைகள் தோன்றுவது வழக்கம். இப்படியான கதைகள் மக்களின் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில் அமைகின்றன. அவர்களின் மனதில் ஆழமாகப் பதித்து நிலைபெற்று விடுகின்றன. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலின் தோற்றக்காலம் தொடர்பான க்தையும் இத்தகைய தன்மை கொண்ட கதைகளுள் ஒன்றாக இருக்கலாமோ? என்று ஐயப் பாட்டாலும் அகழ் தெடுக்கப்பட்ட செப்புக் கிடாரமும் அதற்குள் வைத்துப் பாதுகாக்கப் பட்டிருந்த பத்தரகாளி அம்பாளின் விக்கிரமும் இக்கோவிலின் தோற்றக்காலம் பற்றிய தரவுகள் சில வற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கின்றன.

செப்புக் கிடாரத்தின் வடிவமைப்பினையும் உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப் பழமை வாய்ந்த தொன்றாகவே இக்கிடாரம் காணப்படுகின்றது. பத்திரகாளி அம்பாள் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழ 11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோவில்களில் காணப்பட்ட காளியம்ம உருவங்களை ஒத்ததாக காணப்படுகின்றது. இவ்விக்கிரகத்தின் காலத்தை திட்டவட்டமாக கூறமுடியாவிட்டாலும் அது மிகப் பழமை வாய்ந்த தொன்றெனக் கூறிக்கொள்ள முடியும்.

இக்கோவில் பற்றிய கதை மரபில் வரும் செய்தி இலங்கையில் காலத்துக்குக் காலம் நடைபெற்ற போத்துக்கீச, ஒல்லாந்தப் படையெடுப்புக்களாலும் பௌத்த சமணத் தாக்கங்களாலும் இந்துக் கோவில்களுக் கேற்றப்பட்ட அழிவுகளை நினைவூட்டுகின்றன. அந்நியரின் ஆக்கிரமிப்பிலிருந்து தற்காலிகமாக பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் கோணேசர் கோவிலின் விக்கிரகங்கள் கிணற்றினுள் மறைத்து வைக்கப்பட்டு இருந்ததையும். பொலநறுவை இந்துக் கோயில்களின் திருவுருவங்களை அதிசயிக்கத்தக்க வகையில் நிலத்தினடியின் கல்லறை அமைத்துப் பாதுகாத்து வைத்திருந்ததையும் அறிகின்றோம்.

இத்தகை நடவடிக்கையாவே அந்நியரின் இந்து மத விரோதச் செயல்கள் நடைபெற்ற 17ம் நூற்றாண்டில் காளி கோயில் அம்மன் விக்கிரகமும் செப்புக் கிடாரத்தினுள் பாதுகாத்து வைத்து மண்ணுக்கடியில் மறைத்து வைக்கபட்டிருந்ததென எண்ண வேண்டும்.

இன்று ஸ்ரீ பத்திகாளி அம்பாள் கோவிலிருக்கும் இடத்தில் சோழர் காலக் கோவிலொன்று இருந்ததெனவும் இக்கோவிலுக்குரிய தூண் ஒன்றில் கலவெட்டொன்று காணப்பட்டதையும், அதனைப் பேராதனைப் பலகலைக் கழக பேராசிரியர் கலாநிதி **செ. குணசிங்கம்** அவர்கள் ஆய்வு செய்துள்ளார் என்பதனையும் அறிவோம். போத்துக் கீசரின் தாக்கத்தினால் இக்கோவில் அழிக்கப்பட்டு இது மறுபடியும் இந்த இடத்தில் புனரமைக்கப்பட்டதெனக் கொள்ளலாம்.

## அற்புதக் கதைகள்

ஒரு ஆலயத்தின் மகிமையை மேம்படுத்தி மக்களின் மனதில் நம்பிக்கையை ஊட்டுவதற்காக பௌராணிகர் புராணங்களில் புனை கதைகளை புனைந்துரைப்பதுண்டு. இத்தகைய கதைகளை அறப்படித்த பேராசிரியர்களும், விஞ்ஞானயுக இளைஞர்களும் நம்புவதில்லை. ஆத்ம ஞானிகள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கைகள் சித்தத் தெளிவைக் கொடுத்து அவர்களை சித்தர்களாக்குகின்றது.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலயத்தோடு தொடர்புடைய அற்புதக் கதைகளின் சான்றுப் பொருட்கள் ஆலயத்தில் இன்றும் இருக்கின்றன. எனவே இந்த அற்புதக் கதைகள் தள்ளத்தக்கதன்று.

நிலத்தினடியிலிருந்து எடுக்கப்பட்ட கிடாரமும் (தாளி) காளியம்பாளின் தாமிரத் திருவுருவமும் ஆலயத்தில் இன்றும் இருப்பது போல சிங்கவாகன அற்புதக் கதையொன்று பத்திரகாளி கோவிலோடு தொடர்பு உடையதாகக் காணப்படுகின்றது.

சிங்கவாகனம் ஒன்றை இந்தியாவிலிருந்து கப்பலில் ஏற்றிக் கொண்டு இந்து சமுத்திரத்தில் இக்கப்பல் சென்று கொண்டிருந்ததாகவும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலயத்திற்கு நேராக இக்கப்பல் ஓடாமல் நின்று விட்டதாகவும் அம்பாளின் அருளால் கப்பற் தலைவன் கண்ட சொற்பனத்தின் படி அந்த சிங்கா வனத்தை இவ்வலயத்திற்கு சேர்த்த பின்னரே ஓடத் தொடங்கிய தென்றும் கர்ண பரம்பரைக் கதையொன்று கூறப்படுகின்றது. இந்த சிங்காவனம் இன்னும் இவ்வலயத்தில் இருக்கின்றது.

சுமார் நானூறு ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கதையொன்று ஸ்ரீ பத்திகானி அம்பாளிடத்துப் பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றது. பண்டைக் காலத்தில் இவ்வாலயத்திலும் ஆலயச் சூழலிலும் அநாச்சாரமாக நடந்து கொள்வதற்கு மக்கள் பயப்படுவார்களாம். ஒரு நாள் ஒரு பெண் தலைவிரி கோலத்தோடு அம்பாளுடைய சந்நிதானத்திற்கு முன்பாக உதாசீனமாகச் சென்றாளாம். அதனால் அப் பெண்ணுக்கு கழுத்துவாங்கல் ஏற்பட்டு தலை ஒரு பக்கம் திரும்பி விட்டதாம். அம்பாளுக்கு அபச்சாரம் செய்துவிட்டதாக அப்பெண் சொற்பனங்கண்டு குற்றத்தை உணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலை மயிர்களைக் களைந்து கத்தரித்து நேர்கடனாகக் கொடுத்த பின்புதான் தலையைச் சரியான நிலைக்குத் திருப்பக் கூடியதாயிருந்ததாம். அந்த தலைமுடியைப் பாதுகாப்பாக வைத்திருந்து மகிஷாசுர மர்த்தனவிழா நடைபெறும்போது அம்பாளுடைய ஜடாமுடியோடு சேர்த்துக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் நடைமுறையிலிருந்து வந்தது. அந்த மயிர்களின் ஒருபகுதி இன்றும் இருக்கின்றது.

முன்னோரு காலத்தில் இவ்வாலயப் பூசையைச் செய்து கொண்டிருந்த குருக்கள் ஒருவர் இரவுப்பூசையை முடித்துக் கொண்டு திருக்கதவை அடைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார். தனது பிள்ளை ஆலயத்திற்குள் இருந்ததை அவர் அவதானிக்கவில்லை. வீட்டுக்குப்போய் சாப்பாட்டு வேளையில் பிள்ளையைக் காணாமல் எங்கும் தேடிவிட்டு ஆலயத்துக்கு வந்து பார்த்தபோது பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் கூறினாராம். பூசை முடிந்து கதவடைத்தபின் ஆலயக்கதவைத் திறப்பது சாஸ்கிரத விரோதமானது. ஆசாரமற்றது என்பதினால் காலையில் பார்க்கலாம் என்று கூறியும் மனைவி ஏற்றுக் கொள்ளாமல் அடம்பிடித்தாளாம். இந்த வழக்கத்தை அனுசரிப்பதுபோல இன்றும் ஆலயப்பூசைகளனைத்தும் நிறைவுற்றவுடனே கதவு அடைக்கப்படுகிறது போலும். மனைவியின் விருப்பப்படி ஆலயத்தைத் திறந்தபோது காவல் தெய்வமாகிய வைரவர் இரண்டாகக்கிளித்துப் போடுவதைக் கண்டாராம். அத்தகைய உக்கிர மூர்த்தியாகிய வைரவரை மந்திர தந்திரக் கிரியைகளினால் இடம் பெயர்த்து எங்கேயோ ஒரு மலையிற் கொண்டுபோய் ஸ்த்தாபித்ததாகக் கூறுகின்றார்கள்.

முன்னோரு காலத்தில் இவ்வாலயத்தினுள் சுருண்டு படுத்திருந்த ஒரு நாக சர்ப்பத்தின்மேல் பெரிய பாரமான கிடாரமொன்றை அவதானமின்றித் தூக்கி அதன்மேல் வைத்துவிட்டார்களாம். சர்ப்பம் அதனடியில் நசுங்கி இறந்துவிட்டது. அந்தச் சர்ப்பத்தின் சாபம் காரணமாக நாகதோஷம் ஏற்பட்டு அந்தக் குருக்களின் ஏழு சந்ததிற்குப் பின்பே ஆன்குழந்தை பிறந்ததாம். அதுவரையும் பெண்சந்ததியே தொடர்ந்து பிறந்திருக்கின்றது.

யாமறிந்தவரையில் இவ்வாலயத்தில் பிரம்ம ஸ்ரீ கார்த்திகேசுக் குருக்களும், அவருக்குப்பின் முறையே பிரம்ம ஸ்ரீ கா. குமாரசுவாமிக்குருக்களும், பிரம்ம ஸ்ரீ கு. சுவாமிநாதக் குருக்களும், பிரம்ம ஸ்ரீ சு. கு. சோமாஸ் கந்தக் குருக்களும், பூசை செய்து வந்துள்ளார்கள். இவர்களில் சோமாஸ் கந்தக் குருக்களுக்குத்தான் ஏழாவது தலைமுறையில் ஆண்குழந்தை பிறந்தது. அதுவே சிவ ஸ்ரீ சோ. ரவிச் சந்திரக்குருக்கள். தந்தையார் ஆலயத்துக்குச் செய்துவந்த திருப்பணிகளைத் தொடர்ந்து மாபெரும் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எல்லாம் அம்பாள் திருவருள்

சோழப் பெருமன்னர்களின் செல்வாக்கு ஈழ நாட்டில் நிலவிய காலத்தில் பல இந்துக் கோவில்கள் தோற்றம் பெற்றன. 9 ஆம் நூற்றாண்டில் சோழப் பெருமன்னன் விஜயாலயன் "நிதம்பசூதனி" எனப்படும் துர்க்கா தேவிக்கு கோவில் எடுத்த வரலாறு அவனுடைய சாசனங்களில் உண்டு. எனவே சோழ மன்னர்கள் வீரத்தையும், வெற்றியையும் தரும் காளிதேவியை வழிபடும் வழக்கமுடையவர்களாக இருந்ததால் முதலாம் இராஜராஜ சோழனின் மகனாகிய முதலாம் இராஜேந்திரன் (1012-கி. பி. 1044) என்பவனின் மெய்க்கீர்த்தியைக் கூறும். கலவெட்டுத் தூண் காளிகோவிலில் கிடைத்த கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட கற்தூணும், அக்கோவில் நிலத்துள்ளிருந்து அகழ்தெடுக்கப்பட்ட கிடாரமும் (தாளி) அதனுள்ளிருந்த ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவுருவமும் இன்றும் கோவிலில் இருப்பதால் ஆலயத்தில் தொன்மை புலப்படுகின்றது.

## கோவில் வரலாறு

பிரம்ம ஸ்ரீ சு. கு. சோமாஸ் கந்தக் குருக்களின் முன்னோர்கள் காளிகோவிலைச் சிறுகக் கட்டிப் பெருக வளர்த்தவர்கள். ஸ்ரீ சோமாஸ் கந்தக் குருக்கள் காலத்துக்குக் காலம் திருப்பணிகள் செய்துவந்தார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற இலட்சியத்தோடு அம்பாளுடைய திருவருளை வேண்டிப் பிராத்தித்துக் கொண்டு திருப்பணி வேலைகளை ஆரம்பித்தார்.

**1933** ஆம் ஆண்டு கருவறை விமானம் புதுப்பிக்கப்பட்டு முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**1947** ஆம் ஆண்டு மகாமண்டபம், கோபுர மண்டபம், என்பன சிறப்பாகத் திருத்தியமைக்கப்பட்டு இரண்டாவது குடமுழுக்கு நடைபெற்றது.

**1962** ஆம் ஆண்டு வசந்த மண்டபமும் மற்றும் திருப்பணிகளும் செய்து மூன்றாவது குடமுழுக்கு நடைபெற்றது.

**1972** ஆம் ஆண்டு இவ்வாலயத்திலிருந்த கட்டுத் தேருக்குப் பதிலாக சித்திரத் தேர்கள் மூன்றும், மஞ்சமும், நிர்மாணிக்கப்பட்டு இரதோற்சவத்துக்குப் பயன்பட்டு வருகின்றது. கிழக்கிலங்கையில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத் தேர்கள் இவைகளேயாகும். இவ்வாலயத்துக்குத் தேராலயம் தெற்கு வீதியில் அமைந்துள்ளது.

**1979** ஆம் ஆண்டு கற்பக்கிரக விமானத்தைப் பூரணமாகத் திருத்தியமைத்து அதில் சுதைச் சிற்பங்களாக சப்த கன்னியர்கள் அமைக்கப் பட்டன. மகா மண்டபச் சாளக்கிராமத்தில் ராஜ ராஜேஸ்வரியின் திருவுருவமும் விமானத்தில் கௌரி அம்பாளும் அமைக்கப்பட்டு நான்காவது கும்பாபிஷேகம் நிறைவேறியது. ஸ்நபன மண்டபம் சிற்ப சித்திர வேலைப்பாடுகளோடு மிகச் சிறப்பாகப் பூரணமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அட்டநாக பந்தனம் ராசிச் சக்கரம் என்பன சுதைச் சிற்பமாக மேற்தளத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் தெற்குப் பக்கம் மகா லெட்சுமிக்கும், வடக்குப் பக்கம் சரஸ்வதிக்கும் தனிச் சன்னிதி அமைத்து தாமிர விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றன சிம்மம், பலிபீடம், கொடிஸ்தம்பம், மூலாதார கனபதி என்பனவும் அமைந்துள்ள ஸ்தம்ப மண்டபத்தோடு வைரவர், நாகதம்பிரான் என்பவைகளுக்கும் தனிச் சன்னிதிகள் அமைந்துள்ளன.

**1980** ஆம் ஆண்டு கோபுர வாசலுக்கு அருகேயிருந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை 40 அடி உயரத்திற்கு உயர்த்திக் கட்டி 600 இறாத்தல் எடையுள்ள கண்டாமணி புதிதாக ஏற்றப்பட்டிருக்கிறது. மேலே கூறிய திருப்பணிகள் பலவற்றரைச் செய்து 06 - 02 - 80 இல் சம்புரோட்சணமகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

**1992** ஆம் ஆண்டு வசந்த மண்டபத்தில் கௌரியம்பாள் சமேதகேதாரீஸ்வரருக்கு தனிச் சன்னிதியும் கோபுரமும் அமைக்கப்பட்டது. ஸ்ரீ பத்திரகாளி அம்மாள் ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் ஆலயத்துள் அடக்கமாக துர்க்காபரமேஸவரிக்குத் தனிக்கோவிலும் நீண்ட பெரிய தெரிசன மண்டபமும் கோபுரமும் அமைத்துத் துர்க்கா தேவியைப் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகமும் நடைபற்றது.

ஸ்ரீ பத்திகாளி அம்பாள் கோவிற் கருவறையில் சதுர்ப் புஜங்களுடைய அம்பாளின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. சூலம், டமகிருகம் , கட்கம், கபாலம் தாங்கிய திருக்கரங்களோடு அம்பாள் பத்மபீடத்தில் அமர்திருக்கின்றாள்.

மகா மண்டபத்தில் ஸ்ரீ பத்திகாளி அம்பாள் விநாயகர், முருகன் தாளியிற் கிடைத்த அம்பாள், இராஜராஜேஸ்வரி சண்டேஸ்வரி, என்னும் தாமிர விக்கிரகங்களுண்டு இம்மண்டபத்தின் தெற்குப் பக்கத்தில்பிள்ளையாரும் வடக்குப் பக்கத்தில் தண்டாயுதபாணியின் சிலா விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வாலயத்தில் உச்சிக் காலம் சாயரட்சை ஆகிய இரண்டு காலங்களிலும் நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. பங்குனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. இரதோற்சவமும் கற்பூரச் சட்டித் திருவிழாவும் மகோற்சவத்தில் விசேடமான விழாக்கள் பங்குனி உத்தரத்தன்று அம்பாள் கோணேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கோணவரையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தமாடுவார் தீர்த்தமாடும் மக்கள் வெள்ளம் கடல் வெள்ளத்தை மறைத்து நிற்கும் அற்புதக்காட்சியை அங்கு கானலாம்.

## சிறப்பு வழிபாடுகள்

### வைகாசிப் பொங்கள்

வைகாசிப் பௌர்ணமிக்கு முதல் வரும் திங்கட் கிழமை இவ்வாலயத்தில் பொங்கற் பெருவிழா நடைபெற்று வருகின்றது. திருக்கோமலையில் எருந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திகாளி அம்பாளுக்கும் திருக்கோணமலையின் மேற்கே 19 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாலம் போற்றாட்டாற்றுப் பத்தினி அம்பனுக்கும், வடக்கே 7 கீலோ மீற்றர் தூரத்திலுள்ள சல்லியம்மனுக்கும் ஏதோ ஒருவித தொடர்பு பண்டுதொட்டு இருந்துவருகிறது.இது மக்களின் பண்பாட்டுத் தொடர்பாயுமிருக்கலாம்.

வைகாசிப்பூரணைத்தினம் எதுவோ அதற்கு முன்னர்வரும் திங்கட்கிழமை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிற் பொங்கலும், இத்தினத்திற்குப், பின்னர்வரும் திங்கட்கிமை பாலம்பொட்டாற்றுப் பத்தினி அம்மன் கோவிற் பொங்கலும், இத்தினத்தை அடுத்துவரும் வாரத்தில் செவ்வாய்க்கிழமை சல்லியம்மன் கோவிற் பொங்கலும் பண்டுதொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இதனால் வைகாசி மாதம் முழுவதும் திருக்கோணமலை சக்தி வழிபாடுப் பக்திவெள்ளத்தில் மூழ்கிருக்கும்.

பத்திகாளி அம்பாளுக்கு மக்கள் பொங்கும் பொங்கல் ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதியில் நடைபெறும் .அன்றிரவு ஆலய வீதி முழுவதும் யாக சாலை போல் காட்சியளிக்கும். புகை மண்டலம் இருளை மூடித்திரண்டு நிற்கும் அக்கினி தேவன் வீதி முழுவதும் பிரகாசித்துக் கொண்டிருப்பான். பக்தகோடிகள் வீதியிலுள்ள எஞ்சிய இடங்களில் திரண்டு நிற்பார்கள். அம்பாளின் பொங்கல் ஆலய வாசலில் நடைபெறும். அடியார்களின் பொங்கல் வீதியெங்கும் நடைபெறும். அம்பாளின் பொங்கற் பிரசாதமும் , அடியார்களின் பிரசாதமும் ஸ்நபன மண்டபத்தில் மலைபோலத் தேவிக்குப் படைக்கப்பட்டு பூஜை நடைபெறும். கோபுர வாசலில் தீ மிதிப்பு வைபவமும் நடைபெறும். வெண்மணல் பரந்த வீதி காலையில் கரிக்குவியல்களால் மூடுண்டு கிடப்பதைக் காணலாம். மக்களின் புறவாழ்வில் மாயாமலம் கரிக்கப்பட்டு அகவாழ்வில் ஆன்மீக அமிர்தம் தேவியின் திருவடிகளில் படைக்கப்படுகின்றதென்பது வைகாசிப்பொங்கல் தத்துவம்.

### கேதார கௌரி விரதம்

புரட்டாதி மாத விஜய தசமியன்று இவ்விரதம் ஆரம்பிக்கப்பட்டு ஐப்பசி மாத அமாவாசித் திதியில் விரதம் நிறைவு பெறுகிறது. 21 நாட்களுக்கு அனுட்டிக்கப்படும் இவ்விரதம் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த 200 வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இலங்கையின் பல இடங்களிலிருந்தும் இவ் விரதத்தை அனுட்டிக்க ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து கூடுவார்கள்.

அம்பிகையின் அருட்பலத்தால் வருடா வருடம் இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அனைவரும் இவ்விரதத்தை அனுட்டிக்கலாம். அதனால் ஒவ்வொரு வருடமும் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் இவ்வாலயத்தில் வந்திருந்து, விரதத்தை அனுட்டிப்பார்கள்.

21 இழைகளால் முறுக்கப்பட்டது காப்பு நூல் விரதகாரர் தரிப்பதற்குரிய விரத நூலும் வகைக்கு இருபத்தொன்றாக வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், பூ, பலகாரம் என்பனவும், தேங்காய், விபூதி, குங்குமம் அடங்கிய பூசைப்பெட்டிகள் ஆலயத்துள் அடுக்கி வைக்கப்பட்டு அலங்காரப்பூசை நடைபெறும். பூசையின் முடிவில் விரதகாரருக்கு பூசைப்பெட்டிகள் அம்பிகையின் பிரசாதமாக வழங்கப்படும். தனியாக விரத நூலை மாத்திரம் பெற்று இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களு முண்டு. ஆலயத்தில் தங்கியிருந்து விரதம் அனுட்டிப்பவர்களுக்கு அடுத்த நாள் பாறணைப்பூசையும் செய்து அனுப்புவார்கள். விரதபலன் மக்களை ஆன்மீக வாழ்வுக்கு இட்டுச்செல்லும் புனித நிகழ்ச்சியாக அமைகின்றது.

### இரதோற்சவம்:

இந்துக்கள் வாழும் இடங்களிலுள்ள சிறந்த ஆலயங்களில் மகோற்சவத்தின் ஒன்பதாம் நாள் ரதோற்சவம் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. ஆனால் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் இரதபவனியில் எழுந்தருளிவரும் புனித வீதியில் படியும் அம்பிகையின் பாததுளியை அள்ளி அருள் பெறுவதற்காக சரணாகதியடையும் பக்தகோடிகளில் ஆண்கள் அங்கப்பிரதட்ஷணமும், பெண்கள் அடியளித்துவரும் பரவசமான காட்சி இவ்வாலயத்தில் சிறப்பம்சமாகும்.

தேருக்குப்பின்னே ஆண்கள் இரண்டு வரிசையிலும் பெண்கள் இரண்டு வரிசையிலும் பிரதட்சனம் செய்து அடியளித்து வருவார்கள். அம்பிகையின் தேர் ஆலயத்தைச் சுற்றிவந்து ஆலய வாசலை அடைந்ததும் ஆடவரின் அங்கப்பிர தட்சணமும், பெண்கள் அடியளிப்பதும் முடிவுறாது ஆற்றின் நீரோட்டம் போல தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் பக்திவெள்ளக் காட்சியை ஸ்ரீ பத்திரகாளி கோவிலில்தான் பார்க்கலாம். இது உடலைத் தியாகம் செய்து உள்ளத்தைப் பண்படுத்தும் ஆத்மீக சாதனை.

## நவராத்திரியும் கும்ப விழாவும்

புரட்டாதி மாதப் பிரதமை தொடக்கம் ஒன்பது நாட்களும் விசேட அலங்காரப் பூஜை நடைபெறும் ஒன்பதாவது நாள் நவமியன்று மகிஷாசுர சங்காரம் (சூரன்போர்) நடைபெறும் முதல் மூன்று நாட்கள் துர்க்கா தேவிக்கும், அடுத் மூன்று நாட்கள் இலட்சுமிக்கும், அடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதிக்கும் காலை மாலை அலங்காரக்கொலுப்பூஜையும், சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெறும். பத்தாவது நாள் விஜயதசமியன்று மானம்புத்திருவிழாவும் நடைபெற்றுக் கும்பம் சொரிந்து தீர்த்தோற்ஸவமும் நடைபெறும். இது மனப்போராட்டத்தை வெற்றி கொண்டு ஆத்மீகச் செல்வத்தைத் திரட்டி ஞானத்தால் போகங்களை அனுபவிக்கச் செய்யும் பெருவிழா.

நவராத்திரி விழா இந்துக்கோயிலெங்கும் நடைபெற்றாலும் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோவிலில் நடைபெறும் கும்பவிழாவைப்போல் இலங்கையில் வேறெங்காவது நடைபெறுவதாகத் தெரியவில்லை.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செலுத்திவருங் காலத்தில் திருக்கோணமலையில் கடற்படைத்தளம் அமைக்கும் வேலையைச் செய்வதற்கு இந்தியாவிலிருந்து சீக்கியர்களை அழைத்துவந்தார்கள். அவர்கள் தளம் அமைக்கும் காலத்தில் தங்களுடைய நாட்டில் நவராத்திரி காலங்களில் செய்யும் வழிபாட்டு முறைகளில் கும்பம் கட்டி வீதிதோறும் எடுத்துச் சென்று விழாக் கொண்டாடும் வழக்கத்தை இங்கு ஆரம்பித்தார்கள். அவர்களின் பணி முடிந்து இந்தியாவுக்குச் சென்றபின் இங்குள்ள இந்துக்கள் கும்ப விழாவைத் தொடர்ந்தார்கள். அது விரிவடைந்து திருக் கோணமலையிலுள்ள ஒவ்வொரு ஆலயங்களும் கும்பங்கள் கரகங்கள் கட்டி கும்ப விழாவை நடத்தி வருகின்றனர்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் அக் காலத்தில் சிறப்புற்று விளங்கியதால் ஏனைய ஆலயங்களில் இருந்தும் கும்பம் கரகமெடுத்து பரவசமாக ஆடிப்பாடி வரும் பக்தர்கள் பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்குவந்து வழிபாடுசெய்து அன்னையின் அருளைப் பெற்று இரவு பூராகவும் திருக்கோணமலை வீதிகளைச் சுற்றி தமது ஆலயத்தை அடைவார்கள். வீதிதோறும் நிறைகுடம் வைத்து மக்கள் ஆராதனை செய்வர்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலயம் கும்பவிழாவின் மத்திய ஸ்தானமாக அமையும். அம்பிகையின் கும்பம் கரகம் என்பன அம்பாளின் மானம்புத் திருவிழாவைத் தரிசித்துத் திருக்கோணமலை வீதிகளில் மங்கள வாத்தியத்துடன் சுற்றிவரும். அம்பாளின் கும்பத்தைத் தரிசிக்கும்வரை மக்கள் நிறைகுடம் வைத்து வீதிகளில் காத்து நின்று திருவருளைப் பெருவார்கள்.

இத்தகைய சிறப்பு விழாக்கள் நடைபெற்று வரும் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலயத்துக்கு இராஜகோபுரமும், அமைப்பதற்கு 1996ஆம் ஆண்டு பக்தப் பெருமக்களின் பக்திபூர்வமான பிரார்த்தனையுடன்அடிக்கல் நாற்றப் பெற்று 65 அடி உயரமான சப்ததள இராஜகோபுரமும், அம்பாளின் கருவறை திரிதள விமானத்துடன் புனரமைப்புச் செய்யப்பெற்ற மாபெரும் திருப்பணிகள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளாலும் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தா வேதாகம மாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்களின் இடையறா முயற்சியினாலும் அடியார்களின் ஆதரவினாலும் பூர்த்தியடைந்திருக்கின்றது. 2001ஆம் ஆண்டு தைப் பூசை நன்னாளில் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடி அம்பிகையின் அருளால் மங்களகரமாக இனிது நிறைவேறியது.

### திருக்கோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான விசேட தினங்கள்

| | |
|---|---|
| **சித்திரை மாதம் :** | வருடப்பிறப்பு விசேட பூசை. |
| **வைகாசி மாதம் :** | வைகாசி பொங்கற் பெருவிழா |
| **ஆனி மாதம் :** | கௌரீஸ்வரர் கௌரியம்பாள் சங்காபிஷேகம் (உத்தர நாட் சந்திரம்) |
| **ஆடி மாதம் :** | ஆடிப்பூரம் வரலக்குமி விரதம் |
| **ஆவணி மாதம் :** | துர்க்கா பரமேஸ்வரி அம்பாள் தசமதின அபிஷேகம் (ஆரம்பம்). துர்க்கா பரமேஸ்வரி அம்பாள் தசமதின அபிஷேகம் (பூர்த்தி) துர்க்கா பரமேஸவரி அம்பாள் மணவாளக் கோள சங்காபிஷேகம் (உத்தர நட்சத்திரம்) |
| **புரட்டாதி மாதம் :** | நவராத்திரி விரத ஆரம்பம். விஜயதசமி மானம்பு கும்பவிழா கேதார கௌரி விரத (ஆரம்பம்) |
| **ஐப்பசி மாதம் :** | தீபாவளித் திருநாள் விழா கேதார கௌரி விரதம் (பூர்த்தி) |
| **கார்த்திகை மாதம் :** | சர்வாலய தீபம் |
| **மார்கழி மாதம் :** | திருவெம்பா பூஜாரம்பம் 10வது நாள் திருவாதிரை அபிஷேகம் |
| **தை மாதம் :** | தைப் பொங்கல் விழா தைப்பூசம் கெரி அம்பாள் சமேத கௌரீஸ்வரம் சங்காபிஷேகம் (சித்திரை நட்சத்திரம்) இலட்சார்ச்சனை (ஆரம்பம்) கும்பாபிஷேகத்தின சங்காபிஷேகம் (அச்சுவினி நட்சத்திரம்) |
| **பங்குனி மாதம் :** | பிரமோற்சவம் (கொடியேற்றம்) இரதோற்சவம் தீர்த்தோற்சவம் (பங்குனி உத்தரம்) |

~ லோகா சமஸ்த சுகினோ பவந்து ~

# கும்பாபிஷேகத்தின் சிறப்பு

ஸ்ரீலஸ்ரீ சு. கு. முத்துக்குமாரசாமிக் குருக்கள்
தர்மகர்த்தா
ஆலடி விநாயகர் தேவஸ்தானம்
திருக்கோணமலை.

உலகில் நாம் உய்வதற்காகப் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து வழிபடுதலே கும்பாபாபிஷேகமாகும். இறைவன் பஞ்ச பூதங்கள் முதலிய எட்டு இடங்களில் வியாபிக்கின்றான். அவை பின்வருமாறு நிலம், நீர், காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டுமாகும். இந்த எட்டு நிலையில் செய்யப்படுவதுதான் கும்பாபாபிஷேகமாகும். இது குடமுழுக்கு அல்லது பெரும் சாந்தி என்று சொல்லப்படும். மண் வடிவமாகக்குடம், நீர்வடிவமாகத் தீர்த்தம், நெருப்பு வடிவமாக ஓமம், காற்று வடிவமாக மந்திரம் உச்சரித்தல், ஆகாச வடிவமாக ஒலி, சூரியன் வடிவமாக ஒளி, சந்திர வடிவமாக மனத்தின் குளைவு அல்லது மனோலயம். ஆன்மா வடிவமாக உயிர்களின் ஒட்டுமொத்த கூட்டு வழிபாட்டினால் ஓரிடத்தில் நிலை நிறுத்துவதுதான் கும்பாபிஷேகம் எனப்படும்.

தேவர்கள் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள வண்ணம் இந்த எட்டு நிலையில் பூசை செய்யப்பட்டு திருவருளை கலசத்தில் ஏற்றி, அதைப் பூசித்து அந்தக் கும்பத்தை எடுத்துக்கொண்டு ஆலயத்தை வலம்வந்து கர்ப்பக்கிரகத்துள்ள பிம்பமாகிய இறைவனின் மேல் தீர்த்தத்தை அபிஷேகம் செய்து இறைவன் சாநித்தியம் அடையும் வண்ணம் செய்யப்படுவதுதான் கும்பாபிஷேகம் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியை, சுடரை அக்கினியாகிய கோமத்தில் விளையுமாறு செய்து அதைக் கும்பத்தில் சேர்த்து, கும்பத்திலிருந்து விம்பமாகிய திருமேனிக்கு கொண்டு சேர்ப்பதுதான் கும்பாபிஷேகம் எனப்படும். கல்வடிவத்திலுள்ள விம்பத்தில் அருட் சோதியைச் சேர்த்து இறைவன் சாநித்தியம் பெறச்செய்வது தான் கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படுகிறது. இதைக் கண்டுகளிப்பது 12 ஆண்டுகள் தினந்தோறும் ஆலயம் சென்று வழிபடுவதற்கு சமமாகும் என்று ஆன்றோர் கூறுகின்றனர். கும்பாபிஷேகம் காண்பது கோடிப்புண்ணியம் ஆகும்.

“உருஞ்சாய வாழ்க்கை அமணுடையப் போக்கும், இருஞ்சாக்கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில் கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான் பெருஞ்சாந்தி, காணாதே ஜோதியோ பூம்பாவையாய்.” இது ஞானசம்பந்தர் கூற்று இதன் படி கும்பாபிஷேகம் தரிசிக்காவிடின் பயனில்லை.

இக்கும்பாபிஷேக தின வைபவத்தில் மிகவும் முக்கியமாகிய மூவரைப்பற்றி எழுதுவது கடமையாகும்.

அம்மூவர் யாவர் அக்கினி, நீர், குரு. இவர்களை வேதம்,

அக்கினிஸ் சர்வதேவதா
ஆ போனவ சர்மா தேவதா
பிராமனோவை சர்வதேவதா என்று சொல்கிறது. இம்மூன்று பேருக்கும் ஒரே விதமான குணங்கள் உள்ளன.

**அக்கினி** - இவருடைய குணம் பொருட்களை எரிப்பது - பஸ்பம் ஆக்குவது - அக்கினிக்கு ஒளி ரூபம் வகுக்க முடியாது அது எதனைத் தழுவியுள்ளதோ அதன் வடிவத்தைப் பெறும். பின்னர் அப்பொருளை எரித்துச் சாம்பர் ஆக்கிவிடும் அக்கினிக்கு எந்த தேவதையையும், பூசித்து பயன்பெற முடியும் எல்லாத் தேவதைகளுக்கும் அக்கினி மூலமாகத்தான் ஆகுதி கொடுக்க வேண்டும். நாம் எந்தத் தேவதையை பிரார்த்தனை செய்து திரவியங்களை அக்கினியில் செலுத்துகின்றோமோ அதை மிகச்சரியாகக் கொண்டு சேர்ப்பது அக்கினிதான் தனக்கு இட்ட கடமையைச் செவ்வனே செய்வதால் எல்லாக் காரியங்களுக்கும் அக்கினி அவசியமாகின்றது. கும்பாபிஷேகத்தில் முக்கியமான பங்கு அக்கினிக்கு உண்டு அக்கினிபகவான் தனக்கு வேண்டுமென்று எப்பொருளையும் சேர்த்து வைத்துக்கொள்வதில்லை தேவர்களுக்கும் நமக்கும் இடையில் ஒரு தூதுவனாக இருந்து பணிபுரியும் அக்கினிபகவான் ஒரு பரோபகாரியே உலகில் மழைபெய்ய அக்கினி பகவான் உதவுகின்றார்.

**நீர்** - உலகில் உயிர்கள் வாழ நீர் இன்றியமையாதது என்பது நாம் உணர்ந்ததே. நீர் எந்த இடத்தில் இருக்கின்றதோ அதன் வடிவத்தை ஏர்க்கின்றது. அக்கினியைப் போன்று இதற்கும் வடிவம் இல்லை. தண்ணீரில் ஒரு பொருளை இட்டால், கொஞ்சம் கொஞ்சமாக அப்பொருளை கரைத்து விடும். உயிர் பிரியும் போது கடைசிச் சொத்தாக நீர் தேவைப்படுகின்றது. மழை நீர் செம்மண்ணில் வீழ்ந்தால் நீரின் நிறம் சிவப்பாக இருக்கும். கரிசல் மண்ணில் விழுந்தால் கருமை நிறம் அடைகிறது. ஆகாயத்தில் வானவில் ஏற்பட நீர்த்துளி உதவுகிறது. வானவர் உலகத்தையும், மண்ணுலகத்தையும் இணைக்கிறது. புதிய உயிர்கள் மழைநீரின் வழியாக ஔஷாதிகளை அடைந்து பிறகு ஜலமாகிறது. கும்பாபிஷேகத்தில் உள்ள நறுமண நீரில் மந்திரங்கள் மூலமாக பகவானை எழுந்தருளச் செய்வதால் அந்நீர் மிகவும் போற்றத்தக்கதாக அமைகிறது. வள்ளுவரின் கூற்றுப்படி சுத்தம் செய்ய நீர் தேவை மிகப்பெரிய வெள்ளம்

வந்தால் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி இழுத்துச்சென்று விட்டுவிடும். தனக்கு என்று எதையும் வைத்துக்கொள்ளாது பிறர் உபயோகத்திற்காக நீர் உள்ளது. இந்த நீரில் இறைவனை கரைத்த உடனே வருகிறார் பகவான் உறையும் நீர் புனிதம் ஆகிறது.

குரு - அக்கினி பகவானையும் தண்ணீருக்கு அதிபதியான வருணணையும் புனித காரியங்களுக்கு பயன்படுத்துவர் குரு குருவின் நடவடிக்கை அக்கினி, நீர் இரண்டையும் விடச்சற்று மாறுபட்டது குரு தனக்காக பிரார்த்திப்பதை விட மற்றவர்களுக்காக அதிகம் பிரார்த்திக்கிறவர் - ஆராதிக்கிறார் இவரும் தன்னலம் இல்லாமலே செயற்படவேண்டி இருக்கிறார் அக்கினிக்குள்ளும், நீருக்குள்ளும் பகவானை வரவழைப்பது இவர் செயல் உள்ளத்தூய்மையோடு பகவானை அழைத்தால் இறைவன் கும்பத்தில் சாகித்தியமாக வருவார்

அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலாவர் என்பது திருவள்ளுவ நாயனார் கூற்று உற்றுநோக்கத்தக்கது. எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதவனும், தர்மத்தைக் கடைப்பிடிப்பவனு மாகிய குரு அழைத்தால் பகவான் அங்கே எழுந்தருளுவார். அவனே பகவானாக மாறி அக்கினியிலும் நீரிலும் பகவானை எழுந்தருளச் செய்ய வேண்டும் குருவை ஏன் அவ்வாறு உயர்த்திக் கூற வேண்டும் உலகம் தெய்வ வசத்தில் உள்ளது. தெய்வம் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டது. மந்திரமோ குருவிடத்துக் கட்டுப்பட்டது. அதனால் தான் குருவை வணங்குகின்றேன் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறியுள்ளார். ஆகையினால் குருவிடத்து சகல தேவதைகளும் வாசம் செய்கிறது.

குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் என்று திருவள்ளுவரின் வாக்கின்படி குற்றத்தின் தன்மையையும் அளவையும் குறைத்துக்கொண்டு இருப்பவர் குருவே.

கல சல்ய முகே விஷ்ணு
கண்டே ருத்ர கபாஸ்திரித
மூலேத்ர ஸ்திதோ பரஹ்மா
மத்யே மாத்ருகண பெம்ருதா

கலசத்தின் முகத்தின் மேற்பாகத்தில் விஷ்ணுவும் கழுத்தில் உருத்திரனும், அடிப்பாகத்தில் பிரம தேவரும் நடுப்பாகத்தில் மாத்துரு கணங்களும் இருப்பதாக எண்ணிக்கொள்ள வேண்டும்.

கூர்ச்சாக்கரை ராக்ஷஸான் கோரான்
ச்சிந்தி கர்ம விகாதின
தவாமர்ப்பயாமி கும்பேஸ்மின்
காபல்யம் குருகர்மனி

கொடூரமான உருவத்தையுடைய இராட்சதர்கள் நம் போகத்தை கெடுப்பவர்கள் அவர்களைக் கூர்ச்சத்தின் நுனியால் அடித்து விரட்டி எங்களின் செயல் முழுமையானதாக இருப்பதற்காக கூர்ச்சத்தை கும்பத்தில் அர்ப்பணம் செய்கின்றோம். இவ்வாறு மந்திரங்களைச் சொல்லி இறைவனை வழிபட ஆரம்பிக்கிறவர் குரு. குரு அக்கினி, நீர் இம் மூவரிடத்திலும் எந்தத் தேவதையையும் அழைக்கலாம் பயனும் பெறலாம். தன்னலம் இல்லாத மூவரும் கும்பாபிஷேகத்தில் ஆற்றும் பங்கு மகத்தானது பகவான் அளவிடற்கரிய சக்தி வாய்ந்தவர் எழிமையானர்.

சரணாகத வத்சலன் சர்வ சுலபன் என்ற பாட்டு இதனை எடுத்துக்காட்டுகிறது. இகபர சௌக்கியங்களை நாம் பெறுவதற்கு சுலபமான ஒரு வழி உண்டு என்றால் அது கும்பாபிஷேகத்தைக் காண்பதாகும்

இவ்வளவு சிறப்பு வாய்ந்த திருகோணமலை நகரிலே எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கும்பாபிஷேகத்தைக் கண்ட அனைவரும் திருவருளை பரிபூரணமாக பெற்று சகல சௌபாக்கியங்களும் பெற்று நாம் எல்லோரும் வாழ பிரார்த்திப்போமாக.

☆☆☆☆☆☆☆
☆☆☆☆
☆

## கற்பூரத் தீப பலன்

**கற்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி அக்கினி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஓர் பற்றுமில்லாமல் முற்றும் கரையப்பெற்று ஆகாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்கல்போல, ஆன்மா வெண்மை நிறமான சாத்துவித குணத்தைப் பொருந்தி, ஞானாக்கினி பற்றிய விடத்தே பசுத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை விளங்கப்பெற்று, தூலசூக்குமசரீரங்கள் நீங்கப்பெற்று, எல்லாப்பற்றுங்கழன்று சிவபெருமானோடு கலந்து அத்துவிதமாய்ப் பேரானந்தப் பெருவாழ்வு அடைதல் வேண்டுமென்னும் குறிப்பை உணர்த்துவதற்காகக் கற்பூர ஆராதணை செய்யப்படுகின்றது.**

உ

### திருக்கோணமலை

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் சப்த தள இராஜகோபுரம், கருவறை விமானம் ரசானு பவமும் பிரம்மானுபவமும்

ஞானசிரோமணி
**பண்டிதர் இ. வடிவேல்**

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் அம்பிகையின் திருவருளால் அமையும் சப்த தள இராஜகோபுரமும், கருவறை திரிதள விமானமும் திருக்கோணமலை வரலாற்றிலே ஓர் அற்புத நிகழ்ச்சியாகும்.

அன்னையின் அருள்பெற்று வாழும் மெய்யடியார் களுக்கும், சிற்பகலா ரசிகர்களுக்கும், மக்களுக்கும், இந்த இராஜகோபுரமும் விமானமும், ஏனைய நூதனப் புனராவர்த் தன அமைப்புக்களும் சமய வாழ்வில் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை ஆய்வு செய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

## இராஜகோபுர தத்துவம்

சமயம் என்பது முக்கியமாக மனிதனது நம்பிக்கை, சடங்காசாரங்கள், அவற்றிற்கு ஆதாரமான ஐதீகங்கள் என்ற மூன்றின் அடிப்படையிலும் இன்றுவரை மக்கள் மத்தியில் நிலைத்து நின்று மனிதனது ஆத்மீக வாழ்வுக்கு வழிகாட்டும் வகையில் ஒரு வடிகாலாகவும், உளரீதியான ஒரு சிகிச்சை முறையாகவும் விளங்குவது.

மனிதனது வாழ்க்கை பிறப்பு முதல் இறப்பு வரை கலைகளுடன் தொடர்புடைய பல்வேறு சமயச் சடங்குகள், சம்பிரதாயங்களைக் கொண்டது. உணர்ச்சி வயப்பட்டு வாழும் மனிதனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வகையில், சடங்காசாரங்கள், கிரியைகள், வழிபாட்டு முறைகள் என்பன அமைவது போல அவனைச் சூழ உள்ள கலை வடிவங்களான சிற்பங்கள், ஓவியங்கள் போன்றனவும், இசை, நடனம், நாட்டியம், நாடகம், இலக்கியம் போன்றனவும் மனித உணர்ச்சிகளை உயிர்ப்பித்துப் பண்படுத்திச் செம்மைப்படுத்தி மனிதனை உயர்நிலைக்கு இட்டுச் செல்வதற்குப் பயன்படும் பண்பாட்டுச் சின்னங்களாக விளங்குகின்றன.

சமய வழிபாடும், கலாரசனையும் மனித உள்ளத்தை அகமும் புறமும் தூய்மைப்படுத்தி படிப்படியாக உண்மையை அறிந்து அலையும் மனத்தை அடக்கி புலன்களை ஒடுக்கி மன ஒருமைப்பாட்டிற்கு வடிகாலாயமைந்து இன்பம், மகிழ்ச்சி, சாந்தம், பக்தி, அமைதி, தெளிவு போன்ற மன உணர்வுகளை வழங்குகின்றது.

சமய நூல்கள் பரமாத்மாவைப் பற்றியும், அவற்றின் உண்மைத் தத்துவங்கள் பற்றியும், ஆன்மாக்கள் முத்தியின் பத்தை அடைவதற்குரிய வழிகள் பற்றியும், ஆன்மாக்கள் பெறக்கூடிய உயர்ந்த அனுபவங்கள் பற்றியும் விரித்துக் கூறுகின்றன. இவைகளையெல்லாம் சமய நூல்களிலும், ஆகம சாஸ்திரங்களிலும் சமய இலக்கியங்களிலும் புராண இதிகாசங்களிலும் கற்றுத் தெளிவடைய முடியாதவர்களுக்கு ஆலயங்களில் காணப்படும் அழகிய கலைக்கூறுகள் ரசானுபவத்தை உணர்த்தும் வகையில் இராஜகோபுரம் அமைகின்றது.


## ரச விளக்கம்

ரசம் என்பது சுவையென்று தமிழில் கூறப் படுகின்றது. தமிழில் இலக்கியமாகவும், இலக்கணமாகவும் சான்றோரால் ஏற்றுக்கொள்ளப்படும். தொல்காப்பியம்

"நகையே அழுகை இழிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெட்டே மெய்ப்பாடென்ப"

என்று கூறுகின்றது மெய்ப்பாடுகள் சுவையை உணர்த்தும் குறிகள்.

''மெய்தானரும்பி விதிர்விதித்து உன் விரையார்கழற்கு கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி, வெதும்பி" என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கூறும் மெய்ப்பாடுகளை பக்திச் சுவை சார்ந்த மெய்ப்பாடுகள் என்று கொள்ளலாம். பக்திச்சுவையை தொல்காப்பியர் ஏனைய சுவைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டியுள்ளார்



திரு. வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரிகள்: "நவரசங்கள்" என்ற நூலில் ரசங்களின் மலர்ச்சியாகிய ஒன்பது சுவைகளில் சாந்தம் என்பதும் ஒரு சுவையெனக் குறிப்பிடுகிறார். அதுவே பக்திச்சுவை.

இராஜகோபுரத்திலும், திரிதள விமானத்திலும் அமைந்துள்ள சிற்பங்களிலும், ஏனைய சிற்ப அமைப்புக்களிலும் செறிந்துள்ள கலை அம்சங்களின் ரசானுபவம் மூலம் பிரம்மானுபவத்தை பெற முடியுமென்ற கருத்தும், சமயங்கள் கூறும் முத்தியின்பத்துக்கு ஒருவனை நெறிப்படுத்தும் என்பதையும் கலையம்சங்கள் பற்றிய, பரிணாம வளர்ச்சியை ஆய்வு செய்த பரதர், விஸ்வநாததத்தர், ஆதிசங்கரர் போன்ற மகாஞானிகளும் அறிஞர்களும் ரசமென்பது பிரமானந்த சொரூபத்தின் வெளிப்பாடு என்று விளக்கம் தருகிறார்கள்.

"ரஸோ வைஸ ரஸஹ்யே வாயம் ஸ்ப்த்வாநந்தீ"
(தைத்திரிய உபநிஷத்)

சுவையின் வடிவமே இறைவன். இந்தச் சுவையை மனிதன் அனுபவித்தே ஆனந்தமுள்ளவனாக வாழ்கிறான் என்று தைத்ரியோப நிஷத் கூறுகின்றது.

ரசஞானத்தால் மனிதன் பிரம்ம ஞானத்தைப் பெறுகிறான். பிரம்ம ஞானத்தால் அவன் பேரானந்தக் கடலில் சங்கமாகிறான். ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் இராஜ கோபுரத்தை அம்பாள் எழுந்தருளி இருக்கும் திருக்கோயிலாக கருதி அம்பாளை வழிபட்டு பக்தி செலுத்துபவர்கள். அம்பிகையின் அன்புக்கும், அருளுக்கும் உரியவர்களாவார்கள் என்பது தைத்திரியோப நிஷத் கூற்றின் உட்பொருளாகும்.

## கோபுரங்கள்

கோபுரம் என்பது பாரத நாட்டிலும், ஈழ நாட்டிலுமுள்ள கோயில்களின் வாயில்களில் அமைக்கப்படும் கோயிலாகும். கோபுரங்களைக் கோயிலாகக் கருதுவதால் ''கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்" என்ற பொன்மொழியும் வழக்கிலிருந்து வருகின்றது.

மாமல்ல புரத்தில் ஒரே கற்பாறையில் செதுக்கப் பட்டுள்ள: "பீமரதம்" எனப்படும் சிறு கோவிலும் கோபுர வடிவில் செதுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அதிக அலங்காரமற்ற சிறிய கோபுரங்களே அமைக்கப்பட்டன. அதே கால கட்டத்தில் கருவறை விமானம் மிக முக்கியத்துவம் பெற்று உயரமாக அமைக்கப்பட்டது.

11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட தஞ்சைப் பெருங்கோவில் கோபுரமும்

12ம் நூற்றாண்டில் தாராசுரத்தில் கட்டப்பட்ட சிவன் கோவில் கோபுரமும்

13ம் நூற்றாண்டில் ஆதிக்கம்பெற்ற பாண்டிய மன்னர்கள் அமைத்த திருவாரூர் சிதம்பரக் கோவில் கோபுரங்களும்

16ம் நூற்றாண்டில் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்ட திருவண்ணாமலை கோயிற் கோபுரமும்.

17ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட மதுரை மீனாட்சியம்மன் கோயிற் கோபுரமும்

18ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிற் கோபுரமும்.

20ம் நூற்றாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ஸ்ரீரங்கம் இராஜ கோபுரமும் காலத்திற்குக் காலம் சுதைச் சிற்ப வேலைகளை அதிகரித்து அழகாக அமைக்கப்பட்டன.

பண்டைக்காலத்தில் மன்னர்களால் கட்டப்பட்டு வந்த கோயில்களையும், கோபுரங்களையும் போல 21ம் நூற்றாண்டில் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையில் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் பேரருளால் வேதாகமமாமணி சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் (ஆதீனகர்த்தா) அரிய பெரிய திருப்பணிகளைச் செய்து நிறைவேற்றி யுள்ளார்.

ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரியின் ஆலயத்திற்கும் கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரநாதர் சந்நிதிக்கும் சிறிய கோபுரங்களை அழகாக அமைத்ததோடமையாது, கலசங்களுடன் 65அடி உயரமான இராஜகோபுரத்தையும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கருவறையைத் திரிதள விமானத்துடன் முழுமையாக ஆகமசாஸ்திர விதிகளுக்கு அமைவாகப் புனருத்தாரணத் திருப்பணிகளைச் செய்ததும் அவர் செய்த பூர்வ புண்ணியப்பேறேயாகும்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளாலும் மெய்யடியார்களின் அன்பினாலும், ஆதரவினாலும் உருப்பெற்ற இராஜகோபுரமும் விமானமும் திருவருட் செயலென்று பக்தி பரவசத்தோடும் தன்னடக்கத்தோடும் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் முற்காலத்தில் மன்னர்கள் செய்த திருப்பணிகளுக்கு எந்த வகையிலும் குறைவு படாமல் நிறைவுடன் துணிவோடு மாபெரும் திருப்பணியைச் செய்து நிறைவேற்றியுள்ளார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியராகப் பெறின்

என்ற திருக்குறளுக்குக் குருக்கள் ஐயா ஓர் எடுத்துக் காட்டாகும். திருக்கோணமலையின் வரலாற்றில் இடம்பெற்ற திருப்பணியாக இது அமைகின்றது.

## இராஜ கோபுரம்

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு பக்த பெருமக்களின் பரவசத்தோடு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்களின் தலைமையில் ஆகம சாஸ்திர முறைப்படி 19 - 08 - 1996ஆம் ஆண்டு சுப

நேரத்தில் பிரதிஸ்டா சிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்கள் (நவாலியூர்) அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இலங்கை இராமகிருஷ்ண சங்கத் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தஜீ மகராஜ் பிரசன்னமாயிருந்து அடிக்கல் நாட்டி வைக்கப்பட்ட இராஜகோபுரம் 07 - 02 - 2001ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாள் அன்று குடமுழுக்கு எனப்படும் பெருஞ்சாந்தி விழா கண்டு வானுறவோங்கி வளம்பெற வளர்ந்து நிற்கின்றது.

சிற்பகலாபானு திரு. கந்ததாஸ் இரவீந்திரராசா (அராலி) அவர்கள் இராஜகோபுரம், கருவறைத் தூபி, கட்டுமான வேலையை பொறுப்பேற்று உபபீடம், அதிஸ்டானம், கால்வரி பட்டியல்மட்டம், வியாழவரிமட்டம், பிரஸ்தானம், மஞ்சம், என்னும் அம்சங்களையும் தளங்களில் கன்னக்கூடு, பாந்து, செகத்திரசாலை, சொருகுசாலை, மையசாலை என்பனவற்றைக் கொண்ட தளங்களையும் இரட்டைப் பஞ்சாங்க முகபத்திர வேலைகளோடு கோபுரமும் தூபியையும் அமைத்து மகா நாசி எனப்படும் பண்டிகையோடு இராஜகோபுரக் கட்டுமான வேலைகளை நிறைவு செய்தார்.

இந்தியாவிலிருந்து வந்த கும்பகோணம், வலங்கைமான் சிற்பகலா ஸ்தபதி திரு. மாரிமுத்து இராஜேந்திரன் அவர்கள் தலைமையிலான சிற்பக் குழுவினர் இராஜகோபுரத்திலுள்ள ஏழு தளங்களிலும், மகா நாசியிலும், கருவறைத் தூபியிலும் சுதைச்சிற்பத் திருவுருவங்களை அமைத்து வர்ணம் தீட்டி அழகாக அமைத்து நிறைவு செய்தார்கள்.

## கோபுர தரிசனம்

இராஜகோபுர உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் மகாநாசி எனப்படும் பண்டிகையில் வடக்குப் பக்கம் பிரமாணி எனப்படும் சரஸ்வதியும், தெற்குப் பக்கம் தெட்சணாயணி எனப்படும் இலக்குமியும் சுதைச் சிற்பங்களாக அமைக்கப்படடிருக்கின்றன. இவைகள் இரண்டுக்கும் நடுவே 7 செப்புக் கலசங்கள் வெள்ளிமுலாம் பூசி பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கிறது. கலசங்களினுள்ளே வரகரிசி நிரப்பப்பட்டிருக்கிறது. வரகுக்கு இடி, மின்னலைத் தாங்கும் சக்தியுண்டு என்பது நமது முன்னோர்களாகிய மெய்ஞானிகள் கண்டறிந்த விஞ்ஞானம்.

இராஜகோபுரத்தின் சப்த தளங்களிலும் கிழக்கு மேற்குப் பக்கங்களில் ஒவ்வொரு தளத்திலும் சாலைகள் காணப்படுகின்றன. சாலை என்பது தேவர் கோவில். சாலைகளின் இரு பக்கங்களிலும் துவார சக்திகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோபுரத்தில் 18 துவார சக்திகள் உண்டு. சப்த தளங்களைக் கொண்ட இராஜ கோபுரத்தின் ஒவ்வொரு தளத்தின் நான்கு மூலைகளிலும் கோபுரத்தைத் தாங்கும் கோடிப்பூதங்களும், மகா நாசியின் கீழ் ஒரு கோடிப் பூதமும் காணப்படுகிறது. கோபுரத்தில் சுதைச்சிற்பங்களை அமைக்கும் சிற்பிகள் தளங்களைக் கணக்கிடும் போது மேலிருந்து கீழ்நோக்கியே கணக்கிடுவார்கள். அது சிற்பசாஸ்திர கணக்கீட்டு மரபுபோலும் அதன்படியே இந்த இராஜகோபுரத்தல் சுதைச்சிற்பங்களை அமைத்து வர்ணம் தீட்டிய வலங்கை மான் ஸ்தபதி திரு. மா. இராஜேந்திரன் அவர்கள் விளக்கிக் கூறிய பிரகாரம் இராஜகோபுரத்தின் ஏனைய தெய்வத் திருவுருவச் சிற்பங்களையும் அறிமுகம் செய்கிறோம்.

சப்ததளங்களைக் கொண்ட இராஜகோபுரத்தின் கிழக்கு மேற்குப்பக்கங்களைத் தவிர வடக்கு, தெற்கு ஆகிய இரு பக்கங்களிலும் ஒவ்வொரு தளத்திலும் வடக்குப் பக்கம் பிரம்மாணியும், தெற்குப்பக்கம் தெடசணாயணியும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பிரம்மாணி பிரம்மனின் சக்திகள். தெட்சணாயணி - மகா விஷ்ணுவின் சக்திகள். இவை பிரம்மாணி தெட்சணாயணியின் வெவ்வேறு தெய்வ அம்சங்களைக் கொண்டவை கோபுரத்தின் தெற்குப்பக்கம் - மகா நாசியில் இலக்குமி.

| | |
|---|---|
| 1ஆம் தளம் | - கோபுரந்தாங்கி |
| 2ஆம் தளம் | - காளி - தெட்சணாயணி - கருமாரி |
| 3ஆம் தளம் | - மகேஸ்வதி - தெட்சணாயணி - பிரமாணி |
| 4ஆம் தளம் | - ஆண்டாள் - தெட்சணாயணி - கௌரி |
| 5ஆம் தளம் | - தனலெட்சுமி - தெடசணாயணி - தானியலெட்சுமி |
| 6ஆம் தளம் | - சைலபுத்திரி துர்க்கா - தெடசணாயணி பிரஹ்மசாரிணி |
| 7ஆம் தளம் | - மார்க்கண்டேயர் - தெடசணாயிணி - மீனாட்சி கல்யாணம் |

## கோபுரத்தின் மேற்குப் பக்கம்

**சாலைகளின் இரு பக்கங்களிலும் துவாரசக்திகள் 12**

1ஆம் தளம் -பிள்ளையார் - துவார சக்திகள் - பாலசுப்பிரமணியர்
2ஆம் தளம் - மாரியம்மன் - துவாரசக்திகள் -காளி
3ஆம் தளம் - சாமுண்டி - துவாரசக்திகள் -வராகி
4ஆம் தளம் - மூலஸ்தான அம்பாள் - துவார சக்திகள் - காளி
5ஆம் தளம் - வீரலட்சுமி - துவார சக்திகள் - விஜயலெட்சுமி
6ஆம் தளம் - சந்த்ரகண்டா - துவார சக்திகள் - ஸ்கந்தமாத்ரி
7ஆம் தளம் - (மறைவில்)

**கோபுரத்தின் வடக்குப்பக்கம்: மகாநாசியில் சரஸ்வதி**

1ஆம் தளம் - கோபுரந்தாங்கி
2ஆம் தளம் - மாரி பிரம்மாணி கௌரி
3ஆம் தளம் - கௌமாரி - பிரம்மாணி - ஐந்திரி
4ஆம் தளம் - காமாட்சி - பிரம்மாணி - விசாலாட்சி
5ஆம் தளம் - கஜலெட்சுமி - பிரம்மாணி - சந்தானலெட்சுமி
6ஆம் தளம் - காத்யாயினி - பிரம்மாணி - காளராத்ரி
7ஆம் தளம் - சிவன்பார்வதி ரிஷபத்தடன் - பிரம்மாணி பிள்ளையாரை தூக்கியபடி அம்பாள்

**கோபுரத்தின் கிழக்குப் பக்கம்:**

1ஆம் தளம் – பிள்ளையார் – துவார சக்திகள் – பாலசுப்பிரமணியர்

2ஆம் தளம் – வெண்சாமரைப் பெண்களுடன் – துவார சக்திகள் பிள்ளையார் வெண்சாமரைப் பெண்களுடன் சுப்பிரமணியர்

3ஆம் தளம் – காமாட்சி – துவாரசக்திகள் – மகேஸ்வரி

4ஆம் தளம் – விசாலாட்சி – துவார சக்திகள் – காளி

5ஆம் தளம் – ஆதிலெட்சுமி – துவார சக்திகள் – மகாலெட்சுமி

6ஆம் தளம் – சூஷ்மதண்டா துவாரசக்தி – மஹாகௌரி
(12 கைகளுடன்) (12 கைகளுடன்)

7ஆம் தளம் – கடாரத்தில் எடுத்த அம்பாள் துவாரசக்திகள் துர்க்கை அம்பாள் (8 கைகளுடன்)

இராஜகோபுர தரிசனத்தை முடித்துக்கொண்ட பக்த பெருமக்கள் ஆலயத்தில் அமைந்துள்ள ஏனைய புனருத்தாரணத் திருப்பணிகளைத் தரிசிப்பதற்காக ஆலயத்தை வலப்பக்கமாக சுற்றி வரும்போது தெற்கு வீதியில்

1. மகாமாரியம்மன்
2. சிங்கவாகனத்துடன் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
3. மகாலெட்சுமி
4. மகேஸ்வரி
5. பிரம்மணி
6. கௌமாரி

தெற்கு வாசலில்

1. சாமுண்டி
2. இராஜ இராஜேஸ்வரி
3. இந்திராணி
4. வைஷ்ணவி

**<u>கருவறைத் திருப்பணி</u>**

சிவாச்சார்யச் சக்கரவர்த்தி (நவாலியூர்) சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் 27 - 03 - 2000 ஆம் ஆண்டு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அளப்பரிய திருவருளினால் திரிதள விமானங்கொண்ட கருவறை திருப்பணியை சுபமுகூர்த்தத்தில் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார். அம்பிகையின் அருளினால் 07 - 02 - 2001ஆம் ஆண்டு தைப்பூசத்திருநாள் அன்று குடமுழுக்கு எனப்படும் பெருஞ்சாந்தி விழா நடைபெற்றது.

இந்தியாவில் செய்யப்பட்ட கருங்கற்கோமுகை கருவறையின் வடக்குப் பக்கத்தில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திரிதள விமானம் 33 அடி உயரமானது.

மூலஸ்தான திரிதள விமானத்தில் மேலிருந்து கீழாக ஸ்தூபியின் உச்சியில் பொன்முலாம் பூசப்பட்ட கலசம் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கிறது.

தெற்கில்:-
1. தெட்சணாயணி
2. இராஜ இராஜேஸ்வரி
3. மகா மாரியம்மன்

மேற்கில்:-
1. மூலஸ்தான அம்பாள்
2. நாகபூஷணி
3. மகிஷாசுரமர்த்தனி

வடக்கில்:-
1. பிரம்மாணி
2. அர்த்தநாரீஸ்வரி
3. விஷ்ணுதுர்க்கை

கிழக்கில்:-
1. மூலஸ்தான அம்பாள்
2. எட்டுக்கை மாரியம்மன்

வடக்கு வீதியில்:
1. பாலமுருகன்
2. வைஷ்ணவி
3. இராஜ இராஜேஸ்வரி
4. மகேஸ்வரி
5. பிள்ளையார்

வைரவர் ஆலயத்தின் பின்பக்கத்தில் - வைரவர் கோடிப்பூதங்கள், வைரவ வாகனம்

வசந்த மண்டப பின்பக்கத்தில் - மகிஷாசுரமர்த்தனி சிங்கம், கோடிப்பூதங்கள்.

மணிக்கோபுரத்தில் - பத்திரகாளி, சிங்கம், கோடிப்பூதங்கள்

பக்த பெருமக்களே! இராஜகோபுர தரிசனத்தையும் திரிதள விமானத்தையும் வீதியில் வலம்வந்து ஏனைய சுதைச் சிற்பங்களையும் அவதானித்தீர்கள். ஆலயத்தின் உள்ளே செல்லும் போது கோபுர வாயிலில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் புத்தம் புதிய சுதைச்சிற்பத் திருப்பணிகளைப் பற்றிய விளக்கங்களைத் தருகின்றோம்.

**<u>கோபுர வாசலில்</u>**

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் இராஜகோபுர வாசலில் உள்ள திருக்கதவின் முன்னால் நின்று பார்க்கும் போது கோபுர நுழைவாசலின் இரு பக்கங்களிலுமுள்ள சுதைச்சிற்பங்களின் விபரம் கீழே தரப்படுகின்றது இங்கு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அட்ட மூர்த்தங்களும் சிம்ம வாகனத்துடன் துர்க்கை அம்பாளும், சிம்ம வாகனத்துடன் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளும் தெரிசனம் தருகிறார்கள்.

**வலது பக்கம்**

முதலாவது திருவுருவம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் - நின்ற வடிவம் - தசஹஸ்தம் (அங்கம்) (10 கைகள்)
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் (உபாங்கம்) கண்டகோடரி, கதை (தண்டாயுதம்)) வச்சிரம் - கத்தி, சூலம் என்பன. (5)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் - பாசம், தாமரைப்பூ, வாள், கேடயம், கபாலம் என்பன (5)

இரண்டாவது திருவுருவம் - மகாகாளி - நின்றவடிவம் (12 கைகள்)
வலது கைகளில் உள்ள படைக்கலங்கள் - சக்கரம், வச்சிரம், கோடரி, கதை (தண்டாயுதம்) பாணம் சூலம் என்பன (6)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் - தாமரைப்பூ திரிசூலம் சக்தி (வேல்) பாசம், மணி, தனு (வில்) கபாலம் (6)

மத்தியில்: சிம்மத்துடன் துர்க்கை - திருவாசியுடன் - நின்றவடிவம் (8 கைகள்)
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் - சக்கரம், பாணம், சக்தி, சூலம் (4)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் - சங்கு, வில், கேடயம், கடியகஸ்தம் (4)

மூன்றாவது திருவுருவம் - சற்சண்டிகை - நின்றவடிவம் (12 கைகள்)
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் - வச்சிரம், ஈட்டி, சக்கரம், உடுக்கை, பாணம், கண்டகோடரி (6)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் சக்தி, (வேல்) வாங்கு (நீளக்கேடயம்), மணி, நாகபாசம், தனு (வில்) பாசம் (6)

நான்காவது திருவுருவம் - பைரவி - நின்றவடிவம் (16 கைகள்)
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் - சக்கரம், அங்குசம், வளரி, (பற்களுள்ள வாள்) கத்தி, வச்சிரம், உலக்கை, கதை (தண்டாயுதம்) சூலம், (8)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் - பரசு, பாசம், கண்டகோடரி, மணி, சக்தி (வேல்) கபாலம், கேடயம், கதை (8)

## இடது பக்கம்

ஐந்தாவது திருவுருவம் - சாமுண்டி - நின்றவடிவம் (8) கைகள்
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் சூலம், கத்தி, அங்குசம், வச்சிரம், என்பன (4)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் - கபாலம், கேடயம், பாசம், மணி (4)

ஆறாவது திருவுருவம் - சர்வமயமண்டி - நின்றவடிவம் (8 கைகள்)
வலது கையிலுள்ள படைக்கலங்கள் - சூலம், சக்கரம், வச்சிரம், பாணம் (4)
இடது கையிலுள்ள படைக்கலங்கள் - கபாலம், சங்கு, சக்தி (வேல்) தனு (வில்) (4)

மத்தியில்: சிம்மத்துடன் துர்க்கை - திருவாசியுடன் - நின்றவடிவம் (16 கைகள்)
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் - டமருக நாகம், சக்கரம், பாணம், தீச்சட்டி, கண்டகோடரி, வாள், பூமொட்டுச் சூலம் (8)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் - பாசம், சங்கு, வில், மணி, கேடயம், பூமேல் கிளி, தண்டாயுதம், கபாலம் (8)

ஏழாவது திருவுருவம் - காலாந்திரி நின்றவடிவம் (8 கைகள்)
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் - தண்டு, கட்டவாங்கு, (குறுகிய கேடயம்) கத்தி, சூலம், (4)
இடது கையிலுள்ள படைக்கலங்கள் - வளரி, (பல்லுள்ளவாள்) பாசம், கேடயம், கபாலம் (4)

எட்டாவது திருவுருவம் - காளி - நின்றவடிவம் (8 கைகள்)
வலது கைகளிலுள்ள படைக்கலங்கள் - சூலம், டமருகம், கத்தி, சக்கரம் (4)
இடது கைகளிலுள்ள படைக்கலங்கள் கபாலம், பாசம், கேடயம், மணி (4)

மேலே தளத்திலுள்ள சிற்பவேலைகள்:-

1. கமலவட்டச் சிற்ப வேலகள்
2. சக்கர வட்டச் சிற்ப வேலைகள்
3. கமல வடடச் சிற்ப வேலைகள்

இரண்டு பக்கங்களிலுமுள்ள தூண்களின் போதிகை வளைவுகளில் கந்தருவர்கள் மாலைகளை ஏந்தி நின்று ஸ்ரீ பத்திரகாளிக்கு அணிவது போன்ற பாவனைச் சிற்பங்கள்

முகப்பின் இரு பக்கங்களிலுமுள்ள தூண்கள் வலது பக்கமும் - இடது பக்கமும் முறையே
முதலாம் ஐந்தாம் தூண்கள் சக்கர வரிசையமைப்பு
இரண்டாம் ஆறாம் தூண்கள் கொடி செடியமைப்பு
மூன்றாம் ஏழாம் தூண்கள் மலர் மாலை நிரையமைப்பு
நான்காம் எட்டாம் தூண்கள் மணிகளும் மலர்களும் மாலையாயமைந்தவை.

குறிப்பு: 2, 3, 6, 7 ஆம் தூண்களில் சுமார் ஆறடி உயரமுள்ள நான்கு பெண் சுதைச்சிற்பங்கள் நாட்டிய பாவனையில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆதாரம்:- ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம் என்னும் நூல். இதைத் தந்துதவி விளக்கமளித்தவர் சிற்பகலாமாமணி, சிற்பகலா அரசு திரு. சபாபதி சிவசோதிலிங்கம் அவர்கள்.

## ஆலயத்தினுள்ளே

ஆலயத்தினுட் பிரவேசிக்கும் போது சித்திரவேலைப் பாடுகள் நிறைந்த திருக்கதவும் எமது கவனத்தைக் கவருகின்றது. இவ்வாறே பத்திரகாளி அம்பாளின் மகா மண்டபத் திருக்கதவும் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றது தம்ப மண்டபத்திலுள்ள பலிபீடமும் சிம்மமும் கருவறையிலுள்ள கோமுகையும் இந்தியாவில் செய்யப்பட்ட கருங்கற் திருப்பணிகள், மூலஸ்தான அம்பிகையின் வெள்ளிக்கவசமும், ரதோற்ஸவத்தில் சித்திரத்தேரில் எழுந்தருளுவதற்காக புதிதாக செய்யப்பட்ட பிள்ளையாரும், முருகனும், (தாபர விக்கிரகங்கள்) என்பனவும் புதிய திருப்பணிகளாக ஆலயத்துட் காணப்படுகின்றன. வைரவர் (தாமிர விக்கிரகம்) புதிதாகச் செய்யப்பட்ட திருப்பணியாகும்.

## துர்க்காம்பிகை சந்நிதி

உலகத்தோற்றத்துக்கு மூலகாரணமாகிய பரமேஸ்வரனோடு பிரிப்பின்றித் தாதான்மிய சக்தியாக இருப்பவள் பரமேஸ்வரி. பரமேஸ்வரியின் அம்சமனைத் தும் நிறைந்த மகா சக்தி துர்க்கா தேவி.

"துர்க்கானி" துர்க்கபாவனாகர நெரைஸங்கா" என்று தேவி மகாத்மியம் துர்க்காம்பிகையின் மகத்துவத்தை விவரிக்கின்றது. பவகடலைக் கடப்பதற்கு மரக்கலமாயிருப்பவள் துர்க்கை என்று தேவி மகாத்மியம் விளக்குகின்றது.

அன்னையின் மகா சக்தித் தத்துவத்தை தமது அகக்கண்ணால் பார்த்து குரு தேவர் ஸ்ரீ அரவிந்தர் The Mother என்ற தனது ஆங்கில நூலில் விளக்கியுள்ளார். மகரிஷியான அரவிந்தரின் அந்த தரிசனத்தை பாரதத்தின் பழம்பெரும் ஞானிகளும் அனுபவிக்கும் வண்ணம் வடமொழியல் "மாத்துரு தத்துவப்பிரகாசம்" என்ற நூலில் பிரம்மஸ்ரீ. கபாலி சாஸ்திரி அடிகள் கூறியுள்ள அத்தத்துவங்களை இங்கே சிறிது சிந்திப்போம்.

பேரரசிபோல் எழுந்தருளி இருக்கின்றாள் துர்க்கை மனதிற்கும் இச்சைக்கும் மேலுள்ள அகண்டத்தில் அவள் அமர்ந்து அங்கிருந்து மனதிலும் இச்சையிலும் சோதி வெள்ளம் பாயுமாறு செய்கிறாள். உலகத்தின் போக்குகளையும் மற்றச் சக்திகளின் ஆற்றலையும் இயற்கை நியதிகளையும் கவனித்தபடி இருக்கிறாள். மனக்கதவை திறந்து அங்கிருக்கும் அறிவுப் பொக்கிஷங்களை காட்டும் மகா சக்தி அவள்.

என்றும் சாந்தமாய் அமைதியாய் கம்பீரமாய் சகலத்தையும் அறிந்துணர்ந்த பரம அறிவு வடிவாய் இருப்பவள் அவள். எல்லாம் அறிபவள் அவள். அவளது சக்தியும், பலமும், அறிவும், ஆற்றலும், சாந்தமும், கெம்பீரமும், எதையும் ஆட்கொள்ள முடியும். அவளுக்கு யாரிடமும் விருப்பு, வெறுப்பு என்பது கிடையாது. அவரவர் இயல்புக்குத்தக்கபடி அவரவர்களை நடத்திச் செல்கிறாள். அறிவுள்ளவர்களுக்கு அரிய காட்சிகளை காட்டுகிறாள். முட்டாள்களை அவர்களது கண்மூடித்தனத்தின் படியே அழைத்துச் செல்கிறாள். ஆயினும் அவளது கருணையை அளவிட முடியாது. நமது ஆத்மாவையும், சுபாவத்தையும், தெய்வ சத்தியத்தில் நிலைபெறச் செய்வதே அவளது சங்கற்பமாகும்.

இத்தகைய துர்க்கா பரமேஸ்வரி எழுந்தருளியுள்ள சந்நிதியை அழகுக்கு அழகு செய்யும் வண்ணம் வண்ணத் திருவுருவமொன்று சுதைச்சிற்ப வடிவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. மகிஷாசூரனை மர்த்தனம் செய்யும் பாவனையில் சிம்மத்தின் மேலிருக்கும் துர்க்காம்பிகை இருபது கரங்களைக் கொண்ட வடிவத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. உபாங்கங்களாகிய படைக்கலங் களுடன் அபய வரத முத்திரையோடு துர்க்கா தேவி காட்சியளிக்கின்றாள். இந்தக் கையலங்காரம் துர்க்கா பரமேஸ்வரி எல்லாம் செய்ய வள்ளவள் என்னும் தத்துவத்தை உணர்த்துவதாகும்.

துர்க்காதேவி சந்நிதியின் வாசலில் இருபக்கமும் துவார சக்திகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. அவர்களில் ஒருவர் வலக்கை சுட்டுவிரலையும், மற்றவள் இடக்கை சுட்டுவிரலையும் அம்பிகையின் சந்நிதியைச் சுட்டிக்காட்டி ஆலயத்தில் அமைதி பேணப்படவேண்டும் என்பதை உணர்த்தும் காவற் சக்திகளவை.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மகா மண்டபத்துள் பிள்ளையாருக்கும் பழனி ஆண்டவருக்கும் புதிய சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபம், கருவறை என்பனவற்றின் தளங்களும் அம்பாள் எழுந்தருளி இருக்கும் பத்மபீடமும் புதிதாக அமைக்கப்பட்ட கருங்கற் திருப்பணிகள்.

## ஸ்ரீ மகா பத்திரகாளி

தேவி மகாத்மியம் என்னும் நூல் ஸ்ரீ பத்திரகாளியின் இயல்புகளை இவ்வாறு கூறுகின்றது. "மகா காளி தனித்துவமானவள் அறிவு, ஆற்றல், வலிமை முதலியன அவளது விஷேச குணங்கள். இடையூறுகளை ஒழித்து, முட்டுக்கட்டைகளை தவிர்த்து, புயல்போல் பாய்ந்து, கனலெனப்பரவி, பாவத்தைப் பொசுக்கி, சாதகனது பிடரியை பிடித்து உந்தித்தள்ளி அவனது இலட்சியத்தை அடையச் செய்வார். அவள் சோம்பல் தனத்தையும் தெய்வ சிந்தனையில் அசட்டையையும் பொறுக்க மாட்டாள். சம்மட்டி கொண்டு அடிப்பது போல் முரட்டுத்தனமாகவாவது சாதகனது கோணல்களை நிமிர்த்துவாள்.

அசுரர்களுக்கு அவளைக் கண்டால் குலை நடுக்கம் சாதனைக்கு குறுக்கேநின்று இடையூறு விளைவிக்கும் அசுர சக்திகள் அனைத்தையும் அவள் பூண்டோடு பிடுங்கி எரிந்து விடுவாள். அண்டமெல்லாம் கிடு கிடுக்க பயத்தைப் பரப்புவாள் ஆயினும் அவளது தாயுள்ளத்தில் அன்புவெள்ளம் கரைபுரண்டு ஓடும். அசுரர்களை அடிக்கும் அவளது கைகள் அன்பர்களை அணைக்கும். அவளிடம் அன்பு கொண்டோருக்கு பயம் என்பதே கிடையாது. அவளால் சாதிக்க முடியாதது உலகில் ஒன்றுமில்லை.

தீரர்களும், வீரர்களும் பலசாலிகளும் அவளிடம் அடங்காக்காதல் கொள்வார்கள். அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டுமாயின் அவளையே நாடுங்கள். பலவீனர்களும், கோழைகளுந்தான் அவளைக் கண்டு பயந்து அவளது அருகே அணுக மாட்டார்கள். அவளருளால் கருமங்கள் ஒரு கூஷணத்தில் நிறைவேறி விடுகின்றன. அவளது வீர மில்லாவிடில் தெய்வீக இன்பம் சுவையாயிருக்காது.

இவ்வாறு போற்றப்படும் ஸ்ரீ பத்திரகாளித் தாயார் கருவறையில் பத்மபீடத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக் கின்றாள். அருள்மிகு அன்னையை வழிபட்டு இகபரசுகம் பெறுவோமாக.

## நிறைவுரை

கட்டுரை எழுதலாம், எழுதியவைகளைப் படித்து அனுபவிக்கலாம். அனுபவித்த கருத்துக்களை விமரிசனம் செய்யலாம்.

சிற்பம், ஓவியம், இலக்கியம், பரதநாட்டியம் சங்கீதம் போன்ற அழகியற் கலைகளை உட்புகுந்து பார்ப்பவர்களுக்கு ஒவ்வொரு கலையுமே நமக்களிப்பது ரசானுபவம் என்று நமது முதுபெரும் பேரறிஞர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

அழகிய பெண்ணொருத்தி சேற்றில் விழுந்து வெளியே வந்து காட்சியளித்தால் அருவருப்பினால் கண்களை வேறு பக்கம் திருப்பிக்கொள்கிறோம். இதிலிருந்து விளங்குவது கலை, நமக்கு ஊட்டுவது ஓர் இன்ப உணர்ச்சியின் விளைவையே என்பதாகும். இதனையே ரசம் என்று குறிப்பிடுகின்றார்கள் ஒன்பது வகையாக ரசத்தைப்பிரித்திருக்கிறார்கள்.

இவற்றில் பக்தி ரசானுபவம் பிரம்மானுபவத்துக்கு வழிகாட்டி நம்மை அழைத்துச் செல்வதை இராஜகோபுரம் வானுறவோங்கி வளர்ந்து நின்று பேசுகின்றது.

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஆதீனகர்த்தாவாயிருந்த அரும் பெரும் திருப்பணிகளை நறைவேற்றிய சிவஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் கனவை நனவாக்கிய வேதாகமமாமணி பிரமஸ்ரீ சோ. இரவிச் சந்திரக்குருக்கள் அவர்கள் ஆதீனத்தின் தர்மகர்த்தாவாகவும், பிரதமகுருவாகவுமிருந்து ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருட்பலத்தால் நிறைவேற்றிய இராஜ கோபுரமும் திரிதள விமானமும் ஏனைய திருப்பணிகளை கொண்ட ஆலயத்தில் சைவ உலகில் தலைசிறந்த சிவாச்சாரியாரும், ஆயிரம் பிறை கண்டவருமான பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் (நவாலியூர்) அவர்கள் தலைமையில் சிவாச்சாரிய பெருமக்கள் வேதாகம சம்பந்தமான கிரியைகளால் பத்திரகாளி அம்பாளையும் பரிவார மூர்த்திகளையும் பக்தி பூர்வமான பிரதிஸ்டை செய்து இராஜகோபுரத்துக்கும் விமானத்துக்கும் மங்களகரமாகக் குடமுழுக்குச் செய்து வைத்தார்கள்.

துர்க்காம்பிகைக்கும், கௌரியம்பாளுக்கும் கோபுரம் அமைத்த சிற்பகலாபானு திரு. கந்ததாஸ் இரவிச்சந்திரராசா (அராலி) அவர்கள் கட்டுமான வேலைகளை நிறைவு செய்ய,

இந்தியச் சிற்பக்குழுவின் தலைமைச் சிற்பியாகிய ஸ்தபதி வலங்கைமான் திரு. மாரிமுத்து இராஜேந்திரன் அவர்கள் சுதைச்சிற்ப வேலைகளை அழகுற அமைத்து வர்ணந் தீட்டி நிறைவேற்ற

தாமிர விக்கிரகங்களை உருவாக்கித் திருவாக்கும் சிற்பகலா மாமணி சிற்பகலா அரசு திரு. சபாபதி சிவசோதிலிங்கம் அவர்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்குத் தேவையான தாமிர விக்கிரகங்களை அமைத்துதவ

திருநெல்வேலி சிற்பவர்ணச்சுடர் திரு. இ. கனகராசா அவர்கள் தலைமையிலான ஓவியக் கலைஞர்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தைக் கலைக் கோயிலாக்கித்தர பத்திரகாளி அம்பாள் ஆலயம் திவ்விய க்ஷேத்திரமாக அமைந்துள்ளது.

இக்கோயிலில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கும் தெய்வத்திருவுருவங்களினதும், சிற்பங்களினதும், ஓவியங்களினதும் கலை அம்சங்களை அனுபவித்து அதனால் பெறும் இரசானுபவங்களை பிரம்மானுபவமாக்கும் சாதனையால் பக்த பெருமக்கள் ஆத்மானந்தமடைய வேண்டுமென்பது அடியேனுடைய பணிவான பிரார்த்தனை.

ஓம் சாந்தி

## தீப வகைகள்

***பல்வேறு வகையான தீபங்களை ஏற்றி வைத்து இறைவனை வழிபடுவது என்பது இந்து சமயத்தினருக்கே தனிச்சிறப்பாகும்.***

***வீட்டில் தீபமேற்ற பஞ்சலோக விளக்கு உகந்தது என்றாலும் மண்ணால் செய்யப்பட்ட அகல் விளக்கே சிறப்பானது.***

***குத்துவிளக்கென்றால் ஐந்து முகங்களைக் கொண்ட விளக்கே ஏற்றது.***

***விளக்கை வடக்கு திசையில் ஏற்றி வழிபட்டால் நிறைவான பொருள் வசதி சித்திக்கும். திருமணத் தடை தீங்கும். அறிவு வளர்ச்சியடையும்.***

***விளக்கை கிழக்கத் திசையில் ஏற்றி வழிபட்டால் துயரங்ள் யாவும் விலகும்.***

***மேற்குத்திசையில் விளக்கு ஏற்றி வழிபட்டால் கடன் தொல்லையை நீக்குவதோடு விரோதங்களையும் போக்கும். மேலும் கிரகங்களின் பிடிப்பையும் நீக்கும் ஆனால் எந்த நிலையிலும் தெற்குத் திசை நோக்கி விளக்கேற்றுதல் கூடாது.***




# பூதசுத்தி அந்தர்யாகம்

"சைவ சித்தாந்த பிரதிஷ்டா சக்கரவர்த்தி"
**ஈசான சிவ சி. குஞ்சிதாபதக் குருக்கள்**
பிரதம குரு பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்,
கொழும்பு.

சிவபிரானுக்குப் பூசை செய்யும் வகையில் பூத சுத்தி அந்தர் யாகம் என்பன பூசை இனங்கமாகும். மூர்த்திகளுக்குப் புறத்தே பூசை செய்யு முன்பு குரு என்பவர் அகத்தில் பூசை செய்வதையே இது குறிக்கும் பூத சக்தி என்பதில் பூதம் என்பது பஞ்சபூதங்களைக் குறிப்பிடுகின்றது. நம் உடல் பஞ்ச பூதங்களாலானது தாய் தந்தையரின் மலத்தினால் உண்டானது. அதனால் இத்தேகம் அகத்த வடிவானது. அசுத்த வடிவ தேகத்துடன் நிர்மலமயமான இறைவனைப் பூசிக்க முன்பு நிர்மல மான மந்திர வடிவினராவது அவசியம்.

எமக்குத் தூலதேகம் சூஷ்ம தேகம் என இரண்டு உண்டு. தூலதேகத்தை ஸ்நானத்தாற் சுத்திசெய்யலாம். சூஷ்மதேகத்தை பூதசுக்தியால்தான் சுத்தி செய்யலாம். இப்படிச்சுத்தம் செய்யும் போது ஜீவனுக்கு ஆபத்து நேரிடக் கூடாது ஜீவனைத்து துவாதசாந்தத்தில் முதலில் சேர்க்க வேண்டும்.

சூஷ்ம சரீர சுத்தி எட்டுத் தத்துவங்களாலான சூஷ்ம சாரீரத்தை உடலில் உள்ளபிரம்மா முதலியவர் களிடமும் அர்ப்பணிப்பதாகும். தூலசரீரசுத்தி பஞ்சபூதங்களும் ஒன்றுக்கொன்று விரோதமானவை ஒரு பூதத்தின் இடத்தை மறறொரு பூதம் நிரப்பிக் கொண்டதாகப்பாவித்து அவைகளைச் செயலிழந்த வைகளாக்குதல். மந்திரங்கள் மூலம் அவற்றின் குணம் நீங்குகின்றன. அவற்றை வேறு பூதங்கள் வியாபிக்கும் போது அவை செயலிழந்த வைகளாக்குதல். மந்திரங்கள் மூலம் அவற்றின் குணம் நீங்குகின்றன. அவற்றை வேறு பூதங்கள் வியாபிக்கும் போது அவை செயலிழந்திருக்க கால் கட்டை விரலிலிருந்து உண்டான அக்கினியால் உடல் எரிக்கப்பட்டு தோஷம் நீத்தபின்பு, துவாத சாந்தத்தின் அமிர்ததாமரையிலுண்டான அமிர்தத்தால் நனைத்து ஆத்மாவை மறுபடி கொண்டுவந்து இருதயகமலத்தில் அமர்த்தி அமிர்தாபிஷேகம் செய்து மலமற்ற சரீரத்தால் மந்திரமயமாக்குதல் சூஷ்ம தேகசுத்தியாம்.

எவ்வாறு எனில் தன் கால் விரல் தொடங்கி வயிறு வரை இரண்டு ரூபமாகவும். அதற்கு மேல் பிரமரந்திரம்வரை ஒரு ரூபமாக்வும் இருதயம் கண்டம் தாக்கினடி, புருவநடு, பிரமரந்திரமென்னுமிடங்களில் இடைபிங்கலையுடன் கூடியதாகவும், மேற்குறிப்பிட்ட இத்தானங்களில் அதோ முகமாயிருக்கும் தாமரை மொட்டுக்களோடு கூடியதாய் உட்டுளையுடன் கூடியதாய் உள்ளும் புறமும் அமிர்ததாரையுடன் கூடியதாகவும் மேலான ஆகாச உருவமான உத்தியைச் சுழுமுனை நாடியாகத் தியானித்து இருதய கமலத்தின் நடுவே "ஹூங்"காரம் ஜொலிக்கின்றதாகப் பாவித்து வாயுவை மூக்கினால் இழுத்து உள்ளே நிறைத்துத்தடுத்து ஹூகாரத்தில் மனதைத்தடுத்து வாயுவை மேலெழுப்பி ஹூ ம்பட் என்று உச்சரித்து அதோமுகமான பத்மமுகுளங்களை சோடிகா முத்திரையால் மேல்நோக்கிய முகமுடையதாகவும் முறுக்கவிழ்ந்ததாகவும் தியானித்து வாயுவை வலது நாசியால் விடுக.

பின்பு வாயுவைப் பூரித்து இருதய கமலத்தில் நக்ஷத்திரரூபமான ஹம் என்னும் ஆத்மாவை முன்நிறுத்தி வாயுவை மேலேற்றி சங்கரமுத்திரையால் இருதயத்திலிருந்து எடுத்து இருதயத்தில் பிரம்மாவும் கண்டத்தில் விஷ்ணுவையும் தாலுகமலத்தில் மஹேஸ்வரனையும் பிரமரந்திரதில் சதாசிவனையும் தியாகக்கிரமத்தால் வாயுவை மேலேற்றுதலோடு ஓம்ஹம் ஆத்மநேநம என்று துவாதசாந்தசிவனிடம்சேர்க்க.

சப்தமும் பரிசமும் பிரம்மாவிடமும்
ரசம் விஷ்ணுவிடமும்
ரூபம்கந்தம் ருத்திரனிடமும்
புத்தி அகங்காரம் மஹேஸ்வரனிடமும்
மனமும் விந்துவும் சதாசிவமூர்த்தியினிடமும்
ஒடுங்கியதாக பாவிக்க

**தூலதேகசுத்தி:** தன் சரீரத்தை பொன்னிறமான பிருதிமயமாகப் பாவித்து வாயுவை இடமூக்கால் உள்ளே வாங்கி நிறுத்தி ஓம் ஹ்லாம் ஹலாம் ஹ்லாம் ஹ்லாம் நிவிர்த்திகலாயை நமஹ ஹூம்பட் என்று துவாதசாந்தம் வரை மேலேற்றி வலது மூக்கால் விட்டு கந்தரச ரூப பரிச சத்தம் என்ற பிருதுவிக் குணம் ஐந்தையும் மேலாக்கி அப்புவின் குணங்கள் அக்கினி மயமானதாகப் பாவிக்க.

பின் சரீரத்தை வெண்ணிறமான அம்புயமாகப் பாவித்து ஓம் ஹ்லீம் என 4 தரம் மேலேற்றி பிரதிஸ்டா கலையை ஹூம்பட் என ரசரூப பரிச சப்த என்ற அப்புவின் குணங்கள் அக்கினிமயமானதாகப் பாவிக்க. பின் சரீரத்தை சென்நிறமுடைய தேயுமயமாகப் பாவித்து ஓம் ஹைம் என மூன்று தரம் உச்சரித்து வித்தியாகலையை ஹூம்பட் என 4 தரம் உச்சரித்து ரூப, பரிச சப்த என்ற தேயுவின் குணங்களை நீக்கி அத்தேயு ஜலமானதாகபாவிக்க.

பின் சரீரத்தை கருநிறமுடைய வாயு மயமாகப் பாவித்து ஓம் ஹைம் சாந்தி கலாய ஹூம்பட் என 2 தரம் உச்சரித்து பரிச சப்த மென்னும் வாயு குணம் இரண்டையும் நீக்கி அவ்வாயு பிருதுவி மயமானதாகப்

பாவிக்க. பின் சரீரத்தை பளிங்கு நிறமான ஆகாச மயமாகப் பாவித்து ஓம் ஹ்லம் சாந்திய தீதகலாய நமஹ ஹூம்பட் என்று ஒரு தரம் உச்சரித்து அப்பு என்னும் ஆகாச குணத்தை நீக்கி ஆகாசம் பரமாகாசமாகிய விந்து மயமானதாகப் பாவிக்க

மேற்கூறியன தூல தேக சுத்தியாம்

பின்பு ஹூம் அஸ்தராய ஹூம்பட் என்று வலக்காற் பெருவிரலினின்றும் காலாக்கினியை எழுப்பி அது பிராரப்த சரீரத்தைச் சார்ந்த குற்றங்களெல்லாம் எரித்ததாகப்பாவிக்க.

இவை சரீர தகனம்

***அமிர்தாப்பிலாவனம்***

பின்பு ஓம் ஹூம் சிவாய வவ்ஷட் என்றுச்சரித்து துவாதசாந்தத்தினின்றும் தோன்றிய அமிர்த தாரையால் நனைந்ததாகப்பாவிக்க.

இருதயத்திலே தாமரையை பிரணவத்தால் உண்டாக்கி அதில் துவாதசாந்தத்திலிருந்த ஆன்மாவைப் பூரகத்தால் சிருஷ்டிக்கிரமமாகக் கொண்டு வந்து தாபித்து சக்தியினின்றும் பெருகும் அமிர்தத்தால் அபிஷேகம் பண்ணுக.

பின் தன் தேகத்தில் அங்க நியாசம் செய்து இருதயம், நாபி, புருவமத்தி என்னும் தானங்களில் பூஜை, ஹோமம் சமாதி என்ற முறைப்படி மானசபூசை ஓமம் செய்து சமாதி என்று நிஷ்கன சிவத்தைச் சிந்தித்து புறப்பூசை செய்ய அனுமதி பெற்றுக்கொள்க.

**தானசுத்தி:**

ஓம் ஹூம் அஸ்திராயபட் என்று தாளத்திரயம் செய்து சோடிகா முத்திரையால் திக்பந்தனம் செய்து கவச மந்திரத்தால் மூன்று அகழும் உண்டானதாகவும் மேல் கீழ் பாகத்தை ஓம் ஹூம் அஸ்திராயபட் என்று விசேஷார்கியம் சம்பாதித்து புருவநடுவரை எடுத்து அமித மயமாகப்பாவித்து அதில் அக்ஷதை அறுகு சந்தனம், புஷ்பம் இட்டு பஞ்சபிரம வித்தியாதேக நேத்திரமொழித்த அய்யகமந்திரங்களையும் அபிமந்திரித்து கவச அவகுண்டனம் செய்து தேனு முத்திரை காட்டி அச்சலத்தால் சிரசில் புரோக்ஷித்துக் கொள்ளவும் இந்த அர்க்கியத்தால் திருமஞ்சனப் பாத்திரத்திலும் இட்டு தேனுமுத்தரை காட்டவும். தன் ஆத்மாவை சிவமூர்த்தையே நமஹ என இருதயத்தில் பூஜித்து நெற்றியில் சந்தனத்தால் திலகமிட்டு சிரசில் புஷ்பம் வைத்து ஆத்ம பூஜை செய்க.

மௌனமாக இருதயத்தில் கும்பிட்டுக்கொண்டு பஞ்ச பிரம்ம ஷடங்க மந்திரங்களை குறில் நெடில் அள வடையான ஓம் கார நமோந்தமாகச் சொல்க. பின்பு ஸ்நான வேதிகையில் பரிவட்டம் விரித்து ஷடுத்தாஷனம் பூசித்து சுவாமியை எழுந்தருளப் பண்ணி சாமானியார்க்கியம் கொடுத்து பஞ்ச பிரம்மங்களையும் அங்க மந்திரங்களையும் கநிஷ்டாதி அங்குஷ்டாந்தம் விரல்களில் நியாசித்து அஸ்திர பாசுபதாஸ்திர மந்திரங்களால் சிவனையும் ஆவுடையாளையும் அலம்பி தூப தீப அபிஷேகம் செய்து மூலத்தால் புஷ்பஞ்சாத்தி பீடத்தில் எழுந்தருளச் செய்தல் வேண்டும்.

இப்படியே பூத சுத்தி அந்தர்யாகம் பஞ்ச சுத்தி செய்து புறப்பூசை செய்ய வேண்டும். வினைகளை களைவதன் மூலம் பாசம் நீங்கிச் சிவத்துடன் சேர வழிகிடைக்கும் நித்தமும் ஆன்மார்த்தம் பரார்த்த பூசைகளில் மேற்கூறியன செய்ய வேண்டும்.

தீக்ஷையில் சஞ்சித ஆகாமிய வினை போனாலும் பிராப்தம் அழிய மேற்கூறிய வழிபாடுகள் அவசியம் தினசரி இவற்றை செய்வதனால் சிவத்தன்மை நன்கு விளங்குகின்றது என்பது ஆகமங்களின் தீர்மானம்.

சிவம்பவது



## மலர்களும், பழங்களும் பூஜைக்கு ஏன்?

பலவித வர்ணங்களில் பார்ப்பதற்கே அழகான சிருஷ்டியாக அமைந்திருப்பவை மலர்கள். அவற்றின் வாழ்க்கை மிகக் குறுகிறது ஆனால் அந்த சொற்ப நேரத்திலேயே அது காற்றில் மணம் நிரப்பி நம்மை எல்லாம் மகிழ்விக்கிறது. தன்னிடம் உள்ள மகரந்தத்தை வண்டுகளுக்கு கொடுத்து விடுகிறது. தன்னுடைய பெருமையை எந்த விதமாகவும் வெளிப்படுத்திக் கொள்ளாமல் தியாக உணர்வுடன் சேவை செய்கிறது.

அதே போலப் பழங்கள் மரத்தின் சத்து அவ்வளவையும் உறிஞ்சி எடுத்து மனிதனும், மிருகங்களும், பறவைகளும் வாழ உணவாகக் கொடுக்கிறது. தகுந்த பக்குவத்தில் இனிமையுடன் தன்னைப் பிறருக்கு உணவாக ஈந்து தியாகம் செய்து கொள்கிறது. பழத்தைப் பறிக்காமல் விட்டுவிட்டாலும் அது கனிந்து உதிர்ந்து மண்ணுடன் கலந்து தனது சதையைப் புழு பூச்சிகளுக்கும், வித்தை மண்ணில் மீண்டும் உயிர்ப்பிக்கவும் கொடுத்து உதவுகிறது.

மலர்களும், கனிகளும் இயற்கையின் வடிவங்களில் தியாக உணர்வைக் காட்டும் அற்புதமான சின்னங்கள். அதனால் அவை இரண்டும் ஆண்டவனுக்கு மிகவும் உகந்தவையாக விளங்குகின்றன.




# அன்னையின் அருளாட்சி



வியாகரண சிரோமணி
**சிவஸ்ரீ. பூரண தியாகராஜக்குருக்கள்**
மட்டக்களப்பு

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் ஓருருவம் நாமமின்றிப் பாரெங்கும் பரந்து பட்டுக்காட்சிதரும் பரம்பொருளாகிய இறைவன் ஆருயிர்கள் மேற் கொண்ட தனிப்பெருங்கருணையினாலே படிப்படியாக உருவநிலை பெறுகின்றார். "ஆகாசத் வாயு: வாயோரக்னி:".... 'ஆகாசத் திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து பிருதிவி (நிலம்) யும் தோன்றுவன' என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகாசம்: சப்தம் - ஒலி எனும் ஒரு குணம் மட்டுமே உடையது. வாயு - காற்று, சப்தம், ஸ்பரிசம் (உடலில் படுவதன் மூலம் அறிதல்) எனும் இரண்டு குணங்களையும் அக்னி - சப்தம், ஸ்பரிசம், ரூபம் எனும் முக்குணங்களையும் நீர் -சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் (சுவை) எனும் நாற்குணங்களையும், பிருதிவீ - நிலம் சப்தம், ரூபம், ரஸம், கந்தம் (வாசனை) என்னும் ஐந்து குணங்களையும் கொண்டு விளங்குவன. என்ற பொருளில்

"சப்தைக குண ஆகாச: சப்தஸ்பர்ச குணோ மருத்/
சப்த ஸ்பர்ச ரூபகுணப்ரதானோ வந்ஹிருச்யதே//
சப்த ஸ்பர்சரூபரச குணகம் சலிலிம் மதம்/'
சப்த ஸ்பாசரூபரச கந்தாட்யா ப்ருதிவி மதா// என்று

கைலாச சங்கிதை என்னும் நூல் விரித்துரைக்கின்றது. இதனையே மாணிக்கவாசக சுவாமிகள் போற்றித் திருவகவலில்

"பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி'

என்றுகூறி

இறைவன் பஞ்சபூதங்களாகி அவற்றிற்குரிய விசேஷ தன்மைகளுடன் வியாபித்துள்ள நிலையினை அழகாக எடுத்துக்காட்டுகின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகளும்

''மண்ணதனில் ஐந்தை மாநீரின் நான்கை வயங்கெரியில் மூன்றை, மாருதத்திலிரண்டை, விண்ணதனில் ஒன்றை விரிகதிரை, தண்மதியைக் கண்ணாரக் கண்டேனே'' என்று விளக்குகிறார்.

இதில் முதலாவது ஆகாசம் எனும் நிலை, இது கண்களுக்குப் புலனாகாத நிலை. எனினும் ஒலியை மட்டும் தாங்கும் நிலை. இரண்டாவதாக வாயு - காற்று எனும் நிலை இது உருவமின்றிக் கண்ணுக்குப்புலனாகாவிடினும் ஸ்பரிசத்தினால் (உடலிற்பட்டு உணர்வதனால்) உணரலாம். காற்று வீசும்போது ஏற்படும் ஒலி, உடலிற் படும்போதுண்டாகும் உணர்வு ஆகிய இரண்டு குணங்களுமுடைய நிலை மூன்றாவதாக தேயு - அக்கினி இது எரியும் போது ஏற்படும் ஒலி தொடும்போது சுடுதலால் உணரப்படுதல், கண்ணுக்குத்தெரிதல் எனும் மூன்றுகுணங்களுமமைந்த நிலை. இவ்வாறு இறைவன் கட்புலனுக்கு விடயமாகத் தோன்றியமையே பிரம விஷ்ணுக்களின் முன் சோதிப்பிழம்பாக தோன்றிய வரலாறு சுட்டுகின்றது. இவ்வாறு படிமுறையாக சோதி நிலையில் தோன்றிய உருவமே சிவலிங்கம் இது ஏதோ ஒரு பொருளாகக் கண்ணுக்குத் தோன்றுவதனால் உருவமாகவும் ஏனைய திருமேனிகளுக்குப் போல் கை, கால் முதலிய உறுப்புக்களின்மையால் அருவமாகவும் இருப்பதனால் அருஉருவத் திருமேனி எனப் பெயர் பெறுகின்றது. அடுத்து நான்காவது ஜலம்: நீர் எனும் நிலை இது சலசலப்பின் மூலம் சப்தம் - தொட்டதும் சூடு, குளிர்மை என உணர்வதனால் ஸ்பரிசம், கண்ணுக்குத் தெரிவதால் ரூபம், சுவைத்தலால் ரஸம் எனும் நான்கு குணங்களுமமைந்த நிலையாகும். இதிலிருந்து ஐந்தாவது நிலை - சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் எனும்ஐந்து குணங்களுமமைந்த பிருதிவீ - நிலம் எனும் நிலை இந் நிலையினையடையும் போது இறைவன் பல உருவங்களில் உருவத்திருமேனி கொண்டு காட்சிதருதலையும் நாம் உய்த்துணரலாம். இத்தகைய இறைவனுடன் நெருப்பிற்சூடு போல் இரண்டறக் கலந்திருப்பவளே சக்தி.

தெய்வத்தைத் தாயாகப் போற்றி வழிபடும் சக்திவழிபாடு மிகப் பழங்காலந் தொட்டே நிலவிவருகின்றது அகிலாண்டகோடி நாயகியான சக்தியைத் தாயாகத் தனிப்பெருந் தெய்வமாக முதலிடம் கொடுத்துப் போற்றி வழுபடுஞ்சமயம் சாக்தம் எனப்படும். அன்னை பராசக்தியின் அளப்பரிய ஆற்றலின் காரணமாகவே அகில உலகமுமியங் குகின்றது. கண்ணிருந்தும் பார்க்குஞ்சக்தியின்றேல் பார்க்க வியலாது. காது, வாய் முதலிய கருவிகளும் அவ்வச் சக்தியின்றேல் தொழிற்படா. இவைபோன்றே அனைத்தும் சக்தியின் பெருமையினால் இயங்குவதை நாமறிவோம்.

மலையில் நதி உற்பத்தியாகின்றது. ஆனால் அந்நதி பூமியை நோக்கிவந்து பூமியினை அடைந்தாற்றான் அதன் மூலம் மாந்தர் பயன் பெற முடியும் ஆகாயத்திலே மேகங்கள் நீரினைத்தாங்கி உலவுகின்றன. அவை மழையாக புவிமீது பொழிந்தால் தான் பயிரினங்கள்

தழைத்துச்செழிப்புறும். ஆகாசமண்டலத்திலே சஞ்சரிக்கும் காற்று, சகல ஜீவராசிகளோடு கலந்து அவைகளின் நாசி வழியாக நுழைந்து உடலினுள் சென்றால் தான் அவை உயிருடன் உலவ முடியும் பரந்த வெளியில் பரந்திருக்கும் சூரிய கிரணங்கள் பூமியை வந்தடைந் தாற்றான் பருவகாலங்கள் உண்டாகும். தட்ப வெப்ப நிலைகள் அமையும் இவையாவும் இயற்கையாக நிகழக்கூடியவை இதனைப்போலவே எங்கும் வியாபித்துள்ள பரந்துள்ள - உள்ளீடு பொருளாயிருந்து இவற்றையெல்லாம் இயக்கிவருகின்ற இறைவனின் தனிப்பெருசக்தியான திருவருளும் (அருட்சக்தியும்) உயிர்கள் மீது கொண்ட தனிப்பெருங் கருணைகாரணமாக பூமியிலே இறங்கிவந்து அருள்பாலிக்கின்றது. உலகமாதாவுக்கு - அன்னைக்கு ஆலயமும் அமைத்து வழிபட்டுவருகின்றோம். சிவனார் சில அருட் செயல்களையும், சக்தி - அம்பிகை சில அருட்செயல்களையும் சரிபாதியாகச் செய்கின்றனர். சரிபாதி என்பதே பின்னர் நாளடைவில் சதிபதி என மாறியதாகச் சிலர் கூறுவர். சிவனுக்கு மிக விசேஷம் வாய்ந்த இரவு ஒன்று அதுவே சிவராத்திரி ஆனால் சக்திக்கு - அம்பிகைக்கு ஒன்பது இரவுகள் நவராத்திரி இவை மிகப்புனிதமான தினங்களல்லவா!

"சிவ:சக்த்யா யுக்த: யதிபவதி சக்த:ப்ரபவிதும்....."

'சக்தியுடன் இணைந்த சிவனே இயங்கவல்லதாம்' என்று ஆதிசங்கரர் போற்றுகின்றார்.

அம்பிகையே அகில லோகத்திற்கும் தாய் என்ற பொருளில் "**அகில லோக ஜனனி**" என்றொரு நாமம் அவளுக்குண்டு. அனைத்து உயிர்களையும் தோற்றுவித்துக் கண்ணுங்கருத்துமாக வளர்த்து வருதல் தாய்மையின் சிறப்பு. மனித இனம்போல் பறவைகளும் விலங்குகளும் பெற்றெடுத்தவைகளைக் கண்ணுங்கருத்துமாகப் பேணி ஊட்டி வளர்க்கின்றன. இதன் மூலம் தாய்மையின் சிறப்பு விளங்கும். எனவே தாயைப் போற்றுவதும் பேணுவதும் தெய்வவழிபாட்டிற்கு வழிசமைத்ததெனலாம். தாயாக விளங்கும் **பராசக்தியே** சகல நிலைகளிலுமுள்ள உயிர்களுக்குத் தக்கமுறையினைக் கையாண்டு அவைகளைப் பேணிவருவதுடன் மனிதர்களை அருள் வழி செல்ல வைத்தும் பரிபாலிக்கின்றாள். அண்டங்களை எல்லாம் ஆளும் பேரரசியாகத் திகழ்வதனால் அன்னைக்கு **ஸ்ரீ மஹா ராக்ஞ** = ஸ்ரீ -மகாராணி என்றொரு சிறப்பு நாமமுண்டு. பிள்ளைகளை வளர்க்குந் தாய்மார் தம் குழந்தைகளைச் சிலவேளை முறைதவறிப் பிழை செய்யினுந் தண்டிப்பதில்லை. ஆனால் அகில உலகினுக்கும் பேரரசியாகத் திகழும் அம்பிகை அருள்மிகுந்த அன்புடன் தீவிர கண்டிப்பும் மிக்கவளாய் ஆட்சி முறை தவறாமல் செங்கோல் முறையினின்று ஒருவருமே தப்பமுடியாதவாறு அரசாளுகின்றாள். அரசநீதியிலிருந்து சிலவேளை தப்பலாம். ஆனால் அன்னை அனைவருடைய உள்ளத்திலும் மனச்சாட்சியாக விளங்குவதனால் பிழைசெய்வோர் அதனிடமிருந்து தப்பவேமுடியாது. இதனையே

"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

திருவள்ளுவப் பெருமான் கூறிப்போந்தார். ஒருவன் நல்வழியினின்றும் விலகித்தவறு செய்யும் போது துன்பத்திற்கு ஆளாகின்றான். அவ்வேளை அதனைச்சிந்தித்து ஆராயின் அவன்விட்ட பிழையினை உணருவான். ஒருவன் செய்த பிழைக்குத் துன்பத்தினை நல்கித்திருத்தி அவனை நல்வழிப்படுத்துகின்றாள் அம்பிகை. நலன்விரும்பிகள் நன்மைகள் பல புரிந்து நன்மைகள் பலபெறலாம் என்பதனை அன்னையின் அருளாட்சி மூலம் அறிகின்றோமல்லவா!

"எத்திறம் நின்றான்ஈசன் அத்திறமவளும் நிற்பள்" என்றவாறு இறைவனுடன் இயைந்துள்ள சக்தி, ஆன்மாக்களின் பரிபக்குவ நிலைகளுக்குத்தகவும் அசுரர்களை அடக்கி ஆட்கொண்டருளவும் பற்பல கோலங்களிற் காட்சி தருவது நாமறிந்ததே!

"ஜயந்தீ மங்களா காளி பத்ரகாளீ கபாலீனீ!
துர்க்கா க்ஷமா, சிவா, தாத்ரீ, ஸ்வாஹா, ஸ்வதா
நமோஸ்துதே!!

எல்லாவற்குக்கும் மேலான நிலையில் வெற்றிச் செல்வியாக விளங்குவதால் ஜயந்தீ எனவும், மங்கம் - பிறப்பு இறப்பெனும் நிலைகளை லாதி - கொடுத்து அழித்து மங்களத்தினை- (பிறவித்தளையைநீக்கி) அருளுவதனால் மங்களா எனவும், கலயதி - பிரளயகாலத்தில் யாவற்றையும் கபளீ கரஞ்செய்து விழுங்குவதனாலும், கருமை நிறமுடைவளாதலாலும் காளீ எனவும், பத்ரம் - மங்களம் அல்லது சுகத்தை கலயதி - ஸ்வீகரோதி - (அடியவர்களுக்கு பேரருள் செய்யுமுகமாக) ஏற்று அருள் பாலிப்பதனாலும் பத்திரகாளி எனவும் (நன்மைகளை யீந்தருள் பாலிக்கும் அன்னை என்பது பொருள்), முண்டமாலை, கபாலம், மண்டையோடு ஆகிவற்றை ஏந்திக்காட்சி தருவதால் கபாலினீ எனவும், துக்கேந + கம்யதே = அதாவது பயம், நியமமெனும் அஷ்டாங்க யோகம், கடுமையான உபாசனை மூலம் ஆராதனை செய்தடையப்படுதலால் துர்க்கா எனவும், பக்தர்களினதும், ஏனையோரதும் அபராதங்களையெல்லாம் கருணையுளங் கொண்டு உலகின் தாயாகவிருந்து தாங்கிக்கொள்வதனால் க்ஷமா (பொறுமை மிக்கவள்) எனவும், சுபத்தினைக் கொடுப்பதனால் சிவா எனவும், அகில உலகினையும் தாங்குவதன் காரணமாக தாத்ரீ எனவும், வேள்வி யாகங்களில் மனமுவந்தளிக்கப்படும் ''அவி''ப் பொருட்களையேற்று அருளுவதனால் ஸ்வாஹா எனவும் முன்னோர்களாக பித்ருக்களுக்கு - தென்புலத்தாருக்குச் செய்கின்ற சிராத்தம், தர்ப்பணம் ஆகியவற்றை ஏற்கும் வேளை ஸ்வதா எனவும் பலவிதமான திருக்கோலங்களில் தோன்றிடுமன்னையே! வணக்கம் என்றும்

'த்ரிசூலம் பாதுநோ பீதேர் பத்ரகாளி நமோஸ்துதே'

உமது திரிசூல ஆயுதமானது எங்களை பயங்களிலிருந்து காக்க வேண்டும் தாயே! பத்ரகாளி!! வணக்கம்' என்றும், தேவியானவர் தன்னைப் பலவாறு போற்றித்துதித்த தேவர்களை நோக்கி " அசுரர்கள் அரக்ககுணமுடையோரால் துன்பங்கள் அழிவுகள் ஏற்பட்டு

அவை உச்சக்கட்டத்தினையடையும் வேளைகளில் நானே பல வித உருவங்களில் அவதரித்த எதிரிகளையழித்து அருள்புரிவேன்'' எனத் திருவாய் மலர்ந்தருளியதாகவும் தேவியின் பெருமைகளையும், அருட்செயல்களையும் பலவாறு போற்றிப்புகழ்ந்து துதிக்கும் சப்தசதீ (எழுநூறு பாடற்றொகுதி) எனும் மந்திரசக்திவாய்ந்த நூலான தேவீமாகாத்மியம்' எனும் நூல் மிக விரிவாக விதந்தோதுகின்றது.

மேலும் அம்பிகை சண்டன் முண்டன் என்ற அசுரர்களை அடக்கியருளியதனால் சாமுண்டா, சும்பாசுரனை அழித்தருளியதனால் காளி, மகிஷாசுரனை யடக்கி மஹிஷாசுரமர்த்தினி என்றும் பல திருக்கரங்கள் தாங்கி பலவித கோலங்களில் தோன்றத் திருவருள் புரிந்துள்ளாள்.

எனவே இயற்கையுருவிலே பாரெங்கும் பரந்து பட்டு விளங்கும் பரமனுடன் இணைந்து தாயாகி அகிலலோகத்தினையும் தனது அருளாட்சியின் கீழ் தண்டித்தும் நல் வழியொழுகச் செய்தும், அசுர சக்திகளை அடக்கப்பல பெயர்கள் பல கோலங்கள் தாங்கிக்காட்சி தருகின்றவளுமான அம்பிகை தக்ஷிணைகைலாசமெனப் புகழ் மிக்கதும் தேவார திருப்புகழ் பாடப்பெற்றதும், கோணேஸ்வரப் பெருமான் அருளாட்சிசெய்வதும், இயற்கைத் துறைமுகமூலம் உலகப்புகழ் பெற்றதுமான திருக்கோணமலை எனுந் திருத்தலத்தினிலே அடியவர் களுக்கு அருள்புரிவான்வேண்டித் தான் தோன்றி மூர்த்தியாக தான் தோன்றீஸ்வரியாக எழுந்தருளிக் கண் கண்டதெய்வமாக - கருணைக்கடலாக பத்ரகாளீ எனுந் திருக்கோலத்துடன் பேரருள் பாலித்து வருகின்றாள்.

பத்திரகாளியம்மன் வீற்றிருந்தருள் புரியும் இவ்வாலயத்தைப் புனருத்தாரணஞ்செய்து கண்ணையும் கருத்தையும் கவரும் பேசும் பொற் சிலைகளுடன் கூடிய மாபெரும் ராஜகோபுரத்தையும் புதிதாக அமைத்து விரைவில் மஹா கும்பாபிஷேகம் நிகழுமிப்புனித நன்னாளினிலே அம்பிகையின் புன்சிரிப்புத்தவழும் திருமுகத்தை நேரில் கண்டுதரிசித்தும், இயலாதவர்கள் மனக்கண்களால் தரிசித்துப் போற்றியும், அம்மன்மீது பல அருளாளர்கள் புனைந்து ஏத்திப்பாடிய பாக்களை மனதாரப்பாடிப்பணிந்தும் அன்னையின் திருவிளையாடல் களை உளமாறக்கேட்டும் அவளருளாலே அவள்தாள் பணிந்து பத்ரகாளியம்மனின் திருவருளினாலே சகல நலன்களையும் பெற்றுப்பூரணமான ஆனந்த வாழ்வு பெற முயலுவோமாக.

**நாதவிந்து கலாதீ நமோ நம என்ற மெட்டு**

**தேவ தாநவ முனீட்யே நமோ நம**<br>
**மந்த ஹாஸ முகாப்ஜே நமோ நம**<br>
**பக்த பாலன சித்தே நமோ நம - ஜய காளீ!**<br>
**காமிதார்த்த சுபூர்ணே நமோ நம**<br>
**சர்வ கஷ்ட விநாசே நமோ நம**<br>
**துஷ்ட சித்த நிஹந்த்ரீ நமோ நம - ஜயஹே காளீ!**<br>
**நிம்ப பத்ர ஸுபூஜ்யே நமோ நம**<br>
**த்யாக ராஜ ஸுவந்த்யே நமோ நம**<br>
**கோணமாமலை வாஸே நமோ நம - பாஹிபத்ரேசீ!!**<br>
**(ஆக்கம் - பூரண தியாகராஜ குருஃ)**

(ஈட்யே - பூசிக்கப்படுகின்றவளே! முகாப்ஜே - தாமரை முகத்தாளே! நிஹந்த்ரீ - அழிப்பவளே!, ஸுவந்த்யே - நன்கு போற்றப்படுகின்றவளே பாஹி - காத்தருளுவாய்! பத்ரேசீ - பத்திரகாளியே! நிம்ப - வேம்பு)

தேவர்கள், அசுரர்கள், முனிவர்களால் போற்றப் படுகின்றவளே போற்றி! போற்றி!! புன்னகை தவழும் தாமரை முகத்தினளே! பக்தர்களைப் பரிபாலிக்கும் கருத்துடையாய்! பத்திரகாளியம்மையே! வெல்க! விரும்பியபேறுகளை நிறைவாக ஈந்தருளும் அன்னையே! துன்பங்களையெல்லாம் அழிப்பவளே! தீய எண்ணங் கொண்டோரைத் தண்டித்தருளும் மாதாவே! காளியம்மா! வெல்க! வெல்க!! வேப்பிலை முதலிய பத்திரபுஷ்பங்களால் நன்கு பூசிக்கப்படும் தாயே! தியாகராஜ குருவினால் பாமாலைபுனைந்து பரவப்படும் அன்னையே! திரிகோணமலை எனும் தலத்தில் எழுந்தருளி அருள்மாரி பொழியுந்தாயே! பத்ரகாளியே! எம்மைக்காத்தருள் புரிவாயே! என்பது இச்சுலோகத்தின் பொருள்.

'ஸர்வே ஜநா: ஸுகிநோ பவந்து''<br>
மாந்ததரனைவரும் இன்புற்று வாழ்க.<br>
சுபம்

## மயில்

**இது முருகப் பெருமானுக்குச் சிறப்பாக உரியது**

**சூரபத்மனை வேலால் பிளந்து, ஞானமீந்து மயிலாக்கி அடிமைகொண்டது.**

**முருகன் அழகுடையவன; அதை விளக்க அழகுள்ள மயிலை வாகனமாக்கினார்; மயிலின் காலின் கீழ்ப் பாம்பு இருக்கிறது; அது சத்தியைக் குறிப்பது; சத்தியைக அடக்கி ஆளும் சத்தி வடிவேலன்தான் என்பது.**

**திரோதான சத்தியாய், ஆன்மாக்களின் ஆணவ மலத்தை முதிர்வித்துப் போக்கி, அருட் சத்தியாய் மலத்தை முதிர்வித்துப் போக்கி, அருட்சத்தியாய் நின்று, ஆட்கொள்பவர் தாமே என்பது.**

**பிரணவத்தைப் பீடமாய்க் கொண்டு மேலாய் விளங்குபவர் தாமே என்பது.**

**விந்து தத்துவமாகிய சத்தியே உலகத்தை விரித்துக் காட்டுவது; அச்சத்தியின் விரிவை விளக்கவே மயில் தோகையை விரித்த வாகனமாய் இருப்பது என்று இன்னோரன்ன பல கருத்துக்களைக் கூறுவர்.**




# ஓம்
# திருக்கோணமலை பத்திரகாளிகோவில் மஹா கும்பாபிஷேகம்
# ஒரு நோக்கு

ஸாகித்ய சிரோமணி
**சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி குருக்கள்**
கோவை ஆதீனம்

நமோ தேவ்யை, நமஹா தேவ்யை
சிவயை சததம் நம: நம: பிரகிருதத்தியை பத்ராயை
நியதாஸ் பிரணதாஸ்மதாம்
ஸ்ரீமாத்ரே நமஹ

**எல்லாம்** வல்ல அருள்மிகு தட்சண கைலாய **கோணாசலத்தில்** உறையும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கும் புதிதாக சிற்ப சாஸ்ரோத்தமாக அமைக்கப்பெற்ற திரிதள விமான கற்பக்கிரகமும், அதிசுந்தர சப்ததள கம்பீரமான இராஜகோபுரத்திற்கும் நிகழும் ஸ்வத்திஸ்ரீ விக்கிரம வருஷம் உத்தராயணமும் தைமாதபூசநட்சத்திரமும், சித்தயோகமும் குருஹோரையும், ராஜதகுணவேளையும், மீன லக்கின சுபமுகூர்த்தத்தில் அம்பாளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் நவகுண்ட பட்ஷ மஹா கும்பாபிஷேகம் செய்ய அம்பிகையின் அருள் நோக்கம் கிடைத்த மையினால்; ஆலய அறங்காவலர் பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக்குருக்கள் ஐயா அவர்கள் தனது குருவும், பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களை பிரதம குருவாகக் கொண்டு கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய பலவழிகளிலும் அயராது பாடுபட்டுவரும் தினத்தில் அம்பிகைக்கு கும்பாபிஷேகக் கிரியைகளை ஆரம்பிக்கும் உரிய நேரமும் கிடைத்தது.

அன்று விக்கிரம வருஷம் தைத்திங்கள் காலை 16ம் நாள் 9.30 மணிக்கு அறங்காவலரும், பிரதம குருவும், மற்றும் பல சிவாச்சாரியர்களும் ஆலயத்திற்கு மங்கள வாத்தியங்களும் பலவிதமான உபசாரங்களோடு அழைத்துவர முதலில் எடுத்தகாரியம் சிறப்பாக நிறைவேற முந்தி முந்தி விநாயகனார் ஆலயத்தில் சிறப்பு பூஜைகளும் நிறைவு செய்து விநாயகரிடம் அனுமதி பெற அவன் தாள் வணங்கும் காட்சியானது விழாவின் சிறப்புக்கு முன்பாக கட்டியம் கூறுவதுபோல அமைந்தது. தொடர்ந்து அம்பாள் ஆலயத்தை அடைந்ததும் தகுந்த முறையில் சிவாச்சார்ய பாதபூஜை முதலான உபசாரங்களும், மங்கள வாத்யங்கள் முழங்க காளி அம்பாள் முதல் எல்லா தெய்வங்களிடமும் வழிபாடு செய்து 9.30 மணியளவில் பிரதிஷ்டை ஆரம்பிக்க வேண்டி ''காலதேச வர்த்தமானங்களையும் எஜமான் முதலானோரின் பிரார்த்துவ ஆகாமிய வர்த்தமான அந்தக்கரண முக்கரணங்களினாலும் ஆத்மாவின் பிறவிப்பயனை சிந்தித்து பஞ்சாங்கங்களில் கூறப்பெற்று மஞ்சலினால் விநாயகர் வழிபாடு நடாத்தி விநாயகருக்கு பிரீதி செய்ய பஞ்சபூதங்களின் வழிபாடு செய்யப்பட்டது.

குறிப்பாக பிருதுவி தத்துவத்தில் கந்தமும், ஆகாச தத்துவத்தில் ரூபமும் அக்கினி தத்துவத்தில் தீபமும், அமிர்தத்தினால் நெய்வேத்தியமும், தத்துவாததமாக விளங்குபவரால் சகல உபசாரங்களும் இராச உபசாரங்களுமாக கீதமும், தாளவாத்தியமும், கீதத்தில் நாட்டையில் விநாயகரே சிரம் அசைத்து மகிழ்ந்தபோது அவரிடம் குறிப்பறிந்து "அம்பாளுக்கும் கற்பக்கிரக திரிதள விமானத்திற்கும், தப்ததள இராஜகோபுரத்திற்கும் ஜீரணோத்தாரண புனராவர்த்தன அஷ்டபந்தனை கும்பாபிஷேகத்தை செய்யவும், தாங்கள் முன்னின்று "எடுக்குமாக்கதையை" நடாத்தித்தந்தருளவும் இந்தப் பிரதி ஷ்டையின் பலனையும், எமக்கு அருளவும் சபையில் வீற்றிருந்த குருமணிகளிடமும் அனுக்ஞை என்னும் அனுமதி பெறப்பட்டு கிரியாபூர்வமாக, சிவாச்சாரியர்கள் மூர்த்திபர்களை வரித்தல் ஆகியன மங்களகரமாக நடைபெற்றமை நிகழப்போகும் கும்பாபிஷேகத்தை முன்னரே படம்பிடித்துக் காட்டியது.

தொடர்ந்து புண்யாகம், பகாரம், பாவநாசம், நியகாரம், தேசசுத்திதம், ஷகாரம், ஸ்தானசுத்திஸ்சாது என்று புண்ணியாகம் விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே பாவநாசத்திற்கும், தேககுத்திக்கும் ஸ்தான சுத்திக்காகவும் இந்தக் கிரியையும் எங்கெங் கெல்லாமோ சென்று எம்மால் சேகரிக்கப்பெற்ற பொன்னும் பொருளும் சிவ கைங்கரியத்திற்காக அர்ப்பணிக்கப்பெற்ற சிவத்திரவியத் திற்கு சுத்திமுதலான உபசாரங்களும் நிறைவேறி இத்திரவியங்கள் யாவும் மங்களகரமாக ஆலயத்தை வலம் வந்து திரவிய சாலையில் இலெட்சுமி கரமாக ஸ்தாபித்தனர்.

**கணபதி ஹோமம்:-** இங்கு பிரசன்னமாயிருந்த விநாயகருக்கு பிரீதியாக எள்ளுருண்டை, அவல், மோதகம், அப்பம், பொரி, அறுகு, பழங்கள் முதலாக அக்கினிக் குண்டத்தை நாற்கோண வடிவில் அமைத்து சூழ சிவாச்சாரியர்கள் விநாயகரின் பெருமைகள் மூலமந்திர மாலாமந்திர ஆகுதி செய்து பிரத்தியட்சமாக பிரம்மச்சாரிய அந்தணச் சிறுவனை கணபதியாக பூசைசெய்து தாரா ஹோமம் செய்து "சக்தியாஸ - சந்து எஜமானஸ்ய காமா" என்று கணபதி பஞ்சரத்தினமும் இசைத்து சகல விதமான உபசாரங்களுடன் விநாயகரின் அருளுக்குப் பாத்திரமாக்கினர்.

தை மாதம் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் துர்க்கைக்கும் மிக விஸதாரமாக ஹோமம் துர்க்கா சூத்தம் மாலா மந்திரங்கள் என்பனவும் பலவிதமான திரவிய அபிஷேகம் செய்து வழிபாடு செய்தனர். தொடர்ந்து தை 18ம் திகதி மாலை பேரீதாடனத்துக்காக திருநந்திதேவரை பூஜை செய்து கும்பாபிஷேகத்திற்கு தேவர்களை அழைத்து மங்கள கரமாக கட்டியம் கூறி தாள வாத்தியம் செய்யப்பட்டது. பின் கிராமசாந்தி (“கிராமேலா நகரேலா பக்தனே இராஜதானிகே” என்ற விதிவாக்கிய அமைவாக) பூத பைஸாச இராட்சத பிரம்ம இராஜசாதிகள் விலகுதற்கும் பூமியை காக்கும் சேத்திர பாலருக்கு பிரீதி செய்து கிராமத்தை ரெட்சை செய்தனர். தொடர்ந்து யாகபூமியில் தேவர்களை ஆவாகனம் செய்வதற்கு எட்டுத் திசைகளிலும் பலியிட்டு தீபமேற்றி நிவேதித்து சுத்திச தேவதைகளை க்ஷேத்திர பாலகரின் ஆணையால் குறிக்கப்பட்ட இடங்களில் விலகிஇருக்குமாறு பணித்து அவ்விடங்களில் எல்லாம் திக்பாலகர்கள் அட்ட பைசலார்கள் நியமிக்கப்பட்டு உரிய ராகம் பண் தாளம் என்பன இடம்பெற்றன.

ரஷோக்ளஹோமமும் மறுநாள் காலை நவநாயகர் களுக்கு பரீதியாக நாளும் கோளும் நாம அம்பாளுக்கு செய்யப்போகும் கிரியைகளிள் சுமூகமாக இருக்க அருள் வேண்டப்பட்டது. திஸா ஹோமமாக நான்கு திசைகளிலும் அஸதிராங்கிஸை பூசை ஹோமம் செய்து திசைகளை பண்படுத்தினர்.

லோகரட்சகநாயகி திருமாலுக்கும் இலட்சுமி தாயாருக்கும் சுதர்ஸன ஹோமமும், இலெட்சுமிஹோமமும், ஏகாதிஸ ருத்திர ஹோமமும், சிறப்பாக கௌரி அம்மா சமேத கேதாரகௌரீஸ்வரருக்கு நடைபெற்று இச்செயல் கௌரி காப்பு வைபவத்தினை நினைக்க வைத்தது.

தை மாதம் 21ம் நாள் சனிக்கிழமை காலை யாகபூமியை புனிதப்படுத்துவதற்காக வாஸ்து சாந்தி என்னும் சாந்தியால் சகலதோஷங்களையும் அக்கினியால் தகிர்த்து புனித பூமியில் யாகத்தைச் செய்வதற்கும் மண்ணெடுத்தலாகிய மிருத் சங்கிரகணம் என்னும் கிரியை வாஸ்துவினால் எரிக்கப்பட்ட பூமியில் பூமாதேவியை ஆவாகித்து கங்காதிபுனித நதிகளினால் புஸ்பயாக்கி யாகத்தில் பிரதான சிவாச்சாரர்களின் கிரியா பாதத்தால் பூரணப்படுத்தினர்.

தை 22ம் திகதி ஞாயிறு பகல் 12.00 மணிக்கு புதிதாக நிர்மாணித்த விமானங்கட்கெல்லாம் தூபி ஸ்தாபனம் என்னும் முடிவைத்தல் அயராது உழைத்த தேவசிற்பிகளால் நிறைவு செய்யப்பட்டு ஆலயம் முழுவதும் பக்தர்கள் நிறைந்து அம்பாளின் நாம சங்கீர்த்தனமும் அரோகரா என்னும் மகிழ்ச்சி ஆரவாரமும் வானளாவி உயர்ந்த கோபுரத்தையும் மிஞ்சிவிட்டன.

அன்று மாலை அம்பாளின் கிழக்கு வாசலில் பிரமாண்டமாக அமைக்கப்பெற்ற நவகுண்டங்களுடன் கூடிய கலாசூத்திர யாகசாலை பதினாறு தம்பங்கள் துவாரபாலகர்கள் நான்கு கலைகள் நான்கு வேதங்களையும் திக்பாலகர்கள் சூரிய சந்திரர்கள்; தத்துவங்கள் மந்திரங்கள் என்பன அமையப்பெற்ற யாகத்தை யாகேஸ்வரரும், யாகேஸ்வரியும் அறிவு கோலாக ஞானகட்சம் ஏற்று வீற்றிருந்தனர். இதற்கு ஒப்பாக தவசாதித்தியர்கள் ரோஹினி கிருத்திகையுடன் கூட சந்திரன் பாலிகைக்கு அதிபதியாக அழைத்து மூலபாலிகை யிட்டு கும்பாபிஷேக கிரியை நிறைவு வரையும் உலக பந்தங்களில் நின்றும் வேறு படுத்தி காத்து உறுதிபூண்டு கங்கணம் பொன் வெள்ளி நூல் முதலியன கொண்டு காப்புக்கட்டிக் கொண்டனர். அத்தருணம் யாகசாலை ஓர் பூலோக கைலாசமாக தெட்சணகைலாயத்தில் அந்தணர் கூட்டமும் எஜமான் பிரதம குரு சந்திரன் ஐயாவும் சர்வ போதகமாக வந்திருந்த பழுத்த முனி புங்கலர் போல முதற் குருக்களும் கும்பாபிஷேகப் பிரதம குருவும் நடுநாயகமாக காட்சியளித்தனர்.

மற்றும் மூவவருக்கும் சின்ன அம்பாளென அழைக்கப்படும் புராதன உற்ஸவ காளி அம்பாளுக்கும் விமானம், கோபுரம், விநாயகர், லக்குமி, வைரவர், ஆகிய தெய்வங்களுக்கெல்லாம் ஆலயத்தின் வடபுறத்தில் ஏக குண்டங்களுடன் கூடிய யாகசாலைகள் அமைக்கப் பட்டிருந்தன.

ஆலயத்தின் உட்புறத்தில் பிரசன்ன அபிஷேகம், பிரசன்ன பூஜை முடித்து பாலாலயத்தில் அம்பாள் வீற்றிருக்கும் போது நடுநாயகமாக கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய குடங்கள் வரிசையாக வேண்டிய திரவியங்கள் எல்லாம் முறைப்படி வைக்கப்பட்டு புனித கங்கா தீர்த்தமும் சிறப்பாக கொண்டுவரப்பட்டிருந்தன. ஒவ்வொரு சிவாச்சாரியர்களும் தமக்கு நியமிக்கப்பட்ட யாக அதிபர்களாகவும், நவகுண்ட மூர்த்தியர்களாகவும் வரிக்கப் பட்டனர். வைக்கப்பட்ட கலசங்களெல்லாம் முறையாக குருமார்கள் பஞ்ச சுத்தியுடன் சர்வ சாதகரின் பிரதிஸ்டா சங்கற்பமும் தள்ளாத வயதிலும் புன்னகையும், அர்த்த பாவமும் ததும்ப கும்பாபசனை தெய்வீகப் பொலிவுடன் மூர்த்திகளின் சொர்கமாக்கியமை கற்றுணர்ந்த சபாரமியர்களையும், கற்றுணர்ந்த அந்தணர் சிரேஷ்டர்களையும் மீண்டும் அசைபோட வைத்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

தொடர்ந்து கும்பங்கள் பாலாயத்தில் வைக்கப்பட்டு அங்கே விம்பத்தில் எழுந்த கலைமகளை எல்லாம் கும்பங்களிலே ஆவாகனம் செய்ய கலா, ஆகார்ஷ மந்திரம், வர்னம், பதம், புலமை, தத்துவம், மூர்த்தியாகியன முறைப்படியாக ஆவிர்சகத்தும், சந்திரன் குருக்கள் ஐயா தாங்கள் பாரம்பரியமாக வழிபட்ட அம்பிகையின் உருவத்தை நினைத்து ஏகபத்திராம் என்று சொல்லத்தொடங்கியவுடன் அம்பாளும் கருணை கூர்ந்து அங்கே போடப்பட்ட நாடிவழியாக கும்பத்தில் உறையும் நிலை சாக்கிரம், சொப்பனம், துரியம், துரியாதீதம் என்னும் நிலைகளுக்கெல்லாம் அப்பாறபட்டு எல்லோரும் அம்பாளுடன் ஒன்றிவிட்டனர். பின்பு அம்பாள் யாகசாலைக்கு எழுந்தருளுவதற்காக யாத்திரா ஹோமம் முதல் பல வகைத் தானங்களும் கொடுக்கப்பட்டு மங்கள வாத்தியங்கள் வேத திருமுறை பாராயணத்துடன் வலமாக

யாகசாலைகள் அந்தந்த செயல்களை உரிய யாகத்தினுள் பிரவேசித்தனா். முறையாகவும் பரிவார தெய்வங்கள் மற்றும் ஒன்பது குண்டங்களிலும் ஆகவனியம், தட்சனாக்கினி, சாருகபா்திகம், கேலனம், சாமானனியம், பாலவிருத்த யோசன, சிவாக்னியாக குண்டங்களில் அக்கினி வளா்க்க ஆயத்தமாகினா்.

இந்நிலையில் உட்பிரகாரத்தில் தீபஸ்தாபனம், யந்திரம், விம்பஸ்தாபனத்திற்காக ஆயத்தங்களை பார்க்கும் போது எல்லா சுபாசினிகளும், நவசக்திகளாக மங்களகரமான அல்ங்காரங்களுடன் அட்ட லக்குமியையும் பூஜித்து வலமாக என்றும் பிரகாசிக்க ஒளி வீசும் தீபங்களை பிரதிஸ்டை செய்தனர். மேலும் குருமார் ஆதார திசைகளில் இரத்தின நியாசங்கள் செய்து நவரத்தினங்களை வேதமுறையாகப் பதித்து யந்திர பிரதிஸ்டை செய்தனா். இரவு 9.00 மணிமுதல் 10.30 மணிக்குள் நன் முகூர்த்தத்தில் வரும் அம்பாளும் தனது பரிவார தேவதைகளும் மந்திர சிம்மாசனத்தில் அமா்ந்த காட்சியோ பெரும் ஆனந்தம் இந்நிலையில் அஷ்டபந்தமை சாத்தி புதிய கருவறையில் ஸ்தாபித்து விட்டனா்.

**எண்ணெய்க்காப்பு:-** மறுநாள் காலை 7.00 மணிமுதல் எண்ணெய்க்காப்பு என்றதுமே பக்தா்கள் கூட்டம் அலை மோதியதே பெரும் வியப்புத்தான். இது இரண்டு நாட்கள் நீடித்தது. மறுபுறம் யாகசாலையில் பஞ்சாசன வேதிகையில் அனந்தாஸனமாக எட்டு சா்ப்பங்களும், எட்டு சிங்கங்களோடு சிம்மாசனமும், 8 யோகிகள் தவம் செய்யும் யோகாசனமும், 9 தாமரைகளினால் ஆன பத்மாஸனமும் விமலாசனமுமாக ஆசனரூப நவ தானியங்களின் மேலே அம்பாள் கொலுவீற்றிருந்து 6 கால பூசைகளையும் ஏற்றுக் கொண்டாள். இங்கே அம்பாளுக்கு பஞ்ச பூதங்களைக் கொண்டு பஞ்ச உபசாரங்களும் ஆசனம் முதலான 16 உபசாரங்களும் (சோடச உபசாரங்கள்) விசேடமாக அம்பாளை 64 உபசாரங்கள் செய்து, செய்வித்து ஆனந்த பரவசம் அடைவது மரபு (64 உபசாரங்களும் இராஜஉபசாரங்களாக சமா்ப்பிக்கப்பட்டமை ஒரு இராஜாங்கத்தின் தா்பாா் போன்றிருந்தது.

பின்பு மூா்த்திகளை பிம்பசுத்தி செய்து பலவிதமான திரவியங்களும் வேதமந்திரங்களோடு சுத்தி செய்து விம்பத்தில் முன்பு போல சகல சடத்துவங்கள் தத்துவங்கள் பாதபூஜை பிரசன்னபடபூஜை காப்பாலன முதலானபூஜை என்பன முறையாக நிறைவேற்றி யாகபூஜையிலே கிடைக்கக்கூடிய 84 திரவியங்கள் யாவும் தவறாமல் ஆகுதி செய்யப்பட்டிருந்தது.

இரவு மூல மூா்த்திக்கும் குண்டகமல வேதிகை கும்பத்தை தொடா்பு படுத்தி நாடி மூலம் இடை பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்றும் பிரம்மா, விஷ்ணு, ருத்திர இச்சா ஞானா கிரியா சக்திகள் மூன்று பாகமாய் பரிசாகுதி என்னும் கிரியை குண்டத்திலிருந்தும் கும்பத்திலிருந்தும் மூா்த்தியிடம் தொடா்பு செய்து ஆத்ம நித்தியா சிவதத்துவங்கள் ஒவ்வொன்றிலும் மூா்த்தி மூா்த்தீஸ்வரங்கள் யாவரும் மூலமூா்த்தியில் ஒடுங்கியவுடன் அம்பாளின் பிரத்தியேகமான ஒரு தேஜசை அவதானிக்க முடிந்தது.

இந்நிகழ்ச்சி பக்குலான் மாக்களுக்கெல்லாம் பிறவிப்பயன்கிட்டியது என்பதில் சந்தேகமில்லை.

**கும்பாபிஷேகம்**

குறிப்பிட்ட நாளும் கோளும் அம்பாளின் திருக்கண் நோக்கிற்கு அகப்பட அன்று தைப்பூசமும் குருவாரமும் குருவேளையில் அதிகாலை யாககுண்டங்களில் எல்லாம் மகா பூரணாகுதிக்காக திரு மூா்த்திகளின் அனுமதி பெற்று சகல வாத்தியங்களும் முழங்க ஆலயத்தை வலமாக வந்து பூரணாகுதியை சமா்ப்பித்து உபசாரங்கள் பலிகள் என்பன கொடுத்து மகா தீபாராதனை செய்யும் போது கதிரவனின் கிரணங்கள் பரவியது போல ஜனசமுத்திரம் இவற்றுள் திளைத்து நின்றது நவசக்தி மூா்த்தமாக தீபாராதனைகளும் நாத கீத திருமுறைத்தோத்திரங்கள் ஆசீா்வாதங்கள் திருநடனங்கள் எல்லாம் சிறப்பாக நிறைவேறியது முகூா்த்தமும் பரீட்சிக்கப்பட்டு விமானங்கள் கோபுரங்கட்கெல்லாம் சிறப்பாக கும்ப தீா்த்தம் அபிஷேகம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் தெய்வசானித்தியம் பெற்றது.

அம்பிகையின் மகா கும்பாபிஷேகத்திற்கான பிரதான யாகசாலையில் ஸ்தாபிக்கப்பட்ட கும்பங்கள் எல்லாம் நந்திதேவராக ஒவ்வொரு குருமாா்களும் பஞ்சாங்க பூசணமாக மஞ்சள் பட்டாடையுடன் சிரசிலே பூஜித்த கும்பங்களை வேத தோத்திர நாத ஒலி வானைப்பிளக்க ஜனசமுத்திரத்தின் மத்தியில் கும்பங்கள் மிதந்துவர யானை வேளமுகத்தான் அழைத்துச் செல்லும் போது திருகோணமலை தலத்தை புகழ்பாடும் கும்மி, கோலாட்டம் என்பன சிறுமிகளால் அபிநயத்துச் சென்றனா். இவ்வகையான உபச்சாரங்களோடு கோபுர வாசலில் பாதபிரச்சாடனம், புஸ்பாஞ்சலி, ஆலாத்தி செய்து ஒவ்வொரு ஆதாரங்களையும் கடந்து அந்தந்த தேவா்களையும் தரிசித்து கருவறை அடைய பெரும்பாடு பட்டனா் அங்கே நாதாஞ்சலி செய்வோா் ஒரு புறமும் கருவறையில் கும்பத்திலிருந்து மூா்த்தியாகிய காளி அம்பாளின் ஒவ்வொரு ஆவாரண தேவதைகளை நியாசமூலம் பச்சிம சந்தான முறையாக உரிய நேரத்தில் பிராணப்பிரதட்டையோடு கூடி அம்பாளை தியான ஆவாகனம் செய்யும் போது ஆலய அறங்காவலா் தனது பிறவிப்பயனுட கிருதயத்தில் சதா வழிபடும் அம்பாளை தியான சுலோக மூா்த்தியில் தியாபிஸ்த கும்பநீரை அபிஷேகம் செய்யும் போது தெட்சணகைலாயம் கோணமாமலையே ஆனந்த பிரபாகத்தில் நனைந்துவிட்டது.

கண்களிரண்டும் அலனகவன் கண்டு களித்தது போல தன்னை மறந்த நிலையிலும் நிதானம் தவறாத கருமமே கண்ணாயின் அம்பிகையும் அடியாா்களின் அன்புக்கும் கட்டுண்டு அனைவரதமும் சாணக்கியமாக (வீற்றிருந்தாள்).

எப்பொழுதும் அவள் புன்சிரிப்பு ஒன்றே போதும் முகாரலிந்தம், பகாரலிந்தம் என்பது போல மகா சாந்தி வைபவம் எல்லோா் மனங்களிலும் குடிகொண்ட அம்பாளில் திருமுகம் மலா்ந்தது. சூரியா் சந்திரா் உள்ளழவும் சானித்தியமாக அருளவேண்டும் என பிராா்த்தித்து ஆனந்தப்பரவசம் அடைந்தனா்.

அன்னை சக்திமுகத்தானது மகத்துவமும் கூட கும்பாபிஷேக தரிசன பலனை தன் வாழ்நாளில் இடைவிடாது சிவாா்ச்சனை செய்த பலனைப் பெறலாம். ஆகவே இக்கைங்கரியங்களுக்கு மனத்தால் வாக்கால் மெய்யால் பொருளால் திருப்பணி முதல் சரியைத் தொண்டு செய்தனா் எல்லாரும் அம்பாளின் திருவடிக்கீழ் என்றும் பிறவாத முத்தி இன்பம் பெற்று இனிது வாழ்வாா்களாக.

என்றும் புவனேஸ்வரி பீடத்தில் அருளாட்சி செய்யும் நாகபூஷணித்தாயின் பாதகமலங்களை வணங்கி அமைகின்றேன்.

❖❖❖❖❖❖❖

# பூத்து நிற்கும் பேரருள்

வித்துவான்
**திருமதி. வசந்தா வைத்தியநாதன்**

**"அன்னை மணிக்கையின் ஆணையைக் காட்டினால்
அனலையும் விழுங்கி விடுவோம"**
என்பது வீரத்திருமகன் பாரதியின் மணிவாக்கு

"மாத்ரு தேவோ பவ" "பித்ரு தேவோ பவ" ஆசார்ய தேவோபவ அதிதி தேவோ பவ" என்பன உபநிடதக் கட்டளைகள்.
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
"தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை"
"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

இந்த மெய்மொழிகள் தியாகத்தின் தனி விளக்கமாம் தாயைக் குறித்த தனித்தொடர்கள். பூரணமான தாய்மை, பூரணமான அன்பு, பூரணமான பொறுமை, பூரணமான தியாகம், இவ்வார்த்தைகள் உருப்பெறும் பொழுது அங்கு தாய்மை பளிச்சிடுகின்றது. பரிணமிக்கின்றது. நீதி சாஸ்திரங்களில் சிறந்த மனுதர்மம் கூட ஆசிரியனை விட 10 மடங்கு ஆசார்யன் உயர்ந்தவன், ஆசார்யனை விட 100 மடங்கு தந்தை உயர்ந்தவன், தந்தையை விட 1000 மடங்கு தாய் உயர்ந்தவள் என்ற கருத்தை தெரிவிக்கின்றது.

"உபாத்யாயன் தசாசார்யா
ஆசார்யானாம் சதம் பிதா
ஸஹஸ் ரந்து பித்ரன் மாதா
கௌரவேண த்ருச்யதே"

மதிப்பிலும், மரியாதையிலும் பல மடங்கு தாயே உயர்கிறாள். "தாயின் திருவடியில் சுவர்க்கம் மலர்கிறது என்பது நபிகள் பெருமானாரின் திருவாக்கு. தாயை தெய்வமாகக் கருதும் பொழுது ஏன் தெய்வத்தை தாயாகக் கருத முடியாது? அகம் நெகிழ்ந்து ஒரு கணம் குறைகளைச் சொல்லிக் கதறவும், பக்தன் சிவன் என்னும் தந்தையை விட 'சக்தி' என்ற தாயிடமே நெருக்கம் அதிகம் கொள்கிறான்.

அம்பிகையை ஆயிரம் நாமங்களால் பாராட்டிப் புகழ்ந்த வசினீ முதலிய வாக் தேவதைகள் முதலிலே கூறச் சிறந்த நாமத்தை அவைகளிலிருந்தும் தேர்ந்தெடுத்தார்கள் அதுதான் ஸ்ரீ மாதா என்ற ஒப்பற்ற மந்திரம் துன்பம் வரும்பொழுது நம்மையும் அறியாமல் நமது வாயிலிருந்து வெளிவருவது "அம்மா" என்ற சொல் தயையின் உறைவிடமான அத்தாயை உலகெலாம் பூத்தவளை தாயாகக்கருதி வணங்குவது மற்றொரு தாயின் கருவினுட்ச் செல்வதைத் தடுக்கும். வயிற்றில் கருவாகத் தங்கிய நாளிலிருந்து வெளியேறும் வரை மரணத்திற்கு ஈடான துன்ப வாதனையைத் தான் அனுபவித்த போதிலும், அச்சிசுவினைக் காப்பாற்ற தன் சுகமனைத்தையும் துறக்கின்ற ஊனிற்கு உறவான அன்னையிலும், அந்த உயிருக்குள் உயிரான அகிலாண்டேஸ்வரியின் கருணை எழுத்திற்கும், சொல்லிற்கும் அடங்காதது.

"ஈயறியாப் பூந்தேனே" எழுத்தறியா மறைப்பொருளே! காயறியாச் செழுங்கனியே' கற்பகத்தின் பசுங்கொழுந்தே! தாயறியாக் கருவிலிருந்து உயரூட்டும் தாய்த்துணையே நீயறியாச் செயலுண்டோ நிகில பரம்பர மூர்த்தி! என்று போற்றி வழுத்துவதல்லாது வேறு செய்வகை அறியோம்.

### *வேதகாலம்:-*

வேத காலத்திலேயே சக்தி வழிபாடு இருந்தது என்பதற்கு 'ரிக் வேதத்தில் சில குறிப்புக்கள் உண்டு.

தெய்வங்களின் குறிப்புக்கள் காணப்படுவதிலிருந்து ரிக்வேத காலத்திற்கும் முன்பிருந்தே சக்தி வழிபாடு - தாய்தெய்வ வழிபாடு நிலவியிருப்பதை உணரலாம். வாக் தேவியை முழுதும் புகழும் சூத்திரம் ரிக்வேதத்திலே உண்டு.

கேனோபநிடதம் உமாதேவியின் துணையினால் இந்திரன் பிரம்மத்தை அறிந்தான் என்று கூறுகின்றது. வாஜசனேய சம்ஹிதையில் உமை உருத்திரனின் சகோதரியாகச் சொல்லப்பட்டிருக்கின்றாள். ஸ்ரீ கண்டரும், பட்ட பாஸ்கரரும் "ஓம்" என்ற சொல்லினின்று தோன்றியதே 'உமா' உன்ற சொல் என்பர்.

### *தொல்லியல் ஆய்வு:-*

தொல்பொருள் ஆய்வுத்துறைப் பேரறிஞர் சர் ஜான் மார்ஷல் சிந்து வெளிப்பகுதியில் கிடைத்த பெண் தெய்வச் சிலைகளை ஆராய்ந்து கி. மு. 4000ற்கும் முற்பட்ட காலப் பழைமையை உடையது "சக்தி வழிபாடு "என்று கூறி இருக்கிறார். மேலும் சிந்து வெளிப்பகுதியில் கிடைத்த தேவியின் சிலைகளைப்போன்றே, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்பிரஸ், எகிப்து, கிரீஸ் முதலிய இடங்களில் கிடைத்த சிலைகளும் "சிந்து நதி தீரத்திலும் சுமேரியாவிலும் இவ்வழிபாடு ஒன்று போலவே இருப்பது வியப்பதற்குரியது என்பார் வி. ஆர். தீட்சிதர். இரு நாடுகளிலும் தேவியின் வாகனம் சிங்கம் அது போலவே சிவனது வாகனம் காளையாக காணப்படுகின்றது.

போருக்குரிய தெய்வம் ஆகி அவள் கன்னியாகவும், மனைவியாகவும், மலைகள் காடுகளிலே வசிப்பவளாகவும் கருதப்படுகின்றாள். இதனால் சக்தி வழிபாடு உலகந்தழீகிய வழிபாடாகக் காணப்படுகிறது.

**தந்திர நூல்களின் சக்தி**

கி. பி. 4ஆம் நூற்றாண்டிற்குப் பின் சக்தி வழிபாட்டை விளக்கிப் பல தந்திர நூல்கள் எழுந்தன. அவற்றின் எண்ணிக்கை 64 என்று கூறுவர். வேதநெறிகளுள் கருமகாண்டம் விதித்த சடங்குகளின் வளர்ச்சியைத்தான் பெரும்பாலான தந்திரநூல்கள் சுட்டுகின்றன. சியாமள ரகசியம், சாரதிலகம், காளிகாதந்திரம், குலசூடாமணி, குலார்ணவம் போன்ற சாக்த தந்திரநூல்கள் சாக்த மதப்பிரிவாகிய வாமாசாரம் தக்ஷிணாசாரம் பற்றி சிறப்பாக கூறுகின்றன.

**ஆதிசங்கரரின் தொண்டு**

அன்னை வழிபாட்டில் ஒளி நெறியை ஊட்டியவர் ஆதிசங்கர பகவத் பாதர். வாம மார்க்கத்திலே கட்டுண்டிருந்த மக்களை அன்பு வழியாகிய தக்ஷிணாசார நெறியிலே இட்டுச்சென்றார். ஸ்ரீ வித்யையின் தத்துவத்தை மக்களிடை பரப்பினார். தேவி உபாசகர்கள் தன்னை தேவியாகவே பாவித்து, தாய்க்குரிய பொறுமை, சகிப்புத்தன்மை, அடக்கம், கருணை முதலியவற்றையே அணிகலன்களாகக் கொண்டனர். லலிதாதியான சுலோகமும்.

"அ ஹமித்யேவ பாவயே பவானீம்'' என்று கூறுகின்றது. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும் இந்த பாவனை நிலையின் அதி உன்னத நிலையை எட்டியவர் இந்த பாவனை யான், எனது என்ற எண்ணம் அடங்க மனம் அடங்கும் மார்க்கத்தைக் காட்டுகிறது.

"யான் எனது என்று அந்த இடமே திருவடியாய்" என குமரகுருபரரும் கூறுவார்.

அடங்காத மனமே ஒருவனுக்கு மரணத்தை உண்டு பண்ணுகிறது - அடங்கிய மனமே அவனை முக்தி நிலைக்கக் கூட்டுவிக்கின்றது.

**அலையு மனத்தை யகத்தடக்கு மவனே சரியை கடந்தோனாம்**
**அலையு மனத்தை யகத்தடக்கு மவனே கிரியை முடித்தோனாம்**
**அலையு மனத்தை யகத்தடக்கு மவனே யோக நற்பரனாம்**
**அலையு மனத்தை யகத்தடக்கு மவனே ஞானியதிசூரன்**

தேகமே யக்ஞசாலை ஞானேந்திரியங்கள் யக்ஞ பாத்திரங்கள் கர்மேந்திரியங்கள் உபகரணங்கள் சுகத்தையும் துக்கத்தையும் சமமாக நோக்கும் சமதிருஷ்டியே தீக்ஷை . இந்திரியங்களுக்கு உரிய தேவதைகளே அந்தணர்கள் ஜீவனே யஜமான் புத்தியே பத்னி கோபம் யாகப் பசு

**யஜதோ புருஷோ யஜமான் புத்திம் பத்னீம்.**
**பரிக்ருஹ்யதாம் தீக்ஷாம் ஸந்தோஷம் தீந்திரியாணி**
**யக்ஞபாத்ராணி கர்கேந்திரியாண் யுபகரணாநி**
**ஸத்ரே சரிரகே தத்தத்தேவதா ஏவத்விஜஞஸ்**
**தடஸ்தா ஏவ யதாதேசம் ப்ரயஜமான மனுயஜந்தே**

என்று கர்போப நிஷதமும் மனம் அடங்க வேண்டும் என்றே உபதேசிக்கின்றது.

ஆதிசங்கரரின் ஸௌந்தர்யஹரி மூகரின் மூக பஞ்சசதி, லலிதாசஹஸ்ரநாமம் இம்மூன்றும் ஸ்ரீவித்தையின் பிரஸ்தானத்ரயங்கள் ஆதிசங்கரர் இமயத்திலிருந்து குமரிவரை சாந்த வழிபாடால் சக்தி வழிபாட்டுமுறையை விதைத்துச் செழிக்கச் செய்தார்.

**உலகின் முதல்:-**

சக்தி தத்துவமே உலகின் முதல் தத்துவம் இதனை அடியொற்றியே ஏனைய தத்துவங்கள் முகிழ்த்தன. சக்தியே நாதம் முதல் மண்ஈறாக முப்பத்தாறு தத்துவங்களோடு இயைந்து நிற்கிறாள். சக்தனாகிய பரமசிவன் நினைத்தவற்றை ஈடேற்றுபவள் அம்பிகையே.

**சக்திதான் நாதம்ஆதி தானாகும். சிவமும் அந்த**
**சக்திதான் ஆதியாகும். தரும் வடிவான எல்லாம்**
**சக்தியும் சிவமும் ஆகும். சக்திதான் சத்தனுக்குச்**
**சக்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாம் ஆம் சக்திதானே**

இதனை மணிவாசகப் பெருமான் திருப் பொற் சுண்ணத்தில்

**"எம்பெருமான் இமவான் மகட்குத்**
**தன்னுடைக் கேள்வான், மகன், தகப்பன்,**
**தமையன் எம் ஐயன் தாள்கள்பாடி''** என்றும்
திருக்கோவையாரில்
**"தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல்**
**தன் ஒரு பாலவள் அத்தனும், மகனுமாம் ''** என்றும்
குமரகுருபரர்
**"கனகமார் கவின்செய் மன்றில்**
**அனக நாடற்கு எம் அன்னை**
**மனைவி, தாய், தங்கை, மகள்''** என்றும்
கூறுவார்கள். அபிராமிப் பட்டரும்
**"தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்**
**அவளே அவர்தமக்கு அன்னையும் ஆகினாள்."**
என்று சக்தியின் ஏற்றத்தையும், முதன்மையையும், குறிப்பிடுவார்கள்.

**முப்பெருஞ் சக்தி:-**

மூவர்க்கும் முதலாகி, முத்தொழிற்கும் வித்தாகி நாவிற்கும், மனத்திற்கும் நாடறிய பேரறிவாய் விளங்கும் அன்னை பகவதி, (தர்மம், கீர்த்தி, செல்வம், ஆளுந்தன்மை, வைராக்கியம், அன்பு, ஆறு செல்வங்கள்)

வீரத்தையும், வெற்றியையும், அருளுவதில் கொற்றவையாகவும், செல்வத்தையும் செழிப்பையும் அருளுவதில் திருமகளாகவும் ஞானத்தையும் பக்தியையும் அருளுவதில் கலைமகளாகவும். இலங்குகின்றாள். வீரம், செல்வம், கல்விமனித வாழ்வின் அடிப்படை தேவைகள், இம்மூன்றினுள் ஒன்று இல்லாவிட்டாலும். வாழ்வு முழுமை பெறாது. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ செயலூக்கம் தேவை. செயலூக்கத்தின் சின்னமேமகிஷாசுரமர்த்தனி. தாமதம், சோம்பல், மடமையை பாதத்தின் கீழிட்டு நிமிர்ந்து நிறகும் ஞானத்தின் பேருரு மனித வாழ்க்கையின் அற்புத விளக்கம்.



சுருங்கக் கூறின் ஒருவனுடைய பிறவியின் இறுதி நிலையிலேயே, இனிப்பிறவாத பெருநிலை வந்துறும் பொழுதே ஒருவனுக்கு சக்திவழிபாட்டில் நாட்டம் ஏற்படுகின்றது. அன்னை வழிபாடே ஒருவனை மிக விரைவாக முக்தி நிலைக்கு இட்டுச்செல்கின்றது. அன்னையின் பதமலர் பணிந்து நலம்பல பெறுவோம்.

## நல்ல காரியங்களைச் செய்ய முற்படும் போது "ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி" என்று சொல்லுவதன் தத்துவம் என்ன? மூன்று முறை சாந்தி என்று சொல்லப்படுவதன் நோக்கம்

மனிதனுக்கு ஒரு வேலையைச் செய்ய பாமர அறிவும். சூட்சம அறிவும் தேவைப்படுகிறது. பாமர அறிவைத் தனது கல்வியினால் பெற்று அவன் ஒருவன் காரியம் செய்ய இறங்கும்போது. அதில் நல்ல பலன் கிடைக்க சூட்சம அறிவை தூண்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. 'ஓம்' என்பது மேலான உண்மைப்பொருளைக் (Supreme Reality) குறிப்பிடுவது. அதைச் சொல்லுவதன் மூலம் மனம் உயர்ந்த நிலைக்கு எழுகிறது.


சாந்தி என்பது அமைதியைக் குறிக்கும் சொல்லாகும். நம்மை வழிபடுத்தும் சக்திகளை. அமைதியைத் தரும்படி வேண்டிக்கொள்வதற்கே 'சாந்தி' என்று சொல்கிறோம். மூன்று முறை சாந்தி என்று சொல்லுவது. நமக்கு தடைகளை ஏற்படுத்தக்கூடிய மூன்று வாய்ப்புகளிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். என்று குறிப்பிடுவதறகே ஆகும். அந்த மூன்று தடைகள் என்ன?

**1. ஆதிதைவிகம் 2. ஆதிபௌதிகம் 3. ஆத்யாத்மிகம்** ஆதிதைவிகம் என்பது மின்னல். இடி. மழை. பூகம்பம் போன்ற இயற்கையினால் ஏற்படக்கூடிய கேடுகள். அதனால் இதைத்தவிர்க்க முதன்முறை 'சாந்தி' என்று சொல்லும்போது. உரக்கச் சொல்லுகிறோம். ஆதிபௌதிகம் என்பது சுற்றிலும் உள்ள சத்தம். மிருகங்கள். பறவைகளால் ஏற்படும் தொந்தரவு. பூச்சிகளின் உபத்திரவம் போன்ற இடையூ றுகளைக் குறிப்பிடுவது. இத்தகைய சூழ்நிலையால் ஏற்படும் தடையை வெல்ல. சற்று மெதுவாகவே இரண்டாவது சாந்தியைக் கூறுகிறோம்.. மூன்றாவதான ஆத்தியாத்மிகம் என்பது நம்முடைய உடலின் நோயாலும். உள்ளத்தின் சஞ்சலத்தாலும் ஏற்படும் தடையைக் குறிப்பிடுவது. இதைக் கடந்து அமைதிப்படுத்திக்கொள்ள மூன்றாவது 'சாந்தி'யை மிக மெதுவான இரகசியமான குரலில் சொல்லிமுடிக்கிறோம். கண்ணை மூடிக்கொண்டு இந்தப் பிரார்த்தனையை. இப்படி முறைப்படி சொல்வதனால். சொல்பவருக்கும் அவரைச் சேர்ந்தவருக்கும் நன்மையும். மன அமைதியும் கிடைக்கும்.

சுவாமி ஏ. பார்த்தசாரதி




# ஸ்ரீ சக்கரம்



ஸ்ரீலஸ்ரீ மு. சுந்தரலிங்க தேசிகர்
"சைவப்பேரறிஞர்" "ஜோதிட சித்தாந்த சேகரம்"
ஆலடி விநாயகர் தேவஸ்தானம்

ஒன்பது சக்கரங்களைக் கொண்டதால் நவயோனி சக்கரம் என்ற பெயர் இதற்கு ஏற்பட்டது. 43 முக்கோணங்களைக் கொண்டதால் திரிசத்வாரிம்சத் சக்கரம் என்று பெயர். தகராகாசம் எனப்படும் இருதயத்தில் வைத்து வழிபடப்படுவது, அன்னையின் மாத்ருகா சக்திகள் இதில் அடங்கியிருப்பதால் மாத்ருகர சக்ரம் எனப்படும்.

ஸ்ரீ சக்கரத்திற்கு பரம மங்கள சக்கரம், சிவசக்தி ஐக்கிய சக்கரம் ஸதானந்த ஸம்பூர்ண சக்கரம் என்ற பெயர்களும் உண்டு.

வைரத்தை எடுத்துக் கொண்டு, பட்டை தீட்டினால்தான் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். இப் பட்டைகளை நன்றாக கவனித்தால் இவை முக்கோணப் பட்டைகளாக இருக்கும். மத்ய பாகத்தில் சிறு சம வட்டம் இருக்கும். பக்கங்களிலுள்ள முக்கோணப்பட்டைகள் 8, 16, 32, 64 என்ற கணக்கில் இருக்கும். பட்டைகள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு பூரிப்பும் அதிகம்; மதிப்பும் அதிகம்; விலையும் அதிகம்.

இந்த வைரத்தை பதிக்கு முன் திரும்பிப் பாருங்கள். அடிப்பாகம் கூராக பர்வதத்தின் சிகரம் போல காணப்படும். இதன் உயரம் அதிகம் இருந்தால் பூரிப்பு அதிகம். ஸ்ரீ சக்ர தத்துவமே இவ்வைரம், ஸ்ரீ சக்கரத்தை அகிலாண்டேஸ்வரிக்கு தாடங்கமாக அமைத்த இரகசியம் இதுதான்.

இந்த ஸ்ரீ சக்கரம் அம்பிகை சூஷ்மதர ரூபம். இதில் பிரதான முக்கோணங்கள் என்பது, மேலே பார்த்து சிவ கோணங்கள் நான்கு கீழே பார்த்து (சக்தி கோணங்கள்) ஐந்து. இம் முக்கோணங்களுக்கு யோநிகள் என்ற பெயரும் உண்டு. பத்தாவது யோநியாக பிந்து ஸ்தானம் விளங்குகிறது. இந்த ஒன்பது முக்கோணங்களில் 43 முக்கோணங்கள் அடக்கம்.

ஸ்ரீ சக்ரம் என்பது தேவியின் ராஜதானி. ஸ்ரீ சக்கரத்தில் பிந்து ஸ்தானத்தில் தேவி ராஜராஜேஸ்வரி வீற்றிருக்கிறாள். ஸ்ரீ சக்கரமே தேவி வாசஸ்தலத்தின் வரைபடம். இதை பிம்ப ரூபமாகக் கொண்டால் மேரு எனப்படும். இரண்டிற்கும் உருவத்தில்தான் வித்தியாசமே யொழிய, வழிபாட்டு முறைகள் மற்ற விஷயங்கள் எல்லாம் ஒன்றே. இதிலுள்ள 43 முக்கோணங்களில், பிந்து மண்டலமாகிய சக்தி மண்டலம் இக்கணக்கில் சேரவில்லை. மேருவின் உச்சியில் முக்கோணத்தின் மத்தியில், புள்ளி போன்று இருப்பதே பிந்து. இது இருக்கும் 43 முக்கோணமே ஸஹஸ்ர தளம்.

இந்த 43 முக்கோணம் என்ன கணக்கு என்பது தெரியவேண்டாமா? இதற்கு திரிபுரோபநிஷத் மூலம் விடை காணலாம்.

ஒருவளாகிய அவள் ஒன்பது சக்திகளாக ஆனாள், இந்த ஒன்பதுடன் 10 இந்திரியங்கள், 5 பிராணன்கள், 5 பஞ்ச பூதங்கள் 10 விஷயங்கள், 4 கரணங்கள் ஆக 43 ஆனாள்.

ஒன்பது சக்திகள்: இச்சா, ஞானம், கிரியா, சத்வம், ரஜஸ், தமஸ், பச்யந்தி, மத்யமா, வைகரி,

பத்து இந்திரியங்கள்: கர்மேந்திரியம் 5; வாக்கு, பாதம் (கால்) பாணி (கை), பாயுரு (ஆஸனவாய்), உபஸ்தம் (குறி).

ஞானேந்திரியம் 5: கண், மூக்கு, வாய், காது, உடம்பு, இவைகள் வேலை செய்தால் தான் கேட்கமுடியும்; பேசமுடியும்; ருசியுணர முடியும்; வாசனையறிய முடியும். இவைகளை நல்லவைகளுக்கும் பயன்படுத்தலாம். ஆனால் ஞானம் ஏற்பட இவை உதவுவதால் ஞானேந்திரியங்கள் என்று பெயர் பெற்றன.

ஐந்து பிராணன்கள்: அவை பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன்.

நான்கு கரணம்: மனம், புத்தி, அகங்காரம், சித்தம். இதில் மனம் ஞானேந்திரியங்களால் உலக விஷயாதிகளைப் பற்றி நினைக்கும். புத்திமனதால் பற்றி, நினைப்பூட்டப்பட்டவற்றை இன்னதென ஆராய்ந்து நிச்சயிக்கும், அகங்காரம் நிச்சயிக்கப்பட்டவற்றை அடைய முயற்சிக்கும், சித்தம் முயற்சிப் பயனை கண்டு சிந்திக்கும்

பஞ்சபூதம்: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்.

ஸ்தூல உடம்பு: நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு என ஐம்பெருங் கூறுகலாகியது. இவைகள் ஒவ்வொன்றும் ஐந்து சிறு கூறுகளைக் கொண்டது.

நிலம்: எலும்பு, தோல், உரோமம், நரம்பு, தசை
நீர்: உவர்நீர், சேத்துமம், ரத்தம், சுக்லம், நிணம்
நெருப்பு: பசி, தாகம், உறக்கம், சோம்பல், மைதுனம்
காற்று: சிரிப்பு, அழுதல், நிற்றல், இருத்தல், போதல்
ஆகாயம்: காமம், குரோதம், லோபம், சங்கற்பம், விகற்பம்

விஷயம் (10): சத்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் - கந்தம் வசனம் கமனம் தானம், விசர்க்கம், ஆனந்தம் என்னும் 43 கோணங்களாக அமையும்.




# "சக்தி வழிபாடு பற்றிய சில வரலாற்றுச் சிந்தனைகள்"

ஆய்வாளர்:-
வாகீசகலாநிதி கனகசபாபதி - **நாகேஸ்வரன் எம். ஏ.**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா.

தாய்த்தெய்வ வழிபாடாகிய சக்திவழிபாடு உலகிலேயே மிகவும் தொன்மையான பெருமைமிகு வழிபாடாகும். வழிபாடு, வணக்கமுறை, அநுபூதி, துதி, அர்ப்பணிப்பு, பூசை, விரதம், கோயில் நடைமுறை, விக்கிரக ஆராதனை, அன்னதானம், வித்தியாதானம், அறச்சாலை, கல்வி, விழாக்கள், நேர்த்திகள், பொங்கல், குளிர்த்தி, மடை, அபிஷேகம், கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், ஆலயப்புனருத்தாரணம், அன்னப்பிராசனம், கர்ணவேதனம், முடியிறக்கல், திருமணம், மகப்பேறு, ருதுசாந்தி, அந்தியேஷ்டி, ஆட்டைத்திவசம், துடக்குக்கழித்தல், தோஷ நிவர்த்தி, சங்கிராந்தி, சஷ்டியப்த பூர்த்தி, மணிவிழா, மரணக்கிரியைகள், கொள்ளிவைத்தல், சாம்பல் அள்ளுதல், பிதிரர் வழிபாடு, தானதருமம் ஆகிய இவையெல்லாம் ஆண், பெண் என்னும் பிறப்பிலமைந்த மனித வர்க்கத்தவர்களுக்கென்றே பெரிதும் விதிமுறைகளுடன் வகுத்தமைத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலன சைவாலயக் கிரியை முறைகளுள் மிகவும் நெருங்கிய தொடர்புடையன. "வேதக்காரர்" என்னும் சொல்லின் பொருள் "சைவக்காரர்" என்பதேயாகும். பொதுவாக "இந்து" சமயத்தினைச் சார்ந்தோரனைவருமே "வேதவாழ்க்கை ஆதாரமாகக் கொண்டொழுகுவோராவர். வைதிக சமயம் என்பது வேதப்பிரமாணத்தை அடிப்படை ஆதாரமாகக் கொண்டமைவது. வேதங்களை அடிப்படை ஆதாரமாகக் கொள்ளாத சமயங்களும் உள்ளன. அவற்றினை "அவைதிக சமயங்கள்" என்று அழைப்பர். சைவம், சாக்தம், வைணவம், கணாபத்யம், கௌமாரம், சௌரம், என்பன வைதிக சமயங்களாகும். சமணம், பௌத்தம், லோகாயுதம் என்பனவாகும். இக்கட்டுரையிலே சக்தியின் சமயமெனப் பேசப்படும் "சாக்தம்" குறித்த செய்திகளும், தமிழகத்திலும், ஈழத்திலும் துலக்கம் பெறும் சக்தித்தலங்கள் பற்றிய விபரங்களும் அடங்கும். குறிப்பாகக் "காளி" அம்மன் பற்றிய தகவல்களைக் கொண்டமைவதாகவும் இவ்வாக்கம் இலங்கும்.

"தேவி வழிபாட்டின் அடிப்படைத்தத்துவம் எத்தகைய புரட்சிகளாலும் விஞ்ஞானப் புதுமைகளாலும் அசைக்க முடியாதது"

என்று மிகப்பொருத்தமுறக் குறிப்பிட்டு எழுதியுள்ளனர் அரவிந்தரும், சுவாமி விவேகானந்தரும். இவர்களின் இக்கூற்றினை விரித்துப்பார்க்கின் மிகவும் ஆழமான பேருண்மைகள் புலப்படும்.

தாயின் சக்திக்கு உள்ளுறை உயிர், கருணை. உலகத்தாயாகிய சக்திக்கு உள்ளுறை உயிர் தனிப்பெருங்கருணை. உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் "பக்தன்" குழந்தை உள்ளம் உடையவனாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. பேரருளாளர்களும் ஆன்மஞானிகளும் ஆண்மையைக் காட்டிலும் பெண்மைத்தன்மை பூண்டொழுகுவர். வினோபாஜி "ஆன்ம ஞானத்தின் அம்சமே பெண்கள்" என்று குறிப்பிடுகிறார். தாய் சொல்லித்தான் குழந்தை தந்தையை உலகத்தை அறிகிறது. "தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடி ஏயுமதே நிட்டை" என்பது சைவசித்தாந்த தத்துவமாகும். சிவன் - உமை; பிரமன் - வாணி; மகாவிஷ்ணு - மகாலட்சுமி; உருத்திரன் - ரௌத்திரி; மகேஸ்வரன் - மகேஸ்வரி; சதாசிவன் - மனோன்மணி; ராதை - கிருஷ்ணா; சீதா - ராமா; பத்திரகாளி - வீரபத்திரர்; இந்திரன் - இந்திராணி; பார்வதி - பரமேஸ்வரன் என்று வருவன காண்க.

இந்திரபோகத்தை அருள்பவள் இந்திராணி; வீரத்தைத் தந்துபகைவர்களை அழிப்பவள் வாராகி; இம்மை மறுமைப்பயன்களைத் தருபவள் மாகேஸ்வரி; காப்பவள் வைஷ்ணவி. ஒடுக்குபவள் - காளி; வீரத்தோடு ஞானத்தை அருள்பவள் - கௌமாரி; கல்வியைத் தருபவள் - பிராமி தமிழ் செழித்து வாழ்ந்த வளம்பெற்ற ஊரான மதுரைமாநகரைக் காவல்புரிந்துவந்த தெய்வம் அர்த்தநாரீச்சுர வடிவமுடைய பெண்தெய்வமாகிய "மதுராபதி" என்கிறது சிலப்பதிகாரம் தமிழகத்தின் தெற்கெல்லையிலே கடல்கோள்கள் ஏற்பட்டு ஆபத்தை போக்குவதற்குக் கன்னியா பகவதி என்றழைக்கப்படும் "கன்னியா குமரி" பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் "உதிரப்பலி" வழிபாட்டை ஏற்றுக்கொண்ட பல பிரசித்திபெற்ற தாய்த்தெய்வங்கள் இன்று பலியேற்காது "படையலேற்று அருள்செய்வனவாக" விளங்குகின்றன. வீரத்தின் விளைநிலமும் "பெண்மை" தான் பூனையும், பருந்தும் நெருங்காதவாறு கோழிக்குஞ்சுகளை அரவணைத்துக் காக்கிறது. அதைப்போலவே "குழந்தையை" அம்மை அரவணைத்துக் காக்கின்றாள். காக்கும் கடவுள் வடிவங்கள் பெருமளவில் பெண்வடிவங்களே என்னுஞ் செய்தி ஆராய்ந்துணரத்தக்கது தமிழ்ச்சிற்பியின் கைவண்ணம் சக்தியின் பல்வேறு திருவுருவங்களையும் காட்சிப்படுத்தியுள்ளது. போருக்குச் செல்லும் மறவர்கள் கையில் பாசம், அங்குசம், உலக்கை (முசலம்), வில், அம்பு, சூலம், கட்டாரி முதலியவைகளைத் தாங்கிக்கொண்டு நிற்கும் காவற்றெய்வமான காளியைப் போருக்குச் செல்லும்போது வழிபடுபவர். "செங்கயல்

நெடுங்கண்'' அங்கையற் கண்ணியின் மங்கல அழகைப் பார்க்க பத்தாயிரம் கண்கள் வேண்டும். மதுரை மீனாட்சியின் மாணிக்கமூக்குத்தியின் சுடர் ஒளியிற்தான் மதுரை மக்களின் வாழ்வும் வளமும் அடங்கிக்கிடக்கின்றன. பாண்டிய மன்னர்கள் பார்புகழ ஆண்டது அவளது அருளினால் தான். அத்தனை பெருமைகளுக்கும் புகழுக்கும் காரணியாகவே மதுரை மீனாட்சி மிளிருகின்றாள். மதுரை இன்றும் பழமை மாறாத புதுமையைப்பெற்றிருக்கிறது. இந்த வரலாறு சக்தியின் தனிப்பெருங்கருணையை விளங்கிக்கொள்ள அவசியமாகும்.

மென்மையான அன்பை பயங்கரமான பேராற்றலாக மாற்றிக்கொள்ளும் சக்திபடைத்தவள் தாய். தாயே சக்தி; உலக அம்மை. அவளை மாகாளியம்மன், பத்ரகாளியம்மன், அங்காளம்மன், காமாட்சியம்மன், முத்துமாரியம்மன், கருணைவல்லி, மெய்ஞ்ஞானவல்லி, ஆனந்தவல்லி, கற்பகவல்லி, அபிராமி, பகவதி, கருமாரி, தனலெட்சுமி, தான்யலெட்சுமி, தைர்யலெட்சுமி, வீரலெட்சுமி, வித்யாலெட்சுமி, கீர்த்திலெட்சுமி, விஜயலெட்சுமி, ராஜ்யலெட்சுமி, சந்தானலெட்சுமி, ராஜராஜேஸ்வரி, மகமாயி, சிவசங்கரி, சண்டி, சாமுண்டி, எனப் பல பெயர்கள் கொண்டு அடியவர் அழைப்பர். துன்பத்தையும் இன்பமாகக் கொண்டு அழகிலும் சோகத்திலும் பயங்கரத்திலும்கூட ஒருங்கே உண்மைகாணவல்ல சித்தசக்தியும், அன்பு நலமும், நோவையும் சாவையும் வெண்றொழிக்கும் நெஞ்சுத்துணிச்சலும், இடையூற்றுக்கு இடையூறாக நின்று ஊழையும் முதுகுகாணும் வெற்றிப் பெருமிதப் புன்னகையும் எல்லாம் 'சக்தி அருள்' வரப்பிரசாதமே என்பதனை நாம் நன்குணரவேண்டும். "ஞாலமுற்றும் பராசக்தி தோற்றம்" என்பான் மகாகவி பாரரதி.

"காட்டு வழிதனிலே அன்னே
கள்வர் பயமிருந்தால் - எங்கள்
வீட்டுக்குலதெய்வம் - தம்பி
வீரம்மை காக்குமடா!
நிறுத்து வண்டியென்றே கள்வர்
நெருங்கிக் கேட்கையிலே - எங்கள்
கருத்த மாரியின் பேர்சொன்னால்
காலனும் அஞ்சுமடா"

என்று நெஞ்சுரத்தைப் பாடுகின்றான் பாரதி. பாசம், பரிவு, கனிவு, கருணை, கடமையுணர்வு, அன்பு, காதல், அருள், தியாகம், தூய்மை, இரக்கம், அரவணைப்பு, மன்னிப்பு ஆகிய அனைத்து நற்குணங்களுக்கும் உறைவிடமா யிருப்பவள் அம்பிகை. கவிஞர்களையும், அறிஞர்களையும், அருளாளர்களையும், தியாகிகளையும், வீரர்களையும், வித்துவான்களையும் மற்றும் அனைவரையும் உலகிற்குத் தந்தவள். தாய்த்தெய்வமேயாம். இராமகிருஷ்ண பரமஹம்சர், 'சக்தி' என்ற காளியை நான் அழைக்கும்போது காளிவேறு; பிரம்மம் வேறு என்று நினைப்பதில்லை என்கிறார். இந்த வரலாற்றிலே தமிழ் மக்களுக்குள்ள இடத்தைப் பற்றியும் தொண்டுகளைப்பற்றியும் சைவ வரலாற்றறிஞர்கள் இதுவரை அமைவுற ஆராயவில்லை. தமிழ்மக்கள் தமக்கேஉரிய பல உயரிய பண்பினையும் உடையராயிருந்தனர். இவற்றினை இன்றும் முன்னின்று, முந்திக்கொண்டும் முனைந்தும் ஆராய்ந்து நூலுருச் செய்து வெளியுலகுக்குக் கொண்டுவந்துதவி செய்பவர்கள் வேற்றுமதத்தினரான கிறிஸ்துவர்களே. இப்பேரறிஞர்கள் பாராட்டப்படத்தக்கவர்களே. எனினும் 'தற்சார்பு' மதக் கொள்கையெனும் சுயசார்பு நிலையில் அவர்களது அணுகுமுறை சென்றிருப்பதனையும் மனங்கொள்வது அவசியமாகின்றது. நடுநிலை பேணும், நிலைமையே எல்லோராலுமே ஒப்ப ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். இங்கே வலியுறுத்த விளைவது யாதெனில் எத்தகு 'சார்பு நிலையும்' வலிந்து பேணப்படவேண்டியதில்லை என்பதே.

வீரமும் வெற்றியும் அருள்பவள் கொற்றவை. வீரக் கட்டிலிலே தான் கொற்றவை வீற்றிருப்பாளாம். கொற்றவையை முருகனின் தாய் என்கிறார்கள். வெறியாட்டுடன் வழிபாடு நடைபெற்றது. போருக்குத் தலைவனைச் செல்லவிடுத்த தலைவியின் தோழிமார். அவன் வெற்றியுடன் மீள வேண்டுமென்று கொற்றவைத் தெய்வத்தை வணங்குவதாகக் கொண்டு நெடுநல்வாடை தெரிவிக்கிறது. சேரர்கள் கயிலைமலையிலுள்ள கொற்றவையை வணங்குவதாகவும் இந்நூல் மேலும் கூறுகிறது. தஞ்சை மாவட்டத்திலே கும்பகோணத்திற்குத் தெற்கே உடையாளூரில் இரண்டு 'பிடாரி' கோயில்கள் உள்ளன. அவையாவன. 1. செல்லமாகாளி 2. பாற்குளத்தி அம்மன். இந்தியத் தென்கோடித் தமிழ்மக்கள் எல்லைப் பாதுகாவல் தெய்வமாக இசக்கி, முப்பிடாரி, முத்தாரம்மன், மாரியம்மன், பத்திரகாளி என்னுந்தெய்வங்களைக் கொண்டுள்ளனர். இன்றும் தாய்லாந்திலே மாரியம்மன் வழிபாடு இன, மத, பேதமின்றி பௌத்தர் இந்து, கிறிஸ்தவர், முஸ்லிம்கள் அனைவரும் அலங்கரித்து ஊர்வலமாக எடுத்துச்சென்று ஒற்றுமைக்கும் தோழமைக்கும் சகோதர உணர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக வளர்ந்துவந் துள்ளது.

புகழ்பெற்ற கன்னியாகுமரிக் கோயில் முதலாம் இராசராசன் காலத்திருப்பணி என்கின்றனர். கி. பி. 984இல் அவன் இக்கோவிலைக் கட்டினான். சோழப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் பிற்காலப் பாண்டியரும் அவர்களுக்குப் பின் விஜயநகரப் பேரரசின் வழிவந்த நாயக்கமன்னரும், அவ்வப்போது குமரித்தாயின் கோயிலில் திருப்பணி செய்து வந்துள்ளனர். திருவாங்கூர் மன்னர்களின் பாதுகாப்பிலும் கன்னியாகுமரி இருந்திருக்கிறது. சுவர்களில் தமிழ், தெலுங்குக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கொற்றவை (காளி) மறக்கருணைத் தெய்வமாகவே கலிங்கத்துப்பரணியில் பாடப்பட்டுள்ளார். வீரர்கள் காளி தேவிக்குப் பலியாகத் தங்கள் கழுத்தை அறுத்துவைப் பதாகவும் கூறப்படுகிறது. பவளம் போன்ற இதழ்களும், முத்துப்போன்ற முறுவல் பூக்கும் பற்களும் அழகிய முகவெட்டும் பெற்றவள் 'தேவி? என்கிறார். கலிங்கத்துப் பரனி ஆசிரியர் செயங்கொண்டார் தேவியின் முகத்தில் இலங்கும் குங்குமப்பொட்டு உதயசூரியன் செந்நிற ஒளியை நினைவூட்டுகிறது.

'சக்தி' என்ற அம்மனுக்கு விளையாட்டும் வினைதான். வினையும் விளையாட்டுத்தான். அநாயாசமாகவும், ஆனந்தமாகவும் அவள் விளையாடுகிறாள். எங்கேயென்றால் காலமாம் வனத்தில் அண்டக்கோளமாம் கற்பக தருவிலே........! வெற்றி மடந்தைக்குத் தமிழிலே கொற்றவை காளி என்று பெயர். இன்று சர்வதேசப்புகழ்பெற்ற பெருவிழாவாகத் திகழும் "நவராத்திரி" என்பது சக்தியில் வேரூன்றி வளர்வதே சௌந்தர்யம்'' என்னும் உட்பொருளை உடையது.

தாயுமான சுவாமிகள் சைவத்திற்கும் சக்தி மதத்திற்கும் இடையே ஒரு சமரசப்பாதையை வகுத்துக்கொடுத்தார். பராசக்தியின் வழிபாடு தமிழகத்தில் பாரதி வாயிலாகத்தான் புத்துயிர் பெற்றது. காளி வழிபாடு வங்காளத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரினால் புத்துயிர்ப்பும், புதுமெருகும் பெற்றது. காளித்தேவியோடு கதைத்துறவாடியவர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர்.

தேவி வடிவங்களில் மிகவும் பிரசித்திபெற்ற உக்கிர வடிவம் காளி. மிகமிக உக்கிரமான வடிவம் காளி. இக்காளி உருவத்தை ஆவுடையார் கோயிலிலே காணலாம். கோவை மாவட்டத்திலுள்ள பேரூர்க் கோவிலிலும் காணலாம். சமயபுரம் மாரியம்மன், கரூர் மாரியம்மனும், பெரிய பாளையம், படவேட்டு அம்மனும் உக்கிரமான காளி வடிவங்கள் தான். திருவேற்காடு கருமாரியம்மனும் உக்கிரமான உருவமுடையவள் தான் திருவெண்காட்டில் அகோர வீரபத்திரரோடு உக்கிரத் தன்மையில் போட்டிபோடுவதுபோல் எதிரே தோற்றம் அளிக்கிறாள் காளி. மயிலாடுதுறைக்கருகில் உள்ள நளினப்பள்ளி என்ற ஊர்க்கோயிலில் காளி ஓர் அதிசயமான கலைப்படைப்பாகும். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த "திருநாகேஸ்வரத்தில்'' பச்சைக்காளி, பவளக்காளி, இருவருக்கும் கோயில் இருக்கிறது. பழைய பாறையிலுள்ள துர்க்கையும், பட்டீஸ்வரத்திலுள்ள விஷ்ணுதுர்க்கையும் குறிப்பிடத்தக்க காளியுருவங்கள். திருவாரூருக்கு அருகிலுள்ள மாவூரில் ஒரு காளிகோயில் இருக்கிறது. பல கைகளுடன் கூடிய கொற்றவைக் காளியாகிய துர்க்கையை மயிலாடுதுறைக்கு அருகில் இருக்கும் தருமபுரத்தில் காணலாம்.

'காளி' என்றாலே கல்கத்தாவின் நினைவுதான் கற்றவர்களுக்கும், பக்தர்களுக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது அன்பர்களுக்கும், சுவாமி விவேகானந்தரது அன்பர்கள் அபிமானிகளுக்கும், அன்னை சாரதா தேவியினுடைய பக்தைகளுக்கும் வருவதுண்டு. வங்காளமும் காளி வழிபாடும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன. தன் சிவந்த நாக்கு வெளியே தொங்கத் தலைவிரி கோலமாய் இருப்பவள் வங்கத்துக் காளி. மைசூரிலுள்ள சாமுண்டிதேசி மகிஷாசுரனைக் கொன்றவள். மைசூர் என்றால் மகிஷாசுரன் கூர் அதாவது எருமை ஊர் என்று பொருள். மைசூர் அரசவம்சத்தின் குலதெய்வமும் சாமுண்டிதான். குஜராத்தில் பராகத் என்ற இடத்தில் பத்திரகாளி பாலா என்ற இடத்தில் கன்னிப்பெண் தெய்வம், அரசூர் என்ற தலத்தில் சாந்தமான கோலத்திலும் தேவி வீற்றிருக்கின்றாள். இக்கருத்துக்களைச் சக்திவழிபாடு (1998) நூலில் பகீரதன் குறிப்பிட்டுள்ளார்.

பாலைவனத்தின் அதிதேவதை காளிதான். கி. பி. முதலாவது நூற்றாண்டின் பிற்பாதியில் தமிழ்நாட்டில் தேவி வழிபாடு இருந்ததாகச் சில பழைய கிரேக்க நூல்களும் கிரேக்கப் பிரயாண வரலாறுகளும் தெரிவிக்கின்றன. அதற்கு முன்பே இந்திய மண்ணில் தேவி வழிபாடு வேரூன்றிவிட்டது. மகாபாரதத்து விராட பர்வதத்தில் துர்க்கை விந்திய மலையில் நித்தியவாசம் செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. போரில் வெற்றிக்காக அர்ச்சுனன் தேவியை வழிபட்டான் என்று 'மகாபாரதம்' தெரிவிக்கிறது. மகாபாரதம் இதிகாசங்களிலொன்று.

சக்தி வழிபாடு சங்கரரால் சீர்திருந்திய நிலையில் நிலவியதும், தமிழகத்தில் 9ஆம் நூற்றாண்டிலும், 11ஆம் நூற்றாண்டிலும் அதற்குப்பின் நூற்றாண்டுகளிலும் சக்தி வழிபாடு பற்றிய உபநிடதங்கள் பல தோன்றின பதினெட்டாம் நூற்றாண்டில் வங்கநாடு சக்திவழிபாட்டின் ஒரு பெரிய வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சக்திவழிபாடு பாரத நாட்டில் ஒரு புதிய யுகம் கண்டது. இருபதாம் நூற்றாண்டில் சக்தி வழிபாட்டைத் தூய நன்னிலையில் வளர்த்தவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

ஈழத்திலே இலங்கும் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் திருக்கோணேஸ்வரம் மிக்க மகிமைபொருந்திய வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது. சோழர்கள், பல்லவர்கள், பாண்டியவர்கள், யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் போன்ற அனைவரினதும் ஆதரவினைப் பெற்று வளர்ந்தது. கோணேஸ்வரம் சோழ இளவரசனான குளக்கோட்டன் கோயிலைப் புனரமைத்ததுடன் 'பாபநாசம்' என்னும் தீர்த்தத்தையுங் கட்டுவித்தான். கோணமாமலைக் கோட்டை வாயிலில் விளங்கும் கற்சாசனம் இதனை உறுதிப்படுத்துகின்றது. மன்னர்கள் நன்கொடைகள் வழங்கினர். முதலாம் கஜபாகு, ஜெயவீர சிங்கையாரின், ஐந்தாம் பரராஜசேகரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அந்நியர் ஆட்சிக் காலத்தில் ஆலயம் அழிக்கப்பட்டபோது. சில தெய்வவிக்கிரகங்களைக் காப்பாற்றித் தம்பலகாமத்திற்கு எடுத்துச்சென்று அங்கே கோணேஸ்வரருக்குக் கோயில் கட்டினான். இரண்டாம் இராஜசிங்கன் "ஆழியுடைசூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்னு திருக்கோணமலை'' எனக் கோணேஸ்வரத்தைச் சிறப்பித்துப் பாடுகிறது பெரியபுராணம். குறிஞ்சியும், நெய்தலும் ஒன்று சேர்கின்ற ஓர் இடத்தில் திருக்கோணேஸ்வரமும், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும் அமைந்துள்ளன. திருக்குணமலை, திருக்குணாமலை, திருமலை, தென்கைலாயம், கோகர்ணம், திரிகூடம் மச்சேஸ்வரம் என்பன திருகோணமலையின் பிறபெயர்கள் அருணகிரிநாதப் பெருமான் பாடியருளிய திருப்புகழில்

"நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக் கொணாமலை தலத்தாறு கோபுர'' என்று

இத்தலத்தை வர்ணித்துள்ளார்.

மகாவலிகங்கை கடலுடன் சங்கமமாகும் இடம் திருக்கோணமலை. சுவாமிமலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்று கொட்டியார விரிகுடாவை நோக்கியவாறு அமைந்துள்ளது. அதன் உச்சியிலே திருக்கோணேச்சரக் கோயில் உள்ளது. சமுத்திரத்தின் அடியிலுள்ள கோயில் பற்றி 1961 ஆம் ஆண்டு ஆழ்கடல் ஆராய்ச்சி செய்த மைக்வில்சன் கூறியுள்ளார்.

இராவணன் தென்னிலங்கையை ஆட்சிசெய்த காலத்திலே தட்ஷிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேச்சரத்தைப் பூசித்து வந்தான் என்று மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. இராவணன் தன் தாயாருக்குச் சிவலிங்கம் ஒன்று பெறவிரும்பிப் பெயர்த்த மலை தட்சிண கைலாயமாகிய கோணமாமலை என்று தட்சிணகைலாய புராணங்கூறுகின்றது. இதற்குச் சான்று பகர்வது போல் இம்மலைப்பிளவு ஒன்று இன்னமும் இருக்கின்றது.

போர்த்துக்கேயப் படை கொன்ஸ்ரன்தைன் டீசா செய்த சிவத்துரோகத்துக்காக 1630 ஆம் ஆண்டு வேறு சிலர் செய்த சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொல்லப்பட்டான். 1944ஆம் ஆண்டு திருக்கோணமலைக் கோட்டையினுள் நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பதற்கு அகழ்வு வேலை செய்தபொழுது விஷ்ணு, மகாலட்சுமி விக்கிரகங்கள் கிடைத்தன அனைத்து விக்கிரகங்களும் 1952ஆம் ஆண்டிற் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

கோணேசர் கல்வெட்டு இக்கோயிலின் சரித்திரத்தை உரைநடையிலுங் கவிதையிலுங் கூறுகின்றது. சீர்பாத குலவரலாறு, மட்டக்களப்பு, ராஜாவலிய, மச்சபுராணம் திருக்கோணாசல புராணம், இலங்கைச் சரித்திரம், கைலாசபுராணம், திருக்கோணமலைத் திருவுருவங்கள் குடுமியாமலைச் சாசனம், திருக கோணமலைக் கோட்டைவாயிற் கல்வெட்டு முதலியன இக் கோயில் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றன.

மாதுமையாள் கோணேஸ்வரப் பெருமானுடைய சக்தியென மலைக் கோட்டை ஆலயத்திலே மிளிர அவ்விருவரையும் நோக்கியவாறு அமைந்துள்ள தெய்விக ஆலயமே ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானமாகும். மிகுந்த தெய்வீக அருள்நலங் கொண்ட 'காளி' அம்மன் இவ்வாலயத்திலிருந்து அருளாட்சி புரிந்தவண்ணமுள்ளனர். தம்மை வந்தடைந்து தஞ்சமென நின்றோர்க்குத் தண்ணளியான திருவருட் சிறப்பினால் மேன்மைமிக்க பேறுகளை அருள்பவள் திருமலை பத்திரகாளித்தாய், மகப்பேறு, நோய்நீக்கம், திருமணப்பேறு, விரும்பியதை யடையும் பாக்கியம், எதிர்கால வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமை என்னும் இவற்றையெல்லாம் நம்பிக்கையுடன் வழிபடும் அடியார்களுக்கு நல்குபவள் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் மனிதருள்ளே மறைந்து உறைந்து கிடக்கும் ஆன்மீகப் பேரொளியை சீண்டி உயிர்ப்பித்துத் தனது ஆகர்ஷிப்பினால் அனைத்து உயிர்களுக்கும் ஆன்மிகப்பலத்தை துலக்கி காட்டுபவள் திருமலைப் பத்திரகாளி கோயிலின் எழில் வனப்புத்தான் மக்களின் வாழ்வியற் சிறப்பு என்பது மரபார்ந்த சமய நம்பிக்கை. அழகொளிர் மிளிரும் வனப்புமிகு ஆலயத்தோற்றத்தைத் தருவது ராஜகோபுரங்களும், விமானங்களுமாம், தரும சிந்தையும், சைவப்பற்றுதியும், கலை வளர்ச்சிதரும் விருப்பார்வமும் கொண்டு வாழும் திருக்கோணமலை வாழ் பெருமக்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர்கள், தர்மகர்த்தா சிவஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் மற்றும் தொண்டர் சபையினர், அறப்பணி மன்றங்கள், கலாசார சபைகள் மற்றும் அனைவரும் நமது பெரும் பாராட்டிற்கும் வாழ்த்துக்கு ரியராகின்றனர்.

மாகாளி, மகாலக்ஷ்மி, மகாசரஸ்வதி, என்ற திருப்பெயர்களில் நவராத்திரிக் காலத்தில் பூசிக்கிறோம். அஞ்ஞானத்தின். பலவடிவான அரக்கர்களை அழித்தவள் துர்க்கையெனும் காளி. துர்க்கையே மது, கைடபவத்துக்குக் காரணமாயிருந்தவள். சும்ப நிசும்பரைச் சங்கரித்தவள். சண்டிஹோமம் செய்து துர்க்கைக்கு உத்தமமான புத்திச்செருக்கால் எதனையும் அறிய முடியும் என்று நினைப்பவன் மனிதன் ஆனால் “சக்தியோ” “யாதேஸச ஸர்வபூதேஸச புத்தி ரூபேன சமஸ்திதா” என்கிறது ஸ்லோகம். சக்தியே அம்பிகையே புத்தி ரூபமாக விளங்குகிறாள். மோகத்தில் சூழ்ந்துள்ள அஞ்ஞானி யருக்கும் அவள் ஞானம் அருள்வதையும் சமஸ்ர காரணியான அவளே ஸம்ஸார பந்தம் நீக்கி மோட்ஷம் அளிப்பதையும் தானே காணுகிறோம். இத்தகு பெருமைகளனைத்தும் பொருந்தியவளே திருக்கோணமலை பத்திரகாளி 'வைராக்கியம்' என்பது ஆன்மசம்பத்து இதனைத் தருபவள். திருமலை பத்திரகாளி. 'பத்திரகாளி' என்னும் இவள் நவராத்திரி அஷ்டமியில் அவதரித்தாள் என்றும் தேவிபாகவதம் கூறும் அம்பாள் சத்தியம், ஞானம், ஆனந்தம் என்ற மூன்றையுமே காழச் செய்கிறாள்.

கோயில்களிலே ஏன் 'கண்டாமணி' இழுத்தடிக் கிறார்கள்? இவ்வினாக்குரிய விடையே 'யுத்தத்தோடு' சம்பந்தப்பட்டது. எத்தனையோ புதிய புதிய நவீன யுத்த ஆயுதங்களும், உத்திகளும், திட்டங்களும் நடைமுறைப்படுத்தியே எந்த யுத்தமும் உலகிலே நிகழும் கண்ணகி கோபாவேஷங் கொண்டு தனது முலையைத் திருகி மதுரையை எரித்தபோதும் கூட, 'பசு பத்தினி பார்ப்பார் பெண்டிர்' இவர்களை விடுத்துத் தீத்திறத்தோர் பக்கமே அழிக்க என்று தானே உத்தரவு விட்டாள். அது போலவே மகிஷாசுர மர்த்தினியும், காளியும், துர்க்கையும் கூட சிலர்மீது ஆயுதப்பிரயோகத்தைக் நிகழ்த்தக் கூடாதென்று எண்ணியே 'கண்டாமணியைக் கணகணவென' முழக்கினாள். அந்த நாதத்திலேயே நாடி அதிர்ந்து விழுவான் எதிரி. துர்க்கை என்றால் 'துர்க்கம்' எனும் 'கடத்தற்கரிய துக்கத்தைத் தாண்டி கரையேற்றுவிப்பவள்' என்று பொருள். அம்பாளின் அஷ்ட குணங்கள், 1. தயை, 2. மன்னித்துத்தாங்குவது, 3. அசூயை யின்மை, 4. தூய்மை, 4. பிரயாசைஇன்றிச் செயலாற்றுந்திறன் 6. சுயசிந்தனை, 7. அற்பத்தனமின்மை, 8. பற்றின்மை என்பனவாகும்.

**சத்.** சித் ஆனந்தத்தை அநுபவிப்பதற்கு அத்தியாவசியமா



அதற்கு எதிரிடையான சத்துருக்களை அழித்தேயாக வேண்டியிருக்றது. இந்த அழிவு இன்றி அந்த அனுக்கிரகம் இல்லை. அழிவின் வேராகிய கோப உணர்ச்சியே காளி. தனிப்பட்ட அது பயங்கரமாக இருக்கும். ஆனாலும் அது **அதர்மத்துக்கே பயமூட்டுவது**. நம் மீது படையெடுத்துள்ள உட்பகைகளை காளியின் துணைகொண்டு நாம் அழித்தாலன்றி பேரின்பமில்லை. ஸப்தமாதாக்கள் என்போர், பிரம்மாணி, 2. மகேஸ்வரி, 3. கௌமாரி, 4. வைஷ்ணவி, 5. வராஹி, 6. நரஷிம்ஹி, 7. ஐந்தரீ,

'ரக்ததந்திகா' பயமனைத்தையும் போக்கும் உருவின் பெயர் பயத்துக்கான காரணம் தோன்றும் போதெல்லாம் பயத்தையும், பயமுறுத்தும் இவளது நினைவு வந்து ரட்சிக்கும். 'ரக்தசாமுண்டா' என்றழைக்கப்படுவதும் துர்க்கைக்கு எல்லாம் சிவப்பு; வர்ணம் சிவப்பு; வஸ்திரம் சிவப்பு; அணிமணிகள் சிவப்பு; ஆயுதமும் சிவப்பு; கண்களில் சிவப்பு செந்தணல் தான், நகங்கள் இயற்கையிலேயே சிவப்பா? எதிரியை கிளித்து அவர்களது குருதியால் சிவந்தவை என்று சொல்ல இயலாது. 'ரக்ததந்திகா' என்று பெயர் பெறும் இவள் தனது நான்கு கரங்களில் கத்தி, மதுப்பாத்திரம், உலக்கை, கலப்பை, இவற்றைத் தரித்திருப்பாள். இவள் கோரவடிவினளாயினும் ஞானமயமான யோகீஸ்வரி இவள் என்றார்.

நவராத்திரி நாயகி ஆசிரியர்
ரா. கணபதி (1998)

"அறிந்துசெய்தாலும் அறியாமல் செய்தாலும் அன்புடன் ஏற்கிறேன்" என்கிறாள் அம்பாள் என்பது ஞானிகளின் முடிவு

"பாபமும் கோபமும் போகப்பாராயணம் கண்கண்டமருந்து."

"மெய்ஞ்ஞானத்திடம் இன்பநுகர்ச்சிகாணும் எண்ணம் அதை ஆராய்கின்ற அஞ்ஞானத்திற்கு இல்லை" என்றுமே அஞ்ஞானம் ஞானத்திடம் தொடர்பு கொள்வதில்லை.

பரம்பொருளை உலக மாதாவாக மகாகாளியாகக் கண்ட மகாகவி பாரதியின் இதயம் மக்கள் பாடும் காவடிச்சிந்தில் அவளுடைய புகழை பரவசமாகப் பாடிற்று இப்பாடல்களைத் துள்ளல் நடையிலே சிந்து நடையிலே பாடி நாமும் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவருட்கருணைக்கு பாத்திரமாவோமாக.

## காவடிச்சிந்து - காளிப்பாட்டு

"காலமாம் வனத்திலண்டக் கோலமாமரத்தின் மீது
காளிசக்தி என்ற பெயர் கொண்டு – ரீங்
காரமிட்டுலவுமொரு வண்டு – தழல்
காலும் விழி நீலவண்ண மூல அத்துவாக்கமெனும்
கால்கலாளுடைய தெனக் கண்டு – மறை
காணுமுனிவோர் உரைத்தார் பண்டு"

(காலமாம்....)

மேலுமாகி கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணும் மண்ணும் ஆசைசக்தி வெள்ளம் – இந்த
விந்தையெல்லாம் ஆங்கது செய்கள்ளம் – பழ
வேதமாயதன் தன்னுள்ள நாதமாய் விளங்குகிறது
வீரசக்தி வெள்ளம் விடும் பள்ளம் – ஆக
வேண்டுநித்தம் என்றான் ஏழை உள்ளம்

(காலமாம்.....)

அன்புவடிவாகி நிற்பள் துன்பமெல்லாம் அவள் இழைப்பள்
ஆக்க நீக்கம் யாவும் அவள் செய்கை – அவள்
ஏதுமற்றமெய்ப் பொருளின் சாயை
ஆதியாம் சிவனும் அவன் சோதியான சக்தியும்தான்
அங்குமிங்கும் எங்கும் உமையாகும் – இந்த
அறிவுதான் பரமஞானமாகும் – தந்த
நித்தமுத்த சுத்தபுத்த சத்தபெரும் காளிபத
நிழலடைந் தார்க்கில்லைபோர் தீது – என்று
நேர்மை வேதம் சொல்லும்வழிமீது

**(பாரதி)**

ஓம் சக்தி

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

# ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப்பிறவியின் உயர்நோக்கத்தை நிறைவு செய்கின்றன

- குமாரசாமி சோமசுந்தரம் -

ஆலயம் ஆண்டவனின் சந்நிதியாகும். இறைவனின் ஆலயம் ஆன்மீகத்தை விளங்க வைக்கிறது. ஆன்மீகம் மனித வாழ்க்கையுடன் கலக்கும் போதே, வாழ்க்கை செழுமையும் சீரும் பெறுகிறது. இதனாலேயே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று," என்றும் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்றும் ஆன்றோர்கள் கூறிவைத்துள்ளனர்.

சைவப் பண்பாட்டின் சிகரமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

இறைவன் உயிர்க்கு உயிரானவன். எம்மை யெல்லாம் படைத்துக், காத்து அருள்பாலிப்பவன். இப் பிரபஞ்சம் முழுவதற்கும் கருத்தாவாக உள்ளவன். எங்கள் யாவரினதும் ஒப்பற்றதலைவன். அவன். எம் இறைவன் திருவருட் சக்தியோடு கூடியிருப்பதால், "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறார் உமாபதிசிவம்.

சைவம் சிவசம்பந்த முடையது. சிவம், சக்தி சம்பந்தமுடையது. சிவம் இன்றேல் சக்தி இல்லை; சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவசக்தி இணைப்பு, சைவத்தின் சிறப்பு இதனை விளக்குவது அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் "அம்மையே அப்பா'' எனத் தீர்க்கமாகக் கூறுகிறார் மணிவாசகப் பெருமான். சிவபெருமானைத் "தோடுடைய செவியன்" ஆகவே திருஞானசம்பந்தர் தரிசித்துள்ளார். கண்டதைக் கண்டபடி, உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பு மூன்று வயதுக் குழந்தையுடையது. தோடு, பெண்கள் அணியும் ஆபரணம், குண்டலம் ஆண்கள் காதில் அணியும் ஆபரணம் என்பது கவனிக்கத்தக்கது.

ஆலயங்கள், ஆகமங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப் படுகின்றன. நித்திய, நைமித்தியக் கிரியைகள், வழிபாடுகள் என்பனவும், ஆகம விதிப்படியே நடத்தப்படுகின்றன. தெய்வ சாந்நித்தியம் ஆலயங்களில் பேணப்படுவதற்கு இவையே அநுசரணையாக உள்ளன.

ஆலயங்கள், தனிமனித நல்வாழ்விற்கும், நாட்டின் வளம் மற்றும் ஆட்சி மேம்பாட்டிற்கும், உலகத்தவர் நன்மைக்கும், பண்பாட்டு, ஒழுக்க வளர்ச்சிக்கும், சமூக, கலை கலாச்சார விருத்திக்கும் நிலைக்களனாக விளங்கி வருகின்றன. ஆன்மீகப் பண்பாட்டின் ஊற்றுக்கண் ஆலயங்களேயாகும்.

## ஆலயம் ஏன்?

அண்டங்கள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து, எல்லாவிடமும் வியாபகமாய் உள்ள பரம்பொருளுக்கு, நான்கு பக்கங்களிலும் எல்லைகள் வகுத்து, சுவர்கள் அமைத்து ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் கோயில் நிறுவி, அதனையே இறைவனின் இல்லமாகக் கொள்ளுதல் எவ்வாறு அறிவிற்குப் பொருந்தக்கூடியதாகும் என வினா எழுப்புகிறார்கள் சிலர், அவர்களுக்குத் தக்க பதில் அளிக்கவேண்டியது நம் கடமையாகும்.

கடவுள் என்னும் பதத்தின் பொருளை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனம், வாக்கு, காயம் என்பவற்றிற்கு எட்டாததும் அவற்றின் எல்லையைக் கடந்தும் அற்றிற்கு உள்ளும் நிற்கும் பொருள் என்பதால் அப்பொருள் கடவுள் எனப்படுகிறது. அவ்வாறிருந்தும் கடவுள் எவர் கண்ணிற்கும் புலப்படக்கூடிய பொருள் அன்று அதுவே கடவுளின் இயல்புமாகும். கடவுளின் சுய நிலை அருவம் அதாவது உருவற்றது, உரையற்றது, குணங்குறிகள் அற்றது, நாமமற்றது,

அருவமாக எங்கும் எதிலும் நிறைந்துள்ள கடவுளை தியானிக்கவோ, அதனுடன் உறவு கொள்ளவோ பேசவோ, ஞானிகளுக்கு மட்டுமே இயலும். எம்மில் மிகப் பெரும்பான்மையினர் ஞானிகள் அல்லர். நாம் சிற்றறிவும் சிதறிய எண்ணங்களும் உடையவர்கள். ஒருகணமேனும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறன் அற்றவர்கள் அந்த வகையில் நாம் கடவுளுடன் பேசுதல் செய்யவேண்டுமாயினுஞ் சரி, கடவுளை வேண்டுதல் செய்யினுஞ் சரி, ஏன் கடவுளை நினைப்பதற்கும் தியானிப்பதற்கும் கூட நமக்கு எம் முன்னால் ஒன்றை உருவமாக முன்னிலைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக்கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு மலையைப் பற்றிய எண்ணக்கருவை ஏற்படுத்துவதற்கு, ஒன்றில் மலையை நேரடியாகக் காண்பிக்கவேண்டும் அல்லது மலையின் மாதிரி உரு ஒன்றை காட்ட வேண்டும். முதிர்ச்சி குறைந்த பிள்ளைகள் தூலமாக ஒரு பொருளைப் பார்க்காமல், அதுபற்றிய விளக்கத்தைப் பெற மாட்டார்கள். ஒன்றை விளங்கிக்கொள்வதற்கு அவர்களுக்கு நேரடி அனுபவம் தேவையாகும். அவ்வாறே, சாதாரண மக்களுக்கும் கடவுளை அருவமாக தியானிப்பதற்கோ, அருவ நிலையிலான கடவுளுடன் பேசுவதற்கோ சிரமமாக உள்ளது. இந்த நிலையில் ஒன்றில் உருவம் தேவைப்படுகின்றது. அன்றேல் உருவத்தின் சாயல்

வேண்டப்படுகிறது. இவற்றுள் ஒன்றையேனும் முன்னிலைப் படுத்தாமல், சாதாரண மக்களுக்குக் கடவுள் பற்றிச் சிந்திக்கவோ, தியானிக்கவோ, அல்லது கடவுளுடன் பேசவோ, உறவாடவோ இயலாமற் போய்விடுகிறது. சிவாகமங்களின் தோற்றம், எமக்கு எந்த வகையில் இப்பரிசோதனையை தீர்ப்பதற்கு உதவிற்று என்பது சிந்திக்கற்பாலது.

ஆலயங்களை அமைப்பதற்கும், தேவப்பிர திட்டைக்கும், நித்திய நைமித்தியக் கிரியைகள், வழிபாடுகள் மூலம் தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதற்கும் சிவாகமங்களே வழி வகுத்தன. உருவ வழிபாட்டை அதிகார பூர்வமாக்கிய பெருமை ஆகமங்களைச் சாரும். கடவுளை உருவமாக முன்னிலைப்படுத்தித் தியானிக்கவும், வழிபடவும், கடவுளுடன் பேசவும், உறவாடவும் சாதாரண மக்களுக்கு இயலுவதாயிற்று. ஆலயங்கள் ஏன், என்பதற்கு இப்பொழுது விடை கிடைத்துள்ளதல்லவா.

## ஆலயத்தில் அமைதியும் தூய்மையும்

அமைதி, தூய்மை ஆகிய இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. அவை ஆலயத்திற்கு சாந்நித்தயித்தை ஏற்படுத்துபவை. அதனால் ஆலயத்தில் அமைதியையும், தூய்மையையும் நிலவச் செய்ய வேண்டியது வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களின் கடமையும் பொறுப்புமாகும். "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என மெய்கண்டார் நமக்கு அறிவிக்கின்றார். ஆலயத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு அங்கமும் தொழுது வணங்குவதற்குரியவை. வணக்கத்திற்குரிய இடம் தூய்மையாக வைத்திருத்தலும், ஆங்கு அமைதி பேணப்படுதலும் அவசியமாகும்.

ஆலயங்களில் இறை சிந்தனையோடு மனதை ஒருமுகப்படுத்தி வழிபாடு செய்தற்கு ஆலயச் சூழலில் அமைதி இருக்க வேண்டியது முதல் நிபந்தனையாகும். கவனக் கலைப்பான்கள் காணப்படின், மன அடக்கம், புலன் அடக்கம் இரண்டுமே கலைந்துவிடும்.

ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும் முறை, மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் எல்லாமே சைவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அங்கு அவர்களில் பெரும்பாலானோர் நடந்து கொள்ளும் விதம், அவை யாவற்றையும் மீறுவதாகவே காணப்படுகிறது. தெரிந்து கொண்டு செய்யும் குற்றங்கள் மகா பாவம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய பாவங்களுக்கு விமோசனம் கிடையாது. குளிக்கப்போய்ச் சேறு பூசி கொள்ளுதலுக்கு இது சமமாகும்.

கோயிலுக்குள், கோபுர வாயிலினூடாகவே செல்லுதல் வேண்டும். அவ்விடத்தில் சிலர் கூடிநின்று பேசிக்கொண்டும், வீண் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டும், ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக் கொண்டும் இருந்தால், பிறருக்கு இடையூறுகளை விளைவித்தவர்கள் ஆகின்றனர். அத்துடன் அமைதிக்குப் பங்கமும் ஏற்படுகின்றது. இதைப் பலர் சிந்திப்பதில்லை.

அமைதி தேடி ஆண்டவன் சந்நிதிக்கு வந்தும் அங்கேயும் அமைதி இல்லையென்றால், வேறெங்குதான் அமைதியைக் காணமுடியும். இவ்வாறு கேட்டு எத்தனையோ அடியார்கள் கவலை கொள்கிறார்கள்.

சில கோயில்களின் உட்பிரகாரங்களில் ஒலி பெருக்கிகளை அமைத்து அடிக்கடி ஒலிபரப்புகின்றனர். பக்தி பாடல்கள் என்ற பெயரால் ஒளிகளை உரக்கக் கிளப்புகின்றனர். இத்துணை சத்தங்கள், இரச்சல்களின் மத்தியில் மனத்தை ஒருமுகப்படுத்தி, இறைவனை வழிபாடு செய்வதென்பது எப்படிச் சாத்தியமாகும்.

அமைதி, சாந்தி, நிம்மதி - இவை தான் இன்று எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை. இவை வீட்டில் இல்லை, வேலைத்தளத்தில் இல்லை, வாழும் சமூகத்தில் இல்லை, ஏன் நாட்டிலும் இல்லை இவற்றை ஆலயங்களில் அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

அமைதி பேணல்; தூய்மை பேணல்; வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல்; பிறருக்கு இடையூறுகள் தொல்லைகளை ஏற்படுத்தாதிருத்தல்; ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துதல் என்பனவற்றின் மூலம், திருவருட் துணைகொண்டு திருக்கோயில்களில் தெய்வ சாந்நித்தியம் நிலைபெறச் செய்தல் வேண்டும்.

## செய்யத் தகாதன

திருக்கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு, நித்திய நைமித்திகங்கள் நடத்தப்பெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் மூலம் தெய்வ விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பெற்று தெய்வ சாந்நித்தியம் நிலவ வழி செய்யப்படுகிறது. அத்தகைய திருக்கோயில்களில் ஆகமங்களில் விதிக்கப்பெற்றிருப்பவற்றிற்கு புறம்பாக எதுவும் நடைபெறக்கூடாது, நடைபெற அனுமதித்தலும் ஆகாது.

சுவாமி விக்கிரகங்களை சிவாச்சாரியார்கள் அர்ச்சகர்கள் என்போரைத் தவிர வேறெவரும் தீண்டுதல் ஆகாது என்பது விதி. ஆனால், வழிபடுவோர் சிலர் விக்கிரகங்களைத் தொட்டு தீண்டுவதையும், கைகளால் அளைவதையும் காண்கிறோம். வேறு சிலர் பூக்களைக் கொண்டுவந்து வீசி எறிகிறார்கள். சிவாச்சாரியார் பூசை செய்யும் போதும், வழிபடுவோர் மலர்களையும் பத்திரங்களையும் விக்கிரகங்கள் மீது தாமும் போடுகிறார்கள். சிலர் கோயில் மணிகளை தாம் நினைத்தநேரங்களில் அடித்துவிட்டுச் செல்கிறார்கள். சுவாமி திருஉலா வருவதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், ஊர்திகள், பல்லக்குகள் என்பவற்றின் மீது சிலர் ஏறி உட்காருகின்றார்கள். பிள்ளைகளை அவற்றின் மீது இருத்தி புகைப்படங்களும் எடுக்கிறார்கள். இவை யாவும் இன்றைய புதுக் குழப்பங்கள். இவ்வாறு சிலர் செய்வதைப் பார்த்து விட்டு பலர் செய்ய முற்படுகிறார்கள்.

விபூதி பிரசாதங்களை அலட்சியமாக வாங்கி நிலத்தில் சிந்தியும் விடுகிறார்கள்; சுவர்கள், தூண்கள், வாகனங்கள் என்பவற்றில் பூசியும் விடுகிறார்கள். பூக்கள், பத்திரங்கள், வில்வங்களைக் கீழே போட்டு விடுவதால் பிறர் கால்களால் அவை மிதிக்கப்பட்டு விடுகின்றன. பழங்களை உண்டுவிட்டு அவற்றின் தோல்களை ஆங்காங்கு போட்டு விடுவதால் பிரகாரங்களில் அசுத்தம் ஏற்படுகின்றது. இவையாவும் பாவச் செயல்களாகும்.

விபூதி பிரசாதங்களை இரண்டு கைகளாலும் சிவாச்சாரியாரிடம் பணிந்து வாங்கி பின் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி நெற்றியில் அணிதல் வேண்டும் நெற்றியை நீட்டி விபூதியை அணிந்து விடும்படி சிவாச்சாரியாரைக் கேட்பது முறையன்று . தீர்த்தத்தை இரு கைகளாலும் வாங்கிப்பருகுதல் வேண்டும். தீர்த்தத்தை வாங்கித் தலையிலே பூசிக்கொள்ளுதல் ஆகாது. சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும் போது கோமுகியில் வடிந்து வரும் நீரைச் சிலர் எடுத்துத் தீர்த்தமாகப் பருகுகிறார்கள். அதுவும் முறையன்று.

கூந்தலை விரித்து விடுதல், மூக்கு நீர் சிந்துதல், எச்சில் துப்புதல், காறி உமிழ்தல், தும்முதல், இருமுதல் என்பனவற்றையும் ஆலயங்களில் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். ஆசௌசம் உள்ளவர்களும், வீட்டுக்கு விலக்கானவர்களும், மரணக்கிரியைகளில் கலந்து விட்டும் ஆலயத்திற்குள் செல்லுதல் ஆகாது. இவையாவும் பாவச் செயல்கள் ஆகும். இச்செயல்களால் தெய்வ சாந்நித்தியம் பாதிப்படைகின்றது.

## பிரார்த்தனை

சைவசமயிகள் கடவுள் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள். ஆலயங்களிலும் வீடுகளிலும் பிரார்த்தனைகளைச் செய்யும் வழக்கமே பொதுவாக உள்ளது. பிரார்த்தனைக்கு நேரம், இடம் என்பன இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே, நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் இவ்விடத்திலும் "அவன் தாள் நினை" என்று பெரியோர் நமக்கு அறிவுரை பகன்றுள்ளார்கள். இறைவனுடன் நாம் கொள்கின்ற தொடர்பு பிரார்த்தனையாகும்

பிரார்த்தனைகள், கடவுட் சிந்தனையைப் பிரார்த்திப்பவர்களின் மனங்களில் நிறைக்கின்றன. அதனால் மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயற்தூய்மை என்பன ஏற்படுகின்றன. அப்படியானவர்களின் வாழ்க்கையும் தூய்மை கெட்டு விடுகின்றது. வாழ்க்கையில் தூய்மை ஏற்பட்டு விட்டால் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்தப்பெறுவர். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகள் கிட்டுகின்றன.

பிரார்த்தனைகள், காமியம், நிட்காமியம் என இரண்டு வகைகளாக உள்ளன. பயனை எதிர்பார்த்துச் செய்யப்படும் பிரார்த்தனை, காமியம் எனவும், அவ்வாறு பயனை எதிர்பார்க்காது செய்வது நிற்காமியம் என்றும் அழைக்கப்படுகின்றன. பிரார்த்தனைக்கு மன ஒருமைப்பாடும் பக்தியும் முக்கியம். இறைவன் மீது கொள்கின்ற அன்பே பக்தியாகும்.

உண்மையான பக்தி என்பது இறைவனிடம் எந்த ஒன்றையும் கேட்காது, அவனைப் பிரார்த்திப்பதும், அவனுக்குப் பணிந்து நடத்தலும் அவன் எமக்குத் தருபவற்றை மனமார ஏற்று மகிழ்வதுமேயாகும். பிரார்த்தனையின் அதி உச்சநிலை, இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்து விடுதலேயாகும். பூரண சரணாகதி என்பது இதனையேயாகும்.

கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், எமது தேவைகளையும் விருப்பங் களையும் கடவுள் அறிவார். ஆயினும் எம்மில் பலர் உலகியல் ஆசைகளையெல்லாம் பூர்த்திசெய்ய வேண்டியே பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றோம். எம்முடைய வேண்டுதல்கள் நிறைவேறாத விடத்துக் கடவுளை வைது தீர்க்கிறோம். இவ்வாறு நடந்து கொள்ளுதல் பிரார்த்தனையை கொச்சைப்படுத்துவதாக அமையும். எனவே, பிரார்த்தனை செய்தல் எமது பணி; மிகுதியைக் கடவுள் பார்த்துக்கொள்வர். "என் கடன் பணி செய்து கிடப்பதே"; "இறைவன் கடன் என்னைத்தாங்குதல்" என்கிறார் அப்பரடிகள்.

பிரார்த்தனையை நாம் ஓர் ஆன்மீகப்பயிற்சியாகக் கொள்ளுதலே முறையாகும். ஆலய தரிசனம், நாம சங்கீர்த்தனம், கூட்டுவழிபாடு, தியானம், ஜெபம், விரதமனுட்டித்தல், தேவார திருவாசக பாராயணம், பூசை வழிபாடு, சைவ ஒழுக்க வாழ்வு என்பன பிரார்த்தனையின் அங்கங்கள் ஆகும். "பொன் வேண்டேன், பொருள் வேண்டேன் உன் திருவருள் தான் வேண்டும்" என்கிறார் ஓர் அருளாளர். மனம், மொழி, மெய்த்தூய்மையுடன பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். அதே வேளை பிரார்த்தனைகள் நம்மை மேலும் தூய்மையுடையோராக்கு கின்றன.

மனிதப்பிறவியின் நோக்கம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதல், என்கிறார் நாவலர் பெருமான். ஆலயமும், பிரார்த்தனையும் இவ்வுயர் நோக்கத்தை நாம் அடையப்பெறுதலுக்கு உறுதுணையாக விளங்குகின்றன. என்பதை உணர்வோமாக.

### ஒளி தரும் பல்வகை விளக்குகள்

நிலத்தில் நிலையாக இருக்கும் விளக்கு, குத்து விளக்கு, கைகளில் தூக்கிச்செல்லும் விளக்கு கை விளக்கு தொங்க விடப்பட்டிருக்கும் விளக்கு, தூக்கு விளக்கு, எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு, தூண்டாமணி, கோயில்களில் பெண் உருவோடு கைகளில் அகல் ஏந்தி நிற்கும் விளக்கு, பாவை விளக்கு.




# அம்பிகை வழிபாட்டின் தொன்மை

சிவாகம ஞானசாகரம்
**எஸ். இராமநாத சிவாச்சாரியார்**
திருக்கோலக்கா - சீர்காழி

உலகில் உயிர்கள் யாவும் அநாதியானது என்றும் அழிவிலாதது. உயிர்கள் அவ்வப்போது தன் உடலை மாற்றிக்கொள்கிறது. ஒவ்வொரு உடலுக்கும் ஒரு தாயுண்டு. அந்த தாய் தான் ஸகல சக்தியையும் உருவாக்கித் தருகிறாள். முதலில் தாயை வணங்க, மதிக்கக் கற்றுக் கொண்டான் மனிதன். உலகில் பிறந்தவுடன் அவன் அறிந்தது தாயைத்தான். தாயின் மூலம் தான் தந்தையை அறிகின்றான். தந்தையின் மூலம் நல்ல குருவை அடைகின்றான் குருவின் மூலம் தெய்வத்தை அறிகின்றான். இதனையே மாதா பிதா குரு தெய்வம் என்று கூறப்படுகிறது. தாய் அன்பையும், ஆற்றலையும் பக்குவமறிந்து போதித்து, வல்லவனாக ஆக்குகிறாள். தாயை வணங்கக் கற்றுக்கொண்டதால் தாய் வழிபாடே பின்னர் சக்திவழிபாடாக மிளிர்ந்துள்ளது. தாய் அவனுக்கு அறிவைப் புகட்டினாள். அதுவே பின்னர் அறிவுக்கடவுளான சரஸ்வதி வழிபாடாகவும், தாய் வழிபாடாகவும் தாய் அவனுக்கு தின்பண்டங்கள் வாங்க காசு கொடுத்தாள், அதுவே சகல செல்வங்களைத் தரும் லஷ்மி வழிபாடாகவும், தாய் அவனுக்கு நல்ல ஆற்றலையும் வீரத்தையும் போதித்தாள். இலக்கியத்தில் தாய் தன் கணவன் போரில் வீரமரணம் அடைந்தான் என்பதை தன் ஒரே மகனை சிறுவனாக இருந்த போதிலும் அவனுக்கு பேருடைகளை அணிவித்து வில்லையும், வாளையும் தந்து போருக்கு அனுப்பி மகனே வெற்றியுடன் திரும்பி வா. ஒரு சமயம் மரணம் ஏற்படுமானால் மார்பில் அடிபட்டவனாக இறக்க வேண்டும். முதுகில் அடிபட்டு இறந்தாய் என்பதைக் கேட்டால் உனக்கு பால் தந்த மார்பகத்தை அரிந்து எறிந்துவிடுவேன். என்று வீர வாக்கியம் கூறியதாக தமிழ் இலக்கியங்கள் கூறும் வீரத்தை ஊட்டியதுதான் பின்னர் துர்க்கை வழிபாடாக மிளிர்ந்துள்ளது.

உலகில் மனித குலம் முதன்முதலில் தாயை அறிந்து அவள் மூலமாக எல்லா ஆற்றலையும் பெற்றுள்ளதால், சக்தி வழிபாட்டை முதல் வழிபாடாக அமைத்துக் கொண்டுள்ளது. தாய் (அன்னை) வழிபாடே மிக தொன்மையாக உள்ளது. அதன் வளர்ச்சியே இன்று சக்தி வழிபாடாக திகழ்கிறது.

இறைவன் செய்யும் எல்லாச் செயல்களும் சக்தி மூலம் நடைபெறுவதைச் சிவாகமம் உரைக்கின்றது. இறைவனுக்கு மூன்று சக்திகள் 1. யோகசக்தி, 2. போக சக்தி, 3. வீரசக்தி இறைவன் நிச்சலமாக இருக்கும்போது யோக சக்தியாகவும், உலகைப்படைக்க விரும்பும் போது போக சக்தியாகவும், அருள் பாலிக்க விரும்பும் போது வீர சக்தியாகவம் செயல்படுவதால் அருளது சக்தியாகும் என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது.

இறைவனும் சக்தியும் என்றும் பிரியாதது. நெருப்பும் சூடும் போல, தண்ணீரும் தட்பமும் போல உள்ளது என்பர்.

சமயாசாரியர்கள் இறைவனை சக்தியோடு கண்டார்கள். திருஞானசம்பந்தர், இறைவனை பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே என்றும், திருநாவுக் கரசு சுவாமிகள் மாதர் பிறைக்கண்ணியானை என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணெய் நல்லூர் என்றும் பாடியுள்ளார்கள். மணிவாசகர் பெருமான் பெண் சுமந்த பாகத்தன் என்று பாடியுள்ளார். வேத உபநிஷத் - "அனோரணீயான் மஹதோ மஹீயான்" - அணுவிற்கு அணுவாயும் (சிறியதற்கெல்லாம் சிறியதாயும், மஹத்திற்கெல்லாம் மஹத்தாயும் (பெரியதற்கெல்லாம் பெரியதாயும்) என்று கூறுகிறது.

விஞ்ஞானிகள் அணுவைப்பிளந்து ஆராய்ச்சி செய்த போது ஒரு பகுதி ஆடிக்கொண்டும் ஒரு பகுதி ஆடாமலும் இருந்ததைக் கண்டார்கள். இதனையே மெய் ஞானிகள் சிவம் ஆடிக்கொண்டும், சக்தி ஆடாமல் இருப்பதை நமக்கு நடராஜ தத்துவமாக உணர்த்தி யுள்ளார்கள்.

திருஞானசம்பந்தப்பெருமானுக்கு அருள் பாலிக்க விரும்பிய இறைவன், தன் அருளான சக்தியின் மூலம் ஞானப்பாலைத் தரச்செய்தார். தந்தையான சிவபாதஹிருதயர் கேட்ட பொழுது ஞானக்குழந்தையான திருஞானசம்பந்தர் தோடுடைய செவியன் என்று சக்தியோடு சேர்த்து இறைவனைச் சுட்டிக்காட்டுகிறார்.

சிவாகமம் சிவாலயத்தில், நல்ல குருவின் மூலம் பாசநீக்கம் பெற்ற உயிர்களுக்கு சிவயோகம் தந்த பின்னர் சிவசாயுஜ்யத்தை தருவதை, உயிர்கள் பசுத்தன்மை உடையன என்பதை உள் நந்தியாகவும், பாசம் என்பதை இறைவனை மறைத்திருக்கும் திரையாகவும், அதனை நீக்கி பதியாகிய இறைவனைக் காட்டும் குருவாக குருக்களும் இறைவனைக் கண்ட உயிர்களுக்கு சிவபோகத்தைத் தருபவளாக அர்த்த மண்டபத்தில் போக சக்தியாக இருந்து பின்னர் ஜீவாத்மாவை இறைவனிடம் இரண்டறக் கலக்கச் செய்து சிவஸாயுஜ்யத்தை தருவபளாக சக்தி விளங்குகிறாள்.

பிரம்மனின் சக்தியே பிராம்மி
விஷ்ணுவின் சக்தியே வைஷ்ணவி
மகேசனின் சக்தியே மகேசுவரி
ருத்ரனின் சக்தியே ரௌத்தி
குமரனின் சக்தியே கௌமாரி
இந்திரனின் சக்தியே இந்திராணி
வராக மூர்த்தியின் சக்தியே வாராஹி

ஓம் சக்தி

# கும்பாபிஷேகமென்னும் பெருஞ்சாந்தி

என். ஸ்ரீநிவாசன்
வடமொழித்துறை
சரஸ்வதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கலசங்களில் புனித நதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தங்களால் நிரப்பி அக்கலசங்களை உரிய முறையில் அலங்காரம் செய்து அந்த அந்த தெய்வங்களை அக்கலசங்களில் ஆவாஹனம் செய்வார்கள். அக்கலசங்களுக்கு பூஜைகள் - நிவேதனம் தீபாராதனைகள் நிகழ்த்துவர் இது ஒரு பகுதி.

இதே முறையில் யாக குண்டங்களில் உரிய தேவதைகளை அன்வாரம்பம் என்ற கிரியை மூலம் அக்நியில் வரவழைத்து உரிய மந்திரங்களால் ஹோமங்கள் புரிவர். பூர்ணாகுதி முடிந்ததும் அக்னி குண்டத்தில் பிரசன்னமான தேவதைகளை உரிய கலசங்களில் ஸமாரோபனம் (ஏற்றிக்கொள்ளல்) செய்து அந்தக் கலசங்களிலுள்ள தீர்த்தங்களைக் கொண்டு இறைவனுக்கும் கலசங்களுக்கும் குடமுழுக்குச் செய்யப்படுகிறது. இவ்வாறு இரண்டு பிரிவுகளை ஆலயங்களில் நடைபெறும் யாகசாலைகளில் காணலாம்.

பொதுவாக பல்வேறு யாகங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இந்த யாகங்களையும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். மனிதன் தனது விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள இயற்றப்படும் யாகங்கள் என்றும் வீடுபேற்றினைப் பெறுவதற்கும், உலக மக்கள் நலமாக இருக்கவும் இயற்றப்பெறும் யாகங்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

சொந்தநலம், அல்லது விருப்பங்களுக்காக இயற்றப்பெறும் யாகங்களில் இராஜசூயம், அச்வமேதம், புத்திரகாமேஷ்டி போன்ற யாகங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

உலக மக்கள் நலம் பெறும் பொருட்டு செய்யப்படும் யாகங்களே சிவாலயங்களில் நிகழ்த்தப்படும் யாகங்களாகும். இவை நித்தியம் என்றும், ஏதேனும் ஒரு காரணம் பற்றி சிறப்பாகச் செய்வதை நைமித்திகயாகம் என்றும்; கும்பாபிஷேக காலத்தில் இயற்றப்படும் யாகம், போகங்களையும், மோக்ஷங்களையும் உலக மக்களுக்கு வழங்குவதால் குறிப்பாகவும், சிறப்பாகவும் மோக்ஷத்தை அடைவதைக் குறித்தே இயற்றப்படுவதால் இதனை ஞான யாகம் என்பர். இதனை சிவயாகம் என்றும் கூறுவர். இத்தகைய யாகத்தின் பயன் ஆன்மாவைப் பந்தபாசங்களிலிருந்து நீக்கி பதியாகிய சிவத்துடன் சேர்ப்பதால் சிவயாகம் என்று கூறப்படுகிறது.

சிவாலயங்களில் குறிப்பாக கும்பாபிஷேகங்களில் இயற்றப்பெறும் யாகசாலையில் அமைக்கப்படும் குண்டங்களும் அவற்றின் தத்துவங்களும்.

| எண் | திசை | திக் தேவர்கள் | குண்டம் | அக்னி | தத்துவம் | |
|---|---|---|---|---|---|---|
| 01. | கிழக்கு | இந்திர-திக்கு | நாற்கோணம் | ஆஹவனீயம் | பிருதிவி மண் | |
| 02. | தென்கிழக்கு | அக்னி-திக்கு | அரசிலைக் கோணம் (யோனி குண்டம்) | விருத்தாக்னி | நியதிமாயா | (ஜீவனைக் குறிக்கும்) |
| 03. | தெற்கு | யம-திக்கு | அர்த்த சந்திர கோணம் (அரை வட்டம்) | தக்ஷிணாக்னி | அப்பு-நீர் | |
| 04. | தென்மேற்கு | நிருதி-திக்க | முக்கோணம் | யௌவனாக்னி | தேயு-தீ | |
| 05. | மேற்கு | வருண-திக்கு | விருத்த குண்டம் | கார்ஹபத்னீயம் | ஆகாயம் | |
| 06. | வட மேற்கு | வாயு-திக்கு | அறுகோணம் | பாலாக்னி | வாயு-காற்று | |
| 07. | வடக்கு | குபேர-திக்கு | பத்மகுண்டம் | கேவலாக்னி | கலா | (சூரியனைக் குறிக்கும்) |
| 08. | வடகிழக்கு | ஈசான-திக்கு | எண்கோணம் | ஸாமான்யாக்னி | காலம் | (சந்திரனைக் குறிக்கும்) |
| 09. | வடகிழக்கு திசைக்கும் - கிழக்குத் திசைக்கும் மத்தியில் | | பிரதான குண்டம் | சிவாக்னி | சிவதத்துவம் | (சிவத்தைக் குறிக்கும்) |

ஆதலால் யாகசாலை முப்பத்தாறு தத்துவங்களின் சொரூபமான சிவபெருமானின் அட்டமூர்த்த வடிவமாகும். எட்டுத்திசைகளுக்கும், எட்டு வித அக்கினியும், எல்லாவற்றுக்கும் மேலாக சிவாக்னியும் இதில் இடம்பெற்றிருப்பதால் யாகசாலையே சிவஸ்வரூபமாக உருவாக்கப்பட்டுள்ளது.

**உடல் - வேதி**

**தலை - துரோணகலசம்**

**பாதம் - இரதம்**

**இடக்கை - நெய்ப்பாத்திரம்**

**வலக்கை - ச்ருவம்**

**புலன்கள் - சபையினர்**

**ப்ரயாசை - மஹாபூதங்கள்**

**பல், உதடுகள் - சூக்தவாகங்கள்**

**நாக்கு - யுவாகம்**

**தயை - ஸ்மிருதி**

**ஓங்காரம் - யூபம்**

**ஆசை - ரஸனை**

**மனம் - ரஸம்**

**காமம் - பசு**

**உரோமம் - தருப்பை**

**புலன்கள் - யாகபாத்திரங்கள்**

**கருமேந்திரியங்கள் - அவிசு**

**அனைத்தையும்**

**தியாகம் செய்தல் - தசுஷிணை**

இத்தகைய முறையில் சிவஸ்வருபமாக அமைக்கப்பெற்றுள்ள யாகத்திலிருந்து எழும் அக்னியும் சிவஸ்வருவமே. இந்த யாக குண்டத்தில் இருந்து எழும் புகை, வெப்பம், வேதவோசை, சிவனடியார்களின் சாஸ்திரவோசை, சிவாச்சாரியார்-சாதகர்கள் செய்யும்-சிவமந்திரக்ரியை -பாவனைகளுடன் செய்யும் - செயல்களும் உத்தம மெய்யன்பர்களின் நல்ல எண்ணங்களும் சேர்ந்து எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனது அருட்சக்தியைத் தூண்டி எழுப்பி: கும்பத்தின் மேலும் - அதன் உள்லிக்கும் தீர்த்தங்களிலும் தெய்வீக சக்தியை உருவாக்குகிறது.

உலகியலில் நாம் பயன்படுத்தும் மின்சார சக்தியை கடத்தும்பொருட்கள் -கடத்தாப்பொருட்கள் என்று இரு வகைகளாக விஞ்ஞானிகள் வகைப்படுத்தியுள்ளனர். மின் சக்தியை பொன், செம்பு, இரும்பு போன்ற உலோக வகைகள் எளிதில் கடத்தும். ரப்பர், மரம் போன்றவை மின்சக்தியைக் கடத்தாப் பொருட்கள் என்பர். இவ்வாறே தெய்வீகம் என்ற மின்சக்தியை கடத்தும் பொருட்களாக உள்ளவைகள்:- தெளிந்த ஞானியர் உள்ளம்; அவர்களது சுவாசம், விரல்கள், தருப்பை, மாவிலை ஆகியவை. தெய்வீக அருள் மின்சக்தி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பினும், மேலே கூறிய பொருட்களின் வழியாகவே கடத்தும் தன்மையுள்ளன என்பது ஆன்மீக நூல்களில் காணப்படும் கருத்து. இவற்றின் வழியாகவே, மந்திரங்களாலும், யாகங்களில் செய்யப்படும் கிரியைகளாலும் தூண்டிவிடப்பட்ட ஆன்மீக - மின்சக்தியே சிவகலைகளின் சக்தி. இந்த சக்தியை கடத்தும் பொருள்களாக தருப்பை, மாவிலை போன்ற சாதனங்களின் வழியாக கும்பத்திலுள்ள புனித நீரிலேற்றி, அதிலிலுந்து சிவசக்தியை ஆலயங்களிலுள்ள கும்பங்களில் மற்றும் அங்குள்ள விக்கிரகங்களில் அபிஷேகம் செய்தலே. கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தி ஆகும்.

## கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தியின் பயன்

நாம் தெரிந்தோ - தெரியாமலே அன்றாடம் பல தவறுகளைச் செய்கிறோம். மனம் - வாக்கு - காயம் (மனம் - சொல் - உடல்) ஆகியவற்றால் செய்யும் தீமைகளுக்கு சாந்தி - சாந்திராயணம் கிரிகரம் முதலிய பிராயச்சித்தம் செய்து கொள்வது ஒரு வழி. மற்றது செய்த தீவினைகளின் தீர்வைக் குறித்து அனுட்டிக்கும் பிராயச்சித்தமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை தரிசித்தல்: இதில் ஏதேனும் கைங்கரியம் எனப்படும் திருப்பணி செய்தல் ஆகியவைகளே தீர்வுகள் ஆகும். நாம் செய்த தீவினைகளுக்கு நாம் செய்யும் நல்வினைகளே தீர்வு. இக் கருத்தை சிவப்பிரகாசம் எனும் நூல் விளக்குகிறது.

*உந்த தொழி னிவ்வுரையி லருவினையு முளவா*
*மொன் மொன்றா வழியாதா னொழியா துன்னின்*
*மந்திவந்தி னொரு வினைக்கோர் வினையால் வீடு*
*வைதிகசை வம்பகரு மரபி னாந்தப்*
*பந்தியது கழியுமிது விலையா லேந்தும்*
*பான்மையுமாம் பண்ணாது பலிக்கும் முன்னஞ்*
*சொந்தருநூல் வழியின்வரின் மிகுதி சோருஞ்*
*சேராதங் கதுமேலைத் தொடங்கியாமே*

என்கிறது. தீவினைகளுக்கெல்லாம் தலையாயது சிவஅபராதம். நாள்தோறும் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்ய வேண்டும். இது இன்றைய காலகட்டத்தில் நம்மால் இதைச் செய்ய முடிவதில்லை. அப்படியே சென்றாலும், அமைதியற்ற மனநிலையால் ஆலயத்தில் தெரிந்தோ, தெரியாமலோ சில தவறுகள் செய்கிறோம். இது கூட சிவஅபராதமே. இவற்றை நீக்கிக்கொள்ள பிராயச்சித்தங் களை - சாந்திகளைச் செய்துகொள்ளவும் நமது முன்னோர்கள் வழிகாட்டியுள்ளனர்.

ஒருவன், தனது வாழ்க்கையில் தன்னையறிமாமல் தினந்தோறும் செய்த தீவினைகள், நாடோறும் செய்யும் சிவாலய தரிசனத்தால் நீங்கும். நாள்தோறும் சிவதரிசனம் செய்யாமல் வரும் தீவினைகள் உற்சவதரிசனத்தால் தீரும். அந்த உற்சவ தரிசனத்தில் நேரும் பிழைகளும் தீவினைகளும் மகா கும்பாபிஷேக தரிசனத்தால் நீங்கும்.

ஆகையால் தான் எவ்வகையாலும் தீராத சிவாபராதங்களைத் தீர்க்கும் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி என்று சைவ நூல் உணர்ந்தோர் கூறுவர். இதனை திருஞானசம்பந்த சுவாமிகள் தமது தமிழ் மறையில் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தியென்று திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்.

**உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போக்கும்**
**இருஞ்சாக்கி யர்களெடுத்து ரைப்ப நாட்டில்**
**கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தான்**
**பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.**

- திருமயிலை தேவாரம் -

ஆதலால் கும்பாபிஷேக தரிசன பலன் அளவிடற்கரியது. போக மோக்ஷங்களின்றி - பேரானந்த மோக்ஷத்தையே கொடுக்க வல்லது. இத்தகு சிறப்பு மிகுந்த கும்பாபிஷேகத்தை தரிசித்து தீவினைகள் நீங்கி, இகத்திற்கு வேண்டிய புத்திரப்பேற்றையும் - பரத்திற்கு வேண்டிய சிவப்பேற்றையும் பெறுவோமாக.

## வாகனங்களும் பொருளும்

உற்சவ காலங்களில் கடவுள் வாகனங்களில் எழுந்தருளி வருவர். அவை பொதுவாய் மாசு நீங்கிய ஆன்மாக்களைக் குறிக்கும். அன்றியும் ஆன்மாக்களே என்றும் அடிமையாக உடையவர் என்பதையும் கருதும். சில வாகனங்கள் வேறு பொருள்களையும் காட்டுகின்றன. ஒவ்வொரு மூர்த்திக்கும் சிறப்பாக ஒவ்வொரு வாகனம் உண்டு. ஒரு மூர்த்தியே பல வாகனங்களில் வருவதும் வழக்கம். பல மூர்த்திகளும் ஒரு மூர்த்திதானே! சில வாகனங்களின் பொருள்களைக் கீழ் காண்க.

### ரிஷபம் - எருது

நான்கு கால்கள் நான்கு அந்தக்கரணங்கள்; இவை சக்தியில் ஒடுங்க சக்தி ஞானம் தோன்றும்; இஞ்ஞானம் பசு ரூபமாகிய பசு போதம்; இப்பசு ஞானத்துக்கு மேலான பதிஞானத்திலே விளங்குபவர் சிவபெருமான்.

சமம், விசாரம், சந்தோஷம், சாது, சங்கம் ஆகிய நான்கு குணங்களும் தரும தேவதையின் நான்கு குணங்கள; அவை கால்கள் ஆகும் ; அத் தரும தேவதை தூய வெண்மையானது ; அத்தேவதையையே வாகனமாகக் கொண்டு அருள் செய்வர்.

ஒரு காலத்தில் ஞானமும், விஷ்ணுவும் வேண்டிக் கொண்ட படியால் அவைகளையே வாகனமாகக் கொண்டார் என்றும் கூறுவர்.

புண்ணிய வடிவான இடபத்தின்மீதே சிவபெருமான் காட்சி கொடுக்கின்றார் என்பது பிரத்தியட்சம். பொறுமையே எருது என்றுஞ் சொல்வர்.

### மூஷிகம்

பெருச்சாளி, மூஞ்சுறு, எலியெனவும் படும்.

இது சிறப்பாக விநாயகருக்குரியது; கயமுக அசுரன் மூஷிகமாய் வர, அருள்செய்து, அவனை அடிமை கொண்டு வாகனமாக்கியது.

விநாயகர் ஓங்கார வடிவம் ; அதனுள் பேரண்டங்கள் அடங்கும்; அவைகளை அடக்கியிருக்கும் பெரிய வடிவினை உடையவர், சிறிய மூஞ்சுறு தாங்கக்கூடிய அவ்வளவு சிறய வடிவினராயும் அமைய வல்லவர்.

ஆன்மா அளப்பரிய பெருமையுடையது; அவ்வாறே நுண்மையுமுடையது ; உடல் சிறியதாயிருந் தாலும் உள்ளிருக்கும் ஆன்மா சிறியதல்ல; யானை உருவான பெரிய வடிவத்தை அது தாங்க முடியும் ; இன்னும் பலவாறும் கூறுவர்.

### சிங்கம்

பொதுவாய் இது அம்மையினுடைய வாகனம் ; துர்க்கை, காளி முதலிய மூர்த்திகளுக்கு இது வாகனம். பராக்கிரமத்தை இது குறிப்பது. மிருகங்களை அடக்கி ஆள்வது போல், தேவியும் வேண்டுவோருடைய மூர்க்க குணங்களை ஒட்டி, அடக்கி, ஆண்டு அருள்புரிவாள் என்பது.

சி




# மங்களம் தரும் வேதம் - ஆகமம் - யாகம்



**எஸ் நாராயணசுவாமி**, எம். ஏ, எம், ஏ. எம். எட்,
ஆசிரியர், திருவாவடுதுறை ஆதீனக்கல்வி நிலையம்,
திருவிடைமருதூர்

(இக்கட்டுரை ஆசிரியர் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகத்தில் யாவரும் பொதுவாக அறிதல் வேண்டி வேதம், ஆகமம், யாகம், யாகத்திற்குரிய பொருள்கள், பிறபலன்கள் ஆகியன தொகுத்து வழங்கியுள்ளார்.)

ஓம் என்ற மூலமந்திரத்தை விளக்க வந்தது வேதாகமம். அது ஈஸ்வரனின் அருளையும், புருஷர்களுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பையும், தொடர்பினால் ஏற்படுகின்ற பாசத்தையும் விடுவிக்கின்ற முறையினையும்,பாசத்தை விட்டதனால் மனிதன்(பசு) சர்வேஸ்வரனின் திருவருளுக்குப் பாத்திரமாகின்றான் என்பதையும் விளக்குகிறது.

மேற்கண்ட கருத்தை விளக்க வந்ததுதான் நான்கு வேதங்களும்,அதன்முடிவாக அமைந்த உபநிஷத்துக் களுக்கும், அதன் பிறகு வந்த ஆகமங்களும் ஆகும்.

## ஆகமத்தின் பொருள்

காமிகம் முதலிய சிவஞானம் ஊர்த்துவச் சுரோதோற்பவங்களாகி மேன்முகத்திற் பிறந்தன, என்று காமிகாகமம் கூறுகின்றது. வேதங்களான இருக்கு, யசுர், சாமம், அதர்வம், என்பது சிவனது மற்றை முகங்களில் பிறந்தன.

இந்தச் சிவாகமங்கள் காமிகம் முதலாக இருபத்தெட்டு ஆகமங்களாம்.

1) ஆ - என்பது பாசம், க - என்பது பசு, ம - என்பது பதி (உலகம், ஆன்மா, கடவுள்). ஆகவே முப்பொருள் உண்மையை விளக்க வந்ததுதான் ஆகமம் என்று புலப்படுகிறது.

2) ஆ - என்பது சிவஞானமும், க - என்பது மோட்சமும், ம - என்பது மலநாசமும் ஆகும். ஆன்மாக்களிடத்தில் இருக்கும் மும்மலத்தையும் நாசம் செய்து சிவஞானத்தைத் தோற்றுவித்து மோட்சத்தைக் கொடுக்கவல்லது ஆகமமேயாகும்.

இதனை மணிவாசகர் கூறுகையில்

**ஆகமம்** ஆகி நின்று அண்ணிப்பான் தாழ் வாழ்க
என்று திருவாசகத்தில் கூறுகின்றார்.

## ஆகமங்கள்

(1) காமிகம், (2) யோகசம், (3) சிந்தியம், (4) காரணம், (5) அசித்தம், (6) தீப்தம், (7) சூக்குமம், (8) சகச்சிரம், (9) அம்சுமான், (10) சுப்பிரபேதம், (11) விஜயம் (12) திக்வாசம், (13) சுவாயம்புவம், (14) ஆக்கினேயம், (5) வீரம், (16) ரௌரவம், (17) மகுடம், (18) விமலம், (19) சந்திரஞானம், (20) முகவிம்பம், (21) புரோற்கீதம் (22) லளிதம், (23) சித்தம், (24) சந்தானம் (25) சர்வோக்தம், (26) பாரமேசுரம் (27) கிரணம் (28) வாதுளம் முதலியன. மேலும் இதனுள் 207 உபாகமங்களும் உள்ளன.

## ஆகமத்தினுள்ளே

இவ்வாகமங்கள் மந்திரமெனவும், தந்திரமெனவும், சித்தாந்தமெனவும் பெயர்பெறுகின்றன. இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் ஒவ்வொன்றுக்கும் கோடி கிரந்தமாக இருபத்தெட்டுக் கோடி கிரந்தங்கள் உள்ளன. இவைகள் (1) ஞானபாதம், (2) யோகபாதம் (3) கிரியாபாதம் (4) சரியாபாதம் என்று நான்கு பாதங்களாக அமைந்துள்ளன.

(1) பதி, பசு, பாசம் (கடவுள், ஆன்மா, உலகம்) என்னும் முப்பொருளின் உண்மையை ஞானபாதம் விளக்குகின்றது.

(2) பிராணாயாமம் முதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத்தை யோக பாதம் விளக்குகின்றது.

(3) மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமம், என்பவைகளையும் விளக்கி, சமய தீட்சை, விஷேச தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரியாபிஷேகம் முதலியவைகளைக் கிரியாபாதம் விளக்குகின்றது.

(4) சமயாசாரங்களையும் அதன் நுட்பங்களையும் தொண்டு செய்கின்ற வழிமுறைகளையும் சரியாபாதம் விளக்குகின்றது.

இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் சிவபெருமானது ஒவ்வொரு அவயவத்தைப் பொருந்துவது போல அமைந்துள்ளன.

ஆகமங்களின் விஷயங்கள் வேதங்களில் நேரிடையாகக் கூறப்படாமல் சுலோகமாகச் சொல்லப் பட்டுள்ளன. மேலும் வேதச்சொற்கள் நுட்பமான சொற்களினாலும், ஆகமங்கள் எளிய சொற்களினாலும் (விரிவுரை போன்று) அமைந்துள்ளன. வேத வாக்கியங்கள் சுலோகமாதால் பல பொருளாகக் கொள்ளப்படும். ஆகமம் தெளிந்து உணர்த்தும் விரிவுரையாகப் பொருள் கொள்ளக் கூடியதாகும்.

### வேதாந்தம்

வேதங்களின்முடிவாக அமைந்த உபநிஷத்துக்கள் தான் வேதாந்தமாகும். வேதம் + அந்தம் (முடிபு) - வேதாந்தம். இந்த வேதாந்தத்திற்கு விளக்கம் அளித்தவர்கள் தாம் ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலியோர். பிறகு இவர்கள் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் செய்யும் போது தங்கள் விளக்கத்திற்கு, அத்வைதம் விசிஷ்டாத்வைதம், துவைதம் என்று பெயர் சூட்டினர்.

### இருக்கு வேத உபநிஷத்துக்கள்

இந்த இருக்கு வேதம் 21 சாகைகளைக் கொண்டது (1) ஐத்ரேய, (2) கௌஷீதகீ, (3) நாதவிந்து, (4) ஆத்மப்பிரபோதம், (5) நிருவாண, (6) முத்கலை (7) அட்சமாளிகை, (8) திரிபுரை, (9) சௌபாக்கியம் (10) வக்விருச்சானை என்ற பத்து உபநிஷத்துக்கள் கொண்டதாகும்.

### யஜுர்வேத உபநிஷத்துக்கள்

இவ்வேதம் 180 சாகைகளைக் கொண்டது. இதனுள் 51 உபநிஷத்துக்கள் உள்ளன. அவையாவன (1) கடவல்லி, (2) தைத்திரியம், (3) பிரமம், (4) கைவல்லியம், (5) சுவேதாச்சுவதரம், (6) கர்ப்பம், (7) நாராயணம், (8) அமிர்தவிந்து, (9) அமிர்தநாதம் (10) காலாக்கினிருத்ரம், (11) சுரிகை, (12) சர்வசாரம், (13) சுகரகசியம், (14) தேசோவிந்து, (15) தியானவிந்து, (16) பிரமவித்தியை, (17) யோகதத்துவம், (18) தட்சணாமூர்த்தி, (19) கந்தம், (20) சாரீரகம், (21) யோகசிகை (22) ஏகாச்சரம், (23) அட்சியம், (24) அவதூதம், (25) கரம், (26) உருத்திரவிருதயம், (27) யோகுகுண்டலினி, (28) பஞ்சப்பிரமம், (29) பிரானாக்கினி, கோத்ரம், (30) வராகம் (31) கலிசந்தரணம், (32) சரசுவதி, (33) ஈசாவாசியம் (34) பிருகதாரணியம், (35) சாபாலம், (36) அம்சம், (37) பரமஹம்சம், (38) சுபாலம், (39) மந்திரிகை, (40) நிராலம்பம், (41) திரிசிகி, (42) மண்டலம் (43) அத்துவயதாரகம், (44) பைங்கலம், (45) பிட்சு (46) துரியாதீதம், (47) அத்தியாத்துமம், (48) தாரசரம், (49) யாக்ஞவல்கியம், (50) சாட்டியாயனி (51) முத்திகம்

### சாமவேத உபநிஷத்துக்கள்

இந்தவேதம் 1000 சாகைகளைக் கொண்டது. இதனுள் 16 உபநிஷத்துக்கள் உள்ளன. (1) கேணம், (2) சாந்தோக்கியம் (3) ஆருணி, (4) மைத்திராயணி, (5) மைத்திரேயி, (6) வச்சிரசூசிகம், (7) யோகசூடாமணி, (8) வாசுதேவம், (9) மகத்து, (10) சந்நியாசம், (11) அவ்வியக்தம், (12) குண்டிகை, (13) சாவித்திரி, (14) உருத்திராக்க சாபாலம், (15) தரிசனம், (16) சாபாலம் முதலியன ஆகும்.

### அதர்வணவேத உபநிஷத்துக்கள்

இவ்வேதம் 50 சாகைகளைக் கொண்டது. இதனுள் 31 உபநிஷத்துக்கள் உள்ளன. (1) பிரச்சினம், (2) முண்டகம், (3) மாண்டூக்கியம், (4) அதர்வசிரசு, (5) அதர்வசிகை, (6) பிருகச்சாபலம், (7) நிருசிம்மதாபினி, (8) நாரதபரி, (9) விராசகம், (10) சீகை, (11) சரபம், (12) திரிபாத்வீயமகாநாராயணம், (13) இராமரகசியம், (14) இராமதாபினி, (15) சாண்டில்யம், (16) பரமஹம்சபரி விசாசகம், (17) அன்னபூரணை (18) சூரியன், (19) ஆத்மம், (20) பாசுபதம், (21) பரப்பிரம்மம், (22) திரிபுராதபினி, (23) தேவி, (24) பாவனை, (25) பஸ்மசாபாலம், (26) கணபதி மகாவாக்கியம், (27) கோபாலதபனம், (28) கிருஷ்ணம், (29) ஹயக்கிரீவம், (30) தத்தாத்ரேயம், (31) காருடம் முதலியன ஆகும்.

வேதத்தின் ஞானகாண்டமும், ஆகமத்தின் ஞான காண்டமும் முப்பொருள் உண்மையை விளக்க வந்தவையாகும். சனகாதி முனிவர்கள் கூறுகையில் சித்தாந்தத்தின் கருத்துக்களை வேதமும், ஆகமங்களும் தன்னகத்தே நிறுத்தியும் பல்வேறு வழிகளைக் காட்டியும் உண்மைப் பொருளை உள்ளவாறு வேதாகமங்கள் விளக்குகின்றன. என்று தெளிவுபடுத்தியுள்ளனர். இவ்வாறான வேதங்கள் - ஆகமங்கள்; ஆகமங்களில் சொல்லப்பட்டவாறு அமைந்த கோயில்களில், விளங்கும் தெய்வத்திருமேனிகளுக்கு உரிய யாகங்கள் யாவும் இன்றைக்கும் திருக்கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றன. யாகசாலைகள், யாகமந்திரங்கள், யாகதிரவியங்கள் அபிஷேகங்கள், உபசாரங்கள் யாவும் பல நிலைகளில் விரிவாகவும், சுருக்கமாகவும் நிகழ்த்தப் பட்டு வருகின்றதை யாவரும் அறிவர்.

யக்ஞம், யாகம், ஹோமம், வேள்வி, ஓமம் என்ற சொற்கள் ஒரே பொருளைத் தருவனவாகும். கடமை என்ற சொல்லிற்கு நம் முன்னோர்கள் வகுத்த சொற்களாகும். இறைவனுக்கு யாகம் செய்து வழிபடுவதும் ஒரு நல்ல கடமையாகும். யாகத்தின் மூலமாக முழுமையான பலனை அடையலாம். யாகத்தின் ரூபமாக சிவன் விளங்குகின்றார். என்பதனை யக்ஞ ரூபய நம: என்ற பதம் விளக்குகின்றது.

### ஐவகை யாகம்

(1) சிவனை எண்ணுதல், சிவபூசை செய்தல் கர்மயாகம் ஆகும். (2) உடம்பை வளர்க்காது விரதம் இருந்து ஐம்புலனை அடக்குதல் தவயாகமாகும்.

(3) சிவ மூலமந்திரம் (பஞ்சாட்சரம்) ரூத்ரம் முதலான மந்திரங்களை ஜபித்தல், ஜபயாகம் ஆகும். (4) சதாகாலம் சதாசிவனை தியானித்தல் தியான யாகம் ஆகும். தியானத்தினால் இறைவனது அருளால் ஞானத்தைப் பெற்று அந்த ஞானாதீதத்தில் திளைத்திருப்பது ஞானயாகம் என்று இவை ஐவகை யாகங்களாகும்.

## மற்றைய யாகங்கள்

கணபதி முதலான அனைத்துத் தெய்வங்களுக்கும் யாகாதி விசேஷங்கள் உண்டு. இவை தவிர ஆன்மாக்களின் இஷ்ட காம்யங்களை பூர்த்தி செய்யும் யாகங்களும் உண்டு சிறப்பாக ஏககாலத்தில் பிரதான மூர்த்தியோடு இந்திராதி முதலான அனைத்து விசேஷ மூர்த்திகளுக்கு திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் என்ற முறையில் விசேஷ யாகங்கள் பல காலங்களோடு அனுசரித்து செய்யப்படுவதாகும். இந்த யாகங்கள் சிறப்பினுள் சிறப்பாகும்.

## யாகசாலையின் பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| குகபதம் | - 1 | தத்வ பதம் | - 64 |
| சக்தி பதம் | - 8 | புவன பதம் | - 72 |
| நாத பதம் | - 18 | மந்த்ர பதம் | - 80 |
| பிந்து பதம் | - 24 | பத பதம் | - 88 |
| சதாசிவ பதம் | - 32 | வர்ண பதம் | - 96 |
| மகேசுவர பதம் | - 40 | ருத்ர பதம் | - 104 |
| சுத்தவித்யாபதம் | - 48 | விஷ்ணுபதம் | - 112 |
| கலா பதம் | - 56 | பிரம்ம பதம் | - 120 |
| சுத்தமாயா பதம் | - 128 | கண பதம் | - 192 |
| மிச்ரமாயா பதம் | - 136 | சித்த பதம் | - 200 |
| கலா பதம் | - 144 | ஆர்ஷ பதம் | - 208 |
| காலம் பதம் | - 152 | யக்ஷ பதம் | - 216 |
| நியதி பதம் | - 160 | கந்தர்வ பதம் | - 224 |
| வித்யா பதம் | - 168 | சுரபதம் | - 232 |
| ராக பதம் | - 176 | ரக்ஷாபதம் | - 240 |
| வேத பதம் | - 184 | மாநவ பதம் | - 248 |

## யாக சமித்துகள்

01. வெள்ளெருக்கு
02. பலாசு
03. கருங்காலி
04. நாயுருவி
05. அரசு
06. மா
07. வில்வம்
08. வன்னி
09. அத்தி
10. ஆல்
11. பலா
12. புன்னை
13. மகிழ்
14. மூங்கில் (முள்நீக்கியது)
15. மாதுளை
16. கிளுவை
17. அறுகு
18. சந்தனக்கட்டை
19. வெள்ளெருக்கு
20. வெட்டிவேர்
21. விளாமிச்சவேர்
22. செஞ்சந்தனக்கட்டை
23. அகில்
24. தேவதாரு
25. பாதிரி
26. செண்பகம்
27. அசோகம்
28. குங்கிலியம்
29. நெல்லி
30. மாவிறகு 1 அடி நீளம் கைப்பருமன்
31. அரசு 1 அடி நீளம் கைப்பருமன்

(குறிப்பு: 1 முதல் 19 வரை உள்ள சமித்துக்கள் 9 அங்குல நீளம் விரல் பருமனாகவும் 20 முதல் 29 முடிய 6 அங்குல நீளம் விரல் பருமனாகவும் இருக்க வேண்டும்.

## யாக குண்டம்

1. சதுர குண்டம்
2. யோனி குண்டம்
3. அர்த்த சந்திர குண்டம்
4. திரிகோண குண்டம்
5. ஷட்கோண குண்டம்
6. பத்மகுண்டம்
7. விருத்தகுண்டம்
8. அஷ்டகோணகுண்டம்
9. பிரதானமான விருத்த குண்டம்

## குடத்தில் சுற்றப்படும் நூல்

குடத்தில் சுற்றப்பட்டுள்ள நூல் மூன்று உள்ளதாக இருக்க வேண்டும் இந்த சுற்றுகள் உத்தமம், மத்திமம், அதமம் எனப்படும்.

1. உத்தமம்: நூல் சுற்றப்பட்டுள்ள இடைவெளி எள் அளவு இருப்பது
2. மத்திமம்: நெல் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது
3. அதமம்: யானையின் கண் இடைவெளி உள்ளசுற்றாக இருப்பது.

## அஷ்டபந்தன திரவியங்கள்

(1) சுக்கான்கல், (2) குங்கிலியம், (3) கொம்பரக்கு, (4) தேன்மெழுகு, (5) நற்காவி, (6) செம்பஞ்சு, (7) சாதிலிங்கம் (8) எருமை வெண்ணெய்,

## கணபதிக்கு உரிய சிறப்பு ஹோம திரவியங்கள்

அறுகு, மோதகம், அவல், நெற்பொறி, சத்துமா, கருப்பங்கழி, தேங்காய்க்கீற்று, சுத்தமானஎள், வாழைப்பழம் இவைகளில் தேன், நெய், பால், வெல்லம் இவைகளைச் சேர்த்து ஹோமம் செய்யவேண்டும்.

## தீர்த்தங்கள்

திருக்குடங்களில் சேர்க்கப்படும் தீர்த்தங்கள் - கங்கை, யமுனை, கிருஷ்ணா, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, சரசுவதி, குமரி, பயோஷ்ணி, சரயு மற்றும் அவ்வத்தலங்களில் பிரதானமாக விளங்கும் தீர்த்தத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## வாசனைப் பொருள்கள்

கொட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம்

## எட்டுவகைத் தானியங்கள்

நெல், கம்பு, வரகு, தினை, சாமை, சோளம், துவரை, மூங்கில்நெல்

### பஞ்சகுண்ட விபரம்

1. கிழக்கில் - அஹவனியாக்னி - சதுரகுண்டம்
2. தெற்கில் - தக்ஷினாக்னி - அர்த்தசந்திர குண்டம்
3. மேற்கில் - கார்ஹபத்யம் - விருத்தகுண்டம்
4. வடக்கில் - கேவலாக்னி - பத்மகுண்டம்
5. வடகிழக்கில் - சிவாக்னி - விருத்தம் அல்லது சதுர குண்டம்

### நவகுண்டம்

1. கிழக்கு - அஹனியாக்னி - சதுரகுண்டம்
2. தென்கிழக்கு - விருத்தாக்னி - யோனிகுண்டம்
3. தெற்கு - தக்ஷிணாக்னி - அர்த்தசந்திர குண்டம்
4. தென்மேற்கு - யௌவனாக்னி - திரிகோணகுண்டம்
5. மேற்கு - கார்ஹபத்யாக்னி - விருத்தகுண்டம்
6. வடமேற்கு - பாலாக்னி - அறுகோணகுண்டம்
7. வடக்கு - கேவலாக்னி - பத்மகுண்டம்
8. வடகிழக்க - சாமான்யாக்னி - எண்கோண குண்டம்
9. ஈசான்யம் - சிவாக்னி - விருத்தகுண்டம்

### ஸ்நபனங்களின் எண்ணிக்கை (கும்பங்கள்)

01. நவகலச ஸ்நபனம்
02. சப்த தச கலசஸ்நபனம்
03. பஞ்சவிம்சதி கலச ஸ்நபனம்
04. ஏகோநபஞ்சாசத் கலச ஸ்நபனம்
05. ஏகாசீதி கலச ஸ்நபனம்
06. நவோத்ரசத கலச ஸ்நபனம்
07. நவோத்ர சதுர்விசத கலச ஸ்நபனம்
08. நவோத்ர சதுர்விசத கலச ஸ்நபனம்
09. நவோத்ர சகஸ்ர சலக ஸ்நபனம்
10. சகஸ்ர சங்க மகா ஸ்நபனம்

### உதக திரவியங்கள்

1. ரத்தினோதகம்
2. லோகோதகம்
3. தாதூதகம்
4. பீஜோதகம்
5. சுத்தோதகம்
6. மிருதூதகம்
7. மார்ஜன உதகம்
8. பத்திரோதகம்
9. பரிமார்ஜன உதகம்
10. புஷ்போதகம்
11. மான்யோதகம்
12. அஸ்திரோதகம்
13. பலோதகம்
14. காஷாயோதகம்
15. ஆர்கோதம்
16. காந்தோதகம்
17. மூலதோயம்
18. சாந்தியுதோகம்
19. புஷ்கரோதகம்
20. கோதுமை
21. குளச்செந்நெல்
22. சந்தனாதித்தைலம்
23. நெல்லிமுள்ளி
24. மஞ்சள்மா

### ஆசனம்

1. பிருதுவி தத்துவம் - கூர்மாசனமும்,
2. உபவேதிகை - அனந்தாசனமும்
3. நெல் - யோகாசனமும்
4. அரிசி - பதுமாசனமும்
5. எள் - விமலாசனமும்
6. நெல் மற்றும் மலர் - சத்தியாசனமுமாகப்

பிருதுவி முதற் குடிலையீறாகிய 36 தத்துவங்களும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன.

### மந்திர வகைகள் (பொது)

1. மூலமந்திரம்
2. பீஜமந்திரம்
3. பஞ்சமந்திரம்
4. சடங்க மந்திரம்
5. சம்ஹிதாமந்திரம்
6. பதமந்திரம்
7. மாலாமந்திரம்
8. சம்மேளன மந்திரம்
9. காயத்திரி மந்திரம்
10. அசபா மந்திரம்
11. பிராண பிரதிட்டா மந்திரம்
12. மாத்ருகா மந்திரம்
13. மோனமந்திரம்
14. சாத்யமந்திரம்
15. நாமமந்திரம்
16. பிரயோக மந்திரம்
17. அத்திர மந்திரம்
18. விஞசனமந்திரம்
19. பசிநீக்கு மந்திரம்
20. விண்ணியக்க மந்திரம்
21. வேற்றுரு மந்திரம்
22. துயில் மந்திரம்
23. திரஸ்கரிணி மந்திரம்
24. சட்கர் மந்திரம்
25. அஷ்டகர்ம மந்திரம்
26. பஞ்சகிருத்ய மந்திரம்
27. அகமருடண மந்திரம்
28. ஏகாக்ஷர மந்திரம்
29. திரியக்ஷரி மந்திரம்
30. பஞ்சாக்ஷர மந்திரம்
31. சடாக்ஷர மந்திரம்
32. அஷ்டாக்ஷர மந்திரம்
33. நவாக்கரி மந்திரம்
34. தசாக்ஷர மந்திரம்
35. துவாதச நாம மந்திரம்
36. பஞ்ச தசாக்கரி மந்திரம்
37. சோடாசாக்ஷரி மந்திரம்
38. தடை மந்தரம்
39. விடை மந்தரம்
40. பிராசதா மந்திரம்
41. உருத்திரமந்திரம்
42. சூக்தமந்திரம்
43. ஆயுள் மந்திரம்
44. இருதய மந்திரம்
45. கவச மந்திரம்
46. நியாச மந்திரம்
47. துதி மந்திரம்
48. உபதேச மந்திரம்
49. தாரக மந்திரம்
50. ஜெப சமர்ப்பண மந்திரம்
51. நீலகண்டம்
52. மிருத்யுஞ்சயம்
53. தட்சிணாமூர்த்தி
54. சரபம்
55. வீரபத்ரம்
56. விநாயகம்
57. சண்முகம்
58. பைரவம்
59. நாரசிங்கம்
60. நவக்கிரகம்
61. வாலை
62. புவனை
63. திரிபுரை
64. துர்க்கை
65. அசுவாரூடி
66. சப்தமாதா
67. முப்பத்து முக்கோடி தேவர்கள்
68. பதிணெண்கணம்
69. யோகினியர்
70. காலக்கடவுள்

#### சப்தகோடி (முடிவு) மகா மந்திரங்களின் விளக்கம்

### 1. நம

வணக்கம், தம்பனம் - நிலைநிறுத்தல். இறைத் திருவருள் தன்னில் நிலைக்க வேண்டல். இது மூலமந்திரங்களின் முடிவில் வைக்கப்படும்.

### 2. ஸ்வாஹா

இது பெரும்பாலும் ஓமித்தலில் பயன்படுகிறது. ஒரு மந்திரத்தின் உபாசனா தேவதைக்கு ஓமத்தில் அளிக்கப்படும் பொருள் கொண்டு அத் தேவதை திருப்தியுற வேண்டும் என வேண்டுதல் ஆகும்.

### 3. வஷட்

இதன் மூலம் நம விழைவு எதையும் தன் வயப்படுத்தல் (வசியம்) என்பது உணர்த்தப்படுகிறது.

### 4. வௌஷட்

இது நமது விருப்பம் எப்பொருளையும் தன் அருகாமையில் ஈர்த்துக் கொள்ளல் (ஆகர்ஷணம்) ஆகும்.

### 5. ஸ்வதா

இது எரியிலிடாது தேவர்கட்கும், இருடிகட்கும், முனிவர்க்கும், பிதிரர்கட்கும், கணங்கட்கும், உலகிலுள்ள ஆன்ம கோடிகட்கும் அளிக்கப்படும் பொருள்கள் அவ்வப்பிரிவினர்க்கு மகிழ்வு (துஷ்டி) அளிக்க வேண்டுதலாம்.

### 6. ஹூம்

இது மந்திர/அஸ்திர தேவதைகள் தன் பகைவரை அச்சுறுத்தி அவர்களைத் தனக்குப் பணிய வைப்பதை வேண்டுவதாம்.

### 7. பட்

ஏவிய காரியத்தை உடன் முடிக்க வேண்டுதல் (விஜர்ஜனம்) இதன் குறிக்கோள் ஆகும்.

(குறிப்பு: பெரும்பாலும் இவையிரண்டையும் கூட்டி ஹூம்பட் என்றே பயன்படுத்துவர்

### 8. ஹை ஹை

இதன் பயன் தன் பகைவன் முற்றிலும் செயலற்ற நிலை (மரணம்) பெற உந்துவதாகும்.

இவ்வாறு இக்கோடி மந்திரங்களை தனித்தனியாகவும் இரண்டு அல்லது மூன்றினைக் கூட்டியும் பயன்படுத்துவது மந்திர சாஸ்திரத்தில் அனுமதிக்கப் பட்டுள்ளது.

### யாகசாலைக்குரிய திரவியங்கள்

மஞ்சள்பொடி
திரவியப்பொடி
மாப்பொடி
குங்குமம்
சந்தனம்
புஷ்பம்
நல்லெண்ணெய்
கடலை எண்ணெய்
பசுநெய்
பசும்பால்
பசுந்தயிர்
எலுமிச்சம்பழம்
நாரத்தம்பழம்
பூவன்பழம்
வெற்றிலை
பாக்கு
சீவல்
கூடம்
பத்தி

சாம்பிராணி
குங்குமப்பூ
பச்சைக் கற்பூரம்
ஏலக்காய்
கிராம்பு
பன்னீர்
ஜலதிரவியம்
தேங்காய்
இளநீர்
வாழையிலை
பச்சை அரிசி
தொன்னை
வாழைக்காய்
மூங்கில் தட்டு
விசிறி
உழுந்து
பயறு
கடுகு

பிள்ளைப்பூண்டு
கடலை
கோதுமை
மொச்சை
கொள்ளு
எள்
அகில்
முகில்
தேவதாரு
சந்தனக்கட்டை
கோரைக் கிழங்கு
பூலாங்கிழங்கு
செண்பக மொட்டு
ரோஜாமொட்டு
வலம்புரி
இடம்புரி
கஸ்தூரி மஞ்சள்
விரளிமஞ்சள்
தாமரைக்கிழங்கு
தாமரைக் காய்
சுக்கு
அரிசிதிப்பிலி
சித்திரத்தை
வெள்ளை மிளகு
கிராம்பு
வெண்கடுகு
யவைநெல்
சாமைநெல்
மூங்கில் அரிசி
தினை
ஜடாமஞ்சு
மட்டிப்பால்
நெரி அரிசிபால்
அகுபாக்கு
வால்மிளகு
ஜாதிக்காய்
ஜாதிபத்திரி
புனுகு
ஜவ்வாது
கச்சோலம்
கஸ்தூரி
கோரோசனை
அரகஜா
சந்தனாதிதைலம்
தேன்
சர்க்கரை
கற்கண்டு
காறாகருணை
சேமங்கிழங்கு
மலைப்பழம்
அன்னாசிப்பழம்
நாவல்
பம்பிளிமாஸ்
பேயன்பழம்
ரஸ்தாளிப்பழம்

ஆரஞ்சு
சாத்துக்குடி
தம்பரத்தம்பழம்
வில்வப்பழம்
விளாம்பழம்
கொடிமுந்திரிப்பழம்
கரும்பு
பலாப்பழம்
மாம்பழம்
கருப்பஞ்சாரு
விளாமுச்சிவேர்
திராட்சை
பேரீச்சம்பழம்
கடுக்காய்
மாசிக்காய்
நெல்லி முள்ளி
அச்சுவெல்லம்
உருண்டை வெல்லம்
கருப்பட்டி
பனைவெல்லம்
அவல்
நெற்பொரி
முப்புரிநூல் கண்டு
தர்ப்பை
ஜாதிலிங்கம்
கங்காதீர்த்தம் முதலியன
நெல்
நீவாரம்
முத்தகாசு
பச்சைநெல்உமி
மாவிலை
தோரணங்கள்
திரிநூல்கள்
சூரியகாந்தக்கண்ணாடி
மண்மடக்குகள்
குடங்கள்
சொம்புகள்
அர்க்கிய பாத்தரங்கள்
பஞ்ச பாத்திரங்கள்
உத்தரணி
அட்சரத்தகடு
மாலைகள்
உதிரிப்பூக்கள்
வில்வப்பத்திரம்
விளாபத்திரம்
நொச்சிப் பத்திரம்
மாவிலங்கு பத்திரம்
கிளுவைப்பத்திரம்
பணிசெட்டுவகையறா
வெட்டிவேர்
மருக்கொழுந்து
அறுகு
தாழம்பூ
நவக்கிரக வஸ்திரங்கள்
சிவப்புத்துண்டு
வெள்ளைத் துண்டு

மஞ்சள் துண்டு
தங்கநிற மஞ்சள் துண்டு
வெள்ளைத் துண்டு
கருப்புத் துண்டு
நீலநிறத் துண்டு
சித்ரவர்ணத் துண்டு
கணபதிக்கு - துண்டு
கும்பவஸ்திரம் (சுவாமி)
பூர்ணாஹுதிக்கு பட்டு
தேங்காய் உரித்தது
பூர்ணபலம்
கும்பவஸ்திரம் (அம்பாள்)
சுவாமி வேதிகை
(வஸ்திரம்)
ஆசார்ய வஸ்திரம்
வாஸ்து சாந்தி வஸ்திரம்
பரிசாரக வஸ்திரம்
அவிசு பாத்திரம்
(வெங்கலப்பானை)
ரக்ஷாபந்தனக்காப்பு
பொன்தகடு அச்சரம்
கூர்மாதி பிரதிமைகள்
ஸ்வர்ண பங்கஜம்
நீலோத்பலம்
பவித்ரம்
பொன்ஊசிக்கம்பி
வெள்ளிக்கம்பி

## தனலெட்சுமி பூஜை வகையறா

ரவிக்கைத் துண்டு (சிகப்பு)
சீப்பு
கண்ணாடி
குங்குமச்சிமிழ்
பழங்கள்
சந்தனம்
தங்கக்காசு

## பூஜைகள்

அனுக்ஞை
தேவதா அனுக்ஞை
விக்னேஸ்வர பூசை
புண்ணியாகவாசனம்
பஞ்சகவ்யம்
வாஸ்துசாந்தி
மிருகத்சங்கிரஹனம்
அங்குரார்ப்பனம்
ரக்ஷாபந்தனம்
பிரசன்னாபிஷேகம்
கும்பஸ்தாபனம்
பிரதான கலசம்
வர்தினி கலசம்
ஸப்தவிம்சதி கும்பம்
அஷ்டவித்யேஸ்வர கும்பம்
வினாயகர் யாகம்
வர்தினி பரிவாரக கலசம்
ஸப்தவிம்சதி கும்பம்
அஷ்டவித்யேஸ்வர கும்பம்
வினாயகர் யாகம்
வர்த்தினி பரிவாரக கலசம்
நவக்கிரக யாகம்
ஸ்வர்ணபுஷ்பம்
ஸ்ருக்
ஸ்ருவம்
யாத்ராதானம்
அபிஷேக தட்சணை
ஆசாரிய சம்பாவணை
அஷ்டபந்தண மருந்து
சுவர்னபந்தம்
ரஜபந்தனம்
மருந்துக்கு பசு வெண்ணெய்
யாகசாலை அமைத்தல்

## அஷ்டமிர்திகை அபிஷேகம்

சமுத்திர மண்
காவேரி மண்
யானையடி மண்
மண்புற்றுமண்
தர்ப்பை மூலமண்
நண்டுவலைமண்
காளைமாட்டுக்
குளம்பு மண்
புண்ணிய ஸ்தல மண்
கூர்மாஸனப்பலகை
(பிரதானம்)
ஆசனபலகைகள்
அஷ்டமங்கலப் பலகைகள்
தசாயுத பலகைகள்
தோரணவாயில்
தீபஸ்தம்பம் (விளக்கு)
முக்காலி
ஸ்நானவேதிகை
மண்தோண்டிகள்
கடத்திற்கு முப்புரி
நூற்கண்டுகள்
கலர்நூல் கண்டுகள்
மண் மடக்குகள்
பாலிகைகள் - 12

## சமித்துகள்

| | |
|---|---|
| மா | பாதிரி |
| பலா | நெல்லி |
| அரசு | மூங்கில் |
| புரசு | அருகு |
| அத்தி | தர்ப்பை |
| வில்வம் | தர்ப்பைக்கயிறு |
| வன்னி | மோது |
| நாயுறுவி | பூசணிக்காய் |

## வாஸ்து சாந்திக்கு

மண்வெட்டி
மூங்கில் தட்டுகள்
தாம்பாளங்கள்
வலம்புரிச்சங்கு
வேஷ்டி துண்டு
சுவர்ணபுஷ்பம்
சோடச சாமான்கள்
வேத கோஷ்டி
உபநிடத கோஷ்டி
ஆகம கோஷ்டி
புராண கோஷ்டி
சாஸ்திர கோஷ்டி
திருமுறை கோஷ்டி
கோஷ்டிகளுக்கு வஸ்திரம்
மற்றும் தட்சணைகள்

## விசேஷ யாக திரவியங்கள் - பலன்கள்

| | | |
|---|---|---|
| பொரசு | - | ப்ரஜாவிருத்தி |
| கருங்காலி | - | விஜயம் |
| அரசு | - | தனாதிக்யம் |
| இத்தி (இச்சில்) | - | சௌக்யம் |
| அத்தி | - | போகம் |
| சந்தனம் | - | சாந்தி |
| ஆல் | - | ஆரோக்யம் |
| வன்னி | - | வசியம் |
| வில்வம் | - | இஷ்டசித்தி |
| வெள்ளெருக்கு | - | ரோகநாசம் |
| நாயுருவி | - | விஷநாசம் |
| மா | - | ஐஸ்வர்யம் |
| பாதிரி | - | சத்ருக்ஷயம் |
| மூங்கில் | - | சாந்தி |
| பலா | - | கீர்த்தி |
| அறுகம்புல் | - | தரித்ரநாசம் |
| தர்ப்பை | - | ஞானசித்தி |
| நெய் | - | ரோகநாசம் |
| ஹவிஸ் (சுத்தான்னம்) | - | சுபவிருத்தி |
| பாலன்னம் | - | ஆயுள் |
| எள்ளன்னம் | - | பாபநாசம் |
| மிளகன்னம் | - | சத்ருநாசம் |
| தயிரன்னம் | - | ஆரோக்யம் |
| பருப்பன்னம் | - | வித்யாலாபம் |
| தேன்னனம் | - | சந்தோஷம் |
| கடுகு அன்னம் | - | பயநாசம் |
| தேங்காய்சாதம் | - | புஷ்டி |
| எலுமிச்சை சாதம் | - | வசியம் |
| பாயாசான்னம் | - | திருப்தி |
| உளுந்தன்னம் | - | க்ரோசசமனம் |
| வெண்கடுகு | - | க்ரோதசமனம் |
| உளுந்து | - | பசுவிருத்தி |
| நெல்பொரி | - | சாயுஜ்யம் |
| சத்துமாவு (ரிபுநாகம்) | - | கடன்நீக்கம் |
| பால் | - | சௌபாக்கயம் |
| தயிர் | - | சுகம் |
| வெல்லம் | - | செல்வப்பேறு |
| வாழைப்பழம் | - | துக்கநாசம் |
| மாம்பழம் | - | ரோகநிவர்த்தி |
| பலாப்பழம் | - | சுபம் |

| | |
|---|---|
| விளாம்பழம் | புத்ரலாபம் |
| மாதுளம்பழம் | புத்ரலாபம் |
| பேரிச்சம்பழம் | வலிமை |
| நாரத்தம்பழம் | சோகநாசம் |
| எலுமிச்சம்பழம் | வசியம் |
| திராட்சைப்பழம் | இஷ்டசித்தி |
| தேங்காய் | சர்வானுகூலம் |
| பயறு | ஆயுள் |
| கோண்டக்கடலை | சிரேயசு |
| கோதுமை | ஸாதிகாரம் |
| குளச்சல்நெல் | வீர்யம் |
| பவைநெல் | இராஜவசியம் |
| மூங்கில் அரிசி | தேக காந்தி |
| கொள்ளு | தேகபலம் |
| கருமொச்சை | வம்சவிருத்தி |
| துவரை | வீர்யம் |
| தினை | இஷ்டசித்தி |
| வெள்ளைஎள் | சோகநாசம் |
| அவரை | பந்துலாபம் |
| நெல் | சுபிட்சம் |
| பொற்சம்பா நெல் | |
| செம்பாளை நெல் | |
| வால் நெல் | |
| வெள்ளை சம்பா நெல் | |
| சிவப்பு சம்பா நெல் | |
| புனுகு சம்பா நெல் | |
| பெருஞ்சம்பா நெல் | |
| செம்பவள நெல் | |
| பன்றி நெல் | |
| கூர் நெல் | |
| முத்துசம்பா நெல் | |
| சாமை | மழை |
| வரகு | மலநாசம் |
| கரும்பு | பிராணிசுகம் |
| வெள்ளரிக்காய் | விருத்தி |
| தேன் | சந்தோஷம் |
| சர்க்கரை | சத்ருநாசம் |
| அவல் | இஷ்டசித்தி |
| லட்டுகம் (இட்லி) | சுபிட்சம் |
| மாஷாபூகம் | யட்சு |
| அப்பம் | சந்தோஷம் |
| நீர்க்கொழுக்கட்டை) | இஷ்டசித்தி |
| திலாபூபம் (எள் கொழுக்கட்டை) | பாபநாகம் |
| தில கண்டம் (எள் உருண்டை) | ஆயுள் |
| மோதகம் | ஆனந்தம் |
| அகில் | வலிமை |
| தேவதாரு | சுகம் |
| வெண்மொச்சை | சௌந்தர்யம் |
| கிழங்குகள் | பூமிலாபம் |
| வெட்டிவேர் | லாபம் |
| விலாமிச்சைவேர் | மோகம் |
| மருக்கொழுந்து | விருத்தி |
| குங்குலியம் | சாதுர்யம் |
| சிற்றேனம் | ப்ரீதி |
| கிராம்பு | பயநாசம் |
| ஜாதிக்காய் | விரோதசமனம் |
| ஜாதிபத்திரி | அனுகூலம் |
| பன்னீர் | பிரியம் |
| குங்குமப்பூ | ப்ரீதி |
| பச்சைக்கற்பூரம் | ப்ரீதி |
| சந்தனக்கட்டை | ப்ரீதி |
| கஸ்தூரி | ப்ரீதி |
| புனுகு | ப்ரீதி |
| கோரோஜனை | ப்ரீதி |
| செஞ்சந்தனம் | ப்ரீதி |
| தாமரை முதலான புஷ்பங்கள் | செல்வம் |
| பத்திரங்கள் (தளிர்கள்) | ஆரோக்யம் |
| வில்வம் | பாபநாசம் |
| நீலோத்பலம் | அருள் |
| வாசனை திரவிங்களுடன் கூடிய தாம்பூலம் | இஷ்டசித்தி |

## அபிஷேகப்பலன்

| | |
|---|---|
| கந்த தைலம் | இன்பம் |
| மாப்பொடி | கடன்தீரும் |
| மஞ்சட்பொடி | அரசுவசீயம் |
| நெல்லிப் பருப்புப் பொடி | பிணிநீக்கம் |
| திருமஞ்சனத் திரவியம் | பிணிநீக்கம் |
| பஞ்சகவ்யம் | சுத்தம், கலபாபநீக்கம |
| பஞ்சாமிர்தம் | முக்தி |
| பழ பஞ்சாமிர்தம் | முக்தி |
| பால் | ஆயுள் விருத்தி |
| தயிர் | ப்ரஜா விருத்தி (குழந்தைப்பேறு) |
| நெய், இளவெந்நீர் | முக்தி |
| தேன் | சுகம், சங்கீத குரல் வளம் |
| இளநீர் | இராஜபோகம் |
| சர்க்கரைச் சாறு | சத்ரு நாசம் |
| கரும்புச் சாறு | ஆரோக்கியம் |
| தமரத்தம் பழச்சாறு | மகிழ்ச்சி |
| எலுமிச்சம் பழச்சாறு | பயமபயம் போக்கும் |
| நாரத்தம் பழச்சாறு | மந்திர சித்தி |
| கொழுஞ்சிப் பழச்சாறு | சோகம் போக்கும் |
| மாதுளம் பழச்சாறு | பகைமை அகற்றல் |
| அன்னாபிஷேகம் | விளைநிலங்கள் நலந்தரும் |
| வில்வோதகம் (வில்வம் கலந்த நீர்) | மகப்பேறு |
| குசோதகம் (தருப்பை கலந்த நீர்) | ஞானம் |
| பன்னீர் | குளிர்ச்சி |
| விபூதி | சகல ஐஸ்வரியம் |
| ஸ்வர்ணோதகம் | சகல சௌபாக்யம் |
| ரத்னோதகம் (ரத்னம் கலந்த நீர்) | அரசாட்சி, பெருஞ்செல்வம் |
| கோரோசனை | சகல ஆரோக்யம் மிக்க புகழ் |
| சகஸ்ரதாரை | சகல ஆரோக்யம் மிக்க புகழ் |
| ஜவ்வாது | சகல ஆரோக்யம் மிக்க புகழ் |
| புனுகு | சகல ஆரோக்யம் மிக்க புகழ் |
| குங்குமப்பூ | சகல ஆரோக்யம் மிக்க புகழ் |
| சங்காபிஷேகம் | சகல பாபாரிஷ்டம் |
| ஸ்நபன கும்பாபிஷேகம் | சித்த சுத்தியடைந்து சிவதரிசனம் |

ஒவ்வொரு அபிஷேகத்தின் பின் வடிகட்டிய சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்ய பரம சாந்தம் உண்டாகும்.

*கும்பாபிஷேகம் தரிசித்து என்றும் இன்புறுக!*
*குருமூர்த்திகள் தரிசித்து குருவருள் பெற்றுஅமைக!!*

ஓம் சக்தி

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

## காளி மந்திரத்தை உச்சரித்து நற்கதி பெற முடியும்!

# திருவாதிரையும் காளியும்

- புருஷோத்தம குருவாசுகி -

காளி அம்பாள் வழிபாடு, பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. கோடானுகோடி கற்பங்கள் அடங்கப்பெற்ற காலத்தையே அயன் எடுத்து விழுங்கி தன்னகத்தில் அடக்கியமையால் வடமொழியிலே 'காலீ' என்றும் காலிகா என்றும் அழைக்கப்பட்டாள். தமிழ் மொழியில் காளி என்று விளங்குகிறாள். காலஸ்ரூபியாக இருந்து கொண்டு பாரெங்கும் பெரும் மாறுதல்களை செய்து வருகின்றாள்.

பத்து மகா வித்தைகளில் காளி சித்த சர்வகுண பிரதான நிர்விகார நிர்க்குண பிரம்மஸ்ரூபமாக உள்ளவள், கைவல்யத்தை கொடுக்கக்கூடியவள் என்று சிவன் கூறியதாக காமதேனு தந்திரத்தில் கூறப்படுகிறது. இந்ததச மகாவித்தையில் முதலிடம் காளிக்குத்தான். கொடிய பாவம் செய்தவனும் காளிகாமந்திரத்தை அனுஷ்டித்தால் நற்கதி பெறலாம். என கோகினி தந்திரம் கூறுகின்றது. ஆலகால விஷத்தை அருந்தி அதனை கண்டப்பகுதியில் (கழுத்து) வைத்ததினால் கால கண்டன் என்றும் அவருடைய பத்தினி என்பதால் கால கண்டி என்றும் அழைக்கப்படுகிறாள். என வாயுபுராணம் கூறுகின்றது. திருவாதிரையில் காளி ஜெனனம் இதன் சுலோகம்:-

"சைத்ரார்த்ராஜ நிதால ஸட்டமருகா பாதம் பிரஸார்யஸ்திதா"

"பைசாச துவஜவாஹனாடமருகத்வானாட்ட
காஸான் விதா! பூங்கீ விகடாகபாலகுண
பிருத்தஸ்தா! வகுஞ்சத்கசா"

"தம்ஷ்டிண்யார்திரிசூல கோக்ரனயனாச்
யாமாம்பராதஷிது!!"

சித்திரைமாதம் (ஆருத்ரா) திருவாதிரை நட்சத்திரத்தில் ஜனனமானவள், இடது காலை மடித்து வலது காலில் நின்ற கோலத்தையுடையவள், உடுக்கை பிடித்தவள், உடுக்கை ஒலியுடையவள், அட்டகாசமான சிரிப்பு பயங்கர உருவம் கபாலம் பாசம் இவைகளை இருகைகளில் கொண்டவள் செம்பட்டையான கேசம் தெத்திப்பல் மாமிசத்தால் நனைக்கப்பட்ட சூலம் உக்ரமான கண்கள் கரிய ஆடை அணிந்தவள் ஆகிய இந்த காளி நம்மை காப்பற்றட்டும் என மேற்படி சுலோகம் கூறுகின்றது.

மார்கழி திருவாதிரை ஆடல்அரசன் நடராஜ பெருமானுக்கு விசேஷதினமாகும். அதே போன்று சித்திரை மாத திருவாதிரை காளி அம்பாளுக்கு விசேஷ தினமாகும்.

வடமொழியில் ஆகந்துக என்றால் நித்தியம் எனப்படும் மாதந்தோறும் வருகின்ற திருவாதிரை நட்சத்திரத்தில் பூஜைகள் செய்வது சிறப்பாகும் ஒரு குடும்பத் தலைவன் தனது பிறந்த மாதத்திலே பிறந்த நட்சத்திரத் திலோ வருகின்ற அவருடை ஜென்ம நட்சத்திரம் அன்று பூஜைகள் செய்வதும் வழிபாடு ஆற்றுவதும் ஜென்ம நட்சத்திரம் தெரியாதவர்கள் திருவாதிரை அன்று விசேஷமாகும். இப்படியான வழிபாடு செய்வதனால் அக் குடும்பத்தினருக்கு நோயின்மை, அந்நியோன்ய குடும்ப வாழ்வு தனதான்ய விருத்தி, மக்கட்பேறு என்னும் பல நன்மைகள் ஏற்படுமென அம்சுமதா ஆகமத்தில் கூறப்படு கின்றது.

மாசி மாதத்தில் துவாதசித் திதியும், திருவாதிரை நட்சத்திரமும் கூடுகின்ற வேளை இரண்டு நந்தியுள்ள சிவன் கோவில்களில் வலம் வந்து அர்ச்சனை பூசை செய்தால் நினைத்த காரியம் கைகூடும் புராண வரலாறுகள் கூறுகின்றன. நட்சத்திரங்கள் இருபத்தேழு. அவை அஸ்வினிமுதல் ரேவதி வரை. இவற்றிலே திரு என்றால் உயர்ந்த எண்ணத்தை கொண்டதாக திருவோணமும், திருவாதிரையும் சொல்லப்படுவதாக சேர்ந்தனார் தமது பாடலில் கூறுகின்றார்.

**ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்**
**அணியுடை ஆதிரைநாள்**
**நாராயணனொடு நான் முகன் அங்கி**
**இரவியும் இந்திரனும்**
**தேரார் வீதியில் தேவர்குழாங்கள் திசை**
**யனைத்தும் நிறைந்து**
**பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்**
**பல்லாண்டு கூறுதுமே.**

இவற்றை விட திருவாதிரையன்று இராஜராஜ சோழன் திருவொற்றியூர் கோவிலுக்கு திருவாதிரை நாளில் நெய் அபிஷேகம் செய்ததாகவும் வருடந்தோறும் திருவாதிரை நாளில் நெய் அபிஷேகம் செய்வதற்கு சாசன ஓலை எழுதியதாகவும் பண்டைய கால வரலாறுகள் சான்று பகருகின்றன.

# குறுமுனியால் வரமுனி பெற்ற சாபமும், அதனால் ஜகத்திற்குக் கிடைத்த பொக்கிஷமும்

**சிவாச்சார்ய சிரோண்மணி.**
**பிரம்மஸ்ரீ சிவகுமாரக் குருக்கள்**
திருக்கோணமலை.

குலசேகரப்பட்டினக் கடற்கரையோரமாகச் சென்று கொண்டிருந்த தமிழ் முனிவர் அகத்தியருக்கு, ஏனைய கடற்கரை ஓரங்களில் நடக்கும் போது ஏற்படும் உணர்வுகள் எழவில்லை. மாறாக தெளிவே இல்லாத குழப்பம் தான் தோன்றிற்று. இந்த கடற்கரை ஓரத்தில் தான் என்னமோ குழப்பம் இருக்கிறது என்பது மட்டும் அவருக்கு புரிந்தது. அந்த இனம்புரியாத குழப்பம் தன்னால் தீரப்போகின்றது என்பதைக் கடவுள் இவ்வண்ணம் காட்டுகின்றார் போலும் என்று யோசித்தபடி நடந்துகொண்டிருக்கையில் பிரணவ மந்திரத்தை யாரோ ஒருவன் ஆணவத்துடன் திமிராக சத்தமாக சொல்வதைக் கேட்டு, சத்தம் வந்த திக்குநோக்கிச் சென்றார். இப்படி மந்திரத்தைச் சொல்லி மக்களை யெல்லாம் தன் தவவலிமையைக் காட்டி மிரட்டியும் கீழ்ப்படிய வைத்தும் பெண்களையெல்லாம் வேலைக்காரிகளாக ஆக்கி இழிவுபடுத்திக் கொண்டும் இருந்தவன் வேறு யாருமல்ல வரமுனி என்று சொல்லப்படுகின்ற மிக அழகிய முகம் கொண்ட ஓர் இளைஞன் ஆவான். அவனைக் கண்டார்.

அவன் முன் நின்றார் குறுமுனியென்னும் அகத்திய மஹரிஷி. அவரை அவன் துளி கூட மதிக்கவில்லை மாறாக வீண் பேச்சுப் பேசி அவமரியாதைதான் செய்தான். முனிவர்கள் பொறுமைக்குப் பேர்போனவர்கள். அதனால் பொறுமையாக இருந்தார். அவன் வாய்ப்பேச்சு எல்லை மீறிப்போகவே முனிவர் பொங்கி எழுந்தார்.

“முனிவர்களுக்குரிய எந்தத் தகுதியும் இல்லாத வரமுனியே, உன் கொட்டம் இன்றோடு அழிந்தது. கடவுளின் அம்சம் என்றுகூறி நீ பித்தலாட்டம் செய்யும் உன் அழகிய முகம், இன்றுமுதல் எருமைத் தலையாக மாறட்டும். பெண்களைத் தாயாக தெய்வமாகக் கருதும் ரிஷிகளின் தன்மையிலிருந்து நீ விலகியதால் உன் மரணம் பெண்ணாலேயே தான் நிகழும்” என்று கண்கள் அனல் கக்க சாபமிட்டுவிட்டு நடையைத் தொடர்ந்தார். அந்த விநாடியே வரமுனியின் அழகிய உருமாறி, எருமைத் தலையும், மனித உடலுமாக அவன் ஆனான். அதற்காக அவன் வருந்தவில்லை. விடாமுயற்சியுடன் கடுந்தவமியற்றி பல வரங்கள் பெற்று மூவுலகங்களையும் அடிமைப் படுத்தினான். தர்மத்தை மறந்து தேவர்களையும் முனிவர்களையும் இம்சைப்படுத்தினான். முனிவனாக வாழத்தொடங்கிய அவன், தன் வாழ்வின் பிற்பகுதியில் அசுரனாக மாறினான்.

வழியில் எந்த முனிவரைக் கண்டாலும் விடாமல் துரத்தி வெட்டிக்கொலை செய்துவந்தான். இவனுக்கு அழிவே கிடையாதா என்று அஞ்சினர் மக்கள், தேவர்கள், முனிவர்கள்.

“மகிஷம்” என்றால் வடமொழியில் எருமை என்பது பொருள். எருமைத் தலையுடன் கூடிய அசுரன் ஆனதால், வரமுனி அன்றுமுதல் “மகிஷாசுரன்” என்று அழைக்கப் படலானான்.

மகிஷாசுரனின் ஆட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. தன்னை விஞ்சியாரும் வரக்கூடாது என்னும் அவாவினால் தவச்சாலைகளை துவம்சம் செய்தான். முனிவர்கள் வேள்ளி செய்யாமல் இருக்க வைத்தான். முனிவர்களுக்கு ஒரு பக்கம் கஷ்டமாயிருந்தாலும் “அடாது செய்தார் படாது படுவர்” என்னும் முதுமொழி மற்றும் அகத்தியர் சாபப்படி ஒரு பெண் மூலமாகத்தான் மடிவான் என்பதால் அப்பெண் சர்வ உலகங்களையும் ரக்ஷிக்கும் அன்னை தான் என்பதால் பொறுத்திருந்தனர்.

அன்னையைத் துதித்தார்கள். அன்னை மனமிரங்கி யாகத்திற்கு தீங்கு நேராவண்ணம் மாய அரண் ஒன்றை அன்னை உருவாக்கினாள். உற்சாகத்துடன் முனிவர்கள் வேள்வியை முறைப்படி இயற்றினர். விஷயமறிந்த மகிஷாசுரன், துவம்சம் செய்யத் துடிதுடித்தபோதிலும் மாய அரண் அவனை நெருங்கவிடாமல் துரத்திற்று. முனிவர்கள் செய்த முதல்நாள் வேள்வியின் ஈற்றில் “லலிதாம்பிகை” உற்பவித்தாள். அந்தவேள்வி மும்முரமாய் ஒன்பது நாட்கள் நடைபெற்றது. அந்தக்குழந்தை லலிதாம்பிகையும் ஒவ்வொரு நாளும் வளர்ந்து முழுவளர்ச்சியடைந்தது. பத்தாம் நாள் அன்னை பராசக்தி “லலிதாம்பிகை” எனும் பூரணவளர்ச்சியுடைய பெண்ணாகக் காட்சியளித்தாள். ரிஷிகள் எல்லாம் ஆனந்தக் கூத்தாடினர். அனைவருக்கும் புன்சிரிப்புடன் தேவி ஆசிகூறினாள்.

**அன்றைய பத்தாவது தினமே அன்னை பராசக்தி, மகிஷாசுரனை அழிக்கப்புறப்பட்டாள்.**

தேவர்களும், மற்றோரும் பூச்சொரிய அன்னை அந்த எருமைத்தலையை உடையவனானதால் மகிஷாசுரன் எனப்பெயர் பெற்ற பலவரங்கள் பெற்ற அசுரனுடன் போர் தொடுத்தாள்.

தான் பெற்றிருக்கும் வரங்களால் கர்வம் அழியாமல் இருக்கும் அசுரன், தனது வித்தைகளைக் காட்டத் தொடங்கினான். முதலில், தான் சாபம் பெற முதல் இருந்த அழகிய முகம் கொண்ட வரமுனி உருவில் தோன்றிப்போர் தொடுத்தான். அன்னையோ அந்த ஆணவத் தலையை அறுத்தெறிந்தாள்.

அடுத்து அவன் தலை சிங்கமுகமாக மாறி மிரட்டியது, அதையும் கொய்தாள் தாய்.

கடைசியாக எருமைத் தலையுடன் தோன்றினான் மகிஷாசுரன். முத்தலைச் சூலத்தை விட்டு அந்த மகிஷாசுரனைச் சங்கரித்தாள் அன்னை திரிசூலி. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். மகிஷாசுரனை மாய்த்ததால் அன்று முதல் "மகிஷாசுரமர்த்தனி" என்று ஜகத்தால் புகழப்பட்டாள்.

அன்னை பராசக்தியாக வேள்வியில் வளர்ந்த ஒன்பது தினங்களும் நவராத்திரி என்று அழைக்கப்பட்டு, உலகம் முழுக்கக் கொண்டாடப்படுகின்றது.

மகிஷாசுரனை அழித்த அந்தப் பத்தாவது நாள் "விஜயதசமி" தசரா என்று அழைக்கப்படுகின்றது.

இப்படியாக, குறு முனியெனும் அகத்தியரால் வரமுனி மகிஷாசுரனானதும், முனிவர்களால் வேள்வி இயற்றியதால் அகமகிழ்ந்து உலகுக்குப் பொக்கிஷமான லலிதாம்பிகை தோன்றியதும் மகிஷாசுரனை அழித்ததால் "மகிஷாசுரமர்த்தனி" எனும் பெரும் பொக்கிஷம் கிடைக்கப்பெற்றதும் மானிலத்தார் பெற்றபாக்கியமே.

**"பத்திரகாளி அம்பாள் கும்பாபிஷேகம் நிகழும் இவ்வேளை அவளின் பாதாரவிந்தம் பணிவோம"**



**அரிசியின் ரூபம் தெரியவொட்டாமல் உமி மூடி இருக்கிறது. உமியை நீக்கினால் அரிசியைப் பார்க்கலாம் அதுபோல் கடவுள் சொரூபத்தைக் காண வொட்டாமல் ஆசாபாசம் மூடியிருக்கிறது. ஆசாபாசத்தை நீக்கினால் கடவுளைக் காணலாம்.**

- வாரியார் -

# கோபுர நாயகி

## ஆசிரியப்பா

ஆக்கம்
கதகளி
**சிவஸ்ரீ. கோபாலசாமி சர்மா**
திருகோணமலை.

கோணேசர் கோயில்கொண்ட கோலத் திருநகரில்
கோபுர நாயகியாகக் கோயில் கொண்ட மாகாளி
நாயகி வந்தெம்மைத் தாங்குந் தயாபரியே
பூமாதின் மணிவயிற்றில் பொற்பார் கிடாரத்துள்
தாமே தவமிருந்து தாரணியைக் காக்கவந்தாய்
நாமேதும் வேண்டாமல் நற்கருணை நாயகியாய்
தாமேவந் தெம்மைத் தலையளிக்குந் தயாபரியே
மண்ணுள் மறைந்திருந்த மாகாளித் தாயேநீ
கண்ணின் மணியவளே கனகமுலை மங்கையளே
விண்ணுயரக் கோபுரத்தில் வீற்றிருக்கும் வித்தகியே
கண்ணைக் கவருங் கலையழகுக் கோபுரத்தில்
எண்ணற்கரிய இறைவி நீ இனிதமர்ந்தாய்
பண்ணின் இசைபாடும் பக்தர்குழாம் புடைசூழ
விண்ணவரும் மகிழ வேதியர்கள் ஓத்தொலிக்க
நாதவொலி கீதவொலி நாதசுர மேளவொலி
கூத்தொலியும் ஏத்தொலியும் கோபுரத்திலே ஒலிக்க
கோபுரத்தில் கோயில்கொண்ட கோமளையே மாகாளி
எங்கும் நிறைந்தவளே ஈஸ்வரியே நீ சிவனின்
பங்கில் அமர்ந்தருளும் பார்வதியும் நீயே (அரி)
தங்கையென நின்ற தாயாரும் நீயே
பொங்கும் கலையனைத்தும் புரப்பவளும் நீயே
காமாட்சி விசாலாட்சி மீனாட்சி நீயே
சாம்பவி சங்கரி சாமளை சர்வபரி
பூரணி புராதனி புராந்தகியும் நீயே
இங்குவந்தெளிலார் இராஜகோபுரத்தில்
தங்குந் தயாபரியே தாள்பணிந்தோம் தாயே
அல்லல் அகற்றி ஆண்டருள வேண்டுகிறோம்
தொல்லை வினையறுத்துச் சுகமருள வேண்டுகிறோம்
பல்வேறாயுன்னைப் பரவிப் பணிகின்றோம்
ஆதிபராசக்தி நீ அகிலாண்ட நாயகிநீ
சோதிவடிவானவள்நீ சுந்தரி அம்பிகை நீ
தில்லையுட் காளிநீ திருப்பதியுட் காளி யுநீ
எல்லைகள் தோறும் எழுந்தருளும் காளி யுநீ
கல்லையுங் கனிவிக்கும் கருணையுள்ள காளிநீ
எந்தாயும் நீயென்றே சொந்தங்கொண்டாடியே
வந்துவந்துன்னை வணங்கி நிற்கின்றோம்
சிந்தை மகிழ்ந்துன்னைச் சேவித்துநிற்கிறோம்
நொந்த நெஞ்சமொடு நுடங்கி நிற்கின்றோம்
கரங்கூப்பி வந்து சிரந்தாழ்த்தி நிற்கிறோம்
இரங்கி அருள்புரிவாய் எந்தாயே மாகாளி
தேசம் நலம்பெறவும் தெய்வீக சுகம்பெறவும்
நேசமுடன் நின்பாதம் துதித்தோம்
பாசவினையறுத்துப் பரமசுகந் தந்தருள்வாய்

# விட்டார் வீடுற்றார்

கம்பன் கழகம்
**இ. ஜெயராஜ்**

மனிதப் பிறவியின் நோக்கம் ஆன்ம ஈடேற்றமே. அறிவுப்பொருளாகிய ஆன்மா மல வயப்பட்டு சடம்போற் கிடக்குமோர் நிலையுண்டு. ஆன்மாவின் இந்நிலையை 'கேவலம்' எனக் குறிக்கும் சித்தாந்தம் அறிவிருந்தும் சடம்போல் கிடக்கும் ஆன்மாவை உய்விப்பதற்காக அதற்கு, விருப்பு, அறிவு செயல் என்னும் தூண்டுதல்களைக் கொடுப்பதோடு அவை அநுபவத்திற்கு உற்பட. தனு, கரண, புவன போகங்களையும் மாயையினின்றும் உருவாக்குகிறான் இறைவன். அறிவற்ற நிலையிலிருந்து விடுபட்டு இச்சிற்றறிவு தூண்டப்பட்ட நிலையை ஆன்மாவின் 'சகல நிலை' எனச் சுட்டும் சித்தாந்தம் தனு, கரண, புவன போகங்களுக்கு உட்பட்ட ஆன்மா நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களுக்கு உட்பட்டு பல பிறவிகளிலும் இன்ப துன்ப அநுபவங்களைப் பெற்று, அநுபவங்களால் மெல்ல மெல்ல அறிவுவயப்படுகிறது. ஓர் நிலையில் முழுமையாய் மலங்களினின்றும் விடுபடும் ஆன்மா முற்றான அறிவு கிட்ட தன்னையுணர்ந்து இறைவயப்படுகிறது. இம் முத்திநிலையையே ஆன்மாவின் 'சுத்த நிலை' எனப் பேசும் சித்தாந்தம் அகங்கார, மமகாரங்கள் முற்றாய் நீங்குதலே முத்திநிலைக்கான ஆன்மாவின் தகுதியாய்க் கருதப்படுகிறது. ஆன்மாவின், தனு, கரண, புவன, போகங்களோடு கூடிய மாயைக்கு உட்பட்ட பெத்த நிலையில் அதனிடம் 'நான்' எனும் அகங்காரம் முதலிற் பிறக்கிறது. அதன் தொடர்பாய் 'எனது' எனும் மமகாரம் பிறக்க ஆன்மா பந்தப்படுகிறது. பின், முத்திநிலையின் போது மறுதலையாய் மமகாரம் முன் நீங்க, அகங்காரம் பின் நீங்குகிறது. தோற்றத்தின் போது மரமாகிப் பின் கிளைவிடுதலும், அழிப்பின் போது கிளைகள் துண்டிக்கப்பட்டு பின் மரம் வீழ்த்தப்படுவதும்

மேற்கூறிய அகங்கார மமகாரங்களின் தோற்றம் மறைதலுக்கான உவமைகள். இங்ஙனம் மலங்களின் வயப்பட்ட ஓர் ஆன்மா மமகார அகங்கார நீக்கம் பெற்று அன்பு நிலையெய்தி பரம்பொருளோடு கலப்பதாய சித்தாந்தக் கருத்தை நேரடியாய் அன்றி 'தாற்பரியம்' எனும் குறிப்புப் பொருளால், கம்பன் ஓர் காட்சியில் விளக்கம் செய்கிறான். கம்பனின் அவ் அற்புத விளக்கம் காண்பாம். கங்கைக் கரையில் இராமனும் குகனும் சந்திக்கின்றனர். அன்போடு வந்த குகனை இராமன் தன் சகோதரனாய் ஏற்கிறான். இது, கம்பனால் அமைக்கப் பட்ட வெளிப்படையான காட்சி. இக்காட்சியில் இராமனை தெய்வமாகவும் குகனை மலவயப்பட்ட ஆன்மாவாகவும் இராமன் குகன் அங்கரீப்பதை ஆன்ம விடுதலையாகவும் கொண்டு மறைப்பொருளை உட்பொருளாய்ச் சுட்டுகிறான், கம்பன்.

இராமனைச் சந்திக்க வருகிறான் குகன். அவனைச் சூழ, சுற்றத்தார்; அவன் கையிலும் இடையிலும் வில்லும் வாளும்; சீறும்கண்கள்; கடுமையான தோற்றம் இது கம்பன் குகனைக் காட்டும் முறை. முனிவர்கள் சூழ ஆசிரமத்திற்குள் வீற்றிருக்கிறான் இராமன். இராமனைக் காணும் ஆர்வத்தால் வந்தவனாகிய குகன், ஆசிரமம் அண்மித்து விட்டதை உணர்ந்து மரியாதை கருதி குறித்த ஓர் எல்லையில் உறவினர்களை நிறுத்தி விடுகிறான். இராமனைக்காணும் எண்ணம் மேலும் உந்த, கையிலும் இடையிலும் இருந்த வில்லையும் வாளையும் உதறுகிறான். குற்றமில்லாத மனம் கொண்ட குகனிடம் இப்போது அன்பு மட்டுமே. அவ்வன்போடு ஆசிரமத்தை அணுகுகிறான். தன் அன்பு நிலையால் இலக்குவனின் கருணைக்கு ஆளாகி அவன் துணையால் இராம தரிசனமும் அநுக்கிரகமும், அங்கீகரிப்பும் கிட்டி சகோதரனாய் இராமனுடன் ஒன்றாகிறான். குகன் இராமனைக்காண வந்ததாய அந் நிலையை கம்பன் கவி வெளிப்படுத்துகின்றது.

**'சுற்றம் அப்புறம் நிற்க சுடு கணை**

**விற்றுறந்து, அரை வீக்கிய வாளொழித்து**

**அற்றம் நீத்த மனத்தினன் அன்பினன்**

**நற்றவப் பள்ளி வாயிலை நண்ணினான்'**

இது வெளிப்படையான கம்பனின் காட்சி அமைப்பு. இக்காட்சி அமைப்புள் கம்பன் காட்டும் சித்தாந்த உட்பொருள் காண்பாம்.

இராமன் நிலையோடு ஒப்பிடும்போது குகன் சாதியால் வேறுபட்டவன், தாழ்ந்தவன், வேட்டையாடித் திரிபவன். வியாபக அறிவுகொண்ட இறைவனோடு ஒப்பிடும் போது, எல்லைப்பட்ட அறிவுடைய ஆன்மா சாதியால் வேறுபட்டது. தாழ்ந்தது. புலன் நுகர்விற்காய் உலக இன்பங்களை வேட்டையாடித் திரிவது. இம்முதலொப்பு மையால் இராமனைப் பரம்பொருளாயும் குகனை மலவயப்பட்ட ஆன்மாவாகவும் காட்டுகிறான் கம்பன். இறை நாட்டம் ஏற்பட்ட பரம்பொருளை நோக்கிய ஆன்மாவின் பயணம் தொடங்கும். இராமனின் மேற்கொண்ட அன்பால் குகன் அவனை நாடுதல் இதற்கு ஒப்புமை. பக்குவப்பட்ட ஆன்மா உலகியல் வயப்பட்ட ஆன்மாக்களினின்றும் நீங்கி தனித்து ஆண்டவனை நாடும்.

**'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள், அகலிடத்தார் ஆசாரத்தை' 'உற்றாரை நான் வேண்டேன்'**

எனும் அப்பர் மாணிக்கவாசகர் அடிகள் இந்நிலையை விளக்கம் செய்யும் தக்க மேற்கோள்கள். குகனும் ஓர் நிலையில், சுற்றத்தாரை நிறுத்தி இராமனை நோக்கிச் செல்கின்றான். உலகியலினின்றும் நீங்கிய ஆன்மா. முதனிலையில் மமகார நீக்கம் பெறும். 'எனது' என்னும் மமகாரத்தின் உச்சநிலை வெளிப்பாடே உறவுகள். இராமனைக் காணவரும் குகன் உறவினரை விட்டு தனித்து முன்னேறுதல் மமகார நீக்கத்தின் விளக்கமுமாம்.

## 'சுற்றம் அப்புறத்தே நிற்க'

உறவினரை துறந்த குகன், தொடர்ந்து வில்லையும் வாளையும் துறக்கின்றான். வில்லும், வாளும் தற்காப்புக் கருவிகள். 'நான்' எனும் எண்ணத்தின் குறியீடுகள் மமகாரம் நீங்க, தொடர்ந்து அகங்காரம் நீங்கும். உறவினரை நீக்கிய குகன் ஆயுதங்களையும், நீக்கினான் எனவே அகங்காரம் நீக்கமும் பெறப்பட்டது.

'சுடு கணை விற்றுறந்து, அரை வீக்கிய வாள் ஒழித்து'

நான் எனது என்பவை நீங்க மாசு நீங்கி ஆன்மா தூய்மைப்படுகின்றது.

## அற்றம் நீக்கியி மனத்தினன்'

ஆன்மா மாசு நீங்கப்பெறுவதென்பதைச் சுட்ட நினைக்கும் கம்பன் குகனைத் 'தூய மனத்தினன்' என்று சொல்ல வழி இருக்கவும், அவ்வாறு சொல்லாது 'குற்றம் நீக்கிய மனத்தினன்' என்று தத்துவ நோக்கம் கருதி பேசுகிறான். ஆன்மாவில் இம் மாசுகள் நீங்கியதும் தூய அன்பு சுரக்கும்.

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி'

எனும் சம்பந்தர் தேவார அடி இவ்வன்பு நிலையைச் சுட்டும். நான், எனது என்னும் குற்றங்கள் நீங்கிய குகனும் இவ்வன்பு நிலையை எய்தியமையைக் காட்ட அடுத்த சொல்லை இடுகிறான் கம்பன்.

'அன்பினன்'

அன்புருவாய் பூரண நிலைப்பட்ட ஆன்மா இறை சந்நிதி வயப்படும். குகனும் இராம சந்நிதி வயப்படுகிறான்

'நற்றவப் பள்ளி வாயிலை நண்ணினான்'

மேற்கூறியவாறு தூய்மையுற்று, அன்பினால் இறை சந்நிதி வயப்பட்ட ஆன்மாவுக்கு குருவருள் கிட்ட அக் குருவின் துணையால் இறையருள் கிட்டுதலும், பேதம் நீங்கி அவ்வான்மா இறையோடு ஒன்றாதலும் நிச்சயமன்றோ. இங்கும் குருவின் நிலையில் இலக்குவன். குகனின் அன்பு நிலை கண்டு தக்க வாறு இராமனிடம் முன்மொழிந்து அவனை இராமனின் அன்புக்காளாக்குகிறான்.

அவ்வன்பினால் அரசன், வேடன் என்னும் பேதம் நீங்க இராமனுடன் சகோதரனாய் ஒன்றாகும் நிலை கிட்டுகிறது. முத்திநிலை பெற்ற பின்பும் சில ஆன்மாக்கள் உடலோடு கூடி நிற்கும். இந்நிலையை, சீவன் முத்த நிலை என சித்தாந்தம் பேசும். கன்மம் முடிவுறாததால் உடல் சுமந்து வாளும் அச்சீவன் முத்தர்கள் உலகியல் துறந்து நின்று தாம் பெற்ற இறையருளை மற்றைய ஆன்மாக்களும் பெற்று ஈவர். இச்சீவன் முத்த ஆன்மாக்கள் மற்றோரையும் இறைவயப்படுத்துதல் போல குகனும் தன் உற்றாரையும் இராமனின் அன்பிற்குட்படுத்துகிறான்.

"உன் கிளை எனதன்றோ உறுதுயர் உறலாமோ
என் கிளை இது கா என் ஏவலின் இனிது என்றான்."

இராமனின் இக்கூற்று குகனால் மற்றைய வேடர்களும் இராமன் கருணையைப் பெற்றமையை இரு பொருளாகவும் வெளிப்படுத்தி நிற்கிறது. இவ்வாறு, கம்பன் செய்யும் சித்தாந்த விளக்கம் கவி இன்பத்தோடு கலந்து மன மகிழ்வு தருகிறது.

# கோபுர அமைப்பும் அதன் தத்துவங்களும்

ஸ்ரீ. க. பாலச்சந்திரசர்மா
இந்து நாகரிக ஆசிரியர்
(அருள்மிகு இரத்தினசிங்கப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா)


இந்து மதத்தைச் சார்ந்த மனிதன் ஒருவன் தனது வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவதற்கும், ஆன்மீகப் பாதையில் அவனுக்கு உறுதுணையாக இருக்கின்ற அம்சங்களும் ஆலயங்களும், பெரும் பங்கு வகிக்கின்றன. ஒரு மனிதனுடைய உடல் அமைப்பை ஒத்ததாக ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. அந்த வகையில் மனிதனுடைய பாதங்களுக்கு ஒப்பானதாக கோபுரங்கள் விளங்குகின்றன.கோபுரத்தை தூலலிங்கம் எனவும் அழைப்பர். இதன் பொருள் தூரத்தில் வரும் போதே கோபுரத்தைக் காண்பதன் மூலம் யாவருக்கும் தெய்வீக உணர்வு ஏற்படுகின்றது என்பது கருத்து.

இவ்வாறான கோபுர அமைப்பில் பல தத்துவ உண்மைகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அதாவது கோபுர தரிசனம் கோடி புண்ணியம் எனப் போற்றத்தக்க வகையில் அமைந்து காணப்படுகின்றது. இவ்வாறு சிறப்பாகப் போற்றப்படுகின்ற இக்கோபுர அமைப்பில் பொதிந்துள்ள தத்துவக்கருத்துக்கள் எவை என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

ராஜகோபுரம் என்பதன் தத்துவம் என்னவென்றால் ஒரு நாட்டிற்கு அரசன் ஒருவன் முதன்மையானவனாக இருக்கிறானோ அதே போல் ஓர் ஆலயத்துக்கு கோபுரம் இன்றியமையாததாக அமைகிறது. இதன் காரணத் தினாலேயே இது ராஜகோபுரம் எனற சிறப்புப் பெயரினாலே அழைக்கப்படுகிறது.

கோபுரமானது கீழ்ப்பகுதியில் அகன்றும்,மேல் நோக்கிச் செல்லச் செல்ல குவிவாக ஒடுங்கிய நிலையில் அமைந்து காணப்படும். இவ்வமைப்பானது அல்லல் உற்று அலைந்து திரிகின்ற ஆன்மாவானது இறுதியில் ஒரு நிலைப்படுகின்ற தன்மையினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. அத்துடன் ஒரு மனிதனது மனமானது கூர்மையாக ஒடுங்குவதைக் காட்டி நிற்கிறது. கோபுர அமைப்பில் இந்து மதத்திற்கே உரிய கலை, கலாச்சார அம்சங்கள் எடுத்துக்காட்டப் படுகின்றது.அதாவது இசை, ஓவியம், சிற்பம், நடனம் போன்றகலை அம்சதத்துவங்கள் எடுத்துக்காட்டப் படுவதோடு, இதிகாச புராண வரலாற்றுத் தத்துவங்களும் எளிமையான முறையில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ள தன்மை இக்கோபுர தத்துவங்களாகக் காணப்படுகின்றன.

கோபுர அமைப்பில் முதலாவதாக நில மட்டத்திலிருந்து (வானமட்டம்) குறிப்பிட்ட பிரமாணம் வரை அமையும். முதலாவது அமைப்பு வியாழ மட்டம் என அழைக்கப்படும் இவ்வியாழ மட்டத்தின் மேல் ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பிரமாண அமைப்பில் அமைவது தளங்கள் ஆகும்.



நில மட்டத்திலிருந்து வியாழ மட்டம் வரை அமைந்துள்ள வரிகள் பல பிரிவுகளைக்கொண்டுள்ளதாக அமையும்.

பிரஸ்தலம் - (திருமஞ்சம்)
பாதவர்ச்சம்
அத்திடான அர்ச்சம்
உபபீடம்

இவ்வியாழ மட்டத்திலிருந்து முதலாம் தளம் வரை உள்ள பிரிவுகள் பின்வரும் அமைப்புக்களைக் கொண்டாதாகக் காணப்படுகின்றன.

வேதியள்
கண்டம்
உத்தரம்
எழுதகம்
கபோதகம்
வியாழம்
தூக்கேடு
கவுண்டபத்மம்
நிமித்தபத்மம்
பண்டிகை
மணிக்கூடு
கண்ணாடிச் சட்டம்
பத்மம்

இவ்வாறு ஒவ்வொரு தள அமைவிலும் இவ்வமைப்புக்கள் காணப்படும்.

பொதுவாக கோபுரம் ஒன்று அமைக்கப்படும் போது மூன்று வாயில்கள், ஐந்து வாயில்கள், ஏழு வாயில்கள் என ஒற்றைத் தளங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். என சிற்ப சாஸ்திர நூல்களும், வேதாகமங்களும் எடுத்துக்கூறுகின்றன. அதாவது மூன்று வாயில்களைக் கொண்ட அமைப்பு கனவு, நனவு, சுழுத்தி என்னும் அகந்தைகளைக் குறிக்கும் ஐந்து வாயில்களைக் கொண்ட அமைப்பு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளையும் குறிப்பனவாகவும், ஏழு வாயில்களைக் கொண்ட அமைப்பு ஐம்பொறிகள் மனம், புத்தி என்பவற்றைக் குறிக்கும்.

வாயில்கள் எத்தனை அமைகின்றனவோ, அதற்குத் தக்க வகையில் சிரசாக விளங்குகின்ற கோபுரத்தின் முடிவில் கலசங்கள் அமைக்கப்பட்டு இராஜகோபுரமாக நிறைவு பெறுகின்றன.

கோபுரத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு வாயில்களின் இரு மருங்கிலும் காவல் தெய்வங்கள் அமைக்கப்படவேண்டுமென்பது விதியாகும். அதாவது ஆண் தெய்வத்திற்குரிய கோபுரமாக இருந்தால் துவார பாலகர்களும், சக்தி ஆலயமாக இருந்தால் துவார சக்திகளும் அமைக்கப்பட்டிருக்கும், இவ்வாறு அமைக்கப் படுவதன் நோக்கம் தூரத்தே நின்று கோபுரத்தை வழிபட்டு கோபுர வாயில் உள்ள துவார பாலகர் அல்லது துவார சக்திகள் இடம் அனுமதி பெற்று பின் ஆலயத்தினுள் செல்ல வேண்டுமென்பது ஆகம சிற்பசாஸ்திரங்களின் விதியாகும்.

ஒவ்வொரு தளங்களிலும் நான்கு திக்குகளிலும் பூதங்கள் அமைக்கப்பட்டிருக்கும் இவற்றிலும் ஆண் தெய்வத்திற்குரியது என்றால் ஆண் பூதங்களும், பெண் தெய்வத்திற்குரியது என்றால் பெண் பூதங்களும் அமைக்கப்பட்டிருக்கும்

இவ்வாறான கோபுர அமைப்புத் தத்துவங்களுக்கு எல்லாம் அமைவாக வேதாகமங்கள் சிற்ப சாஸ்திரங்களான சிற்ப ரத்தினம், மானசாரம், கார்க்கைய சிற்பம் போன்ற நூல்களில் கூறப்பட்ட விதிகளுக்கு அமைவாக திருகோணமலை மண்ணிலே சிறப்புற்று செழிமையுடன் விளங்கும் அம்பாளின் ஆலயமாக திகழ்கின்ற அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் இராஜகோபுரமானது 65 அடி உயர அடிப்படையில் அமைந்ததோடு மட்டுமல்லாமல் அடியார்கள் அனைவரும் இக்கோபுரத்தின் கண்ணே இறைவியது வீரதீரச்செயல்களையும், இறைவியது பெருமையையும், திருவிளையாடல்களையும், இந்துமத தத்துவக்கருத்துக்கள் சிலவற்றையும் சிற்ப ஓவியங்கள் வாயிலாக கண்டுகளிக்க கூடியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋
❋❋❋

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின் கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே

## உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்

**1. மாணிக்கம் மிக விலையுயர்ந்த பொருள் சாதாரண மக்கள் அதுபோன்ற செல்வங்களை விரும்பிப் பெரிதாக மதிக்கின்றனர் ஆனால் ஞானிகள் ஆத்ம ஞான உணர்வுடையவர்கள் அம்பிகையினையே மாணிக்கமாய் மதிக்கின்றனர். சுந்தரர் ''மழபாடியுள் மாணிக்கமே'' என்று இறைவனைக் குறிப்பிட்டுள்ளார்.**

☆

**2. நவரத்தினங்களைப் பற்றி உணர்வு அல்லது அறிவுபெற்றவர்கள் அவற்றுள் சிறந்தவற்றையே தேர்ந்து எடுப்பர் நல்லுனர்வுள்ள ஞானியர் சிறந்த தெய்வமென்று மதித்துப்போற்றுகின்றனர்.**

☆

**3. நவசக்திகளில் மாணிக்கவல்லி என்பவளும் ஒருத்தி அம்பிகையின் சொருபம் பற்றிய உணர்வு இல்லாதவர் இச்சக்தியினை அம்பிகையினின்று வேறுபட்டவர்களாக எண்ணுவர் உணர்வுடைய ஞானிகள் அந்த மாணிக்கவல்லி முதலிய நவசக்தி பரதேவதையின் சொருபமே என்று மதிக்கின்றார்.**

☆

**4. ''சாரதாராத்யா'' என்ற லலிதா சகஸ்ரநாம உரையில் விசாரதர்களால் அல்லது பண்டிதர்களால் ஆராதிக்கப்படுபவள் என்று பாஸ்கரராயர் ஒரு பொருள் கூறுகிறார். உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கமே என்பதும் அதற்கிணையானதாகும்.**

☆

**5. மனிதராகப் பிறந்து மனித உணர்வுகள் பெற்ற அனைவரும் அன்னையினை மதித்து வணங்க வேண்டும். அவ்வாறு மதித்து வணங்காதவர்கள் உணர்வு அற்றவர்கள் உணர்ச்சியற்றவர்கள் - அதாவது வெறும் ஜடப்பொருள்களே.**



பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்

ஓம் சக்தி

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

# அருள் தரு அன்னை அம்பிகை



தொகுப்பு
திரு. கணேசன் - **சைவசிகாமணி**
பிரதம இலிகிதர்
குச்சவெளி பிரதேச சபை

## அன்பே சிவம் , அன்பே சக்தி

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி எழிற்
புங்கவி விளங்கு சிவசங்கரி ஸஹஸ்ரதள
புஸ்ப மிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே பின்னையும் கன்னியென
மறைபேசும் ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருபு தேவை அரசே
வனராஜனுக்கு இரு கண்மணியாய் உதித்த மலை
வளம் காதலிப் பெண் உமையே.

"சக்தியும் சிவமுமாய் தன்மையில் உலக மெல்லாம்" என்பது சிவஞான சித்தியார்.

சிவனும் சக்தியும் ஒரு தத்துவத்தில் இணைபிரியாத இரண்டு அம்சங்கள் .

எத்திறன் நின்றான் ஈசன் அத்திறன் அவளும் நிற்பாள்

மாது ஒரு பாகம் ஆனவனாய் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது.

சத்தன் அருள் தரின் சக்தி அருளுண்டாம்
சக்தி அருள் தரின் சத்தன் அருளுண்டாம்
சக்தி சிவமாம் இரண்டும் தன்னுள் வைக்கத்
சத்தியம் எண் சித்தித் தண்மையும் ஆமே.
(திருமந்திரம்)

மேற்படி தத்துவங்கள் சிவமும் சக்தியும் ஒன்றேயாகும் என்பதைக் குறித்து நிற்கின்றன. எனவே சிவமின்றிச் சக்தியில்லை, சக்தியின்றிச் சிவமில்லை. சிவம்வேறு சக்திவேறு அன்று. சிவமும் சக்தியும் ஒன்றாய் நிற்கும் நிலையில் பரம் பொருள் என்றும், பகவான் என்றும் அழைக்கப்படுவர்.

யாண்டும் அழியாது நித்தியமாயிருப்பது பரம்பொருள். அக்கினியின் உஷ்ணம் போன்று என்றும் பிரியாது இப்பரம் பொருளைச் சார்ந்திருக்கும் ஆற்றலுக்கு சக்தி என்று பெயர். அண்டங்கள் அனைத்தும் சிவசக்தி மயமாயிருக்கின்றன. சிவம் என்பது அறிவுப்பொருள். சக்தி என்பது ஜடப்பொருள். இவை இரண்டும் இணைபிரியாது உலகெங்கும் இயங்குகின்றது. எத்திசையில் திரும்பிப்பார்த்த போதிலும் இக்கூற்று நிருபிக்கப்படுகின்றது.

சக்தியின் திருவிளையாட்டை அணுமுதல் பிரபஞ்சம்வரை காணலாம். பூமியைப் போன்ற எண்ணிறைந்த கிரகங்கள் ஒன்றையொன்று அதிவேகமாகச் சுற்றிக்கொண்டுஓடுகின்றன. ஆனால் நிலைகுலையாது ஒழுங்காக அவைகள் சுழல்வதினின்று ஆட்டுவிக்கும் சக்தி அறிவுமயமானது என்பது விளங்குகின்றது.

பரந்த விண்ணுலகத்தினுள் நாம் வசிக்கும் இந்த மண்ணுலகமானது ஓர் அணுப்புள்ளி போன்றது. இதனுள் நடைபெறுகின்ற சக்தியின் விளையாட்டை ஆராய்வோமாயின் ஜீவ ஜந்துக்கள் தத்தம் இனம் சேர்ந்திருப்பதும், இனம் காப்பதும், இனம் பெருக்குவதும் எதிரியோடு சண்டை யிடுவதும் சக்தியின் ஜீவ தத்துவத்தைக் காண்பிக்கின்றது.

மனித வர்க்கத்தினர் இதே இயக்கத்தை அதிக ஆற்றலுடனும் அறிவுடனும் கூடியதாக இருக்கின்றனர்.

இயற்கையை கவனிப்போமாயின் கடல் நீர் ஆவியாகி, முகிலாகி, மழையாகப் பெய்வதும், மின்னி ஒளிவீசி இடிப்பதும், காற்று வீசுவதும், தீ எரிவதும், பூமி சுழல்வதும், உயிர்வாழ்வன தோன்றி மறைவதும், அண்டங்கள் இயங்குகின்றதும், இவையனைத்திலும் சக்தியின் மூலம் சிவம் ஆனந்தத்தாண்டவம் ஆடுகின்றான். “சக்தியின்றிச் சிவம் இயங்காது” இவற்றிலிருந்து சக்தியின் மகத்துவம் புலனாகின்றது.

எனவே உலகம், உயிர், இறைவன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவியுள்ள ஆற்றலே பராசக்தி அம்பிகையாவாள். அந்த சக்திதேவியே எல்லாம் வல்லவள், எங்கும் எதிலும் நிறைந்தவள் இவள்.

படைப்புக்கடவுளான பிரமதேவனுக்கு கலைமகள் (பிரம்மாணி) என்ற நாயகி வடிவமாகவும்.

காத்தல் கடவுளான மகாவிஷ்ணுவுக்குத் திருமகள் (வைஷ்ணவி) என்ற நாயகி வடிவமாகவும்.

அழித்தல் கடவுளான உருத்திரனுக்கு மலைமகள் (ருத்ராணி) என்ற நாயகி வடிவமாகவும் அந்த பராசக்தி தேவியே அம்சங்களாக இருந்து அக்கடவுளரின் தொழில்களையெல்லாம் இயங்கச் செய்கின்றாள்.

எனவே பிரம்மன், அரி, அரன், இந்திரன், அக்கினி, சந்திரன், சூரியன், யமன், வருணன், வாயு, முதலிய யாவரும் சக்தியினால் தான் தங்கள் செயல்களை செய்கின்றார்கள்.

பொதுவாக சகல ஐஸ்வரியங்களையும் அளிக்கும் மகாசக்தி பெண். கல்வி, சங்கீதம், செல்வம், தானியம், வெற்றி, நிலம், தண்ணீர் முதலான எல்லா அம்சங்களுக்கும் தலைமை தாங்குவது பெண் சக்திகளே. பெண் இல்லையெனில் பிறவிகளே இல்லை. வாழ்க்கையில்லை, உலகமில்லை, சந்ததிகளில்லை. எதுவுமே இல்லை அந்தப்பெண்மையின் ஆற்றல் தான் சக்திதேவி. அவளே ஆண்மையின் ஆற்றலாகவும் இயங்கி இயக்கவும் வைக்கிறாள்.

எனவே எல்லா உயிர்வகைகளிலும் உயிரின் ஆற்றலாகவும், ஊக்கமாகவும், ஊட்டமாகவும் பெண்சக்தியே இயங்கி வருகின்றது. தண்ணீரில் குளிர்ச்சியும், நெருப்பில் உஷ்ணமும், சூரியனில் ஒளியும் அவளே. பிரபஞ்சத்தில் ஜீவகோடிகள் எதுவுமே தேவியின் சம்பந்தம் இல்லையெனில் சிறிதும் அசையக்கூட மாட்டாது. எனவே சக்தியின்றி எந்த வஸ்துவும் இயங்காது என்பது முடிவாகின்றது.

இந்த சக்திதேவி பரமசிவனின் இடப்பாகத்தில் எழுந்தருளித் திருவருட் சக்தியாய்ப் பஞ்ச கிருத்தியத் திற்கும் காரணமாய் விளங்கும் போது உமா தேவியாகவும், காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதரினிடப்பாகத்திற் காமாட்சியாகவும், சிதம்பரத்திலே ஆனந்த தாண்டவம் செய்யும் போது தில்லைக்காளியாகவும், இடப்பாகத்திற் சிவகாம சுந்தரியாகவும், மதுரை சோமசுந்தரப்பெருமான் திருமருங்கில் மீனாட்சியாகவும், காசி விசுவநாதபெருமான் பங்கில் விசாலாட்சியாகவும் திருநாமங்கள் பெறுவாள்.

எங்கும் நிறைபொருளாகக் கருதப்படும் போது அவளுக்கு பூரணி என்றும், பராசக்தி என்றும், ராஜராஜேஸ்வரி என்றும் பெயர். முத்தொழில்களை செய்யுமிடத்து பிரம்மாணி, வைஷ்ணவி, ருத்ராணி என்று அவள் பெயர் படைக்கின்றாள். ஈஸ்வரனுக்கு ஒப்பாகும் போது அவளுக்கு துர்க்கை என்னும் திருநாமம் வருகின்றது. காலசொரூபிணியாக கருதப்படும் போது அவள் காளியாகின்றாள். வித்தையின் வடிவெடுக்கும் போது சரஸ்வதியென்றும், தனதானிய வடிவெடுக்கும் போது லக்ஷ்மியென்றும் பெயர்.

மேலும் சக்திதேவியை பகவதி, மகமாயி, கற்பகவல்லி, அன்னைபூரணி, புவனேஸ்வரி, கனகாம்பா, நாகேஸ்வரி, பவானி, பரமேஸ்வரி, பெரியநாயகி, சங்கரி, நித்தியகல்யாணி, மகேஸ்வரி, அகிலாண்டேஸ்வரி, தையல்நாயகி, மாதவி, லலிதேஸ்வரி, மனோன்மணி, சாவித்திரி, காயத்திரி, வீரலக்குமி, விஜயலட்சுமி, விஜயை, அபிராமி, தனலட்சுமி, முகுந்தை, சண்டிகை, கிருஷ்ணை, திரிசூலி, நாராயணி, மாயை, ஈசானி, சாரதை, கௌரி, முதலான அனந்த திரு நாமங்களைப் பெற்று ஆன்ம கோடிகளுக்கு அருள்புரிகின்றாள்.

தேவர்களைக் காத்தருளும் பொருட்டு அசுரர்களை சங்காரம் செய்தமையாலும் ஆதிதேவிக்கு பல திருநாமங்கள் உண்டு.

மகிடாசுரனை மர்த்தனம் செய்த
மகாதேவி நமஸ்காரம்
அண்டத்துக்கெல்லாம் அதிபதியே
ஜக தாம்பிகையே நமஸ்காரம்
சண்ட முண்டனை ஸம்ஹரித்த
சாமுண்டேசி நமஸ்காரம்
ரத்த பீஜனை ஸம்ஹரித்த
பத்திரகாளி நமஸ்காரம்
பண்டாசுரனை ஸம்ஹரித்த
பார்வதியே நமஸ்காரம்

அவளையே காஸ்மீரத்தில் அம்பாள் என்றும், குஜராத்தில் கல்யாணி என்றும், வங்காளத்தில் காளி என்றும், மைசூரில் சாமுண்டி என்றும், மலையாளத்தில் பகவதி என்றும் மிதிலையில் உமை என்றும் ராஜபுதனத்தில் பவானி என்றும் பாரத நாட்டில் வழிபாடு செய்கின்றார்கள்.

புனித பூமி என்று அழைக்கப்படும் இலங்கை திரு நாட்டில் ஆதிபகவதியான பராசக்தி, பத்திரகாளி என்றும் வீரமகாகாளி என்றும், முத்துமாரி என்றும், கருமாரி என்றும்

நாகபூசணி என்றும், பேச்சி என்றும், துர்க்கை என்றும், பக்தர்கள் பரவசத்தோடு வழிபட்டு உய்யும் வண்ணம் எங்கெங்கும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள்.

தேவாரப்பாடல்பெற்ற திருக்கோணமலை அமர்ந்த சிவபெருமான் வீற்றிருக்கும் சன்னிதானத்திற்கு தெற்குப்பக்கமாக சுமாரான தூரத்தில் திருகோணமலை பட்டினத்தின் மத்தியில், அழகிய சிற்பங்களால் அழகுபடுத்தப்பட்ட உயர்ந்த கோபுரத்துடன் காட்சியளிக்கும் திருக்கோயிலில் எழுந்தருளிப் பல அற்புதங்கள் புரிந்து வருகின்றாள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள். உள்ளத் தூய்மையோடும் நம்பிக்கையோடும் வழிபடுகின்ற பக்தர்கள் யாவருக்கும் அருள்பாலிக்கின்றாள். வேண்டுவார் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொடுப்பவளுமாக இருக்கின்றாள் இவளே. ஆதிசக்தி, அற்புதக் கீர்த்தியுடைய அன்னை. இக்காளிதேவி பூதகணங்களுக்கும் பேய்களுக்கும், அணுக்கமான உறவுடையாள். நோய்க்கு மருந்தும் இவளேயாவாள். நுண்மையுள் நுண்மையாய் உண்மையுள் உண்மையாய் ஒளிர்பவள் இவள்

எல்லைக்காளியாக எங்கும் இருப்பவள்
தில்லைக் காளியும் இவளே
அகிலாண்ட அன்னை இவளே
அகிலமாய் ஆன புவனேஸ்வரியும் இவளே.

இவளது கடைக்கண் பார்வையே நம்மைக் கடமைக்குள் உட்படுத்தி காரிய சித்தியை நல்கி என்றும் இன்பம் பெருக உதவுபவை. எனவே தான் இயன்றளவும் நாம் காளிதேவியைப்போற்றுகிறோம், போற்ற வேண்டும் ஏனெனில் அவள் யாதுமாய் நின்று எம்மைக் காக்கும் தாய். இந்தக் காளிஈஸ்வரியை தாய் என்று சொல்லுவது தலையாயது. ஏனென்றால் தாய்க்கும் பிள்ளைக்கும் இடையேயுள்ள இணக்கம் ஒப்பற்றது. அன்னையின் இயல்பு என்றைக்கும் மாறாதது. பிள்ளையானவன் நன்றே செய்திடினும், தீதே செய்திடினும் உயர் தன்மை எய்திடினும், தாழ்மையுற்றிடினும் தாயினது அன்புக்கு அந்நியனாகின்றானல்லன். அந்த காளிஈஸ்வரியின் அன்பும் அதுபோன்றது. அவள் அன்பு வடிவினள். தங்கு தடையின்றி அன்பை அளித்துக்கொண்டிருப்பவள். இனபேதம், மதபேதம், ஏழைபணக்காரன் என்பது இவளிடம் கிடையாது. விருப்பு வெறுப்பு அற்றவள்.

தாயின் தன்மையுடைய இந்த காளித்தாயை வழிபடுவது மிக எளிதாய் விடுகிறது. பெற்றவளோடு பிள்ளை நெருங்கிப்பழகுவதற்கு சட்ட திட்டம் ஒன்றும் கிடையாது. சாஸ்திர விதிப்படி உபாசனை பண்ணத்தெரியா திருப்பதுபற்றி பக்தன் கவலைப்பட வேண்டியதில்லை. உலகு அனைத்தையும் ஈன்ற காளி தேவியை வணங்குவது அவளுடைய பேராற்றலையும் பேரன்பையும் உள்ளவாறு அறிந்து அநுபவித்தலேயாம்.

**தந்திர மறியோம், முறைசெய் மந்திர மறியோம்**
**மிகுதவங்களோடு தேசு மறியோம்**
**தண்மலரெடுத்து உனதடியில் அர்ச்சிக்க அறியோம்**
**சிந்தனையுறு பக்தியாய்ப் போற்றவு மறியோம்**
**செந்தமிழை ஓதவுமறியோம் சித்தம் வைத்து**
**எமைக்காப்பது உந்தனுக்குக் கடனேயம்மா!**

## ஸ்ரீ காளிதேவியின் தோற்றம்

திரிபுரம் எரித்து வெற்றி கொண்ட விரிசடைக் கடவுள் சிவபரம்பொருள் தன் தேவியான ஆதிபராசக்தியை நோக்கி "தேவி என்றுமில்லாத வண்ணம் இன்று உன் முகத்தில் ஒளி மிகக்காண்கின்றேன்'' என்று கூற தேவியானவள் ஐயனே! தங்கள் பெருமைக்கெல்லாம் ஆதார சுருதி நானல்லவே! எனக்கும் பெருமிதம் இராதா என்ன? என்று அன்பாக கேட்டாள்.

அகந்தையை என்றும் அடக்கியாளும் அரும்பரம் பொருளான சிவபெருமான் சற்று வினயமாகச் சிரித்துக் கொண்டே "தேவி! நான் தாமரை இலையில் தேங்கும் பனித்துளிபோல் எதிலும் ஒட்டாது இயல்பான என் தன்மையே கொண்டு இலங்கும் சிவன் என்பதை நீ அறிவாயல்லவா? நான் என்றும் எந்நிலையிலும் யாருக்கும் கட்டுப்படாதவன். பிறப்பதும் இறப்பதும் இல்லை. பேரறிவின் ஒருவன் சிவன் என்பதை நீ உணராயா? என்ன? என்று ஓர் இதமான இளநகையைத் தவழவிட்டார்.

அதுகண்ட அன்னை பராசக்தி தன்னிலை விளக்கமாக தனக்கென ஓங்கிய ராஜஸ குணத்தால் சிவபரம் பொருளை நோக்கிய வண்ணம் கூறினாள்.

ஈசனே என்றென்றும் உங்கள் உடலில் பாதியைக் கொண்டவள் நான். என்னை மதியாதவராகிய இச்சிவனுக்கு என் பெருமையை விளக்குவேன்'' என மனத்தினில் எண்ணினாள். சத்துவ குணத்தை விட்டு ராஜஸ குணத்தைச் சக்தி ஏற்றாள் என்ற எண்ணம் கொண்ட சிவன் அவளது ஆணவத்தை ஆடலாலல் மாற்ற எண்ணம் கொண்டார் ஆடவல்ல பெருமான். ஆட முயன்றாரென்றால் யாரெனும் அவரைத் தடுத்திட வல்லரோ? அம்மையும் அதனை உணர்ந்தே ஆடலானாலெனினும் பெருமானின் ஊர்த்துவ தாண்டவத்தை ஆடமுடியாதவளாகி வெட்கினாள். அதனால் ஈசன் ஈசையே! உன் அகங்காரம் சிறந்ததாலே ஆடல்கண்டாய். ஆயினும் தோற்றனை. நீ அனைத்துயிர்க்கும் அன்னையாயினும் உன் அகந்தையால் சுடலை தனில் ஆடல்நேரும் அவலத்தை அடைந்தனை. அன்று முதல் அன்னை காளியானாள். எனினும் எவ்வுயிர்க்கும் அன்னையான நீ உலகுயிர்க்கெல்லாம் உதவும் உமாமகேஸ்வரியாக பரிமளிக்கும் போது உறுதுணையாக இருந்து உலகுயிர்க்கு நன்மை தருவாய் என திருவாய் மலர்ந்தருளியதும் அன்னையும் மகிழ்ந்தனள்.

காளிதேவி நீல நிறமுடையவள். எங்கும் பரந்து வியாபகமாக இருக்கும் பொருள்கள் நீல நிறமாக இருப்பது இயல்பு. உதாரணமாக பரந்த கடல், ஆகாயம், நீலவர்ணமுடையது போல் தோன்றுகிறது. நீல நிறமுடையவளாக இருப்பது அவள் எங்கும் நிறைந்த பொருளாக இருப்பதை விளக்குகின்றது. எங்கும் சக்தியின் தோற்றமே. இவள் உலகனைத்துமாய் இருக்கின்றாள். மேலும் இவள் ஆடையணியாது நிர்வாணமாயிருக்கின்றாள். இயற்கைத்தாய் மறைப்பு இன்றித் தன்னை உள்ளபடி எங்கும் விளங்கிக்கொண்டிருக்கின்றாள். என்றும் அவளது நிர்வாண நிலை விளக்குகின்றது. பத்துத்திக்குகளிலும் பரந்திருப்பதால் திகம்பரி என்று அவளுக்குப் பெயர்.

இவள் வெட்டிய தலைகளை மாலையாகக் கோர்த்து அணிந்திருப்பாள். துண்டித்த கைகளைச் சரமாகக் கோர்த்து அரையில் கட்டியிருக்கின்றாள். இடது கரம் ஒன்றினில் இரத்தம் படிந்திருக்கும் வாளை ஏந்திக்கொண் டிருக்கின்றாள். அவள் நாவினின்று சொட்டும் இரத்தம் காணப்படுகிறது. இவையாவும் உலகில் சுயநலம், பேராசை, துர்ப்பிரயோகம், பொறாமை, அகங்காரம், ஆணவம், வன்குணம், பாரபட்சம், அதர்மம், நெறிவழுவுபவன், அழிவுக்கு ஏதுவாகிய சிற்றின்பங்களிலும் தீய செயல்களிலும் உடல் உழல்வதுபோன்ற மனிதர்களை காளிகாதேவி காலக்கிரமத்தில் பாழ்படுத்துவதோடு இவளின் இடது கரத்தின் வாளுக்கு இரையாவார்கள்.

அன்னையின் காட்சி யாண்டும் பயங்கரமாகவே இருக்கும். திரும்பத் திரும்ப மரணத்திற்கு ஆளாவான். இயற்கைத் தாய் அளிக்கும் முதன்மைகளை நல்வழியில் பயன்படுத்துபவனுக்கும் நீதிதவறாது நடப்பவர்களுக்கும், தர்மம் செய்பவர்களுக்கும், மனதில் தூய இனிய உணர்ச்சிகள், அன்பு அனுதாபம் நன்மை பயக்கும் இன்சொற்களை பேசுதல், சமுதாயத்திற்கு நன்மைகள் சேவைகள் செய்தல், புத்தியில் கபடமற்ற தன்மை, ஆணவம், அகங்காரம் அற்றவன், இறையடியார்கள் போன்றவர்களுக்கு அவள் பரிவுடன் அபயம் கொடுக்கின்றாள். தீங்குவரும் என்னும் பயம் அவனுக்கு இல்லை. துன்பமில்லை என்றும் சுதந்திரம் உண்டு. தாயின் தன் இயல்புக்கு உகந்த குழந்தைக்கு அவள் பயத்தைப் போக்கி அபயம் அளிப்பது மட்டுமல்லாது செம்மை யனைத்துக்கும் உறைவிடமாகிய சிவகதிக்கு வழிகாட்டுகிறாள். அதுவே அவள் அளிக்கும் வரம். எனவே அவள் கரங்களில் அபயமும் வரமும் மிளிர்கின்றன.

காளிகாதேவியினிடத்து அமைந்துள்ள பயங்கரம் பரிவு ஆகிய இரண்டு இயல்புகளினுள் எவன் எதற்கு உரியவன் ஆகின்றானோ அவன் அதை பெறுகின்றான்.

விளையாடும் சக்திக்குச்சிவனைத் தவிர வேறு ஆதாரம் ஏது. அவள் நிற்குமிடமெங்கும் சிவமயம் சிவம் அசைவற்றிருக்கும் அறிவு சொரூபத்தையும் சக்தி அசைவு வடிவினர் ஆகின்றாள்.

அசைவற்றுச் சிவன் சவம் போல் கிடக்கின்றார். அவரை ஆதாரமாய் வைத்துக்கொண்டு காளிகாதேவி அவர்மீது தாண்டவம் புரிகிறாள். சிவம் வேறு சக்தி வேறு அன்று ஒரே தத்துவத்தில் இரண்டு சொருபங்கள் இருக்கின்றன.

உலகத்திலேயுள்ள உயிர்கள் இறைவனை மறந்து இறைவழிபாட்டைத் துறந்து பாவபுண்ணியங்களை பகுத்தறியாது அருள்குறைந்து, ஆணவம், செருக்குக் கொண்டு நிலைகெட்டுத் தட்டழிந்து தடுமாறித் தீச்செயல்களைச் செய்யத் தொடங்கும். அப்போது பஞ்சமா பாதகங்களும் தன்னையறியாமல் தொழிற்படும். வளங்குன்றும் தருமம் மங்கி அதர்மம் பொங்கும், அப்போது இறைவனை மறந்து எதனையும் செய்யலாம் என்ற ஒரு எண்ணம் மக்கள் இதயத்தில் உண்டாகும். இதனைத்தான் உலகத்தின் அழிவு காலம் என்பர்.



இன்றைய உலகத்தை உற்றுநோக்குங்கால் உலக அழிவு காலம் அண்மித்துவிட்டதெனக் கூறுதல் மிகையாகாது. தீச்செயல்கள் நிறைந்த நாட்களில் காளிகாதேவி உலகத்தை அழித்து உயிர்களை ஒடுக்கிக் கொள்ளத்திருவுளங் கொள்வாள். உலகத்து உயிர்களைக் கொண்டே தேவி இதைச்செய்விக்கின்றாள். எப்படி என்று கேட்பீர்கள். சக்திவாய்ந்த அணுக்குண்டு விஷப்புகைகள் விஷகிருமிகுண்டுகள், நச்சுவாயுகுண்டுஎன பலவகையான குண்டுகள் கண்டுபிடித்தார்கள். இக்குண்டுகளை பிரயோகம் செய்து சண்டைபிடிக்க புல், பூண்டு, விலங்குகள், மனிதர் யாவும் அழியும். இன்னும் பூகம்பம் முதலிய இயற்கையேதுக்களும் உயிர்களை அழிக்கும். எனவே உலகம் அழியும். உலகம் முழுவதும் பேரிருள் சூழ்ந்து கொள்ளும். அப்பேரிருளில் உலகம மறையும், அனைத்தும் சுடுகாடு மயமாகும். இந்த சுடுகாட்டிலே ஒப்பற்ற ஒளிமயமாகிய முடிவுக்கு முடிவாய், ஆதிக்காதியாய் மறைகளுங் கடந்து நின்று காளிகாதேவியும் சிவன்மீது நின்று ஊழிக்கூத்தாடுவாள்.

## நவராத்திரி விரதம்

வசந்தகாலம், மாரிகாலம் என்ற இரண்டு காலங்களிலும் யமனுடைய கோரைப்பற்களுக்கு ஒப்பானவை இப்பற்கள் நச்சுத்தன்மையுள்ளவை என்பர் இக்காலங்களில் மனிதவர்க்கத்திற்குத் தெய்வத்தின் அருள்கிட்டாதவாறு தடைசெய்து பகையாகி ரோகங்களை உண்டுபண்ணிக் கேடு விளைவிக்கக்கூடியவை பொதுவாக கோடைகாலத்தில் வெப்பம் மிகுதியால் வைரஸ், பற்றீரியா போன்ற நோய்க்கிருமி களினால் அம்மை, கொப்பளிப்பான், சின்னமுத்து, வாந்திபேதி, போன்ற கொடிய தொற்று நோய்களும் மாரி காலத்தில் வெள்ளப்பெருக்கு குளிர் காரணமாக காலரா, மலேரியா, வயிற்றோட்டம், டெங்குகாய்ச்சல், போன்ற தொற்று நோய்களும் உண்டாகின்றன. இக்காலங்களில் உண்டாகும் உடல் கேடுகளுக்கு இடம்கொடுக்காமல் தேவியைப் பூஜிக்க வேண்டும் நவராத்திரி விரதம் இருந்து உரிய முறைப்படி தேவியை பூஜிக்க வேண்டும் தீர்க்க முடியாத திகிலையும், துன்பத்தையும் தேவியே தீர்த்தருளினாள் என்பது வரலாறு.

எனவே துன்பத்தைதுடைத்து அச்சத்தைப் போக்கி இன்பத்தையும் மகிழ்ச்சியையும் வாழ்வையும் அருள்செய்த தேவியை வழிபடுங்காலமாக நவராத்திரி அமைந்தன.


பராசக்தி தேவி வீட்டின் திருவிளக்கும், குடும்பக் குல விளக்குமாவாள். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் குறிக்கோள்களைச் சக்தியின் மூலமே அடையலாம் சாத்விகம், இராசதம், தாமதம் என்பன முக்குணங்கள் இவை அமைந்துள்ள ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி என்னும் மூவகைத் தோற்றங்களைக் கொண்டருளும் பராசக்தியை துர்க்கா, இலக்குமி, சரஸ்வதி எனவும் அழைப்பர்.

துர்க்காதேவி பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித்தி ருக்கின்றாள் எனினும் ஆண்டுக்கொருதடவை, அவள் பூமியில் சமவெளிக்கு புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரிக்கு அவளுடைய அம்சங்களாகிய லக்ஷ்மி, சரஸ்வதி, கணேசன், முருகன் ஆகியவர்களுடன் வருகின்றாள். மண்ணுலகவாழ்வு மாண்புறுவதற்கு வாழ்க்கையில் என்னென்ன பகுதிகள் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதை துர்க்கையும் அவளுடைய பரிவாரங்களும் சேர்ந்து விளக்குகிறார்கள்.

## துர்க்கா தேவி

பராசக்தியை துர்க்கை ரூபமாக உபாசித்தால் பயம் நாசமடையும் துர்க்கை என்ற சொல்லுக்கு, கடப்பதற்கு அரிதான அகழியிலிருந்து நம்மைக் கடத்துவிப்பவள் என்றும், அதனைத் தாண்ட வைப்பவள் என்றும் பொருள் பொதுவாக துர்க்கம் என்ற சொல் அகழி என்று பொருள்படுகிறது. இதில் அகழி என்பது கவலைகள், துன்பங்கள், பயங்கள், வறுமை, போகங்கள், இன்னல்கள், அபாயங்கள், சம்சாரபந்தங்கள், அறியாமை என்பன இவையெல்லாம் மனிதனுக்கு எதிரிகளாக விளங்குகின்றது. மனித இதயத்தை மாசுபடுத்தும் ஆணவம், பேராசை முதலிய அசுரத்தன்மைகளை வென்று எமக்கு வாழ்வளிக்கின்றாள்.

புகழ், உயர்வு, மங்களம், சுகம், மோட்சம், முதலியவற்றை வழங்குபவள் சிவப்பிரியை. கணேசன் பிறப்பதற்கு அன்னையானவள், விஷ்ணு மாயையாகவும், முழுப்பிரம்ம சொரூபிணியாகவும் இருப்பவள் இவள் மஞ்சள் மேனியுடையவள். சிவப்பு வஸ்திரம் அணிந்திருக்கின்றாள். இவளுடைய கைகளில் சங்கு, சக்கரம், வில், சூலம், கதை, பானபாத்திரம், போன்ற ஆயுதங்களுடன் அபயம் தரும் முத்திரையும் தெரிகிறது. இவள் கன்னங்கரேலென்ற நிறமுடைய மஹிஷாஸுரன் நிலத்தில் நிற்கின்றான். அவனுக்குச் சற்று உயரத்தில் சிம்மத்தின் மீது நின்று ஆட்சி புரிகின்றாள் திறம்பட இவள் செலுத்துகிற ஆணையை மீறி யாரும் செல்ல முடியாது அறிவுணர்வு, உறக்கம், பசி, தாகம், ஒளி, சோம்பல், கருணை, பொறுமை, மெய்யறிவு, தைரியம், மாயை, ஆகியவற்றின் சக்தியுருவாக திகழ்பவள் இவள் கொடியவனான மஹிஷாசுரனை வதைத்ததினால் மஹிஷாஸுர மர்த்தனி என்றும் போற்றப்படுகின்றது. இதன் காரணமாக தேவர்களின் துக்கம் நீங்கியதால் துக்க நிவாரணி என்று ஏற்றப்படுகின்றன. பரமமங்களத்தை செய்யவல்லாள் ஆனதால் இவளைச் சண்டிகா என்றும் எல்லோராலும் துதிக்கப்பட்டுக் கோபம் நீங்கியதால் அனைவருக்கும் அருளைப் பொழிந்து



அதிசயிக்கத்தக்க வடிவை அடைந்து நின்றதால் இவள் ஆனந்தி என்றும் கொண் டாடப்பட்டாள். சிவரூபமான கிருஷ்ணரை அடைந்திருக் கும்போது நாராயணி யாகவும் தோன்றியவள்.

திருமணம் ஆகாத திருமணம் தடைப்படுகின்ற பெண்கள் இராகுகால வேளைகளில் ஒரு எலுமிச் சையைப் பிழிந்து அதைத் தலைகீழாகத் திருப்பி வைத்து அகல்விளக்குப்போல் செய்து அதில் நெய் ஊற்றி பஞ்சுத்திரி இட்டு துர்க்கையின் முன்னால் ஒவ்வொரு வாரமும் ஏற்றி வந்தால் விரைவிலேயே திருமணம் நடைபெறும் என்று பரிகாரங்கள் உள்ளதால் நடைமுறையில் அவ்வாறான பெண்கள் கடைப்பிடித்து அற்புதப் பலன்களையும் அடைந்து வருகின்றார்கள். துர்க்கா தேவி சோதனைகள் செய்து பார்த்து ஆனந்திக்க விரும்பாதவள். வழிபட்டவுடனேயே பலனைத் தருபவள் இவளது குணச்சிறப்புக்கள் அளவற்றவை.

## இலட்சுமி தேவி

சுத்த சத்துவத்தின் தன்வடிவாகவும், சகல செல்வ பாக்கியங்களின் தன் உருவாகவும் அவற்றுக்கு அதிட்டான தேவதையாகவும் லக்ஷ்மி தேவி விளங்குகின்றாள். இவள் மனோகரி, அமைதி, அழகு, ஒளி, சாந்தி முதலியவற்றின் வடிவம் நற்குணமயமான சுசிலை, சர்வமங்கள சொரூபிணி, காமம், கோபம், மோகம், ரோஷம், மதம், அகங்காரம் ஆகியவற்றை வர்ஜிப்பவள். பக்தர்களிடம் பிரியமுடையவள். விஷ்ணுவின் பிரேமைக்குரியவள். விஷ்ணுவுக்கு மற்றொரு திருநாமம் திருமால் அவர் லட்சுமியோடு இருக்கும் போதுதான் திருமால் அவரை லட்சுமிநாராயணன் எனவும் வழங்குவர், கருமேகத்தில் மின்னல் தோன்றுவதைப் போல் நாராயணன் மீது இலட்சுமி அழகாய் இருக்கின்றாள்.

ஒருவனின் முகத்திலோ, வாழ்விலோ, வீட்டிலோ, வளத்திலோ இலட்சுமி இல்லாவிட்டால் இலட்சுமி கடாட்சம் இல்லாதவன் என்றும் இலட்சுமிகரம் இல்லாதவன் என்றும் உலகம் கூறும். இலட்சுமியைப் பூவின் திருவென்றும் அழகின் புனைகலம் என்றும் யாவர்க்கும் செல்வனம் என்றும், அமுதில் பிறந்தாள் என்றும் கூறுவர். இன்னும் அவளைச் செந்தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கென்றும் வாழ்த்துவர். அவளைப் பெரிய பிராட்டி என்றும் கொண்டாடுவார்கள் மக்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தருளும் காமதேனு என்றும்

மகாலட்சுமி என்றும் பெரியோர் கூறுவர். அவள் தன்னுடைய கருணை நோக்கினிலே தன்னை அடைந்தவர்களுக்கு அருள் செய்கிறாள் இலக்குமி தேவியின் பார்வையை அமுதப்பெருக்கு என்பர் திருமால் காத்தல் தொழிலைச் செய்வதற்கும் லட்சுமியின் கடைக்கண் அருள் காரணம் என்பர். ஒரு புலவர் பாடியுள்ளார்.

**கடைக்கண் அருள் படைத்தன்றோ**
**மணிவண்ணன் உலகமெல்லாம் காவல் பூண்டான்**

இவள் அஷ்டலெட்சுமிகளாய்க் காட்சி தருபவள் சுதந்திரம் சுபீட்சம், என்பனவற்றுக்கும் இவளே அதிதேவதையாவள்.

**வரவேண்டும் வரவேண்டும் அஷ்டலெட்சுமி**
**அருளைத் தரவேண்டும் தரவேண்டும் ஆதிலெட்சுமி**
**சந்ததியைத் தந்தருள்வாய் சந்தானலெட்சுமி**
**எண்ணும் பல யோகங்கள் தருவாயே கஜலெட்சுமி**
**தனம் பெருக மனம் உயர கண்பாராய் தனலெட்சுமி**
**கண்பாராய் தனலெட்சுமி**
**மனம் குளிர நிலம் செழிக்க மகிழ்ந்தருள்வாய் தான்ய லெட்சுமி**
**தான்ய லெட்சுமி**
**கலைகள் வெற்றிதனை காண அருள் வீஜயலெட்சுமி**
**வீஜயலெட்சுமி**
**சகல சௌபாக்கியமும் தந்திடு மகாலெட்சுமி, தந்திடு**
**மகாலெட்சுமி**
**உலகெங்கும் வீரத்தை நீயருள்வாய் வீரலெட்சுமி**
**வீரலெட்சுமி**
**உன்நாமம் சொல்பவர்க்கே அருள்புரிவாய் அஷ்டலெட்சுமி**

## *சரஸ்வதி தேவி*

சொல், அறிவுணர்வு, கல்வி, மெய்யறிவு என்பனவற்றின் நிலைக்களமாகவும், சகல வித்தைகளின் வடிவமாகவும் சரஸ்வதிதேவி விளங்குகின்றாள். அதனால் இவள் தன்னை வழிபடுகிறவர்களின் புத்தி வடிவமாகவும் அவர்கள் பாடும் கவிதையின் கவியுருவமாகவும் எல்லா விதமான சங்கீதங்களின் வடிவமாகவும். அவ்வின்னிசைகளுக்கு ஏற்ற தாளபேத காரண வடிவமாகவும், அவற்றால், மகிழ்ச்சி பெறும் பிரபஞ்ச வடிவமாகவும் சரஸ்வதிதேவியே இலங்குகின்றாள். இவள் சகல வித்தைகளின் வடிவம் தான் என்பது தோன்றும்படி எப்போதும் வீணை, புத்தகம், ஏந்தியபடி காட்சியளிப்பவள். இவள் வெண்மை நிறமுடையவளாயும், தூய்மையான ஆடைகள் அணிந்திருப்பவள்.

மும்மூர்த்திகள் முதலிய தேவகணங்களால் நன்கு பூஜிக்கப்படுபவள். முனிவர்களால் போற்றப்படுபவள் படைப்புக்கடவுள் நான்முகன் நாயகி சரஸ்வதிதேவியை நாமகள், கலைமகள், பனுவலாட்டி, காயத்திரி, பிராமி, பாரதி, வாணி, வெண்டாமரையாள், வாக்காள், இசைமடந்தை, மலரவன்தேவி முதலிய திருநாமங்களால் வழிபடுவர். இவளை வழிபடுவோர்க்கு தேவியின் திருவருள் உண்டாகும். தேவகுருவுக்கு இணையான புத்தி உண்டாகும். வாக்குத்திறமையும், கவிதை இயற்றுவதில் உயர்வும், பராக்கிரமும் உண்டாகும்.

எனவே வாழ்வு நல்வாழ்வு ஆவதற்குத் தனிமனிதன் வாழ்விலும் சமூகத்தின் நடைமுறையிலும் ஆட்சியானது சிறப்புற்றிருக்க வேண்டும் என்பதைத் துர்க்கா தேவி விளக்குகின்றாள். - செல்வத்தைப் பெருக்குவதற்குச் சின்னமாகத் திருமகள் இருக்கின்றாள் செல்வத்தைப் பெருக்கி அதைப் பயன்படுத்துபவர்களே இகலோக வாழ்க்கையை நன்கு நடாத்த முடியும் பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை என்பது கோட்பாடு - பின்பு செல்வம் ஒன்றை மட்டும் படைத்திருந்தால் போதாது கலைகள் பல பயிலுவதும் அவசியமாகிறது. முயலுகின்றவர்கள் வாழ்க்கையில் விதவிதமான கலை ஞானங்களைப் பெறலாம். அதற்கு அறிகுறியாக சரஸ்வதி இலங்கின்றாள். ஞானத்திற்கும் நல்லறிவுக்கும் அறிகுறியாக கணேசன் இருக்கின்றான். ஞானமிருக்குமாயின் வாழ்வு நல்வாழ்வு ஆகும். அறிவை செயலாக மாற்றுபவன் முருகக்கடவுள் அவன் மூலம் வாழ்வு ஆற்றல் நிறைந்தது ஆகிறது நிறைவாழ்வின் பொலிவுகளை விளக்குகின்ற சக்திகளாக துர்க்கையும் அவளுடைய பரிவாரங்களும் சேர்ந்து விளக்குகிறார்கள் எனவே நாம் அவர்களை வழிபாடு செய்து நிறைவாழ்வைப் பெறுவோமாக.



**பெருமையுள்ளவனுக்குக் கவசமும்,**
**கோபமுள்ளவனுக்கு பகைவனும்,**
**பங்காளியுள்ளவனுக்கு நெருப்பும், நல்ல**
**நண்பனைப் பெற்றவனுக்கு மருந்தும்,**
**தீயவர் நேசமுள்ளவனுக்கு பாம்பும்,**
**படிப்பாளிகளுக்குப் பணமும்,**
**வெட்கமுள்ளோருக்கு அணிகலனும்,**
**கவித்தமுள்ளோர்க்கு ராஜ்யமும்**
**தேவையில்லை.**




# சக்திதாசன் காட்டிய பக்தி நெறி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**திருமதி. சித்திதேவி பத்மநாதன்**
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்
(தமிழ்மொழி)

"யாதேவி சர்வ பூதேஷு மாத்ருபேனே ஸம்ஸ்திதா! நமஸ்தஸ்ய! நமஸ்தஸ்ய! நமஸ்தஸ்ய! நமோ நம"!!

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியை ஸ்ரீதேவி
மகாத்மியம் போற்றிடும் அழகிது.

காலமாம் வனத்திலண்டக்கோலமாமரத்தின் மீது
காளி சக்தியென்ற பெயர் கொண்டு-ரீங்
காரமிட்டுலவுமொருவண்டு - நிழல்
காலும் விழி நீலவன்ன மூலஅத்துவாக்களெனும்
கால்களாறுடையதெனக்கண்டு-மறை
காணு முனிவோருரைத்தார் பண்டு
மேலுமாகிக் கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணுமண்ணுமான சக்தி வெள்ளம்
வித்தையெலா மாங்கது செய்கள்ளம்

"மகாகாளி புகழ்" என்ற தலைப்பில் - அவள் தன் வான்பெருமையைக்கோடி காட்டும் இனிய எளிய தமிழ்க்கவிதையிது. இக்கவிதை தந்தவனே சக்திதாசன் தன் பெயரைக்காளிதாசன் என்றும் தன்படைப்புகளில் வரைந்து பிரசுரித்தவன்.

1919 மே 2 ஆந் திகதி எட்டயபுர மகாராஜா ராஜேந்திர ஸ்ரீ வெங்கடேச ரெட்டப்ப பூபதிக்கு எழுதிய ஓலைத்தூக்கில் தன்னை அறிமுகம் செய்கிறான் சக்திதாசன்.

"........... சக்திதாசன் எனப்புகழ் வளரும் சுப்பிரமணிய பாரதி தான் சமைத்த தூக்கு" இந்த வரிகள் சக்திதாசன் யார் என்பதைக் காட்டிவிட்டன அல்லவா? பாரதியின் கவிதைகளை மேலோட்டமாகப் படித்தாலும் கூட அவன் நெஞ்சம் சக்திமேல் பூண்டிருந்த அளவற்ற காதலை அவை இனங்காட்டி நிற்கும். சுமார் இராண்டாயிரத்து நூற்றுறெழுபத்தெழு பாடல்வரை அவன் கவிதைகள் உண்டென்பார். பாரதி பாடல் பல வகையில் தொகுக்கப்பட்ட வேளை, பக்திப்பாடல்கள் எனுந்தலைப்பில் அமைந்த எழுபத்தாறு பாடல்களில் முப்பத்திரண்டு வரை சக்தியின் துதிகளேயாம். சக்தி திருப்புகழ் என்று எழுதப்பட்டுள்ள பதினெட்டு அடிகளில் ஐம்பத்தைந்து தடவை 'சக்தி' என்ற நாமஸ்மரணை பயின்று வருவது மலைப்பைத்தருகிறது. தன்பெயரையும் இணைத்து இறுதி ஈரடிகளைப் பாடியுள்ளான்.

"சக்தி சக்தி சக்தி என்றால் - சம்பத் எல்லாம் நேராகும் சக்தி சக்தி என்றால் சக்தி - தாசன் என்றே பேராகும்." "நமக்குத்தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதுஞ்சோராதிருத்தல்," என்று தன் இலட்சியம் கூறவந்த பாரதி-ஏன் சக்திக்கு இத்தனைதூரம் அடித்தொண்டன் ஆனான் என்றால் - அதற்குப்பதில் காலத்தின் தேவை என்றும் கொள்ளலாம்- தான் எப்படி கவிதை செய்தான் என்பதையுரைக்கும் கவிதை இது.

"செயுங்கவிதை பராசக்தியாலே
செயப்படுங்காண்
"உமைகவிதை செய்கின்றாள்;"
"சொல்லினுக் கெளிதாகவும் நின்றிடாள்
சொல்ல வேறிடஞ்செல்ல வழிவிடாள்"
"போந்த நிலைகள் யாவும் பராசக்தி பூணும்
நிலையாம்

சக்தியை அல்லும் பகலும் அனவரதமும் அவன் நெஞ்சம் நாடி நின்றதனால், அவளை பூஜித்து - அவளையே தியானித்து, அவள் தாசன் ஆனான் ஆற்றல் மிகப்பெற்றான், உலக மகா கவிகளிடத்து ஓரங்கமானான்.

தன் தாய் நாட்டின் சுகத்திரம் வேண்டிப்பாடிய வீரனை ஆற்றல் மிகப் கொண்ட எழுத்தாளனை பக்திமான் எனக்கூறியதில் தவறு உண்டோ எனில் இல்லை என்று துணிந்து கூறலாம் பாரதி வாழ்ந்த காலம்(1982 மார்ச் 11-1921 புர-12) பாரதம் அடிமைப்பட்டிருந்த காலம்: தமிழ்ச்சமுதாயம் புன்மையுற்றிருந்தகாலம் புலவர் பலரும்,அக்காலச்செல்வரை அடைக்கலம் புகுந்து கவிதைத்தாயை அடகு வைத்திருந்த காலம், பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு நாமெமது தமிழ்ர் எனக்கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ" நெஞ்சு பொறுக்குதில்லையே..." என்று தமிழர் தம் வீரதின்தெய்வம் கொற்றவையாய் குரல் கொடுக்க கவிதைத்தாய் பாரதி வடிவில் பிறப்பெடுத்தாள் எனலாம். அந்தக் கொற்றவையின் வீரகர்ஜனையைத் தான், பாரதி குரலில் அவன் படைப்புகளில் கேட்கிறோம். காலத்தின் தேவையாக அவன் எழுத்தக்கள் உருவெடுத்தன.

மற்றொரு கோணத்தில் நின்று பார்க்கையில் அவன் பாடல்கள் உலகியல் துன்பங்களை

விளம்பி, பிறவியின் கட்டறுத்து இறைவனுடன் இரண்டறக் கலக்கும்படி கூறுவன அல்ல: மாறாக எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்று உலகின் இன்பத்தையுணர்ந்து, மேலான அறவாழ்வு வாழ்ந்து, இறைவனை அடையும் நிலைபற்றிக் கூறுவன.

வேண்டியதைப் பெறுவதற்கு வழிபாடு முக்கியம். வழிபாடு என்பது சடங்குகள் மட்டுமல்ல; அது ஒரு உயிரியல் முயற்சி; தாழ்ந்து கிடக்கும் ஒருயிர் தன் நிலையுயர வேண்டுமென்ற வேட்கையில் எல்லையற்ற கடவுளை முன்னிட்டுச் செய்யப்படினும் அதன் பயன் உயிர்களுக்கேயாம். நமது மதம் பரம்பொருளை சிவம் என்றும், அதன் எல்லையற்ற ஆற்றலை சக்தியென்றும், வழங்கும். அம்மை வழிபாடு ஆற்றலைத் தரும்; ஆற்றல் பெற்ற சமுதாயம் நல்லதைப்படைக்கும்; தீயதை அழிக்கும்; எனவே பாரதி இந்த ஆற்றல் வழங்கும் சக்தி வழிபாட்டை விழைந்தான்; பயின்றான்; சக்தி பெற்றான் தன் எழுத்தாற்றலால் நாட்டையும் சக்தி பெற வைத்தான்; நாடும் விடுதலை பெற்றது.

சக்தி வழிபாடு மேம்பாடுற்று விளங்கிய வங்காளம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில், பாரத மாதாவின் விலங்கொடிக்க வீறு கொண்டேழுந்த பாரதப் புதல்வர்களுக்கு தேச பக்தியை மூண்டேழுச் செய்வதற்கு இந்த சாக்த வழிபாடு உறுதுணையாயிற்று. இங்கு தெய்வ பக்தி தேசபக்தியாக உருமாற்றம் பெற்ற சரித்திரத்தேவை நாட்டின் விடிவை ஈட்டித்தந்தது. நம் சக்தி தாசனின் பாடல்களில் இந்தநிலை விளக்கம் பெறுகிறது. பாரதமாதா எங்கள் தாய், வெறிகொண்டதாய் போன்ற பாடல்களில் பாரத மாதாவும் பாராசக்தியும் ஒருவருடன் ஒருவர் பிணைந்துள்ள வகையினைக் காணலாம் வெறி, கோபம், பயங்கரம், சப்தம், சங்காரம், அன்பு, அருள், முதலிய பலபண்புகள் சேர்ந்த பூரணமான நூதனமான பெண்சக்தியை போற்றிபரவினார். தமது வலிமை, ஞானம் இவற்றை தாய்த்தேசத்தின் நன்மையும் ஏற்றமும் கருதி நிவேதனஞ் செய்யவேண்டுமென்றார், இந்த நிவேதனமும் ஆகுதியும் கேட்ட தெய்வமாக சக்தி விளங்கிறாள்.

சக்தி தாசனின் பக்தி நெறி புதுமையானதாகக் காண்கிறது. நாட்டுப்பற்றும் அவர்க்குப் பக்தியாகவே விளங்கியதைக் கண்டோம்.

ஆன்மீக விடுதலை நாட்டு விடுதலை இவை இரண்டும் பரந்தாமனால் கிட்டியதை விளக்கும் பகுதியே அவரது பாஞ்சாலி சபதம் பக்தி சிறந்தவர் தமக்கு வேண்டியதை தம் இஷ்டதெய்வத்திடமே விண்ணப்பித்துப் பெற்றதாக வழக்கொன்றுண்டு.

“சங்கத்தமிழ் மூன்றும்தா” எனத் துங்கங் கரிமுகத்துத் தூமணியை வேண்டினாள் ஒளவை மூதாட்டி; மீண்டும் பிறப்புண்டேல் உனை மறவாமை வேண்டும். என்றிசைத்தவர் காரைக்காலம்மையார்; பட முடியாதினித் துயரம் பட்டதெல்லாம் போதும் இந்த உடலையும் உயிரையும் எடுத்துக்கொள், என்றார் இராமலிங்க வள்ளல்.

திருவேங்கடமலையில்நான் யாதேனு மொன்றாய்ப் பிறந்திட வரமருள்வாய் எனக் கசிந்து நின்றார் குலசேகராழ்வார்; சங்கஇலக்கியமாம் பரிபாடலில் காணும் வரிகள் இவை “யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல அன்பும் அருளும் அறனும்..” இந்த ரீதியில் பாரதியும் வரங்கேட்டான். “பொன் பொருள், நூறு வயது, நல்குவாய், சின்னக்கவலையெல்லாம் போகச் செய்வாய், எனக்கு நீயருளும் வரமெல்லாம் பயன்படும் வகையினைப் பார்;” என்று தனது செயற்பாட்டை அடுக்கிச் செல்கிறார்.

மண்ணிலார்க்குந் துயரின்றிச் செய்வேன்.
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்
தானம் வேள்வி தவம் கல்வியாவும்
தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்
மண்மீதுள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புல்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்ப்புற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே

உலகசேமத்தை நாடிநிற்கும் உயர்ந்ததோர் - ஞானப்பெருநிலை உற்றவர்கள் வாக்காக இவை காட்சி தருகின்றன. சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டவளுக்கு “வல்லமை தாராயோ இந்த வையகம் பயனுற வாழ்வதற்கே” என்ற வேண்டுகோள் செய்த சொற்கோவை எத்தனை அர்த்த புஷ்டி நிறைந்ததென்பதை பாரதியின் மேலே குறித்த பாடலடிகள் நிதர்சனமாக்கி நிற்கின்றவைல்லவா? நம் பண்டைப் பழமையின் பயன் மிக்கவற்றை மீண்டும் நிலைநாட்டுதல்; காலத்துக்கேற்ற நல்லன-புதியனவற்றை உருவாக்குதல்; என்ற வகையில் அவன் கவிதை பாடினான்.பாரதத்தின் பழமையுரிமைச் செல்வமான ஆன்மீகம், உரிமை

நாட்டப் போரினை அவாவி நின்ற லௌகீகம் இதுவே பாரதியிடம் அணைந்து பிணைந்து நின்ற ஆளுமையாகும். நாட்டுப்பற்றும் தெய்வபக்தியும் அவன் இரு கண்களாயமைந்தன. தன்கடன் அடியேனையுந் தாங்குதல் - என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற இறைபணி நிற்றலைப் பாடிய அப்பரடிகள் செயற்பாட்டின்

சாயல் பாரதியின் சொல்லிலுஞ் செயலிலும் விரவி நின்றது திருவங்கமாலை பாடிய அப்பர் பாடலுக்கு இணையாக சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம் எனுந் தலைப்பில் நாற்பத்தாறு நாலடிக் கவிதைகள் பாடி வைத்துள்ளார். ஐம்பொறிகள் உடல் உறுப்புகள் மட்டுமன்றி மனம் (11 அடிகள் ) சித்தம் (6) மதி (12) அகம்(4) எனசக்தி நாம உச்சாடனத்துடன் அவை விரவி நின்று சக்தி புகழை நிலை நாட்டுகின்றன. உதாரணத்துக்கு ஒரு அடி காண்போம்.

அகம் சக்தி தனக்கே உடைமையாக்கு - அதில்
சக்தி சிவநாத நித்தம் ஒலிக்கும்- அகம்
சக்தி தனுக்கே உடைமையாக்கு - அது
சக்தி திருமேனியொளி ஜவலிக்கும்

தமது பக்தியின் பாடு பொருளாக ஆன்ம விடுதலை நாட்டுவிடுதலை இரண்டையும் ஏற்று அவற்றை ஏற்றமுடன் உரைத்து உணர்ந்து உணர்த்தி நின்ற பாரதிக்குக் காதலும் பக்தியாகவே தென்பட்டது. ஒன்று சிற்றின்பம் மற்றது பேரின்பம் சிற்றின்பத்தின் வளர்ச்சியை முதிர்ச்சியை பேரின்பத்தின் தொடக்கமாக அவர் காட்டி நின்றார் பாரதி பாடல் இரண்டும் இழைந்த குழைவு.

காதல் , காதல், காதல்-காதல்போயின்
சாதல், சாதல்,சாதல்-

வேதாந்தப் பொருள் கொள்பவர் இதனைப் பக்திக் குரலாக்குவர் பாரதி அடிமையுற்ற பாரதத்தில் பிறந்து, அடிமையாக வாழ்ந்து, அடிமை விலங்கை பாரத மாதா உடைத்தெறியுமுன்பே-தனது நாற்பதாவது அகவையை எட்டு முன்பே மறைந்தவன்- இது காலம் வகுத்த உலக வாழ்வுக்கு போடப்பட்ட கணக்கு ஆனால்- அவனது எண்ணங்கள், உள்ளம், உயிர் இவை இத்தகைய அடிமைநிலையில் இல்லவே இல்லை; பளிங்கொத்த தெளிந்த அவன் மனதின் சிந்தனை ஓட்டம், அவன் சக்தியுடனும், தனது மனதுடனும், உரையாடுவது போலவே அமைத்து விளங்கக் காண்கிறோம். இந்த உள்ளத் துய்மைதான் 'பக்தி' என்ற பெருவெள்ளம் அவன் நெஞ்சில் பெருகக் காரணமாயது பக்தியால் சித்தம் தெளியும் செய்கையில் செம்மை பிறக்கும் விந்தைகள் செரும் பாரதியிடம் கவிதை செய்யும் வித்தை அற்புதமாகவே வளர்ந்திருந்தது
பக்தியினால் அவன் காட்டும் மற்றொரு பயனை அவன் வார்த்தைகளில் பார்ப்போம்.

"பயனெண்ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்
துயரிலாதெனைச் செய்து விட்டாள்

# "துன்பமென்பதைக் கொன்று விட்டாள்"

பக்தி வளர்த்த நெஞ்ச் உருகும்; அந்த உள்ளநெஞ்சம் நெகிழ்வால் அன்பு பெருகும். அருள் பெருகும் பகைவனுக்கருளும் நெஞ்சம் - ஊராண்மை, என வள்ளுவர் உரைத்த பேரறம் தோன்றும்.

பக்தி நெறியால் விளையும் பயன் இவை மட்டுமல்ல. பயன் கருதாது செயலைச் செய்தல் "பற்று நீக்கு ,தொழில் செய், பற்று நீக்கு " என உரைநடையிலும் பாரதி அழுத்துகிறார் பயன் கருதமால் உழைப்பதும் அவருக்கு பத்தி செய்யும் முறையே. தெய்வத்தை துணை கொண்டு செயல் புரிந்தால், அச்ச உணர்வு தன்னால் அகலும், அச்ச உணர்வுஅகன்றால் எதிலும், எங்கும். எதற்கும் அஞ்சா நிலை வந்தபின் கவலை எதைப்பற்றியுமே நெஞ்சில் எழுவதில்லை கவலை யற்றிருக்கும் இந்த நிலையே. முக்தி ஆம் முக்தி உள்ளத்தி வேறுபடும் விடுதலை உணர்வே முக்தி அதுவே பிறப்பின் விடுதலை உள்ள விடுதலை உயிர் விடுதலை பாரதி காட்டும் பக்தி நெறி மாந்தரை முக்திக்கே இட்டுச் செல்லும் சக்தி மிக்கதே.

பக்தி நெறி சிறக்க - வந்துதித்த சமயகுரவர் நால்வர் தம்மையும், பாரதியின் கவிதையோட்டம் நினைவுறுத்தி நிற்பதைப் பலகவிதைகளில் காணலாம்.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' என்ற அப்பரின் திமிர்ந்த ஞானச் செருக்கைக் காட்டவேண்டுமா?

'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'.... இவை பாரதியின் வரிகள்

மையலால் மயங்கும் வழி ஐயனை ஆண்டுகொள்ள அழைத்த சுந்தரன் வன்றொண்டனின் உரிமைக்குரல் "எற்றுக்கிருந்தீர், வாழ்ந்து போதிரே "என்ற வகையில் பாரதியிடமும் பரிணமித்தது.

'மோகத்தைக் கொண்றுவிடு - அல்லால் எந்தன் மூச்சை நிறுத்திவிடு' தேடிச்சோறு நிதம் தின்று ... வேடிக்கை மனிதரைப் போலே- நான் தான் விழுவேன் என நினைத்தாயோ? என்று பாராசக்தியிடம் வேண்டுகின்றேன்.

பாரதியின் பூதஉடல் உலகை நீங்கி முக்கால் நூற்றாண்டாகியுமென்ன? அவன் அமரன் தன்னை அமரனாக்கிக் கொண்டவன்; சக்தியை வழிபடுபவர் சக்திதாசனின் பக்தி நெறியையும் சிந்தையில் எண்ணிடவேண்டும் என்போம். பாரதியின் தேசிய சேவை பராசக்தியின் ஆன்மீக சேவை; பாரதியின் தேச பக்தி - பாராசக்தியின் ஆத்ம சக்தி.

சக்தி பாதமே சரணென்று நாம் புகுந்து
பக்தியினாற் பாடிப் பலகாலும்-முக்திநிலை
காண்போம் அதனாற் கவலைப்பிணிதீர்ந்து
பூண்போம் அமரப்பொறி.

ஓம் சக்தி

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

# பாராயணஞ் செய்தற்குரிய தேவீஸ்தோத்திர மாலை

"சிவாகமக்ரியா ஜோத"

**பூரண - தியாகராஜ - கமலராஜக் குருக்கள்**

குரு - கணித ஆசிரியர் மட்டு விவேகாநந்த மகளீர் ம.வி.

மட்டக்களப்பு

இலங்கையில் தேவாரப்பாடல் பெற்றதும், அருணகிரி நாதசுவாமிகளால் திருப்புகழ் பாடப்பட்ட பெருமை வாய்ந்ததும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான தலங்களுள்கோணேசப்பெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருக்கோணமலையின் கண்ணே சிறப்பு மிகு ஆலயங்களில் ஒன்றாய் "கேதார கௌரி விரதம்" என்றதுமே அனைத்து அடியார்களின் மனத்திரையில் தோன்றும்பெருமை வாய்ந்ததுமாக ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலயம் விளங்குகின்றது. இங்கு விரைவில் மகாகும்பாபிஷேகம் நிகழவுள்ளது. ஆலய வரலாறு அம்பிகையின் பெருமைகள், "மகா கும்பாபிஷேக மலர்" ஒன்றை அச்சிட்டு என்றும் வாடாமலர் மாலையாக அன்னையின் திருவடித்தாமரைகளில் சூடி மகிழ காலத்தாலழியாப் பொக்கிஷமாகப் பக்தர்கட்கு பயன்தரத்தக்க வகையில் வெளியிட ஆலய ஆதின கர்த்தாகவும் பிரதம குருவுமான பிரமஸ்ரீ சோ.ரவிசந்திரக் குருக்கள் அவர்களின் முயற்சி அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட போற்றத்தக்க முயற்சி "யாதுமாகி நின்றாய்காளி ! எங்கும் நீ நிறைந்தாய் " என்று பலவாறாகப் போற்றப் படுகின்றவளான தேவி - பல உருவங்களில் தோன்றி அசுரர்களை அடக்கிய அம்பிகையின் திருவிளையாடல்களைப் பலவாறு போற்றுகின்றதும்" சாக்தமதத்தினரால்' மந்திர சக்தி வாய்ந்த புனித நூலாகப் போற்றப்பட்டுப் பராயணம் செய்யப்படுகின்றதுமான "தேவீ மாகாத்மியம் "எனும் நூலிலே தேவர்கள் அம்பிகையைப் போற்றித்துதித்து வணங்குவதாய் அமைந்த தோத்திரப் பாடல்களை அடியார்கள் பாராயணஞ் செய்து பயன் பெற வேண்டும் எனும் நோக்கில் தமிழுரையுடன் கீழேதரப்படுகின்றது. அத்துடன் விரும்புமடியார்கள் தேவைகட்கேற்ப பாராயணம் செய்து பலனடைய மந்திரம் போன்ற சக்தியுள்ள ஸ்லோகங்களும் கருத்துடன் தரப்பட்டுள்ளன. விரும்பும் அடியார்கள் தக்க சுலோகங்களை நாடோறும் காலையிலும் மாலையிலும் தக்கவாறு தூயராகப் பாராயணம் ஜபம் செய்து பலன் பெற விழைவார்களாக.

## ஸ்தோத்திரம்

1. யாதேவீ ஸர்வ பூதேஷு **விஷ்ணுமாயேதி** சப்திதா!
   நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:!!
2. யாதேவீ ஸர்வ பூதேஷு **சேதநேத்ய** பிதியதே!
   நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:!!
3. யாதேவீ ஸர்வ பூதேஷு **புத்தி** ரூபேண சம்ஸ்திதா!
   நமஸ்தஸ்யை சமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
4. யாதேவீ ஸர்வ பூதேஷு **நித்ரா** ரூபேண சம்ஸ்திதா!
   நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:!!
5. யாதேவீ ஸர்வ பூதேஷு **க்ஷு° தா** ரூபேண சம்ஸ்திதா!
   நமஸ்தஸ்யை சமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:!!

6. யாதேவீ ஸர்வ பூதேஷு **சாயா** ரூபேண சம்ஸ்திதா!
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
7. யாதேவீ ஸர்வ பூதேஷு **சக்தி** ரூபேண சம்ஸ்திதா!
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
8. யாதேவீ ஸர்வ பூதேஷு **த்ருஷ்ணா** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
9. யாதேவீ ஸர்வ பூதேஷு **க்ஷாந்தி** ரூபேண சம்ஸ்திதா!
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
10. யாதேவீ ஸர்வ பூதேஷு **ஜாதி** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
11. யாதேவீ ஸர்வ பூதேஷு **லஜ்ஜா** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
12. யாதேவீ ஸர்வ பூதேஷு **சாந்தி** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
13. யாதேவீ ஸர்வ பூதேஷு **ஸ்ரத்தா** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
14. யாதேவீ ஸர்வ பூதேஷு **காந்தி** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
15. யாதேவீ ஸர்வ பூதேஷு **லக்ஷ்மீ** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
16. யாதேவீ ஸர்வ பூதேஷு **வ்ருத்தி** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
17. யாதேவீ ஸர்வ பூதேஷு **ஸ்மிருதி** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
18. யாதேவீ ஸர்வ பூதேஷு **தயா** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
19. யாதேவீ ஸர்வ பூதேஷு **துக்ஷ்டி** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
20. யாதேவீ ஸர்வ பூதேஷு **மாத்ரு** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!
21. யாதேவீ ஸர்வ பூதேஷு **ப்ராந்தி** ரூபேண சம்ஸ்திதா !
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம :!!

22. இந்த்ரியாணாம் அதிஷ்டாத்ரீ பூதாநாம்ச அகிலேஷுயா !
பூதேஷு ஸததம் தஸ்யை வ்யாப்த்யை தேவ்யை நமோ நம:!!
23. சிதி ரூபேணே யாக்ருத்ஸ் நம்ஏதத் வ்யாப்ய ஸ்திதா ஜகத்!
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:!!
24. ஸ்துதா ஸுரை: பூர்வம் அபீஷ்ட சம்ஸ்ரயாத்
ததா சுரேந்த்ரேண திநேஷீ ஸேவிதா !
கரோது ஸா நஸ் சுபஹேது ரீஸ்வரீ
சுபாநி பத்ராணி அபிஹற்து சாபத : !!
25. யா ஸாம் ப்ரதம் சோத்தத தைத்ய தாபிதை:
அஸ்மாபிரீசா சஸுரைர் நமஸ்யதே !
யாசஸ்மிருதா தத்சஷணமேவ ஹந்தி ந:!!
ஸர்வாபதோ பக்தி விரும்ர மூர்த்தி பி:!!

## இச்சுலோகங்களின் கருத்து

01. எந்தத் தேவியானவள் உயிரினங்களிலெல்லாம் "விஷ்ணுமாயை" என்று கூறப்பட்டாளோ அத்தகைய பெருமை வாய்தவளான அவளுக்கு வணக்கம் ! அவளுக்கு வணக்கம் ! அவளுக்கு வணக்கம் வணக்கம்.!

02. எத்தேவியானவள் உயிர்களிடமெல்லாம் **சேதனை** (உயிர்ப்புச்சக்தி) யாக விளங்குகிறாளோ! அத்தேவிக்கு வணக்கம்! அவளுக்கு வணக்கம் ! அவளுக்கு வணக்கம் வணக்கம் !!

03. எத்தேவியானவள் எல்லாவுயிரினங்களிலும் **புத்தி** யாக விளங்கு கின்றாளோ அத்தேவிக்கு வணக்கம் ! அவளுக்கு வணக்கம் ! அவளுக்கே வணக்கம் வணக்கம் !!

04. எத்தேவியானவள் உயிர்களிடமெல்லாம் **நித்திரை** உருவில் விளங்குகின்றாளோ! அவளுக்கு வணக்கம் ! அவளுக்கு வணக்கம் ! அவளுக்கே வணக்கம் வணக்கம்!!.

05. எத்தேவியானவள் **பசி** எனும் உருவில் 6. **நிழல்** 7.**சக்தி** (வலு) 8. **ஆசை** - அவா 9. **பொறுமை** 10. **வேறுபாடு** (படைக்கப்பட்டவையாவும் ஒரே மாதிரியின்மையால்) 11. **வெட்கம்** 12. **சாந்தி** - அமைதி 13. **சிரத்தை**-முழு ஈடுபாடு 14.**காந்தி**-ஒளி 15. **லட்சுமி**கரம்-திரு 16.**செய்கை** 17. **நினைவாற்றல்** 18.**இரக்கம்** 19.**மகிழ்ச்சி** 20. **தாய்** 21. **பிரமை** - மாறாட்டம் ஆகிய உருவங்களில் விளங்குகிறாளோ அவளுக்கு வணக்கம். 22.எவள்-உள் பொருள்கள் எல்லாவற்றையும்உயிரினங்களையும்(இயக்கி) அடக்கி ஆளுகின்றாளோ, அத்தேவிக்கு வணக்கம் ! வணக்கம்! வணக்கம் !. 23.அறிவு உருவிலே எவள் உலகு முழுவதும் வியாபித்திருக்கின்றாளோ! அவளுக்கே வணக்கம்அவளுக்கு வணக்கம்அவளுக்கேவணக்கம் வணக்கம். 24.தாம்விரும்பியவற்றைப் பெற்றமையினால் மகிழ்ந்த தேவர்களினால் துதித்துப் போற்றப்படுகின்றவளும், தேவர் தலைவன் இந்திரனால் நாடோரும் சேவிக்கப்படுகின்றவளும், நன்மைகளுக்கு மூல காரணமானவளுமான ஈஸ்வரியே! ஆபத்துக்களையழித்துச் சுகங்களையும் நன்மைகளையும் அளிப்பாளாக. 25. எந்தத் தேவியானள் மதங் கொண்ட அசுரர்களினால் துன்புறுத்தப்பட்ட எங்களாலும் ஏனைய தேவர்களினாலும் பணிந்து போற்றி வணங்கப்படுகின்றாளோ, எவள் முழு மனதுடன் நினைத்ததும் அக்கணமே எங்கட்கு ஏற்படும் எல்லாவிதமான ஆபத்துக்களையும் நீக்கியருள் கின்றாளோ! (அத்தேவிக்கு வணக்கம் வணக்கம்)

## தனிப்பாடல் ~ .வணக்கம்

கமலராஜ ஸு பூஜ்யாயை வரதாயை நமோ நம :!
த்ரிகோணாசல வாஸிந்யை பத்ரகாள்யை நமோ நம:!!
(தாமரைகளை மலரச் செய்யும்) சூரிய பகவான் (காலைப் பொழுதில்) தன்கைகளான கதிர்களை ஆலயத்துள் பரப்பி வணங்கப்படுகின்றவளும் வரமீந்தருள் செய்கின்றவளும், ஆன பத்திரகாளியம்மையே ! வணக்கம், வணக்கம் திருகோணமலையில் அருளொளி பரப்பி வீற்றிருக்கும் பத்திரகாயளிம்மா ! போற்றி ! போற்றி !!

**சுபம்**

05. எத்தேவியானவள் **பசி** எனும் உருவில் 6. **நிழல்** 7.**சக்தி** (வலு) 8. **ஆசை** - அவா 9. **பொறுமை** 10. **வேறுபாடு** (படைக்கப்பட்டவையாவும் ஒரே மாதிரியின்மையால்) 11. **வெட்கம்** 12. **சாந்தி** - அமைதி 13. **சிரத்தை**-முழு ஈடுபாடு 14.**காந்தி**-ஒளி 15. **லட்சுமி**கரம்-திரு 16.**செய்கை** 17. **நினைவாற்றல்** 18.**இரக்கம்** 19.**மகிழ்ச்சி** 20. **தாய்** 21. **பிரமை** - மாறாட்டம் ஆகிய உருவங்களில் விளங்குகிறாளோ அவளுக்கு வணக்கம். 22.எவள்-உள் பொருள்கள் எல்லாவற்றையும்உயிரினங்களையும்(இயக்கி) அடக்கி ஆளுகின்றாளோ, அத்தேவிக்கு வணக்கம் ! வணக்கம்! வணக்கம் !. 23.அறிவு உருவிலே எவள் உலகு முழுவதும் வியாபித்திருக்கின்றாளோ! அவளுக்கே வணக்கம்அவளுக்கு வணக்கம்அவளுக்கேவணக்கம் வணக்கம். 24.தாம்விரும்பியவற்றைப் பெற்றமையினால் மகிழ்ந்த தேவர்களினால் துதித்துப் போற்றப்படுகின்றவளும், தேவர் தலைவன் இந்திரனால் நாடோறும் சேவிக்கப்படுகின்றவளும், நன்மைகளுக்கு மூல காரணமானவளுமான ஈஸ்வரியே! ஆபத்துக்களையழித்துச் சுகங்களையும் நன்மைகளையும் அளிப்பாளாக. 25. எந்தத் தேவியானள் மதங் கொண்ட அசுரர்களினால் துன்புறுத்தப்பட்ட எங்களாலும் ஏனைய தேவர்களினாலும் பணிந்து போற்றி வணங்கப்படுகின்றாளோ, எவள் முழு மனதுடன் நினைத்ததும் அக்கணமே எங்கட்கு ஏற்படும் எல்லாவிதமான ஆபத்துக்களையும் நீக்கியருள் கின்றாளோ! (அத்தேவிக்கு வணக்கம் வணக்கம்)

## தனிப்பாடல் ~ வணக்கம்

கமலராஜ ஸு பூஜ்யாயை வரதாயை நமோ நம :!
த்ரிகோணாசல வாஸிந்யை பத்ரகாள்யை நமோ நம:!!
(தாமரைகளை மலரச் செய்யும்) சூரிய பகவான் (காலைப் பொழுதில்) தன்கைகளான கதிர்களை ஆலயத்துள் பரப்பி வணங்கப்படுகின்றவளும் வரமீந்தருள் செய்கின்றவளும், ஆன பத்திரகாளியம்மையே ! வணக்கம், வணக்கம் திருகோணமலையில் அருளொளி பரப்பி வீற்றிருக்கும் பத்திரகாயளிம்மா ! போற்றி ! போற்றி !!

**சுபம்**

# கண்டறியாதன கண்டோம்

ஆனந்தம்.
**திருமதி. கந்தையா. இராசநாயகி**
முன்னாள் கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி ஆசிரியை.

ஈழத்தில் பாடல்பெற்ற திருத்தலங்களுள் திருக்கோணேஸ்வரமும் ஒன்று. ஞானக்குழந்தை ஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் தேவாரம் பாடப்பெற்ற திருக்கோணேஸ்வரப்பெருமான் மீது அருணகிரிநாதரும் திருப்புகழ் பாடிப்பரவசமடைந்தார்.

முழத்துக்கொரு இலிங்கம் இருக்கிறதடா என்று யோகர்சுவாமிகள் ஞானக்கண்ணால் நோக்கி திருவாய் மலர்ந்தருளிய திருக்கோணேஸ்வரம், திருக் கோணமலையிலுள்ள மலை உச்சியில், அமைந்துள்ளது.

இத் தெய்வத்திருத்தலத்தை நோக்கிய வண்ணம் ஆலடி விநாயகர்ஆலயமும், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும் அமைந்துள்ளன.

கிழக்கே கோணேஸ்வரப் பெருமானும்; பக்கத்தில் விநாயகப்பெருமானும் வீற்றிருக்க எழுந்தருளியுள்ள அன்னையே நமது பத்திரகாளி ஆச்சி.

எங்கள் அன்னை பத்திரகாளித்தாயின் வரலாறும் அற்புதலீலைகளும் அருள் சுரக்கும் காட்சிகளும் கண்டவர்களும் உளர்; அனுபவித்தவர்களும் உளர்; பத்திரிகைகள் நூல்கள் வாயிலாகப்படித்துப் பரவசமடைந்தவர்களும் உளர்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டமக்கள் காளிஆச்சியின் சிறுஆலயக்கட்டடத்தையே கண்டனர். நெக்கு நெக்குருகி எங்கள் காளி ஆச்சி! எங்கள் காளி ஆச்சி!! நம்மையெல்லாம காப்பாய் பொல்லா வினைகள் போக்குவாய் என்று பக்திப்பரவசத்துடன் உச்சிமேற்கை கூப்பிபோற்றித் துதித்து அவளருள்வேண்டினார்கள்.

பூத்தவளே! புவனம்பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவள்! என்று அன்று அபிராமிப்பட்டர் போற்றிய அபிராமி அன்னையே நமது காளித்தாய் என்று நாம் இன்று கண்டோம்.

கோணப்பொருப்பில் குடிகொண்ட பத்திரகாளியின் பாதச்சிலம்பொலி திருகோணமலை நகரில் ஒலித்துக்கொண்டேயுள்ளது; காண்கிறோம்; கேட்கிறோம்; அனுபவிக்கிறோம்.

ஆனால்கண்டறியாதன கண்டோம 5.2.2001. 6.2.2001. 7.2.2001. மூன்று தினங்களும் திருகோணமலை நகர் தெய்வத்திருநகராகவே கண்டோம்; வியந்தோம்; பூரிப்படைந்தோம்.

திருகோணமலை மக்கள் வீதிதோறும் ஆலயம் கண்டனர்.கோபுரத்தரிசனம்செய்தனர் ஓரளவுபரிமாணத்துடன் கூடிய கோபுரத்தையே கண்டனர் தம்பலகமம் ஆதிகோணநாயகர்ஆலயக்கோபுரமும் பக்தர்கள் கண்டனர்.வடக்கே யாழ்சென்றவர்கள், நல்லூர்க் கந்தன் ஆலயக்கோபுரத்தையும்மாவைக்கந்தன் ஆலயத்தையுங்கண்டனர்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தன் கலைகள் அத்தனையும் அருள்பாலித்து நின்ற அருங்காட்சி நாம் என்றுமே கண்டறியாத காட்சியாகும்.

காளி ஆச்சியின் ஆலயத்திற்கு 66அடிஇராஜகோபுரமும் 33அடி கற்பகிரக திரிதளவிமானமும் அமைக்கப்பட்டுள்ளன 5. 2. 2001, 6. 2. 2001. இருதினங்களும் வெய்யோனின் வெப்பம் பக்தர்களை வாட்டவில்லை. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பாரதத்திலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும்வந்து வரிசையாகநின்று, எண்ணெய்க்காப்பு சாத்தினார்களே. எங்குமே நாம் கண்டறியாத பக்தி ஊற்றாகக் கண்டோம் என்றார்கள்.

7. 2. 2001. இன்றும் திருகோணமலையின் தெய்வச்சிறப்பை பிரகாசிக்கச்செய்தது. பக்தர்கள் தம்மை மறந்து காளிஆச்சி1ஆயிரங்கண்தேவி1 என்றும், அரோகராவென்றும், போற்றித்துதித்த காட்சி கல்லையும் கரைய வைத்தது. இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தார் ஸ்ரீ பத்திரகாளித் தாயின் அடியார் கூட்டத்தைத் தாம் கண்டவாறு நைந்துருகி ஒலிபெருக்கினர். முன் பின் திரும்பாத வகை கையெடுத்து உச்சிமேல் உயர்த்தி வணங்க முடியாத பக்தர்கள் தெருக்களில் நின்ற காட்சியை தாம் எங்கும் கண்டதேயில்லை என்றனர்.

கண்டறியாதன கண்டோம் ஆம் 66 அடி உயரமான இராஜகோபுரத்திற்கும் கற்பகிரக திரிதள விமானத்துக்கும், பிரதம சிவாச்சாரியார்கள் வானிலே கொண்டு போய் இறக்கப்பட்டு, கும்பாபிஷேகம் செய்த

காட்சி தேவர்கள், காளி ஆச்சியின் கற்பகிரகத்திலும் கோபுரத்திலும் வந்திறங்கி ஆராதித்தது போன்று காட்சிதந்து மெய் சிலிர்க்கச் செய்தது.

பிரதம சிவாச்சாரியாரும்; ஏனைய சிவாச்சாரியார்களும் பிரதான கும்பத்தினையும், ஏனைய கும்பங்களையும் கொண்டு வீதிவலம் வந்த சமயம், பக்தர்கள் பத்திரகாளித் தாயின் பாதமலர்கள் தரிசித்த பேறு பெற்றவர்கள் போல் அரோகரா அரோகரா என்று போற்றித் துதித்தனர்.

"........காதன் மடப்பிடியோடும் களிறு
வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்."

என்று திருநாவுக்கரசர் திருக்கையிலைக் காட்சியைக் கண்டு ஆனந்தமடைந்தார். அருள் வெள்ளத்தில் மிதந்தார்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கும்பம் வீதிவலம் வருகையில் முன்னே களிறு வீதிவலம் வந்த காட்சி கண்டோம்; அவன் திருப்பாதம் கண்டறியாதன கண்டோம்.

என்று நம்மையறியாமலே வாய்விட்டுப் போற்றிப் பணியச் செய்தது கோபுரக் கலசத்தின் மேல் கதிரவன் கதிர் பட கலசத்தில் இருந்து எழும் பேரொளி திருக்கோணமலையின் எட்டுத் திசையிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

"யாதுமாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்."

என்ற பாரதியாரின் கூற்று நினைவு கூர்தற்குரியது. பிறர் பெற்ற அனுபவங்கள் கேட்டோம் அற்புதங்களைக் கண்டோம் , காளி ஆச்சியின் அறக்கருணையும் மறக்கருணையும் அங்கிங்கெனாதபடி நிலைபெற்றுள்ளது.

"கும்பாபிஷேகப் பெருமாட்டி தென்கைலைக் கோணமலைஅம்பாள் திருமேனிக்கெண்ணைக் காப்பிட்ட அன்புடையார் தம்பாதந் தொட்டுத் தொழுதாலும் போதுமே தாழ்வினைகள்.நம்பாலணுகா வகைசெய்யும் காளி நயனங்களே"

கடந்த கும்பாபிஷேக மலருக்கு கழகப் புலவர் பெ. பொ . சிவசேகரனார் பாடியளித்த காளி கவிமாலையின் 100 பாக்கங்களில் ஒன்று இன்று நடந்த கும்பாபிஷேக விழாவில் பக்தர்கள் மனதுக்கு இனியதாகின்றது.

காளித்தாயின் வரலாறும் அற்புதங்களும் நிறைந்திருக்கின்ற இக் கும்பாபிஷேக மலரில் கண்டறியாதன கண்டறிந்த விடயம் ஒன்று கூற அம்பாளின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

1954ம் ஆண்டு ஒருதினம் ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய வெளிவீதியில் ஆதிமூலச் சுவரின் தலையை முட்டவைத்துக் கட்டிப்பிடித்துகாளித் தாயே! உன்னையே நம்பி உன் அடியானாக தொண்டு புரியும் எமக்கருள்வாய் காளியாச்சி, என் தங்கையின் வேதனையைக் கண்டுகொண்டிருக்கும் ஆச்சி ! உன் கரத்தால் அவளைத் தாங்கி அருள் புரிவாய் தாயே! என்று கண்ணீர் சொரிந்து நின்றார். மதியம் கல்லூரி முடிந்து வீடு வந்த அடியேன் நமது தாயாரிடம் வந்து கூறினேன். தாயார் அவ்விடம் சென்றார், ஐயாவிடம் சொன்னார், அவரையணுகி விடயமறிய முனைந்தார்; ஐயா என்றார் தாயார், ஏதோ வேதனை உலகிலிருந்து விழித்தது போல் கண்ணீர் பெருக நினைவுக்கு வந்தார். கவலைப்படவேண்டாம் காளியாச்சி கைவிட மாட்டார் தாய் அருள் புரிவார் வேதனை தீர்ப்பார் என்று கூறித் தேற்றவும் ஐயாவின் சகோதரி சுகமாக ஆண்மகவை ஈன்றெடுத்தார் என்ற நற்செய்தியும் கிடைத்தது ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பிரதம குருவாகவிருந்து அம்பாளை அர்ச்சித்து அடியார்களைப் பக்தியிலாழ்த்திய பிரம்ம ஸ்ரீ சு.கு.சோமாஸ்கந்த குருக்கள் ஐயாவின் சம்பவம் நாம் கண்டறியாத அம்பாளின் அறக்கருணையை கண்டறியச் செய்த பேரின்ப விளைவாகும்.

தமது மகன் சோ.இரவிச்சந்திரன் ஐயாவையும் மருமகன் இராஜ இராஜேஸ்வரனையும்அம்பாள் ஆலயத்தின் அருகில் அமைந்த இராமகிருஷ்ணசங்க கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கல்வி கற்க அனுப்பி வைத்தார். அடியாளுக்கும் அவர்களைக் கற்பிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அம்பாளின் சித்தம் இதுதான் என்றறியாத என் மனம், அவர்களைக் கல்வியில் தேர்ச்சியடையவைத்து அரசினர் ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று ஆசைப் பட்டது. ஆனால் கல்விப்பருவம் உலகில் உழைப்பு வேண்டுவதாய் உள்ளது.இராமகிருஷ்ண பரமஹம்ஷர் காளி தேவியின் கடாட்சம் நாடி நின்றதுபோல் காளிஆச்சியின் பணியை நாடிநின்றது. பாடசாலைப்பாடங்களில் நாட்டம் அவர்களுக்கிருக்கவில்லை. அவர்களை உலகியற் கல்வியைப் போதிப்பதற்கு நாம் எடுத்த முயற்சி தவறானது என்பதை இன்று நாம் உணரக்கூடியதாயுள்ளது.

அரசசேவை நின்பணியல்ல. அம்பாள் பணி நின்னுடையது. என்று அம்பாள் அவர்களை அணைத்ததும் தந்தையும் தன் தனயன் அம்பாள் பணிக்கே உரியவர் என்று உறுதிபூண்டதும். நாம் கண்டறியாதன கண்ட பேருண்மை.

தந்தைக்குரிய தனயனாக சிறுவயதிலேயே அம்பாள் பணிபுரிந்த நமது ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ.சோ. இரவிச்சந்திரக்குருக்கள் ஐயாவின் ஆளுமைத்திறன் நாம் கண்டறியாத மாபெரும் கோபுரத்துடன் அமைந்த காளிஆச்சியின் கும்பாபிஷேக நிகழ்ச்சியாகும். உலகம் யாவும் காளியாகக் கண்ட ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சரின் பிரதம சீடனாகிய சுவாமி விவேகானந்தர் அவர்களால் அமைக்கப்பட்ட இராமகிருஷ்ண சங்கம், உலகின் பல பாகங்களிலும் பணிபுரிந்து வருகின்றது. நமது இலங்கையிலும் அப்பணி பெரும் தொண்டாற்றிக் கொண்டேயுள்ளது. இலங்கைக் கிளையின் தலைவர் சுவாமி ஆத்மகானந்தாஜி 66 அடிஇராஜ கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டிய வைபவம் கண்டறியாதன கண்ட காட்சியெனக் கூறி அம்பாளின் அடிபணிவோமாக.

இலங்கையில் எங்குமே காணமுடியாத அருள் காட்சியைக் கண்டோர், "கண்டறியாதன கண்டோம்" என்றனர். இளைஞன் வயதில்; ஆனால் தந்தையின் மேற்பார்வையில் தன்னை ஆளாக்கிய ஸ்ரீ பத்திரகாளி ஆச்சியின் பிரதம குருவும், ஆதீனகர்த்தாவுமாகிய பிரம்மஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக்குருக்கள்இப்பெருங்காரியத்தை திட்டமிட்டு ஆக்கி அமைத்து அமைதியும் ஆனந்தமுமாக நிறைவேற்றிய ஆளுமைத்திறன் நம் கண்டறியாத கருணையே என்று கண்டறிந்தோம் விண்ணுலகில் நின்று தன் கனவை நினைவாக நிறைவேற்றிய அம்பாளின் திருப்பதத்தை வணங்குவதுடன் தன் தனையன் செயற்கரிய செயலைச் செய்து சான்றோனாக காட்சி அளிக்கும் நிலையை எண்ணி ஆனந்தமடைவார். அவர் ஆத்மகாளி ஆட்சியின் அருளாட்சியில் ஆனந்த மடைந்திருக்கும். எனினும் தன் சகோதரியின் மகன்-தன் மருமகன் காளிஆச்சியின் மணலில் புரண்டு விளையாடி அம்பாளின் பணியிலும் ஈடுபட்டு இருந்தும் இப் பேரானந்தக்காட்சியைக் கண்டு களிக்கும் பாக்கியம் கிடைக்கவில்லையே யென்று வேதனையுற்றாரோ என்னவோ யாம் அறியோம். வேதாகம மாமணி இரவிச்சந்திரக்குருக்கள் ஐயாவிற்கும் தன் மைத்துனன் இவ் வைபவத்திற்கு இல்லையென்ற வேதனையும் இருக்கத்தான் செய்யும். எல்லாம் அம்பாள் செயல். அவள் திருவுளம் இதுவே!

தன் பணியைச் சிரமேற்கொண்ட தன் குழந்தை இரவிச்சந்திரக்குருக்கள், ஐயாவை இப்பணியுடன் நிறுத்திவிட அம்பாள் விரும்பமாட்டாள். திருக்கோணமலை வட்டாரத்தில் ஆதரவற்ற குழந்தைகள் உணவு, உடை, கல்வியில்லாது கஷ்டப்படுவதை அறிந்து ஆதரவளிக்கும் பணியையும் மேற்கொள்ளும் நிர்வாகத்திறனையும் ஈந்து அருள் புரிவாள் நமது காளி ஆச்சி.

"இன்ன றுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண் சுனைகள்
இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்.

சுப்பிரமணியபாரதியார்

இன்னும் மீண்டும் மீண்டும் கண்டறியாதன காண்போம். காளிஆச்சி அருள் புரிவாள்.

## ஸ்ரீதேவியும் மூதேவியும்

ஒரு முறை சீதேவியும் மூதேவியும் திருமாலிடம் சென்றனர். எங்கள் இருவரில் யார் அழகு? எனக் கேட்டனர் . மாயவன் இருவரையும் நடந்து போகச் சொன்னார். இருவரும் சிறிது தூரம் சென்றதும், திரும்பி வரச் சொன்னார். அவர் சீதேவியைப் பார்த்து நீ வரும் போது அழகாய் இருக்கின்றாய் என்றார். பிறகு மூதேவியிடம் நீ போகும் போது அழகாக இருக்கின்றாய் என்றார்.

******

## பாவங்களும் ரோகங்களும்

விலக்கப்பட்டப் பாவங்களைச் செய்தால் நரகத்தில் துன்பங்கள் அனுபவிக்க வேண்டும்; சில பாவங்களுக்கு பிறவி எடுத்து அனுபவிக்கவும் வேண்டும். நோய்கள் வந்து தீர்க்கப்படமுடியாவிட்டால் அவற்றைக் கர்மநோய்கள் என்று உலகத்தார் கூறுவர். சிலவற்றை இதன் கீழ்க்காண்க.

சிவபெருமானை நிந்தித்தல், குருவை நிந்தித்தல், குருபத்தினியை நிந்தித்தல், முதலியன செய்தால் முயலகன் நோயால் வருந்துவர்.

குருவை, அந்தணரை கோபித்தால் மண்டை நோயும்; குருவை மனிதராய்ப் பாவித்தால் யோனி நோயும், பிரமக்கொலை செய்தால் க்ஷயரோகமும்; குருதார கமனம், ஏரி, குளங்களை வெட்டினால் குட்டமும்; மெய்யடியார்களை நிந்தித்தாலும் குட்டமும்; அதிதிகளுக்கு அன்னங்கொடா விட்டால் கர்ணரோகமும்; தபோதனருடைய அன்னத்தைத் திருடினோர், பொய்ச்சாட்சி சொன்னோர்க்கு வாய்ப்புண் நோயும்; பிறர்பொருளைக் கவர்ந்தவர், அதற்குத் துணை செய்தவர், உபாயங்கள் சொன்னவர், நேத்திர ரோகமும்; காலில் வியாதியும், புடவை திருடினோர் வெண்குட்டமும்; பசுவதை பிறவிக்குருடர்; அன்ன சத்திரம், தண்ணீர்ப்பந்தல் அழித்தோர் நீர்த்தோஷமும், உதரநோயும்; வேதாகமம், பெரியோர்கள், நிந்தனை செய்தோர்க்குப் பைத்தியமும் உண்டாகும். வேறு பாவங்களுக்கு சிவதருமமோத்திரம் முதலிய நூல்களைப் பார்க்க.

◆◆◆◆
◆




# கோபுரமும் அதன் உட் பொருள் விளக்கமும்

"சிற்ப கலா பானு," "கலாலய வித்தகமணி"
**ஸ்தபதி கந்ததாஸ் இரவீந்திரராஜா**

இறையின்பத்தை பெற்று மேலான சுக வாழ்க்கையை அனுபவித்து எல்லா நன்மைகளையும் அடைய மனிதப் பிறவியே மேன்மையாகின்றது. "கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்.'' கோயிலுக்கு வரமுடியாதவர்களின் ஆன்மாவும் பரிசுத்தமடைந்து இறைவனைச் சேர வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கில் தான் ஆலயங்களில் உயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன. ஆலயங்களோ, கோபுரங்களோ மனதில் நினைத்தபடி அமைப்பதில்லை. ஒவ்வொரு இயக்கமும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகின்றது. விதி முறையாக ஆலய வழிபாடு அமைய நம் முன்னோர்கள் இறைவனால் உண்டாகிய சிற்ப, ஆகமங்களையும் கையாண்டு வந்தார்கள். இவை ஆலய நிர்மாணத்திலிருந்து குடமுழுக்கு வரையிலும் நித்திய, நைமித்திய பூஜைகள், உற்சவங்கள் எல்லாவற்றையும் வழிப்படுத்திக் காட்டுகின்றன.

உடம்பினை இருப்பிடமாகக் கொண்டு உயிர் விளங்குவது போன்று ஆலயத்தை இருப்பிடமாக வைத்து ஆண்டவன் விளங்குகிறார். தோல், குருதி, இறைச்சி, எலும்பு, மஜ்ஜை, மேதஸ், சுக்கிலம் எனப்படும் ஏழுவகை தாதுக்களால் உடல் அமைந்திருக்கின்றது. அது போல் செங்கல், வெண்கல், கருங்கல், நீறு, மணல், நீர், காரம் எனப்படும் ஏழு வகைப் பொருள்களாலும் கோயில் கட்டப்பட்டிருக்கின்றது.

சிற்ப ஆகம நூல்களை ஆழ்ந்து நோக்கும் போது கோபுரம் என்பது ஒளி வடிவான ஈசனின் தோற்றத்தை உணர்த்தும் ஓர் உருவக அமைப்பு என்பது நன்கு விளங்கும். திருக்கோயில்களில் நடைபெறும் கிரியைகளின் போது, மற்றும் மங்கள நிகழ்வுகளின் போதும் ஹோம குண்டத்தில் தீ மூட்டி அவி சொரிந்து வேள்விகள் நிகழ்த்துதல் ஆகம மரபாகும். தீ மூட்டும் முன்பு ஆவாகித்து, பீடத்தில் எட்டுத்திசை பாலகர்களையும் நிறுத்தி, குண்டத்தில் புனித மரங்களின் சமித்துக்களை பரப்பி, அதன் மேல் தர்ப்பைப் புல்லால் தளிர்படுக்கை செய்து, பின் நெய் சொரிந்து தீ ஒளிமயமான ஈசனின் வடிவாக கருதப்பெற்று அத்தீப்பிழம்பிற்கு அவிசு நல்குவது மரபாகும்.

ஹோம குண்டமும், அதிலிருந்து எழும் தீப்பிழம்பும் இணைந்த வடிவே நமது கோபுர வடிவமாகும். பீடத்திலிருந்து பிரஸ்தளம் வரையுள்ள கோபுர அங்கமே ஹோம குண்டமான வேதிகையாகும். எனவே நான் பிரஸ்தளத்திற்கு கீழ் உள்ள தாமரை இதழ்போன்ற கோபுர அங்கத்திற்கு வேதிகை எனப் பெயரிட்டனர்.

ஹோம குண்டமான வேதிகையின் அங்கங் களுக்கு என்ன பெயரோ அதே பெயர்கள்தான் கோபுர அங்கங்களுக்கும் உரியதாயிற்று. அடுத்து பிரஸ்தளம் என்பது ஹோம குண்டத்தின் மேல் பரப்பப் பெறும் தளிர்படுக்கையான தர்பையாகும். அதே பெயரோடுதான் கோபுரத்தின் முதல் தளம் திகழ்கின்றது. வேதிகையான குண்டத்தில் எவ்வாறு அட்டதிக்கு பாலகர்களுக்கு இடமளிக்கப்படுகின்றதோ அதே அமைப்பில் கோபுரத்திலும் அட்டதிக்கு பாலகர்களுக்கு இடமுண்டு. ஹோம குண்டத்தில் பிரஸ்தளத்திலிருந்து தீப்பிழம்பு எவ்வாறு வெளி வருகின்றதோ அதே போன்று கோபுரத்தின் பிரஸ்தளத்திற்கு மேலுள்ள பல தளங்களும் சிகரமும், கலசமும் சிகரமகா நாசிகளின் கூர்முனைகளும் தீ நாக்குகளின் வடிவிலே அமைக்கப் பெறுகின்றது.

எனவே கோபுரமாக திகழும் கட்டுமான அமைப்பு ஓம குண்டத்திலிருந்து எழும்சோதி வடிவான ஈசனின் உருவகமே. ஒரு திருக்கோயிலில் ஈசனின் திருமேனிக்கு எவ்வாறு பூஜைகள் உண்டோ அதே போன்று கோபுரத்திற்கும் பூஜை முறைகள் உண்டு. இது சிருஷ்டி, சம்ஹாரம் என்ற இருவகைகளில் அந்த அந்தக் கோயிலுக்குரிய ஆகமத்திற்கேற்ப நடைபெறும் கோபுரத்தின் ஒவ்வொரு அங்கமும் மந்திர சாஸ்திரத்தின் அக்ஷரங்களின் வடிவேயாகும்.

எல்லை யிலாப் பெருவெளியான பிரபஞ்சமே ஈசன், அதுவே ஆனந்தம். அதுவே பரமானந்தம், அனைத்தையும் இயக்கும் ஒரு மகாசக்தி, அந்த சக்தியின் வெளிப்பாடு நெருப்பு. அதுவே இயக்கம் என்ற உன்னத தத்துவத்தை உணர்த்தும் ஒளிமயமான ஈசனை நமக்குக் காட்டுவதே கோபுரதத்துவம் எனவே கோபுரம் என்பது உன்னத தத்துவம் உரைக்கும் ஒரு சிற்ப வெளிப்பாடு.

ராஜகோபுரத்தில் கணக்கற்ற வடிவங்கள் அமைக்கப்படுகின்றன. அவைகளுள் மானிட வடிவங்கள் கலாச்சார பண்பாடுகளைக் காட்டுகின்ற வகையிலும், தேவர்கள், முனிவர்கள், பூதகணங்கள் பல அவதார தெய்வ வடிவங்கள், விலங்குகள், பட்சிகள், போன்ற சிற்றுயிர்களும் ஒவ்வொரு தளவாயிற் காவலர்களாக துவார பாலகர்கள் என்பன அமைக்கப்படுகின்றன. இவை பிரபஞ்சத்திலுள்ள அனைத்து சீவராசிகளையும் உள்ளடக்கிய கோட்பாட்டை ராஜகோபுரம் உருவகப்படுத்தி விளக்குகின்றது.

கோபுரங்களில் அடுக்கடுக்கான வாயில்கள் இருந்தாலும் கோயிலின் உள்ளே செல்வதற்கு தரை மட்டத்திலுள்ள ஒரு வாயில்தான் உதவுகிறது.

ஏனையவை பயன்படுத்துவதில்லை. இதன் பொருளாவது புறக்கரணங்களும் அகக்கரணங்களும் பல நம்மிடத்து இருக்கின்றவெனிலும் இறை நாட்டம் கொள்ளும்போது மனது என்றும் ஒரு கரணம்தான். நமக்குபெரிதும் பயன்படுகின்றது. ஏனைய கரணங்களை எல்லாம் இருக்கின்றபடி வைத்துவிட்டு மனது இறைவனை நாடி உள்முகமாக போகவேண்டும் என்பது கோட்பாடு. மனதைத் துணையாகக் கொண்டு பரம் பொருளிடத்து உள் முகமாக பயணம் போக வேண்டும் என்னும் கோட்பாட்டை ராஜகோபுர வாயில் பிரவேசம் எடுத்துக் காட்டுகின்றது.

கோபுரங்கள் அடிப்பாகம் அகன்று மேல் நோக்கி செல்லச் செல்ல கலசத்தில் கூர்முனையாக ஒடுங்கு கின்றது. நமது மனமானது பிரபஞ்ச வாழ்க்கையிலிருந்து படிப்படியாக இறைவனை நாடி ஒரு நிலைப் படுத்தலைக் குறிக்கின்றது.

கோபுரங்களின் தளங்களின் எண்ணிக்கையானது முறையே மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, ஆக பல எண்ணிக்கையுடன் அமைகின்றது. இவற்றின் உச்சியிலே மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, கலசங்கள் நிறுவப்படுகின்றன. கோபுரங்களின் அமைப்புகள், உயரங்கள் மூல கருவறையின் அளவுக்கேற்பவும் நிர்மாணப்பணிக்கு பொருள் செலவிடும் கொடை வள்ளல்களின் சக்திக்கேற்பவும் மாறுபடும். கருவறையின் விமானத்தில் காணப்படும் பலவேறு வேலை மானங்கள் இங்கும் இடம்பெறும். கருவறை விமானத்தைக் காட்டிலும் கோபுரம் உயர்ந்து விளங்குவதே மரபாகும்.

சிற்ப சாஸ்திர முறைப்படி ஆலயங்களை அமைத்து மூர்த்திகளை மூர்த்தி பதவிஞ்யாசப்படி ஸ்தாபனம் செய்து சிலா விக்கிரகமாக இருந்தால் அஸ்டபந்தனமும், தாமர விக்கிரகமாக இருந்தால் திரிபந்தனமும். செய்தல் வேண்டும். இது முக்கியமாக அம்மூர்த்திகளுக்குரிய இயந்திரங்களை செப்பு, வெள்ளி, பொன், தகடுகளில் வரைந்தும் ஒரு பட்சம் (ஒரு பட்சம் 15 நாட்கள்) இரண்டு பட்சம், ஒரு மண்டலம் (3 பட்சம்) யந்திர பூஜை செய்து மூர்த்திகளின் யந்திர ஸ்தபானம் செய்தல் வேண்டும். இவ் இயந்திரங்கள்தான் அருட் செறிவைத் நோக்கிச் செறிய வைக்கும் சக்தியுடையது. ஆலயத்தில் நடைபெறும் அபிஷேகங்கள், மந்திரங்கள், முத்திரைகள் என்பன இவற்றிக்கு மேலும் சக்தியுடைய தாகின்றது. இங்ஙனம் ஆக்கப்படும் அருளானது ஆலயத்தைச் சுற்றி நாற்புறமும் பரவி நாட்டிற்கு பல நன்மைகளைப் பயக்கும். இந்த அறிவும், அன்பும் கலந்த உண்மையான பக்தியுடன் ஆலய தரிசனம் செய்வோர் அங்குள்ள அருள் நெறியினால் அடையும் பலன் அனுபவம் எனப்படும்.

# அம்பிகையின் திருப்பணி

அன்னை பத்திரகாளி அம்பாளிற்கு இரட்டைப் பஞ்சாங்க முகபத்திர வேலை மானங்களுடன் சப்ததள இராஜகோபுரமும், கற்பக்கிரகம் அர்த்த மண்டபமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அலங்கார சிற்ப வர்ண அமைப்புகளுடன் கம்பீரமாக காட்சி தருகின்றன. இப்பணிகளுக்கு மிகக் குறுகிய கால இடைவெளியில் சிறப்பாக நிறைவுற அம்பிகையின் அருளாட்சியும், ஆலய ஆதின கர்த்தா பிரதமகுரு, வேதாகமமாமணி சோமஸ் கந்த இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களும் விடாமுயற்சியும் தீர்க்கதரிசனமான சிந்தனையும், அம்பிகையின் மேல் கொண்ட அளப்பரிய பக்தியும், பெரும் திருப்பணிகள் கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், மண்டல பூர்த்தி, கும்பாபிஷேக மலரென மலர்கின்றன. இலங்கை திரு நாட்டின் சிறப்புமிகு ஆலயமாக திகழும் வகையில் ஆதின கர்த்தாவின் பணிகள் மேலோங்கி நிற்கின்றன. அம்பிகையின் திருவுளபடி இப்பணிகள் கலந்து கொள்கின்ற வாய்ப்பு கிடைத்ததே கிடைத்ததற்கரிய போறாக எண்ணி மக்கள் அனைவரும் சகல சௌபாக்கியமும் பெற்று மங்களமாய் வாழ ஸ்ரீ சக்ர நாயகியின் பாதக் கமலங்களைப் பணிந்து பிராத்திக்கின்றேன்.

## பஞ்சோபசாரம் – ஐந்து வகை

**பார்த்தியோபசாரம்:** பிருதுவியாகிய மண் சம்பந்த மானது . நைவேத்தியத்திற்குரிய பொருட்கள்.

**ஜலியோபசாரம்:** ஆப்பியோபசாரம் எனவும் கூறுவர். சல – நீர் சம்பந்தமான பால், தயிர், தேன், திருமஞ் சனம், சக்கரை, நீர், பாணியம் ஆதியன

**தைசசோபசாரம்:** நெருப்புச் சம்பந்தமான தீபங்கள், ஆபரணங்கள், கண்ணாடி ஆதியன.

**வாய்வியோபசாரம்:** காற்றுச் சம்பந்தமான தூபம், சாமரம், விசிறி ஆதியன .

**வைகாய சோபசாரம்:** ஆகாயம் சம்பந்தமான மணி யோசை, வாத்தியங்கள், தோத் திரங்களாதியன,

– கந்ததாஸ் இரவீந்திரராஜா –




# கும்பகோணம் , வலங்கைமான் ஸ்தபதி திரு. மாரிமுத்து- இராஜேந்திரனுடன் செவ்வி.

**செவ்வி கண்டவர்.** ஞானசிரோன்மணி-பண்டிதர்
**இ. வடிவேல் அவர்கள்**

**1.சிற்பக் கலைச் சேவைக்காக இதற்குமுன் இலங்கைக்கு வந்திருக்கிறீர்களா?**

ஸ்ரீலங்காவுக்கு இதுதான் முதல் தடவையாக வந்திருக்கிறேன் மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குப் போய் சிற்பக்கலைச் சேவை செய்திருக்கிறேன். மேல்நாட்டில் அமெரிக்காவில் இருந்து அழைப்புகள் வக்திருக்கின்றது.

**2. இலங்கையில் திருக்கோணமலைக்கு வருவதற்கு உங்களை அழைத்தவர் யார்?**

திருக்கோணமலையில் பிரசித்தி பெற்ற சக்தி பீடங்ஙளில் ஒன்றான ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானப் பிரதம குருவும், ஆதீன கர்த்தாவுமாகிய வேதாகமமாமணி சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் இந்தியாவுக்கு வந்து எங்களோடு பேசி அழைத்தார். பேச்சுவார்த்தை சுமுகமாக இருந்ததால் ஒப்புக்கொண்டோம் வந்தோம்.

**3. பிரம்மசிறி சோ.ரவிச்சந்திரக் குருக்கள் ஐயா உங்களை எவ்வாறு கண்டறிந்தார்? தேர்ந்தெடுத்தார்?**

பாரத நாட்டில் பல இடங்களிலும் பற்பல சிற்பக் கலைஞர்கள் இருக்கிறார்கள். ஐயா அவர்கள் இந்தியாவுக்கு வந்தபொழுது பலரோடும் ஆலோசித்திருப்பார்கள். பல கலைஞர்களின் பட்டியலும் அவருக்குக் கிடைத்திருக்கும். அவர்களின் கலைத்திறமைகளை, கடமை, கண்ணியம் கட்டுப்பாடோடு, கலைச்சேவை செய்பவர்களைச் சீர்தூக்கிப்.பார்த்திருப்பார். அவருடைய மனதுக்குத் திருப்தியாக எங்களைக் கணித்து எங்களிடம் வந்தார்; விஷயங்களை விபரமாகக் கூறினார். எங்களுக்கும் பிடித்துக் கொண்டது. வந்தோம்; கண்டோம். கலைச்சேவையை நிறைவேற்றினோம். எல்லாம் ஸ்ரீ பத்திரகாளித் தாயாரின் கருணைதான்.

**4. உங்களுக்கு இந்த ஊர் பிடித்துக்கொண்டதா?**

பிடிப்பு என்னையா பிடிப்பு? சகல வசதிகளையும் குருக்கள் ஐயா ஏற்படுத்தித் தந்தார்; ஒரு குறைச்சலும் இல்லை; கலைஞர்களுக்குத் தேவையானது அதுதான்.நிம்மதியாக வேலை செய்தோம்.

**5. உங்களோடு செவ்வி காணும் போது நீங்கள் அமைத்த கலைவடிவங்களின் விபரங்களைத் தருவீர்களா? என்று கேட்டேன், அப்போது "எல்லாம் உள்ளே இருப்பவளுக்குத் தெரியும்" என்றீர்கள் ஏன் அப்படிக் கூறினீர்கள்?**

சிற்பக் கலை தெய்வீகக் கலை. எந்த ஊரில் எந்த கோவிலில் சிற்ப வேலை செய்யச் செல்கிறோமோ அந்தக் கோவிலின் மூலஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு இருக்கும் மூலமூர்த்தியிடம் எம்மை ஒப்புக் கொடுத்து சரணமடைந்து, வேண்டிக்கொண்டு அதன் பின்புதான், எஜமானனுடைய விருப்பங்களை அறிந்து, அவர்விரும்புகிறபடி சிற்பக் கலாசாஸ்திரத்தில் உள்ளபடி சிற்ப வேலைகளைச் செய்வோம். அதனால் தான் அப்படிக் கூறினேன். இது எனது தந்தையாரிடம் கற்றுக்கொண்டது.

**6. உங்கள் தந்தையார் பற்றிக் கூறுகிறீர்களா?**

எனது தந்தையார் பெயர் மாரிமுத்து ஸ்தபதி, கும்பகோணம் வலங்கைமான் என்ற இடத்தில் வாழ்கிறார். வயது 93, தமிழ் நாட்டில் முதல்தரமான கலைஞர். 93 வயதிலும் கலைச் சேவை செய்துகொண்டிருக்கிறார். கும்பகோணம் வலங்கைமான் என்னும் இடத்தில் பாடைகட்டி மாரியம்மன் கோவில் பிரகாரத்தில் குடியிருக்கிறார். அங்குதான் நானும் வாழ்கிறேன். தந்தையாருடைய பழக்கவழக்கங்களும், பண்பாடும், தெய்வ பக்தியும் நம்பிக்கையான கலைச் சேவையும் அவரைத் 93 வயதிலும் சுகபலத்தோடு வாழவைத்துள்ளது. நான் தந்தையாருக்கு ஒரே ஒரு வாரிசு.

**7. உங்களைப்பற்றிக் கூற முடியுமா?**

முடியும் நான் தந்தையாருக்கு ஒரேயொரு பையன் எனக்கும் ஒரேயொரு மகன் வாரிசு.தந்தையாரோடுதான் வாழ்கிறோம்; தந்தையார்தான் எனது குரு. பரம்பரைத் தொழிலாக இதைச் செய்து வருகிறேன். சிற்பக் கல்வியைக் கற்பிக்கும் கல்லூரிகள் பல பாரத நாட்டில் இருக்கினறன. அங்கு படித்துப் பட்டம் பெற்று பத்திரம் வாங்கியவர்களும் கலைச் சேவை செய்கிறார்கள். நான் எனது தந்தையாரைப் பின்பற்றி கலைச் சேவை செய்கிறேன். கலைத் துறையில் போட்டி போட்டு உயிரோட்டமான திறமையைக் காட்ட வேண்டும். எனும் நோக்கத்துடன் தொழில் செய்கிறேன்.

தொழிலில் பொறாமை இல்லை; ஆடம்பரமற்ற எளிமையான பண்போடு தொழில் செய்கிறேன் இவையெல்லாம் தந்தையார் கற்றுக்கொடுத்த பாடம்.

**8. சுதைச் சிற்ப வேலை பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

சிற்பம், ஓவியம், வர்ணம் தீட்டுதல் முதலிய கலைகள் உணர்ச்சிபூர்வமானவை. ரசபாவனையை வெளிப்படுத்திக் காட்டுவது. பரம்பரையாகச் சிற்ப வேலை செய்து வந்த எனது தந்தையார் சிற்பகலா சாஸ்திர நூல்களும், ஆகம நூல்களும் கூறும் சாஸ்திர உண்மைகளையும் அறிந்தவர். தனது அநுபவங்களைத் திரட்டி சிற்பத்தொழில் செய்தவர். அவரைப் பின்பற்றியே நாஙகளும் செய்கிறோம்.

கட்டுமான வேலை, சுதைச்சிற்ப வேலை, வர்ண வேலை என்பவற்றில் ஒரு சிற்பி அனுபவம் பெற்றிருப்பார், அப்படியானவர்களைத்தான் ஸ்தபதி என்பார்கள். சிற்ப வடிவங்களை அமைப்பதற்கு சிமேந்தும் மெல்லிய மணலும் பிரமாணப்படி சேர்த்து சுதையைத் தயாரிப்போம். சுண்ணாம்பு சேர்ப்பதில்லை, சுதையை எங்கள் வேலைக்கு ஏற்றாற்போல் தயாரித்துக் கொண்டபின் தெய்வ நம்பிக்கையையும், எங்கள் கற்பனையையும், அமைக்கப்போகும் தெய்வ வடிவத்தையும் மனதில் வைத்துக் கொண்டு, சிற்பங்களை அமைக்கின்றோம், வர்ணங்களைத் தீட்டுகின்றோம்.

**9. ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டும் சிற்ப வேலைகள் எவை?**

இராஜகோபுரத்திலுள்ள எல்லாச் சிற்பங்களும், அம்பாளின் கற்பக்கிரகத் தூபியிலுள்ள எல்லாச் சிற்பவடிவங்களும், இராஜகோபுரத்திலுள்ள மகா நாசியிலும் இராஜகோபுர நுழைவாசல் மண்டபத்திலுள்ள எல்லா சிற்ப வடிவங்களும் நுழைவாயில் அலங்காரங்களும் மேற்தளத்திலுள்ள சிற்ப வடிவங்களும் துர்க்காம்பாள், சன்னிதியில் அமைக்கப்பட்டுள்ள வனதுர்க்கை துவார சக்திகள் என்பனவெல்லாம் எங்களால் வடிவமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டவை; பஞ்சவர்ணக் கலரில் வர்ண வேலையைச் செய்திருக்கிறோம்.

**10. சிற்பக் கலையைப் பயில விரும்புபவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறீர்களா.?**

எங்கள் தந்தையார் ஒரே நேரத்தில் குறைந்தபட்சம் 100 பேர்களை வைத்துக் கொண்டு சிற்ப வேலை செய்விப்பார். திருகோணமலைப் பத்திரகாளி கோவிலில் சிற்ப வேலை செய்வதற்காக நானும் சில சிற்பிகளை அழைத்துக்கொண்டு வந்துதான் இங்கு வேலை செய்தேன். எங்கள் வேலையின் நுட்பங்களை அவர்களும் அவதானித்து வேலை செய்வதால் பயிற்சி பெறுகிறார்கள். புதியவர்களுக்கு எங்கள் ஊரில் பயிற்சி கொடுக்கிறோம் அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிட வசதி கொடுத்து எங்களுடன் வைத்து பயிற்சி கொடுக்கிறோம். அவர்களிடம் இருந்து ஊதியம் பெறுவதில்லை. ஆகம சாஸ்திரங்களுக்கு அமைவாகப் பயிற்சி பெற்றவர்களுக்குள் போட்டி உணர்வை உண்டாக்கி வேலைத் திறனை அவதானிப்போம். எங்களுக்குத் திருப்தி ஏற்பட்ட பின்னர்தான் சிறந்த பயிற்சியாளர்களைத் தனியாக, சுதந்திரமாக சிற்ப வேலை செய்ய அனுமதிப்போம்.இப்படிப் பயிற்சி பெற்ற கலைஞர்கள் தமிழ்நாட்டில் பல இடங்களிலும், மலேஷியா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும் கலைச் சேவை செய்து வருகிறார்கள்.

**11. ஸ்தபதி என்ற கௌரவ பட்டமுடையவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.**

ஆசார சீலராக வாழ்ந்து, ஆகமசாஸ்திரப் பிரமாணம் தெரிந்தவராயிருந்து, குருபக்தியுள்ளவராய், உயிரோட்டமான சிற்ப வடிவங்களை வடிவமைக்கக்கூடிய ஆற்றல் இயல்பாக அமைந்துள்ள வர்களை ஸ்தபதி என்று அழைப்பார்கள்.

திரு. மாரிமுத்து இராஜேந்திரன் அவர்களே, நீங்கள் பொறுமையோடு செவ்வியளித்தமைக்கு நன்றி. உங்கள் குழந்தையின் சுகவீனத்தையும் பெரிதுபடுத்தாமல் உங்கள் அன்பான மனைவியின் வேண்டுகோளை ஏற்று கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்ற இலட்சியத்துடன் இங்கு வந்து திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலய இராஜகோபுர சிற்ப வேலையையும் ஏனைய சிற்பத் திருப்பணிகளையும் நிறைவேற்றித் தந்தமைக்கு நன்றி.தீர்க்க ஆயுளுடன் நோய் நொடியின்றி சேஷமமாக பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள்பாலிப்பாராக.

நன்றி.




# இலங்கையில் காளி அம்மன் வழிபாடு

இந்து வித்யாநிதி பிரம்மஸ்ரீ
**சோ. குஹானந்தசர்மா**
காரியதரிசி, அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்

பழம்பெரும் குலதெய்வ வழிபாட்டில் காளியம்பாள் வழிபாடும் ஒன்று. காளி அம்பாள் ஆலயங்களில் அம்மா, தாயே, ஆச்சி என அன்போடு இறைஞ்சி வழிபடும் நிலைப்பாங்கினைக் காணமுடியும். இவ்வழிபாடானது கொற்றவை வழிபாடென்றும், மகிசாசுர மர்த்தனி வழிபாடு என்றும் காளி ஆச்சி வழிபாடு எனவும் கொள்வர். சரித்திர நோக்கிற் பார்க்குமிடத்து, காளிதேவி அரசர்களின் வீர சக்தியாக விளங்கியுள்ளார். சோழர் ஆட்சியில் காளி வழிபாடு குலதெய் வழிபாடாக இருந்துள்ளது. அதேபோல இலங்கையில் யாழ்ப்பாணத்து மன்னன் சங்கிலியின் இஷ்டதெய்வமாகவும் காளி இருந்துள்ளார். யாழ்ப்பாணம், நல்லூர் ராஜஸ்தானியில் வீர மஹாகாளி வழிபாடு இன்னும் இருந்துவருகிறது. ஆனயின் மன்னன் முதல் மக்கள் வரை உள்ள எல்லோருக்குமே காளி தேவி அருட்தெய்வமாக அன்றும் இன்றும் இருந்து வருகின்றாள்.

அசுரர்களின் ஆக்கிரமிப்பால் அல்லல்பட்டு அவதியுற்ற வேளையில் அவர்களைக் காக்கச் சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய ஒரு பொறியின் அவதாரமே ஸ்ரீ வீரபத்திரமூர்த்தி. அவரோடு அசுரர்களை அழிக்க வந்த அம்பாளே காளிதேவி ஆவாள். இவர்கள் தோற்றத்தால் ஆணவம் அழிந்தது தருமம் வென்றது. காளியின் தோற்றம் என்ன? கோபாவேசம் கொண்ட சிவந்த முகம் இரத்த சிவப்பான கண்கள், ஆயுதம் போன்ற மூக்கு கோர பற்களோடு உள்ள மூர்த்தம் ஆகும். காளிதேவியானவள். சம்ஹார மூர்த்தமாக உள்ள வேளையில் கோபாவேசங்களோடும் தோற்றமளிப்பாள். மற்றைய வேளையில் சாந்த சொருபியாகவே எங்கும் காட்சி தருவாள். அசுர தன்மையை அழித்து நீதியை நிலை நாட்டி சௌபாக்கிய வாழ்வை தருவதே காளிதேவியின் மூர்த்தம் ஆகும். காளி தேவியின் இடது கையிலுள்ள வாளும் நாக்கிலிருந்து கொட்டும் இரத்தமும் அதனைக் குறிக்கின்றது. அஃது அழித்தல் தொழிலைக் காட்டுகின்றது. இதனைத் தத்துவ ரீதியில் நோக்கின் மனிதர்களின் தீய சக்திகள் ஒளிய வேண்டுமென்பது வெளிப்படை. ஆதலால் நாம் குல தெய்வநாயகியாக காளி தேவியை வழிபடுகின்றோம். அவளை ஆராதிக்கின்றோம். காளியானவள் எமது இடரினை களைந்து நல்வாழ்வினை எமக்கு நல்கிவரும் பெரும் தங்கையாக எங்குமே கொலுவீற்றிருக்கின்றாள்.

இலங்கையிலே ஆரம்பத்தில் மரத்தின் அடியில் காளி வழிபாடு ஆரம்பமாகிச் சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டன. அன்னியர் ஆட்சியில் ஆலயங்களுக்கு அழிவு ஏற்பட்டாலும் இப்போது இவை பக்தி மேம்பாட்டால் அழகுறு ஆலயங்களாக மாறுகின்றன.

காளியானவள் நல்லூரிலே வீர மஹாகாளியாக உள்ளார். திருநெல்வேலியில் தான்தோன்றியாக இருக்கிறாள். சுழிபுரம் தச்சன் புலோகாளியாக வீற்றிருக்கிறாள். வட்டுக்கோட்டை சங்கரத்தையில் வீரபத்திரருடன் உள்ளாள். கனவு கண்ட பக்தாசியாக பெரிய போரதீவில் உள்ளாள். ஏருவூதில் மாங்காட்டுக் காளியாக காட்சிதருகிறாள். உடம்பில் அன்புக் காளியாக உள்ளாள். முன்னேஸ்வரபதியில் பெருங் காளியாக இருப்பது பலருக்கும் தெரிந்த விஷயம். பதுளையில் இம்புள்கொடவிலும், றெக் ஹில் என்ற இடத்திலும் மற்றும் மலையக இடங்களிலும் காளி வீற்றிருக்கின்றாள். கொழும்பு மாநகரில் வீர மகாகாளியும், முகத்துவாரத்தில் காளியும், மயூரபதியில் காளியும், மற்றும் இச்சூழல்களில் சிறு சிறு காளிகோயில்களும் இருக்கின்றன. திருகோணமலையில் சிற்றாலயங்களில் காளிதேவி உள்ளாள். இப்படி காளி ஆலயங்கள் இலங்கையில் அநந்தம்.

திருகோணமலை திரு பத்திரகாளி அம்பாள் இலங்கையில் மிகவும் பெயர் மிக்கவள். அவளது அருளாட்சி இலங்கையில் மட்டுமல்ல கேதார கௌரி நூல் மூலம் உலகெங்குமே அருளாட்சி இருப்பதைக் குறிப்பிடலாம். இவ்வாலயம் சோழர் காலத்தய பழைய விக்கிரகத்தைக் கொண்டு விளங்குகின்றது. இக்காளி விக்கிரகமே கொடியேற்றம், தேர், தீர்த்தம், கொடியிறக்கம் முதலான முக்கிய விழாக்களில் தலைமை தாங்குகின்றது. இந்த ஆலயத்திலே வனதுர்க்கை தனி ஆலயத்தோடு இராஜகோபுரமும் கொண்டு விளங்குகின்றாள். இங்கு லக்சுமி, சரஸ்வதி, தேவியர் உளர். இலங்கையிலே கேதார கௌரியுடனான கேதார மூர்த்தி இவ்வாலயத்தில் மட்டும் உள்ளனர். இப்போது இந்த ஆலய மூலஸ்தானதூபி புதிய பெருகுடன் மூன்று தளங்களோடு கட்டப்பட்டுள்ளது. ஆலயம் முன்றலை புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரம் அழகு செய்கின்றது. இவ்வாலயத்தில் கேதார கௌரி விரத காலம் மிக அதிஉத்தம காலம் எனலாம். இலங்கை எங்கனும் உள்ள அடியார் கூட்டம் இவ்வாலயத்திற்கு வருவது இக் காளிதேவியின் அருளினாலேயாகும்.



திருக்கோணமலையில் காளி வழிபாட்டைக் கூறும் போது குறிப்பாக வருடாந்த பொங்கலைக் கூற வேண்டும். பொங்கல் மடை என்பனவற்றுடன் சங்கு, சேமக்கல ஒலி, பாறை முழக்கம் மங்கள வாத்திய இசை எல்லாமே இடம்பெறுவது பக்திமேலீட்டால் எனலாம். அத்தோடு வருடாந்த குளிர்த்தியும் இவ்வாறு இடம்பெறுகின்றது. அலங்காரத் திருவிழா, கொடியேற்றத்திருவிழா என்ற முறையில் உற்ஸவங்கள் பல காளி ஆலயங்களிலும் நடைபெறுகின்றன. திருகோணமலை பத்திரகாளி கோயில் மஞ்சத்திருவிழா, மூன்று தேர்பவனி, கற்பூரச்சட்டித்திருவிழா, சிங்கவாகனத்திருவிழா எல்லாமே சிறப்பானவை, சங்கரத்தை காளி கோவிலில் பறைமுழக்கத்தோடு தேர்த்திருவிழா உள்ளது. மயூரபதி காளிகோயிலில் பால்காவடி விஷேசம் உள்ளது. தேர் நகரபவனி உள்ளது. அழகிய கல்யாண மண்டபம் உள்ளது. திருமலை பத்திரகாளி, கொழும்பு ஸ்ரீ வீரமாகாளி ஆலயங்களில் கல்யாண மண்டபங்கள் உள்ளன. இவை காளி வழிபாட்டின் உன்னத நிலையினைக் காட்டுகின்றன.

நோய், நொடி, காப்பவள் காளி. காளியை நினைந்து நோயாளியை வேப்பிலையால் விசுக்கும் வழக்கம் இன்றும் எம்மிடையே உள்ளது. காளிதேவிக்கு, பாணாக்கம், நீர்மோர், தயிர்ச்சாதம், புளியோதரை, சர்க்கரைச் சாதம், மோதகம், வடைமாலை என்பன அர்ப்பணிக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளும் வழக்கம் இலங்கையில் இருந்து வருகின்றது.

லஷார்ச்சனை, திருவூஞ்சல், சங்காபிஷேகம் என்பன காளிதேவிக்கு கிரமமாக பக்திபூர்வமாக இடம்பெற்று வருவது குறிப்பிடக்கூடியது.

ஆம்! காளி வினை கடிந்து அருளுபவள் அன்பரின் இன்னல் இடரினை களைந்து எல்லோருக்கும் இஷ்ட சித்திகளைக் கொடுத்தருளுபவள் காளிதேவி. மாங்கல்யம் தருவதோடு தாலிப்பிச்சையும் தருபவளும் காளியே. கல்வி, செல்வம், விவசாயம், வியாபாரம் எல்லாமே தரும் காளிதேவியின் வழிபாடு இலங்கையின் அதி உன்னத வழிபாடு எனலாம்.

(2001 - 02 - 07) மஹா கும்பாபிஷேகம், புதிய இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் காணும் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி தேவியை வழிபட்டு நல்வாழ்வு வாழ்வோமாக.

❊❊❊❊❊
❊❊❊
❊



## விளக்கு ஏற்றுவதற்கு பயன்படுத்தும் எண்ணெயின் பலன்கள்

**தீபத்திற்கு நெய்விடுவது மிகச்சிறப்பு. இல்லாத நிலையில் நல்லெண்ணை உகந்தது. எந்தத் தெய்வசந்நிதியிலும் நல்லெண்ணைத் தீபத்தை ஏற்றலாம். ஸ்ரீ நாராயணனுக்கு நல்லெண்ணை தீபமே உவப்பானதாகும். ஸ்ரீ மகாலட்சுமிக்கு நெய்தீபம், விருப்பமானது. விநாயகப்பெருமானுக்கு தேங்காய் எண்ணெய் உகந்தது. நெய்கொண்டு தீபமேற்றினால் இல்லத்தில் பல்வேறு நலன்கள் வந்தடையும்.**

**நல்லெண்ணை அனைத்துப் பீடைகளையும் போக்கும். விளக்கெண்ணை ஊற்றி தீபமேற்றினால் புகழ், வாழ்க்கை நலன், தாம்பத்திய உறவு, நிறைவு மற்றும் உறவினர்களின் நேயம் கிட்டும். கடன், துயரம், பயம், பீடை நீங்க கடலை எண்ணெய் உகந்ததல்ல.**

###-###-###-###

## தீபம் ஏற்றும் நேரம்



**காலை மூன்று மணிமுதல் ஐந்துமணிக்குள் தீபம் ஏற்றுவது வீட்டில் சர்வமங்கள யோகத்தை உண்டாக்கும்.**

**வேலை வேண்டுவோர், நல்ல கணவன் வேண்டுவோர், புத்ர சுகம் வேண்டுவோர், சாயங்கால வேளையில் தீபம் ஏற்றி மகாலட்சுமியை வழிபட அப்பலன்களை அடையலாம்.**

□□□□□

**வேம்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நெய், விளக்கெண்ணெய், இந்த ஐந்தும் கலந்து ஊற்றி எவன் ஒருவன் ஒரு மண்டலம் பூஜை செய்கின்றானோ அவனுக்கு தேவியின் அருள் மந்திரசக்தி போன்றவை ஏற்படும்.**

□□□□□

**விளக்கை வடக்குதிசையிலேற்றி வழிபட்டால் நிறைவான பொருள் வசதி சித்திக்கும். திருமணத்தடை நீங்கும். அறிவு வளர்ச்சியடையும்.**

**விளக்கை கிழக்குத் திசையில் ஏற்றி வழிபட்டால் துயரங்கள் யாவும் விலகும்.**

**மேற்குத் திசையில் விளக்கு ஏற்றி வழிபட்டால் கடன் தொல்லையை நீக்குவதோடு விரோதங்களையும் போக்கும், மேலும் கிரகங்களின் பீடிப்பையும் நிவர்த்திக்கும். ஆனால் எந்த நிலையிலும் தெற்குத் திசை நோக்கி விளக்கு ஏற்றுதல் கூடாது.**




# கவிஞர்கள் வாழ்வில் காளி

ஆக்கியோன்
த. சிவநாதன்

**காளி மீது நெஞ்சம் – என்றும்**
**கலந்து நிற்க வேண்டும்**
**வேளை யொத்த விறலும் – பாரில்**
**யாளி யொத்த வலியும் – என்றும்**
**இன்பம் நிற்கும் மனமும்**
**வாழி யீதல் வேண்டும் – அன்னாய்!**
**வாழ்க நின்றன் அருளே.**

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி அன்னை பராசக்தியின் படைப்பினில் உயரிய உன்னதமான பிறவி மனிதப்பிறவியாகும். மனிதனானவன் மாண்புற வேண்டும் எனின் கல்வி அத்தியாவசியமானதாகும். இக் கல்வியானது ஆதியில் குருகுலக்கல்வி முறையில் இருந்து இன்று கம்பியூட்டர் கல்வி முறையாக வளர்ந்துள்ளது இவ்வகையில் படைப்பிலக்கியங்கள் எழுந்தன. கதை, கவிதை, பாடல், நாடகம் என பல உருவமாகின. இவற்றுள் வாழ்வியல் சிந்தனைகளும், மனித விழுமிய எண்ணக்கருக்களும் உயர்ஞான தத்துவக் கருத்துக்களும் பொதிந்த பல கவிஞர்கள் தோன்றினார்கள் இவர்களுள் எங்கும் வியாபித்த சக்தியை அபிராமி எனவும், காளி எனவும், வழிபட்ட சக்திதாசர்களாகிய அபிராமிப்பட்டரையும் பாரதியையும் சற்று நோக்கினால்.

அபிராமிப்பட்டர் சோழநாட்டின் காவேரி நதியின் தென் கரையில் தேவாரம் பாடப்பெற்ற திருத்தலமாகிய "திருக்கடவூரில்" சற்றேறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன் அந்தணர் வகுப்பில் கௌசிக கோத்திரத்தில் அமிர்தலிங்க ஐயர் என்பவருடைய புதல்வராக உதித்தார். இவருடைய இயற்பெயர் சுப்பிரமணியன் என்பதாகும். பரம்பரையாக சங்கீதப்பயிற்சியும் தேவி உபாசனையும் அமைந்த குடும்பத்தினராதலின் அபிராமிப்பட்டர் இளமைமுதலே திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள அபிராமியை வழிபட்டு வரலானார். இராக மாலிகையில் ஓர் கீர்த்தனம் பாடியதோடு அவ்வப்போது தோன்றிய பக்தி விளைவினால் பல துதிகளை அம்பிகை மீது பாடினார்.

பாரதியார் நெல்லை மாவட்டத்தில் எட்டய புரத்தில் அந்தணர் வகுப்பில் சின்னச்சாமி ஐயருக்கும் இலச்சுமி அம்மாளுக்கும் புதல்வராக உதித்தார். இவரின் இயற்பெயர் சுப்பையா இவரின் தந்தை சிறந்த பக்திமானாவார். இவர் சிறு வயதிலேயே இறைபக்தி கொண்டவராவார். தனது ஏழு வயதிலேயே கவிமழை பொழியத்தொடங்கினார். 11 வயது அடைந்த பாலகவி சுப்பையாவை எட்டயபுர சமஸ்தானத்துப் புலவர்கள் சோதித்து "பாரதி" என்ற பட்டத்தினைச் சூட்டிப் பராட்டினர். இங்கே சற்று அவதானித்தால் இருவரும் அந்தணர் குலத்தில் பிறந்து இறைபக்தியுடன் கவிபுனையும் ஆற்றல் பெற்ற ஒற்றுமையை அவதானிக்கலாம்.

அபிராமிப்பட்டரோ தேவி உபாசனையில் சிறந்து விளங்கி சரியை, கிரியை என்னும் இரண்டு சோபானமும் கடந்து யோகநிலையில் அன்னையின் திருக்கோலத்தை ஆதார பீடங்களில் கண்டு இடைப்பட்ட கிரந்திகளை தாண்டிச் சென்று பிரமரந்திரத்தில் ஸஹஸ்ரார கமலத்தில் ஒளிமயமாக எழுந்தருளியிருக்கும் லலிதாம்பிகையின் திருவருளின்பத்தில் திளைத்துப் பித்தரைப்போல் ஆனந்தாதிசய வெறி மூண்டு உலாவினர். ஆனால் பாரதியாரோ தன் இளவயதிலேயே பெற்றோரை இழந்த காரணத்தினால் காசிக்கு சென்று அங்கு தன் அத்தையின் அரவணைப்பில் வாழ்ந்த காலத்தில் இந்தி மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் தேர்ச்சி பெற்றார். இன்று பாரதியார் என்றவுடன் நம்கண்முன் தோற்றமளிக்கும் பாரதியாரின் பஞ்ச கச்கம் வால்விட்ட தலைப்பாகை வெட்டரிவாள் மீசை ஆகியன அங்குதான் புழக்கத்துக்கு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அபிராமிப்பட்டர் தேவி உபாசனையில் ஊறித்திளைத்து காணும் இடம் எங்கும் தேவியைக் கண்டார் இதனால் பேரானந்த வெறிமூண்டு பித்தரைப்போல் ஆனந்தித்தார். இவரின் இந்நிலைகண்டு இவர் ஏதோ ஒரு துர்தேவதையை உபாசித்து அந்தணருக்கு மாறுபாடான ஆச்சாரங்களைக் கடைப்பிடித்து பித்துப்பிடித்து அலைகிறார் என்று ஏசத்தொடங்கினார்கள். அவர்கள் ஏசுவதைக் காதில் வாங்காமல் அபிராமி சமயம் நன்றென்று கடைப்பிடித்து உள்ளத்தே விளைந்த கள்ளால் உண்டான களியிலே பெருமிதத்தினோடு மிதந்து வந்தார். அக்காலத்தில் தஞ்சையில் இருந்து அரசு புரிந்த மகாராஷ்டிர மன்னராகிய சரபோஜீ அரசர் தை அமாவாசைத்தினத்தன்று காவிரிப் பூம்பட்டினத்துக்குச் சென்று குளத்தில் நீராடி திருக்கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்த போது அபிராமி சந்நிதியில் அபிராமிப்பட்டரைக் கண்டார். யோகம் கைவரப்பெற்று மதமத்தராகிய அவரின் தோற்றத்தைக் கண்டு அதிசயித்த மன்னர் "இவர் யார்?" என்று அருகில் உள்ளவர்களை வினவிய போது அவரைக் குறைசொல்லிக் கூறினார்கள். இதை அறியத் தலைப்பட்ட மன்னர் அபிராமிப் பட்டரிடம் இன்று அமாவாசை உண்டா? எவ்வளவு நாழிகை இருக்கின்றது என்று கேட்டார். சந்திரமண்டலத்தில் அமுதமாய் வீற்றிருக்கும் அம்பிகையை தம்முள்ளத்தில்

தரிசித்து அங்கே சூழுஞ்சுடர் நடுவே இருந்து சுடர்கின்ற திருக்கோலத்தில் திளைத்து இருந்த பட்டர் மன்னருடைய வார்த்தைகள் காதினில் அரைகுறையாக விழவே விழித்துக்கொண்டு இன்று பௌர்ணமி என்று சொன்னார் அருகிலுள்ளவர்கள் பிரமித்தனர். அருகிலுள்ளவர்கள் அவரை உசுப்பி உரக்கப் பேசியதும் உலக உணர்ச்சி வரப்பெற்ற அபிராமிப்பட்டர் தாம் செய்த தவறை உணர்ந்தார் கோபம் கொண்ட மன்னர் அக்கால வழக்கின்படி பௌர்ணமி தோன்றா விடின் தீக்குழியினுள் இடும்படி கட்டளையிட்டு சென்றுவிட்டார் "நன்றே வரினும் தீதே விளைகினும் நானறிவதொன்றேயும் இல்லை" என்றெண்ணி உடனே அபிராமியை தியானித்து தம்மை உலகினர் பழி கூறுவதையும், அபிராமியின் உயர்வையும், தான் பெற்ற அனுபவச்சிறப்பையும் அந்தாதியாகப் பாடத் தொடங்கினார். அதில் அவர் அம்பிகையை அகிமாலினி அண்டமெல்லாம் பூத்தவள், அணங்கு அணிக்கழகு அனுகாதவருக்கு பிணி அதிசயமான வடிவுடையவள் அந்தரி, அபிராமிவல்லி, அபிராமி, அம்பிகை, அம்புயாதனத்தம்பிகை, அம்மை, அமரர்விருந்து, அருமருந்து, அருட்கடல், அருள், அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அழியாத கன்னிகை, ஆடகத்தாமரை, ஆரணங்கு, ஆத்தாள், ஆனந்தவல்லி, இசைவடிவாய் நின்ற நாயகி, இமவான் பெற்ற கோமளம், இறைவர் செம்பாதத்தில் இருந்தவள், இறைவி, உடையாள், உமை, உள்ளத்தே விளைந்தவள், எந்தை துணைவி, எம்பிராட்டி, எம்பெருமாட்டி, எழுதரிய மேனிமயில், ஏதமில்லால், ஒளி, ஒன்பது கோணங்களில் உறைபவள், ஒண், கடம்பு சாத்தும் குழல் அணங்கு, கமலத்திரு, கலா, வைரவி, மண்டலி, கறைக்கண்டனுக்கு மூத்தவள், கன்னி, கனங்குளை, காளி, கியாதியுடையவள், கிளி, குணக்குன்று, குவளைக்கண்ணி, கோமளயாமளை, கோமளவல்லி, சகலகலாவல்லி, சங்கரனார், மனைமங்கலம், சங்கரி, சடையோனுடையாள், சண்டி, சாம்பவி, சாமளை, சித்தி, சித்திதரும்தெய்வம், சிந்தூரமேனியாள், சிவகாமசுந்தரி, சிவம், சுந்தரவல்லி, சுந்தரி, சூலினி, செங்கண் மால்திரு தங்கச்சி, செங்கல சமுலையாள், செம்பட்டுடையாள், செய்யாள், ஞான மெல்லாம் பெற்ற நாயகி, தலைவி, தாய், திரிபுரசுந்தரி, திரிபுரை, திரு, தெருள், தேவரைப் பெற்ற அம்மை, தையல், நாயகி, நாரணி, நான்முகி, நீலி, நுன்னூல், இடையாள், பசும்பொன் கொடி, பஞ்சசாயகி, பஞ்சபாணி, 'பஞ்சமி, பணிமொழி, பயிரவி, பராசக்தி, பராபரை, பரிமள பச்சைக்கொடி, பலவுருபனிமொழி, பாசாங்குசை, பாலினும் சொல்லினியாள், பிங்கலை, பிணிக்குமருந்து, புத்தி, புரந்தை, புவனம் காத்தவள், புவனம் பூத்தவள், பூங்குயில், பூங்குழலாள், பூதங்களாகி விரிந்த அம்மை, பூரணாசல மங்கலை, பைங்கிளி, போகம், மணி, மணிபுதைந்த அணி, மணியின் ஒளி, மருள், மலைமகள், மறையின் அரும்பொருள், மனோன்மணி, மாத்தவள், மாதங்கி, மாதுளம்பூ நிறத்தவள், மின்கொடி, முக்கண்ணி, முகிழ் நகை, முத்திக்கு வித்து, முதல்வி, முப்புரை, மூவர்க்கும் அன்னை, மெல்லியல், யாமளவல்லி, யாமளை, வல்லி, வாணுதற்கண்ணி, வராகி, வெளி, வெளியாள், வேதப் பரிவுரை, என பலவாறாகப் போற்றுகின்றனர்.

பாரதியாரோ சமயத்தோடு சமுதாய மேம் பாட்டிற்காக அயராது உழைத்தவர். இவர் காசியில் இருந்து தென்னிந்தியாவிற்குத் திரும்பியதும் எட்டய புரத்து மன்னரது தோழனாக விளங்கினார். இதனால் சமஸ் தானத்தில் அவைப்புலவராக வகித்தார். மன்னர் வீதிவலம் வரும்போது மன்னரை மதியாமல் ஏழைகளுக்கு எழுத்தறிவித்த வண்ணம் இருந்தார். இதனால் மன்னரோடு முரண்படுகின்றார். அதன்பின் மதுரைக்கு வந்து மதுரை சேதுபதி உயர்நிலைக்கல்லூரியில் தமிழாசிரியராக சில காலம் பணியாற்றினார்.

இவருக்கு பத்திரிகைதுறை ஆர்வம் முழு நேரமாக பத்திரிகைத்துறையில் ஈடுபடுகின்றார். 1905ம் ஆண்டளவில் ஏற்பட்ட வங்கப்பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி பாரதியின் வாழ்க்கையில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்துகிறது. இதன்பின் சமுதாயக் கிளர்ச்சிக்கு வித்திட்டார். பிரிட்டிசாரின் கண்ணோட்டம் பாரதிமீது விழுந்தது. பாரதியின் இந்தியா எனும் பத்திரிகைக்கு தடை விதித்தவுடன் பாரதியை கைது செய்து 34 நாட்கள் காவலில் வைத்து விடுதலை செய்தனர். 1919இல் சென்னைக்குச் சென்ற பாரதியார் காந்தியடிகளை சந்தித்தார். 1920இல் சுதேச மித்திரன் ஆசிரியராக மீண்டும் பதவியேற்றார். இதன்பின் பாரதியார் சமுதாய சமயக் கருத்துக்களையும் எழுதினார்.

பாரதியாரோ இயற்கையோடு கூடிய அன்னையாக காளியைக் காண்கிறார். பல்வேறு வடிவில் பராசக்தியை வழிபடுகிறார். அருட்காளி என்றுனைப்புகழ்வர், காலப்பெருங் களத்தின் மீது எங்கள் காளி நடனமுலகக்கூட்டம், யாதுமாகி நின்றாய் காளி, தீது நன்மையெல்லாம் காளி, பூதமைந்துமானாய் காளி, பேதமாகிநின்றாய் காளி, இன்பமாகி விட்டாய் காளி, நின்னையெல்லாம் காளி, அன்பளித்து விட்டாய் காளி, துன்பம் நீக்கி விட்டாய் காளி, காளி மீது என்றும் நெஞ்சம், காளி வலிய சாமுண்டி காளி தந்தருள் செய்யே நின்னைக் காளி, என்றேற்றுவேன் செல்க காளி எதையெம்மை வெல்கவே, களித்தாடுங்காளி, சாமுண்டி, கங்காளி, வைரவி, திறற்சாமுண்டி, காளி, நான் விரும்பிய காளி தருவாள் என்று அனைத்தையும் காளியிடம் கேட்கிறார்.

இதையொட்டி நாம் பார்ப்போமேயானால் அபிராமிப்பட்டரும் பாரதியாரும் அரசனுடன் தொடர்புடையதையும் இவர்கள் ஓர் நிலையில் மனோதெளிவு பெற்று இறையை ஆராய்வதையும் அவதானிக்கலாம். மேலும் அபிராமிப்பட்டர் "நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து" எனக்கூறுவதன் ஊடாக நாய் போன்ற என்னையும் நீ இங்கே பார்வைக்குரிய பொருளாக திருவருள் கொண்டு விரும்பி வந்து இவனையாட்கொள்ளாகும் என்று தன்னை பாவனை செய்கிறார். இதே உத்தியை பாரதியாரோ "வெள்ளைக் கருணையினாலேயே - இன்நாய் சிறுவேட்கை தவிராயே"

என்று மஹா சக்திக்கு விண்ணப்பம் என்னும் கவிதையின் ஊடாக தன்னை கடைநிலையாக பாவனை செய்து பக்தி மிகுதியால் காளியிடம் வேண்டுகின்றார். அபிராமிப்பட்டர் தனது 75வது பாடலில் "மறித்தேன் மறலி

வருகின்ற நேர்வழிவண்டு கிண்டி" இங்கு மறலி என்பது யமன் எனப்பொருள் படும் யமன் வருகின்ற வழியை அம்பிகையின் அருளால் அடைத்து விட்டதாகக் கூறுகின்றார். பாரதியாரோ தனது காலனுக்குரைத்தல் என்னும் கவிதையில் (சுதேச மித்திரனில் 1919ல் வெளி வந்தது.)

"காலா! உனை நான் சிறு புல் என மதிக்கிறேன்;
என்றன் காலருகே வாடா சற்றே உன்னை மிதிக்கிறேன்.

எனக் குறிப்பிடுவதைக்காணலாம் இவர்கள் இருவரும் இன்நிலையில் தேவி அருளால் மரண பயத்தை துச்சமென மதிப்பதைக்காணலாம். மேலும் அபிராமிப்பட்டர் தனது 9வது பாடலில் "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பவன்" என எப்பொழுதும் இறைநினைவுடன் இருப்பதைக் குறிப்பிடுகின்றார். பாரதியாரோ "நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவோ" எனும் கவிதையின் ஊடாக "காண்பது சக்தியாம் - இந்த காட்சி நித்தியமாம்" என்பதின் ஊடாக தெய்வத்தின் நிலை கண்டால் மோட்சம் தானே கிடைக்கும் என்கிறார் இதைப்போல் இருவரினதும் பல பாடல்களிலும் ஒற்றுமை உள்ளதை அவதானிக்கலாம்.

(கட்டுரை விரிவஞ்சி விளக்கப்பட வில்லை) அபிராமிப்பட்டர் இறுதியில் அம்பிகை அருளால் பௌர்ணமி தோன்றியதைக் கண்டு வியந்து அம்பிகை புகழ்பாடி முக்தியடைகின்றார். பாரதியாரோ இறுதிக்கட்டத்தில் தன் உள்ளத்துள் எழுந்த கேள்விகளுக்கு விடைகாணும் முகமாக பல பாடல்களில் சித்தாந்த கருத்துக்களை முன்வைக்கிறார் இக்கருத்தை தனது பாடலில் அபிராமிப்பட்டர் முன்வைப்பதைப்பார்த்தால் உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றில் ஒன்றைவிட ஒன்று சிறந்தது. உள்ளம் உடலைவிட சிறந்தது. அதற்கு நலம் செய்யும் துணைவர் ஆசிரியர்களும் ஞானக்குருக்களும் ஆவர். அதுபோல் உயிருக்குத்துணையாக யாரேனும் இருந்தால் அவர்கள் அனைத்துத் துணைகளையும் விட மேலானவர்கள எனக்கூறலாம். உயிருடன் உடலையும் பிறப்பித்தவர்கள் தாயும் தந்தையுமாயினும் அவர்கள் இவ்வுயிருக்கு துணையாகயியலாது.

உயிர் எங்கு சென்றாலும் எந்தப்பிறவி எடுத்தாலும், அங்கு நமக்குத் துணையாக இருப்பது மேலான துணையாகும். அம்மேலான துணையை அபிராமியாகக் காண்கிறார்.

"விழுத்துணை" அவளே விழுத்துணை விழுமிய துணை இந்நாயகியை விழுத்துணையாகக் கொண்ட தம் அடியார்கள் மரணம் பிறவி இரண்டும் எய்தார். இந்த வையத்தே என்கிறார் பட்டர். பாரதியாரோ,

**"முன்னோர்கள் எவ்வுயிருங்**
**கடவுள் என்றார்**
**முடிவாக அவ்வுரையை**
**நான்மேற்கொண்டேன்**
**அன்னையர்கள் உரைத்தலன்றிச்**
**செய்கையில்லை**
**அத்வைத நிலை கண்டால்**
**மரணமுண்டோ"**

என்று கூறுவதன் மூலம் தெளிவாக உணர்த்துகின்றார். 1921ம் ஆண்டு 9ம் மாதம் 11ம் நாள் மகாகவி சுப்பிரமணிய பாரதியர் மறைந்தார். ஆனால் சக்தி தாசர்களான அபிராமிப்பட்டரினதும் சுப்பிரமணிய பாரதியாரினதும் புகழும் வையகம் வான் உள்ளவரையும் வாழும்


உசாத்துணை

1. கல்கி
2. அபிராமி அந்தாதி
3. பாரதியார் கவிதைகள்
4. பாரதி பண்முகப்பார்வை
5. பாரதிப்புதையல்


# மாதுளம் போது

அபிராமிப்பட்டர் வாக்கு

1. ***மாதுளம் பூவைப்போன்ற சரீர காந்தியுள்ளவள்***

2. ***தாடி மீகுஸுமப்ரபா என்று இதனை லலிதா சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது***

3. ***மாது உளம் போது என்று பிரித்து பொருள் கொண்டால் அன்னையின் அருளுள்ளம் மலர்போன்று மென்மை வாய்ந்தது என்று பொருள் கொள்ளலாம்.***

4. ***மோப்பக்குழையும் அனிச்சம்போல் அடியார்படும் துயர்கண்டு அவள் வாடுவாள் அதனால் அந்த மாதின் உள்ளம் போது.***

5. ***போது என்பது மலர்வதற்குத் தயாராக உள்ள ஒரு நிலை அம்பிகை தன்னிடம் சரண் என்று ஒரு வார்த்தை சொல்லத் தொடங்குமுன் அருள் செய்யத் தயாரான நிலையில் இருக்கின்றாள் அதனால் அந்த மாதின் உள்ளம் போது.***




# சக்தியின் மகத்துவம்

சைவப்புலவர்
**அ. பரசுராமன்**
ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர்
திருக்கோணமலை.

சக்தி என்பது ஒன்று இல்லையெனில் உலகமோ, உலகின் சுழற்சியோ, கோள்களோ, கோள்களின் இயக்கமோ, பொருள்களோ பொருள்களின் அசைவோ, இயற்கையோ, இயற்கையின் வனப்போ, இயற்கை அற்புத நிகழ்ச்சிகளோ எதுவுமே இல்லையாம். உலகங்கட்கும், உலகப் பொருட்களுக்கும் மூலமாக உள்ளதும், உலகங்களாவும், உலகப்பொருட்களாகவும் நின்று விளங்குவது சக்தியே.

சக்தியின் வடிவமே உலகம். சக்தியின் திருவிளையாடலைப் பஞ்சபூதங்களிலும், அணுமுதல் அண்ட பகிரண்டம் வரை எங்கும் காணலாம். இறைவனும், சக்தியும் வேறு வேறு அன்று; என்பதை உணர்த்தவே சிவபெருமான் பாம்பை மாலையாக அணிந்துள்ளார். திருமால் பாம்பின் மீது பள்ளி கொண்டுள்ளார். முருகனின் வாகனமாகிய மயிலின் காலடியில் பாம்பு படம்விரித்து ஆடுகின்றது.

## தாய் வழிபாடு

சக்தி வழிபாடே தாய் வழிபாடு அல்லது அன்னை வழிபாடு அல்லது அம்பிகை வழிபாடு என்று கூறப்படும் சக்தியின் சின்னமாகிய நாகதேவதை வழிபாடும், நாக கன்னியர் வழிபாடும் இது பற்றியே எழுந்தமையாகும். அறுவகைச் சமயங்களுள் சாக்த மதம் என்பது சக்தியையே பரம்பொருளாகக் கொண்டது.

சக்தி வழிபாடாகிய அம்பிகை வழிபாடு மிகவும் பழமையுடையது. மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் பரவியிருத்தல் வேண்டும் என ஆய்வுத்துறைப் பேரறிஞராகிய சேர் ஜோன் மார்ஷல் என்பவர் கூறுகிறார். இருக்கு வேதத்தில் அன்னை வழிபாடு கூறப்படுகிறது. இருக்கு வேதத்திற்கும் மிகவும் முற்பட்டது என்பது விளங்கும், சக்தியைச் சிவபெருமானுக்கு மனைவி, திருமாலுக்கு தங்கை கணபதிக்கும், முருகனுக்கும் தாய் என்பதனால் அறுவகை சமயங்களின் ஒற்றுமை அமைந்து விளங்குகின்றது.

அன்னையின் நோக்கம் புல், பூண்டு, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்று விரும்பிய பிறவிகளையெல்லாம் எடுத்து, போகங்களையெல்லாம் அனுபவித்து முத்தியடைதலே உயிர்களின் நோக்கம். அதற்குத் துணையாக நின்று அருளுபவர் அன்னை பராசக்தி, அன்னையே போகத்தையும், முத்தியையும் அளிப்பவள் போகத்தை நுகர வேண்டுமென்ற அவா உள்ள வரையில் அதற்கேற்ற பிறவிகளை எடுத்து இளைத்த பின்பு முத்தி வேண்டுவோருக்கு அவள் சிவகதிக்கு வழிகாட்டியருள்கின்றாள். இவ்வாறு வேண்டுவோர்க்கு வேண்டியதை வேண்டியாங்கு வகுத்தருளுகின்ற காரணத்தால், அவள் அகிலாண்டங்களுக்கும் அன்னையாக விளங்குகின்றாள்.

## சக்திவெளிப்பாடு:-

எங்கும் எதிலும், எஞ்ஞான்றும் நீக்கமற்ற நிறைபொருளாகத் திகழ்கின்ற ஆதி சக்தியாகிய பராசக்தி பல்வேறு தேவியம்சங்களைக்கொண்டருளித் திகழ்கின்றாள் எவர் எவர் எந்த எந்த வைபவத்தைச் சிறப்பாகப்பெற விரும்புகின்றனரோ, அதற்கேற்ற தேவியம்சத்தையும், திருப்பெயரையும் கொண்டு வெளிப்பட்டருளுகின்றாள். எங்கும் நிறைந்த பொருளாகப் போற்றப்படுகின்ற அந்த ஆதிசக்தி பராசக்தி என்றும், பூரணி என்றும், இராஜ இராஜேஸ்வரி என்றும் மூலப் பிரகிருதி என்னும் திருப்பெயர் கொண்டருளுகின்றாள். முத்தொழிலைச் செய்யுமிடத்து, பிரம்மாணி, வைணவி, உருத்திராணி, என்ற திருப்பெயர்களைக் கொண்டு வெளிப்படுத்துகின்றாள். ஈசுவரனுக்கு ஒப்பாகும் போது துர்க்கையாகவும், காலத்தின் வடிவினளாகும் போது காளியாகவும், வித்தையின் வடிவாகும் போது சரசுவதியாகவும் செல்வத்தின் உருவாகும் போது இலக்குமியாகவும், உலகத்தை காக்கும் போது உலக நாயகியாகவும், புவனேஸ்வரியாகவும் காட்சி தருகின்றாள்.

அன்னையாகிய சக்தியே மும்மூர்த்திகள் முதலிய தேவர்களிடத்தே தேவியர்களாகவும் அமைந்து விளங்குகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| பிரம்மன் | - | பிரம்மாணி (அபிராமி) |
| சிவன் | - | மகேஸ்வரி |
| குமரன் | - | கௌமாரி |
| விஷ்ணு | - | வைணவி |
| அரி | - | வராகி |
| நரசிம்மர் | - | நாரசிம்மி |
| இந்திரன் | - | இந்திராணி |

இங்ஙனம் விளங்குகின்ற தேவியர்கள் தத்தமக்குரிய வாகனத்தில் வெளிப்பட்டருளுகின்றனர். பிரம்மாணி அன்னத்தை வாகனமாகக் கொண்டும், மகேஸ்வரி இடபத்தை வாகனமாகக் கொண்டும், கௌமாரி மயிலை வாகனமாகக் கொண்டும், வைணவி கருடனை வாகனமாகக் கொண்டும் நாரசிம்மி சிம்ம வாகனத்தைக் கொண்டும், இந்திராணி யானையை வாகனமாகக் கொண்டும், வராகி எருமையை வாகனமாகக் கொண்டும் எழுந்தருளுகின்றனர்.

சக்தி இலக்குமியாக வெளிப்படும் போது தாமரை ஆசனத்தையும் சாமுண்டியாக எழுந்தருளும் போது பேயினோடும் தோன்றித்திகழ்கின்றாள்.

ஆதி சக்தியாகிய அன்னை இங்ஙனம் பல்வேறு பெயரில் பல்வேறு வடிவங்களில், பல்வேறு வாகனங்களில் தேவியர்களாகத் திகழும் போது திருக்கரங்களில் சங்கு, சக்கரம், கதாயுதம், சக்தி ஆயுதம், கலப்பை, குறுந்தடி, கேடயம், ஈட்டி, கோடரி, பாசம், குத்துக்கோல், மும்முனைச் சூலம், வில் என்ற பல்வேறு ஆயுதங்களையும் தாங்கித் திகழ்வர்.

தேவி பராசக்தியின் உடற்பாகங்கள் இந்திய நாட்டின் பல்வேறு இடங்களில் விழுந்து சக்தி பீடங்களாகத் திகழ்கின்றன. தாட்சாயணி, தன் தந்தையால் அவமதிக்கப்பட்டு தீயில் குளித்து மாண்டபோது அவளது உடலைத் தனது தோழின் மேல் போட்டுக்கொண்டு பரமசிவன் கோர நர்த்தனம் ஆடியதாகவும், அவ்வுடல் 51 பாகங்களாகப் பிரிந்து தேசத்தின் பல்வேறு இடங்களில் விழுந்து சக்தி பீடங்களாயின என்பது புராண வரலாறு இந்த சக்தி பீடங்கள் பாரத நாடு முழுவதிலும் பரவலாக அமைந்து விளங்குகின்றது.

## பராசக்தி வடிவ பேதங்கள்:

அண்டங்களாகி, அவற்றிலுள்ள உயிர்க்குலங்கள் அனைத்துமாகி உலக வாழ்வை நடத்தி வைக்கும் பராசக்தி பல பல தெய்வ வடிவங்களில் தோன்றி, பல பல திருவிளையாடல்களை உணர்த்துகின்றது. இவற்றுள் சிறப்பு மிக்கனவாகிய சிவ வடிவங்களின் பெருமைகளைக் காணலாம்.

## திரிபுர சுந்தரி

திரிபுர சுந்தரி என்றால் மூவுலகிலும் பேரழகி என்று பொருள் இல்லிதை என்றும் இராஜேஸ்வரி என்றும் காமாட்சி என்றும் காமகோடி என்றும் போற்றப் பெறுபவள், ஸ்தூலம், சூட்சுமம் காரணம் என்பவை முப்புரங்கள். இம் முப்புரங்களின் உள் அழகாகத் திகழ்பவள் திரிபுரசுந்தரி இவளை உள்ளார்ந்த அழகுத் தத்துவமாகக்கருதி, வெளி அழகுக்கென்றே மகா இலக்குமியைத் தனிச்சக்தியாகக் கொண்டுள்ளனர். இவள் உள்ளிருந்து நம் ஆசைகளையும், வெறுப்புக்களையும் களைந்து நமது ஐம்புலன்களையும், மனத்தையும் தன்வயம் கொண்டால் தான் நாம் வெளியழகை தூய்மையாக அநுபவித்து நம்மை மேம்படுத்திக்கொள்ள வியலும் இதற்கு அடையாளமாகவே ஆசையை அடக்கப் பாசமும், வெறுப்பை அடக்க அங்குசமும், ஐம்புலன்களைக் கவர ஐந்து மலர்க் கணைகளும், மனத்தை ஈர்க்க, கரும்பு வில்லும், அவள் தரித்து விளங்குகின்றாள். மாதுளை நிறத்திருமேனியளாகிய இவள் செவ்வாடையும், செவ்வாபரணமும் பூண்டு இதயச் செம்மையின் உருவமாகத் திகழ்கின்றாள்.

இத் திரிபுர சுந்தரியைப் பரப்பிரம்ம சக்தியாகக் கொள்கையில் ஸ்ரீ சக்கரத்தின் நடுவே நின்று அனைத்துச் சக்திகளும் பற்பல வெளிச் சுற்றுக்களில் தன்னைத் தரிசிக்கும்படியாக இவள் விளங்குகின்றாள். இந்நிலையில் மாதங்கியும் பகளாமுகியும் முறையே இவளுக்கு மந்திரிணியாகவும், சேனநாயகியாகவும் ஆகின்றார்கள். இவளே ஐந்தொழில்களும் புரிந்தருள்பவள். எனவே பிரமனும், விஷ்ணுவும், உருத்திரனும் மாயைக்குத் தலைவனாகிய மகேசுவரனும், இவளது மஞ்சத்தின் நான்கு கால்களாக மாயை நீக்கும் சதாசிவனே அவள் அமரும் பீடமாகின்றாள் காமமாகிய மன்மதன் எரிந்தவுடன் காமத்தின் விளைவே குரோதம் என்பதை உணர்த்துவதற் காகவே அச் சாம்பலிலிருந்து பண்டாசுரன் தோன்றினான். அவனை வதைத்தவள் இத்திரிபுர சுந்தரி கலியுக முடிவில் அவதரிக்கும் திருமாலின் கல்கி அவதாரம் இவளது அருள் வெளிப்பாடே.

## காளி

காலம் என்பதன் தெய்வ வடிவமே காளி, காலம் என்பதற்குக் கருமை நிறம் என்று பொருள். காளி கருமைநிறத் திருமேனியள். காலத்தில் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே இருக்கின்றது. ஒவ்வொன்றும் அழிகின்றது புதிய உருவம் உண்டாகிறது. அழிவுக்கு வடிவமாக உள்ளவள் காளி இவள் அழித்தால் தான் புதிய உருவங்கள் தோன்றும் இவள் உலகையே மகா மயானமாக்கி மயான உருத்திரனார் மீது நின்று ஆடுகின்றாள். கோரமும் இறைவன் செயலே என்பது தெளிந்து, அழகைப்போலவே கோரத்தையும் ஏற்கும் பொருட்டுப் பயங்கரத்தை உருவகித்துக்காட்டுகின்றாள் காளி தேவி கூரிய நகங்களும், கொடூர நகையும் தொங்கும் நாவும் படைத்த இவள் நிர்வாணமாகவும் இருப்பாள் சவங்களைப் பின்னிய ஆடை, முண்டமாலை, கபாலத்தலையணி ஆகிய வற்றை அணிந்தும் இருப்பாள். திருக்கரத்தில் கத்தியும், கத்தியால் வெட்டிய தலையும் தாங்கியிருப்பாள். மற்ற இரு கரங்களாலும் அபயமும் வரதமும் அருளித் திகழ்வாள்

உலகில் நிகழும் போர், கிளர்ச்சி இயற்கையில் தோன்றும் பூகம்பம், எரிமலை, வெள்ளம், சூறாவளி, தொற்றுநோய், முதலியன அனைத்தும் இக் காளிதேவியின் அருட்செயல்களே கால தத்துவமாகிய இவளே உடல் தோன்றும் பிராண சக்தியாக குண்டலினியாக உறைகின்றாள். அழகும், அன்புமே வடிவான கண்ணன் இக் காளியின் சக்தியைப் பெற்றவன். எனவே தான் விளையாட்டின் வாயிலாக நம்மைக் கவரும் அம்மாயாவி காளியின் தொழிலாகிய அழித்தல் தொழிலைச் செய்தருளினான். அவன் அரக்கர் பலரைக் கொன்றபின் கௌரவ பாண்டவர்களும், பிறகு தனது யது வம்சம் அழியுமாறு செய்தான். காளிக்கு கருப்பி என்று அமைவது போன்று கண்ணனுக்கு கறுப்பன் என்ற பெயரும் அமைந்துள்ளது.

**துர்க்கை**


பைரவி அச்சமூட்டுபவள் துர்க்கை அச்சம் போக்குபவள் ஆபத்துக் காலத்தில் தன்னிடத்தில் அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கி அருள்பவள் துர்க்கை. துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுக முடியாமல் செய்வது போன்று தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பங்கள் அணுகாவண்ணம் காப்பவள் துர்க்கை மன்னர்க்கும் வீரர்க்கும் வழிபடு தெய்வமாக உள்ளவள் இவள் நவராத்திரி விழாவில் கௌரி, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூவரும் சேர்ந்த ஓர் உருவமாகத் திகழ்பவள் இவள் அக்கினிகலை, சூரியகலை, சோமகலை என்ற முக்கூறுகளும் தன்னிடத்தே கொண்டவள் இவள்.

இவள் விஷ்ணுவின் சகோதரி. எனவே விஷ்ணுவுக்குரிய சங்கு, சக்கரம், வில், அம்பு, ஆகிய ஆயுதங்களைத் திருக்கரங்களில் தரித்து பசுமை நிறத் திருமேனியளாக சிங்கவாகனத்தின் மீது காட்சி தருகின்றாள். இவள் தலையில் முடியும், பிறையும் சூடித்திகழ்வாள். இவளுக்கு மானும் வாகனமாக இருத்தல் வேண்டும்.

துர்க்கையைப்பற்றி ஆகமங்கள் கூறுங்கால் நீலகண்டி, ஷேமங்கரி, அரசித்தி, உருத்திரசூசதுர்க்கை, வனதுர்க்கை, அக்கினி துர்க்கை, சயதுர்க்கை, விந்திய வாசதுர்க்கை இரிபுமாரிதுர்க்கை என்று ஒன்பது வகை துர்க்கைகளன்றி, நவதுர்க்கைகள் என்ற ஒரு தனிக்கூட்டமும் உண்டு என்று கூறலாம்.

"பொருள் ஒன்றே உள்ளது அதனை; அறிஞர்கள் பலவாகக் கூறுவர்" என்பது வேதமொழி. இம்முறையில் சக்தி என்பது ஒன்றேயாயினும், அதன்தொழிற்பாட்டால் பல வகையான பல வகைப்பொருளுடைய வடிவங்களாக வகுத்துள்ளனர். "சக்தி தான் பலவோ எனில் தான் ஒன்றே; அநேகமாக வைத்திடும் காரியத்தால்" என்றார் சிவஞான சித்தியார்.

------####------



## அர்ச்சனைத் தட்டு எதற்காக?

கோயிலுக்கு அர்ச்சனைத் தட்டு கொண்டு போகும் போது நேரே அர்ச்சகர் வாங்குகிறார்; கத்தியால் தேங்காயை உடைக்கிறார்; உடைத்ததையும் பழம் முதலியவைகளையும் சுவாமிக்கு நைவேத்தியம் செய்கிறார்; கர்ப்பூரத்தை ஏற்றிச் சுவாமிக்கு முன் பிடித்து நம்மைத் தரிசிக்கும்படி செய்கிறார்.

அருச்சகர் – ஞானகுரு; கத்தி திருவருட் சக்தி, கருப்பூரம் – ஞானம் மூர்த்தி – சிவம் தேங்காய் – ஆணவம் பழம் முதலிய மற்றவைகள் – கன்ம, மாயா மலங்கள் எனவே ஞானாசாரியருடைய ஞானோபதேசத்தினால் திருவருட் சத்தி தோன்றி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்து, அவைகளை அர்ப்பணம் செய்ய சிவஞானம் தோன்றும் அந்த ஞானப்பிரகாசத்தினாலேயே சிவத்தை தரிசிக்க வேண்டும் இவ்வாறு இவற்றின் பொருள்களைக் கூறுகின்றனர்.

பழங்கள்: தட்டில் கொண்டுபோன பழங்கள் நறுஞ்சுவைகள் உடையன. அவை பக்தனுடைய நல்வினைப் பயன்களைக் குறிப்பன அவ்வினைகளையும் இறைவனிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதாம்.

வெற்றிலை, பாக்கு, முகவாசம்: இவை ஆன்மாவைப் பொருந்திய இராசதம், தாமதம், சாத்விகம், என்னும் முக்குணங்களைக் குறிப்பன இக்குணங்களையும் விட வேண்டும் என்பதாம்.

(முகவாசம் – வாசனைப்பொருள்)

**பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**




# சக்தி

**மகேந்திரன் என். ஆர்**
திருகோணமலை.

"சக்தி என்பது மூன்று எழுத்துக்களாலான சொல்லாக இருந்தாலும் அதன் மகத்துவம் சிந்தையால் சொல்லால் செயலால் விளக்க முடியாத ஒன்று அந்தளவுக்கு அது எங்கும் ஏகப்பரவெளியாக வியாபித்து எல்லாமாக விளங்குகின்றது இதைவிட சக்தியைப் பற்றி விளக்கம் என்பதற்கே இடமிருக்காது.

இந்த கட்டுரைகூட சக்தியின் வல்லமையால் தான் எழுத முடிந்தது. என்பதிலிருந்து சக்தியின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

சைவத்திற்கு ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால் முதலும் முடிவும் காணமுடியாத இயங்கி இயங்கா நிலையினதாகிய என்றும் இருந்துகொண்டிருக்கின்ற அந்த மாபெரும் சக்திக்கு விழா எடுத்துப் போற்றுவதுதான்.

பிரபஞ்சமும் அதற்கு அப்பாலும் மனித சிந்தைக்குப் புலப்படாத என்னென்ன வெல்லாம் இருக்கின்றனவோ அவை அனைத்தும் சக்தி வயப்பட்டனவே. இன்றைய அறிவியல் புதுமைகள் எனப்படும் பழைமைகள் (புராண காலத்தில் வேறு வடிவில் இவை இருந்தன.) கூட இதற்குள் அடங்கும். இன்றைய விஞ்ஞானத்தால் இன்னும் கண்டுபிடிக்க முடியாத பல புதுமைகள் அன்றைய மெய்ஞ்ஞானத்தால் நிகழ்த்தப் பட்டுள்ளன. இவையெல்லாம் சக்தியின் சிறப்பைச் சொல்லாமலே விளக்குகின்றன.

அதனால்தான் மனிதனால் வெற்றி கொள்ள முடியாத, மனித மூளைக்குப் புலப்படாதவற்றை சக்தி என்று போற்றி வழிபடுகின்றோம்.

சிவபெருமான் ஒருவனே கடவுள் எனப்போற்றுகின்ற சைவ உலகம், சக்திக்கு முதலிடமளித்து கோணலிங்க பூமியாகிய திருக்கோணாசலத்தில் வீற்றிருந்து, பிரபஞ்சமெங்கும் தெய்வீக அருள்பாலித்துக் கொண்டிருப்ப வளாக, அன்னை ஸ்ரீ பத்திரகாளி திகழ்கின்றாள் என்றால், அவள் அருட் பார்வையின் சக்திதான் என்ன.

உலகிலுள்ள ஏழு சக்திபீடங்களில் முன்னணியில் திகழ்வது திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் என்றால் மிகையாகாது. வேண்டுவோர்க்கு வேண்டுவது மட்டுமல்லாது வேண்டாதவர்களைக்கூட தன் அருட் பார்வையால் காப்பாற்றி வருபவள் சக்தியாகிய இவ்வன்னை.

உலகின் நாலாபுறங்களிலிருந்தும் அடியார்களை சாதி, மத, இன, மொழி, நாடு என்ற வேறுபாடின்றி கவர்ந்திழுக்கின்றாள் என்றால் அவ்வன்னையின் அருளாட்சிதான் என்ன!

மாறும் உயிருள்ள உயிரற்ற பொருட்களை தன்னகத்தே கொண்ட இப்பிரபஞ்சத்தில் நிலையான ஆன்மீக சுகத்தை இம்மைக்கும் மறுமைக்கும் தருவபளென்றால் அப்பெருமைக்குரியவள் சக்தியே அதனால் தான் சக்தி வழிபாட்டிற்கு தனிச்சிறப்பைக் கொடுத்து மனித வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி, செல்வம், வீரம் என்கின்ற முச்சிறப்புக்களையும் கொடுத்து வழிபடுகின்றார்கள். விண்ணை, மண்ணை ஆய்வு செய்யும் மேற்கத்தைய விஞ்ஞானிகள் கூட அந்த மாபெரும் சக்தியைப் போற்றியே தங்கள் காரியங்களை நிகழ்த்துகின்றார்கள்.

உலகாயுத வாழ்க்கைக்கு செல்வம் இன்றி யமையாத ஒன்றாக இருந்த போதும் தனிச் செல்வத்தால் மட்டும் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியாது என்பதை தீராத வியாதிக்கும் மாற்ற முடியாத கவலைகளுக்கும் உட்பட்டவர்களுக்கும் என்றும் வாழ்வளிப்பது ஆன்மீகத்துக் குட்பட்ட சக்தி வழிபாடே என்றால் மிகையாகாது.

கடவுள் இல்லை என்று வெளியில் கூறுபவர்களில் எத்தனையோ பேர்கள் மனதுக்குள் அந்த மாபெரும் சக்தியை பயபக்தியுடன் போற்றுவதை யார் அறிவார்! அப்படித்தான் அந்த மாபெரும் சக்தியை மதிக்காதவர்கள் படும் துன்பதுயரங்களைத்தான் என்ன என்பதை நடைமுறை வாழ்க்கையில் காணலாம் இது அநுபவ உண்மை.

இந்த உலகமே ஒரு தூசு அப்படியான இந்த உலகைப் பார்த்து அதன் நிகழ்வுகளைப் பார்த்து அறிவியல் முன்னேற்றத்தைக் கண்டு பிரமிக்கும் இன்றைய மனிதன் சக்தியால் கண்களுக்குப் புலப்படாத பல உண்மைகள் இருந்தன. இருக்கின்றன, இன்னும் நிகழ இருக்கின்றன என்பதை அறிவானா? அந்த அபார ஞானத்தை அளிப்பது சக்தி வழிபாடு ஒன்று தான்.

உலகின் பெரும் ஞானிகளான புராண, இதிகாசங்களில் வருபவர்களும் பதினென் சித்தர்கள், அறுபத்தி மூவர்கள் கிரேக்க, யூத, அரபிய, சீன, ஞானிகள் கூட அந்த மாபெரும் சக்திக்கு தலைவணங்கி பல செயற்கரிய செயல்களைச் செய்தனர். செய்துகொண்டிருக் கின்றனர். என்றால் சக்தியின் உண்மை புரியும்.

அந்த மாபெரும் சக்தியை அம்பலக்கூத்தனுக்குள் காணலாம். சக்தியை பிரிக்காமல் கூத்தனுக்குள் கண்டு வழிபட்டனர். கல்வி, கேள்வி ஞானத்தில் சிறந்து விளங்கிய சான்றோர்கள்.



அந்த சக்திதான் வந்தாரை வாழவைக்கும் திருகோணமலையில் வீற்றிருக்கும் அன்னை காளிதேவி. அவளை வழிபட்டால் சகலவற்றிற்கும் சாந்தியும் சமாதானமும் கிட்டும் என்பது உறுதி.

மனிதன் எதனையும் தேடி அலையவேண்டியதில்லை இன்றைய மனிதன் ஆசை வயப்பட்டு ஆலாய்ப் பறக்கின்றான். அதனை சக்திக்குள் உணரலாம். இது முடிவு காணாச் சிந்தனையைத் தூண்டும் பெரும் தத்துவம், மந்திர உச்சாடனத்தின் மூலம் அந்த சக்தியை தன்வயப் படுத்தலாம். இதற்கு ஒருமைப்பட்ட மனநிலை வேண்டும் அதற்குத் தியானம் அவசியம்

திருக்கோணமலையில் சக்தி பேசுகிறது என்றால் அதனால் பலனடைபவர்கள் மக்களும், நாடுமே என்றால் மிகையாகாது. இது ஒன்றே சக்தி வழிபாட்டுக்கு கிடைத்த வெற்றி. எல்லாம் எங்கும் எதிலும் சக்தி. சக்திக்கு மேலானது எதுவுமே இல்லை. சக்தியைப் போற்றுவோம்.

ஔஔஔஔஔஔ
ஔஔஔ
ஔ

## இறைவனை கும்பத்தில் பூஜிப்பது ஏன்

*இறைவன் நின்று அருள்பாலிக்கும் இடங்களில் கும்பமும் ஒன்றாகும். பிரதிட்டை, மஹோற்ஸவம், உருத்திரம், ஸ்நபனம், மற்ற சுப காரியங்களிலும் , கும்பத்தில் சிவபெருமானை மந்திரம், கிரியை பாவனைகளினால் எழுந்தருளச் செய்து வழிபடலும் ஒரு வகை.*

*முதல் கலசம் ஒன்றைப் பிண்டம் (உடம்பு) ஆகக்கொண்டு பின்காட்டப்படுவதுபோற் செய்து பூசித்து வழிபடுபவர் அதன் விபரங்களை பின்வருமாறு காண்க*

*கும்ப வஸ்திரம் – தோல்*
*சிவந்த நிறம் ஏறப்பூசிய மண் – இரத்தம்*
*கும்பமாக்கப்பட்ட பொருள் (மண்) – மாமிசம்*
*கும்பத்தில் நிறைக்கப்பட்ட சலம் – மேதை (நிணம்)*
*கூர்ச்சம் (தருப்பை) – குடுமி (எலும்பு)*
*சுற்றப்பட்ட நூல் – எழுபத்திராயிரம் நரம்பு*

*உள்ளே இடப்பட்ட இரத்தினம், பொன், புட்பம், ஆதியன } – வீரியம்*
*செபிக்கப்பட்ட மந்திரம் – உயிர் (பிராணன்)*
*ஆசனம் – நெல், அரிசி, எள்ளு, பயறு, உழுந்து, துவரை, கோதுமை*
*தேங்காய் – தலை.*
*மாவிலை – மயிர் (சடை) எனவும் பொருள்படும்.*

**சிவஸ்ரீ மு. சண்முகரத்தினக் குருக்கள்**
ஆலடி விநாயகர் தேவஸ்தானம்




# கால தேவதை அருள்மிகு காளி தேவி

**க.இராசரெத்தினம்**
ஆரையம்பதி-1

இந்துக்கள் வழிபடும் தெய்வங்களுள் காளி தேவியும் ஒன்றாகும். பிறவாப் பெரியோன் எனவும் நுதல் விழிநாட்டத்திறைவன் எனவும் பழைய இலக்கியங்கள் விபரிக்கும் எம் இறைவன் சிவபெருமான். தனது நான்கு சக்திகளையும் கொண்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்து தொழில்களையும் செய்கிறார். உமை, காளி, காடுகிளாள், விஷ்ணு ஆகியவைகளே நான்கு சக்திகளாகும். இச் சக்திகளைத் தெய்வமாக வழிபடுவது இந்துக்களின் மரபாகும். மூலப் பரம்பரம் பொருளைத் தெய்வமாக வழிபடுவது மிகவும் தொன்மையான சக்திவழிபாடாகும்.

சக்தி வழிபாடு அநாதியானது. சக்தி வழிபாட்டை மதமாகக் கொண்டது "சாக்த" மதமாகும். நிர்க்குண பிரமத்தின் சகுண நிலை சக்தி. சாக்தக் கொள்கைகள் சிலவும் வழிபடு முறைகள் பலவும் சைவத்தில் நிரந்தர இடம் பெற்றுள்ளது. சக்தி வழிபாட்டில் காளி தேவி முதன்மை பெறுகிறாள். இவளை காளி தேவி எனவும் பத்திரகாளி எனவும், வடபத்திரகாளி எனவும், வீரமகா காளி எனவும், மகிஷமர்த்தனி எனவும், உதிரமகா காளி எனவும் பல்வேறு நாமங்களாலும் பல்வேறு கோலங் களில் வைத்து வழிபடுகிறார்கள். இவளுக்குக் கோயில் இல்லாத இடமில்லை என்றே சொல்லலாம். இலங்கையில் பல பாகங்களிலும் இவளுக்கு ஆகம விதிப்படி நித்திய நைமித்ய காமிக பூசைகளும் உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்புப் பகுதியில் இவளுக்கு வருடாந்த உற்சவமாக சடங்கு நடைபெற்று வருகின்றது. இதனைப் பூசாரிமார் அவர்களது முறையில் ஆராதித்து வருகிறார்கள்.

போருக்குப் புறப்படு முன் வீரர்கள் காளி தேவியை வழிபட்டும் அவளுக்கு பலி கொடுத்தும் போர்க்களம் செல்கின்ற வழக்கம் இருந்துள்ளது. மகா பாரதத்தில் இவ்வாறு பலி கொடுத்திருப்பதை காணலாம் வீரர்கள் தங்களது உறுப்புகளை பலியிட்டதை கலிங்கத்துப் பரணியில் காணலாம். நவ கண்டம் என்னும் நர பலியும் இவளுக்கு கொடுக்கப்பட்டிருப்பதை பாரதப் போர் விபரிக்கிறது. மிருக பலிகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றது.

காளி தேவி கரிய நிறமுடையவள் இவள் மகிஷன், இரத்தப்பீசன், சும்பன், நிசும்பன், பண்டாசுரன், முதலிய அசுரர்களை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி யவள். சிவனை மதியாது அவனுக்கெதிராக யாகம் இயற்றிய தக்கனது யாகத்தை சிதைத்து அவனது ஆணவத்தை அடக்கியவள்.

இரத்தபீசன், சும்பன், நிசும்பன் ஆகிய அசுரர்கள் அரிய பெரிய வரங்களைப் பெற்றவர்கள். இவர்களிடமிருந்து சொட்டும் இரத்தத்திலிருந்து புதிய அசுரர்கள் தோற்றுவார்கள். இவர்களை வெல்வது அரிது என்பதை பராசக்தி நன்கு அறிவாள். இவ் அசுரர்கள் மகிஷனுக்கு மிகவும் உதவியாக விளங்கினர். மகிஷனும் வரத்தால் பலம் உடையவன். ஆண்களினால் அழியாத வரத்தைப் பெற்றவன். மும்மூர்த்திகளும் ஒருமித்த போதும் இவனை வெல்வது இயலாத காரியமாக இருந்தது.

அசுரர்களின் துன்பங்களுக் காற்றாத தேவர்கள் பராசக்தியை நோக்கித் தவம் செய்தனர். பராசக்தி இவர்களது துயர் துடைக்க விரும்பி தனது உடலில் இருந்து ஒரு சக்தியை தோற்றுவித்தாள். இத் தோற்றம் கௌசிகை என்றும் கூறப்படுகிறது. இவள் கரிய நிறம் அஞ்சும் கோலத்தில் காணப்பட்டாள். இதனால் இவள் பத்திர காளி எனவும் அசுரர்களுக்கு அளவற்ற அச்சத்தைக் கொடுத்ததனால் காளரௌத்ரி எனவும் பெயர் பெற்றாள்.

மகிஷாசுரனை அழிக்கும் பொருட்டு மும்மூர்திகளினதும் சக்திகளை ஒருங்கே பெற்றுக் கொண்டாள். அவர்களின் சிறப்பான உரிய படைக் கலங்களையும் பெற்றுக் கொண்டாள். மும்மூர்த்திகளின் சக்திகளைப் பெற்றுக் கொண்டதனால் சண்டிகை என்னும் நாமத்தையும் பெற்றுக் கொண்டாள்.

போர் தொடங்கியது. போர் உக்கிர நிலையை அடைந்தது. இரத்தபீசன் ஆகியோரின் உடலில் இருந்து இரத்தம் சொட்டியது அவ்விரத்தம் கீழே வீழாது காளி தேவி உறிஞ்சிக் குடித்துவிட்டாள். இதனால் மேலும் அசுரர்கள் தோன்ற வழியில்லாது போயிற்று. இரத்தபீசன் முதலாக மகிஷாசுரன் ஆகியோரை அழித்தொழித்துத் தேவர்களின் துன்பத்தை துடைத்தாள்.

காளி தேவியின் தோற்றம் பலவாறாகக் கூறப்படுகிறது. கந்தக் கடவுள் தாருகாசுரனுடன் போர் புரியும் போது அசுரர்கள் சிந்திய இரத்தத்தில் இருந்து பல அசுரர்கள் தோன்றினர். அப் போது கந்தக் கடவுள் செய்வதறியாது தடுமாறினான். தன் தாய் உமையை நினைந்து வணங்கினான். உமாதேவியார் தனது அம்சம்

கொண்ட கரிய காளியை தேபற்றுவித்துக் போர்க்களம் அனுப்பினாள். கோபாவேசமாகக். கோலங் கொண்ட காளிதேவி அசுரர்களுடன் போரிட்டாள். அசுரர்களின் உடலில் இருந்து குருதி சிந்தும் முன்னே காளி தேவி முழுவதையும் குடித்துக் கொண்டாள். அசுரப்படை பெருக முடியவில்லை அசுரப்படைகள் அழிந்தொழிந்தன.

இலட்சக்கணக்கான புழு பூச்சிகளாக அசுரர்கள் தோன்றி துன்பம் விளைவித்த பொழுது மரக்காலாடி அவர்களை அழித்தொழித்தாள்.

சிலப்பதிகாரம் இவளை கொற்றவை என்றும் ஆடல் கண்டருளிய அணங்கு என்றும் கூறுகிறது.

காளி என்பது முப்பத்தாறு தத்துவங்களில் ஒன்றாகிய கால தத்துவத்தைச் சுட்டுவதாகும். காலம் என்னும் சொல்லிருந்தே காளி என்னும் பதம் வந்ததாக அறிஞர்கள் கருதுகின்றார்கள். கால தத்துவத்தின் சங்கார தோற்றமே காளியாகும். உலகத்துள்ளே தோன்றி நிலை பெற்றுள்ள சகலதையும் கால தத்துவமான காளியே முடிவுக்குக் கொண்டு வருகிறாள். இதனைச் சுப்பிரமணிய பாரதியார்:-

"காலமாம் வனத்தில் அண்டக் கோலமா மரத்தின் மீது
காளி சக்தி என்ற பெயர் கொண்டு - ரீங்
காரமிட்டு உலவும் ஒரு வண்டு" எனவும்

"இன்ப வடிவாகி நிற்பாள் துன்பமெல்லாம் அவள்
இழைப்பாள் அ·.தெல்லாம் அவள் புரியும் மாயை" எனவும்

"ஆதியாம் சிவனுமவன் சோதியாம் சக்தியுந்தான்
அங்கு மெங்கு முளவாகும் - ஒன்றே
ஆசினாள் உலகனைத்தும் சாகும் - அவை
அன்றி ஒரு பொருளுமில்லை அன்றி ஒன்றுமில்லை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் - இந்த
அறிவுதான் பரஞானமாகும்." எனவும் பாடித்தந்துள்ளார்.

தோன்றி நிலை பெற்ற எல்லாவற்றையும் கால தத்துவத்தின் வடிவாகிய காளியே முடிவுக்கு கொண்டு வருகிறாள்.

அழியா உண்மைகளாகிய சமய தத்துவங்களை விளக்கும் நோக்கங் கொண்டே தெய்வ வடிவங்கள் படைக்கப் படுகின்றன. அவற்றுள் இன்றைய விஞ்ஞான அறிஞர்களுக்கு புதிராகவுள்ள வடிவங்கள் பல உண்டு அவைகளில் ஒன்றே உதிரமகா காளியின் வடிவமாகும். இதனைச் சித்தரிக்கும் பாடல்களும் உண்டு.

சக்தி முகூர்த்தங்களில் சில சௌமிய வடிவத்திலும் மற்றவைகள் உக்கிர வடிவத்திலும் சித்தரிக்கப் படுகின்றன. அசுரர்களை அழிக்கும் பொருட்டு அடைந்த வடிவங்கள் உக்கிர வடிவத்தில் வடிவமைக்கப் படுகின்றன. ஆணவம், கன்மம், மாயை ஆகிய அசுரர்களை வதஞ் செய்யும் பொழுது உக்கிர வடிவம் கொள்வது இயல்பாகும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளின் வல்லமைகளைப் பெற்று மகிஷாசுரனை வதஞ் செய்யும் காலை காளி தேவியை முப்பத்திரண்டு கரங்களுடன் வடிவமைத்துள்ளார்கள் முன்னோர்கள். இது மிகவும் அரிதான வடிவமாகும். அழிவு சக்தியை விளக்குவதற்குக் கோர வடிவமே பொருத்தமானதென முன்னோர் கண்டுள்ளனர். இதனாலேயே கால சக்தியாகிய காளி தேவியைக் குரூரவடிவில் அமைத்துள்ளனர்.

உலகமே இறைவனின் ஆடை. அந்த உலகம் அழிக்கப்பட்ட நிலையில் அந்த ஆடையும் அழிக்கப்பட்டு விடுகிறது. இதனை உணர்த்தவே காளி நிர்வாண கோலத்தில் வடிவமைக்கப் படுகிறாள். இந்நிலையில் அவள் திகம்பரி, திக்குகளே அவளின் ஆடையாக அமைகிறது.

தாமதகுண ரூபிணியாகிய காளி எல்லாவற்றையும் விழுங்கிய பாழினை உணர்த்தவும் காலம், இடம், காரணம் ஆகிய எல்லாவற்றையும் அடையாளம் இன்றித் துடைத்தவள் என்பதைப் பலப்படுத்தவும் கரிய நிறத்தினளாகக் காட்டுகிறார் சித்திரக்காரர்.

அவளின் செயலாற்றல்களை அவளது நான்கு திருக்கரங்களும் விளக்குகின்றன. இடையணியாகிய கைகள் வெளியுலகச் செயல்பாடுகள் சகலதும் முடிவுற்றன என்பதைக் குறிக்கின்றன.

அவளின் தடையற்ற சுதந்திரம் விரிந்து பரந்து வீசும் கூந்தல் விளக்குகிறது.

கழுத்தில் மாலையாக ஐம்பது தலைகளை அணிந்திருக்கிறாள். இவை நாத தத்துவமாகிய ஐம்பது அக்கரங்களை உணர்த்துகின்றன. இப்பிரபஞ்சம் அவற்றிலிருந்தே தோன்றுகின்றது. படைத்தல் தொழில் முற்றாக நின்றுவிட்ட படியால் அவற்றை கழுத்தணியாக அணிந்து கொண்டாள்.

சங்கார காரணனே உலகுக்கு முதல்வனும் படைத்துக் காப்போனுமாவான். அஞ்சத்தக்கது யாதுமில்லை என்பதை அபயகரம் சுட்டுகிறது. வேண்டியதைப் பெறுக என வரதகரம் சுட்டுகிறது.

காளிதேவி ஊழி முதல்வியாய் சகலதையும் சங்காரம் செய்தபின் வெற்றிக் களிப்பில் வீறு கொண்டு ஆடுகிறாள். அண்டம் நடுங்குகிறது. எல்லாத் தெய்வங்களும் இக்கூத்தை நிறுத்தும்படி கேட்டும் அது பலிக்கவில்லை. சிவனே காளியை ஆட்டத்தை நிறும'த்தும்படிக் கேட்டும் அவள் செவி சாய்க்கவில்லை தொடர்ந்து ஆடுகிறாள். பயங்கரமான நிலை அப்போது சிவன் ஒரு தந்திரம் செய்தார். அழிவுற்ற பிணங்களுடன் தானுமொரு பிணமாக கீழே சரிந்து கிடக்கிறார். அந்நிலையில் சிவனுக்கு தனது வெற்றியின் அதிர்ச்சி தெரியுமாறு சிவன்மீது தனது கால் பதியும்

வண்ணம் ஆடுகிறாள். கால் தனது கணவனின் உடலில் பதிகிறது. உடனே தனது தவறை உணருகிறாள். என்ன செய்தேன் எனஏங்கி நாக்கினை வெளியே தொங்கப் போடுகிறாள். ஆட்டமும் நின்று விடுகிறது.

இதன் பொருள்:- மூலப்பரம் பொருளாகிய சிவம் சவம் போலக் கிடக்கிறான். காளி சக்தியின் வடிவமானாலும் சிவமின்றி இயங்கவோ நிலை பெறவோ முடியாது என்பதை சிவனின் மார்பில் கால்பதிந்து நிற்கும் நிலை உணர்த்தும் தத்துவமாகும். இவற்றைக் கொண்டு காளிசங்காரசக்தி என்னும் முடிவுக்கு வர இயலாது. சங்கார காரணனே உலகைத் தோற்றுவிக்கும் முதல்வன் எனக் கூறுவது சிவஞான போதம். காளி ஊழி முதல்வனாம் சிவனைக் கொண்டு உலகைப் படைக்கும் ஆதிசக்தியாக விளங்குகிறாள்.

இவ் ஊழிக் கூத்தைத் திருமூலர்:-

"காளி போடாடிக் கனகா சலத்தோடாடி
கூழி போடாடிக் குவலயத் தேயாடி" எனக் கூறுவதை நாம் காணலாம்.

பாரதியார்:-

"வெடிபடும் அண்டத்து இடிபல தாளம் போட
வெறும் வெளியில் இரத்தக் களியொடு பூதம்
பாட பாட்டின் அடிபடு பொருளின் அடிபடும்
ஒலியின் கூடக் களித்து ஆடும்காளி சாமுண்டீ!
கங்காளி! அன்னை! அன்னை! ஆடுங்
கூத்தை நாடச் செய்தாய் என்னை

ஐந்து ஊறுபேதம் சிந்திப் போய் ஒன்றாகப் -
பின்னர் அதுவும் சக்தியின் கதியில் மூழ்கிப்
போக - அங்கே முந்துறும் ஒளியில் சிந்தை
தழுவும் வேகத் - தோடே முடியா நடனம் புரிவாய்
அடுதீ சொரிவாய் அன்னை! அன்னை! ஆடுங்
கூத்தை நாடச் செய்தாய் என்னை

காலத்தொடு நிர்மூலம் படுமூவுலகம் - அங்கே
கடவுள் மோனத் தொனியே தனியாயிலங்குஞ்
- சிவன் கோலங் கொண்டுன் கனல் செய் சினமும்
விலகும் - கையைக் கொஞ்சித் தொடுவாய்
ஆனந்தக் கூத்திடுவாய் அன்னை! அன்னை!
ஆடுங்கூத்தை நாடச் செய்தாய் என்னை"

என ஊழிக் கூத்தின் அன்னை காளியருளால் தாம் நாடிக் கண்ட அற்புதத்தை அப்படியே சொற் கூத்தாடிக் காட்டுகிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

இவ்வூழிக் கூத்தைச் சித்தரிக்கும் வகையில் தத்துவமுணர்த்த படவரைஞர்கள் படம் வரைந்துள்ளதை நாம் காண்கிறோம். இப் படத்தில் காளிதேவியின் வடிவம் நிர்வாண கோலத்தில் கரியநிறம் தீட்டப்பட்டவளாக வரைந்துள்ளனர் இடையைச் சுற்றிய மனித கரங்களையும் கொண்ட இடையணியும் கழுத்தில் மாலையாகவுள்ள ஐம்பது மனிதத் தலைகளும், வலது கையில் இரத்தம் சொரியும் வெட்டுண்ட தலையும், இடது கையில் இரத்தம் சொட்டும் வாளும், விரிந்த கூந்தலும் மூன்று கண்களும் நான்கு கரங்களும் நீண்ட நாவும் உடையதாகவும்; கீழிருக்கும் கரங்களுள் ஒன்று அபயகரமாகவும் மற்றது வரத கரமாகவும் முகம் சிவந்திருக்கவும் இக் கோர வடிவத்திற்கேற்பப் பின் புறமாக சுடலை அமைந்திருப்பதாகவும் கீழே சவமாகக் கிடக்கும் தனது கணவனாகிய சிவத்தின் மேல் கால் பதிந்த வண்ணமும் காளியை உதிர மகாகாளியாகப் படவரைஞர் சித்தரித் திருப்பது ஒரு சிறந்த தத்துவமுணர்த்தும் செயலாகும்.

இடையைச் சுற்றிய கரங்கள் வெளித்தொடர்பு அற்ற நிலையைக் காட்டுகிறது. சுடலை ஊழிக் காலத்தைச் சுட்டுகிறது.

போர்க் களத்தில் அசுரர்களின் இரத்தத்தை அவள் நிவேதனமாகக் குடிக்கவில்லை. அசுரர்களை அழிப்பதற்கும் மேலும் அசுரர்கள் தோன்றுவதைத் தடுப்பதற்குமாகும். இதனைச் சரியாக விளங்கிக் கொள்ளாத நிலையில் சிலர் இவள் இரத்த வாஞ்சை உடையவளெனவும், இரத்தம் குடிப்பவளெனவும் கருதி மிருக நரபலியிட்டு வந்துள்ளனர். தற்காலம் இது நிறுத்தப்பெற்று பூசனிக்காய் பலியும் தீமிதிப்பும் நடத்தி வருகிறார்கள். இது வரவேற்கத் தக்க நல்ல காரியமாகும்.

காளி தேவியை உபாசித்து அருள் பெற்றவர்கள் பலருண்டு. கவி காளிதாசர், இராமக் கிருஷ்ண பரமஹம்சர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

குரலிசை வண்டுழுத குழற்கோதை சரியக்
கொடிய தொழில் வாளவுணர் குலமுதல்வரிரியே
உரகமணிக் கச்சசைய பொற்சிலம்பும் கழலும்
ஒலிக்க மரக்காலாடும் ஒண்டொடியைப் பணிவாம்
இரவிகுணதிசை யெழலும் இருளகலுமா போல்
இதயவிருள் அகலவரும் எழில் முகத்துநங்கை
பரவியுளங் குளிர்க வென மணிமொழியைப்
பகர்ந்தான் பாரெங்குமிவள் பெருமை பரந்திடுக
வெனவே.

- யாழ் நூல்:- சுவாமி விபுலானந்த அடிகளார்.

# கும்பாபிஷேக மகிமை

வேத சிவாகமங்களிலே ஆலய வழிபாட்டைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றான். ஆனால் வேத மந்திரங்களினாலே நிறுவப்பட்ட அந்தக் கோயில் மூலஸ்தானத்திலே விஷேசமாக இருக்கின்றான்.

பாலில் நெய் மறைந்திருப்பதைப்போல எல்லா இடங்களிலும் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணை திரண்டு வருவதைப்போல ஞானிகள் உள்ளத்திலும் திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான்.

மற்ற இடங்களில் இறைவனை நினைத்துத் தியானிப்பதனாலும், துதிப்பதனாலும், வழிபடுவதனாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து எரிந்து கருகி நீறாகி விடுகின்றன.

கொடிய வெய்யிலிலே பஞ்சை வைத்தால் அப்பஞ்சு வெதும்புமே அன்றி எரிந்து போகாது. சூரியகாந்தக் கண்ணாடியை வெய்யிலில் வைத்து அதன் கீழே குவிந்து வரும் சூடான கதிரில் பஞ்சை வைத்தால் அது கருகிச் சாம்பலாகி விடுகிறது. என்ன காரணம்? நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல் சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வரும் வெய்யிலுக்கு உண்டு.

பரந்து விரிந்திருக்கின்ற கதிரவனுடைய கதிர்களின் வெப்பத்தை ஒன்றுபடுத்தி தன் கீழே உள்ள இடத்திற்கு சூரிய காந்தக் கண்ணாடி பாய்ச்சுகின்றது. அப்படி எல்லா இடங்களிலும் பரந்து விரிந்து இருக்கின்ற இறைவனுடைய சக்தியை ஈர்த்துச் சேர்த்து அனுப்புகிறது. மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தியும் அவ்வாறே. ஆகவே நாயன்மார்களும், ஆழ்வாராதியரும், ஞானிகளும் இந்த உலகம் உய்ய அமைத்தவை ஆலயங்கள்.

அந்த ஆலயங்களில் கருவறையில் உள்ள சுவாமி மந்திரவடிவமாக இருந்து ஆன்மாக்களுடைய மலமாயா கன்மங்களை நீறாக்கி அருள்புரிவார். மற்றைய இடங்களில் இறைவனை வழிபடுவது வெய்யிலிலே பஞ்சை வைப்பது போலாகும் அந்த ஆலயத்தின் கருவறையிலிருந்து வணங்குவது சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே பஞ்சை வைப்பது போலாகும்.

ஆகையால் மற்ற எல்லா இடங்களிலும் வழிபட்டாலும் திருக்கோயிலில் இறைவனை வழிபாடு செய்வது இன்றியமையாதது ஆகும்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே"
என்பது சிவஞான போதம்.

நமது திருக்கோயில்களிலுள்ள திரு உருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர்கள், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பட்டு துதிக்கப்பட்ட காரணத்தால் நாம் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதே மிக உயர்ந்ததாகும்.

மந்திரத்திற்கு அதிக சக்தி உண்டு. அதனாற் தான் பெரியவர்கள் வேத மந்திரத்தால் இறைவனை வழிபட்டார்கள்.

"வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாக போதத்தால் வழிபட்டார் புள்ளிருக்கும் வேழூரே" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

இறைவன் ஜோதி வடிவானவன். அந்த ஜோதியின் சக்தி கல்லிலே மிகுதியாக இருக்கின்றது. ஒரு கல்லை வேறு ஒரு கல்லால் அடித்தால் ஒளி வரும். ஆகவே கல்லினாலே திருவுருவத்தை அமைத்து தானிய வாசம், ஜலவாசம், செய்து அந்த மகா தேவனுடைய மந்திரத்தை எழுதிய மந்திர எந்திரத்தை 48 நாள் வழிபாடு செய்து அதை அந்த மூர்த்திக்கு கீழே வைப்பார்கள். அதன் மந்திர சக்திமேலே வரும்.

அந்த வேத சிவாகமங்களிலே வல்லவ ராயிருக்கின்ற அந்தணர்கள் காலங்கள் தோறும் யோக அக்கினியிலே ஜோதியை விளையுமாறு செய்வார்கள்.

ஆண்டவன் ஜோதிவடிவமானவர்.
"ஜோதியே சுடரே சுடர் ஒளி விளக்கே" - மணிவாசகர்
"மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" - அப்பர்
"திருவையாறு அகலாத செம்பொற் சோதி" - அப்பர்
"அருட்ஜோதி தெய்வம் என்னை ஆண்டு கொண்ட தெய்வம்"
- வள்ளலார்

அந்த ஜோதியை யாக அக்கினியிலே விளையுமாறு செய்கிறார்கள். அப்படி விளைந்த ஜோதியை கும்பத்திலே சேர்ப்பார்கள் காலந்தோறும் அப்படி ஆறு காலம், எட்டுக்காலம், ஒன்பது காலம் என்று யாக அக்கினியிலே வளர்த்து விளைந்த ஜோதியை கும்பத்திலே சேர்த்து அந்த கும்பத்தில் இருந்து பிம்பத்திற்கு கொண்டு போகிறது கும்பாபிஷேகம். கும்பாபிஷேகத்திற்கு முன் கல்லு கும்பாபிஷேகம் ஆனவுடன் கடவுள் ஆகின்றார்.

காகிதத்தை பணமாக மாற்றுகின்றனர் அரசாங்கத்தினர் மண்ணைக் கடமாக மாற்றுகிறார்கள் (இரும்மைமைக்காக மாற்றுகிறார்கள்.)

கும்பாபிஷேகம் வாழ் நாளிலே கிடைப்பதற்கு அருமையான ஒன்று. கும்பாபிஷேகத்தை சேவித்தவர் களுக்கு திருவருள் நிரம்ப துணை செய்யும்.

பன்னிரெண்டாண்டுகள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை மெய்யன்போடு வழிபட்டவர்களுக்கு என்னென்ன அருள் வருமோ அத்தனை அருளும் கும்பாபிஷேகம் சேவித்த ஒரு விநாடியிலே வரும்.

கும்பாபிஷேகம் சேவிப்பது மிக மிக இன்றியமை யாதது. எல்லோருக்கும் அந்த வாய்ப்பு கிடைக்காது ஆலயத்தை புனிதமுறச் செய்ய ஆண்டுக்கொரு முறை உற்ஸவங்களும் மூன்றாண்டுக்கொருமுறை பவித்ரோற் ஸவங்களும், பன்னிரெண்டாண்டுக்கொருமுறை மகா கும்பாபிஷேகமும் நிகழ்த்தப்பெறுகின்றன.

இன்று நிகழ்ந்து வரும் ஆலய கும்பாபிஷேக த்திற்கும் இராஜகோபுரத்திற்கும் ஆதி காரணம் வேதாகம மாமணி சோ. இரவிச்சந்திரக் குருக்கள் என்பதை உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் இந்த உலகிற்கு என்றும் உணர்த்திக் கொண்டே இருக்கும்.

ஆதீனகர்த்தா என்பவர் சாதாரணமாக ஆன்மீக வழிகளிலும் ஆலய விடயங்களிலும் மக்களுக்கு வழி காட்டுபவராக இருப்பார். ஆனால் சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் வித்தியாசமான ஆதீன கர்த்தாவாக விளங்குகின்றார். ஆலய நிர்வாக அமைப்பில் அவர் செய்த அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு என்றும் போற்றுதற்குரியவை.

மானிட ஜெனனம் பெற்ற நாம் அனைவரும் பெறற்கரிய முக்தியின்பம் பெற அவாவுள்ளவர்களாக இருக்கின்றோம். அதனை நாம் திரிகரன சுத்தியாய் இறைவனை மெய்யன்புடன் வழிபட்டுவரின் அடையலாம். இந்த வழிபடுதலே இறைவனோடு ஒத்து வாழ்தல், இதற்கு முதற் படி சகோதரர்களாகிய நாம் அன்பு மேலிட்டு ஒத்து வாழ்தல். இவ்வித அன்பு முதிர்ச்சி ஈசுவரனிடம் செலுத்துதலே பக்தி எனப்படும். இந்த பக்தியே ஈசுவரனை அடைந்து அவனது திருவருளுக்கு பாத்திரமாகும் மார்க்கம் அதனைப் பற்றியே பகவான் (பக்தி வலையிற் பாடுவோன்) என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வித பக்தியே முத்திக்கு வித்தாகின்றது.

கும்பாபிஷக நன்னாளில் நாம் அடையும் நன்மைகள் அனைத்துக்கும் கர்த்தாவாக இருந்து விளங்குகின்ற ரவிச்சந்திர ஐயாவின் புகழ் திருகோணமலை உள்ளவரை வாழும்

"உடம்பினைப் பெற்ற பயனாவது எல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு"

பிருந்தாவனம்
275, மத்திய வீதி,
திருகோணமலை.

நாம் பூசைக்கும் மந்திர உச்சாடனத்துக்கும் பயன்படுத்தும் சில பொருட்களின் மின்சாரம் பாயும் சக்தி (ELECTRICAL CONDUCTIVITY) இங்கே சோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

| பொருட்கள் | இருமின்முனைகளுக்கு (Electrodes) இடையில் உள்ள தூரம் | மின்சாரம் பாயும் திறன் |
|---|---|---|
| | | .012 |
| 01. வெற்றிலை | 3 செ.மீ | .400 |
| 02. வேப்பிலை | 3 செ.மீ | .333 |
| 03. மாவிலை | 3 செ.மீ | .200 |
| 04. துளசி | 3 செ.மீ | .002 |
| 05. சாதாரண இலைப்புல் | 3 செ.மீ | .1475 |
| 07. எலுமிச்சம்பழம் | 2 செ.மீ | .300 |
| 08. மாம்பழம் | 2 செ.மீ | .050 |
| 09. வாழைப்பழம் | 2 செ.மீ | |

இதில் இருந்து வேப்பிலைக்கு உள்ள மின்சாரம் பாயும் திறன் மற்றவற்றை விட மிக அதிகமாக இருப்பதைக் காணலாம். நமது கோயில்களில் வேப்பிலை உபயோகிப்பதன் காரணம் இது தான் அதே போல பண்டிகைக் காலங்களில் இவற்றை பயன்படுத்துவதற்கும் இதுதான் காரணம் வாழைப்பழத்தை காட்டிலும் எலுமிச்சம் பழத்திற்கு இத்திறன் மூன்று மடங்கு அதிகமாக இருப்பதையும் பட்டியலில் காணலாம்.

நன்றி
வெளியீடான (Hinduism - A Scientific Approach)
என்ற ஏட்டிலிருந்து




# திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

# திருப்பள்ளியெழுச்சி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆக்கம்: ஞானசிரோமணி
சைவப்புலவர் - பண்டிதர்
**இ. வடிவேல்**
திருக்கோணமலை
09 - 12 - 2001

**01.** ஆதவன் இந்திரத் திசையி லெழுந்தனன்
ஆலையெறி பரவையில் அவிரொளி படர்ந்தது
வேதியர் மாதவர் விண்ணவ ரோதிடும்
வேதமுழக்கொலி விண்ணி லெழுந்தது
ஆதி பராபரை ஆன மெய்ப் பொருளே
அன்னையே யுன்னருட் கணமல ரரும்பி
தீதகலத் திருக்கோணையம் பதிவாழ்
தேவிபத்ர காளியே பள்ளி எழுந்தருளே.

**02.** விண்ணகத் தாரகைகள் விலகி மறைந்தன
விடிவெள்ளி யெழுந்து குடதிசை போயது
எண்ணருங் கதிரொளி எங்கணும் பரவி
இரவியும் எழுந்தனன் இருளு மகன்றது
மண்ணகத்தே மக்கள் மலர்கொடு வந்து
மாமறை ஓதியே மகிழ்ந்து நிற்கின்றார்
கண்ணகத்தே அருள் கனிந்திடுங் காளியே
கண்மலர்ந்தே பள்ளி எழுந்தருளாயே

**03.** வந்தனை செய்திட அடியவர் வந்தனர்
வையக மெங்கணும் புள்ளின மார்த்தன
சுந்தர வனிதையர் தூமலர் தூவியே
சிந்தை மகிழ்ந்துனைச் சேவித்து நின்றனர்
இந்திரன் முதலாம் எண்டிசைத் தேவரும்
வந்துனை வாழ்த்தி வணங்கி நிற்கின்றார்
ஐந்தொழில் புரிந்திட அருள்புரி அன்னையே
ஆதிபத்ர காளியே பள்ளி எழுந்தருளே.

**04.** அரியயன் முதலாம் ஐவரும் உந்தன்
அடியினை பரவியே அருள்பெற நின்றார்
திரிபுர சுந்தர ஆகிய தேவியே
திருவருள் தந்தெமைக் காத்திடுந் தாயே
பரிபுரை நாயகி பலபல வன்னத்தி
பக்தருக் கருள்புரி பத்திர காளியே
திருவிழிகள் மலர்ந்து திசையெலாம் மகிழ
அருள் புரிவாய் பள்ளி எழுந்தருளாயே.

**05.** பராசக்தியாய் நின்று பாரெலாந் தாங்கி
உராசக்தியாய் நின்று ஊழிகள் தோறும்
தராசக்தியாய் உயிர்த் தத்துவமு மாகிப்
பராசக்தியாய் அருள் புரிந்திடும் அம்மையே
அராவொடு மதியமும் அவிர்சடை சூடிய
பிரானொரு பாதியாய் நின்ற பிராட்டியே
தராதலத் துயர்திருக் கோணையம் பதிவாழ்
பத்திரகாளித் தாயே பள்ளி எழுந்தருளே.

**06.** கொம்பனை யாளே குவிமுலை மங்கையே
அம்புவி போற்றிடும் அம்பிகைத் தாயே
வம்பவிழ் கோதைகள் வளர்திரு முடியும்
செம்பவ ளம்போல் திகழ்திரு மேனியும்
அம்புய மனையநின் அடியினை யழகும்
அங்கையிற் தாங்கிய அனிமணிச் சூலமும்
பங்கய வதனமுங் கண்டுனை வணங்க
பத்திரகாளித் தாயே பள்ளி எழுந்தருளாயே

**07.** ஆதார சக்தியென அகிலமெலாம் புரக்கும்
அபிராம வல்லியே அங்கயற் கண்ணியே
பாதார விந்தமதைப் பணிந்திடப் பார்மகளும்
வேதாவும் பாரதியும் மாதவனும் திருமகளும்
கேதார கௌரியொடு கிளர்ஞான போதகியாம்
மாதாவெனும் துர்க்கா மங்கலையும் வந்தார்
நீதானெந் துணையம்மா நிமலையே திருமலைவாழ்
பத்ரகாளித் தாயே பள்ளி எழுந்தருளே.

**08.** பூதங்களைந்தையும் புனர்ப்பவள நீயே
புவனங்களனைத்தையும் புரப்பவள நீயே
வேதங்க ளோதிடும் விமலையும் நீயே
விளங்குமா மந்திர சொரூபியும் நீயே
நாதங்களும் நாதகீதமும் நீயே
நாதாந்த மாகிய நாயகி நீயே
கோதிவாத திருக் கோணையம் பதியமர்
ஆதிபத்ர காளியே பள்ளி எழுந்தருளே.

**09.** ஓங்காரத் துள்ளே உதிப்பவள் நீயே
ஓங்காரப் பொருளை உரைப்பவள் நீயே
இரீங்காரத் துள்ளே இனிப்பவள் நீயே
இரீங்கார பீஜமாய் இருப்பவள் நீயே
ஆங்காரி யாகியே ஐந்தொழில் புரிந்திட
அதிகார சக்தியை அருள்பவள் நீயே
பாங்காக உன்னடியைப் பணிந்திட வந்தோம்
பத்ரகாளித் தாயே பள்ளி எழுந்தருளே

**10.** பனிமதி மணியொடு பைந்தழை முடியிடை
அணிபெறச் சூடிய ஆதிபரா பரனைக்
கனியொடு சுவையெனக் கலந்திடும் தேவியே
கருணையோ டுயிர்களைக் காத்திடுந் தாயே
அணிபெறு கோணையம் பதியில் அமர்ந்த
அன்னையே அருள்மொழி அமிர்த வல்லியே
பனிமலர் தூவியுன் பதமலர் தொழுதோம்
பத்ரகாளித் தாயே பள்ளி எழுந்தருளே




## திருக்கோணமலை பத்திரகாளி அம்மன்

# திருவூஞ்சல்

ஆக்கியோன் புலவர்: **திரு. வே. அகிலேசபிள்ளை**
திருக்கோணமலை.

### காப்பு

01. சீருலவு தென்கையிலை மலைக்கோர் பாலில்
தேவருலகெனத் தகைமை சேர்ந்திலங்கும்
பேரிலவு திரிகோணை நகரந் தன்னைப்
பிரியமுடன் காத்தருளும் பெருமை வாய்ந்த
ஏருலவு பத்திரகாளியின் மீது ஊஞ்சல்
இசைபாட அடியவர்கள் இடரை நீக்கிக்
காருலவும் ஆலடியி லினிது வாழும்
கணபதியி னுபயபதங் காப்பதாமே.

### திருவூஞ்சல்

02. சுந்தரஞ்சேர் மரகதத்தாற் தூண்கள் நாட்டித்
துலங்கு புட்பராகமதால் விட்டம் பூட்டி
அந்தமுறு நித்திலச் சங்கிலிகள் மாட்டி
அவிர் கிரண மாணிக்கப்பலகைமீதே
இந்திரையுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட
இருமருங்கு மரமகளிர் காளாசி நீட்ட
பந்தமிகு திரிகோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

03. காவலர்கள் கரங்கூப்பி வணங்கிப் போற்றக்
கன்னியர்கள் ஆலாத்தி கைக்கொண்டேந்தத்
தேவர்களன் போடு புட்டமாரி பெய்யத்
திசைமுகனு மிந்திரனும் சேவை செய்யக்
காவல் செயு பூதகணாதிபர்கள் யாருங்
காளிபராக் கெனக்கூறிக் களிப்புற் றாடப்
பாவர்கள் புகழ்கோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்

04. எந்திசையும் புணுகுசந்த வாசம் வீசக்
குரைகடல்போல் வாத்தியங்களிரைந்து பேச
அத்திரநேர் விழிமடவார் நடனமாட
அன்பினொடு நாரதர் யாழ் இசைகள் பாட
மெத்துமெழி லரமகளிர் கவரிபோட
மேதினி மானுடர் மகிழ்ச்சி மீறியாட
பத்திமிகு மடியர்செறி கோணை வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்

05. வாலை திரிபுரை புவனை மாதங்கி நீலி
வாமி யபிராமி பகவதியென்றே தான்
சீலமிகு மடியர்துதி செய்து போற்றச்
சிந்தை மகிழ்ந் தந்தணர்கள் ஆசி சாற்றக்
கோலமுறு பரிதிமதி கவிகை யேந்தக்
கூசியட்ட பாலகர்கள் கொடிகைக் கொள்ளப்
பாலவிழி யரனுறையுங் கோணை வாழும்
பத்திரகாளித் தாயே ஆடீரூஞ்சல

06. தண்ணருள் செய் முகமாடக் கீரீடமாடச்
சடையாட விடையாடத் தாரையாட
கிண்ணமுலை யசைந்தாடப் பதக்கமாடக்
கிரணமுத்து வடமாடக் கிளியுமாட
வண்ணமிகு கரமாட வளைகளாட
மார்பிலிருந் தொளிர்செய் மலர்மாலையாட
மண்ணவர்க ணிதம் பரவும் கோணைவாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்

07. தங்கரத்னக கொப்படை முருகு மாடத்
தளதளெனப் பிரபைவிடும் கம்மலாடத்
துலங்கு வைடூரியப் பொற் சிமிக்கியாடச்
சொல்லரு மூக்குத்தி முத்துச் சுடர்விட்டாட
சங்கைமிகு மிடையினிற் பாவாடையாட
தார்குழலில் வண்டினங்கள் சப்தித்தாடப்
பங்கய வாவிகள் செறியுங் கோணை வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்

08. அரவணியுஞ் சிவனொடெதிர்த் தாடும்பாத
மசைந்தாடத் தங்கவொட்டி யாணமாட
கரமுறு வாளுடுக்கை கட்கங்கபாலமாடக்
கனகவொளி பரப்பு திரிசூல மாடச்
சரணவிரன் மோதிரமுஞ் சிலம்புமாடத்
தண்டை கொலிசொடு பாதசரமுமாடப்
பரவைசெறி திரிகோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்.

09. அன்னபரி பூரணியே யாடீரூஞ்சல்
ஆரணியே காரணியே யாடீரூஞ்சல்
பொன்னின் மலர்த் தாளுடையாய் ஆடீரூஞ்சல்
புவனமெலா மீன்றவளே யாடீரூஞ்சல்
மன்னுமட மயிலொயிலா யாடீரூஞ்சல்
மயிடனை முன் வென்றவனே யாடீரூஞ்சல்
பன்னரிய திருகோணைப் பதியில் வாழும்
பத்திரகாளித் தாயே யாடீரூஞ்சல்

10. சீர்வாழி செந்நெல்விளை பழனம் வாழி
தேசமெங்குஞ் சிவமயம் சிறந்து வாழி
ஏர்வாழி யானினங்கள் மல்கி வாழி
எழின்முடி மன்னவர் வாழி இமையோர் வாழி
பார்வாழி திரிகோணை நகரம் வாழி
பகரரிய விபூதி பஞ்சாட்சரமும் வாழி
கார்வாழி மறைவாழி தேவி பத்ர
காளிபத மலரிணைகள் வாழி வாழி

## எச்சரிக்கை

01. திருவார் சேடன் முடியசையச் செய்த வாயு வாலே
மருவார் கோணை மலைமேவிய வரதீ யெச்சரிக்கை

02. கண்ணன் கண்ணை யிடந்தங்கருள் கண்ட சிவனாரோ
மண்ணில் நின்று வாது செய்த வரதீ யெச்சரிக்கை

03. அரனின் பராசக்தி யாதி சக்தியிச்சா சக்தி
வரமேதகு ஞானக் கிரியா வரதீ யெச்சரிக்கை

04. பூ மான் முதலறியாப் பரம் பொருளா யருளொளியாய
வாம பாகத் தமர்ந்தே யருள் வரதீ யெச்சரிக்கை

05. அனமேல் வரு மயனும் மாலும் அறியமுடி யாதோன்
குணமாமணி பங்காயுறை வரதீ யெச்சரிக்கை

06. மாயான் வலச் சக்தியாக மாதங் கிடமாக
மாயஞ் செய்த சிவனார் மகிழ் வரதீ யெச்சரிக்கை

07. துங்கமிகு மண்டகோடி துதிக்க யாரும் மதிக்க
சிங்கத்தினி லேறி வரும தேவீ யெச்சரிக்கை

08. அரசமரத் தருகே கோயில் அமர்ந்து தொழுமடியார்
கரிசங்கறுத் தருளும் பத்திரகாளீ யெச்சரிக்கை

09. திருஞானசம்பந்தனருட் தேவாரம புனைந்த
கோணைநாதன் மகிழும் காளி வரதீ யெச்சரிக்கை

10. பண்ணார் மொழி மாதும் யானை பகருங் கந்தஸ வாமி
கண்ணாரான் மகிழ வரும் வரதீ யெச்சரிக்கை

11. அண்டர் சில கலைகள் மேல கண்ட கண்ட புவனம்
எண்டிசையும் வாழ்க வாழி வாழி வாழியவே

## பராக்கு

01. சீரார் கொன்றைத் திருவும் மலி செஞ்சடை பிரானார்
பேரார் மகிழ் வெய்துங் கோணைப் பிராட்டி பராக்கு

02. கஞ்சமல ரோனும் மாலும் காண்டற கரிதான
செஞ்சுடராய் நின்ற சிவகாமி பராக்கு

03. இந்து வுடன் ஆதவனும் அழல் மூன்றுங் கண்ணானோன்
வந்துன்னை யுவந்தேயருள மாதே பராக்கு

04. தந்தி முகன் தன்னையீன்ற தந்தையில்லா மேலோன்
புந்தி மகிழ் வெய்தி நின்ற புவிநாயகி பராக்கு

05. கந்தன் தன்னை யுலகோர் துயர்களைய வுகந்தளித்த
எந்தை பிரானுவகுக்கும் பரமேஸ்வரன் பராக்கு

06. ஆன்மகோடி செய்த பாவ மனைத்தும் பொறுத்தருளும்
தானேயருள் தாயாய் நின்ற சங்கரி பராக்கு

07. புத்தர் தம்மை வாதில் வென்ற புண்ணியர் தமக்கு
சுத்த குரு வானோன் தர்ம சுந்தரி பராக்கு

08. ஆலிலை மேல் பள்ளி கொள்ளும் அந்த மாயற் கிளைய
சீலமுறுந் தங்காயருட்டிருவே பராக்கு

09. கநதமலர் சூடும் மாதர் கண்டு கண்டு போற்றும்
விந்தையுள்ள நாயகியே வீரி பராக்கு

10. கற்றோர் மற்றோர் காவலருங் கண்டங்குளங் களிக்கும்
பொற்பேர் கோணை மேற்கே கோயில் புகங்காளிபராக்கு

## லாலி

1. லாலி லாலி லாலி லாலி லாலி
தத்துவங் கடந்தவளே லாலி லாலி

2. ஆயிரங் கண் உடையவளே லாலி லாலி
அம்மை பத்திரகாளி உமை லாலி லாலி


3. உலகமெலாம் ஈன்றவளே லாலி லாலி
உம்பர் தொழும் ஈர்வரியே லாலி லாலி

4. கோணைநகர் வாழ்பவளே லாலி லாலி
கொண்டல் வண்ணமேனியளே லாலி லாலி

5. ஈஸ்வரியே சுந்தரியே லாலி லாலி
எங்கும் நிறையும் பொருளே லாலி லாலி



## மங்களம்



**பல்லவி:**

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

**அனுபல்லவி:**

ஐங்கரங் கொண்டேயருளும் ஆனைமுக வள்ளலுக்கும்
அங்குச பாசம் பிடிக்கும் ஐயனாம் வினாயகர்க்கும் மங்களம்
மங்களம்


**சரணம்:-**

நம்பர் எங்கள் ஈசனுக்கும் நாயகி உமைதனக்கும்
எங்கள் சுப்பிரமண்யருக்கும் ஏனைய மெய்த்தேவருக்கும்
கோணமலையில் வாழும் எங்கள் பத்திர காளிக்கும்
ஏனைய மறையோருக்கும் பொங்கும் மங்களம்

(மங்களம்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

## நாதஸ்வரமும், நாட்டியமும் ஆலயமும்



நாதஸ்வரம் என்பது வாயு தத்துவத்தைக் குறிப்பதாகும். ஒவ்வொரு ராகமும் அதுக்கேற்ற தாளமும் உண்டு. அத்துடன் அந்தந்த இடத்திற்கேற்றபடி நாட்டியமும் உண்டு. மேக ராகத்துடன் பிரம்ம தாளம் வாசிக்க வேண்டும். காந்தாரப் பண்ணுடன் சமதாளம் வாசிக்க வேண்டும். கொல்லிப் பண்ணுடன் பத்தாவணம் என்னும் தாளம், கௌசிகப் பண்ணுடன் பிருங்கிணி என்னும் தாளம், நாட்டை ராகத்துடன் மல்ல தாளம், சீகா மரம் என்ற பண்ணுடன் நவதாளம், தக்கேசி என்ற பண்ணுடன் பலி தாளம், தக்க ராகத்துடன் கோடி தாளம், சாலா பாணியுடன் டக்கரி வாசிக்க வேண்டும் என்று காமிகம் கூறுகிறது.

இன்னும் சுவாமி புறப்பாடு செய்யும் போது 'மல்லாரி' வாசிக்கிறார்கள். 'பல்லக்கு' வரும் போது ஆனந்த பைரவி வாசிக்கும் மரபு உண்டு. இதே போல உற்ஸவத்திற்கு ஏற்ற ராகங்களும், தாளங்களும் உள்ளன.

காலத்துக்கேற்ற ராகங்களையும், ஆகமங்கள் கூறுகின்றன. பூர்வசந்தியில் காந்தாரத்தையும் பின்னர் கூஷாடவம் என்ற பண்ணையும், மத்யானத்தில் கௌசிகத்தையும், சாயங்காலத்தில் இந்தோளம் என்ற பண்ணையும் அர்த்த ஜாமத்தில் பஞ்சமம் என்ற பண்ணையும் பாட வேண்டும். என சுப்பிர பேதாகமம் என்னும் நூல் கூறுகிறது.

| காலம்: | இராகம்: |
|---|---|
| விடியற் காலம் | ~ பூபாளம், கௌரி, மந்தரி, தேவக்கிரியா, தேவ காந்தாரி, தன்யாசி. |
| முற்பகல்: | ~ பிலகரி, மலகரி, முகாரி, பைரவம், குறிஞ்சி. |
| மத்தியானம் | ~ சாரங்கா, மத்யமாதி, ஸ்ரீ, நீலாம்பரி. |
| பிற்பகல் | ~ மோகனம், கல்யாணி, சங்கராபரணம், வசந்தா. |
| மாலை | ~ தோடி, பந்துவராளி, கிந்தோளம், சௌராட்சகம். |
| முன் இரவு | ~ காம்போதி, சவோரி. |
| மத்திய இரவு | ~ நாட, புன்னாகவராளி, ஆகிரி, அசாவேரி, கேதாரம். |
| பின் இரவு | ~ சுருட்டி, மஞ்சரி. |

என்ற வகையில் சுரநாதம் கோயிலில் இசையாக எழுதல் வேண்டும். இது விட்டு மனம்போன போக்கில் சுரநாதம் இசைத்தல் கிரியைத் தன்மையை பயனற்ற முயற்சியாக்கி விடும்.

பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்




# திருக்கோணமலை
# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் காவியம்

திரு. வ. கோ. வேலுப்பிள்ளை
அவர்கள்

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய அற்புதங்களும் அருள் வெளிப்பாடுகளும் நிறைந்த இக்காவியப் பாடல்களை பக்தர்பெருமகனாகிய திரு. வ. கோ. வேலுப்பிள்ளை வைத்தியர் அவர்கள் பண்டைக்காலத்தில் பாடினார். பத்திரகாளித்தாயார் மீதுகொண்ட பக்திப் பெருக்கினால்

சூரியோதயத்திற்குமுன் பாடிக்கொண்டே செல்வர். பாடலைப்பாடுவதற்கு முன் கோழி போலக் கூவி மக்களை துயிலெழுப்புவார் அதன்பின் பாடல்களைப் பாடிச்செல்வர் இதனால் இவரை கோழி வேலுப்பிள்ளை என்று அழைப்பர். மார்கழி மாதத்தில் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடி மாணிக்கவாசகர் மக்களைத் துயிலெழுப்பியது போல புலவர். திரு. வ. கோ. வேலுப்பிள்ளை அவர்களுடைய சொல்களும் திருக்கோணமலையில் நிகழ்ந்துவந்தது.
பாராயணத்துக்குரிய காவியப்பாடல்கள் பின்வருவன

## பத்திரகாளித் தாயின்
## பாதக்கமலம் வாழ்க! வாழியவே!

அகிலமிசை அழகுசெறி கோணையம் பதியில்
ஆடவர்கள் கூடிவிளையாடு முத்த வெளியில்
மகிழ்வினொடு அரசடியி னருகினிலிருக்கும்
மடமாது காளிதன் மீது செந்தமிழால்
கதிபெறு நற் காவியம் புகல அருள் புரியும்
கயமுகனே உனைமனதில் அனுதின நினைத்தேன்
பதியென நல் ஆலடியில் வீற்றிருக்கின்ற
வல்ல விக்னேஸ்வரரே வரமருளுமையா.

ஆதியாய் இவ்வுலகை யாளநீ வந்தாய்
அடியவர்கள் ஈடேற அருளது புரிந்தாய்
பாதியாய் அந்தணனின் பாலனை யிரண்டாய்ப்
பாவையரே நீகிழித் தேயங்கெறிந்தாய்
காதினிலே குரலோசை கேளாதிருந்தாய்
கனபொங்கல் பூசை மடைவாங்கி நீயிருந்தாய்
பாதி மதி சூடுமரன் பக்கல் முன்னிருந்தாய்
பாலனெனை யாண்டருள்வாய் காளியென்தாயே.

இந்த உலகந்தன்னி லுள்ள மங்கையர்கள்
இடுமஞ்சல் காவிவகை பூசியுன் முன்பு
சிந்தை துணிந்து சிவப்புப் பட்டாடை சேரவே
பச்சையு மணிந்தவர்கள் வந்தால்
விந்தையிது தானெனவே நீயவர்கள் மீது
வேடிக்கை பார்ப்போமென வேதனைகளிட்டாய்
இந்தவகை யென்மீது செய்யாதே யம்மா
எளியனெனை யாண்டருள்வாய் காளியென் தாயே.

ஈரமென முழுகு தலை கூந்தல் முடியாமல்
ஏசியே யாகுவப் பெண்ணுனது வாசல்
தீரமுடன் தாவிவர அயலவர்கள் கண்டு
தீங்கேது மணுகுமடி கூந்தல் முடியென்ன
வீரமுடன் கேளாமல் உன்வாசல் பார்த்து
விரைவாக ஏகின்ற வேளை நீயவளை
சீரான சென்னியோர் பக்கமது வைத்தாய்
செல்வியே தேடரிய காளியென் தாயே.

உற்றவினை யாலே யவள் மெத்தவுங் கலங்கி
உலகபிணி யிது யெனவே பலவகை புரிந்து
குற்றமதால் வந்தவினை யென்று நினையாமல்
கோதையவள் படுமவதி பார்த்து நீயிரங்கி
சுற்ற மனமாகி யவள் முன்பேசி நின்று
தோகையே நாளையென் சந்நிதியில் வந்து
முற்ற முடி வெட்டி நீ யென்சிரசுக் கீந்தால்
மோதுபிணி தீருமென மொழிந்த காளியரே.

ஊரவர்க ளறிய இவள் விடியவு மெழுந்து
ஓதரிய உன்னுடைய சந்நிதியில் வந்து
கூரரிய கத்திரிக் கோல் கையில் கொண்டு
கோதை தன் கூந்தல்தனை வெட்டியுனக் கீந்து
பூர ஒளி பரவவே சாம்பிறாணி வாடை
புகையெங்கும் வீசிவரப் பூவை பிணிதீர்ந்து
கூறரிய மகிழ்வோடு தன்மனைபுக விலையோ
குற்றமே பொறுத்தெனையாள் காளியென் தாயே.

எண்ணிய புதுமைபல செய்தவள் நீயல்லோ
ஏழைகளின் துயர் நீக்கி யாழ்பவள் நீயல்லோ
வெண்ணையுண்டோனுக்கு இளையவள் நீயல்லோ
வேங்கை மரமாய் நின்ற வேலவர் தாயல்லோ
பெண்ணெனவே பூவுலகில் வந்தவள் நீயல்லோ
பேசரிய கோதாரி தீர்த்தவள் நீயல்லோ
தென்கோணை வாழ்வென வந்தவள் நீயல்லோ
செல்வியே தேடரிய காளியென் தாயே.

ஓதுவேன் உன்புகழ் உனக்கோலம் ஓலம்
ஒன்று மறியாத நான் உனக்கோலம் ஓலம்
சோதியொளி யானவளே உனக்கோலம் ஓலம்
சுந்தரியே தாயே உனக்கோலம் ஓலம்
மோதிவரு பிணிதீர் உனக்கோலம் ஓலம்
முன்பகைஞர் தனைவதைசெய் உனக்கோலம் ஓலம்
கோதி குழலணிதாய் உன்கோலம் ஓலம்
குவலயமே லெனையாளு காளியென் தாயே.

ஏகமுமே ஒளியாகி நின்றவள் நீயல்லோ
ஏழைகளின் துயர்நீக்கி யாள்பவள் நீயல்லோ
வேகமொடு சிங்கமதில் ஏறியே நீயம்மா
வினைதீர்க வேணுமென வந்தவள் நீயம்மா
தேகமதில் நோய் பிணிகள் தீர்ப்பவள் நீயம்மா
தேவர்தமைச் சிறைமீட்ட செல்வி நீயம்மா
மேகமெனுங் குடைநிழலில் வீற்றவள் நீயம்மா
மேதினியி லெமையாள வந்தகாளியரே.

அவ்வசுரன் தம்மோ டமர் பொருதி நின்று
அன்பாக ஒன்பதாம் நாளவனை வென்றாய்
கௌவிவரு அசுரர்தமை வேரோடறுத்தாய்
கடியதோர் தேவர் சிறை தம்மை நீமீட்டாய்
சௌரிய முனைப்போல வெறெரு முண்டோ
சாற்று மொழி உன்செவி கேட்கிலையோ அம்மா
மௌனமொடு உனைநிதமு மலரடி பணிந்தேன்
மனமகிழ இத்தருணம் அருள் காளித் தாயே.

ஐயனார் பரிகலத் தலைவி வேறுண்டோ
ஆடிவரு காடேறி யானவள் வேறுண்டோ
மையான மீதில் நடம் புரிந்தவள் வேறுண்டோ
மலையரசன் மகளாய் முன் வந்தவள் வேறுண்டோ
வையகந் தன்னிலெனக் கெவரு முண்டோ
வறுமை நோய் பிணிதீர்க்க வேறெவரு முண்டோ
தையலே யுனைநம்பித் தாளடி பணிந்தேன்
தாபரித் தெமையாள வருகாளித் தாயே.

அக்கிரம மாகியுனை நினையாத பேர்க்கு
அதிகபிணி பலகவலை யடையவே நீ வைப்பாய்
தக்கதெனவே உனது சரணடைந்தோரைத்
தாபரித்தே கவலை பிணி தீர்த்து வைப்பாய்
மக்கள் மனை மகிழவென் றேத்தியே செந்தமிழால்
வாகுபெற வேற்பிள்ளை காவிய முரைத்தேன்
சக்கரந் தண்டு வாள் பரிச முடையவளே
சத்தியே உலகு புகழ் காளியென் தாயே.

ஒப்பரிய தாயே நீ வாவா சிவாயநம
ஒரு பொழுதும் நான் மறவேன் வாவா சிவாயநம
தொப்ப வயிறோன் தாயே வாவா சிவாயநம
தொல்லை துயர் பிணி தீர்க்க வாவா சிவாயநம
ஒப்பரிய தேரேறி வாவா சிவாயநம
ஓசையென் மொழி கேட்க வாவா சிவாயநம
கோப்பிறகை யணிமாதே வாவா சிவாயநம
கோணைநகர் தனையாளு காளியென் தாயே.

கார்வாழி வேதமுணர் அந்தணர்கள் வாழி
கற்புடைய மங்கையர் பொற்பு மிக வாழி
வாராளி சூழலக மன்னவர்கள் வாழி
மாசகலும் நான்மறையோ டாகமமும் வாழி
சீரான செந்நெல் விளை பழனங்கள் வாழி
தேவாலயங்க ளுயரானினம் வாழி
பார்வாழி பல்லுயிர்க் கருள்புரிந் தாளும்
பத்திரகாளித் தாயின் பாதக்கமலம் வாழ்க வாழியவே!

## சக்தியின் வடிவம் ஏழு

சக்தியின் வடிவினை ஏழாகப் பிரித்திருக்கின்றனர். அவை ஒழுக்கம், ஒலி, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவ்வேழு வகையினை குலமகள், புலமகள், நிலைமகள், தலைமகள், சிலைமகள், அலைமகள், கலைமகள் என்கின்றனர்.

அன்னை அபிராமி கையில் தாமரை, முல்லை, அசோகு, மா, நெய்தல், ஆகிய ஐந்து குளிர்ந்த மலர்கள் அம்புகளாக இருக்கின்றன. அவற்றைப் பாணங்களாக பிரயோகிக்க கரும்பும், வில்லும் பக்கத்திலுள்ளது.




திருக்கோணமலை "ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பதிகம்" "ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கலிவெண்பா" எனப்படும் இப்பாடல்களை பழங்காலப்புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

இப்பாடற் தொகுதிகளை திருக்கோணமலை வைத்தியர் திரு. சி. ஆறுமுகம் என்னும் பெரியாரின் மைந்தன் திரு. ஆ. கந்தையா என்பவர் பன்னெடுங்காலமாகப் பாதுகாத்து வைத்திருந்தார்.

திருக்கோணமலையில் அருட்சக்தியாய் அமர்ந்திருக்கும் அன்னை பத்திரகாளிக்கு அருகில் அமர்ந்து அருள் பாலிக்கும் ஆலடிப்பிள்ளையாரை வணங்கி "வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர் வணங்கி பத்திரகாளி" அம்மன்மேல் முற்காலப் புலவர் ஒருவர் பாடிய பத்திரகாளி அம்பாள் பதிகத்தையும் கலிவெண்பாவையும், பழமையைப் பாதுகாப்பதற்காகவும் பத்திரகாளித் தாயாரின் அற்புத அருள் வெள்ளத்தில் பக்தர்கள் மூழ்கித் திளைப்பதற்காகவும் இவ்விரண்டு தொகுப்புக்களையும்தருகிறோம்

# திருக்கோணமலை
# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பதிகம்

சீர்பூத்த செங்கனக மேரு முடியாயொளி
சிறந்த திரிகோண நகரில்
சினகரங் குடிகொண் டுறைந்தபத் திரையெனுந்
தேவியுன் மீது பதிகம்
பேர்பூத்த செந்தமிழ்ப் பாவெனும் நூலினிற்
பிரசநற வொழுகு மதுரப்
பெட்புலவு செஞ்சொன் மலரைத் தொடுத்தணிசெய்த
பிரபந்த மாலை தன்னை
பார்பூத்த பலயோனி யுயிரெலாம் பெற்றகுட
பார்வையா லுலகமாளும்
பாவையே யுனதடிமை பாடினேன் அருள்கொண்டு
பாலிப்பதுன் கடமையே
வார்பூத்த கலசமுலை மங்கை யரிதங்கையே
மாதங்கி திரிசூலியே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.

சிங்கார வல்லியே யானந்த ரூபியே
செக சோதியான வடிவே
சிங்கத்து மீதேறி வருகின்ற தேவியே
திசையெட்டை யுங்காத்திடுங்
கங்காளியே மகிட சங்கரியே யண்ட
ககன கூடமு நடுங்க
காலெடுத்தே நின்று நடமாடி யருள்செய்த
கன்னியே திரிசூலியே
எங்குமாய் நின்றவுன் மகிமை யாரறிகுவா
ரெனக்குனைப் பாடவெளிதோ
என்ன பிழை செய்தாலு மெல்லாம் பொறுத்துன்
னிரக்கம் புரிந்தருளுவாய்
மங்காத செல்வமுறு திரிகோண மாநகர்
மகிழ்ந்து குடிகொண்ட வாழ்வே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திரகாளியே.

அன்னையே யகிலமெல்லாம் பெற்ற தேவியே
யருமறைப் பொருள முதல்வியே
ஆனந்த வல்லியே வானந்தமாய் நின்ற
வைம்பூதமான வடிவே
உன்னைமன மெண்ணாத பாவியாகியநா
னுரைக்கு மிப்புன் பாவினில்
உன் மனமிரங்கியே இன்னருட் பார்வைவைத்
துனதடிமை கொள்வை எளியேன்
பின்னையாருக் கெனது கவலையைச் சொல்லுவேன்
பெற்றதாய் நீ யிருக்கப்
பிள்ளையா னித்துயர் பெறாதவகை யுய்யவும்
பிரிய மென் மேலில்லையே
மன்னுதிரி கோணமா நகரினிற் குடிகொண்டு
வாழ்கின்ற அருளினுரு மங்கையே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.

கொண்டைக் கிசைந்த மலர்மாலை யழகுஞ்சுட்டி
குலவுமணி நுதலி னழகும்
குமிழ்மிசை மறிந்துபைங் குழைகடவு மருள்மகிமை
குடிகொண்ட கண்ணினழகும்
எண்டிக்கி லுங்கதிர் பரப்புவெண் கலைமதிய
மென வொளிர் முகத்தினழகும்
இணையற்ற மாணிக்க மணிமாலை பூஷண
மிலங்குமிள முலையி னழகும்
தண்டைக்கு மணிசிறு சதங்கைக்கு மிசைவான
சரணாம் புயத்தி னழகும்
சர்வபரி பூரணகடாட்ச வடிவுங் கண்கள்
தரிசிக்க வரமருளுவாய்
மண்டல மதிக்கவரு திரிகோண மாநகரில்
வாழ்வுபெறு வண்ண மயிலே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.

தாயே யுன்னருள் சற்றுமில்லா திருப்பதேன்
தாபமோ மன வன்மமோ
தஞ்ச மென்றுனது பயசெங்சர ணடைந்திடுந்
தமியனைக் காத்தருளுவாய்
நீயே யுயிர்க்கெலா மொருமுதல்வி யில்லையோ
நின்மகிமை பொய்யாகுமோ
நின்னருளை யெண்ணாத தன்மையதனா வுலக
நீடுதுயர் கொள்ளுதம்மா
பேயே பெருந்தெய்வ மென்றாசரித் திடப்
பெற்ற கலிகால மலவோ
பேதையடி யார்செயும் பிழைபொறுத் துன்கருணை
பேணித் துதிக்க வருள்வாய்
மாயா சொருபியே திரிகோண மாநகரில்
வாழு மானந்த மயிலே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்தி ரகாளியே.

எல்லாமு னருளென் றிருக்கவறியே னுன்னை
யெண்ணித் துதிக்க வறியேன்
இது நன்மை இதுதீமை என்னவறியே னெழுத்
தினியசொற் பொருளு மறியோம்
நல்லோர் தமைக்கூடி நாடொறும் நூல்பல
நவின்றதுங் கேட்டு மறியேன்
நாயினுங் கடைகெட்ட நாயேனை நீகையை
நழுவவிட ஞாய முண்டோ
பொல்லாத பிள்ளையென் றாலென்ன பெற்றதாய்
போவென்று தள்ளு வாளோ
பூரண கடாட்சம் படைத்தநீ யல்லையோ
பொறையான குணமில்லையோ
வல்லாண்மை கொண்டு திரிகோண மாநகர்மீது
வாழ்கின்ற மாதரசியே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.

அஞ்சலென் றருள்கன்னி பஞ்சடி மலர்க்கன்னி
யகிலாண்ட கோடியெல்லா
மன்றளித்திடு கன்னியென்றுமழி யாக்கன்னி
யருள் வடிவான கன்னி
தஞ்சமென் றவர்தமக் கருள்செயுங் கன்னியென்
சஞ்சல மகற்று கன்னி
சர்வபூ ரணகன்னி யிளமையக லாக்கன்னி
சதுர்வேத மான கன்னி
கஞ்சமல ரிற்கன்னி வஞ்சனை யிலாக்கன்னி
கண்ணின் மணியான கன்னி
கற்புடை கன்னிநிறை பொற்புடைய கன்னிவளர்
கருணை வடிவான கன்னி
மஞ்சுலவு சோலைசூழ் திரிகோண மாநகரில்
வாழ்வு தருகன்னி நீயே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே

சந்திரனு நீபரிதி வானவனு நீயெம்மை
தன்னை யுதவுங் கனலுநீ
தரணிநீ புனலுநீ தேயுநீ வளியுநீ
சாற்றரி யவானகமு நீ
இந்திரனு நீதுளப மாலையணி பவனுநீ
யினியகம லத்தேவு நீ
எங்குநிறைவாய் நின்ற கங்கை முடிமேற்கொண்
டிருந்த சிவபெருமானு நீ
சுந்தரியு நீ சோதி யொளியுநீ வெளியு நீ
துரியாதி மெய்ப் பொருளு நீ
சொல்லுக் கடங்காத சாசுவத நிட்கள
சுயானந்த மய வடிவுநீ
மந்திரமு நீ கோணமா நகரில் வாழ்வுபெறு
மாமறைப் பொருளு நீயே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.

தத்தைநிக ரொத்த மதுரித்த மொழியுங்கணை
தனக்கிணை வகுத்த விழியும்
தவளமணி முத்துநகையுங் கரிமருப் பெழில்
தரித்திடை வருத்து தனமும்
கத்திகை முடித்திருள் குடித்த குழலும்நிறை
கலைமதிய மொத்த முகமும்
கவினெழுகு செவ்வாம்பல் மலர்மணங்
கமழினிய பவளவிதழும் கவினுலவு மின்னலிடையும்
சித்ரமயி லொத்தவியலுங் குமுத மலரெனத்
தெள்ளமுத முறுவாயுந்
திருவனைய வெழிலும் படைத்தமட மங்கையர்
தியக்கத்தில் வீழாமலே
வைத்தெனைக் காத்தருள்செய் திரிகோண மாநகரில்
வந்த மாணிக்க வடிவே
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே

செந்தமிழ் விளங்குவது முகின்மாரி பெய்வதுஞ்
செந்நெல் விளைவுண்டாவதுந்
திருவுமுயர் கல்வியும் வீரமும் தர்மமும்
செகமுழுதும் நிலைபெறுவதும்
சந்ததமு மனுமுறை தவறா திருப்பஞ்
சைவநெறி தானுயர்வதுந்
தவமகிமை பெறுவதும் பாவமகல்வதும் வேத
சாத்திரஞ் சரியாவதுஞ்
சிந்தை யறிவுறுவதுந் தனம் தவமுடன் தானங்கள்
சேடித்து மிகவளர்வதுந்
தெரிவையர்கள் கற்புநெறி திரியா திருப்பதுஞ்
சிவபூசை நிலை கொள்வதும்
வந்தனைசெய் கோணமாமலை வாழுமன்னையே யுனது
வாழ்விழிக் கருணை யன்றோ
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.

சிங்கார வதனமுஞ் சந்திரா பரணமுஞ்
சிந்தூர திலக நுதலுஞ்
செங்கையிற் படைகளும் மாணிக்க மாலையுஞ்
சிற்றிடைப் பட்டிடையுடையும்
சங்கரா மணிவளக் கொங்கையும் பங்கயச்
சரணத்தி லணி தண்டையும்
தளதளென வொளிரு நவரத்தினக் கோவைக
டயங்குமே கலையினழகும்
கங்கா நதிப்பெருக் கெனவருள் சுரந்தொழுகு
கருணைத் திருக்கண்களுங்
கதிர்கோடி யொருமுகத் துதயமாகிய தெனக்
கவினுலவு திருமேனியும்
மங்காத பேரின்ப வடிவுமா யடியன்முன்
வந்தருள் புரிந்தாளுவாய்
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.

சீர்வாழி மன்னர்செங் கோல்வாழி மறையோது
தெய்வ மறையோரும் வாழி
செப்பரிய வணிகரும்வாழி மற்றவர்வாழி
தேனுவின் குலமும் வாழி
கார்வாழி சைவநெறிமுறை வாழி யழகுபெறு
கற்புடைய மாதர் வாழி
கனயோக மவுனசாதனை முனிவர் புரியருங்
கதியுதவு தவமும் வாழி
ஏர்வாழி தருமதேவதை வாழி யடியார்க
ளெந்தெந்த நாளும் வாழி
இசைகொண்ட தமிழ்வாழி யாகம புராணகலை
எங்கும் நிறைந்து வாழி
பார்வாழி பலயோனிவாழி வாணியும்வாழி
பங்கயத் திருவும வாழி
பாவாணர் துதி பரவுமம்மை பத்திரகாளி
பாதாம் புயங்கள் வாழி.



## தீர்த்தம் ஆடும் முறை

தீர்த்தம் ஆடும் சமய அவசிய கருமங்களை முடித்துக்கொண்டு, விரதமாய் இருந்து சங்கற்பஞ் செய்து கொண்டு மனத்தூய்மை உடையராய் "சிவபெருமானுடைய பரமானந்த வெள்ளத்தில் மூழ்குகின்றேன். இன்றோடு நான் செய்த பாவங்கள் எல்லாம் தொலைந்து புனிதன் ஆகின்றேன" என்று வேண்டிக்கொண்டு மூழ்கக்கூடிய அளவான சலத்தில் நின்றுகொண்டு பெருவிரல்களால் காதுகளையும் சுட்டுவிரல்களால் கண்களையும், நடு விரல்களால் மூக்கையும், மற்றைய விரல்களால் வாயையும் மூடிக்கொண்டு மூன்று தரம் தாழ்ந்து எழுதல் வேண்டும் அளவாய் ஸ்நானம் செய்த பின் கரையில் ஏறி, ஈரந்துவட்டிய பின் காய்ந்த வஸ்திரம் தரித்துக்கொண்டு விபூதி அணிந்து அநுட்டானம் முடித்துக்கொண்டு சுவாமி தரிசனம் செய்து கொண்டு பிதிர்க்கடன்களை முடிக்க வேண்டியவர்கள் முடித்துக்கொண்டு இயன்ற அளவு ஏழைகளுக்கு அன்னம் வஸ்திரம் தட்சனைகள் முதலியன ஈதல் வேண்டும்.

தீர்த்தங்களில் எச்சிலுமிழ்தல் சீலை தோய்த்தல் மூக்குநீர் சிந்துதல், அடிக்கழுவல் முதலிய அசுத்தங்கள் எதுவும் செய்தல் பாவம் ஆகும்.

ஞானிகள் புறத்தீர்த்தம் ஆடுதலோடு அகத்தே உள்ள தீர்த்தங்களிலும் மூழ்குகின்றனர். அத்தீர்த்தங்கள் அவர்களின் மணிக்கட்டு விரல் அடிகளின் நுனிகளில் இறை நடுவுகளில் இருக்கின்றன என்றும் நூல்கள் கூறுகின்றன.

மேலும் உண்மை பேசுதல், தானஞ் செய்தல், இன்சொற் கூறல் அந்தக் கரணங்கள் அடக்கல், புறக்கரணமொடுக்கல், பொறுமை, உயிர்களுக்கு இரங்கல், கடவுற் தியானம் ஆகிய உள்ளிருக்கும் தீர்த்தங்களில் மூழ்கி கருப்பையிற் செலுத்தும் மும்மல அழுக்கையும் கழுவ வேண்டுமென்றும் அந்த ஞன நூல்கள் கூறுகின்றன.

**சிவஸ்ரீ மு. சண்முகரெத்தினக் குருக்கள்**
ஆலடி விநாயகர் தேவஸ்தானம்
திருகோணமலை.

## திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன்

# கலிவெண்பா

1. சீர்பூத்த கஞ்சத் திருவே யருள்வடியே
பார்பூத்த வேதப் பழம்பொருளே - கார்பூத்த

3. வண்ணமுள்ள மேனி வடிவுடைய மாதேஉன்
கண்ணுக் கடங்காத காரணியே - பண்ணவர்கள்

3. போற்றுங் கனகமணிப் பூங்கொம்பே புண்ணியர்கள்
சாற்றுந் துதிக்கருளுஞ் சாமளையே - நாற்றிசையுங்

4. காக்குஞ் செயலுடைய காரணியே, நாரணியே
தேக்குங் கருணை விழித்தேவியே - நோக்கரிய

5. ஞானச்சுடர் விளக்கே நான்முகனுங் காணரிய
வானச் சுடரே வளர்மதியே - கானச்

6. சுரும்பார் கருங்கூந்தற் சுந்தரியே - விந்தைக்
கரும்பார் மொழியுடைக் காமாரியே - பெரும்பாவி

7. யாவரு முந்த னருளடைந்தா லாங்கவரை
வானோருங் கண்டு வணங்குவரே - மானேருங்

8. கண்ணியே யுன்னைக் கருதாதவர்க் கிடறு
பண்ணியே வைக்கும் பராபரியே - மண்ணிலுள்ள

9. எல்லா வுயிர்க்கு மிறைவியே நின்னருள்சற்
றில்லா விடிலிரக்க மில்லையே - பொல்லாத

10. பேதியெனு மூழிப்பெருங் காற்றினாலெ வரும்
வாதைப் படுத்த வழக்காமோ - நீதியாய்ப்

11. பெற்றதாய் நீயிருக்கப் பிள்ளைகளுக் குற்றதுயர்
மற்றொருவர் தீர்க்க வருவரோ - வெற்றிபெறு

12. சூலியே சங்கரியே துய்யபத்திர காளியெனும்
நீலியே முக்கணுடை நின்மலியே - வாலையெனும்

13. வீரியே யண்டபகி ரண்டமெலாம் வென்றமுத்து
மாரியே கோணமலை வந்தவளே - காரியெனுந்

14. துட்ட வயிரவருஞ் சொற்கடங்காக் காளிகளும்
மட்டில்லாப் பேய்க்கணத்து மானவரும் - எட்டுத்

15. திசைக்குளரும் நின்றுனது சேயடித் தொண்டாற்றி
இசைக் கொலுவிருக்கு மீஸ்பரியே - அத்திமுகன்

16. முத்தி கொடுக்கு முகமாறுள குகனைச்
சித்தமுறத் தந்தருளுஞ் சேயிழையே - அசைவில்லா

17. தன்னை யளித்தவளே சர்வபரி பூரணியே
என்னைத்தினங் காக்கு மேந்திழையே - உன்னடியைப்

18. போற்றியான் சொல்லுமிந்தப் புன்பாவிற் குற்றமெலா
மாற்றியருள் கொடுக்கு மங்கலையே - தேற்றமின்றி

19. ஏங்கு துகலமெலா மென்செய்வோ மென்றுதுய
ரோங்குதே யம்மாவென் னுத்தமியே - தீங்குமிக

20. வாராமற் காக்க வரவேணு மற்றிதனைப்
பாராமல் நீயிருத்தல் பண்பாமோ - ஆராயில்

21. உன்னையொழிய வொரு தெய்வம் வேறுமுண்டோ
பின்னையெவர்க் கித்துயரைப் பேசுவோம் - அன்னையே

22. என்னகுறை செய்தாலும் எல்லாம் பொறுத்துனருள்
தன்னை வழங்கம்மா தயாபரியே - அன்னநடை

23. மாதே யரிக்கிளைய மாதங்கியே யெமக்கிப்
போதே யிரக்கம் புரியம்மா - பாதிமதி

24. சூடும் பரமனுடன் சொந்தமாய் நின்றுகூத்
தாடு முனதுபுக ழாரறிவார் - வாடும்

25. பயிருக்கு மேகம் பனிமழையைப் பெய்வதுபோல்
உயிருக்குநீ கருணை யூற்றுமாய் - தயிருக்கு

26. வீடுதொறுஞ் சென்று விளையாடும் மாயனுக்குங்
காடுதொறு நின்றாடுங் கண்ணுதற்கும் - தோடுதொறுந்

27. தேனூறுங் கஞ்சமலர்த் தேவினுக்கு மோர்முதல்வி
தானா யிருந்தபரா சத்தியே - மானேயுன்.

28. தன்னை யருச்சிக்கத் தவம்புரிந்தோர்க் கல்லாது
என்னைப்போல் வார்க்குன் னிரக்கமுண்டோ - சொன்னபடி

29. தேடக் கிடையாத் திரவியமுஞ் சேருமுனைப்
பாடக் கனியும் பாவாணருக்குப் - பேடகத்தில்

30. வைத்த நிதியேனும் வழங்குவிப்பா யுன்மகிமை
யெத்தனை யென்றெண்ணி யியம்புவேன் - புத்தமுதம்

31. பூரித்து வைக்குமணிப் பொற்குடம்போ லேயெழுந்து
பாரித்து விம்மும் பணைமுலையே - கூரித்த

32. வாட்கொண் டெதிர்த்த மகிடாசூரன் றலையை
நாட்கொண் டரிந்தெடுத்த நாரியே - காட்கொண்ட

33. நெஞ்சத் தவுணர் நிலைமை குலைந்துமனம்
அஞ்சத் துரத்துமபி ராமியே - வஞ்சத்தை

34. நீக்கி யடியருக்கு நின்பாத முத்திநிலை
யாக்கியருள் செய்யுமக மாயியே - வாக்கினால்

35. உன்னைப் புகழ்வோர்க்கும் நன்னயமாய்க் கேட்டோர்க்கும்
இன்னலொன்றும் வாராமல் எந்தாயே உன்னருளைக்

36. காட்டி வைக்கவேணுங் கனங்குழையே கண்பார்த்து
நாட்டினுக்கு நல்லசுகம் நல்கியே - வாட்டமின்றி

37. நல்லமழை பெய்வித்து நல்ல விளைவுமிக
நல்குவாய் நன்மையெலாம் நாயகியே - நல்லமுடி

38. மன்னர் மனுமுறைமை மாமறையோர் சைவநெறி
மன்னும் உலகத்து மக்களெலாம் - நன்னலஞ்சேர்

39. வாழ்வு மிகப்பெறுக மன்னுதவந் தானோங்க
தாழ்வு வராமற் றனமோங்க - வேள்விநெறி

40. குன்றாமற் செய்யக் கொடியோர் தலைசாய
ஒன்றோர் குறைவு முறாதபடி - யென்றைக்குந்

41. தாயே யுலகீன்றுதவுபரி பூரணியே தயாபரியே
நீயே துணையாகி நில்.




# அன்னை வடிவே அருட் கோபுரம்

ஆக்கம்
**செல்வி. மணிமேகலாதேவி கார்த்திகேசு**
சங்கீத கலாவித்தகி
ஓய்வுபெற்ற ஆசிரியை

அன்னை வடிவே அருட் கோபுரம்
அற்புதமாய் எழுந்தது அம்மையின் ஆலயத்தில்
தன்னிகரிலாள் தரணியில் எழுந்தாள் தூலவடிவில்
தன்னில் மன்னுயிா் எல்லாம் அடக்கி
அன்னை பத்திரகாளி திருகோணமலைப் பதியில்
அதிஉயரக் கோபுரங் கொண்டாள் நன்னாளில்
கன்னி கருமாரி கார்த்யாயினி சூக்குமமாய்
கருவறையுட் துலங்குகிறாள் எமக்கு ஆதாரமாய்

ஆதாரமாய் விளங்கும் அகிலாண்டேஸ்வரி அம்பிகை
ஆழஅகல உயரமான எழில்மிகு கோபுரத்தில்
மாதாவாய் மன்னுயிராய் மரஞ்செடி கொடியுமாய்
மாண்புறப் பலகதைகள் நீதியும் உணர்த்தினள்
காதாற் தோடும் கவின்நிலவாய் ஆக்கியவள்
காயாது கனியாகிக் கலந்தினிக்குங் கற்பகம்
பாதார விந்தமலர் காட்டியெம் பற்றறுக்கப்
பாரினிற் தாங்கிய பெருவடிவும் இதுவோ

இத்திருப் பெருவடிவில் இல்லாதவை இல்லையே
இத்தனையும் இதிற்தோன்றி இவையெலாம் இதிலடங்கும்
வித்தையை விஸ்தரிக்கும் வித்தகியின் கோலமிது
விண்ணவரும் மண்ணவரும் விளைந்தருந்து விருந்தே
சித்திரமாய்க் கடைந்தெடுத்த சிற்பவங்கள் யாவும்
சித்தரிக்குங் காட்சியெலாம் சிவகாமி விளையாட்டே
நித்தியமாய் நிற்பளும் சக்தியென நிரூபிக்கும்
நிர்மலியின் கோபுரத்திற்கு இணையேது ஈங்கு.

ஈங்கு அம்மை பத்திரகாளி கோவிலும்
ஈழத்தில் பெருங்கோயில் எனும்பெயர் பெற்றதே
தீங்குவராது காக்கும் தெய்வநோன்பு நோற்பதற்கு
தீனதயாபரியின் வீதியெலாம் தீனரும் நிறைவர்
நீங்காது நெஞ்சில் நினைப்பவரை நெருங்கிநின்று
நீக்குவாள் துன்பம் நிலையான பேறருள்வாள்
வீங்குபுகழ் மிக்கவள் வீரவல்லி மாகாளி
வீணரை வென்றிட வியன்கோபுரம் உற்றாள்.

உற்றவிடம் ஈதென்று ஓர்சிறு கடாரத்துள்
உத்தமியும் ஓர்நாள் உதித்தாள் உலகுய்ய
குற்றங்களையும் குணவதி ஸ்ரீ பத்திரகாளி அம்மை
குவலயத்தில் கோகர்ணப் பதியுங் சிறக்க
முற்றவெளி முன்பாய்க் கோயிலுங் கொண்டாள்
முழுக்கலைகளும் வீசி முதுநகரை ஆண்டாள்
சுற்றவும் குடிமனைகள் சுந்தரியின் தொண்டர்கள்
சுகம்பெறக் கூடும் நித்தமும் ஊரே.

ஊர்கூடி உவப்புடன் பெருவிழாக்கள் எடுத்தனர்
ஊழிக் கூத்தாள்புகழ் உலகம் பரவியது
கூர்மதியும் குறையாநிதியும் திண்டிறவதும் ஒருசேரக்
கூப்பிய கரங்களில் குஞ்சரியுங் கொடுப்பாள்
சூர்மிகு வேளையிலே சூலினியும் வெளிவந்து
சூக்குமமாய் துட்டரைத் தொலைத்து அருளுவாள்
பூர்விகல்யாணி பூத்தாள் ஈரேழு உலகமும்
பூரணியாய் புராதனியாய் புகட்கோபுரம் எழுந்தாள்.

ஏழுபிறவித் துயரும் ஈஸ்வரி களைந்திடுவாள்
எம்மன்னை மடிதோன்றி அடிசேரும் எல்லாம்
செழுமைமிகு திருமுடிபோல் ஒளிவீசும் கோபுரம்
செல்வம் அடக்கி கெழுதகைமை கொளவைக்கும்
செழுங்கமல மலரடிகள் சேவிக்கும் சேவகர்க்கு
செம்மை வாழ்வளிக்கும் சிறப்புகளும் செய்யும்
மெழுகாய் உருகியுள்ளம் ஊனுடலும் சரணடைந்தால்
மெல்லியளும் எம்முன்னே ஞானதீபம் ஏற்றுவாள்

ஏற்றும் ஞானதீபம் எம்மடமை போக்கிடும்
ஏற்றம் பெறச்செய்யும் இகபர சுகமளிக்கும்
தேற்றும் திறனுடையாள் சிந்தாகுலம் அடைந்தவரை
தேனாய் அமிர்தம் சிந்தையுள் சொரிவாள்
தேற்றும் இன்றும் இனிமேலும் எவ்வுயிர்க்கும்
நேர்வழி காட்டுங் கலங்கரை விளக்குமவள்
மேற்கதி அடைந்து மேலான இன்பம்பெற
மேன்மைபெறு அபிராமி திருவருளே துணை.

ஐயம் தெளிவிப்பாள் ஆன்மயிருள் போக்குவாள்
ஐம்புலனும் அகத்தடக்கும் ஆற்றலும் அருளுவாள்
வையம் வாழ்ந்திட வானுயர்ந்த கோபுரத்தை
வைத்தனள் வைஷ்ணி வைதீகர் பலர்கூடி
தைப்பூசம் பௌர்ணமி இரண்டாயிரத்து ஓராமாண்டு
தைவீகக் குடமுழுக்கு செய்வித்தனர் சீர்பெறப்
பைந்தமிட் பாமாலை தேவிபதஞ் சூட்டுவோம்
பைரவியும் வளர்ப்பாள் பாரெங்கும் ஒற்றுமை

ஒற்றுமை வளர்ந்திட உரிமையுடன் வாழ்ந்திட
ஒப்பிலா அருளாளி பத்திரகாளி துணைபுரிவாள்
பொற்கரங்கள் பதினெட்டும் சுற்றியெமைக் காக்கும்
பொங்கும் இன்பவமைதி புகழ்பெறும் வளநகர்
கொற்றவை எழுந்தாள் கோபுரமாய் ஒளிவீசி
கொடுப்பாள் வல்லமை கெடுப்பாரை வெல்ல
பொற்புறு பத்திரகாளி கோவிலுங் கோபுரமும்
பொன்றாது நின்று புகழென்றும் ஓதிடும்.

ஓதிடும் வேதமந்திரம் பாடிடும் பண்ணிசை
ஓங்கிடும் வாத்தியஒலி ஒப்பிலா மணிநாதம்
மோதியொரு மோகன கானமாய் உளம்நிறைக்க
மோதிடும் மக்கள் வெள்ளம் முந்திமுந்தி வந்து
கோதிலாக் கோபுரத்தின் குடமுழுக்குக் கண்டவர்
கோதையையுங் கண்டார் கோபுரமுங் கண்டார்
போதித்தாள் ஞானநெறி புல்லர்க்கும் நல்லர்க்கும்
போதகி யாவர்க்கும் புகலரிய ஔடதமே.

ஔடதம் அவளருளே ஆணவப்பிணி தீர்க்கும்
ஔவைக்கும் ஔவை ஆத்தாள் பத்திரகாளி
கௌரீஸ்வரி கருமாரி கயவரை ஒறுப்பாள்
கௌணியற்கு பால்சுரந்த காமாட்சி கருணாகரி
சௌக்கியமும் அவளே சௌபாக்கியமும் அவளே
சௌந்தரியும் சாந்தி சமாதானம் நல்குவாள்
மௌனமே பாஷையாக மோனநிலை விளக்குகிறாள்
மௌனித்த கோபுரத்து மாகாளி அன்னை.

சுபம்

✡✡✡✡✡
✡✡✡✡
✡

# ஆலயத்தில் வழிபடுவதால் நமக்கு கிடைக்கும் சிறப்பான பலன் என்ன?

பாலில் நெய் மறைந்திருப்பது போல, எல்லா இடங்களிலும் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு வருவதைப்போல, ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சி அளிக்கின்றான். மற்ற இடங்களில் இறைவனை நினைத்துத் தியானிப்பதனாலும், துதிப்பதனாலும், வழிபடுவதனாலும், வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால், வினைகள் வெந்து, எரிந்து, கருகி, நீறாகி விடுகின்றன.

கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி வெதும்புமேயன்றி, வெந்து சாம்பலாகாது, சூரிய காந்தக் கண்ணாடியை வெயிலில் வைத்து அதன் கீழே குவிந்து வரும் சூடான கதிரில் துணியை வைத்தால், அது கருகிச் சாம்பலாகிவிடுகிறது. நேர் வெயிலுக்கு இல்லாத ஆற்றல், சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வரும் வெயிலுக்கு உண்டு.

பரந்து விரிந்திருக்கின்ற கதிவரனுடைய கதிர்களின் வெப்பத்தை ஒன்றுபடுத்தி, தன் கீழே உள்ள இடத்திற்குச் சூரியகாந்தக் கண்ணாடி பாய்ச்சுகிறது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது, வெயிலில் வேட்டியை காயவைப்பது போலாகும். ஆகையால் மற்ற எல்லா இடங்னிலும் வழிபட்டாலும், திருக்கோயிலில் இறைவனை வழிபாடு செய்வது இன்றியமையாததாகும்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"

என்பது சிவஞான போதம்

நமது திருக்கோயில்களில், உள்ள திரு உருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர்கள், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பட்டு துதிக்கப்பட்ட காரணத்தால், ஆணவ இருளை அகற்றி வரங்களை அளிக்கின்றன இத்தகைய தனிச்சிறப்பைப் பெற நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதே மிக உயர்ந்ததாகும்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்




# திருக்கோணமலை
# ஸ்ரீ பத்திரகாளியம்மை தோத்திரம்

ஆக்கியோன்
அருட்கவி
**சி. விநாசித்தம்பி புலவர்**

01. அருள்பொழியும் மாதுமையும் சிவனும் தங்கும்
ஆதிபுகழ் பழம்பதியில் அடியார் வேண்ட
வருகவலை தீர்க்கின்ற சூல மேந்தி
மண்டலங்கள் எங்கணுமே நிறைந்து வேத
தரும நெறிச் சிவசமயம் வளர்ப்பதற்காய்த்
தாங்குமகா சிங்கத்தில் கொலுவமர்ந்து
பரவுதமிழ்த் திருக்கோண மலையில் மேவும்
பத்திரகா ளித்தாயே போற்றி போற்றி

02. நிலவணிந்த சடையானை நிந்தைசெய்த
நெறியில்லாத் தக்கனது வேள்வி வீழ
மலையழகி உமைநினைத்த வடிவில் தோன்றி
வல்வீர பத்திரனார் உடனே வந்து
தலைமலத்தான் தலையறுத்துச் சமரம் செய்த
தற்பரையே நினைப்பாரின் மனவிளக்கே
பலவளம்சேர் திருக்கோண மலையில் மேவும்
பத்திரகா ளித்தாயே போற்றிபோற்றி

03. திருமருவு மணிமுடியும் அண்டம்முட்டும்
செஞ்சடையும் செவ்விழியும் செவி யிரண்டில்
மருவுமணிக் குண்டலமும் நில வெறிக்கும்
மாணிக்கமுக் குத்தியுடனே நெற்றி
வருமழகுத் திலகமும் மாங்கல்யமார்பும்
வரிசிலம்பு மலரடியும் காட்டி, ஆதி
பரவைதிகழ் திருக்கோண மலையில்மேவும்
பத்திரகா ளித்தாயே போற்றி போற்றி

04. ஆயர்குல மாயவனின் தங்கையானாய்
ஆலங்காட் டாடிடும் காளியானாய்
பேயெறியும் பிணக்காட்டில் பித்தனோடு
பிரியாத நடமாடி உயிர்க்கருள்வாய்
தாயாகி இங்கடியர் கவலைதீர்க்க
தான்தோன்றி யாய்க் கோயில்கொண்டாயம்மா
பாயலைசூழ் திருகோண மலையமர்ந்த
பத்திரகாளித் தாயே போற்றி போற்றி

05. நூல்பெருகு தவமுனிவன் வருந்தி வேண்ட
நுவல் ஞானம் கொடுத்தவளே, குருடனுக்குக்
கோல்கொடுத்துக் கண்பார்வை யுதவிக்காத்தாய்
குலமன்னன் பணிபுரியத் தோற்றம் காட்டி
ஆல்பெருகு நிழலின் கீழ் நின்றாயம்மா
அணிபத்துத் தலையுடையான் தினமும் போற்றும்
பால்பெருகு திருக்கோண மலையில் மேவும்
பத்திரகா ளித்தாயே போற்றி போற்றி

06. ஓங்குமறை யாகங்கள் அனைத்து மேற்கும்
ஒருத்தியே ஊழியிலே நடன மாடி
தாங்குமுயிர் அத்தனையும் நலியா வண்ணம்
தழுவிக்காத் தருள்கின்ற தாயே தேவர்
ஏங்குதுயர் தீர்த்தவளே எட்டுத்திக்கும்
இயங்குநவ கோளார்களும் இயங்க வைப்பாய்
பாங்குமிகு திருக்கோண மலையில் மேவும்
பத்திரகா ளித்தாயே போற்றி போற்றி

07. ஓவியமாய் ஒளிவிளக்காய் விளக்குத் தோன்றும்
ஒண்சுடராய்ச் சுருதிதரும் சோதி ஞானக்
காவியமாய்க் கருத்தெழுந்த லிங்க மாகிக்
காட்சிதரும் அகிலாண்டேஸ் வரியே, காஞ்சி
மாவடிவாழ் காமாட்சி யாகவந்து
மனுநீதித் தருமமெலாம் வளர்த்தாயம்மா
பாவலர்சூழ் திருக்கோண மலையில்மேவும்
பத்திரகா ளித்தாயே போற்றி போற்றி

08. கணமேனும் மறவாத தொண்டருக்குக்
கலைஞானம் மெய்ஞ்ஞானம் ஆன்ம ஞானம்
இணையில்லாச் சிவஞானம் எல்லாம் நல்கி
எழுபீடச் சகஸ்ரார வீடு காட்டும்
துணையன்னை யே எங்கள் துன்பமெல்லாம்
துடைத்தின்ப வாழ்வுபெற வழிசெய்யாயோ
பணியன்புத் திருக்கோண மலையில் மேவும்
பத்திரகா ளித்தாயே போற்றி போற்றி

09. தவம்படைத்த சும்பனொடு நிசும்பன்தன்னைத்
தலையறுத்துப் புவனமெலாம் காத்தாய் போற்றி
அவம்படைத்த மகிஷனுயிர் வதைத்தாய் போற்றி
அடுவீர பத்திரரின் துணைவி போற்றி
திவம்படைத்த சிங்கமிசை வருவாய் போற்றி
சிறியேங்கள் பிணிவறுமை தீர்ப்பாய் போற்றி
பவம் போக்கும் திருக்கோண மலையில் மேவும்
பத்திர காளித்தாயே போற்றி போற்றி

10. ஊர்பயிலும் இடரெல்லாம் ஒழிப்பாய் போற்றி
உண்டிஉடை மனைசெல்வம் தருவாய் போற்றி
சீர்பயிலும் சந்தானம் கொடுப்பாய் போற்றி
தீராத வஞ்சனைநோய் அறுப்பாய் போற்றி
நேர்பயிலும் கலைஞானம் அருள்வாய் போற்றி
நினைத்தவுடன் எமைக்காக்க வருவாய் போற்றி
பார்புகழும் திருக்கோண மலையில் மேவும்
பத்திரகாளித் தாயே போற்றி போற்றி




ஓம் சக்தி துணை

# என்றும்மா தீர்வு?

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

கவிஞர்: **சிகண்டிதாசன்**

ஆழிசூழ் அழகிய திருகோணமலையில்
காளியென இருந்து காத்திடும் தாயே!
ஊழ்வினை தீர்ப்பாய்உயர்வினைத் தருவாய்!
தாழ்பணிவோர்க்கு தாயென அருள்வாய்!

ஆதிசோதி அனைத்தும் நீயே!
அண்டங்கள் யாவும் ஆண்டிடும் நிதியே!
நீதியைக் காக்கும் நிர்மல ரூபி!
நிம்மதி தந்தெமை ஆதரி தேவி!

அதர்மத்தை அழிக்க ஆயுதம் எடுத்தாய்
தர்மத்தை நாட்டும் சக்தியென நின்றாய்!
புவனத்தை ஆளும் புவனேஸ்வரியே!
போர்மேகம் அகல அருள்வாகினியே!

மகிஷா சூரனை அழித்ததினாலே
மகிஷா வர்த்தனிப் பேர் பூண்டாயே!
மகீரத் தன்மை உடையோர் செயலை
மாற்றிக் கொடம்மா நல்லதோர் வாழ்வை!

அன்று நீ தேவர் குலத்தினைக் காக்க
ஆணவம் கொண்ட சூரனைக் கொன்றாய்.
இன்று நீ எங்கள் இன்னலை அறிந்தும்
இரந்தருள் புரிய ஏனோ மறந்தாய்?

அபிராமிப் பட்டர் அழைத்ததும் சென்றாய்!
அந்தாதி உன்மேல் பாடவும் வைத்தாய்!
கவிமாலை பாடி முறையிட்டேனம்மா!
செவியினிலேற்றும் இருப்பதேன் சும்மா?

பாதங்கள் பணிய பாவங்கள் தீர்க்கும்
பத்திரகாளி ஆனவளே நீலி!
வேதங்கள் போற்றும் வேதாந்த வல்லி!
வெற்றியைக் கொடுக்கும் வேணி திரிசூலி!

தீராத போரில் மாறாத துயரில்
தினமும் வாடிடும் மாந்தர்கள் வாழ்வில்
ஆதாரம் நல்கி ஆதரிப்பாயே!
அங்கயற்கண்ணி அன்னையே காளி!

தாய்க்கே தெரியும் சேய்களின் தாகம்!
தமிழர்கள் வாழ்விற் தொடரான சோகம்!
தீயென வந்து தாக்கிடும் போது
திரிபுர சுந்தரி மௌனங்களேனோ?

எங்கும் நிறைந்த ஏகாந்த வல்லி!
உன்னிடம் வந்தோம் துயர்களைச் சொல்லி!
இங்கு நீ எங்கள் குறைகளைப் போக்கி,.
இன்முகம் காண வருவாயா? நோக்கி!

ஆயிரம் விழிகள் உனக்குண்டு அம்மா!
அதிலொரு விழியால் எமைப்பாரம்மா!
நாயிலும் கீழாய் இடர்படும் காலம்
நாரணி உன்னால் மாறிட வேண்டும்

புவனத்தில் உனது பெருமைகள் கோடி!
போல்லாத போரால் அலைகிறோம் வாடி!
கவனத்திலெங்கள் கவலையை ஏற்று!
கலையாத யுத்த சூழலை மாற்று!

மங்களம் நல்கும் மனோகரி கௌரி!
மக்களைக் காக்கும் மகேஸ்வரி மாரி!
பொங்கும் நதி கடல் எங்குமுன்னாட்சி!
போற்றினோமுன்னை தந்திடம்மா காட்சி!

ஈழத்தில் சாந்தி சமாதானம் வேண்டி!
வாழத்தான் நாளும் வணங்கியே வந்தோம்!
மீழவே கொடிய பகைபோ ரழிவில்!
மீனாட்சி நீயே! மீட்சி தருவாயே!

ஆயிரம் கோடி நாமங்கள் உனக்கு!
அதையெடுத்தியம்ப முடியுமா எனக்கு?
தாயிடம் சொன்னோம் தகவல்கள் நூறு!
தமிழினம் வாழ என்றம்மா தீர்வு?

ஓம் பராசக்தி

திருக்கோணமலை

## அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான

**ஆதீனகர்த்தா வேதாகமமாமணி**

## பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களை பாராட்டி உவந்தளித்த

# வாழ்த்துப்பா

திருக்குலவு திருக்கோண மலையின் கீழ்பால்
சிவசக்தி மாகாளித் தாயார் கோயில்
குருக்கள் ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெரியார் செய்த
பெருந்தவத்தா லவதரித்த கர்ம யோகி
அருக்க னொளிச் சுடர்படரும் ஏழுமாடம்
எழில்சேரும் இராஜகோ புரமுங்கண்டு
உருக்கமுடன் அம்பிகைக்கு விமானமோடு
அருட்பீட மமைத்தபெரு ஞானயோகி

இரவியொடு சந்திரனும் இணைந் தெழுந்து
ஏழுலகத் திருள்கடிந்தே ஒளிபரப்பும்
பரப்பிரம்ம தத்துவத்தைப் பாரிலுள்ளோர்
பல கோடி , ஜீவர்களும் பணியும் வண்ணம்
அரவமணி செஞ்சடையான் கோணைநாதன்
அருட்கண்ணால் நோக்குமுயர் சக்திபீடம்
இரவிச்சந்திரக் குருக்களையா அமைத்துத் தந்தார்
என்னதவம் செய்தோமோ அடியோ மெல்லாம்.

வேதநெறி தழைத்தோங்கி வையம் வாழ
மிகுசைவத் துறைவிளங்கி மக்கள் வாழ
நாதாந்த நாயகியாய் ஞாலம் போற்ற
நல்லருள் செய் ஸ்ரீ பத்திர காளித்தாயார்

காதலொடு அமர்ந்தருள் செய் சக்திபீடம்
கட்டழகுக் கோயிலா யமைந்த ஞானி
வேதாகமமாமணி பிரதிட்டா சிரோமணி
இரவிச்சந்திரக் குருக்கள் நீடுவாழி.

முன்னாளில் மன்னர் திருப்பணிகள் செய்து
மூவுலகம் போற்றுதிருக் குடமுழுக்குச் செய்தார்
இன்னாளில் இரவிச்சந்திரக் குருக்கள் தந்தை
எண்ணியதை எண்ணியவா றெய்திக் காளி
அன்னையருட் துணையோடு துணிந்து நின்று
மின்னாருங் கோபுர திருப்பணி முடித்தே
என்நாளும் எவ்வுயிரு மெவ்வுலகும் போற்ற
ஏழிரண் டொன்றிலே குடமுழுக்குச் செய்தார்.

அம்பிகையின் திருவடியை அகத்தே வைத்து
அவளருளே அனைத்துமென நம்பவைத்து
வெம்பிமனம் சோராமல் அடியார் போற்ற
விமானமொடு கோபுரமுங் கொண்ட கோயில்
செம்பதுமத் திருப்பீடஞ் சேரவைத்துத்
திருப்பணிகள் பலமுடித்த தீரச் செம்மல்
எங்கள் திரு இரவிச்சந்திரக் குருக்களையா
இனியமனை மக்களோடு பல்லாண்டு வாழ்க.

**ஆக்கம்: ஆர்வி**

**01-05-1947ம் ஆண்டு, பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கு. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சக்தி நிலையம் தற்போது அவர் மகன் பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குரக்கள் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகின்றது.**

**நிலையம் அரம்பித்தது முதல் ஆலயவீதியில் இவர்கள் இருவரின் தலைமையின் கீழ் தொடர்ந்து 54 வருடங்களாக இயங்கி வருகின்றது.**

**அம்பாள் ஆலயத்திற்கும், நிலையத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது.**

**தொடர்ந்தும் இவ்வாறு இயங்குவதற்கு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள்புரிவாளாக.**

காளிகோவிலடி,
திருக்கோணமலை,
23-02-2001.

**சக்திநிலைய அன்பர்கள்,**

உ

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின்

ஆதீனகர்த்தா – பிரதம குரு 'வேதாகமமாமணி'

## பிரம்மஸ்ரீ. சோமஸ்கந்த ஐயர் - இரவிச்சந்திரக் குருக்கள்

## *அவர்களினையும் அவர்தம் திருப்பணியினையும்*

## மகிமைப்படுத்தும்

# வாழ்த்துப்பா மடல்

**07 - 02 - 2001**

கிழக்ககம் கதிரோன் கிளர்ந்தெழும் ஆழி
முழக்கமிட் டலைகள் மோதும் திருமண்
செம்பொன் சிப்பி சேர்க்கும் கரைகொள்
சம்பந்த ரென்னும் சால்புறு குரவர்
செப்பிய குறளாம் திருமுறை வைப்பில்
ஒப்புயர் வற்ற உயர்திருக் "கோமலை"
ஆலடி விநாயகர் அவர்முதற் பொருளாய்
ஏலவே நினைத்து எண்ணிலா வகையில்
சாலவும் பணிகள் சந்ததம் நிகழ்த்தி
முந்தும் தொண்டினை முடிவுறச் செய்ய
தந்தை வழியில் தர்மட் பணியில்
உயர்ந்து சிறந்து உன்னதம் நிறைத்து
வியக்கும் வகையில் வியன்பணி புரிந்து
கோவைப் படுத்திக் குறித்திட இயலாச்
சேவைகள் பலவும் செயும் நினைப்புடனே,
அம்மன் பவனி அழகாய் வரவும்
"மஞ்சம்" "சப்பறம்" மரவெழில் வேலைகள்
தரமாய்ச் செய்து தாரணி வியக்க
"திரிதள விமானம்" திருஏழ் வாசல்கள்
கோபுரம் அமைத்து கோணமா மலையில்

வாழும் மக்கள்தாம் வழிபா டியற்ற
மேலாம் தொண்டு மிகவும் புரிந்து
ஈழவரலா றிசை திருப் படவும்
வாளா நிற்கா வகையில் உயர்ந்து
உறுநோய் தீர்த்து உன்னதம் வழங்கும்
கருத்துடன் இயற்றும் கடமை ஒழுங்கு
பொருத்த முடனே புரியும் வகையில்
மருத்துவ மனையின் விநாயகர் கோயில்
ஆலடி விநாயகர் அழகுசேர் ஆலயம்
அன்புவழி புரம் அருட்டிரு விநாயகர்
கந்தளாய் விநாயகர் கவின்சேர் ஆலயம்
இரத்தின சிங்கப் பிள்ளையார் கோயில்
இந்தள வோடும் "இ.போ.ச." வில்
அமைந்த கோயில் அனைத்தினி லெல்லாம்
கும்பாபி ஷேகம் கோபுரப் பணிகள்
செம்மை சேரச் செய்தது மல்லால்
மண்மொழி நாடு மக்கள்தம் மதங்கள்
குன்றா வகையில் குருவாய் இருந்து
செய்த சேவைச் சிறப்புகள் தன்னால்
வையகம் போற்றும் வரலா றேத்தும்
ஆதலினால் யாம் ஆலடி விநாயகர்
காதலை வேண்டிக் கண்ணியம் செய்யும்
குன்றா ஆவல் கொண்டதன் பேறாய்,
நன்றாம் கவிமடல் நாமளிக் கின்றோம்.!

**வாழி வாழி ரவிச்சந்திர சிரோண்மணி**
**வாழி வாழி அம்மன் திருநாமம்**

இவ்வண்ணம்
சிவஸ்ரீ சு. கு. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்
ஸ்ரீலஸ்ரீ மு. சுந்தரலிங்கதேசிகர்
சிவஸ்ரீ மு. சண்முகரெட்ணக் குருக்கள்
இவர்களுடன்
திருகோணமலை வாழ் சைவப் பெருமக்களும்

ஆலடி விநாயகர் தேவஸ்தானம்
திருக்கோணமலை
2001 - 02 - 07

# காணாத கண்ணென்ன கண்!

**நா. சோமகாந்தன்**

கிழக்கு வெளித்து விட்டது மகிழ்ச்சியில் கோழிகள் சிறகடித்துக்கூவி ஆரவாரம் செய்கின்றன. ஏனைய பறவையினங்களும் ஆனந்த கீதம் இசைக்கின்றன. மல்லிகையும், முல்லையும் மொட்டவிழ்ந்து நகரமெங்கும் நறுமணம்பரப்புகின்றன பசுக்கள் ''அம்மா'' எனக்குரல் எழுப்புகின்றன. மடியிலே நிறைந்து முட்டிவிட்ட பாலை கறந்து எடுத்து பத்திரகாளி அம்பாளின் கும்பாபி ஷேகத்துக்குச் சேர்க்குமாறு அவை அழைப்பு விடுகின்றன.

ஆலயங்களின் கண்டாமணிகளின் கம்பீர நாதம் ஒலித்து ஓய்கிறது. நாதஸ்வரங்களிலிருந்து எழும் நீலாம்பரி எங்கும் பரவி இனிமை ஊட்டுகிறது. ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் முன்றலில் அமைக்கப்பெற்ற அலங்கார யாக சாலையிலிருந்த எழும் ஓமப்புகை ஆகாயத்தில் அகலக் குடைவிரிக்கின்றது. சிவாச்சாரியர்களின் மந்திர ஒலி மனதை நிறைக்கிறது. கடல் அலையென அடியார்கள் அதிகாலையிலிருந்தே அங்கு வந்து திரண்டு விட்டனர்.

ஆலயத்திற்கு முன்னால் உள்ள கடலுக்குக்கூட எத்தனை மகிழ்ச்சி! பக்திப்பரவசத்தில் துள்ளிக்குதிக்கிறது! அதன் அலைகள், உற்சவ காலத்தில் அம்பாளின் வீதியல் அங்கப்பிரதட்சணம் செய்யும் அடியார்களைப் போல, பக்தி சிரத்தையாக புரண்டு புரண்டு வந்து, அந்த புண்ணிய பூமியின் கரையைத் தொட்டுத் தொட்டு நமஸ்கரிக்கின்றன.!

கண்விழித்து எழுந்த பாலசூரியன், செம்மஞ்சற் போர்வையை விலக்கிவிட்டு, கடலின் அக்கரையிலிருந்து எட்டிப்பார்த்து, இராஜகோபுரத்தின் கம்பீரத்தையும் அழகையும் தரிசித்து வியப்பும் மகிழ்ச்சியும் கொள்கிறான்.

நெடிதுயர்ந்த சப்ததள இராஜகோபுரத்தின் கம்பீரத் தோற்றம் அதில் பொழிந்து நிறைந்த தெய்வீகச் சிற்பங்கள், கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் வர்ண்ண வேலைப்பாடுகள் சூரியனின் மனதில் சிலிர்ப்பை ஊட்டி, வியக்கவைக்கின்றன.

அலங்கரிக்கப்பெற்ற யானை, காளை, குடை, கொடி, ஆலவட்டம், வேதியர்களின் வேத ஒலி, இன்னிசை வாத்தியங்களின் இசை முதலியவற்றுடன் பிரதட்சணமாக எடுத்து வரப்பட்ட கும்பங்களை கோபுரத்தின் உச்சிக்கு எடுத்துச்சென்று பளபளக்கும் ஏழு வெள்ளிக் கலசங்களின் மீதும், பிரதம சிவாச்சாரியார் சிவானுபூதி, பிரதிஸ்டா பூஷணம், கிரியா சக்கரவர்த்தி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களும் மற்றும் சிவாச்சாரியர்களும், கும்ப நீரை பக்தி பூர்வமாகச் சொரிந்த போது.......

“அரோஹரா!......... காளிஆச்சிக்கு அரோஹரா!” ஆர்ப்பரித்த அடியார்களின் பக்தி கோசம் அட்ட திக்குகளிலும் பரவி மெய் சிலிர்க்கவைத்து விண்ணையும் முட்டுகிறது.

திருக்கோணமலை நகரிலுள்ள மிகப்பழமையும் பெரும் கீர்த்தியும் மிகுந்த ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் 2001ம் ஆண்டில் நிகழ்ந்த மஹா கும்பாபிஷேகம், இவ்வாலய நீண்ட வரலாற்றில் புதிய ஓர் அத்தியாயத்தைப் படைத்து விட்டதென்பதை மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

புகழும் அருளும் மிக்க இவ்வாலயத்தின் தொன்மை ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது. என்பது இங்குள்ள கல்வெட்டையும் அம்பாளின் பஞ்சலோக திருவுருவச் சிலையையும் ஆராய்ந்த வரலாற்று ஆசிரியர்களின் அசைக்க முடியாத கருத்து

தமிழர்கள் மத்தியில் சக்தி வழிபாடு மிகப்பழய காலத்திலிருந்தே நிலவி வருகின்றது.

கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை சங்க காலத்திற்கு முன்பிருந்தே வீரத்திற்குரிய கடவுளாக வழிபாடாற்றினர். பகைவரை எதிர்த்த போரில், வீரத்தை நிலைநாட்டி வெற்றியையும் கீர்த்தியையும் அருளுபவளாக சோழ மன்னர்கள் போற்றி வழிபாடாற்றினர்.

சோழப்பேரரசு தென்னிந்தியாவில் நிலை பெற்றிருந்த காலத்தில், இலங்கையின் பெரும் பகுதி அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது வரலாறு. அப்பகுதி மும்முடிச் சோழ மண்டலமென வழங்கப்பெற்றது. புராதனமான இவ்வாலயம் இன்று அருளும் புகழும் மிக்க சக்திபீடங்களில் ஒன்றாக புதுப்பொலிவுடன் இலங்கையில் விளங்குவது இங்கு வாழும் இந்து சமயிகளின் பெரும்பேறாகும்.

இந்து சமயத்தில் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம் சௌரம் என அறுவகை நெறிகள் உண்டு. சக்தி வழிபாடாகிய சாக்த நெறியில் சிறந்த உபாசனைப்பிரிவுகளாக (தசமஹா வித்தை) பத்துப் பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவதும் முதன்மையானதுமாக கூறப் பெற்றிருப்பது காளிகாதேவியின்
உபசனா விதி என்பர்.

இறைவன் ஐந்தொழில்களைப் புரிவதற்கு ஆதார சுருதியாக விளங்குபவள் அன்னை பராசக்தி ஒவ்வொரு தொழிலின் போதும் வெவ்வேறு கோலந்தாங்கி அவற்றை நிகழ்த்தி வைப்பவர் தேவியே

இவ்வாலயத்தில் தொடர்ந்து விஸ்தாரமான திருப்பணிகள் முன்னெடுக்கப்படுவது வியப்பையே தருகிறது! மஹா மண்டப விஸ்தரிப்பு, லட்சுமி - சரஸ்வதி தேவியர்க்கு தனித் தனிச் சந்நதிகள், அலங்கார வசந்த மண்டபம் திருக்கல்யாண மண்டபம், சித்திர சிற்பத் தேர்கள் அழகு மஞ்சம் எனப் படிப்படியாக வளர்ந்த இப்போது கருவறை மீது உயரமான புதிய ஸ்தூபி, ஆலயமுகப்பில் ஏழு தள இராஜகோபுரம்!

சாதாரணமானவர்களால் இவற்றைச் சாத்தியப் படுத்த இயலாது. அதற்கு அசைக்க முடியாத பற்றுருதி, அர்ப்பணிப்பு, தியாகம், அயாராத உழைப்பு, பொறுமை - எல்லாவற்றிற்கும் மேலாக அம்பாளின் ஆசீர்வாதம், அடியார்களின் ஒத்துழைப்பு அவசியம். இவை எல்லாவற்றையும் கொண்ட தருமகர்த்தா இவ் ஆலயத்திற்கு கிடைத்திருப்பது அவளின் திரு அருளினாலேயே என்பதில் சந்தேகமில்லை. அவள் பணியை சிறப்பாக செய்வதற்கு எவரைக் கரவியாகக் கொள்ள வேண்டுமென்பதை தீர்மானிப்பவள் அம்பாளே! ஆடுபவளும் அவளே; ஆட்டு விப்பவளும் அவளே!

அம்பாளைத் தரிசித்த ஆனந்தப்பூரிப்பில், சூரியன் தனது அன்றைய பயனத்தைத் தொடங்குவதற்காக அழகிய குதிரைகள் பூட்டிய தனது ரதத்தில் ஏறி அமர்ந்து விட்டான். அவனின் கதிர்கள் லேசாக இறுக்கமடைகின்றன.

வெயிலின் சூடும் வியர்வையும், தாகமும், வைராக்கிய பக்தியின் முன்னால் எம்மாத்திரம்? பத்திரகாளி அம்பாளின் மஹா அபிஷேகத்தையும் அலங்காரக் கோலத்தையும், பக்திமயமான பூஜையையும் தரிசிப்பதற்காக இந்திரலோகம் போல் புதுப்பொலிவு கொண்டுள்ள ஆலயத்தின் ஸ்தம்ப மண்டபம், மஹா மண்டபம், என்பவற்றையும் கடந்து அடியார்களின் கூட்டம் முட்டிமோதி பக்திப்பரவசமாகி நிற்கிறது.

கர்ப்பக்கிரகத்தில் கருணை தவமும், விழிகளும் புன்னகைபூத்த உதடுகளும் கையில் தாங்கிய சூலாயுதமுமாக, சர்வாலங்கார கோலத்தில் காட்சியளிக்கும் மங்களம் தரும் தேவியான ஸ்ரீ பத்திரகாளியின் கம்பீரமான எழிற்காட்சியைக் காணாத கண்ணென்ன கண்!

கற்பூர தீபஜோதிபோல, பக்தர்களின் உள்ளம் அன்னையின் அருட்கோலம் கண்டு உவகையில் உருகி ஆனந்தம் கொள்கின்றது.

★★★★★★
★★
★

# காளி தேவியின் ரூப பேதங்கள்

சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி

**ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சார்யார்**

**தலைவர் : சர்வதேச இந்துமத குருபீடம்**

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## இரண்டு கைக் காளி

***ரக்தவர்ணம் த்விநேத்ரம் ச த்விபாதத்விபுஜான்விதம்***
***கபாலம் சூலஹஸ்தம் ச ரௌத்ரீ மகரதாரிணீ***

சிவந்த நிறம், இரு கண்கள், இரு கைகள், இரு பாதங்கள் கொண்டவள். கபாலம், சூலம் இவைகளை கைகளில் தாங்கிக் கொண்டு பயங்கரமாகக் காட்சியளிப்பவள்.

***ஆதஸீபுஷ்ப ஸங்காசம் த்விநேத்ரம் தவிபுஜான் விதம்***
***ஜடாமகுடினீ காளீ ஹலாமுஸல தாரிணீ***

வாகைப்பூ நிறம் கொண்டவள். ஜடா மகுடம் தரித்தவள். இரண்டு கைகளிலும் கலப்பை, உலக்கை என்ற ஆயுதங்களைப் பிடித்திருப்பவள்.
***(சில்ப ரத்னத்தில்)***

***அதிரௌத்ரா மஹாதம்ஷ்ட்ரா ப்ருகுடீகுடிலேக்ஷணா***
***விவர்த்த நயனா சூரா தீர்க்ககோணா மதான்விதா***
***ஸ்நிக்த கம்பீர நிர்க்கோஷா நீலஜீமூத ஸந்நிபா***
***ப்ரகுடீ கூட ஸந்தீப்தா மஹாவதன பீஷணா***
***தம்ஷ்ட்ராஷ்ட கோபதாம்ராக்ஷீ ரக்த தீர்க்க சிரோருஹா***
***த்ரிசூல வ்யக்ர தோர்தண்ட நரகீசக வாதினீ***
***அதிரக்தாம்பரா தேவீ ரக்தமாம்ஸா சவப்ரியா***
***சிரோமாலா விசித்ராங்கீ சின்வந்தீ சோனிதாஸவம்***

***ந்ருத்யந்தீ ச ஹஸந்தீ ச சிசாசகண ஸேவிதா***
***பிசாசஸ்கந்த மாருஹ்ய ப்ரமந்தீ வஸுதாதலம்***
***இத்யம்பூதாம் பத்ரகாளீம் மாத்ரூபி : பரிவாரிதாம்***

இவள் மிகவும் பயங்கரமானவள். பெரிய தெத்திப் பல்லையுடையவள். புருவத்தை உயர்த்திய நீண்ட கண்களைக் கொண்டவள். நீண்ட மூக்குடையவள். மதம் கொண்டவளானாலும் அன்புடன் கூடிய கம்பீரமான ஒளியையுடையவள். கருமேக நிறத்தினள். சிவந்த நீண்ட கூந்தலையுடையவள். இரு கை களிலும் திரிசூலம் ஏந்தியவள். சிவந்த ஆடைகளை அணிந்து முண்டமாலை யணிந்தவள். ஆடல் பாடல்களுடன் விளங்குபவள். பைசாசங்களால் தொழப்பட்டவள். பைசாசத்தின் தோள்
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

மீது ஏறிக் கொண்டு உலகை வலம் வருபவள். சப்தமாதர்களால் சூழப்பட்டுள்ள இந்த பத்ரகாளியை வணங்குவோமாக.

## நான்கு கைக் காளி [நாரதீய ஸம்ஹிதா]

இவளை நான்கு கைகள் உடையவளாக துர்க்கா தேவியைப் போன்று அமைக்க வேண்டும். கரிய நிறமும், சிறிய இடையும் கொண்ட இவள் பட்டாடைகளை அணிந்திருப்பாள்.

அகழிகளைக் காப்பவள். வாசுதேவனைப் போன்றே இவளும் ஆயுதங்கள் தாங்கியிருப்பவள். கமல மலரில் இருப்பவள். மஹிஷத்தின் தலையில் நின்ற கோலத்திலும் காணலாம்.

**ததோ துர்க்காம் பகவதீம் க்ருஷ்ணாபாம் துர்க்கரக்ஷிணீம்**
**சதுர்புஜாம் ததா குர்யாத் க்ஷாம மத்யாமலங்ருதாம்**

**அஸ்யாமாயுத வின்யாஸம் வாஸுதேவே யாதா ததா**
**பீத கௌசேய வஸனாம் பத்மமத்யே ஸ்திதாம் சுபாம்**
**அதவா மஹிஷே மூர்த்னி பீடே வா ஸ்தரணான்விதே**

என்று நாரதீய ஸம்ஹிதா என்ற நூல் கூறுகிறது.

**த்யாயேத் காளி மஹாதேவீம் ரத்ன ஸிம்ஹாஸனஸ்திதாம்**
**பத்மாஸன ஸ°காஸீனாம் ரக்த வஸ்த்ராம் சதுர்புஜாம்**
**சூலம் டமருகம் சைவ கபாலம் பாசதாரிணீம்**
**ஏவம் த்யாயேத்து ருத்ராங்கீம் ஸர்வகாம ப்ரஸாதினீம்**

செந்நிற ஆடைகளணிந்து, தனது நான்கு கரங்களிலும் சூலம், டமருகம், கபாலம், பாசம் ஆகியவைகளைப் பிடித்துக் கொண்டு, ரத்னங்களால் இழைக்கப்பட்ட ஸிம்மாசனத்தில், பத்மாஸனத்தின் மீது அமர்ந்து, பயங்கரத் தோற்றத்துடனும், விரும்பியதனைத்தையும் அருள்பவளாகவும் உள்ள காளிகா தேவியை தியானம் செய்ய வேண்டும்.

**ஏகவஸ்த்ராம் த்ரிநயனாம் ஊர்த்வகேச ஸமன்விதாம்**
**ச்யாமவர்ண ஸ்மரயுக்தம் சதுர் கோதண்ட மண்டிதம்**
**ப்ரஸன்னவதனாம் தேவீம் துகூலவஸனான் விதாம்**
**சூலம் டமருகம் சைவ கபாலம் பாசமேவச**
**பிப்ரதீம் புல்லநயனாம் நானாபரண பூஷிதாம்**
**ஸர்வாலயவஸம் யுக்தம்ஸர்வாவய வஸு°ந்தரீம்**
**சயனம் வாமபாதம் ச லம்பிதம் ஸவ்யபாதகம்**
**திவ்ய ஸிம்ஹாஸனாஸீனாம் திவ்ய மால்யாஜ பூஷிதாம்**

கரிய நிறமும், அருள் பொழியும் முகமும், முக்கண்களும், மேல் நோக்கிய கூந்தலும் கொண்டவள். வெண் பட்டாடை அணிந்து சூலம், டமருகம், கபாலம், பாசம்

ஆகியவைகளை தனது நான்கு கரங்களிலும் தரித்திருப்பவள். மலர்ந்த கண்கள் உடையவள், பல வகையான அணிகலன்கள் பூண்டவள். எல்லா அங்கங்களும் எழிலுற விளங்குபவள். இடக் காலை மடித்து, வலக்காலை தொங்கவிட்ட நிலையில் அமர்ந்திருப்பவள். உயர்ரக ஸிம்மாசனத்தில் அமர்ந்து திவ்ய மாலைகளை அணிந்தவள்.

## ஆறு கைக் காளி [வைகானஸ த்யான முக்தாவலி]

**ஷட்பிச்சூல கபால பாச டமரு ப்ராஸான்ஸ கேடான் கரை :**
**விப்ராணா த்ருதபால மௌலிருசிர ப்ரௌடோத்தரராஸங்கிகா**
**ரௌத்ரீ நித்ய மவக்ரஹாஸனகதா பந்தூக ரக்தாக்ருதி**
**ச்ரிலஷ்யத்பீனகுசாத்யுதங்முகயுதா காளீ மபீஜா வது**

ஆறு கைகளிலும் சூலம், கபாலம், பாசம், டமருகம், ஈட்டி, கேடயம் ஆகியவைகளைப் பிடித்திருப்பவள். சிறிய கீரீடத்தால் பிரகாசிக்கின்ற மேலாடையை உடையவள். பயங்கரத் தோற்றம் கொண்டவள். அவக்ரஹம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பவள் : செம்பருத்திப் பூப்போன்ற நிறமுடையவள். பருத்த ஸ்தனங்களை யுடையவள். வடக்கு நோக்கிய முகத்தையுடையவள்."ம" என்ற அக்ஷரத்தை பீஜமாக உடையவள் இந்தக் காளி நம்மைக் காப்பாற்றட்டும்.

வைகானஸ த்யான முக்தாவலி - ஏழாவதுபதம் - ஐந்தாவது ஆவரணத்தில் தெற்குப் பக்கத்தில் ஸப்த மாதர்களை மேற்கு நோக்கிய வகையிலே அமைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஸப்தமாதர்களில் இளையவள் காளியே, ஸப்தமாதர்கள் ப்ரஹ்மாணி, சரித்பிரியா, வைசாகினி, விச்வாகர்பா வாராஹி, இந்திராணி, காளி என்றும் மேற்படி நூல் கூறுகின்றது.

## எட்டு கைக் காளி

**அஷ்ட பாஹூ மஹாகாயா காலமேக ஸமப்ரபா**
**சங்க சக்ர கதா கும்ப முஸலாங்குச பாசயுக்**
**வஜ்ரம் கரே பிப்ரதீ ஸா மஹாகாளீ முதே (அ) ஸ்து ந :**

கரும் முகில் போன்ற பெருத்த உடலையுடையவள். தனது எட்டுக் கரங்களிலும் சங்கு, சக்ரம்,கதை, கும்பம், உலக்கை, அங்குசம், பாசம், வஜ்ரம் ஆகிய ஆயுதங்களைத் தரித்தவள். இத்தகைய மஹா காளி நமக்கு அருள் புரிவாளாக.

**ச்யாமாபாம் ரக்தவஸ்த்ராம் ஜ்வலன சிகயுதாம் அஷ்ட ஹஸ்தாம் த்ரி நேத்ராம்**
**சூலம் பேதால கட்க அபயவரகரம் வாமஹஸ்தே கபாலம்**
**அன்யே கண்டாந்து கேடம் ஹலஹலஸஹிதாம் ரௌத்ர பாவாம் த்ரிநேத்ராம்**
**சாமுண்டம் பீமரூபாம் புவனபயகரீம் பத்ரகாளீம் நமாமி //**

ஒரு முகமும், மூன்று கண்களும், எட்டுக் கரங்களும் உடையவள். சூலம், வேதாளம், வாள், அபயம், வரதம், கபாலம், மணி, கேடயம் ஆகியவைகளை எண் கரங்களிலும் தாங்கியவள்: கரிய நிறம் கொண்டவள். சிவப்பு ஆடையணிந்தவள். ஜ்வாலா கேசம்

கொண்டவள். பயங்கர உருவமானவள். இத்தகைய சாமுண்டி எனும் பத்ரகாளியை நான் வணங்குகிறேன்.

மூலாதார ஸஹஸ்ரார க்ரந்திகளை போதிக்கக்கூடிய யோக சக்தியே சாமுண்டி என்பது தத்துவ விளக்கமாகும்.

## பத்துக் கைக் காளி

***கட்க சக்ர கதேஷு° பாச பரிதான் சூலம் ப்ருசுண்டிம் சிர :***
***சங்க ஸந்ததீ கரை : த்ரிநயனாம் ஸர்வாங்க பூஷாவ்ருதாம்***
***நீலாச்மத்யதி மாஸ்யபாத தசகாம் ஸேவே மஹா காளிகாம்***
***யாமஸ்தௌத் ஸ்வபிதே ஹரௌ கமலஜோ ஹந்தும் மதும் கைடபம் //***

இந்த பத்துக்கை காளியை 'ஸ்ரீ தத்வ நிதி' புதுமையாகக் கூறுகின்றது.

தன்னுடைய பத்துக் கரங்களிலும் இவள் வாள், சக்ரம், கதை, அம்பு, பாசம், இரும்புத்தடி, சூலம், ப்ருசுண்டி, தலை, சங்கு ஆகியவைகளைத் தரித்து விளங்குபவள். முக்கண்கள் உடையவள். எல்லா அங்கங்களிலும் அணிகலன்கள் பூண்டவள். இந்திர நீலக் கல்லின் வர்ணத்தை யொத்த நிறம் கொண்டவள். 10 முகமும் பத்து கால்களும் உடையவள். இந்த மஹா காளியை நாம் வணங்குவோமாக.

விஷ்ணு யோக நித்திரையிலிருந்தபோது, மது கைடபர்களை அழிப்பதற்காக ப்ரம்மாவால் ப்ரார்த்திக்கப்பட்ட காளிகா தேவியே இவள்.

## பதினாறு கைக் காளி

***நானாபா ஹேமவஸ்த்ரா நவருதிவஸா மாம்ஸநிர் பின்ன வக்த்ரா***
***சூலம் குந்தம் ரதாங்கம், பணி முஸல கதாம் தோமரம் பத்ருஸம் ச /***
***பாசம் சக்திஞ்ச சங்கம் த்வஜஹல தஹனான் வஜ்ரகேடம் கராக்ரை :***
***பிப்ராணா பீமவேஷா விஜயது புவனே விச்ருதா பத்ரகாளி //***

பலவர்ணத்தவள், பொன்நிற ஆடை அணிந்தவள் புதிய ரத்தம், கொழுப்பு இவைகளை உடையவள். மாமிஸத்தில் துளைக்கப்பட்ட முகத்தை உடையவள். சூலம், ஈட்டி, சக்ரம், பாம்பு, உலக்கை, கதை, பாசம், சக்தி சங்கு, த்வஜம், கலப்பை, அக்னி, வஜ்ரம், கேடயம் ஆகிய படைகளை - தனது பதினாறு கரங்களிலும் தாங்கியவள். பயங்கர உருவம் கொண்டவள். இந்த பத்ரகாளி ஜெயமுடன் வாழ்பவள்.

## பதினெட்டு கைக் காளி

***அஷ்டா தசபுஜா கார்யா பத்ரகாளி மனோஹரா:***
***ஆலீடஸ்தானஸம்ஸ்தானா சதுஸ்ஸிம்ஹரதே ஸ்திதா***
***அக்ஷமாலாம் த்ரிசூலம் ச கங்க சர்ம ச ஸர்வதா***
***பாண சாபௌ ச கர்த்வ்யே சங்க பத்மே ததைவ ச***
***ஸ்ருக் ஸ்ருவௌ ச ததா கார்யௌ ததா திவ்யம் கமண்டலம்***
***தண்டசக்தி ச கர்தவ்யே க்ருஷ்ணாஜின ஹு°தாசநௌ***

**ஹஸ்தானாம் பத்ரகாள்யாஸ்து பவேச்சாந்திகரோ (அபயதோ) வர:**
**ஏவம் கார்யா மஹா பாகா ரத்னபாத்ரதரா பவேத்**

ஆலீட ஸ்தானத்தில் இருக்கும் பத்ரகாளியானவள், நான்கு சிங்கங்கள் பூட்டப்பட்ட ரதத்தில் அமர்ந்தவள். 18 கைகளைக் கொண்டவள். அவைகளில் அக்ஷமாலை, த்ரிசூலம், வாள், கேடயம், வில், அம்பு, சங்கு, பத்மம், ஸ்ருக், ஸ்ருவம் கமண்டலம், தண்டம், சக்தி, மான் தோல், அக்னி, அபயம், வரதம், ரத்னபாத்ரம் இவைகளைப் பிடித்திருப்பள்.

மேலும் "வைகானஸ த்யான முக்தாவலி" என்ற நூல் மூன்றாவது பிரகரத்தில் கிழக்கு வாயிலில் ஐசானியத்தில் மஹா காளியை அமைக்க வேண்டும் என்று கூறுகிறது.

**சைத்ரார்த்ராஜநிதா லஸட்டமருகா பாதம் ப்ரஸார்ய ஸ்திதா**
**பைசாச த்வஜவாஹனா டமருகத்வானா ட்டஹாஸான்விதா /**
**பூபங்கீவிகடா கபால குண ப்ருத்தஸ்தா வகுஞ்சத்கசா**
**தம்ஷ்டிண்யார்த்ரகசூல கோக்ரனயனா ச்யாமாம்பரா ரக்ஷது //**

சித்திரை மாதம் ஆருத்ரா நட்சத்திரத்தில் பிறந்தவள். இடது காலை மடக்கி வலது காலில் நின்ற கோலத்தில் உடுக்கைப் பிடித்தவள். உடுக்கையின் ஒலியையுடையவள். பைசாசங்களை த்வஜமாகவும், வாஹனமாகவும் உடையவள். அட்டஹாஸமான சிரிப்புடன் கூடியவள். புருவத்தை நெரித்தலால் பயங்கர உருக்கொண்டவள். கபாலம், பாசம் இவைகளை இரு கைகளில் பிடித்தவள். சுருண்ட செம்பட்டையான கேசம் உள்ளவள். தெத்திப் பல் உடையவள். ரத்தத்தால் நனைக்கப்பட்ட சூலத்தைப் பிடித்தவள். உக்ரமான கண்களைக் கொண்டவள். கரிய ஆடையணிந்தவள். இந்தக் காளி நம்மைக் காப்பாற்றட்டும்.

## கம் பீஜ காளி

**கம் பீஜா ருதிராம்பரா கனருசி ரக்தோக்ரனேத் ரோஜ்ஜ்வலா**
**ப்ரூபங்கீ விக்ருதானனோர்த்வசச ப்ருஹஷ்ட்ராஹி பூஷாயுதா**
**காளீ சூல கபாலினீ ஹ'தவஹத்வானா பிசாச த்வஜா**
**வஹ்நிஜ்வால கசைர்யுதோக்ர கலாபாருடா பரண்யுத்பவா //**

'கம்' என் அக்ஷரத்தை பீஜமாகக் கொண்டவள். செந்நிற ஆடையணிந்து சிவந்த உக்ரமான கண்களையுடையவள். புருவத்தை உயர்த்துவதால் பயங்கரமான தோற்றம் கொண்டவள். மேலே உள்ள சந்திரனைப் போன்றவள் தெத்திப் பல்லையுடையவள். பாம்புகளை அணிகலனாக அணிந்தவள். சூலம், கபாலத்தை கைகளில் ஏந்தியவள். அக்னியின் ஒளியைக் கொண்டவள். ஜ்வாலா கேசம் உடையவள். உக்ரமான யானையின் மீது அமர்ந்துள்ள இவள் பரணி நட்சத்திரத்தில் தோன்றிவள்.

இந்த தாத்பர்யத்தை பிருகுவும், மரீசியும் அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள்.
மேலும் "ப்ரஞ்ச ஸார ஸங்க்ரஹம்" எனும் நூல்

**யா பஸ்மோத்தூலிதாங்கீ புஜகபரிவ்ருதா வ்யாக்ர சர்மோத்தரீயா**
**நிர்மாம்ஸி மாம்ஸ பஹீ விகத நரசிரோபந்தமால கராலீ**
**சாமுண்டா ரக்தகர்ணீ சவசயனிரதா பத்த முண்ட ப்ரசண்டா**
**நிச்சங்கா கோடராக்ஷீ பயதுரிதஹரீ பத்ரகாளி ப்ரஸன்னா //**

திருநீரு அணிந்த திருமேனியாள். அரவங்களால் சூழப்பட்டவள். புலித்தோலை மேலாடையாக அணிந்தவள். மாமிஸம் அற்றவள்: முண்ட மாலையணிந்து பயங்கரியாக காணப்படுவாள். சாமுண்டா எனப் பெயர் கொண்டவள். சிவந்த காதுகளையுடையவள். பிரேதத்தின் மேல் படுக்க விருப்பம் கொண்டவள். உள்ளடங்கிய கண்களினால் பயத்தையும், பாவத்தையும் போக்குபவள். இந்த பத்ரகாளி நமக்கு அருள் புரியட்டும்.

## சமஷ்டி காளி

**மாதர்மே மதுகைடபாக்னி மஹிஷப்ராணா ப்ராணாப ஹாரரோத்யமே**
**ஹேலாநிர்மித தூம்ரலோசன வதே ஹே சண்டமுண்டார்த்தினி**
**நிச்சேஷீக்ருத ரக்தபீஜ தநுஜே நித்யே நிசும்பா பஹே**
**சும்பத்வம்ஸினி ஸம்ஹராசு துரிதம் துர்க்கே நமஸ்தேம்பிகே //**

இந்த ச்லோகம், துர்க்கை, சாமுண்டி, மகிஷமர்த்தனி அனைவரும் அம்பிகை ஒருத்தியே என்பதை தெளிவுபடுத்துகிறது. மதுகைடபர்களை யழித்தவளே! மஹிஷனை வதம் செய்தவளே, விளையாட்டாகவே தூம்ரலோசனை ஸம்ஹாரம் செய்தவளே, சண்டமுண்டர்களை ஒழிந்தவளே, ரக்த பீஜனை மிச்சமின்றி ஒழித்தவளே, நிசும்பனை ஸம்ஹரித்தவளே, சும்பனைக் கொன்றவளே தாயாகிய துர்க்காதேவியே! பாவங்களிலிருந்து எங்களைக் காப்பாயாக.

## நாமரூப பேதங்கள்

நாம பேதமில்லாத தெய்வத்துக்கு, ரூப பேதம் என்று ஒன்று இருக்க முடியுமா? முடியாது. இருந்தாலும் மனிதன் 'தான் அதுவாக ஆகவேண்டும்' என்று நினைக்கின்றபொழுது, அவன் ஏறும் முதல் படிதான் ஸகுண உபாஸனை என்பது. அவ்வழிபாட்டில் நாம, ரூப பேதங்களை தெய்வத்தின் மேல் ஏற்றி புறக்கண்களால் கண்டு மகிழ்கின்றான்.

அம்மாதிரி உலக மக்களின் வழிபாட்டிற்காக வேண்டி காளி தேவியும் பல வடிவங்களில் உற்பவித்திருக்கிறாள்.

இதில் ஒன்பது வகையான ரூப பேதங்களையும். ஆறு வகையான ரூப பேதங்களையும் மஹா நீலக்ரமம், தோடலதந்திரம் என்ற தந்திர நூல்கள் நன்கு விவரிக்கின்றன.

**ஒன்பது வகையான பேதங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 ஸித்தி காளி | 2 மஹா காளி | 3 பத்ரகாளி |
| 4 ச்மசான காளி | 5 குஹ்ய காளி | 6 தக்ஷிண காளி |
| 7 சாமுண்டாகாளி | 8 தன காளி | 9 காமகூலாகாளி |

ஆறுவகையான ரூப பேதங்கள் இந்த ஒன்பது பேதங்களில் அடங்கிவிடுகின்றன. இவைகளில்லாமல் சில பழைய நூல்கள் "அஷ்ட காளிகள்" என்று எட்டு வகையான ரூபபேதங்களைத் தெரிவிக்கின்றன.

| | |
|---|---|
| 1 காளி | 2 ஸ்ரீ காலராத்திரி |
| 3 ஸ்ரீ சாமுண்டி | 4 ஸ்ரீ சர்வய முண்டி |
| 5 ஸ்ரீ பத்ரகாளி | 6 ஸ்ரீ மஹா காளி |
| 7 ஸ்ரீ சரசண்டிகை | 8 பைரவி |

காளியின் ஒன்பது வகை ரூபபேதங்களில் குஹ்ய காளியும், தக்ஷிணகாளியும் மிகவும் முக்கியம் வாய்ந்த தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர்.

எப்படியிருந்தபோதிலும் மூலசக்தி ஒன்றுதான் என்பதை நாம் மறுக்க முடியாது.

குணங்களுக்கு அப்பாற்பட்டவள், எல்லையில்லா அந்த மாக சக்தியானவள், குணபேதங்களுடன் ஆவிர்பவித்திருந்த போதிலும் ஸுந்தரிக்கும் காளிக்கும் பக்தர்கள் வேற்றுமை பாராட்ட கூடாது. அப்படி வேற்றுமை பாராட்டுபவனைக் கண்டால் உபாஸகன் மீண்டும் தீக்ஷாதி பூர்ணாபிஷேகம் செய்துகொள்ள வேண்டும்.

**தாராகாண்டே காளி விவரணம்**
**நாம அஷ்ட பஞ்சமாதி படல : **
**காளீ ஸுந்தர் யந்தரம் த்யா :**
**பச்யதி மஹேச்வரி **
**ஸபாபிஷ்டோ மஹாதுர் க்கி**
**ரௌரகம் நரகம் வ்ரஜேத் **
**தஸ்ய தர்சனஜம் பாபம் கோ**
**தாசிக துத்தமிச்யதி **
**ப்ரமாதாத் தர்சனம் சேத்ஸ்யாத்**
**புனர் தீக்ஷாம் ஸமாசரேத் **
**பூர்ணாபிஷேக தீக்ஷாது புன :**
**கார்யாம் மஹேச்வரி **
**புனதீக்ஷா விதனேன வித்யா**
**ஸித்யதி ந அன்யதத **

என்று "சக்தி சந்தம தந்திரம்" - தாரா காண்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உ
அம்பாள் துணை




# எங்கள் பத்திரகாளி

## அற்புதங்கள் செய்யும் அருளன்னை

வே. வரதசுந்தரம்



ஆதிமூலம் அம்பாள் எண்ணெய்க் காப்புடன் அருள் பாலித்தல்.



சைவநீதி உலகமெல்லாம் பரவ சிவதர்மம் தளைக்க அம்பிகை மூலம் அடியார்களுக்கு அருள் பரப்பும் அந்தணப் பெருநதகை "ஆதீன கர்த்தா" வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள்.



காராம் பசு வாகனங்களில் மும்மூர்த்திகள் வீதி உலா.



கௌரி அம்பாளுக்கும் கேதாரகௌரி நாதருக்கும் ஆலாத்தி எடுத்தல்.



ஆதீனகர்த்தா. அவர்கள் உற்ஸவத்திற்கு சிவாச்சாரியாராக இருந்து தம்பத்துக்கு அபிஷேகம் செய்தல்.



இடப வாகனத்தில் மும்மூர்த்திகள் வீதி உலா.




அன்ன வாகனங்களில் மும்மூர்த்திகளுடன் கௌரி அம்பாள் கௌரீஸ்வரரும் வீதி உலா.



மகர வாகனமும், தாமரை புஸ்பத்தில் மும்மூர்த்திகள் வீதி உலா.



குதிரை வாகனங்களில் மும்மூர்த்திகள் வீதி உலா.



நவராத்திரியில் மகாலட்சுமியின் அலங்காரத் தோற்றம்.



நவராத்திரியில் மகிடாசுரன் போர்.



வைகாசிப் பொங்கலைப் பொங்குவதற்கு அக்கினி பூஜை.



அம்பாள் தேரில் ஆரோகணிப்பதற்கு இந்தியாவி லிருந்து அழைக்கப்பட்ட செவ்வந்தி, மல்லிகை, மருக்கொழுந்து மாலைகளுடன் வீதி உலா வருதல்.



தமிழ் நாட்டிலிருந்து காஞ்சி மடத்தில் வைத்து ஆசிர்வாதம் செய்து கொண்டுவரப்பட்ட மகாமேரு யந்திரம்.



மகாமேரு யந்திரத்திற்கு சுவாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் கும்பாபிஷேகம் செய்தல்.



ஸ்ரீ சக்கர கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தீபாராதனை.



மகாமேரு யந்திரத்திற்கு பஞ்சாமிருதஅபிஷேகம்.



21. கும்பாபிஷேக தினத்தன்று இரவு வசந்த மண்டபப் பூஜை.



22. கும்பாபிஷேக தினத்தன்று மும்மூர்த்திகள் வீதிவலம் வருதல்.



23. அம்பாள் புதிய மஞ்சத்தில் வீதிவலம் வருதல்.



24. சித்திரத் தேரில் அம்பாளின் திருக்கோலம்.



25. நவராத்திரியில் மயில் வாகனத்தில் கொலுவிருத்தல்



கேதார கௌரி நாதரும் கௌரி அம்பாளும்.



31. திருவிழாவில் ஒரு காட்சி.



32. புராதனமான சிங்க வாகனத்தில் அம்பாளின் திருக்கோலம்.



நவராத்திரி விழாவில் அம்பாள் சம்மாரத்துக்குப் புறப்படல்.



34. மும்மூர்த்திகள் சப்பரத்தில் வீதிவலம் வருதல்.



35. சர்ப்ப வாகனங்களில் மும்மூர்த்திகள் வீதி உலா.



36. கைலாச வாகனத்தில் மும்மூர்த்திகள் வீதி உலா.



இராஜ கோபுர மண்டபத்தின் சிற்ப வேலைகள்.




இராஜ கோபுர மண்டபத்தின் சிற்ப வேலைகள்.



இராஜ கோபுரம், துர்க்கை அம்மன் கோபுரம், மணிக்கூட்டுக் கோபுரக் காட்சிகள்.



புதிய மூலஸ்தானத்தின் பிற்பக்கம்.



இராஜ கோபுர மண்டபத்தில் அம்பாளின் தோற்றம்.



தீபஸ்தாபனம் செய்தவற்கு சிவப்பிராமண சுமங்கலிகள் தீபங்களுடன் வலம் வருதல்.



ஆலடி விநாயகர் ஆலயமும், அம்பாள் ஆலயமும் அருட்கோலம்.



அம்பாளின் ஆலய முழுத்தோற்றம்.




மூலஸ்தானத்தின் வடக்குப் பக்கம்.



எழுந்தருளி அம்பாளின் ஸ்தூபி அபிஷேகம்.



இராஜ கோபுரக் கும்பாபிஷேகம்.



திரிதள விமானக் கும்பாபிஷேகம்.



இராஜகோபுர கும்பாபிஷேகத்திற்கு கிரேன் மூலம் கோபுர உச்சியை அடைதல்.




அம்பாளின் பழைய மூலஸ்தானத் தோற்றம்.




தெற்குப் பக்கத்தில் அம்பாளின் திருவுருவங்கள்.



புதிய மஞ்சத்தை உருவாக்கிய இராஜரட்ணம் ஆசாரியார்கள் அவர்களை இரா. சம்பந்தன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்.




ரத உற்சவத்தில் அடியார்கள் அங்கப் பிரதட்சிணம்.



இராஜ கோபுர அடிக்கல் நாட்டுவதற்கு திரு. திருமதி ரவிச்சந்திரக் குருக்கள் ஆதீனகர்த்தா அவர்கள், ரவீந்திர ராஜா ஆசாரி அவர்கள் சாமி விஸ்வநாத குருக்கள் அவர்கள் வீதி வலம் வருதல்.




இராஜ கோபுரம் அத்திவாரம் இடுவதற்கு ஆதீனகர்தா அவர்களுடன் அடியார்கள் வலம் வருதல்.



சுவாமி ஆத்மகனானந்தாஜீ அவர்களுக்கு மலர் மாலை சூட்டி அத்திவாரக் கல் வைப்பித்தல்.




அத்திவாரக் கிரியையில் எஜமான் சங்கற்பம்.



அத்திவாரக் கிரியையில் சிவாச்சாரியார் பூமிபரீட்சை செய்தல்.



அடியார் ஒருவர் அத்திவாரக் கல் இடுதல்.



ஆலடி விநாயகர் பிரதமகுரு சு. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்கு சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் சங்கு ஸ்தானத்திற்கு வலம்புரிச் சங்கு கையளித்தல்.



சு. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் வலம்புரிச் சங்கில் நவரத்தினம் பஞ்சலோகம் நவதானியம், சுவர்ணம் இடல்.



கும்பாபிஷேகக் கிரியையில் சந்தியா வந்தனக்கிரியைகள்.




சிவாச்சாரியார் தாரா ஹோமம் செய்தல்.



ஆதீனகர்த்தா விநாயகர் தானிய வாசம் கிரியைகள் செய்தல்.



எஜமான் சங்கற்பம்.



கும்பாபிஷேகக் கிரியையில் திரவியபாகம்.



ஆதீனகர்த்தா சாமி விஸ்வநாதக் குருக்களுக்கு இரட்சாபந்தனம் செய்தல்.



கோபுரக் கலசங்கள் வீதி வலம் வருதல்.



கோபுரக் கலசங்கள் வீதி வலம் வருதலும் ஆசாரியார் க. ரவீந்திரராஜா அவர்களும்.



பிரம்மாண்டமான மகா யாகம்.



பிரதான கும்பம் மகா யாகம் பிரவேசம்.



பிரதான கும்பங்கள் வீதி வலம் வருதல்.



கும்பாபிஷேகத்தில் கஜ பூஜை.




தீபஸ்தானத்தில் ஆதீனகர்த்தாவும், பாரியாரும், சிவாச்சாரியாரும்.



எண்ணெக்காப்பிற்கு அடியார்கள் தவமிருத்தல்.




சிவாச்சாரியார்கள் வீதி வலம் வருதல்.



. மிருத்சங்கிரகணம் கிரியைகள்.



கும்பாபிஷேகத்தன்று இரவு சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்கள் ஸ்ரீ சக்கர பூஜை செய்தல்.



மண்டலாபிஷேகத்தில் அம்பாளின் அருட்கோலம்.



கும்பாபிஷேகத்தில் அடியார்கள் திருக்கூட்டம்.



கும்பாபிஷேகத்தில் சிவாச்சாரியார் ஓமம் வளர்த்தல்.



வசந்த மண்டபத்தில் எழுந்தருளி மூர்த்திகள்.




துர்க்கை அம்மன் ஆலயம்.




85. சுவாமி ஆத்மகனானந்தாஜி அவர்களைக் கௌரவித்தல் அருகில் இரா. சம்பந்தன் ஆசாரியார் ரவீந்திர ராஜா அவர்கள்.




86. கௌரி அம்மன் இராஜ கோபுரம்.



சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களை ஆதீனகர்த்தா அவர்கள் கௌரவித்தல்.




88. சாமி விஸ்வநாதக் குருக்கள்அவர்களை சோ. ரவிச்சந்திரக் குருக்கள் கௌரவித்தல்.




ஸ்தபதி ச. சிவசோதிலிங்க ஆசாரியார் அவர்களுக்கு கௌரவித்துப் பாராட்டுப்பா வழங்குதல்.



90. இந்திய சிற்பி இராஜேந்திரன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தல்.



91. தாம்பரம் முத்துக்குமாரசுவாமி குருக்களைக் கௌரவித்தல்.



92. ரவீந்திரராஜா ஆசாரியாருக்குப் பொன்னாடை போர்த்தல்.




93. திருப்பணியை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தை நடாத்திய ஆதீனகர்த்தா அவர்களை ஆலடி தேவஸ்தான தர்மகர்த்தா க. கு. முத்துகுமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் கௌரவித்தல்.



94. கும்பாபிஷேகத்தை மகிமைப்படுத்தி ரவிச்சந்திரக் குருக்களுக்கு ஆலடி விநாயகர் ஆலயத்தால் சு. முத்துக் குமாரசுவாமிக் குருக்களும், மு. சுந்தரலிங்கதேசிகரும் பராட்டுப்பா வழங்குதல்.



95. சோ. ரவிச்சந்திரக் குருக்கள் அவர்களுக்கு வர்த்தகர் துரைராஜா அவர்கள் பட்டாடை போர்த்தல்.



96. திருப்பணி ஆரம்பத்தில் ஆலடி விநாயகர் ஆலயத்தில் ஆதீனகர்த்தா அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மு. சுந்தரலிங்க தேசிகர் அவர்கள் விநாயகரின் திருவருளை நினைந்து ஆசிகூறி பொன்னாடை போர்த்தல்.



ஓவியக் கலைஞர் ராஜ்பதிஅவர்களுக்கு வாழ்த்துப்பா வழங்கல்.



98. மயூராபதிஅம்பாள் கும்பாபிஷேகத்தில் சோ. ரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் கிரியைகளில்பங்கேற்றல்.




99. மருத்துவமனை விநாயகர் ஆலயத்தில் ஆதீனகர்த்தா அவர்களைக் கௌரவித்தல்.



100. மருத்துவமனை விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேக மலர் வெளியிட்டு வைத்தல்.




இந்து கலாசார அமைச்சின் மூலம் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் ஆதீனகர்த்தாவுக்கு "வேதாகம மாமணி" பட்டம் வழங்குதல்.




மகாமேரு பிரதிஸ்டையில் வேதபாராயணம் செய்த சிவஸ்ரீ சுப்பராமன் ஐயர் அவர்களைப் பாராட்டுதல்.



ஆலடி விநாயகர் ஆலயத்தில் மணிக்கூட்டுக் கோபுரக் கும்பாபிஷேகத்தை ஆதீனகர்த்தா ரவிச்சந்திர குருக்கள் செய்து வைத்தல்.



ஆலடி விநாயகர் கும்பாபிஷேகத்தை தலைமை தாங்கி ஆதீனகர்த்தா அவர்கள் மகா விஷ்ணு பிரதிஷ்டை செய்தல்.



கௌரி அம்பாள் சமேத கேதார கௌரிநாதர்.



ஆலடி விநாயகர் ஆலயத்தில் மணிப் பிரதிஷ்டை கிரியைகளை
ரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் செய்தல்.



மருத்துவமனை விநாயகர் ஆலயத்தில் ரவிச்சந்திரக்
குருக்கள் அவர்கள் கும்பாபிஷேகம் செய்தல்.



இரத்தினசிங்க பிள்ளையார் ஆலயத்தில் ரவிச்சந்திரக் குருக்களும், இராஜராஜேஸ்வர குருக்களும் கும்பாபிஷேகக் கிரியைகளில் பங்கேற்றல்.



திருக்கோணேஸ்வரர் ஆலயம்.

உ

# எங்கள் பத்திரகாளி

பகலவனுக்கு வெப்பத்தையும், சந்திரனுக்குக் குளிரையும் தருபவள் அவள்.

மேகமெனக் கறுத்தவை அவள் கூந்தல்.

அடியார்கள் வேண்டுதலைச் செவி சாய்ப்பவை அவள் செவிகள்.

ஆறாம் பிறை அவள் நெற்றி.

கண்ணனின் போர்வில் அவள் புருவங்கள்!.

கருநீல மலர், கலைமான் நோக்கு, அவள் விழி!

உதிரத்தின் நிறத்தை பட்டென்று காட்டும் அவள் செவ்விதழ்!.

அடியவர்கள் துன்ப மலைகளைச் சுமப்பவை அவள் தோள்கள்.

தருமத்தைக் காப்பவை அவள் மென்கரங்கள்.

பாலாபிடேகத்தில் ஒளி சிந்தி பக்தர்களைக் காப்பவை அவளிரு பாதங்கள் - இதுவே அம்பாளின் அருட் தோற்றம்.

நீராடி, புத்தாடை புனைந்து, நேர்ந்து நிற்கும் கன்னியர் காளையர்க்கு அம்பாள் நிழலானவள்!

கல்யாணமாகாத காளையர் கன்னியர்க்கு மாங்கல்ய பாக்கியம் தருபவள்!

மகவின்றி வாடும் தம்பதியர்க்குக் குழந்தைப் பாக்கியம் தருபவள்!

துன்பத்தில் துவள்வோர்க்கு நிம்மதி தருபவள்!

சாவோடு போராடும் நோயாளர்க்குப் புது வாழ்வு தருபவள்! எங்கள் பத்திரகாளி! இப்படித்தான் தென்கோணைப் பிராட்டியை நாம் ஆராக் காதலுடன் பயபக்தியுடன் அன்புரிமை பாராட்டி அழைப்போம் தலை சாய்ப்போம். நெஞ்சத்தை அவள் திருத்தாளில் வீழ்த்துவோம். கைகூப்பி ஏத்தித் தொழுவோம்.

சர்வ மங்களங்களையும் நமக்கு அளிப்பதால் அவள் பத்திரகாளி ஆனாள்.

'இரவில் நீ நித்திரைக்குப் போனபின் நடப்பதொன்றும் உனக்குத் தெரியாது. உன்வீடு, உன்வாசல், பொருள், பண்டம், காசு, பணம், ஆடு, மாடு யாவற்றிற்கும் காவல் யார்? ஆரோ ஒருவன் இவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கிறான் தானே?

காலையில் எழுந்தவுடன் நீ ஏன் என் வீடு, என் மாடு, என் பிள்ளை, என்று நினைத்து கூத்தாடுவான்? இரவில் காப்பாற்றியவன் பகலில் காப்பாற்றமாட்டானா?' இது யோகர் சுவாமிகளின் சிந்தனை. பற்றற்ற மனத்துடன் அம்பாளிடத்து நாம் சரணடைய வேண்டும். உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று மனவுறுதி பெற வேண்டும்.

காளி ஆச்சி என்றால் எமது அகக்கண் முன்னே பத்திரகாளி அம்மனின் அழகிய வடிவம் தோன்றும். உடலெல்லாம் புல்லரிக்கும் மெய் விதிர் விதிர்க்கும் உள்ளம் கனிந்துருகும்.

பக்தர்கள் இறைவனைப் பல்வேறு வகையாகப் பாவனை செய்து வழிபடுவர். தோழனாகத் தலைவனாக ஆண்டாளாக அன்னையாக இப்படிப் பல. இவற்றுள் இறைவியைத் தாயாக வழிபடும் போது இறுக்கமான அன்பு மலர்கிறது. இறைவனிடத்து தாய் சேய் உறவு மலர்கிறது. இறைவி பால் நினைந்தூட்டும் தாயாகத் தோன்றுகிறாள். திருகோணமலை பத்திரகாளி கோயிலில் பக்தர்களிடையே பயபக்தி உணர்வு பரந்து காணப்படுகிறது.

வறுமையில் வாடும் போது, வாழ்விலே துன்பம் ஏற்படும் போது எமது முயற்சிகள் தோல்வியைத் தழுவும் போது, நோய் பிணியினால் அவதியுறும் போது நாம் வழிபாட்டில் ஈடுபடுவோம். ஆனால் வாழ்க்கையில் ஏறு நடை போடும் போது, செல்வ வளம் செழித்துக் காணும் போது, இறைவனை மறந்து விடுவது நமது மனித இயல்பு.

துன்பத்தை இறைவனுடன் பகிர விரும்புகிறோம் இன்பத்தை மட்டும் அவனுடன் பகிர்ந்து கொள்ள எமது ஏழை மனம் நாடுவது இல்லை. நலம் பல நல்கியமைக்கு நாம் இறைவனுக்கு நன்றி கூறுகிறோமா? அதுதான் இல்லை உண்மையான வழிபாடு கூட சில வேளைகளில் பலனளியாது போகலாம். வழிபாட்டினால் எமது தேவைகள் நிறைவேறத் தவறும் போது நாம் மனச் சோர்வடையக் கூடாது.

அத்தகைய வேளைகளில், அதனை எமது இறை நம்பிக்கைக்கு வந்த சோதனையாக நாம் கருத வேண்டும். இதன் காரணமாக நமது வழிபாட்டில் பின்னடைவு வரக்கூடாது.

வினைப்பயன்படி அனைத்தும் நடைபெறும் என்று தெளிவு பெற வேண்டும். ஆனால் வழிபாடு அவற்றுக்கு முகம் கொடுக்கும் திராணியை நமக்குத் தரும். எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும். அதே வேளை வழிபாட்டின் மூலம் இறையருள் பெற்று அத்துன்பத்தைக் குறைக்கலாம். ஏன் சில வேளைகளில் வழிபாடு மூலம் இறையருள் பெற்று தலையெழுத்தையும் மாற்றலாம். "அவன் தாள் பட்டு அழிந்தது என் தலை எழுத்தே" என்ற அடியின் மூலம் இதனை நாம் அறியலாம்.

என் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்ற சரணாகதி உணர்வு வழிபாட்டின்போது முதன்மை பெறவேண்டும். வழிபாடு எம்மை இறையுடன் இணைக்கும். மனவுறுதி தரும். எமது உள்ளத்து அழுக்குகளைப் போக்கும். தூய உள்ளம் மலரும். வழிபாடும் தியானமும் சாந்தியைத் தந்து எமக்கு ஆன்மீக ஈடேற்றத்தையும் தரும்.

இதனை உணர்ந்தோ என்னவோ திருகோணமலை பத்திரகாளி கோயிலில் பக்தி உணர்வும் பக்தி அலையும் பெருகக் காண்கிறோம்.

## தெய்வ சங்கற்பம்

ராமேஸ்வரத்தில் வாழ்ந்த ஓர் அந்தணருக்கு ஓர் அசரீரி கேட்டது. "திருக்கோணேஸ்வரம் செல் அங்கே குறிப்பிட்ட ஓர் இடத்தில் தொங்கு செவ்வரத்தை மரம் ஒன்றின் கீழ் ஒரு விக்கிரகம் உண்டு. அதனை எடுத்துப் பூசை செய் " என்பதே அந்த அசரீரி. அசரீரி சொன்னவாறு பிராமணர் திருகோணமலை வந்து கிடங்கினைத் தோண்டியபோது, அங்கே ஒரு செப்புக் கிடாரம் காணப்பட்டது. அக்கிடாரத்தினுள் ஓர் அம்மன் விக்கிரகம் காணப்பட்டது.

இவற்றை ஆராய்ந்த தொல்பொருளியல் அறிஞர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்:-

"செப்புக் கிடாரத்தினையும் வடிவமைப்பினையும் உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப் பழமை வாய்ந்ததொன்றாகவே இக்கிடாரம் காணப்படுகிறது.

காளி அம்மன் விக்கிரகத்துடைய வடிவமைப்பு ஏறத்தாழப் பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோயில்களில் பேணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாக காணப்படுகிறது".

அந்த நாளில் இருந்து இன்று வரை இவ்விக்கிரகம் புனிதமாகப் பேணப்பட்டு வருகிறது. திருவிழாக் காலத்தில் இவ்விக்கிரகம் இன்றும் முதன்மை பெறுவதைக் காண்கிறோம். கிடாரத்தினுள் காணப்பட்ட அம்மன் விக்கிரகமும் அது, கண்டெடுக்கப்பட்ட காட்சியும் தத்ரூபமாக கோயில் தேரில் விபரிக்கப்பட்டுள்ளது.

பத்ரகாளி அம்மன் கோயில் தோற்றமே ஒரு தெய்வ சங்கல்பம் அன்றோ!

## காவல் தெய்வம் காளி

திருக்கோணமலையில் கோணேசர் ஆலயத்தைச் சூழ்ந்து எல்லைக் காளியம்மன் கோயில்கள் நிறைந்து காணப்படுகின்றன.

திருக்கோணமலை பத்திர காளி அம்மன் உப்புவெளிக் காளி, பறையன் குளம எல்லைக் காளி, படுக்கைப் பத்திர காளி, சம்பூர் பத்திர காளி, பாலம் போட்டாறு பத்திர காளி, திருக்கோணமலை மாரியம்மன், தம்பலகாமம் முத்துமாரியம்மன், நிலாவெளி முத்துமாரியம்மன், மாங்கிணாய் மாரியம்மன், சல்லி முத்து மாரியம்மன், கிளிவெட்டி முத்துமாரியம்மன்என்பன கோணேஸ்வரத்தில் உள்ள காளி கோயில்களாகும்.

சோழ மன்னர்கள் இலங்கையில் ஆட்சி செலுத்திய காலத்தில் கோணேஸ்வரத்தில் இவ்வாறு பல எல்லைக் காளிகள் அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வாறாக அமைந்துள்ள காளி கோயில்களில் திருகோணமலைப் பத்திரகாளி கோயில் முதன்மை பெற்று விளங்குகிறது. வெள்ளம், சூறாவளி, கடல் கோள், கலாச்சாரப் படையெடுப்பு இன்னோரன்ன அனர்த்தங்கள் நிகழ்ந்த போதும் திருக்கோணமலை மக்கள் தமது தனித்துவம் பேணி வாழ்வதுடன் பாதுகாக்கப்பட்டுள்ளனர். இது உண்மையிலே அம்பாளின் அருட் கருணை என்று அவர்கள் நம்புகின்றனர்.

இதனாலே பத்திரகாளி அம்பாள் எங்கள் காவல் தெய்வமாகிறாள்.

## பானை பிடித்த பாக்கியம்

கோயில்கள் நிறைந்த காஞ்சியில் அவள் காமாட்சி கலைமகளையும், திருமகளையும், கண்ணாக உடையவள் என்பது பொருள். இப்படிப் பொருள் பொதிந்த பெயர் காமாட்சி கலைமகளையும் திருமகளையும் தனது இரு கண்களாக உடைய காமாட்சி தனது அடியவர்களுக்கு நிகரற்ற அறிவுச் செல்வம், பொருட் செல்வம் ஆகிய இருவகைச் செல்வங்களையும் அள்ளி வழங்குவாள்.

தனது கணவன் வழங்கிய இரண்டு நாழியளவு நெல்லை வைத்து முப்பத்தியிரண்டு அறங்களை வளர்த்தவளல்லவா காமாட்சி எனவே அறம் வளர்த்த நாயகியானாள்.

மீன் போன்ற விழிகளை உடையவள் மீனாட்சி. தான் இட்ட முட்டைகளைத் தனது கண் பார்வையால் குஞ்சு பொரிக்கச் செய்யும் மீன் போன்று, தனது அடியவர் தம் துயர் போக்குபவள் மீனாட்சி. கணவனின் புகழ் சௌபாக்கியத்தை உயர்த்துபவள் அவள்.

சுந்தர பாண்டியனான சிவன் மீனாட்சியான தடாதகையைத் திருமணஞ் செய்தான். சிவனது சடாமுடி மணி முடியாயிற்று. கொன்றை மாலை அணிந்தவன் வேப்பம்பூ மாலை அணிந்தான். பாம்பினை அணிந்தவன் மாணிக்கச் சுடர் அணிந்தான். விடைக் கொடி பிடித்தவன் கயற்கொடி பிடித்தான். ஆண்டி அரசன் ஆனான். இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? பானை பிடித்தவள் பாக்கியம் சொக்க நாயகி கை பிடித்ததால் இவருக்கு இச் சிறப்புக்கள் வந்தெய்தின.

'சொக்க நாயகியாள் பானை பிடித்த முகூர்த்தத்தினால் வந்த பாக்கியமே - இப்படிப் பாடுவார் பலபட்டடை சொக்கநாதப் புலவர்

அவள் அடியவர்களாகிய நாம் பாக்கியசாலிகள் எனலாம்.

## அம்பாளை நொந்த அடியார்

நமசிவாயர் என்றொரு பக்தர் இனிய தமிழ் கவிதைகள் பாடி அன்னையை ஏத்துவார்.

பாபாநாசத் திருக்கோயிலில் இருந்து வெளியே வருகிறார். 'அன்னையே நான் உன் புகழ்பாடுகிறேன் நீ என் பாடல்களை ஏற்று மகிழ்வாயோ - இல்லை இகழ்வாயோ யான் அறியேன் காயோ, பழமோ நான் என் பணி செய்வேன்'

இப்படி அவர் பாடிப் பரவுவார். அவருக்கு வெற்றிலை போடும் பழக்கம் உண்டு. கோபுர வாசலில் இருந்து வெற்றிலை உண்டபடி அன்னை எண்ணத்துடன் நடந்தார்.

'பொன்னை நொந்தால் பொன் கிடைக்குமா. என் வினையை நொந்தால் என்னாகும். என்னை நொந்தால் துன்பமே. எனவே நான் உன்னை நொந்து கொள்கிறேன் அம்பாளே!' இப்படி அவர் பாடினார் இதோ அப்பாடல்

பொன்னை நொந்து கொண்டால்
அப்பொன் வருமோமுன்னை வினை
தன்னை நொந்து கொண்டால்
அத்தன்மை நன்மை ஆயிடுமோ?
என்னை நொந்து கொள்கிலனால்
இன்பமின்றி துன்பம்வரின்
உன்னை நொந்து கொள்வேன்
உலகுடைய மாதாவே!

இப்பாடலைப் பாடியவாறு வெற்றிலை உண்ட எச்சிலைத் துப்பியவாறு அவர் நடந்தார். ஆனால் பின்னால் யாரோ வருவது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஆளரவம் அவருக்கு கேட்டது. ஆனால் பின்புறம் திரும்பித் திரும்பிப் பார்க்க, ஒருவரும் காணப்படவில்லை.

அடுத்த நாட் காலை அர்ச்சகர் ஆலய சந்நிதியைத் திறந்தார். அன்னையின் திருமேனியின் ஆடை முழுதும் சிவந்த வெற்றிலை எச்சில் இருந்தமை கண்டு திகைத்துப் போனார். அர்ச்சகர் மதுரைச் சிற்றரசனிடம் முறையிட்டார். இப்படியும் நடப்பதா என்று அவனும் சீற்றம் அடைந்தான். அன்றிரவு அவன் கனவில் அன்னை தோன்றினாள்.

'என்னைப் பாடிப் பரவுவார்களில் நமசிவாயம் சிறந்தவன் அவன் பாடல் கேட்டு இன்புற வேண்டி அவன் அறியா வண்ணம் அவனைப் பின் தொடர்ந்தேன். அவன் எச்சிலைத் துப்பியவாறு செல்ல அதுவே என் மீது பட்டது. அவன் பாடல் இனிமையானவை - இப்படி அன்னை சொன்னாள' என்றாள் அவள் கருணை தான் என்னே.!

அன்பு மிக்க உள்ளத்துடன் அன்னையைப் பாடினால் அவள் எம்மை ஆட்கொள்ளுவாள்.

## அம்பாள் சோறு தருவாள்

அன்புடை அடியார்கள் இடும் பணிகளைக் கூட அம்பாள் நிறைவு செய்வாள்.

அபீத குசாம்பிகை அம்பாளை வழிபட்ட குருநமசிவாயர் பசியால் வாடினார். பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்பார்களே! அப்படி அவர் துடித்துப் போனார்.

'மெத்தப் பசிக்குதையா
பாவியென் பாழ்வயிற்றைப்
பற்றி எரிக்குதையா'

என்று அவர் மனம் வருந்திப் பாட அன்னை அமுது அளித்து மகிழ்ந்தாள்.

மின்னும் படி வந்த மேககளத்து ஈசருடன்
மன்னும் திருமுகத்து வாளியே - பொன்னின்
மலையாளே! தாயே! வன்மனத்தே நின்ற
மலையாளே! சோறு கொண்டு வா!

இப்படி அவர் பாடி அம்பாள் அருள் துய்த்தார்.

அவள் அடியார்கள் பசி கிடக்க அம்பாள் பார்த்திருக்காள். அமுது படைப்பாள் என்பது திண்ணம். அவளைப் பிரார்த்தித்து அவளருள் துய்ப்போம்.

## சிவலிங்கத்தை வழிபட்ட அம்மை

ஒரு நாள் அன்னை ஆற்றங் கரையில் மணலினால் இலிங்கம் செய்து வழிபாடு செய்கிறாள். இதனைக் கண்ணுற்ற இறைவன் திடீரென வெள்ளப் பெருக்கு வரச் செய்கிறான். ஆறு பெருக்கெடுப்பது கண்ட அம்மை தனது இலிங்கத்துக்கு என்னவாகுமோ, ஏதுவாகுமோ என்றஞ்சுகிறாள். துடித்துப் போகிறாள். விரைந்து சென்று இலிங்கத்தை அம்மை கட்டித் தழுவுகிறாள். இதைச் சுந்தரர் அழகாகப் பாடுவதைப் பாருங்கள்.

எள்களின்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள்போல்
உள்ளத்துள்கி உகந்து உமைநங்கை
வழிபடச் சென்று நின்றவாகண்டு

வெள்ளங்காட்டி வெருட்டிட அஞ்சிவெருவி
ஓடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக் காண
கண்ணடியேன் பெற்றவாறே

கடலலை வெள்ளமாக வந்து தனது மணலினாலான லிங்கத்தை மோத அன்னை அச்சமடைகிறாள். ஓடோடிச் சென்று தழுவுகிறாள்.

சிறுவர் சிறுமியர் கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடுவதும் பின்னர் அவற்றைச் சில வேளைகளில் கடலலை அழித்து விடும் போது அவர்கள் அழுவதும் நாம் கண்டிருக்கிறோம்.

அச்சிறார்களைப் போல அன்னை துடித்துப் போகிறாள். துன்பமடைகிறாள். என்னே அவள் நெகிழ்வுணர்வு!

## கம்பனுக்கு அருளிய காளி

கம்பன் இரவிரவாகக் கண் விழித்து இராமாயணப் பாடல்களைப் பாடிய கவியரசன்

'விழுந்த ஞாயிறு எழுவதன் முன்
வேதியருடன் ஆராய்ந்து
எழுந்த ஞாயிறு விழுவதன்முன்
கவிபாடினான் எழுநூறே' என்பர்

விடியற்காலை அம்பாள் 'விடிந்தது கம்பா' என்று கூற 'முடிந்தது அம்பா' என்று கம்பர் கூறியதாக அறிகிறோம்.

கம்பர் இரவிரவாகப் பாட மாணாக்கர்கள் எழுதிட திருவொற்றியூர்க் காளி தீவட்டி பிடித்தாள் என்றால் பாருங்களேன் அவள் பாவலருக்கு வழங்கும் உற்சாகத்தை

'ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர்க் காக்குதன் மெய்ச்சரிதை - பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணாக்கர்
பிந்தாமற் பந்தம் படி'

என்ற பாடல் இதனைக் கூறுகின்றது.

மாதுளங் கனியை சோதி
வயங்கு இருநிதியை வாசத்
தாதுஉகு நறுமென் செய்ய
தாமரைத் துணைமென் போதை

மோது பாற்கடலில் முன்நாள்
முளைத்த நால்கரத்தில் ஏந்தும்
போது தாயாகத் தோன்றும்
பொன்னடி போற்றி செய்வாம்

காளி கடாட்சம் கம்பருக்கு நிறையவே இருந்தது. கம்பர் சரஸ்வதி தேவி மீது பாடிய பாடல்கள் தோத்திரஞ் செய்ய வேண்டியவை.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்குவாராது இடர்

## கோணையப்பனை நோக்கும் பிராட்டி

**மலைமகள் சிறு பிராயத்தில் தவஞ் செய்யச் செல்கிறாள். அப்பொழுது அவள் பெற்றோர் 'அம்மா ! வேண்டாம்' என்றார்கள்.**

உ_(அம்மா) மா (வேண்டா) என்று பொருள்பட உமா என்ற பெயர் வழங்கலாயிற்று என்பார்கள் அறிஞர்கள்.

இமயமலை மன்னன் தனக்கு சிவசக்தி மகளாகப் பிறக்க வேண்டும் என்று தவமியற்றினான். அவன் தவஞ் செய்கையில் பொய்கை ஒன்றில் அழகிய தாமரை மலர்ந்திருக்க அதன் கண்ணே அழகிய குழந்தையாக அம்பிகை இருந்தாள். அதனை அவரும் மனைவியும் வளர்த்தனர். சிவபெருமானுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தனர்.

பிருங்கி என்ற முனிவர் தினமும் சிவனை வழிபட்டு வந்தார். ஒரு நாள் இவர் வழிபடச் சென்ற வேளை சிவன் உமையுடன் இருந்தார். பிருங்கி முனிவர் அவர்கள் இடையே சென்று சிவனை மட்டும் வலம் வந்தார்.

தன்னை உதாசீனஞ் செய்ததாக வருத்தப்பட்டாள் உமையாள் "இறைவனும் இறைவியும் ஒன்றே என்பதை இப்பக்தன் அறியான் போலும். இருவரும் ஒரு வடிவமாகத் தோன்றினால் இவ்வடியான் அப்படிச் செய்வானா? எனவே தங்கள் உடலில் ஒரு பாதியை எனக்குத் தாருங்கள;"

இப்படி உமையாள் வேண்ட சிவபிரான் தன்னுடலில் ஒரு பாகத்தை சரிபாதியை உமையாளுக்குக் கொடுத்தார். பகவன் ஆனார். அர்த்தநாரீஸ்வரர் வடிவம் தோன்றியது.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்ற வள்ளுவன் கூற்றினை எண்ணிப் பார்க்கலாம்.

இறைவனை அர்த்த நாரீஸ்வர வடிவாகக் கண்டவர்கள் நமது முந்தையர். இறைவியை இடப் பாகத்தே வைத்திருப்பவன் என்பதால் அவன் பகவன் ஆனான்.

திருஞான சம்பந்தர் தான் பாடிய முதற் பாடலில் இறைவனை அர்த்த நாரீஸ்வரராகக் காண்கிறார்.

"தோடுடைய செவியன;;" என்று தன் பாடலைத் தொடங்குகிறார். தோடுடைய செவியள் என்று பாடவில்லை. இடப்பாகத்தில் இறைவி இருப்பதால் அச்செவியினை தோடு அலங்கரிக்க இறைவனை "தோடுடைய செவியன்" என்று பாடுகிறார்.

இதே போன்று திருக்கோணமலைப் பதிகத்தை தொடங்கும் போது "நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர்" என்று கோணநாயகனைப் பாடித் துதிக்கின்றார்.

கோணேசப் பெருமானின் ஒரு திருவடியில் ஆண்கள் அணியும் திருக்கழலும் மற்றைய திருவடியில் பெண்களின் அணிகலனான சிலம்பும் காணப்படுவதாகப் பாடுகிறார். கோணேசப் பெருமானை சம்பந்த நாயனார் அர்த்த நாரீஸ்வரர் திருத் தோற்றத்தில் கண்டு பேருவகை மேலிடப் பல பாடல்கள் பாடிப் பரவுகிறார்.

இந்தப் பின்னணியில் பத்திரகாளி அம்மன் கோயில் பாடல் பெற்ற கோணேசர் திருக்கோயிலினை நோக்கியவாறு அமைந்துள்ள திருவருட் சித்தத்தினை நினைந்து நினைந்து பெருமகிழ்வடைகிறோம். இதனாலே இக்கோயிலின் திருவருட் சிறப்பு பன்மடங்காகிறது. **இம்மையில் செல்வம் சேர்த்து மாங்கல்யம், மக்கட் செல்வம் எய்தி, இன்பந் துய்க்க இறைவியினை வழிபட்ட பக்தர்கள் கோணையப்பனை நோக்கி மறுமையில் திருவடிப்பேறு மோட்சம் வேண்டி நிற்பர்.**

## மதனுடை நோன்றாள்

ஓர் அழகான பெண் தன் கூந்தலை முடியாமல் விரித்தவாறு செருக்குடன் திருகோணமலை பத்திரகாளி கோயில் முன்னே கடந்து சென்றாள். உடனே அவள் தலை ஒரு புறந் திரும்பி விட்டது.

பல வைத்தியர்களை நாடினாள். பல வகையான மருத்துவம் செய்து பார்த்தாள். ஆனால் நோய் குணமடையவில்லை. மிகவும் மன வேதனையுடன், தன் பிழை உணர்ந்து, இறைவியை நினைந்து நினைந்து கண்ணீர் உகுத்தவாறு நித்திரைக்குச் சென்றாள்.

இறைவி அவள் முன்னே தோன்றினாள். "நாளை எனது சந்நிதிக்கு வா. அங்கே உனது முடியை நறுக்கி எனது சிரசுக்குத் தா. அப்போது உன் நோய் தீரும;" இப்படிக் கூறினாள் பத்திரகாளி.

இதைக் கேட்ட அப்பெண் அதிகாலை எழுந்தாள். நீராடிப் பத்திரகாளி சந்நிதி சென்றாள். கூரிய கத்தரிக் கோலைக் கையில் எடுத்துச் சென்றாள். தனது கூந்தலை நறுக்கினாள். அம்பாளுக்கு ஈந்தாள். சாம்பிராணி வாடை எங்கும் பரவியது அப்பெண்ணின் நோயும் அகன்றது.

பல்லாண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த இத்தகவலை திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் காவியத்தில் காண்கிறோம். இப்பாடலைப் பாடியவர் வைத்தியர் வ.கோ.வேலுப்பிள்ளை என்பவர்.

## மறக்கருணை

ஒரு காலத்தில் திருகோணமலை பத்திரகாளி கோயில் பூசகர் ஒருவர் பூசையினை முடித்துக் கொண்டு இரவு திருக் கதவைப் பூட்டித் தன்வீடு சென்று விட்டார். வீடு சென்று பின்னர் தன் மகனைக் காணாது திகைத்துப் போனார். எங்கும் தேடியும் மகனைக் காணவில்லை. எனவே திரும்பி அவர் ஆலயம் சென்று மகனைத் தேடினார். மகன் ஆலயத்துள் இருப்பதை அறிந்தார். பூசை முடிந்து திருக்கதவை அடைத்த பின்னர் கதவைத் திறப்பது ஆகம விதிகளுக்கு முரணானது என்பதை உணர்ந்து மறுநாட் காலை வந்து மகனை அழைத்துச் செல்வதாக முடிவு செய்தார். ஆனால் மனைவியோ இதற்கு இசையவில்லை. புத்திர பாசத்தினால் உந்தப்பட்ட அவர் மனைவி உடனே மகனை அழைத்துச் செல்ல வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றாராம்.

இதனால் அடைத்த திருக்கதவை அந்தணர் திறந்தார். திறந்தது தான் தாமதம் வைரவர் அப்பிள்ளையை இரண்டாகக் கிழித்துப் போடுவதைக் கண்டார். இப்படியும் ஓர் அற்புதம்!.

இது இறைவியின் மறக்கருணையை எமக்கு நினைவூட்டுகிறது. புதல்வர்களைத் திருத்தப் பெற்றோர் கண்டிப்பதும், சில வேளைகளில் தண்டிப்பதும் இயல்பன்றோ. ஆனால் அக்கண்டிப்புக்கு ஊடாக, தண்டனைக்கும் ஊடாக பரிவுணர்ச்சியை நாம் காண்கிறோம் அல்லவா! அது போன்றதே இறைவியின் மறக்கருணையும். சிவஞான சித்தியாரில் உள்ள ஒரு பாடல் மறக்கருணையை எடுத்தியம்புகிறது

தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர், எல்லாம்
பார்த்திடின் பரிவே ஆகும்
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவும் என்றும்

## எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்

கூத்தப் பிரானின் அருமந்த தோற்றம் நடராசர் திருவுருவம்

வலக்காலை ஓர் அரக்கன்மீது மிதித்து நிற்கிறார். இடக்காலை மேலே உயர்த்தி நிற்கிறார். ஓர் இடக் கையினால் தூக்கிய பாதத்தைக் காட்டுகிறார். மற்றைய இடக்கையினால் அக்கினி தாங்கி நிற்கிறார். ஒரு வலக்கையில் அபய ஹஸ்தம் பிடித்தும் மற்றொரு வலக்கையில் உடுக்கினைப் பிடித்தும் நிற்கிறார். இதுவே நடராசப் பெருமானின் திருநடனத் தோற்றம்.

உடுக்கு படைத்தலையும், அபயஹஸ்தம் காத்தலையும், இடக்கைத் தீ அழித்தலையும், ஊன்றிய வலக்கால் மறைத்தலையும், தூக்கிய பாதம் அருளலையும் குறிக்கும். இத்திரு நடனம் ஐந்தொழில்களை விளக்கி நிற்கும் திறம் கண்டு வியக்கிறோம்.

தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

(உண்மை விளக்கம்)

இங்கே எடுத்த திருவடி இறைவன் உடலில் அம்மையின் பாதிக்கு உரியது. அன்னை அருள் வடிவமானவள். அருளல் தொழிலை இது குறிக்கும். துன்பக் கடலில் துவளும் அடியார்க்கு தோணியாக நின்று அவர்களை இன்பக் கரை சேர்க்கும் அம்மையின் பகுதிக்கு உரியது எடுத்த திருவடி.

அம்பிகையை நோக்கியே அவர் திருநடனம் புரிகிறார். மருந்தினை உண்டு சமிபாடு செய்து ஊட்டம் பெறும் சக்தி பிறந்த குழந்தைக்கு இல்லை என்பதால் தாய் அம்மருந்தினை உண்டு தாய்ப் பாலின் வழியாக அதன் பயனைத் தன் மகவுக்கு அளித்து நோயினை நீக்குவாள். அதே போன்று அன்னை நடராசர் திரு நடனத்தைத் தான் தரிசித்து அதன் பயனை அடியார்கட்கு நல்குவார். அம்பிகையை நோக்கி நடராஜப் பெருமான் திருநடனஞ் செய்வதற்குக் குமரகுருபரர் இப்படி விளக்கம் கூறுவார்.

நடராசர் உருவத்தினைச் செதுக்கும் சிற்பாசிரியர்கள் கூத்தப் பெருமானின் முகம் சற்றுச் சாய்ந்து நிற்கும் சிவகாமி அம்மையை நோக்கித் திருநடனஞ் செய்வதாகவே அமைப்பது கண்டோம்.

இறுதியில் சிதம்பர இரகசியம் பற்றி விளக்கும் சுவாமி விபுலானந்தர் 'மைதீட்டிய ஒள்ளிய கண்ணினையுடைய உமாதேவியார் கண்டு மகிழ்ந்து நிற்ப தில்லைத் திருநடனம் நிகழ்வதாகக் கூறுவதைப் பார்ப்போம்.

'தில்லை திருநடனத்தைக் கண்டு தரிசித்த கண்ணினாலே பின்னர் காண்பதற்குத் தகுந்த பொருள் வேறு இல்லையாதலால் மை தீட்டிய ஒள்ளிய கண்ணினையுடைய உமாதேவியார் கண்டு மகிழ்ந்து நிற்ப, எம்மிறைவன் கனகசபையின் கண்ணே எந்நாளும் செய்கின்ற ஆனந்த நடனத்தைக் காண்பதே கண்ணினைப் பெற்ற பயனாகும்!

இது சுவாமி விபுலானந்தர் தரும் விளக்கம்

'எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்"

என்ற சிவஞான சித்தியார் பாடலை எண்ணிப் பார்ப்போம்.

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
என்ற வாறே!

மன்றின்மணி விளக்கெனலாம்
மருவுநகை போற்றி!
ஒன்றின் மங்கலநாணின்
ஒளிபோற்றி! யுலகும்பர்
சென்றுதொழ வருள்கரக்குஞ்
சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி!
நிலவுதிரு வடி போற்றி!

## நந்திக்கு அருளிய நங்கை

சிலாதர் என்ற முனிவர் கயிலாயத்தில் தவஞ் செய்ததைக் கண்டு ஈசன் தோன்ற முனிவர் ஒருவரம் கேட்டார்.

இறைவா எனக்கு நீயே மகனாகப் பிறந்தருள வேண்டும் இதுதான் அவர் கேட்டவரம் தன் அம்சம் கொண்ட மகன் அவருக்குப் பிறப்பான் என்று ஈசனும் அருளிச் சென்றான்.

இவ்வாறு பிறந்த பிள்ளைதான் நந்திகேஸ்வரா ஆனார்.

தேவரும் அசுரரும் திருப்பாற் கடலைக் கடைந்த வேளை ஆலகால விடம் தோன்ற யாவரும் ஓட்டமாய் ஓடினர்.

தேவர்கள் ஈசனைத் தஞ்சம் அடைந்தனர் அஞ்சேல். என்று அபயமளித்த ஈசன் நந்திகேஸ்வரனை அழைத்து ஆலால விடத்தை எடுத்துவருமாறு கூறினார். அவரும் அவ்வாறே செய்தார்.

நந்திகேஸ்வரர் தன் கரங்களில் எடுத்து வந்த ஆலகால விடத்தினை ஈசனிடம் கொடுக்க அவர் அதனை உண்டார். ஈசன் விடம் உண்டதைக் கண்ட ஈஸ்வரி துடித்துப் போய் உலகம் அழியுமே என்றஞ்சி மிடறு தொட்டதும் அவ்விடம் அங்கேயே கருமையாய் நின்றது இறைவன் நீலகண்டனானான்

ஈஸ்வரி துடித்துப் போவதைக் கண்ட நந்திகேஸ்வரர்க்கு நகைப்புண்டாயிற்று.நான் சர்வசாதாரணமாக எனது கையில் எடுத்தவந்த விடமல்லவா? அது இதற்கு இப்படி அஞ்சுவதா என்று எள்ளி நகைத்தான்.

இந்த தருக்கினைப் போக்க வேண்டி நந்தியை அழைத்த ஈஸ்வரர் விடத்தை ஏந்திய தன் கையை மோந்து பார்க்கச் சொன்னார் முகர்ந்த மாத்திரத்தே நந்தி சுயநினைவை இழந்துவிட்டார்.

இதனைக் கண்ட ஈஸ்வரியின் தாயுள்ளம் துடித்தது ஈஸ்வரனிடம் நந்தியை மன்னித்தருளும்படி வேண்டினார். .

ஆலகால விடத்தின் மணத்தை முகர்ந்தே இப்படி சுயநினைவை இழந்தான். அதனை உண்டிருப்பின் என்னவாயிருக்கும் என்ற ஈசன் ஈஸ்வரியின் விண்ணப்பத்தை ஏற்றுமன்னித்தான்.

வெல்லத்தையும் அரிசீயையும் ஈஸ்வரி தன் பங்கயக் கைகளினால் பிசைந்து ஊட்ட நந்தி சுயநினைவு பெற்றார்.

இதனைக் காப்பரிசி என்று அழைப்போம் இன்றும் பிரதோஷ தினத்தன்று நந்திக்கு இதனைப் பிரசாதமாக அர்ப்பணிக்கிறோம். ஈஸ்வரியின் அருளுள்ளத்தைப் பாருங்கள்.

## அம்பாளுக்கு உரிய ஊர்திகள்

அம்பாள் உகந்து ஏறும் ஊர்தி சிங்கம்.

'சிங்க வாகனத்தில் காடும் அதிர்ந்திடக் கர்ச்சிக்கும் பத்திரகாளியே 'என்று பாடுகிறார் எமது கவிஞர் பெ.பொ சிவசேகரனார். ஆம் சிங்கத்தின் கர்ச்சனைக்கு அப்படியொரு ஆற்றல் உண்டு. தனது கர்ச்சனையினால் அனைத்தையும் அடக்கி ஆள்வது அதன் தனித்திறம். சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டால் காடே அதிர்ந்துவிடும். அது போன்று அம்பாளின் கர்ச்சனை கேட்ட மாத்திரத்தே எமது பாவவினைகள் பொடி பொடியாகி விடும்.

தன்னை எதிர்க்காத விலங்குகளைத் தாக்காத பசியின்றி வேட்டையாடாத நெறி பேணுவது சிங்கம். அத்தகைய சிங்க ஊர்தியில் உலாவந்து தருமம் காப்பாள் அம்பாள்.

திருகோணமலைக் கோயிலுக்குச் சிங்க வாகனம் கிடைத்த அற்புதத்தைக் கேளுங்கள்.

இந்தச் சிங்க வாகனம் எழில் மிக்கது, கம்பீரத்தோற்றம் உடையது. தென் இந்தியாவில் இருந்த

இச்சிங்க வாகனம் கப்பலில் கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டது. இக்கப்பல் திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டது. பின்னர் அக்கப்பல் புறப்பட்ட வேளை அது நகர மறுத்துவிட்டது. எவ்வளவோ முயன்றும் அது சாத்தியப்படாதபோது இந்த வாகனத்தை மாலுமிகள் இக்கோயிலுக்கு வழங்கி காளி வழிபாடு செய்தனர். அதன் பின்னர் அம்மாலுமிகள் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். நகர மறுத்த கப்பல் இயங்கிச் சென்றது.

### நாக வாகனம்

குண்டலினி சக்தியைக் குறிக்கும் நாகமும் அம்பாளுக்குரிய ஊர்தி. அது நாக வாகனம்

### அன்ன வாகனம்

நீரை நீக்கி பாலைக் குடிக்கும் அன்னம் போல் எம்மை உலகியல் பாசவினைகளில் இருந்து மேலான வாழ்வு தருபவள் அம்பாள். எனவே அன்னமும் அம்பாளுக்குரிய ஊர்தி.

### யானை வாகனம்

யானையைப் பராமரிக்கும் யானைப் பாகன் அங்குசத்தினால் அதனை அடக்கி ஆள்வது போன்று உரன் என்னும் மனவுறுதியினால் ஐம்பொறிகளை நாம் ஆற்றுப்படுத்த வேண்டும். இந்தக் கருத்தை விளக்க அம்பாள் யானையில் உலாவருகிறாள்.

### குதிரை வாகனம்

குதிரை அளவற்ற ஆசைகளைக் குறிக்கும். அவற்றைக் கட்டுப்படுத்தி அருள்புரிபவள் அம்பாள். ஆசை அறுமின்கள் என்று போதிக்குமாறு குதிரையில் அம்பாள் உலா வருவாள்.

### காமதேனு வாகனம்

நினைத்ததை நினைத்தவாறு அள்ளி அள்ளி வழங்கும் காமதேனுவில் உலா வந்து அம்பாள் அருளினை அள்ளி அள்ளித் தருவாள். 'அள்ளிக் கொடுப்பாள் அடியார்மிடிகள் அகன்றிடவே 'என்று பாடுகிறார் கவிஞர் பெ. பொ. சிவசேகரனார்.

### இடப வாகனம்

அம்பாள் இடப வாகனத்தில் உவந்து எழுந்தருளுவாள்.

காளை தியாகத்தினைக் குறிக்கும். உழவனுக்காக இரவு பகலாக வயலில் உழைக்கிறது.

நெல் விளைய வேண்டித் தன் வியர்வையைச் சிந்தும் காளை கைமாறாக உழவனிடம் பெறுவது வெறும் வைக்கோல் அல்லவா.

இது போன்று மனிதர்கள் தமது உழைப்பினை அர்ப்பணத்துடன் செய்ய வேண்டும் என்பது தெளிவு.

சம்பந்தருக்கு இறைவனும் இறைவியும் விடையேறி வந்து காட்சி நல்கியதும், அன்னை ஞானப் பால் ஊட்டியமையும் நாம் அறிந்ததே.

பேரூழிக் காலத்தில் சிவ சக்திகளின் வாகனமாக அது விளங்கும். அக்கினிப் பிரளய காலத்தில் தரும தேவதை தானும் இறக்கும் என்றஞ்சி கங்காதரன் ஆகிய சிவனை அணுகிச் சரண் அடைந்து அழிவற்ற நிலையைப் பெற விரும்பினாள்.

இடப உருவமெடுத்து சிவன் முன் சென்ற தரும தேவதை சிவனார்க்கு ஊர்தியாகும் பெரும் பேற்றைத் தருமாறு வேண்டினார். சிவனார் தரும தேவதையின் வேண்டுகோளை ஏற்று அருளினார்.

அன்று தொட்டு தம்மைப் பரிவுடன் பக்தியுடன் வழிபடும் அடியவர்களுக்கு அன்னை சமேதராய் இடப ஊர்தியில் எழுந்தருளிக் காட்சி தந்துள்ளான் இறைவன். யானையிலும், குதிரையிலும் அலங்கரித்த தேரிலும் எழுந்தருளாது இடப வாகனத்தில் ஏறியதேன் என்று மணிவாசகர் வினவி விடையுந் தருகிறார் இதோ.

கடகரியும் பரிமாவும் தேரும்
உகந்து ஏறாதே
இடப முகந் தேறியவாறு
எனக்கறிய இயம்பேடி!
தடமதில்கள் அவை மூன்றும்
தழலெரித்த வந்நாளில்
இடமாய்த் தாங்கினான்
திருமால்காண் சாழலோ!

இப்படிப் பலவாறு பல்வேறு ஊர்திகளில் உலா வந்து அம்பாள் எமது துயர்களைவாள் அவளை இறுகப் பற்றிக் கொள்வோம்.

## சுவாமி கங்காதரர் கண்ட காளி

பத்ரகாளி அம்பாளின் அற்புதங்களைக் கண்ணுற்ற சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் கூறிய கருத்துக்கள் இக்கோயிலின் அருமையை மட்டுமன்றி அக்கோயில் நிர்வாகத் திறனையும் விளக்குகிறது.

திருகோணமலையில் துறவியாகத் தவவாழ்வு வாழ்ந்து மக்களுக்கு ஆறுதலை, அபயத்தை, ஆத்மீக நாட்டத்தை ஏற்படுத்திய சுவாமி கூறுவதைப் பார்ப்போம்:-

பக்தர்கள் மிகவும் உரிமை பாராட்டி காளி ஆச்சியென்று அழைத்து வரும் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் பிரத்தியட்ச சக்தி வாய்ந்த காளி பீடங்களில் முதன்மை வாய்ந்தது.

இதன் அற்புதகரமான விக்கிர சைதன்ய சக்தியைப் பற்றி ஆண்டு தோறும் இவ்வாலயத்தில் நடைபெற்று வரும் கௌரி விரத நோன்பின் முடிவில் "காப்பு" (தேவியின் சைதன்ய சக்தியால் உருவேற்றப்பட்ட சிவப்பு நூல்) எடுக்கும் வைபவ தரிசனம் பெற்ற புண்ணியர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். தேவியின் அருட்சக்தி வாய்ந்த திருக்காப்பு எடுக்கும் வேளையில் அநேகாயிரம் பக்தர்கள் மெய் மறந்து நின்று வழிபடும் அபூர்வ காட்சி மனாதீதமானது.

காளி ஆச்சியென்றால் ஆஸ்திகர்களுக்கு மாத்திரமல்ல நாஸ்திகர்களுக்கும் உள்ளூரப் பயமும் பக்தியும் வரும்.

ஆலயமும் ஆலய கைங்கரியங்களும் எவ்விதம் நிர்வாகம் செய்யப்படவேண்டும் என்பதற்கு இவ்வாலய நடைமுறைகள் வழிகாட்டியாக இருக்கின்றன. நித்திய நைமித்திய பூஜைகள் விசேட காலங்களில் நடைபெறும் உற்சவங்கள்-அருள் சுரக்கும் லட்சார்ச்சனைகள் ஆலயம் ஷீணதசையடையாமல் காலாகாலத்தில் செய்யப்பட்டு வரும் ஜீர்ணோத்தாரண திருப்பணிகளும், கும்பாபிஷேகம் முதலிய விஷேசட கிரியைகளும் ஆலய கைங் கரியங்களும் முறை தவறாமல் நடைபெற்று வருகின்றன. இது ஆலய பக்தர்களுக்கு மாத்திரமல்ல இந்து மத தர்மங்களுக்கே பேரும் புகழும் தரக் கூடியது.

இந்த ஆலய தர்மங்களை சீரும் சிறப்புமாக அடக்கமாய் நின்று செயல் படுத்தி வரும் சக்தியந்தன் பிரம்மஸ்ரீ சு.கு.சோமஸ்கந்த குருக்கள் அவர்கள் தேவியின் சம்பூர்ண அனுக்கிரகம் பெற்றவராவர். அவருடைய ஆலய தர்மம் தவறாது நிர்வாகத் திறமை பக்தர்கள் அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. அவருடைய இத்திருப்பணித் தொண்டு தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு பார்வதி பரமேஸ்வரர் கடாட்சம் என்றும் இருப்பதாக.

பல்லாண்டுகளாக திருக்கோணமலை மக்களுக்கு பல கால கட்டங்களில் நிகழ்ந்த பேராபத்துக்களில் இருந்தெல்லாம் பாதுகாத்து வளர்த்தெடுத்த தாயினும் சாலச் சிறந்த நமது ஸ்ரீ பத்ரகாளி அம்மையின் அருள் மேலும் மேலும் கண்ணை இமை காப்பது போல் நின்று அனைவரையும் பாதுகாத்து புருஷார்த்த தர்மங்களை அளித்து வாழவைப்பதாக.

## கண்ணதாசன் கண்ட மலையரசி

கவிஞர் கண்ணதாசன் ஒரு காளி பக்தர் என்பதும். அவர் பாட்டு எழுதும்போது மலையரசி அம்மன் அருளை உணர்கிறார் என்பதும் எம்மில் பலர் அறியாத சங்கதி.

ஆம். ஏழு வயதில் அவரது பிறந்த ஊரான சிறுகூடல் பட்டியில் இருக்கும் மலையரசி அம்மனிடம் அவருக்கு பக்தி முகிழ்த்தது.

அந்தச் சிறிய வயதில் குடிசைக் கோயில் சென்று தனது குடும்ப கஷ்டங்களைப் போக்குமாறு அம்மனை வேண்டிக் கதறி அழுவார்.

பின்னர் கவிஞன் ஆனதும் பாட்டு எழுதும்போது வார்த்தைகள் வந்து விழும்வேளை சிறந்த உவமைகள் மனதில் அலைமோதும் போது தன்னருகே ஒரு சக்தி இருப்பதை உணர்வார்.

அது மலையரசி அம்மன் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. கண்ணதாசன் கூறுவதைப் பாருங்கள்:-

சிறுகூடல் பட்டி ஒரு சிறிய கிராமம் தான், அங்கே தான் நானும் பிறந்தேன் என்பதைத் தவிர அதற்கொன்றும் வேறு மகத்துவங்கள் இல்லை. கிராமம் பிரமாதமான அழகுடையதல்ல என்றாலும் ஒரு விசேஷம் அங்கே உண்டு.

கிராமத்தின் நான்கு திசைகளிலும் நான்கு கண்மாய்கள், மழைகாலத்தில் அவை நிரம்பிவிட்டால் கிராமம் தீவு போலக் காட்சியளிக்கும்.

மருந்துக்குக்கூட ஒரு தென்னை மரத்தை பார்க்க முடியாது. எங்கு பார்த்தாலும் பனை மரங்களும், மாமரங்களுமே அதிகம்.

யாரும் நட்டுவைக்காமலேயே தானாகவே பிறந்து, வளர்ந்து பயன் தருவதல்லவா, பனை மரம்!

அந்த பனைமரத்தைப் போல, பிறருக்கு உதவக் கூடியவர்கள் அந்தக் கிராமத்தில் யாரும் இல்லை.

1927 ஆம் வருடம் ஜுன் 24 ஆம் தேதிக்குச் சரியான பிரபவ வருஷம், ஆனி மாதம், பத்தாம் தேதி நான் அங்கே பிறந்தேன்.

ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பிறப்பு, ஆனாலும் நாலு பேர் பார்த்து, சின்ன முதலாளி என்று கூப்பிடுகிற நிலைமை இருந்தது.

குழந்தைப் பருவத்தில் நான் மிகவும் அழகாக இருப்பேனாம், பார்ப்பவர்களெல்லாம், பிராமணக்குழந்தை மாதிரி இருக்கிறது என்பார்களாம்.

எந்த ஊருக்கு என்னைத் தூக்கிக் கொண்டு போனாலும், அங்கே எல்லா ஜாதிக்காரர்களும் என்னை உட்காரவிடாமல் தூக்கிக் கொள்வார்களாம், என் தாயாருக்கு அதிலே பெருமை.

ஆனால் எங்கள் ஜாதியில் மட்டும் ஒரு பழக்கம் உண்டு.

ஒருவன் நன்றாக வாழ்ந்தால், இவனைத் தெரியாதா என்பார்கள். கெட்டுப் போனால் இவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்பார்கள். ஆபத்து காலத்தில் உதவி செய்கிற குணமே இல்லாத ஜாதி, எங்கள் ஜாதி.

நான் பிறந்தபோது எங்கள் குடும்பம் ஓகோ என்று வாழ்ந்து கொண்டிருந்தது, நான் பிறந்த நேரமோ என்னவோ நாளடைவில் தேய ஆரம்பித்தது.

ஒரு கல்யாண வீட்டுக்கோ, விசேஷ வீட்டுக்கோ போனால், என் தந்தைக்கென்று ஒரு தனி மரியாதையும் இல்லாமற் போய்விட்டது.

எனக்கு ஏழு வயது.....

அந்தச் சின்னஞ் சிறிய வயதில் கிராமத்தின் ஒரு புறத்திலுள்ள ஒரு சிறிய கோவிலுக்கு நான் செல்வேன்.

அது கோவில் என்று அழைக்கப்படுகிறதே தவிர, ஒரு குடிசைதான், அந்தக் குடிசைக்குள்ளும் சிலை கிடையாது. ஒரு சமாதி மேடு மட்டுமே உண்டு. அதை மலையரசி அம்மன் கோவில் என்றழைப்பார்கள்.

அந்த மலையரசி அம்மனுக்கு ஒரு வரலாறு உண்டு.

மலையரசியோடு கூடப் பிறந்தவர்கள் ஆறு பேராம். மலையரசியைச் சேர்த்து ஏழு பேராம், நாட்டிலே ஒரு சமயம் வெள்ளம் பெருக்கெடுத்த போது, அந்த வெள்ளத்தில் ஏழு பெட்டிகள் மிதந்து வந்தனவாம், அந்த ஏழு பெட்டிகளிலும் இந்த ஏழு குழந்தைகள் இருந்தனவாம், அந்த பெட்டிகளை எடுத்து வைத்த இடங்களே சமாதி மேடுகளாம், அவையே கோவில்களாம்.

கதை உண்மையோ, பொய்யோ, மலையரசியிடம் எனக்கு அளவு கடந்த பக்தி உண்டு.

சில சமயங்களில் ராத்திரி பத்து மணிக்குக்கூட அந்தக் கோவிலிலே போய் நின்று அழுவேன்.

ஏழு வயதுச் சிறுவனுக்குரிய குணமே என்னிடம் இருக்காது.

என் தாய் தந்தையரைக் காப்பாற்றும் படியும், என் குடும்பத்தைக் காப்பாற்றும்படியும் மலையரசியிடம் வேண்டிக் கொள்வேன்.

அப்போது நாத்திகக் கூட்டத்தின் தொடர்பில்லாததால் தெய்வத்தின் தர்ம தத்துவத்தில் எனக்கு நம்பிக்கை இருந்தது.

ஏதோ ஒருசக்தி நம்மை இயக்குகிறது என்ற எண்ணம் ஏழு வயதிலேயே என்னிடம் உண்டு.

கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்.

எந்தப் புண்ணியவானோ அந்தக் கோவிலுக்கு ஒரு பெரிய மின்சார விளக்குப் போட்டிருந்தார். அந்த விளக்கினடியில் உட்கார்ந்துகொண்டு நான் அழுது கொண்டே இருப்பேன். என் தாய் தந்தையரைக் காப்பாற்றும்படியே பிரார்த்திப்பேன்.

இரவு பத்து மணி என்பது கிராமத்தின் மிக அதிகமான நேரம்.

சில சமயங்களில் என் தந்தை அரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு என்னைத் தேடி ஊரெங்கும் அலைவர். கண்மாய்க் கரையில் என் பிணம் ஒதுங்கி இருக்கிறதா என்று கூடப் பார்ப்பார்.

கடைசியில் நான் தினசரி மலையரசி அம்மன் கோவிலுக்குப் போவது அவருக்கும் தெரிந்தது.

ஏதோ மலையரசி அம்மன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று என் தாயார் அடிக்கடி சொல்லுவார்கள்.

நம்ம தலையெழுத்து எப்படி இருக்கிறதோ அப்படித்தான் நடக்கும். இதற்காக நீ ஏன் கோவிலுக்குப் போய் அழுகிறாய்? என்று என் தந்தை அடிக்கடி கேட்பார்.

நானோ ரத்த பாசத்தில் செத்துச் செத்துப் பிழைப்பேன்.

தாய் தகப்பன், சகோதர, சகோதரிகளுக்கு ஏதாவது என்றால், என் உயிரே நின்று விடுவது போலிருக்கும்.

அந்த வயதில் எனக்குத் தெரிந்த ஒரே உண்மை உலகத்தில் யாரும், யாரையும் காப்பாற்றமாட்டார்கள்: நம்மை நாமே காப்பாற்றிக் கொண்டால் உண்டு என்பதுதான்.

எங்கள் ஜாதி ஒரு மோசமான ஜாதி. பணம் இருப்பவனை மட்டும்தான் அது மதிக்கும்.

அதை நன்றாகப் புரிந்து கொண்டும் கூட, பிற்காலத்தில் சேர்ந்த பணத்தை, நான் காப்பாற்றிக் கொள்ளாமல் போனேன்.

எப்படி என் தகப்பன் பணத்தை மதித்ததில்லையோ, அப்படியே நானும் மதித்ததில்லை.

ஆனால், பணம் இல்லாதவனுக்கு எங்கள் ஜாதியில் எந்தவித மரியாதையும் இல்லை.

வாழ்க்கையில் நான் உயர்ந்து வந்த பிற்பாடு, இதே மலையரசியின் பெயரை ஒரே ஒரு முறை கூவி அழுதிருக்கிறேன், அது என் மகள் திருமணத்தின் போது.

அந்தத் திருமணத்தில் வரதட்சணை விவகாரத்தில் என்னையே அழவைத்து விட்டார்கள்! ஆனால் மலையரசி என்னைக் கைவிடவில்லை. என் மகளுக்குக் கிடைத்த மாப்பிள்ளை அற்புதமான மாப்பிள்ளை.

அது மலையரசி கொடுத்த வரமல்லாது வேறென்ன?

தெய்வத்தின் வருகை தாமதப்படும்: யாரும் அவசரப்படக்கூடாது.

எட்டாம் வகுப்புப் படித்த ஒருவன் கவியரசானது, மலையரசியின் கிருபையால்தான்.

நான் எழுத உட்காரும் போதெல்லாம், நான் எழுதுவதாகவே எனக்குத் தோன்றுவதில்லை. ஏதோ ஒரு சக்தியும், உத்வேகமும் என்னை ஆட்கொள்ளுகின்றன.

சில புதிய வார்த்தைகளோ, புதிய உவமைகளோ வந்து விழும்போது தலைமுதல் கால்வரையிலே ஒரு புது உணர்ச்சி ஏறுகிறது. என்னையறியாமல் மயிர்கூச்செடுக்கிறது. சொல்லச் சொல்ல சுகமாக இருக்கிறது.

அது மலையரசியின் அருள் என்றே நான் கருதுகிறேன்.

பாட்டெழுத உட்காரும் போதெல்லாம் நான் மட்டும் உட்காருகிறேனா, இல்லை என்தாய் மலையரசி பக்கத்தில் உட்காருகிறாளா என்பது புரியவில்லை.

துன்பங்கள் தோன்றும் போதெல்லாம், அவள் பெயரைச் சொல்லி அழுதால் ஓர் ஆறுதல் கிடைக்கிறது.

எங்கள் கிராமத்தில் நான் ஏதுமறியாச் சிறுவனாகத் திரிந்தபோது, யார் யார் என்னைக் கேலி செய்தார்களோ, அவர்களெல்லாம் என்னிடம் உதவிக்கு வந்து நிற்கிறார்கள்.

அப்போது பணக்காரர்கள் என்று மரியாதையோடு இருந்தவர்களெல்லாம், இப்போது என் படிக்கட்டுகளில் காத்துக் கிடக்கிறார்கள.

தெய்வ சக்தியின் விசேஷம்தான் என்ன.....! கிராமத்துச் சிறு தேவதைகளின் சக்திதான் எவ்வளவு....?

என்னால் அளவிட முடியவில்லை, ஆனால் ஓர் உண்மை புரிகிறது.

**ஏதாவது ஒரு தெய்வத்தின் மீது மனதை முழுமையாகச் செலுத்தி விடு. நீ எதிர்பாராத நேரத்தில் அது கை கொடுக்கும்.**

சிறுகூடல்பட்டி மலையரசி ஒரு சிறு தேவதைதான். ஆனால் அவள் விரும்பினால் ஒரு கவிஞனை உருவாக்குவாள்.

காளி தானாமே காளிதாசனை உருவாக்கினாள்!

**என்னை உருவாக்கியவள், என் தாய் மலையரசி அம்மனே!**

அந்தக் குடிசை, அந்தச் சமாதி மேடு? அதற்குள்ளே அற்புதமான சக்தி கொண்ட என் தாய் குடியிருக்கிறாள்

அவளை ஒரு முறை தரிசியுங்கள்: உங்கள் துன்பங்கள் எல்லாம் விலகிப் போகும்.

## சங்ககாலத்துத் தெய்வம்

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் தந்த தமிழறிஞர் கலாநிதி புலவர் சிறிகாந்தன் சத்தியமூர்த்தி அவர்கள். அன்னார் இளம் வயதில் தாயகத்தில் காலமானது எமது துரதிர்ஷ்டம். அவர் அன்னை வழிபாடு பற்றிக் கூறிய கருத்துக்களும் எமது சிந்தனைக்கு உரியவை. இதோ:

சங்க இலக்கியங்களில் கொற்றி, கொற்றவை, கூளி என்னும் பல்வேறு பெயர்களால் கொற்றவை குறிக்கப்படுகின்றாள்.

வெற்றித் தெய்வம் என்று பொருள்படும் கொற்றி என்னும் சொல் 'கொல்' என்னும் அடிச் சொல்லில் இருந்து தோன்றியது. அச் சொல்லுடன் 'ற்றி' என்னும் பெண்பால் ஒருமை விகுதியுஞ் சேர்ந்து 'கொற்றி' ஆகியுள்ளது.

கொற்றவை தாய் - வெற்றித் தெய்வம் என்னும் அதே அடியோடு தவ்வை அல்லது அவ்வை என்பதுஞ் சேர்ந்து தோன்றியதாகும். தவ்வை, அவ்வை என்னும் இரண்டு சொற்களும் தாய் என்று பொருள்படும். கொற்றம், அவ்வை என்ற இரு சொற்களும் சேர்ந்து கொற்றவை ஆகியுள்ளது என்று இன்னொரு வகையாகவும் கூறலாம். கூளி என்ற சொல் திரிசூலத்தைஉடைய கொற்றவையை உணர்த்துகின்றது. சங்க காலத்தில் குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் வாழ்ந்த மக்கள் கொற்றவையை வழிபட்டு வந்துள்ளார்கள்.

முருகனைப் பெற்றெடுத்ததாகக் கொற்றவையின் கருப்பை புகழப்படுகின்றது. பாதி பெண்ணும், பாதி ஆணுமாயுள்ள சிவனின் அர்த்த நாரீஸ்வரர் உருவம் பற்றிய கருத்து சங்க காலத்தில் இருந்திருக்கின்றது. இமையா நாட்டமுடைய நெற்றிக் கண்கொண்ட தனது கணவனாகிய சிவனின் இடப்பாகத்தைக் தனக்கு இடமாகக் கொண்டுள்ளாள் கொற்றவை என்று கூறப்படுகின்றது.

தை நீராடலில் ஒரு பெண் இன்னொரு பெண்ணின் நெற்றியிலே சிவப்புத் திலகமிடுகிறாள். திலகந் தாங்கிய பெண் கொற்றவை போல் காட்சியளிக்க வேண்டுமென்று கருதியே அவள் அப்படிச் செய்கிறாள். இந்த நிகழ்ச்சியைக் கூறும் பொழுது கொற்றவையின் நெற்றியில் உள்ள நெருப்புக் கண்ணைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் புலவர். கொற்றவை ஆகிய அம்பாளை வேண்டி ஆடும் புனித நீராடலைக் குறிப்பதாக 'அம்மா ஆடல'எனும் சொற்றொடருக்குப் பொருள் கொள்ளலாம். பாவை நோன்பும், புனித நீராடலும் முற்றாகக் கொற்றவைக்கே உரியதாகப் பிற்கால வழக்கத்தில் காணப்படுகின்றது.

நாடு செழிக்க மழை நல்க வேண்டுமென்றும், தங்களை விட்டு பிரியாதிருக்கும் நல்ல கணவன்மாரைத் தந்தருள வேண்டுமென்றும் கொற்றவையின் அருள் வேண்டிக் கன்னிப் பெண்கள் நிற்பதை 'அம்மா ஆடல'எடுத்துக் கூறுகிறது.

கொற்றவை பார்வதியாக மாற்றம் பெறுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். திருமுருகாற்றுப் படையில் முருகன் 'மலைமகள் மகன'என்றும் 'கொற்றவை சிறுவ' என்றும் வர்ணிக்கப்பட்டிருப்பது இம்மாற்றத்தின் உண்மைநிலையை எடுத்துக் கூறுகின்றது. அங்கே பார்வதி அல்லது மலைமகள் கொற்றவையோடு இனங்கண்டு கொள்ளப்படுகிறாள்.

## அரவிந்தருக்கு அருளிய அன்னை

தேவி தரிசனம் கிடைத்தபோதெல்லாம் அடியார்கள் விடுத்த கோரிக்கைகள் பலவகையானவை.

செம்பொன்னும் மணியும் கேட்டிருக்கிறார்கள் பசியால் வாடும் மக்களின் பசிநோய் போக்கும்படி கோரியிருக்கிறார்கள், நோயின் காரணமாக துயருறும் மக்களின் நோய் போக்கும்படி கெஞ்சியிருக்கிறார்கள்.

நல்ல மனம் கேட்டிருக்கிறார்கள். முக்தி வீடுபேறு, திருவடிப்பேறு ஆகியவற்றை நாடியிருக்கிறார்கள். மனிதப்பிறவி அன்பு தருமாறு இரந்து கேட்டுள்ளனர்.

அன்பும் அருளும் அறமும் வேண்டியிருக்கிறார்கள் ஆனால்...

"அன்னையே! எனது நாட்டு மக்களின் விடுதலைக்குப் போராட எனக்கு நெஞ்சுறுதியும் நீண்ட ஆயுளும் தருக."

இறைவி தரிசனம் கிடைத்த போது இவ்வாறு கேட்டவர் வேறு யாருமல்ல அரவிந்த அடிகளாரே ஆவார்.

ஒரு தீவிரவாதியாகப், புரட்சி வீரனாக வாழ்க்கையை ஆரம்பித்து சமயவாதியாக மெய்யியற் சிந்தனையாளனாக பராசக்தி பக்தனாக மலர்ந்த புரட்சியோகி அரவிந்த அடிகள்.

இந்தியாவில் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக இயங்கி தேசத்துரோகக் குற்றச் சாட்டின் பேரில் கைதாகி விசாரணையை எதிர்நோக்கி இருந்த வேளையில் இறைவியின் இடத்து நாட்டம் பெருக்கெடுத்து ஓடியது.

அவர் கைது செய்யப்பட்டதும் மனம் தளர்ந்து போனார். "எனக்கு வாழ்க்கையிலே ஒரு இலட்சியம் உண்டு. எனது நாட்டு விடுதலைக்குப் பாடுபடல் வேண்டும். இவ்வாறு ஆகிப் போனால் என்சேவை என்னாவது?" என்றெல்லாம் கவலைப்பட்டார்.

இவ்வாறு மூன்று நாட்கள் அவர் கவலைப் பட்டுக் கொண்டிருந்த பொழுது "பொறுத்திருந்து பார்" என்ற அன்னையின் குரல் கேட்டது. ஒரு மாதமாகத் தனிமையில் அடைபட்டுக் கிடந்த போது சொற்ப நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் ஒன்று அவர் ஞாபகத்துக்கு வந்தது.

எல்லா அலுவல்களையும் ஒதுக்கி விட்டு, செயற்பாடுகளில் இருந்து உள்ளத்தாலும் உடலாலும் ஒதுங்கி, தனிமையை நாடிச் சென்று உள்ளுரப் பார்த்து அன்னை பராசக்தியின் சிந்தனையில் இரண்டறக் கலக்க வேண்டும் என்ற வேட்கை ஏற்பட்டது. எனினும் அந்த உள்ளுணர்வுக்கு இறைவியின் ஆணைக்குச் செவி கொடுக்கும் உள்ளத் திண்மை அரவிந்தரிடம் அப்போது இருக்கவில்லை.

"உன்னால் சாதிக்க முடியாத உனது முயற்சியால் ஒடிக்க முடியாத பாச விலங்கினை ஒடிக்க இன்று இச்சிறையில் அடைத்து நானே வழிப்படுத்தி விட்டேன;" என்று அன்னை பராசக்தி குரல் கொடுப்பது அவருக்கு கேட்டது.

அச்சிறைச்சாலை அறையொன்றில் அவரிடம் இறைவி பகவத்கீதை ஒன்றினை வழங்கினாள். அரவிந்தருக்கு புதிய தெம்பும் அசையாத இறை நம்பிக்கையும் ஏற்பட்டது. கீதை கூறும் சாதனையை ஒழுக்காறாகக் கொண்டார். கிருஷ்ண பகவான் அருச்சுனனிடம் கோரியது என்ன என்பதைச் சிந்தித்தார்.

நாம் நமது கடமைகளை விருப்பு வெறுப்பு இன்றிச் செய்தல் வேண்டும்.

சேவை ஆற்றும் போது பலனைப் பேணாது இயங்க வேண்டும்.

நான் என்னும் அகந்தையை விடுத்து இறைவியின் கருவி என்ற பணிவுணர்வுடன் செயலிழந்து செயற்படல் வேண்டும்.

வாழ்க்கையின் உயர் மட்டம் கீழ் மட்டம் ஆகிய இரு நிலைகளில் உள்ள மக்களையும் சமமாக நேசிக்கும் நல்லுணர்வு வேண்டும்.

நண்பன் எதிரி என்ற வேறுபாடின்றிச் செயலாற்றும் பக்குவம் வேண்டும்.

வெற்றி தோல்வி இரண்டினையும் ஒக்கவே நோக்கும் மனத்திராணி வேண்டும்.

இதுவே கீதைகூறும் செய்தி என்பதைத் தெளிந்தார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று துணிந்தார். அன்னையைச் சரணடைந்தார் அரவிந்தர்.

இறைவியின் திருவருளால் அவரிடம் சிறைக் காவலர்கள் கருணை காட்டியதும், சிறையில் இருந்த குற்றவாளிகள் அவருக்கு இறைவியாகவே தோன்றியதும், எதிர்பாராத விதமாக விசாரணையின் போது நீதிமன்றத்தில் அன்றைய புகழ்பூத்த வழக்கறிஞர் சித்தரஞ்சன் தாஸ் தோன்றி இவருக்காக வழக்காடியதும், இவர் விடுதலை பெற்றதும் நாம் அறிந்ததே. இவை எல்லாம் திருவருட் குறிப்பினால் இறைவியின் கடாட்சத்தால் நிகழ்ந்தவை ஆகும்.

அரவிந்தரின் வாழ்வினை ஊன்றிப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். அரவிந்தர் பொது வாழ்க்கைக்குத் தம்மையே அர்ப்பணித்தவர். இந்திய நாடு தருமத்தினால் வாழ்வது. தருமத்துக்காக வாழ்வது என்பதே அவரின் திடமான நம்பிக்கை. இதுவே அவர் பொது வாழ்க்கை.

பொது வாழ்க்கையில் ஈடுபட்ட போது அவருக்கு வேதனைகள், சோதனைகள் ஏற்பட்ட வேளைகளில் அன்னையிடத்து பரிபூரண சரணாகதி அடைந்து விடிவு பெற்றிருக்கிறார்.

அன்னை பராசக்தியிடம் பூரணமாகச் சரண் அடைதலே அவர் வாழ்க்கையின் உயிர்ப்பாக, உயிர் நாடியாக வேட்கையாக விளங்கியது.

## ஏழைக்கு உதவிய அன்னை

ஆதி சங்கரர் குருகுல வாசம் செய்கின்றார். வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்டார். "பவதி பிஷாம் தேவதி" என்று கூறினார். இப்படியாக ஓர் ஏழை வீட்டு வாயிலுக்குச் சென்றார்.

அவ்வீட்டு இல்லத்தரசியிடம் கொடுப்பதற்கு வசதியில்லை. ஆனால் மனம் இருந்தது. ஒரு நெல்லிக் கனியைக் கொடுத்தார். ஏழ்மையில் வாடும் இப்பெண்ணின் தயாள சிந்தையைக் கண்டிரங்கினார் ஆதி சங்கரர். அவளது வறுமையைப் போக்கி வளமான வாழ்வு கொடுக்குமாறு ஆதி சங்கரர் அம்மையை வேண்டுகிறார். கனகதாரா ஸ்தோத்திரத்தைப் பாடுகிறார்.

என்னே அதிசயம்! இரக்க சிந்தனையுடைய அப்பெண்மணிக்கு அன்னை இரங்கினாள். தங்க நெல்லிக்கனிகளைச் சொரிந்தாள். திருவிளக்குப் பூசை, அஷ்டலஷ்மி பூசைகளை நாம் நினைந்தோறும் அன்னையின் அருளை நினைக்கிறோம்.

## வைகாசிப் பொங்கல்

திருகோணமலை பத்திரகாளி கோயிலில் நடைபெறும் இன்னொரு சிறப்பு நிகழ்ச்சி வைகாசிப் பொங்கல் ஆகும். அன்று இரவு பக்தர்கள் கோயிலில் குழுமி வீதியில் செய்யும் பொங்கல் ஒரு சமூக கலாச்சார இணைப்பை நமக்கு நினைவூட்டும்.

சைவத்தின் வளர்ச்சிக்கு பாரிய சேவையாற்றி உள்ள சைவசித்தாந்த சிகாமணி சைவப்புலவர் இ.வடிவேல் அவர்கள் இக்கோயிலில் இடம் பெறும் வைகாசிப் பொங்கல் பற்றி மிக அழகாகத் தனது "திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள;" என்ற நூலில் விளக்குவதைப் பாருங்கள்:-

வைகாசிப் பூரணை வரும் தினம் எதுவோ அதற்கு முன்னர் வரும் திங்கட்கிழமை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலில் பொங்கலும், இந்தத் தினத்திற்கு முன்னர் வரும் திங்கட்கிழமை பாலம் போட்டாற்றுப் பத்தினியம்மன் கோவிற் பொங்கலும் இத்தினத்தை அடுத்து வரும் வாரத்தில் செவ்வாய்க்கிழமை சல்லியம்மன் கோவில் பொங்கலும் நடைபெற்று வருகின்றன. இந்த ஒழுங்கு பண்டுதொட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது. இதனால் வைகாசி மாதம் முழுவதும் திருகோணமலையில் சக்தி வழிபாடு பக்தி வெள்ளத்தில் மூழ்கியிருப்பதைக் காணலாம்.

பத்திரகாளியம்மன் பொங்கல் ஆலயத்தைச் சுற்றி வீதியில் நடைபெறும். பொங்கலுக்குரிய இடம் பிடிப்பதில் மக்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்வார்கள். அன்றிரவு ஆலய வீதி முழுவதும் யாகசாலை போல் காட்சியளிக்கும். புகை மண்டலம் இருளை மூடி இருண்டு நிற்கும். அக்கினி தேவன் வீதியெங்கும் பிரகாசித்துக் கொண்டிருப்பான். மக்கட் கூட்டம் வீதியில் எஞ்சியுள்ள இடங்களை மூடியிருப்பார்கள்.

அம்பாளின் பொங்கலமண்டப வாசலில் வெளியில் நடைபெறும். அடியார்களின் பொங்கல் வீதியெங்கும் நடைபெறும். அம்பாளின் பொங்கற் பிரசாதமும் அடியார்களின் பிரசாதமும் தேவிக்குப் படைக்கப்பட்டு பூசை நடைபெற்றுப் பொங்கல் விழா நிறைவேறும். வெண்மணல் பரந்த வீதி காலையில் கரிக்குவியல்களால் மூடுண்டு கிடப்பதைக் காணலாம்.

## அன்னை அருளிய மகப்பேறு

இத்தகைய சிறப்பு மிக்க வைகாசிப் பொங்கல் நன்னாளில் தமது குடும்பத்துக்கு திருகோணமலை பத்திரகாளிஅம்பாள் நல்கிய அருளை ஒவ்வொரு வைகாசிப் பொங்கல் நன்னாளிலும் ஒரு பக்தர் அன்புடன் நினைவு கூருகிறார்.

அவர் தான் திரு கே தர்மகுலராசா அவர்கள் நிலாவெளி தந்த எழுத்தாளர் கவிஞர். அந்த நண்பர் தனக்கே உரிய இனிய நடையில இந்த அற்புதத்தை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார். இதோ சுவையுங்கள்.

எனது மனைவியை முதலாவது மகப்பேற்றுக்காக திருக்கோணமலை வைத்தியசாலையில் அனுமதித்து மூன்று நாட்கள் கடந்தும், பிரசவ வேதனை அதிகரித்துக் கொண்டு போனதே தவிர பிரசவம் நடைபெறவில்லை.

அதன் காரணமாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமெனக் கூறிய "டாக்டர்கள்" 1979 யூன் மாதம் 4ம் திகதி மாலை மூன்று மணியளவில் அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். அம்புலன்ஸில் என்னை அழைத்துச் செல்ல மறுத்து விட்டனர்.

மறுநாள் காலையில் தான், அனுராதபுரத்திற்கு செல்ல என்ன செய்வதென்று தெரியாது மனஞ் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த வேளை, எமது குடும்ப ஆலோசகராகவும், அன்பராகவும் திகழ்ந்து வந்த மதிப்புக்குரிய சிவசுப்பிரமணியம் ஐயா அவர்களின் திரு உருவம் மனதில் தோன்ற திருக்கோணமலை, அருணகிரி வீதியில் அமைந்திருந்த அவரின் இல்லத்திற்குச் சென்றேன்.

ஐயாவைக் கண்டு அவரிடம் விடயத்தைக் கூறிய போது, அங்கு நின்றிருந்த அவரின் அக்காவான போற்றுதலுக்குரிய சிவகாமி அம்மா, "மகனே கவலைப்படாதே, இன்று பத்திரகாளி அம்பாளின் பொங்கல், பானை ஏற, அங்கே குழந்தை சுகமாகப் பிறக்கும்;" என்று சொன்னார். அந்த வாக்கைக் கேட்டதுமே, சஞ்சலப்பட்டும், கவலைப்பட்டும் கொண்டிருந்த என் மனதில் அம்பாளே கூறிய அருள்வாக்குப் போல, சாந்தியும் திடசங்கற்பமும் ஏற்பட்டது.

## பெ. பொ. சி. கண்ட காளி

காளி ஆச்சியின் கருணையை என்னென்போம். அவள் பக்தர்களை தேடிச் சென்று அவர்களின் துயர் களைவாள். பக்தர்களின் கனவில் அவள் தோன்றி அவள் செய்யும் காரியங்கள் பலவாகும்.

பிறநாடுகளில் வாழ்கின்ற திருகோணமலை மக்கள் பலர் இவ்வாறு அம்பாள் பொழியும் இன்னருளை நேரடியாகவும் அஞ்சல் மூலமும் குருக்களுக்கு அறிவிப்பதுண்டு.

கனவில் அவள் தோன்றி அவர்களுக்கு ஆறுதல் அளிப்பாள். தைரியம் ஊட்டுவாள். பக்தர்களுக்காக அவள் பல தேசஞ் செல்வாள். கண்ணுறங்காமல் காளி ஆச்சி தன்னடியார்களைக் காத்தருள்வாள்.

திருகோணமலை ஈன்ற தீந்தமிழ்க் கவிஞன் எனது ஆசிரியப் பெருந்தகை பெ.பொ.சிவசேகரனார். தமிழ் கூறும் நல்லுலகு ம.பொ.சிவஞானக்கிராமணியாரை ம.பொ.சி என்று அழைக்கும் மரபில் நாம் கழகப் புலவர் சிவசேகரனாரை பெ.பொ.சி என்று அழைப்பதுண்டு.

எனது ஆசிரியப் பெருந்தகை சிவசேகரனார் தான் பாடியுள்ள காளி கவிமாலையில் திருகோணமலை பத்திரகாளி அம்பாளின் அருட் திறத்தினை ஒலி நயத்துடன் பொருள் நயத்துடன் பக்திச் சுவை பரவப் பாடியுள்ளார்

"கனவில் அவள் செய்யும் காரியம் ஒன்றல்லக் கண்ணுறங்காள் தினமும் அவள் போகும் தேசம் பலவாகும் தேடிச் செல்வாள்"- என்று அவர் பாடுகிறார்.

பக்தர்கள் நினைத்த காரியம் செய்து வைப்பாள் காளி ஆச்சி. தமது காரியம் சித்திக்க அவர்கள் நேர்ந்து வைப்பார்கள். இழைகட்டுவார்கள். பின்னர் நேர்த்திக் கடனைப் பூர்த்தி செய்வார்கள். பயபக்தியுடன் பெண்கள் அடி அழிப்பர். ஆண்கள் அங்கப்பிரதட்சனை செய்வர். இதனை கவிஞர் பெ.பொ.சி பாடுவதைப் பாருங்கள்:-

"நேர்ந்து நினைப்பார் இழைகட்டி நிற்பார் நினைந்தபடி ஈந்து மகிழும் இதயத்தாள்"

இக்கோயில் குருக்களும் அவரது தந்தையாரும் இறைவிக்கு சாத்துப்படி செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும்:- உள்ளம் அப்படியே லயித்துவிடும். அம்பாளுக்கு சந்தனக் காப்பு சாத்தும்போது அது ஒரு தனியழகாகும். இதனைச் "சந்தனம் பூசி அபிஷேகம் செய்யும் சாம்பவி" என்று பாடுகிறார் பெ.பொ.சி அவர்கள்.

மழைக் காட்சியைக் கண்டதும் மணிவாசகப் பெருமானுக்கு இறைவியின் இன்னருள் நினைவுக்கு வருகிறது. மேகம் கடலில் இருந்து முகந்தெடுத்து இறைவிபோல் கறுத்து அவள் சிறிய இடையினைப் போல் மின்னி அவள் சுரக்கின்ற இன்னருள் போல் மழை பெய்வதாக மாணிக்கவாசகர் பாடுகிறார்.

**முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்**
**என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் இட்டிடையின்**
**மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்**
**பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ**
**மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்**
**தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு**
**முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே**
**என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!**

கடல் நீரைப் பருகிக் கார் நிறத்தைப் பெறும் மேகம் அம்பாளினை நினைவூட்டுகிறது. "காராகி எங்கும் கறுத்தெழுந்து" மழை பொழிந்து அம்பாள் சுரக்கும் அருளை என்ன அழகாகப் பாடுகிறார்.

'எங்கும் கலகலவெனச் சொரிந்து நிலத்தைக் குளிர்விக்கும் நின்னருள்" எனப் பாடுவது கண்டு இன்புறுகிறோம்

இராமபிரானின் பேரழகினை வர்ணிக்க முயல்கிறான் கம்பன். இராமரின் நிறமோ கருமை. எனவே, கருமை வண்ணத்துக்கு உவமை தேடுகிறான். கம்பனது கற்பனையில் உதித்த முதல் உவமை மை. எனவே 'மையோ' என்றான்.

ஆனால் அவ்வுவமை கம்பனுக்குத் திருப்தியைத் தரவில்லை. 'மரகதமோ' என்றான். மரகதம் கருமையுடன் பெறுமதியும் உடையது. இருப்பினும் அது இராமனுக்கு ஏற்புடை உவமையாகக் கம்பனுக்குத் தோன்றவில்லை.

இந்த நிலையில் கம்பன் கற்பனையில் பிறிதொரு உவமை தோன்றியது. பரப்பால் விரிந்ததும், வளம் பல தருவதும் கருமை நிறத்ததுமான மறிகடல் அவர் மனதில் தோன்றிய அடுத்த உவமை. இதுவும் கம்பனுக்குச் சரியெனப் படவில்லை.

கம்பனின் கற்பனை சிறகடித்துப் பறந்தது அழகிய உவமை ஒன்று தோன்றியது. அதுதான் மழைமுகில். இராமரின் கருமையை மட்டுமன்று அது எடுத்துக் காட்டுகின்றது. மழைமுகில் இடத்துக்கிடம் தாவி மழை பெய்கிறது.

இராமபிரானின் அருட்திறத்தினை, சென்று சென்று அருள் சுரக்கும் பாங்கினை வெளிக்கொணரும் அர்த்தமுள்ள உவமை மழை முகில் எனவே 'மழை முகிலோ' என்றான்.

கம்பன் கவிதையில் லயித்து விடும் பெ.பொ.சி அவர்கள் அம்பாள் சுரக்கும் அருள் கண்டு அவளை 'மாரித்தாய்' என்று அழைக்கிறார்.

ஈற்றில் அம்பாளை "எழில் மாரித் தாய்;' என்று ஏத்துகிறார் பெ.பொ.சி. அப்பாடல் இதோ:-

**காராகி விண்ணில் கறுத்தெழுந் தெங்கும் கலகலவென**
**நீராய்ச் சொரிந்து நிலத்தைக் குளிர்விக்கும் நின்னருளை**
**ஏராளர் கூடியெழில் மாரித்தாயென் றிறைஞ்சி நிற்பார்**
**பாராகி விண்ணாகிப் பாலிக்கும் பத்திர காளிகையே!**

கறுத்த மேகம் காய்ந்த நிலத்தைத் தேடி, வாடிய பயிர்களை நாடிச் சென்று மழை பெய்வது போன்று அம்பாள் தனது பக்தர்களைத் தேடிச் சென்று இன்னருள் பொழிவாள் என்ற பொருள் பொதிந்த சொற்றொடர் "எழில் மாரித் தாய்"

பெ.பொ.சிவசேகரனார் பாடிய நூறு பாக்களை உடையது காளி கவிமாலை. அவர் அம்பாளிடம் கிறுங்காத நேர்மை கோரிய கவிஞன். அவர் அம்பாளிடம் இறைஞ்சியது என்னவென்று பாருங்கள்.

**அஞ்சாத நெஞ்சும் அயராதுழைக்கும் அருந்திறமும்**
**நெஞ்சார வாழ்த்தும் பெருநிலையும் ஈயா நீசரிடம்**
**கெஞ்சாத வாழ்வும் கிறுங்காத நேர்மையும் கேட்டுநின்றேன்**
**பஞ்சாட் சரத்தில் ஒளிவீசும் பத்திர காளிகையே!**

காளி ஆச்சி மீது அன்புருகிக் கட்டளைக் கலித்துறை யாப்பில் நூறு பாடல்களைப் பாடியுள்ளார். பெ.பொ.சி. படிப்பவர் மனதில் பக்தி உண்டாகும். மனம்கரையும். அழுதழுது பாடியுள்ளார்.

இப் பாடல்களை நாள்தோறும் பய பக்தியுடன் பாடினால் எமதுள்ளம் தேவியுறையும் வாசஸ்தலம் ஆகி விடும் என்று அவர் உறுதி கூறுகிறார்.

எனது ஆசிரியர் பெருந்தகை சிவசேகரனார் தனது "காளி கவிமாலை" பிறந்த கதையைக் கூறுகிறார், இதோ:-

"காளி கவிமாலை" என்னுடைய பாடல்கள் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. நான் கருவி மாத்திரமே. பத்திரகாளி அம்பாள் மீது நான் கொண்டிருக்கும் அளவு கடந்த காதலே இப்பாடல் தோன்றுவதற்குக் காரணமாகும்.

அம்பாளிடத்து நான் வைத்திருக்குங் காதல் பாட்டாக உருவெடுப்பதற்குக் காரணமாக இருந்தவர் ஐயா அவர்கள். அவர் வேறு யாருமல்லர், திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் காளி உபாசகருமாகிய பிரம்மஸ்ரீ சு.கு.சோமஸ்கந்த ஐயர் அவர்களே. ஐயா அவர்களும், அவர் மைந்தன் என் அன்புக்குரிய மாணவன் பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரன் அவர்களும் தான் இக் "காளி கவிமாலை" நிறைவேறுவதற்கு என்னைக் காணும் போதெல்லாம் தூண்டி நின்று ஊக்கம் அளித்தவர்கள் ஆவர். அவர்களை நான் ஒரு போதும் மறக்க முடியாதபடி அவர்கள் என்னுள்ளத்தில் இடம் பெற்று விட்டார்கள். அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றி.

இப்பாடல்கள் சித்தார்த்தி வருடம் தை மாதம் 23ம் நாள் (6-2-80) அருள்மிகு பத்திரகாளி அம்பாள் புனராவர்த்தன சம்புரோஷண மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்த போது நிறைவெய்தியது.

இக் "காளி கவிமாலை" யில் நூறு பாடல்கள் உள்ளன. முழுவதும் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தவை. கவிதை யாவும் அம்பாள் புகழ் பேசுபவை. பாடி வந்தால் உள்ளந் தூய்மையாகி தேவி உறையும் வாசஸ்தல மாகி விடும். உங்களால் முடிந்த அளவுக்கு ஒன்றையோ, பலவற்றையோ அல்லது முழுவதையுமோ மனப்பாடம் ஆக்கி வைத்துக் கொள்ளுங்கள். நினைவு வரும் போதெல்லாம் பாடி மகிழுங்கள் அதுவே போதும்.

## விவேகானந்தர் தரிசித்த காளி

'நான் தீயவர்களிலே இறைவனைக் காண்கிறேன். அனைத்து இனங்களையுஞ் சார்ந்த ஏழைகளில் இறைவனைக் காண்கிறேன்.'

இப்படிச் சொன்னவர் ஒரு நாஸ்திகர் அல்ல **வீரத்** துறவி விவேகானந்தர்.

சிக்காகோ நகரில் அன்று இடம் பெற்ற சர்வ மத பாராளுமன்ற நிகழ்வில் சிம்மக் குரலில் இந்திய தத்துவச் சிந்தனையின் விழுப்பத்தினை, மாண்பினை புலமை மிக்க ஆங்கில நடையில் உறைக்கும் வண்ணம் உரையாற்றி எம்பால் உலகின் பார்வை ஈர்த்த துறவி அவர் வீரத்துறவி விவேகானந்தர் ஒரு காளி பக்தர். பரமஹம்சரைக் குருவாக ஏற்றவர்.

பட்டினியால் வாடும் தனது குடும்பத்தினரின் ஏழ்மையைப் போக்கும் வண்ணம் பரமஹம்சரிடம் விவேகானந்தர் ஒருநாள் வேண்டிக் கொண்டார்.

'மகனே! என்னால் அத்தகு வேண்டுதலைச் செய்ய முடியாது. ஏன் நீயே தாயிடம் வேண்டுதல் செய்தாலென்ன?' என்றார் பரமஹம்சர்.

'நான் காளியை அறியேன். தாங்கள் சிபார்சு செய்தல் வேண்டும். செய்தே ஆக வேண்டும்' இப்படி அவர் வலியுறுத்தினார்.

'மகனே! நீ இன்னும் அவளை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று செவ்வாய்க் கிழமை இன்றிரவு காளி சந்நிதானம் சென்று தாய் முன் விழுந்து வணங்கி உனது வேண்டுதலைச் செய்! உனது வேண்டுதல் நிறைவு பெறும். வேண்ட முழுதும் தருவாள் அவள்'
இப்படி பரமஹம்சர் பணித்தார்.

இரவு வேளை எப்பொழுது வரும், எப்பொழுது வரும் என்று அங்கலாய்த்த வண்ணம் அவர் பொழுது ஓடியது. இரவு ஒன்பது மணியானதும், கோயிலுக்கு ஏகும்படி விவேகானந்தரைப் பரமஹம்சர் பணித்தார்.

கோயிலை நோக்கி நடக்கும் வேளை ஆன்மீக வெறி அவரை ஆட் கொண்டது. கால்கள் நடுங்கின.

இறைவி தரிசனம் கிடைக்கப் போகிறதே, அவள் வார்த்தைகளைத் தன் செவிகள் கேட்கப் போகின்றதே என்ற பெரு மகிழ்ச்சி காரணமாக அவர் மனம் துள்ளித் துள்ளிப் பாய்ந்தது.

காளி சந்நிதி சென்று கற்சிலையை அவர் கண்கள் பார்த்ததும் அது உயிருள்ள அம்பாளாகவே தோன்றியது. எழில் மிக்க அழகுத் தேவதையாக, அன்பின் வடிவமாக அவருக்குத் தோன்றினாள்.

அன்பு, பக்தி அலைகளிடையே சிக்கித் தத்தளித்தார் விவேகானந்தர்.

அன்னை காலில் மாறி மாறி வீழ்ந்து வழிபாடு செய்தார்.

'எனக்கு அறிவு தா! பற்றற்ற மனம் தா! தங்கு தடையின்றி உனது காட்சி காணும் வரம் தா' இப்படி எல்லாம் வேண்டுதல் செய்தார்.

மடத்துக்குத் திரும்பியதும், அம்பாள் வேண்டுதலுக்கு என்ன சொன்னாள் என்று பரமஹம்சர் வினவ அதிர்ந்து போனார்.

குடும்பச் சுமை நீக்கும்படி அம்பாளை வேண்டத் தாம் மறந்து போனதாக விளக்கினார்.

பரமஹம்சர் கட்டளையிட இவ்வாறு ஒருமுறை அல்ல மூன்று தடவைகள் அம்பாளிடம் சென்றார். மூன்று முயற்சிகளிலும் அவர் தோற்றுப் போனார்.

அம்பாளைக் கண்டதும் உலகியல் தேவைகளைக் கேட்பதா என்று அவர் மனம் கூனிக் குறுகியது.

இப்படி அம்பாள் தரிசனம் பெற்றவர் துறவி விவேகானந்தர்.

## பண்டிதமணி கண்ட காளி

ஈழத்துத் தமிழ் உலகம் போற்றும் தமிழறிஞர், சமயப் பெரியார் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்.

அம்பாள் திருகோணமலையில் எழுந்தருளி இருப்பதாகவும், அங்கே அவள் அருள் மழை பொழிவதாகவும் அவளது இன்னருள் மழையிலே நனைந்தின்புற வேண்டுமாயின் தவஞ் செய்து அவ்வருளைத் துய்ப்பதற்கு நாமெல்லாம் பக்குவமடைய வேண்டும் என்று கூறுகிறார் பண்டிதமணி அவர்கள் இதோ அவர் கூற்று.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

திருவருட்பயன்

'தரும் சக்தி' - உபகரிக்கும் சக்தி - உயிர்களுக்கு உபகரியாமலிருக்க மாட்டாமை பராசத்தியாகிய தேவியின்இயற்கை

**தேவி**

கேவலாவஸ்தையில் தர்மிணியாயிருந்தும் சகலாவஸ்தையில் இமாசல தவக்குமரியாயிருந்தும் உயிர்களுக்கு உய்தி அருளுகின்றாள்.

சுத்தாவஸ்தையில் தோடுடைய செவி பிரகாசிக்க இறைவனோடெழுந்தருளி பரி பக்குவம் எய்திய ஆன்மாவைத் தமது மடிமீதிருத்தி பரிசுத்த சிவஞானமாகிய திருமுலைப்பாலைச் சுரந்தருளுவாள்

கேவலம் முதலிய மூன்று அவஸ்தைகளிலும் தேவியின் மூவகை அனுக்கிரகமும் ஒரே சமயத்தில் நடந்து கொண்டிருக்குமென்பது சிந்தனைக்குரியது

தேவியின் மூர்த்தி பேதங்கள் அநந்தம், தேவாரம் பெற்ற மகிமை வாய்ந்த திருத்தலமாகிய திருகோண மலையில் பத்திரகாளியாய் அருள்மழை பொழிந்தருளு கின்றாள்.

நாமெல்லாம் தேவியின் அருள் மழையில் முழுகுதற்குப் பாத்திரமாகும் பொருட்டுத் தவம் செய்வோமாக

பத்திரகாளியம்மையின் பாத கமலங்களுக்கு வணக்கம்

## எஸ். டி. எஸ். கண்ட காளி

திருகோணமலை தந்த நாடு போற்றும் மூத்த பத்திரிகையாளர் திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் எஸ்.டி.எஸ்.என்று பிரபல்யம் அடைந்தவர் சாயிபக்தராக விளங்கிய அவர் தனது மாணவப் பருவத்தில் காளி வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர். 'காளி ஆச்சி' என்ற தலைப்பில் நாம் வெளியிட்ட நூலில் இருந்து, அவர் கூறிய கருத்துக்களில் இது புலனாகும். அந்தப் பெரியார் சிந்தாமணி வார இதழில் நான் கண்ட பாரதி என்ற கட்டுரைத் தொடரிலும் திருகோணமலை பற்றியும் திருகோணமலை பத்திரகாளி கோயில் பற்றியும் முக்கியம் கொடுத்துக் குறிப்பிட்டுள்ளார் அவற்றையும் பார்ப்போமா?

காளி தேவி வணக்கம் சிறு தெய்வ வணக்கத்தின்பால் பட்டது என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. காளி, ஆதிபராசக்தியின் அம்சம் என்பது தான் பெரியோர்கள் கண்ட முடிபு ஆகும்.

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் காளி உபாஸகராகவே தமது ஆத்மீக அனுபவத்தை ஆரம்பித்தார். காளி தேவி அவரோடு பேசும் தெய்வமாக, வாழும் தெய்வமாக, உயிர்த் துடிப்போடு விளங்கினாள்.

"கடவுளைக் காட்ட முடியுமா?' என்று கேட்ட நரேந்திரனுக்கு 'ஆம்' என்று பதில் கொடுக்கும் துணிவைப் பரமஹம்சருக்கு அளித்தவள் காளி மாதாவே தான். கல்கத்தாவில் உள்ள காளி விக்கிரகத்தின் மூக்குத் துவாரத்தின் முன்னால் ஒரு துரும்பை நீட்டினார் இராமகிருஷ்ணர்.

காளியின் சுவாசம் பட்டு அந்தத் துரும்பு முன்னும் பின்னுமாக அசைந்தது. அந்தக் கணமே தெய்வம் என்று ஒரு சக்தி உயிரோடிருப்பதை நரேந்திரன் உணர்ந்தான். அது வரை தெய்வம் உண்டா இல்லையா என்ற சந்தேகத்தில் தவித்த ஒரு நாஸ்திகரான நரேந்திரன் பின்னர் சுவாமி விவேகானந்தரானார். அமெரிக்காவில் இந்து மதத்தை முழங்கினார். உலகம் வியக்கும் ஞானத் துறவியானார். இது காளி தேவி அன்று அளித்த பிச்சைதான்.

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் சக்தி எங்கும் எதிலும் நிறைந்த ஆதி பராசக்தியே. அந்த நிறைசக்தியின் தோற்றமே காளி. இந்த மகா தத்துவத்தை வரகவி சுப்பிரமணிய பாரதி தமது கவிதையில் நான்கு வரிகளில் தேங்கி நிற்கும்படி செய்து விட்டார்.

யாது மாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் - காளி நின்
தெய்வ லீலை யன்றோ?

என்பவை தான் பாரதி பாடிய அந்த ஞான பூர்வமான வரிகள்.

இந்த வரிகள் மூலம் அகண்டாகாரமாக நிறைந்த தெய்வ சக்தியின் தோற்றமே காளி என்பதையும், அண்ட சாராசரங்களில் இடம் பெறும் இயக்கங்கள் அனைத்துக்கும் உந்து சக்தியாக விளங்குபவளும் காளி தான் என்பதையும், பாரதி தத்துவமாக கூறி விட்டார்.

இவ்வளவு சக்தி வாய்ந்த காளி தேவிக்கு திருகோணமலையிலும் ஓர் அற்புத ஆலயம் அமைந்திருக்கிறது. அது மிகவும் சக்தி வாய்ந்த ஆலயம் என்பது எமது முன்னோர் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

காளிதேவியைப் பற்றிய பாடல்களில் என் மனம் பதிவுற்றமைக்கு ஒருவித சைகோலோஜிகல் காரணமும் உண்டு. திருகோணமலையில் சிவன் கோயிலடியிலிருந்த எங்கள் வீட்டிலிருந்த பெரிய கடை என்ற பகுதியில் அப்போதிருந்த சென்ட் ஜோசப் கல்லூரிக்குப் பெரும் பாலும் பக்கி வண்டியில் செல்வது வழக்கம்.

சில சமயம் நடந்தும் செல்ல வேண்டியிருக்கும் நடந்து செல்லும் போது, பெரிய மைதானத்தை அடுத்துள்ள பாதையில் காளி கோவிலைச் சந்திக்க வரும்.

காளி கோயிலில் தீபாராதனை ஆவது தெருவில் போகும் போதே தெரியும். தீபாராதனை தெரிந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன காளி கோவிலின் முன்னே ஒரு கும்பிடு போட்டு விட்டுப் போவது தினமும் நிகழும் ஒரு சம்பவமாகும்.

சின்ன வயதில் அப்படிக் காளியைக் கும்பிட்டமைக்கும் காரணம் இருந்தது. காளி கோவிலைத் தாண்டியதும் கரிக் கோப்பு என்ற ஒரு கிறிஸ்தவ சவச்சாலை உண்டு அந்த சவச்சாலையைப் பற்றி பலப் பல பயங்கர கதைகளைக் கல்லூரி உடன் மாணவர்கள் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாட்கள் இப்போது போலச் சனப் புழக்கமும் லைட் வெளிச்சமும் இல்லாத நாட்கள்!

எனவே, சுய பாதுகாப்பை நாடி காளியை வேண்டி நெஞ்சில் உருவாகும் பயத்தைப் போக்கிக் கொண்டு மேலே நடப்பது வழக்கம்.

இந்தப் பின்னணியில் பாரதியின் 'காளிப் பாட்டு' முதலில் நெஞ்சைத் தொட்டதில் ஆச்சரியமில்லை அல்லவா? இந்தப் பாடல்களையே நவராத்திரி காலத்தில் துர்க்கைக்கு உரிய முதல் மூன்று நாட்களிலும் இசையோடு பாடி வந்தேன். எனக்கு பாரதியாரை அறிமுகம் செய்து வைத்த திரு.சிவ. சுப்பிரமணியம் அவர்களுக்கு பாரதியாரைப் பற்றியும், அவர் பெருமைகளைப் பற்றியும், அவர் கவிதைகளின் சிறப்புகளைப் பற்றியும் எடுத்துக் கூறியவர் யார்? அந்தப் பெருமைக்குரிய இலங்கையர் சுவாமி விபுலானந்தர் தான்.

❋❋❋

## அம்பாள் பக்தர் குமரகுருபரர்

ஐந்து வயது வரை ஊமையாக இருந்த ஒருவர் திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் பேசும் சக்தி பெற்றார். இவர் வேறு யாருமல்ல கிபி 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள். முருகன் மீது கந்தன் கலிவெண்பா பாடி அருள் பெற்றார்.

அம்மை வழிபாட்டில் ஈடுபட்ட அவர் மீனாட்சி பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தை பாடியருளினார். அம்பாளை வளரும் சேயாகக் கற்பனை செய்து பருவங்கள் காட்டிப் பாடுதல் பெண்பாற் பிள்ளைத் தமிழ் மரபு.

அப்பிரபந்தம் அரங்கேறிய வேளை ஓர் அற்புதம் நிகழ்ந்தது. "வருகைப் பருவம்'' குறிக்கும் பாடலைப் பாடுகிறார். "தொடுக்கும் கடவுட் பழம் பாடல்" என்று தொடங்கும் பாடலை அவர் பாடுகிறார்.

அப்போது கோயில் குருக்களின் குழந்தையின் வடிவில் அம்பாள் தோன்றி குமரகுருபரர் கழுத்தில் முத்துமாலை அணிந்து விட்டு மறைகிறது.

இப்படி மனம் கனிந்து பாடும் பாடல்களுக்கு அம்பாள் செவி சாய்ப்பாள்.

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தல்
 பிடியே வருக, முழுஞானப்
பெருக்கே வருக, பிறைமௌலிப்
 பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக, மும்முதற்கும்
 வித்தே வருக, வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
 விளைவே வருக, பழமறையின்
குருந்தே வருக, அருள் பழுத்த
 கொம்பே வருக, திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
 குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக, பசுங்குதலை
 மழலைக் கிளியே வருக
மலயத் துவசன் பெற்றபெரு
 வாழ்வே வருக வருகவே.

இப்படி அம்பாளை நாம் பாடித் துதிப்போம்

❋❋❋

## "எங்கள் ஈஸ்வரி தேரினில் ஏறிவரும் பவனிபார்"

இறைவனின் அழித்தல் தொழிலைக் குறிப்பது தேராகும். இது பரந்து எரியும் அக்கினியின் தோற்றம்.

தேர் கூறும் தத்துவத்தை எண்ணிப் பார்ப்போம். தேரின் பாகங்கள் பிரபஞ்சத்தையும் அதன் பீடம் இதயத்தையும் குறிப்பன. உற்சவ மூர்த்தியை பீடத்தில் இருத்தியதும் தேர் ஓடுவது போன்று எமது இதயங்களில் இறைவியை எக்காலும் உபாசனை செய்ய எமது வாழ்க்கைத் தேர் சீருடன் சிறப்புடன் ஓடும்.

தேர் ஓடுதற்குரிய பாதையில் சறுக்குக் கட்டு வைப்போம் அல்லவா. அது போன்று எமது வாழ்க்கை நேரிய வழியில் செல்ல, ஆமாறு செல்ல, நாம் அதனை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

தேரடியில் தேங்காயினைச் சிதற அடித்து வழிபடுகின்ற அடியார்கள் தமது துயரங்களைச் சிதற வைக்கின்றார்கள். தேர் வீதி வலம் வந்ததும் அம்பாளுக்கு பச்சை சாத்துவோம். உக்கிரமூர்த்தியாக அவள் அழித்தல் தொழிலாற்றி வந்ததும் அவளைக் குளிர்விக்கும் பாவனை அது.

பத்திரகாளி அம்பாள் தேர்த் திருவிழாவன்று வீதி வலம் வருகையில் தேர்ச்சிந்து பாடப் பெறும். நான் சிறுவனாக இருந்த காலத்தில் திரு.கணேஷ் அவர்கள் இனிமையாக தேர்ச் சிந்து பாடுவது கேட்டு நான் மகிழ்ந்ததுண்டு. இன்றும் அவர் குடும்பத்தினர் தேர்ச்சிந்து பாடும் பணியில் ஈடுபடுகின்றார்கள்.

இந்தத் தேர்ச்சிந்தினைப் பாடிய திரு.வேலாயுதம்பிள்ளை அவர்கள் அந்நாட்களில் திருக்கோணமலையில் வித்தியாலயம் வீதியில் அச்சகம்ஒன்றினை நடாத்தினார். இவர் திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் சங்கீத ஆசிரியராக இருந்தவர். மக்களிடையே நாடக ஈடுபாட்டினை வளர்த்த நாடகாசிரியர் அவர். அன்னார் 1927ம் ஆண்டில் மறைந்தார்.

அந்தத் தேர்ச் சிந்து இதோ.

தேர்ச் சிந்து

என்ன சிங்கார மெங்கள் ஈஸ்வரி தேரினில்
ஏறிவரும் பவனி பார் - தேரினில்
இந்திரை கௌரி ஏழ்வகை மாதர்கள்
சுந்தரமாகவே வந்து பணிந்திட

(என்ன)

கன்னன் மொழிக் கிளியே அன்னபூரணியம்மா
கந்தனைத் தந்தநாயகி-என்னம்மணி
கந்தனைத் - தந்தநாயகி
கற்றிடுமடியவர் புத்தியிலேயுறை
சிற்றிடை மாதுமை நற்தின மதனில்

(என்ன)

சந்தனங் குங்குமம் ஜவ்வாது புனுகுடன்
தாழ்சடை நாகந்தூங்கவே - புனுகுடன்
தாழ்சடை நாகந்தூங்கவே
சந்திர சூரியர் எண்டிசைப் பாலகர்
செந்திருவே யென வந்தனை செய்திட

(என்ன)

வன்னச் சிமிக்கியும் மதாணிப் பதக்கமும்
வைடூரியத்தினோலையும் பதக்கமும் -
வைடூரியத்தினோலையும்
வாய்ந்த பட்டாடையிற் சார்ந்தவொட்டியாணமும்
நேர்ந்த திருக்கரத் தேந்து பொற்கிளியும்

(என்ன)

சித்திர ரதந்தனிலே தேவி எழுந்திடல்
செய்ய கண்காட்சி மாட்சியே - எழுந்திடல் -
செய்ய கண்காட்சி மாட்சியே
இத்திரு கோணையின் பத்தருக்கேயருள்
உத்தமி சாம்பவி சித்தமிரங்கியே

(என்ன)

1972ம் ஆண்டு இக் கோயிலுக்கு மூன்று சித்திரத் தேர்களும் மஞ்சமும் செய்யப்பட்டன. கிழக்கு இலங்கையில் முதன் முதலாகச் செய்யப்பட்ட சித்திரத் தேர் இதுவாகும் என்பார்கள். 1981ம் ஆண்டு இம் மூன்று தேர்களையும் பாதுகாக்க வேண்டி தேராலயம் கட்டப்பட்டது.

எனது நண்பர் திரு.சின்னையா குருநாதன் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர், பத்திரிகையாளர். அனைத்திலங்கை ரீதியில் சிறந்த பத்திரிகையாளருக்கான விருதினை சென்றாண்டு பெற்றவர். தமிழ் ஊடகவியலாளர் சங்க ஸ்தாபனத் தலைவரான அவர், ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருபவர். அநாமிகன் என்ற புனை பெயரில் அவர் எழுதும் கட்டுரைத் தொடர் கைதேர்ந்த நடப்பு அரசியல் விமர்சனமாக மலர்ந்து இலங்கையில் மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகு பூராவும் விரும்பி ஆர்வத்துடன் படிக்கப் பெறுகிறது. திருகோணமலை ஈன்றெடுத்த பிரபல பத்திரிகையாளரான அவர் சித்திரத் தேர்களை உருவாக்கிய சிற்பாசிரியரான திரு.ஜீவரட்ணம் அவர்களைப் பற்றிக் கூறிய கருத்து இதோ.

இந்து சமயத் தத்துவங்களில் ஒன்றாகத் தேர்த்திருப்பணி அமைகிறது. தேர்த்திருப்பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் ஒரு சிலரே. அவர்களுக்கும் உள்ளூரில் போதிய ஆதரவு காட்டப்படுவதில்லை.

உள்ளூர்ச் சிற்பாசிரியர்களில் முதலிடம் வகிக்கின்றார் திரு.ஜீவரத்தினம் அவர்கள். இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாசாரியாரின் புதல்வர்களில் ஒருவராவர்.

ஆறுமுகம் ஆசாரியாரின் குடும்பமே ஒரு கலைக்குடும்பம். அவரது ஏழு புதல்வர்களும் ஏதோ ஒருவகையில் கலைச் சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள். மூத்தவர் வடமாநில சித்திர வித்தியாதரிசியாகப் பணிபுரிந்தவர். அவர் பெயர் திரு.ஆர்.தம்பித்துரை. திரு.ஜீவரத்தினம், தந்தை காட்டிய வழியில் தேர்த்திருப்பணியில் ஈடுபட்டிருக்கின்றார்.

கிழக்கு மாகாணத்திலே சித்திரத் தேரைப் பெற்ற பெருமை திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு உரியது. அச்சித்திரத் தேரை கலை வண்ணத்துடன் அமைத்த பெருமை திரு.ஜீவரத்தினம் ஆசாரியாருக்குச் சேருகின்றது.

அப்பாக்கியத்தைப் பெற்ற திரு.ஜீவரத்தினம் பற்றி, சைவமக்கள் அறிந்து வைத்துக் கொள்ள வேண்டுமல்லவா! கல்லிலே கலைவண்ணம் கண்டான், தமிழன் என்பர் நம்மவர்கள். மரக் கட்டைகளிலே உணர்ச்சிகளைத் தேக்கி கலை வண்ணம் கண்ட கைகள் திரு.ஜீவரத்தினத்துக்கு உடையவை.

இறைவன் இறைவியின் திருவிளையாடல்களை உயர்ச்சி நிறைந்த சிற்பங்களாக மரக்கட்டைகளிலே செதுக்குவது என்றால் சாதரணமான காரியமா? செதுக்கும் சிற்பாசாரியரின் உள்ளம் மரக் கட்டையாக இருந்து விட்டால் என்ன செய்வது?

ஆனால் திரு.ஜீவரத்தினத்துடைய உள்ளமோ, இறைவன்-இறைவியின் திருவிளையாடல்களின் உட்கருத்தை உணர்ந்த உள்ளமாக இருக்கின்றது.

அவரது கைகள் வெறும் மரங்களின்மேல் விளையாடவில்லை. பக்தர்களின் உள்ளங்களின் மேன்மையை தட்டுமாற் போல் பணியாற்றுகின்றன. இனிய நாதம் ததும்ப வீணையின் தந்திகளை மென்மையான விரல்கள் எப்படி மீட்டுகின்றனவோ, அதேபோன்று தான் திரு ஜீவரத்தினத்தின் கைகள் பக்தர்களின் உள்ளங்கள் நெகிழக் கூடிய வகையில் இறைவன் திருவிளையாடல்களை மரத்தில் செதுக்குகின்றன.

திரு.ஜீவரத்தினம் கூறுகின்றார்: "தேர்த் திருப்பணித் தொழிலை விரும்பியே செய்து வருகின்றேன். பூரண மனத் திருப்தி இத்தொழில் மூலம் அமைந்திருக்கின்றது."

## ஊஞ்சற்பா

பண்டை நாள் அம்பாள் ஆச்சிக்கு திருகோணமலை தந்த இரு தமிழ் அறிஞர்கள் ஊஞ்சற் பா பாடியுள்ளனர்.

ஒருவர் கலைஞர் வி.வேலாயுதம் பிள்ளை அவர்கள் மற்றையவர் புலவர்.வே.அகிலேசபிள்ளை அவர்கள்.

திரு வேலாயுதம் பிள்ளை அவர்கள் இசை நாடகம் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தவர். கலையார்வம் மிக்கவர். இசையாசிரியராக திருகோணமலை இந்துக் கல்லூரியில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார் என்று அறிய முடிகின்றது. திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் சொந்தமாக அச்சகம் நடாத்தி வந்தார்.

இலக்கிய வளம், உவமை நலம் பக்திச் சுவை ததும்பப் பத்திரகாளி அம்பாள் திருவூஞ்சற் பாவினைப் பாடியுள்ளார்.

தான் இசை மேவு செந்தமிழ் ஊஞ்சற் பாப்பாடுவதாக அவர் காப்புச் செய்யுளில் கட்டியங் கூறுகிறார். நான்மறையினைக் கால்களாகவும், ஆகமங்களை வட்டமாகவும் கலைகளைச் சட்டமாகவும், மந்திரங்களைத் திருக்கயிறாகவும், பிரணவத்தை பலகையாகவும் கொண்டு சமைக்கின்றார் வேலாயுதம்பிள்ளை என்னும் இலக்கியத் தச்சன் அவ்வூஞ்சலில் ஏறி பக்தர்களை அருட்கரை சேர்க்குமாறு அம்பாளைப் பாடித் துதிக்கிறார் அப்பெரியார்

இக்கோயிலுக்கு புலவர் வே.அகிலேசபிள்ளை அவர்கள் மற்றொரு ஊஞ்சற் பாப் பாடியுள்ளார். சென்ற நூற்றாண்டின் முற் பகுதியில் திருகோணமலையில்வாழ்ந்து தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் வண்ணம் தமிழ்ப்பணி ஆற்றியவர் அவர். 'அகிலேச நற்பிள்ளை' என்று சுன்னாகம் குமாரசாமிப் புலவரினால் பாராட்டப் பெற்றவர்.

சிவபக்தரான அவர் அம்பாளிடத்தும் பக்தி பூண்டிருந்தார். சிவகாமி அம்மன் விருத்தம் விசாலாட்சி அம்மை விருத்தம் ஆகியவற்றைப் பாடியவர்.

விசாலாட்சி அம்மனிடம் ஒரு வேண்டுதலைச் செய்கிறார் புலவர் அகிலேசபிள்ளை. பக்தர்கள் பூக்கள் கொய்து மாலை கட்டி இறைவிக்குச் சாத்தி அழகு பார்ப்பர் இன்பம் துய்ப்பர். ஆனால் அப்பூக்கள் வாடி விடலாம். நாட்கள் ஓட நறுமணம் குன்றலாம். ஆனால் என்றும் நறுமணம் குன்றாத, நயம் குன்றாத, வாட மாட்டாத பாமாலை தன்னை பக்தர்கள் சூட்டும் பூ மாலைகளுடன் அணிந்து மகிழுமாறு அன்னையை அவர் வேண்டுதல் செய்யும் வெண்பா இதோ

ஐயை விசாலாட்சி யெனுமன்னையே நின்புயத்தில்
வையத்திற் தொண்டர் மகிழ்ந்தணியும் - துய்யநறும்
பூமாலை யோடுபுனைந் தருள்வாய் யானுரைத்த பாமாலை
தனையும் அன்பாய்.

## நாவலாசிரியை கூறும் அற்புதம்

பிரபல தமிழ் எழுத்தாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியையுமான திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம் அவர்கள் சில அற்புதங்களை பின்வருமாறு விளக்கியுள்ளதைக் காணலாம்:-

சுமார் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கூடஒரு சிறு அற்புதம் நடைபெற்றதாக அறியக் கிடக்கிறது. ஆண்டு தோறும் நடைபெறும் நவராத்திரி விழாவின் இறுதியில் திருக்கோணமலையில் கும்பத்தை கோலாகலமாக வீதிதோறும் சுற்றிக் கொண்டாடுவார்கள். அது ஒரு கண்கொள்ளாக் காட்சி. அவ்வேளை வேற்று இனத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் அம்மன் சந்நிதி முன்றலில் வைத்து அந்நிகழ்ச்சியைப் பரிகசித்ததாகவும் அதனால் வாய் பேச முடியாமல் பரிதவித்துத் திரும்பவும் பத்ரகாளியைப் பிரார்த்தித்துப் பிராயச்சித்தம் செய்து பேசக் கூடிய நிலை பெற்றதாக கூறுகிறார்கள்.

இதே போல பல ஆண்டுகளுக்கு முன்னர் வேற்று இனத்தைச் சேர்ந்த கணவன் மனைவியர்க்கு அடுத்தடுத்து இரண்டு ஊமைக் குழந்தைகள் பிறக்கவே அவர்கள் பத்திரகாளி அம்மாளுக்கு நேர்த்தி வைத்ததாகவும் அதன் பின்னர் பிறந்த குழந்தைகள் பேசும் சக்தி பெற்றிருந்ததாகவும் அத்தம்பதியர் முதலாவது கும்பாபிஷேகத்துக்கு மூலஸ்தான விமான வேலைகளை நிறைவேற்றிக் கொடுத்ததாகவும் சொல்கிறார்கள்.

இதே போல் மூன்று மாதங்களுக்கு முன்னர் நான் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த வேளை மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் ஓய்வு பெற்ற விரிவுரையாளர் ஒருவரைச் சந்தித்தேன். அன்னாரின் கணவர் நோய்வாய்ப்பட்டுப் பேசும் சக்தியை இழந்து டாக்டர்கள் கைவிட்ட நிலையில் நண்பர்களின் ஆலோசனையின் பேரில் கேதார கௌரி நோன்புக் காலத்தில் அம்மன் சந்நிதிக்கு வந்த இரந்து கண்ணீர் விட்டு வேண்டி வீட்டிற்கு சென்ற சமயம் பூசை முடிந்து விட்டதா? என்று பேசும் சக்தியைப் பெற்றுத் தன் கணவர் கேட்டதாகக் கூறி பரவசப்பட்டார்.

❋❋❋

## பாதாதி கேசத்துதி

நாம் நாட வேண்டியது திருவடிப் பேறு என்பது நமது சமய உண்மை. இறைவியின் திருவடிகளில் எமது தலையைச் சாய்த்தி நெஞ்சத்தை வீழ்த்த வேண்டும். இதுவே எமக்கு ஆத்ம ஈடேற்றம் நல்கும்.

இறைவியின் திருவடியின் எழிலையும், அருட் திறத்தையும் பலரும் பலவாறு பக்தியுடன் பாடியுள்ளனர்.

இறைவியினைப் பாதாதி கேசமாக வழிபடுவதும் பாடுவதும் நமது மரபு. அம்பாளின் பாதந் தொட்டு முடிவுவரை நமது உள்ளம் பதித்து வழிபடுவது அம்மரபு.

அம்மரபினுக்கென தனித்துவம் உண்டு. அது தாள் தலை - தாடலை என்பர்.

இதனாலே இறைவன் மீது பாதாதி கேசத் துதி பாடும் மரபுண்டு. இம்மரபில் பாடப் பெற்ற பாதாதி கேசத் துதி எங்கள் திருகோணமலைப் பத்திரகாளிக்குண்டு.

திருகோணமலை மாவட்டத்தில் வேறெந்த ஆலய மூர்த்திக்கும் இவ்வாறு பாதாதி கேசத் துதி பாடப் பெறவில்லை. இலங்கையில் வேறெந்த கோயில் மூர்த்திக்காயினும் இவ்வாறு பாதாதி கேசத் துதி பாடப் பெற்றிருப்பதாக அறிய முடியவில்லை. இருப்பினும் அது விரல் விட்டு எண்ணக் கூடியவாறு ஒன்றிரண்டே இருக்கலாம்.

பாதாதி கேசத் துதி பாடி ஒரு தனிச் சிறப்பினை இவ்வாறு திருகோணமலை பத்திரகாளி அம்பாளுக்குச் சேர்த்துள்ளார் திரு.சந்திரசேகரம் பிள்ளை ஜெயச்சந்திரன் அவர்கள். திருகோணமலையில் சமயப் பேச்சுக்கள், கதாப்பிரசங்கள் செய்து இளமைக் காலந் தொட்டு ஈடுபாட்டுடன் வாழ்ந்து வருபவர்.

அன்னை பத்திரகாளி அம்பாள் மீது இவர் பாடிய பாதாதி கேசத் துதி இருபது பாடல்களைக் கொண்டது. இக் கோயிலின் கொடியேற்ற நன்னாள் ஒன்றில் அந்நாள் ஆதினகர்த்தா பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தா அவர்களின் அருளாசியுடன் கவிஞரே, பாடி அரங்கேற்றினார்.

இப்பாடல்கள் பற்றி கழகப் புலவர் பெ.பொ.சிவசேகரம் அவர்கள் கூறிய கருத்துக்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஸ்ரீபத்திரகாளி அம்பாள் மீது கொண்ட ஆராத அன்பில் எழுந்த தோத்திரங்களாக இவை விளங்குகின்றன. அம்பாளின் அருளைப் பெறுவதற்கு உள்ளம் பக்தி நிறைந்ததாய் இருத்தல் வேண்டும். பக்தியின்றி ஸ்ரீ பத்திரகாளியின் அருளுக்கும் நாம் பாத்திரர் ஆவது அரிதாகும்.

திரு.ச.ஜெயச்சந்திரன் அவர்களின் பாடல்கள் படிப்போர் உள்ளத்தில் பக்தி உணர்ச்சியை ஏற்படுத்தும் சொல் நயமும் பொருள் நயமும் உடையன.

திருக்கோணமலையில் பிறந்த இளம் கவிஞராகிய ஜெயச்சந்திரன் அவர்களின் முயற்சியைப் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கடாட்சம் அவருக்கு வேண்டிய சகல சம்பத்துக்களையும் நல்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

இத்துதியினை இருபத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் ஆசிரியர் தனது அறுபதாவது வயதில் இந்நாள்

ஆதினகர்த்தா பிரம்ம ஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்களின் அருளாசியுடன் கொடியேற்ற நன்னாளில் மீண்டும் பாடினார்.

திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் மீது பாடிய இப்பாதாதி கேசத் துதி பிறந்த கதையை திரு.ச.ஜெயச்சந்திரன் அவர்களே கூறக் கேட்போம்.

'1971 ஆம் வருடம், கல்முனையில் நாம் வாழ்ந்த காலமது. கல்முனை கிராம நீதிமன்றத்தில் பிரதம லிகிதராய் இருந்து, நிந்தாவூர், சம்மாந்துறை, அம்பாறை, இறக்காமம், நீதி மன்றங்கள் அனைத்திற்கும் பொறுப்பாய் இருந்து நீதிபதியுடன் ஒவ்வொரு நாளும் ஆங்காங்கு சென்று வந்த காலமது.

ஒரு நாள் காலை நேரம் திருக்கோணமலையிலிருக்கும் ஆலயங்கட்குப் பதிகம் பாட வேண்டும் என்றோர் ஆசை, என் மனதில் தோன்றியது வில்லூன்றிக் கந்தனுக்கு முதல் பதிகம் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. எனது மனைவி லோஜியிடம் என் கருத்தைச் சொன்னேன். முதல் பதிகத்தை பத்திரகாளிக்குப் பாடுங்கள் என்று கூறினார். பதிகம் பிறந்தது. காலை உணவு இல்லை பகற் பொழுது மட்டும் ஒருவேளை உண்பேன் கவிதைகள் வளர்ந்தன.'

அந்த நாட்களில் திருக்கோணமலையில், எனது மனைவியின் பெரிய தாயார் சிவகாமி அம்மா வாழ்ந்து வந்தார். அவரை நானும் பெரியம்மா என்றே அழைப்பேன். நான் மட்டும் அல்ல ஊரவர் பத்திரகாளி அம்மனுடன் மிகவும் நெருக்கமான உறவு கொண்டவர். ஒரு நாள் அவர் ஒரு கனவு கண்டார். அம்பாள் அவர் கனவில் தோன்றினார். 'உலகம் குளிர, ஊர் குளிர, மண் குளிர, மனங் குளிர, குடும்பம் குளிர, இந்த ஐந்தும் குளிரப் பாடு,' என்று கூறினாராம். விடிந்ததும் பெரிய மாமாவிடம் (இவர் பெரியம்மாவின் தம்பி சிவசுப்பிரமணியம்) தாம் கண்ட கனவினைக் கூறி, அம்பாள் இப்படிப் பாடும்படி பணித்துள்ளார் யாரிடமாவது சொல்லிப் பாடுவிக்க வேண்டும் என்றாராம்.

எமது மூன்றாவது மகனின் மகப்பேறிற்காக நாம் திருக்கோணமலைக்கு அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தோம். அம்பாளுக்கு பாடிய பாடல்களையும் கொண்டு வந்து இருந்தேன். பெரியம்மா தான் கண்ட கனவினை என்னிடம் சொன்னார். இதைக் கேட்ட நான் சிரித்தபடியே அம்பாளுக்கு பாட்டு நான் பாடிக் கொண்டு இருக்கிறேன். நான் பாடிய முதலாவது பாடல் 'உலகம் குளிர' என்று தொடங்குகிறது என்று பாடிக் காட்டினேன். அவரும் சந்தோஷப்பட்டார். அந்த வருஷ கொடி ஏற்றத்தின் போது கொடி ஏற்ற தினத்தன்று கொடி ஏற்றி அம்பாள் வீதி வலம் வரும் முன் இப்பாடல்கள் ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு.கு.சோமஸ்கந்த ஐயா அவர்களின் அனுமதியுடன் என்னால் பாடப்பட்டன - இதுவே இத்துதி பிறந்த கதை.

## கும்பவிழா

திருக்கோணமலையில் நடைபெறும் கும்பவிழாப் போல் இலங்கையில் வேறு எங்காவது நடைபெறுவதாகத் தெரியவில்லை. இவ்விழா இந்த ஆலயத்திற்கு மாத்திரம் உரிய சிறப்பு விழாவல்ல. விஜயதசமியன்று திருக்கோணமலையில் பரவலாகக் கும்பவிழா நடைபெற்று வருகின்றது. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தி வரும் காலத்தில் திருக்கோணமலையில் கடற்படைத் தளம் அமைக்கும் வேலையை ஆரம்பித்தார்கள்.

அத்தளத்தில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து சீக்கிய மக்களையும், பஞ்சாபியர்களையும் அழைத்து வந்திருந்தார்கள். இஸ்லாமிய மதவழிபாடுடைய பஞ்சாபியர்கள், தமது மதபக்தியினாலும், நம்பிக்கையினாலும் தங்கள் நாட்டில் கடைப்பிடித்துவந்த விழாக்களை இங்கும் ஆரம்பித்தார்கள். "பஞ்சா" எடுத்தல் என்பது அவ்விழா. சந்தனக் கூடுகட்டி (தேர்போல் அலங்கரித்து அமைப்பது). அதில் பஞ்சா என்ற சின்னத்தை வைத்து வீதிதோறும் கொண்டு சென்று பெருவிழாவாகக் கொண்டாடினார்கள். இவ்விழாவுக்கு பல இடங்களிலிருந்தும் இஸ்லாமியர்கள் வந்து கலந்து கொள்வார்கள். பஞ்சா எனப்படும் விழா திருக் கோணமலையில் பல பள்ளிவாசல்களிலும் நடைபெற்றது. அவ்வவ்விடங்களிலிருந்து அழகாக அலங்கரிக்கப்பட்ட பஞ்சாக்கள் (கரகம் போல் முக்கோணவடிவில் கட்டுவது) குதிரைகள் பூட்டப்பட்ட வண்டிகளில், தற்போது இங்கு கும்பவிழா நடைபெறுவதைப் போல் வீதிகள் தோறும் கொண்டு செல்லப்படும். விழா முடிவில் அந்தப் பஞ்சாக்களை வில்வ பத்திரர்க் கோணேசர் கோவிலுக்கு அருகிலிருந்த குளத்திலே போடுவார்கள். இதனால் பிற்காலத்தில் அந்தக் குளத்திற்குக் தக்கியாக் குளம் என்று பெயர் வந்ததாம். பஞ்சாபியர் ஒப்பந்தம் முடிந்து தங்கள் நாட்டுக்குச் சென்ற பின் இவ்விழா அருகிக் கொண்டே வந்து தொடர்ந்து நடைபெறாமல் மறைந்து விட்டது. இங்குள்ள இஸ்லாமியர்கள் அதனைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை போலும்.

பஞ்சாபியர்களைப்போல் இந்துக்களாகிய சீக்கியர்கள் கும்பவிழாவை நடத்தினார்கள். சீக்கியரால் ஆரம்பிக்கப்பட்ட கும்ப விழா அவர்கள் இந்த நாட்டை விட்டுச் சென்ற பின்னரும் இங்குள்ள இந்துக்களால் தொடர்ந்து விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. திருக்கோணமலை மாவட்டம் இந்துக்களின் குடியிருப்பாகப் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. கோணசப் பெருமானுடைய தெய்வீக அருள் இப்பிரதேசமெங்கும் வியாபித்திருந்ததை ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தப் பெருமான் தேவாரத் திருப்பதிகத்தில பாடியருளினார். "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" என்பது அவருடைய திருவாக்கு.

திருக்கோணமலையில் இந்துக் கோவில்கள் நிறைந்திருந்ததால் சீக்கியர் ஆரம்பித்த கும்பவிழாவை, அவர்கள் இந்த நாட்டை விட்டுச் சென்ற பின்னரும் இங்குள்ள ஆலயங்கள் தொடர்ந்து நடத்தி வருகின்றன. ஆலயங்கலிருந்த கும்பங்கள், கரகங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு பக்திபூர்வமாக அதே வேளையில் போட்டி மனப்பான்மையுடன் வீதிகளில் வலம் வந்து கொண்டிருக்கும்.

ஒரு ஆலயத்துக் கும்பம் இன்னோரு ஆலய கும்பத்தை எதிர்ப்படாமல் (எதிர்ப்பு ஏற்படாமலிருப்பதற்காக) வீதிகளில் வலம் வரும். இந்தக் கும்பம் கரகங்களை தாங்கி வருபவர்கள் ராஜமேளம் அடிக்கப்படும் தாளத்திற்கமைய ஆடிக் கொண்டு வருவார்கள். உடுக்கடித்துக் காவியங்கள், காவடிச்சிந்து பாடிக் கொண்டும் வருவார்கள். மங்கள மேளங்களும் வாசிப்பதுண்டு. கும்பம் கரகங்களைத் தாங்கிவருவோர் உருவேறி ஆடுவதுமுண்டு. அருள்வாக்குகள் கூறுவதுமுண்டு. விஜயதசமியன்று இரவு பூராவும் இவ்விழா நடைபெறும். கும்பம் கரகங்களை பயபக்தியுடன் வரவேற்க மக்கள் தத்தம் வீட்டு வாசல்களில் நிறைகுடம் வைத்துக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு ஆலயத்திலுமிருந்து புறப்படும் கும்பம், கரகங்கள் மற்ற ஆலயங்களுக்குச் சென்று தரிசித்துக் கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்தைப் போய்ச் சேர்வதுடன் இவ்விழா நிறைவுபெறும்.

கும்பம் எனப்படுவது பெரிய செப்புக்குடத்தில் வேப்பம் பத்தினால் அகலமான அடித்தளம் அமைத்து சுமார் பத்தடி உயரத்திற்குத் தேர்போல மலர்களாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரித்துக் கட்டப்படுவது. கும்பத்தின் அடிப்பாகம் அகன்றும் மேலே போகப் போக ஒடுங்கியும் செல்லும். கரகம் செப்புக் குடத்தில் அம்பாளின் முகபடாம் வைத்து வேப்பம் பத்திரத்தினால் கட்டப்படுவது. எல்லா ஆலயங்களிலிருந்தும் புறப்படும் கும்பம், கரகங்கள் தத்தம் கோஷ்டியுடன் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்திற்கு வந்து தரிசிப்பார்கள் இவைகளைப் பார்ப்பதற்காக இவ்வாலயத்தில் மக்கள் திரளாகக் கூடி நிற்பார்கள்.

அன்று இவ்வாலயத்தில் "மானம்பூ" திருவிழாவும் நடைபெறும். அம்பாள் ஆலயத்திற்கு எதிரேயுள்ள மைதானத்தில் மானம்புத் திருவிழாவுக்காக எழுந்தருளுவார். அவ்விடத்தில் கோணேசர் கோவிலிருந்து மாதுமையம்பாளும், சிவன் கோவிலிலிருந்து விசாலாட்சியம்பாளும் வந்து மானம்பு விழா நடத்திச் செல்வர். இதுவும் இந்துக்களுக்கு ஒரு வாய்ப்பான சமய நிகழ்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு சைவப் புலவர் வடிவேல் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## பாரதி கண்ட காளி

மகாகவி பாரதியார் ஒரு காளி பக்தர். அவருடைய பெரும்பாலான பாடல்களுக்கு ஊடாக அம்பாள் உபாசனை ஊடுருவி நிற்பதைக் காணலாம். அவர் உள்ளத்தில் தணியாத தாகமாக இருந்தது விடுதலை வேட்கை. அவ்வாறு நாட்டு விடுதலையை நாடி நிற்கும் வேளையிலும் அவர் அம்பாளை வேண்டிப் பாடுகிறார் என்றால் அவர் அம்பாளிடத்துக் கொண்டிருந்த பக்தி எம்மாத்திரம்.

குடும்பத்துக்கு, இனத்துக்கு, நாட்டுக்கு, மனித சமுதாயத்துக்கு எவ்வித பங்களிப்புஞ் செய்யாமல் வாழ்வதில் பாரதியாருக்குத் திருப்தி இல்லை. எவருக்கும் பயனின்றி வாழ்பவரை பூமிக்குச் சுமை என்பது வழக்கம். இதே வழக்குச் சொற்றொடரைத் தனது பாடலில் கையாளுகிறார் பாரதியார்.

'நிலச் சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?' என்று காளியைச் சாடுகிறார் அவர்.

'என்னை ஆற்றல் உள்ளவனாகப் படைத்து விட்டாயே. சமுதாயம் பயனுற வாழ்வதற்கு எனக்கு வல்லமை தாராய்! தாராய்!' என்று காளியிடம் வேண்டுதல் செய்கிறார்.

'சொல்லடி, சிவசக்தி - என்னைச்
சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய்,
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே'

சாதாரண மக்களின் வாழ்வினை நினைத்துப் பார்க்கிறார். பொருள் தேடித் தினமும் சோறு உண்பார்கள். ஊர் வம்பு பேசித் திரிவார்கள். மனம் வாடி நிற்பர். மற்றவர்கள் உள்ளத்தைப் புண்படுத்துமாறு சொற்களைக் கொட்டித் தள்ளுவர். செயல்களில் ஈடுபடுவர் பின்னர் நரை, மூப்பினுக்குப் பலியாகி இறக்கின்றனர். இதுவே சாமானியர்களின் வேடிக்கை வாழ்க்கையாகும். 'இப்படி வேடிக்கை மனிதனாக வாழ்ந்து மாள்வேன் என்று நீ நினைக்கிறாயா?' என்று காளியிடம் சீற்றம் கொண்டு கர்ச்சனை செய்கிறார் பாரதியார்.

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி -- மனம்
வாடித் துன்பமிக வுழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல.
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ?

சென்னையில் காளிகாம்பாளின் சந்நிதியில் மகாகவி பாரதியார் காளி மீது பக்தியுடன் பல பாடல்களைப் பாடினார் என்பதால் அவர் அம்பாள் உபாசகர் என்றறிகிறோம். அவர் பாடிய காளி ஸ்தோத்திரத்தில் இருந்து ஒரு பாடல் இதோ:

யாது மாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - காளி
தெய்வ லீலை யன்றோ?
பூத மைந்து மானாய் - காளி
பொறிக ளைந்து மானாய்
போத மாகி நின்றாய் - காளி
பொறியை விஞ்சி நின்றாய்

இன்ப மாகி விட்டாய் - காளி
என்னுளே புகுந்தாய்
பின்பு நின்னை யல்லால் - காளி
பிறிது நானு முண்டோ?
அன்ப ளித்து விட்டாய் - காளி
ஆண்மை தந்து விட்டாய்
துன்பம் நீக்கி விட்டாய் - காளி
தொல்லை போக்கி விட்டாய்

## திருவிளக்குப் பூசை

கன்னியருக்கும் சுமங்கலிப் பெண்களுக்கும் உரிய சிறப்பு வழிபாடு திருவிளக்குப் பூசை ஆகும்.

இறைவனை ஒளி வடிவாகக் காணும் அடியார்கள் திருவிளக்குப் பூசையில் ஈடுபடுவர். திருவிளக்குப் பூசையின் பயனாக சகல மங்களங்களும் கை கூடும்.திருவிளக்கின் நுனியில் விநாயகர் அமர்ந்துள்ளார். விளக்கின் அடிப்பாகம் தாமரை மலராக அகன்று இருத்தல் பிரம்மாவைச் சுட்டும். விளக்கின் தண்டுப் பாகம் திருமாலைக் குறிக்கும் மேலேயுள்ள அகல் பாகம் கெங்காதரனைக் குறிக்கிறது. திரிவைக்கும் கண்கள் ஐந்தும் பஞ்ச முகத்தைக் குறிக்கும் என்பர் ஞானியர்.

தீபத்தின் மஞ்சள் நிறச் சுடர் மகாலக் குமியையும், சுடரில் காணும் நீலநிறத்துப் பிரகாசம் கலைமகளையும், சுடரின் சூடு துர்க்கா தேவியையும் குறிப்பதாக சமய அறிஞர்கள் விளக்குவர்.

பித்தளை விளக்கில் நெய்விட்டு பஞ்சுத்திரியிட்டு தீபம் ஏற்றுவது நலம் தரும். இவ்வழிபாட்டினால் கன்னிப் பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியமும் , சுமங்கலிகளுக்கு சகல மங்களங்களும் கைகூடும்.

அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய் - நன்புருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்
ஞானத் தமிழ் புரிந்த நான்

பூதத்தாழ்வார்

ஊனுடம்பு வீடாக, உள்ளம் தகளியாக, உணர்வு நெய்யாக, உயிர் திரியாக ஞானம் பெற்ற ஒளியை ஏற்றினால் இறை தரிசனம் கிட்டும். மங்களம் மனையெங்கும் தங்கும் என்பது பொருள்.

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கின் முன்னே வேதனை மாறும்

என்பார் திருமூலர்.

விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும் என்பார் அப்பரடிகள்.

தெற்குத் திசையில் தீபம் ஏற்றலாகாது. அது அபசகுணம் வடக்கில் தீபம் ஏற்றச் செல்வம் , மங்களம் உண்டாகும். திருமணம் உட்படப் பல தடைகள் நீங்கும். சர்வ மங்கலம் ஏற்படும். மேற்குத் திசையில் தீபம் ஏற்ற கடன் தொல்லை, கிரக தோஷம், பகை நீங்கும். கிழக்கில் தீபம் ஏற்றத் துன்பம் நீங்கும்.

## திருவிளக்கு தொண்டர் கலியனார்

கலியநாயனார் சரிதை திருவிளக்கு வழிபாட்டினை நன்கு விளக்கும். அவர் திருவொற்றியூர் கோயிலின உள்ளேயும் வெளியேயும் பெருந்தொகையாக திருவிளக்குகளை ஏற்றித் திருவருட் பணி செய்தார்.

அவர் ஒருகால் ஏழையானார். செக்காட்டி எண்ணெய் பெற்று கோயிலில் திருவிளக்கேற்றினார். வறுமை மேலும் அதிகரிக்க எண்ணெய் வாங்கி விளக்கேற்றித் திருத் தொண்டு செய்ய முடியாமை கண்டு அவர் மனமுடைந்தார்.

ஒருநாள் திடசங்கற்பத்துடன் ஒரு முடிவுக்கு வந்தார். தனது இரத்தத்தை எண்ணெயாக ஊற்றி விளக்குகளை ஏற்றுவதே அவரது முடிவாகும்.

கோயிலைச் சுத்தம் செய்து அகல் விளக்குகளை ஒழுங்காக வரிசைப்படி அமைத்தார். திரிகளை ஒவ்வொரு விளக்கிலும் இட்டார். விளக்கிடும் தொண்டு இல்லையேல் அடியேனும் இல்லை இப்படி உறுதி கொண்டார்.

வாளெடுத்துத் தன் தொண்டையை அரிந்தார். தன்னுதிரத்தால் விளக்கேற்ற முனைந்தார். இறைவன் கலியனாரின் கையைப் பிடித்துத் தடுத்தார். அவருக்கு முக்தி கொடுத்தார். இங்கு திரு விளக்குப் பூசையின் சிறப்பினைக் காண்கிறோம்.

## தீபந் தூண்டிய சுண்டெலி

வேதாரணிய திருத்தலத்தில் வேதபுரீஸ்வரன் கோயிலில் நிகழ்ந்த அற்புதம் திருவிளக்கு வழிபாட்டின் சிறப்பினை எடுத்தியம்புகிறது.

அக்கோயிலின் திருவிளக்கு ஒளிவிட்டு எரியவில்லை. அது நெய்யூற்றி ஏற்றிய திருவிளக்கு. நெய்யின் மணத்தை நுகர்ந்த எலி நெய்யினை உண்டு மகிழும் நோக்குடன் திருவிளக்கில் ஏறித் தகளியை அடைந்தது.

நெய்யினை உண்ணும் போது எலி தன் மூக்கினால் எதிர்பாராத விதத்தில் திரியை நகர்த்தியது. தூண்டியது. திருவிளக்கு தீபமோ பிரகாசமான ஒளியுடன் எரியத் தொடங்கியது.

திருவிளக்கு ஏற்றும் கருத்து எலிக்கு இருக்கவில்லை, ஆயினும் இறைவன், அவ்வெலிக்கு பெறும்பேறு அளித்தான். அடுத்த பிறப்பில் அது மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்தது.

இச்செய்தியினை, திருவிளக்கு வழிபாடு தொண்டு ஆகியவற்றின் சிறப்பினைக் கூறப் போந்த அப்பரடிகள் தனது தேவாரத்தில் பாடுகிறார்.

**நிறைமறைக் காடுதன்னில்**
**நீண்டெலி தீபந்தன்னை**
**கறைநிறத்தெலி தன்மூக்குச் சுட்டிட**
**கணன்று தோன்ற**
**நிறைகடல் மண்ணும் விண்ணும்**
**நீண்டவான் உலகமெல்லாம்**
**குறைவறக் கொடுப்பார் போலும்**
**குறுக்கை வீரட்டனாரே!**

இவ்வாறு திருவருட் சிறப்புடைய திருவிளக்குப் பூசை பத்திர காளி அம்மன் கோயிலில் சிறப்பாக நடைபெறுகிறது.

## கௌரி நோன்பு

திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் கோயிலில் மிகவும் பயபக்தியுடன் பேணப்படுவது கௌரி நோன்பு இந்நோன்பானது சுமார் நூற்றியைம்பது ஆண்டுகளாக நோற்கப்படுகிறது.

இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து விரதகாரர்கள் இங்கு வந்து இவ்விரதத்தை நோற்பதுண்டு. புரட்டாசி மாதம் விஜயதசமி தினத்தன்று தொடங்கும் இவ்விரதம் ஐப்பசி மாதம் அமாவாசி திதியில் நிறைவு பெறும்.

இளைஞர், வயோதிபர் என்று இப்படிப் பல பிரிவினரும் இக்கோயிலில் காப்பெடுத்து அணிவர்.

இவ்விரதத்தின் மகிமை பற்றி ஆதினகர்த்தா பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள் கூறுகிறார்.

கைலையங்கிரியின் சிகரத்தில் உமாசமேதராய் விளங்கும் பரமசிவன் பக்தகோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபை ஒன்றை ஏற்படுத்தி அதிலே வீற்றிருக்கின்றார்.

அங்கே தேவ வாத்தியங்கள் முழங்க, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே நடன ஸ்திரீகளில் சவுந்தர்யம் மிக்கவளாகிய அம்மையானவள் அற்புதமான நடன விசேஷங்களை நடித்துக் காட்டுகின்றாள்.

அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கிமகரிஷி பக்தியோடு விசித்திரமான விகட நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டுகின்றார். பார்வதி தேவியும்அங்கே இருக்கிறாள். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கிறார்கள்.

பர்வதக் குகை அச்சிரிப் பொலியால் கலகலவென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவனின் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியைக் கௌரவித்துப் பாராட்டுகிறார்கள். அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியோடு பார்வதியை நீக்கிப் பரமசிவனை மாத்திரம் வலம் வந்து வணங்குகின்றார். இதைக் கண்டு

'சுவாமி, இந்தப் பக்தன் என்னை விட்டுத் தங்களை மட்டும் வணங்கிச் சென்றாரே அதற்குக் காரணம் என்ன? இந்த ஆச்சரியமான விஷயத்தை எனக்கு விளக்க வேண்டுமென்று தேவி கேட்கின்றாள்.'

'தேவி சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முக்திநிலையை விரும்பி நிற்பவர். அதை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லையென்ற திட சித்தங் கொண்டவர். அதனாற்றான் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார்'

என்று பரமசிவன் பார்வதிக்கு விளக்கங் கூறுகின்றார். பார்வதி தேவி வருத்தப்பட்டு பரமசிவனிடத்துக் கோபம் கொள்கிறாள். கோபாவேசத்தில் தனது சக்தியின் கூறு பிருங்கிரிஷியினின்றும் அகலக் கடவது என்று வாய் விட்டுக் கூறியும் விடுகின்றாள். பிருங்கி ரிஷியின் உடல் உதிரம் பிழிந்து சக்கையாகிறது. அவர் நிற்பதற்கும் முடியாமல் தள்ளாடுகின்றார். அப்போது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கின்றார். பிருங்கி தண்டின் உதவியோடு தன் ஆச்சிரமம் போய்ச் சேர்கிறார்.

தேவிக்கு மேலும் கோபம் உண்டாகிறது. கைலையை விட்டு நீங்கிப் பூலோகத்துக்கு வருகிறாள். வால்மீக மகரிஷி சஞ்சரிக்கின்ற பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கின்றாள். அந்த இடத்தில் 12 வருடம் மழையின்றி வாடிக் கிடந்த விருட்சங்களெல்லாம் தளிர்த்துப் பூத்து மணம் வீசுவதைக் கண்டு அதிசயிக்கிறார். வனத்தில் இந்த அற்புதம்! அங்கு வந்திருப்பவர் யாராயிருக்கலாம் என்று தேடிப் பார்க்கின்றார். பார்வதி தேவி ஒரு வில்வ விருட்சத்தின் அடியில் எழுந்தருளியிப்பதைக் காண்கிறார்.

'தேவி தங்கள் கைலாச கிரியை விட்டு இப் பூலோகத்திற்கு எழுந்தருளுவதற்குக் காரணமென்ன? என்று கேட்டு விடுகின்றார். தேவி தான் பூலோகத்துக்கு வந்த கதையைச் சொல்கிறாள். வால்மீக மகரிஷி தேவியைத் தனது ஆச்சிரமத்துக்கு அழைத்துச் சென்று வால்மீக ரிஷி தேவிக்கெனத் தனியாக அமைத்துக் கொடுத்த ஆச்சிரமத்தில் நவரெத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து, 'மகரிஷியே, பூலோகத்தில் நான் விரதம் ஒன்று அனுட்டிக்க வேண்டும். மேலான விரதம் ஒன்று இருக்குமேயானால் அதனை எனக்கு கூறுங்கள் என்கிறாள். மகரிஷி, 'தாயே தாங்களே விரதமுகத்தோடு எழுந்தருளியிருக்கிறீர்கள். அதை விட பூலோகத்தில் சிறந்த விரதமொன்றுண்டு.' என்று கூற தேவி, புன்னகை பூத்து தன் விரதத்தை ஆல விருட்சத்தின் கீழமர்ந்து ஆரம்பிக்கிறாள். மணலினாலே லிங்கம் பிடித்து ஈஸ்வரனாகப் பாவித்துப் பூஜை செய்கின்றாள். 21 நாள் பூசை நிகழ்கிறது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்லவுருண்டை, 21 சந்தண உருண்டை, 21 மஞ்சளுருண்டை நிவேத்தியமாக வைத்து துாப தீபம் காட்டி வணங்குகிறாள். 21 இழை எடுத்து திரித்து 21 முடி முடித்து ஈஸ்வரனைத் தியானம் செய்து காப்புங் கட்டுகிறாள். காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்குக் காட்சி கொடுத்து 'தேவி உமக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்கிறார். தேவி ஈசனைப் பார்த்து உமது தேகத்திலே பாதி எனக்கருள வேண்டும;;' என்று கேட்டு விடுகின்றாள். 'ஆகட்டும;' என்கிறார் ஈஸ்வரன். பார்வதி தேவியும் பரமசிவன் மேனியில் பாதியாய் இருக்கும் பாக்கியத்தையும் பெறுகிறாள்.

'இந்த நோன்பு நோற்று உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுட்டிக்கிறார்களோ அவர்கள் உன் மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவார்கள;' என்று வரமும் நல்கி பரமசிவன் பார்வதி சமேதராய் அர்த்த நாரீஸ்வர வடிவத்தோடு கைலையங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து கௌரி நோன்பு பூலோக வாசிகளால் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. இக் கௌரி நோன்பை அனுட்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர்.

நோன்பு நோற்று வரம் பெற்ற பராசக்தியை நோக்கி இவ்விரதம் அனுட்டிக்கப்படுவதால் இது கௌரி நோன்பென அழைக்கப்படுகின்றது.

பரமசிவன் உறையும் கைலாசகிரியை விட்டுப் பத்திரகாளியாய் உக்கிரமூர்த்தங் கொண்டு பூலோகத்துக்குவந்த தேவியை நோக்கி அனுட்டிக்கப்படுவதால் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் அனுட்டிக்கப் பெறும் கௌரி விரதத்துக்கு அளவிடற்கரிய சக்தி உண்டு.

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சந்நிதியில் 'கௌரி விரதம்இருத்தல்' இதனாலேயே மகத்துவம் பெற்று விளங்குகின்றது.

இதனை அன்பர்கள் இன்றும் காணலாம். வருடா வருடம் விரதம் அனுட்டிப்போர் தொகை அதிகரித்து வருவதற்கும் இதுவே காரணமாகும்.

கௌரி நோன்பின் பலனால் கோணநாயகரும் அர்த்த நாரீஸ்வரராய் விளங்குகின்றார். இதனை உள்ளத்தில் கொண்டே கோணமாமலை அமர்ந்த பெருமானை 'நிரை கழல் அரவஞ் சிலம்பொலி அலம்பும் நிமலர்' என்றும், 'வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த வடிவினர்' என்றும் பக்திகனியப் பாடுகின்றார் திருஞானசம்பந்தர்.

## பத்திரகாளி அம்பாள் திருவிழா

ஐந்தொழில் விளக்கமாக அமையும் திருவிழா (மகோற்சவம்) கொடியேற்றத்துடன் தொடங்கி தீர்த்தத்துடன் முடிவுறும்.பங்குனி உத்தர நாளை தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு கொடியேறி 10 நாட்கள் திருவிழாவும் நடைபெறுகிறது. கொடியேற்றத் திருவிழாவும் அதைத் தொடர்ந்து நடைபெறுகின்ற 10 நாள் திருவிழாவும் மிகவும் பக்தி சிரத்தையுடன் நடைபெறுகின்றது. அடியார்கள் நோன்பிருந்து இப் பத்து நாட்களும் இறைவியை வேண்டி அருள் பெறுகின்றனர்.

இங்கு கொடியேற்ற விழாவைக் குறிப்பிடும் போது கொடியேற்றம் பற்றிய தத்துவம், சமய விளக்கம், மரபு ஆகியவற்றை சிந்திப்பது மிகப்பொருத்தமாக இருக்கும். எனது நண்பரும் சமய சேவையாளரும் பவள விழாக் கண்ட மூத்த எழுத்தாளருமான சிவநெறிச் செம்மல் வை.அநவரத விநாயக மூர்த்தி அவர்கள் கொடியேற்ற வைபவம் பற்றிக் கூறும் கருத்துக்களை இங்கு தர விரும்புகிறேன்.

"துவஜாரோகணம் என்னும் கொடியேற்றத் திருவிழா, இவ்வாலயத்தில் மிகவும் சிறப்பாகவும் ஆகம முறைப்படியும் நடைபெறுவது வழக்கம். மகோற்சவத்தை எவ்வித இடையூறுமின்றிச் செவ்வனே நடத்தி முடிப்பதற்கு ஆன்மாவானது மலநீக்கம் பெறுதற் பொருட்டு, திருவருளாகிய கொடியை ஏற்றுவதையே கொடியேற்றம் என்று கூறுகின்றோம்.

கொடியேற்றத்துக்கு முதல்நாள் அநுக்ஞை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம் ஆகிய கிரியைகள் நடைபெறும். இவைகளினால் நாட்டுக்கும் மக்களுக்கும் பலவித நன்மைகள் ஏற்படுகின்றன. இந்தக் கிரியைகள் பற்றிச் சைவ மக்களாகிய நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். எனவே, இவற்றை சிறிது விளக்கிக் கூறுவோம்.

அனுக்ஞை என்றால் உத்தரவு பெறுதல் என்பது பொருள். மகோற்சவத்தை எவ்வித இடையூறுமின்றிச் செவ்வனே நடத்தி முடிப்பதற்கு முழுமுதற் பொருளாக விளங்கும் விநாயகப் பெருமானைப் பூசித்து அவர் ஆசியும் அனுமதியும் பெற்று, பின்னர் சிவாசாரியார்கள் அந்தணோத்தமர்கள் என்போரதும் மூலமூர்த்தி முதலாகச் சண்டேசுவரர் இறுதியாகவுள்ள எல்லாத் தெய்வங்களுடையவும் ஆசியையும் அனுமதியையும் பெறுதல்.

கும்பாபிஷேகம், மகோற்சவம் ஆகிய விழாக்களில் நடைபெறும் கிரியைகளுள் கிராம சாந்தி முக்கிய இடத்தைப் பெறுகிறது. இது ஆலயம் அமைந்திருக்கும் கிராமத்து மக்களது நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும். இது ஆலயத்துக்குக் காவலாளியாக விளங்கும் வைரவ மூர்த்தியின் மூலமாக அவரது ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஏனைய அசுர இராட்சத தேவதைகளினால் வரும் கேடுகளைத் தவிர்ப்பதற்குச் செய்யப்படும். இது பெரும்பாலும் ஆலயத்தின் மேற்குப் புறத்தில் நிகழ்வதாகும். வட கிழக்கில் அல்லது கிழக்குத் திக்கிலும் செய்யப் படலாம்.

வாஸ்து சாந்தி என்பது கிரியை, மந்திரம், விதி முதலியன யாவும் சுத்தி பெறுவதற்கு வாஸ்து புருடனுக்குச் சாந்தி செய்து அதன் பின்னர் தருப்பை, வைக்கோல் ஆகியவற்றோடு பலாசு, அரசு, அத்தி முதலிய மரங்களின் சருகுகளையும் சேர்த்துப் புருட வடிவமாகச் செய்து அதனைக் கொழுத்திய பின்னர் மண்டபங்கள், உள்வீதி வெளிவீதி எங்கும் இழுத்தும் சுத்திகரித்தல்.

மிருத் சங்கிரகணம் என்பது புற்று மண் எடுத்தலைக் குறிக்கும். கோயில் வளவிலோ, புண்ணிய தீர்த்தக் கரையிலோ, நந்தவனத்திலோ அல்லது வில்வ மரத்தடியிலோ முறைப்படி சுத்தமான புற்று மண் எடுத்து வந்து உலகிலே தானிய விருத்திக்கு முளையிடுவதற்காகப் பயன்படுத்தல்.

அங்குரார்ப்பணம் என்பது (அங்குர-அர்ப்பணம்) முளை இடுதல் எனப் பொருள்படும். அதாவது ஏற்கனவே எடுத்த மண்ணைப் பாலிகை என்னும் மண் சட்டியில் வைத்து நவதானியங்களை பாலிற் கலந்து தூவி முளைக்கச் செய்தல்.

கொடியேற்ற விழாவன்று காலையில் மூல மூர்த்திக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சிவாசாரியார் தமக்கும் யாகத்தில் பங்குபற்றும் ஏனைய சிவாசாரியார்கட்கும் காப்புக் கட்டுவதுடன் மூலமூர்த்திக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அவரவருக்குரிய தானத்திலும் இரட்சா பந்தனம்(காப்புக் கட்டுதல்) என்னும் கிரியையைச் செய்வார். இதனுடைய நோக்கம் கொடியேற்றித் திருவிழா முடியும் வரை வெளியுலக உபாதைகள் ஒன்றும் இவர்களைத் தீண்டா என்பதாகும் பாவங்கள் எல்லாம் நாசமாதற் பொருட்டு கட்டுதல் என்பதே இதன் பொருள். இதனால் கிரியைகள் யாவும் சித்தியாகும்.

கொடியேற்ற விழாவில் கொடிமரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இந்தக் கொடிமரம் சிவத்தின் வடிவாகவே அமைந்திருக்கிறது. ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களாகிய பாசத்தை அறுத்து பசுவாகிய உயிர் அருட் சக்தியின் துணையுடன் பதியாகிய சிவத்தைச் சார்ந்து பேரின்பத்தில் திளைத்திருப்பதையே கொடிமரம் காட்டுகின்றது. கொடி உயிரைக் குறிக்கும். கொடிச் சீலையில் வரையப்பட்டுள்ள வாகனம்(சிங்கம்) அம்பாளுக்குரிய வாகனமாக இருப்பதோடு பசுவாகிய உயிரையும் குறிக்கும். கொடிச்சீலையைக் கொடிக்கம்பத்தோடு இணைக்கும் மஞ்சள் கயிறு அருட்சக்தியைக் குறிக்கும். இறைவனின் சக்தியாகிய அருளின் துணையோடு தான் உயிர் முக்தியடைய முடியும். எனவே, கொடி மரத்தின் உச்சியை கொடி அடைவதற்கு இந்தக் கொடிக் கயிறே பெரிதும் உதவுவதால் இதனை நாம் இறைவனின் அருட்சக்தியாகவே கருத வேண்டும். தர்ப்பைக் கயிறு பாசத்தைக் குறிக்கும். தர்ப்பைக் கயிற்றோடு சேர்த்துப் பிணைக்கப்பட்ட கொடி தர்ப்பையின் உதவியினால் மேலே ஏறும். கொடிமரத்தின் உச்சியில் கொடி தங்கி விட தர்ப்பைக் கயிறு மட்டும் கீழே வரும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொடி மரத்தின் அமைப்பைப் பற்றி சிறிது விளக்கிக் கூறுவோம். கொடிமரம் மூலமூர்த்திக்கு நேராக கர்ப்பக் கிரக விமான உயரத்தின் அளவுக்கு அமைந்திருக்க வேண்டும், என்பது மரபு. கருங்காலி, தேக்கு, முள்ளருக்கு, தேவதாரு, மூங்கில், தென்னை ஆகிய மரங்களைக் கொடிமரம் செய்விப்பதற்கு பாவிக்கலாம். நிலத்துக்கு மேல் கொடிமரம் எவ்வளவு உயரம் இருக்குமோ அந்த அளவில் ஐந்தில் ஒரு பங்கு நிலத்திற்குள் புதைக்கப்பட வேண்டும். கொடிமரத்தில் காணப்படும் முப்பத்திரண்டு கணுக்கள் மனித உடலின் முதுகுத் தண்டில் இணைந்துள்ள 3 எலும்பு மூட்டினைக் குறிக்கும். கொடி மரத்தின் உச்சிப் பாகத்தில் உள்ள மூன்று தட்டுக்களில் சிறிய மணிகள் தொங்கிய வண்ணம் அழகுடன் விளங்கும். கொடி மரத்தின் அடிப் பகுதி சதுரமான வடிவிலும் மேற்பகுதி எண்கோண வடிவிலும் அதனிலும் மேற்பகுதி தண்டு போலவும் இருக்கும்.

சதுரமான வடிவில் உள்ள பாகம் பிரம்மனையும் எண்கோணப் பகுதி விஷ்ணுவையும், தண்டுப் பகுதி உருத்திரனையும் குறிக்கும். இவை, படைத்தல், காத்தல், அழித்தல் என்று சொல்லப்படுகின்ற முத்தொழில்களையும் குறிப்பிடுவன.

கொடியேற்றத்துக்கு ஆதாரமாக அமைந்த கொடி மரம் கர்ப்பக்கிரகத்துக்கு எதிரே நந்திக்கும் பலிபீடத்துக்கும் பின்புறமாக ஆலயத்தின் நடுவே ஓங்கி உயர்ந்து விளங்குவதைக் காணலாம். கொடி மரத்தை துவஜ ஸ்தம்பம் என்றும் கூறுவர். கொடிச்சீலை என்பது நீண்டதொரு தூய வெண்துகிலாகும். இதில் சிங்க வாகனத்தில் சூலாயுதத்தையும் கும்பம்,சங்கு, தீபம், அஸ்திரம், பேரி, சூரியன், சந்திரன், மணி, திருவாசி, குடை, கண்ணாடி, சாமரைகள், முதலியவற்றின் படங்களை வரைந்து பூசித்தல். திருவிழாவுக்கு இன்றியமையாதனவாகிய கொடிமரம், கொடிச்சீலை, அஸ்திரதேவர், பலிபீடம் ஆகிய நாலுக்கும் பிரதிட்டைக்காகக் கும்பபூசை செய்தல், கும்பபூசை முடிந்த பின்னர் வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் உற்சவ மூர்த்திகளான விநாயகர், அம்பாள் வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர் ஆகியோருக்கு சோடச உபசாரத்துடன் விசேட பூசை நடைபெற்று பஞ்ச புராணம் பாராயணம் செய்யப்படும். பின்னர் குடை, கொடி, ஆலவட்டங்கள் மற்றும் மங்கல வாத்தியங்களுடன் அம்பாளை எழுந்தருளச் செய்து கொடி மரத்துக்குத் தென்புறமாக வடக்கு நோக்கி வீற்றிருக்கச் செய்து கொடியேற்றுதல். கொடிச்சீலைக்குப் பூசைகள் நடைபெற்று முடிந்ததும் அதனை மேள வாத்தியங்களுடன் வீதி வலம் வரச் செய்து "சமஸ்த தேவதாவாகனம;" என்னும் கிரியையினை முடித்துக் கொண்டு உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த கொடிக்கவி ஓதப்படும். கொடி மரத்தின் கீழ், "அஸ்திரராஜா" என்ற சூலத்தில் சகல தேவதைகளையும் எழுந்தருளச் செய்வதே "தேவதா ஆவாகனம;" எனப்படும்.

தில்லைக் கோயிலில் நடைபெறும் பெருவிழாவில் ஒரு முறை ஏறாதிருந்த கொடியை ஏற்றுதற்காக தில்லை வாழ் அந்தணர்கள், குலமுறை பிறழ்ந்தார் எனத் தம்மால் விலக்கி வைக்கப் பெற்ற உமாபதி சிவாச்சாரியரை வருந்தி அழைத்து வர உமாபதி சிவம் 'கொடிக்கவி' என்னும் திருப்பாடல்களை அருள கொடி ஏறியது.ஆலயங்களில் கொடியேற்றும் போது இந்தக் கொடிக்கவி நான்கையும் படித்தே கொடியேற்றுவார்கள். சித்தாந்த உண்மைகளைச் செறிவாகக் கொண்டு சிறந்து விளங்கும் இந்தப் பாடல்களை அன்பர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். அது மட்டுமல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் போது இந்த நான்கு பாடல்களையும் பாடுவதற்குத் தயாராக மனனம் செய்து வைத்திருக்க வேண்டும். அன்பர்களின் நலன் கருதிக் கொடிக்கவி பாடல்கள் கீழே தரப்படுகின்றன.

உமாபதி சிவாச்சாரியர் அருளிச்செய்த கொடிக்கவி

கட்டளைக் கலித்துறை

ஒளிக்கும் இருளுக்கு மொன்றேயிட மொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளடரா துள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படிக் கொடி கட்டினனே.

நேரிசை வெண்பா

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே-தருளாளா
நீ புரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சமுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி

கொடிக் கவி பாடி முடிந்ததும் தீபாராதனை நடைபெறும். பின்னர் மங்கல வாத்தியங்கள் முழங்க சுபமுகூர்த்தத்தில் கொடிச் சீலையைக் கொடி மரத்தில் ஏற்றும் வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தர்ப்பைப் புல்லினாலும், பட்டு வஸ்திரத்தினாலும் கொடி மரத்தின் அடியை அலங்கரித்து அபிசேக ஆராதனை பலி முதலிய கிரியைகள் நடைபெறும். ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் வெளிவீதியின் எட்டுத் திக்குகளிலும் அட்ட திக்குப் பாலகரை தியானித்து ஒவ்வொன்றுக்கும் உரிய வேதமந்திரம், இராகம்,பண். தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் பூசையும் பலியும் நடாத்தப்படும். அஸ்திர தேவர் தினமும் இருவேளைகளிலும் வெளிவீதி வலம் வந்து பலியிடல் நிகழ்ச்சி நடைபெறும். கொடியேற்ற விழாவன்று விநாயகர், அம்பாள் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் முதலிய உற்சவ மூர்த்தங்களுக்கு விசேட பூசைகள் நடைபெற்று அம்பாளை மங்கல வாத்தியங்களுடன் வீதிவலம் வரும் திருவுலாக் காட்சியும் நடைபெறும்.

பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான படைப்புத் தொழிலைக் கொடியேற்றம் குறிக்கிறது. அதனைத் தொடர்ந்து வரும் விழாக்கள் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்பனவற்றைக் குறிக்கின்றன. தேர்த்திருவிழா சங்காரத்தை அதாவது அழித்தலைக் குறிக்கின்றது. தீர்த்தத் திருவிழா அருளலைக் குறிக்கும். இவ்வாறாக ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்கள் இறைவனின் ஐந்தொழில்களையும் நமக்கு நினைவூட்டுகின்றன.

# புலவர் மணி கண்ட காளி

திருகோணமலை பத்திரகாளி அம்மன் பதிகமும், கலிவெண்பாவும் மிகவும் பழமையானவை. இவற்றைப் பதித்து நமக்குத் தந்துள்ளார் திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்தியர் சி.ஆறுமுகம் பிள்ளையின் புதல்வர் திரு.அ.கந்தையா அவர்கள் .

திருகோணமலையில் பிறந்த பொறியியலாளர் சபாபதி காளிதாசனின் தாயார் பாராயனஞ் செய்து வந்த பாடல்கள் இவை. அவரிடம் கையெழுத்துப் பிரதியாக இருந்தவை. இப்பாடல்களைப் பாடியவர் யாரென்று தெரியவில்லை.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை இப்பதிப்புக்கு வழங்கிய முகவுரை அம்பாள் அருட் திறத்தை அழகாக எடுத்துக் கூறும் இப்படிப் புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்-

நாம் காண்கின்ற இவ்வுலகம் 'அம்மை அப்பர்' வடிவானது. எனினும், அம்மைக்கே முதலிடம் கொடுக்கின்றோம். அம்மையை நாம் இயல்பாகவே அறிந்து கொள்ளுகிறோம். அம்மை காட்ட அப்பனைக் காண்கிறோம். பின்னர் இருவரையும் ஒன்றாகக் காண்கிறோம். இந்த இரண்டு காட்சிகளிலும் அம்மையைக் காணும் காட்சி இயற்கை. அப்பனைக் காணும் காட்சி செயற்கை. இதனாலே தான் அனுபூதிமான்கள் பலர் இறைவனை அம்மை வடிவத்தில் கண்டு ஆனந்தமடைகிறார்கள். இந்த உலகினை மாத்திரமல்ல, அண்ட சராசரங்களையுமே அம்மை வடிவிற் கண்டு சாந்தியடைகிறார்கள்.

இறைவனை அம்மையே அப்பா என்று அழைக்கின்றார் மணிவாசகப் பெருமான். தோடுடைய செவியன் என்று அம்மையை முன் வைத்துது தமிழோடிசை பாடுகின்றார் சம்பந்தப் பிள்ளையார், மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குகின்றார் சேக்கிழார் சுவாமிகள். 'தேவி நின்னருள் பெறாத தேயமோர் தேயமாமோ' எனப்பாடி இறைவனை அம்மை வடிவிற் காண்கின்றார் பாரதியார்.

சர்வம் சக்திமயம். அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம். படைத்தல், காத்தல், அழித்தல், மூன்றும் ச்க்திமயமே. படைத்தல் மாத்திரம் நிகழ்ந்தால் உலகம் தாங்குமா? காத்தல் மாத்திரம் நிகழுந்தால் உலகம் பழைமை நீங்குமா? அழித்தலும் நிகழ்ந்தால் தான் உலகம் புதுமை பெறும். சுமை குறையும். வாழ்க்கை இலேசாகப் போய்க் கொண்டிருக்கும். உலகில் படைத்தலும், காத்தலும், அழித்தலும் ஒன்றுக் கொன்று உதவியாக நிகழ்கின்றன. இந்த உண்மையினை மக்கள் உணர வேண்டும். உணர்ந்தால் மீட்சியுண்டாம்.

அழிவு, ஆக்கம் தருகின்றது. ஒரு குடிசையை அழிக்கின்றோம். இங்கே அழிவு ஆக்கமாகின்றது. ஒரு நெல்மணி வயலிலே அழிகின்றது. இதனால் ஆயிரம் நெல்மணிகள் பிறக்கின்றன. இவ்வாறே அழிவும் ஆக்கமும். அழிவைக் கண்டு நாம் பயங் கொள்ளல் ஆகாது.

வயலிலே களை அழிகின்றது. நெற்பயிர் ஆக்கம் பெறுகின்றது. சமூகத்திலே கெட்டவன் அழிகின்றான். அவனோடு கேடும் அழிகின்றது. இதனால் நல்லவன் ஆக்கம் பெறுகின்றான். நன்மையும் விருத்தியடைகின்றது. 'நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம் நுண்ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே' என்று பாரதியார் பாடுகின்றார். பெண்களில் அவ்வளவு நம்பிக்கை ஏன்? பெண் சக்தி வடிவமானவள்.

உலகம் சக்திமயம். இதனால் சக்தி வழிபாடு நிலை பெற்று நிகழ்கின்றது. நமது உடம்பில் சக்தியிருந்தால் தான் நாம் உண்ணவும், உலாவவும், உறங்கவும் முடியும். நம்முள்ளே சீவன் இல்லாவிடில் நமது சட சக்தி இயங்குமா? சடசக்தியின் இயக்கத்துக்கு சீவ சக்தியின் இயக்கம் அவசியம். சீவ சக்தியின் இயக்கமின்றி சடசக்திக்கு இயக்கமில்லை. மனித சக்தியினால் தான் அணுச் சக்தி இயங்குமா? இந்த உண்மையை உணர்ந்தால் விஞ்ஞானம் மெய்ஞ் ஞானத்துக்கு வழி வகுக்கும். இதனை நாம் உணர வேண்டும்.

சடசக்திகள் அனந்தம், சீவ சக்திகள் அவற்றினும் அனந்தம், சடசக்தி, சீவசக்தி, சீவசக்தி, சிவசக்தி எனச் சக்திகளை மூன்றாகக் காண்கிறோம் சிவ சக்தியையும் நாம் மூன்றாகக் கண்டு வணங்குகின்றோம்.

நமது உலக வாழ்க்கையும் மூன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வீரம், செல்வம், கல்வி, இம்மூன்றும் ஒன்றானதே வாழ்க்கை, மூவரும் ஒருவரானவரே கடவுள்.

வீரம் ஆக்கத்துக்குக் காரணமான அழிவுச் சக்தி. இதனைத் துர்க்கை, காளி, மாரி முதலிய திருநாமங்களால் வழிபடுகின்றோம். செல்வம் காத்தலுக்கு காரணமான ஆக்கச் சக்தி. இதனை இலட்சுமி, திருமகள் முதலிய திருப் பெயர்களால் வழிபடுகின்றோம். கல்வி அறிவுக்குக் காரணமான ஆக்க சக்தி. இதனைச் சரஸ்வதி, கலைமகள் முதலிய திருநாமங்களால் வழிபடுகின்றோம்.

சக்தி வழிபாடு உருவும் உணர்ச்சியும் தந்து தன்னம்பிக்கையை வளர்ப்பது. சக்தி வழிபாடு பற்றிய பாடல்களும் உருவும் உணர்ச்சியும் ஊட்டும் பக்தி வடிவானவை. மந்திர சக்தி பெற்றவை. இத்தகைய சக்தி பெற்ற பாடல்கள் ஈழநாடு முழுவதிலும் பல்லாயிரக்கணக்கில் பரந்து வழங்குகின்றன.

மறைந்து கிடந்த இப்பாடல்களைத் திருக்குறிப்பினால் பெற்ற எமது மாணாக்கர், கணக்காய்வாளர் தக்கின யைிலாயமென்னும் திருக்கோணமலையிலே தமிழோடு பிறந்த உயர் குடி வந்தவர். தமிழ்ச்சுவை அறிந்தவர், பிரபல வைத்தியர் ஆறுமுகம் பிள்ளை அவர்களின் அன்புக்குரிய மைந்தர்

## அடியார்கள் கூறும் அதிசயம்

அம்பாளின் அற்புதம் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம். அம்பாளின் அற்புதங்களைச் சில அடியார்களிடம் அறிய விரும்பி அவர்களை அணுகினோம். இயன்றளவு குறுகிய காலத்தில் பல சந்ததியினரை அணுக முயன்றோம்.

அவர்கள் கூறும் கதைகளைக் கேட்கக் கேட்க எமது நெஞ்சு திக்குறும். உடல் புல்லரிக்கும். வியப்புணர்வு மேலிடும். அம்பாள் மீது பக்தி அதிகரிக்கும். கேட்டு இன்புறுங்கள் -

### போர்க் கால நிகழ்வு

அது போர்க் காலம். இரண்டாவது யுத்தம் நிகழ்ந்த காலம் அதிகாலை ஐந்து மணிக்கு எனது தந்தையார் நித்திரை விட்டு எழுந்ததும் தான் ஒரு கனவு கண்டதாகக் கூறினார்.

யுத்த முஸ்தீபுகள் நடந்து கொண்டிருந்த காலமது. என்பதால் காளித் தாய் கனவில் தனக்கு கட்டளை இட்டவாறு ஒழுக வேண்டும் என்று எனது தந்தையார் பிடிவாதமாக இருந்தார்.

அந்தக் காலத்தில் பயணத்துக்கு உபயோகப் படுவது மாட்டு வண்டில் தான். ஒரு மாட்டு வண்டில் வீட்டு வாயிலில் வந்து நின்றது. தந்தையார் விருப்பப்படி எமது குடும்ப வண்டிலில் ஏறி அமர்ந்ததும் நாம் திருகோணமலை நகரை விட்டுப் புறப்பட்டுப் பயணமானோம்.

காட்டுப் பாதையூடாக எமது மாட்டு வண்டி செல்லும் போது இருமருங்கினையும் அவதானித்த தந்தையார் 'இதுதான் நான் கனவில் கண்ட பாதை' என்று அடிக்கடி கூறியவாறு இருந்தார். தாயார் இது கேட்டு வியந்து போவார்.

அப்பாதை சென்றடைந்த இடம் பனங்கட்டி முறிப்பு இதுவே நாம் அன்று தஞ்சம் அடைந்த கிராமம். கிராமத்தை சுற்று முற்றும் பார்த்த எனது தந்தையார் 'புளகாங்கிதம் அடைந்தார் 'இதோ நான் கனவில் கண்ட ஊர்' என்று துள்ளிக் குதித்தார். நாம் பனங்கட்டி முறிப்புக் கிராமம் சென்ற பதின்மூன்றாம் நாள் திருகோணமலை நகரில் யப்பானியர் குண்டு பொழிந்தனர். மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு அங்கலாய்த்தனர்.

இதனைத் தான் இறுதி நாட்கள் வரைக்கும் எனது தந்தையார் நினைவு கூறுவார். அம்பாள் காட்டும் வழியே நடப்பின் அவள் எம்மைக் கை விடாள் என்று எமக்கு அறிவுரை கூறுவார்.

திருகோணமலையில் சமூக சமயப் பணி ஆற்றும் முன்னாள் நகராண்மைக் கழக உறுப்பினரும் எனது இனிய நண்பருமான திரு.இ.சோமசுந்தரம் அவர்கள்

இவ்வாறு தனது தந்தையார் திரு. இராசையா கண்ட கனவினையும் அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்வுகள் எவ்வாறு அம்பாளின் அற்புதமாக அமைந்தன என்று எம்மிடம் கூறினார்.

### தலைப்பிரசவம்

எனது தாயார் திருமதி இராசலட்சுமி அவர்களின் முதற் பிரசவம். என்னை வயிற்றில் சுமந்திருக்கிறார். அவருடைய தலைப்பிரசவத்தை அருகிருந்து பார்ப்பதாக அவரது தாயார் உறுதி கொண்டு இருந்தார்.

எதிர்பாராத விதமாக அவர் யாழ்ப்பாணம் செல்ல வேண்டி ஏற்பட்டது. அது யுத்த காலம் ஆதலால், உடனே திருகோணமலை திரும்பும் வாய்ப்பு அன்றிருக்கவில்லை. தாயாருக்குக் கடும் பிரசவ வேதனை ஏற்பட்டது. யாரும் துணைக்கில்லை. 'காளி ஆச்சி! காளி ஆச்சி" என்று அம்மா கதறி அழுதார். என்ன அதிசயம்!

எங்கிருந்தோ ஒரு பெண் அங்கே வந்தாள். முன்னர் அறிமுகம் இல்லாத முகம். அப்பெண் அருகிருந்து மருத்துவம் பார்த்தாள். தாய் சேய் நலம் காத்தாள். அந்தப் பெண்ணை மகப்பேற்றுக்கு முன்போ பின்போ இதுவரை அம்மா கண்டதில்லை.

எமக்கு நோய் காணும் வேளையில் அம்மா காளி கோயில் சென்று வழிபட்டுத் திருநீறும் கையுமாக வருவார். நீற்றினைச் சாத்தியதும் நோய் தணியும். இந்த நம்பிக்கை எமது பெற்றோரிடம் நிலவியது.

1949ம் ஆண்டு காலப்பகுதியில் எனது தந்தையார் திரு இராசையா அவர்கள் என்னை அழைத்துச் சென்ற பசுமை நினைவுகளுடன் அவள் பெருமைகளையும் அற்புதங்களையும் கூறுகிறேன். சிவஸ்ரீ சோமஸ்கந்த ஐயர் அவர்களது அறிமுகமும் எனக்கு சமயப் பற்றினை உறுதிப்படுத்தும் காரணியாக அமைந்தது. சக்தி வழிபாட்டின் உயர்தன்மையை திருகோணமலை மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக மெய்ப்படுத்திய மூலவர் ஐயா அவர்கள் என்று துணிந்து கூறுவேன். வழிபாடு உள்ளம் தோய்ந்த அன்புடன் கூடியதாக அமைந்தால் அது அருள் சுரக்கும் என முன்னைய நாயன்மார்களில் வாழ்ந்து காட்டிய வழிபாட்டின் தன்மையை இருபதாம் நூற்றாண்டில் உறுதிப்படுத்திய பிராமணர்களில் சிவஸ்ரீ சோமஸ்கந்த ஐயா அவர்களும் என்று கூறலாம். காளி கோயில் அன்று சிறியகோயில்ஆனால் கீர்த்தி பெரியது அவர் திருமணம் செய்து கொண்டதே காலம் தாழ்த்தித்தான் என்பதை திருகோணமலைசைவ மக்கள் நன்கு அறிவார்கள். பணத்தை விட பக்தியில் ஈடுபாடு கொண்ட அவர்கள் காளி அம்மாவை அழகுறச் செய்து அதனை ரசித்து இராமகிருஷ்ண பரமஹம்சரைப் போன்று அவள் திருவடிகளில் ஒன்றிணைவார்கள். காளி அம்மாவை பெரிதும் அருளால் கட்டி வைத்து அவளின் அருள் கருணையை தானும் பெற்றும் பக்தர்க்குப் பெற்றும் கொடுத்தவர்.

# அருள்மிகு அன்னையின் அற்புதங்கள்

இயற்கையின் அரண்களைக் கொண்ட கோணேசர் பூமியில்அருள் பாலிக்கும் அன்னை அமர்ந்திருந்து அடியவரின் துயரை துடைக்கின்றாள். அன்னையின் மகா உற்சவ காலத்திலே நேர்த்திக்கடன் கழிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை அளவற்றது. சைவசமயம் என்றும் தழைத்தோங்க அன்னையின் அற்புதங்கள் அகிலமெல்லாம் பரவவேண்டும். மகா உற்சவ நாட்களில் அன்னையின் தரிசனமில்லாமல் செல்பவர்களுக்கு அவற்றை உணர்த்தும் முகமாக சில தடைகளை விதித்து தனது பக்தர்களை உணர வைத்துள்ளாள். அவற்றிலே எமது குடும்பத்திலே ஏற்பட்ட அனுபவங்கள்.

1966ம் ஆண்டில் காளி கோவில் கொடியேற்றம் நடந்த மூன்றாம் நாள் எனது சகோதரியின் மகள் ஜேர்மனியிலுள்ள தனது கணவரின் அழைப்பின் பேரில் ஜேர்மன் போவதற்காக புறப்பட்ட வேளை காளி கோவிலில் கொடியேறி உள்ளது. திருவிழா முடியும்வரை ஊரைவிட்டு போகக்கூடாது என்று சகோதரியிடம் நான் கூறினேன். ஆனால் எனது சகோதரியோ அதைப் பொருட்படுத்தாது அனுப்பிவிட்டார். உடனடியாக அங்கு போய் சேரலாம் என்று புறப்பட்டவர் ஒருவருடமாக பல்வேறு விதமான கஷ்டங்களை அனுபவித்தபின் போய்ச் சேர்ந்தார். அங்கு கஷ்டங்களை அனுபவிக்கும் போதுதான் கொடியேற்றத் திருவிழாவில் அன்னையின் தரிசனத்தை கண்டுகளித்து அன்னையின் பார்வையுடன் புறப்பட்டு வந்திருக்கலாம் என்பதை உணர்ந்தார். காளி தனது அடியவர்களுக்கு அளவில்லாத துன்பங்களை கொடுத்துத்தான் அருள்பாலிப்பாள் என்பதில் ஐயம் இல்லை.

அதே போன்று இன்னுமொரு உண்மை நிகழ்ச்சியை கூறாமலும் இருக்க முடியாது. எனது சகோதரியும், மைத்துனரும் கடந்தவருடம் திருவிழா தொடங்குமுன் சுவிசிலுள்ள தங்கள் மகளிடம் போவதற்காக புறப்பட்டார்கள். மைத்துனர் வழமையாக தேர் அன்று அங்கப்பிரதட்சணம் செய்வார். எனவே, வெளிநாடு போக புறப்படும் நீங்கள் திருவிழாவை முடித்துவிட்டுப் புறப்படுங்கள் என்று நான் அவர்களுக்குக் கூறினேன். அவர்களும் நான் கூறுவதைச் செவிமடுக்காமல், அவசரப்பட்டு உடனே பயணத்தைத் தொடர்வதற்காக கொழும்பு புறப்பட்டார்கள், அங்கு அவர்களுக்கு வந்திருந்த கடிதத்தில் மைத்துனரின் பெயரின் முன்னால் ஒரு எழுத்து கூடுதலாக இருந்த காரணத்தால் அவர்களின் பயணம் தடைப்பட்டு மீண்டும் அங்கிருந்து கடிதத்தை எடுப்பித்து போகும் ஆயத்தங்களைச் செய்வதற்கு ஒருமாதம் பிந்திவிட்டது. அதற்கிடையில் கோயில் கொடியும் ஏறிவிட்டது. மைத்துனர் திரும்பிவந்து அம்பாளை தரிசித்து தேரில் அன்று அங்கப்பிரதட்சணம் செய்து அம்பாளிடம் விடைபெற்று கொழும்பு சென்ற போது அங்கு போவதற்கான ஆயத்தங்கள் யாவும் சுமுகமாக நிறைவேறியிருந்தன. எமது அன்னை தன்னை அன்பு செய்யும் அடியார்களை பரீட்சிப்பதில் மிகவும் கெட்டிக்காரி. அன்னையின் ஆலயத்திருவிழா தொடங்கினால் ஊரைவிட்டு புறப்பட்டு செல்லக்கூடாது என்ற ஐதீகம் உண்மை என்பது மேற்கூறிய விடயங்களிலிருந்து புலனாகிறது,

மூன்று வருடத்திற்கு முன் தேர்த்திருவிழா நடைபெற்ற சமயம் நாங்கள் குடும்ப சமேதராய் தேரில் பவனி வரும் அம்பாளைத் தரிசிக்கச் சென்றிருந்தோம். ஆறு வயதான எனது இளைய மகன் தானும் தேரிழுக்கப் போவதாக அடம் பிடித்தார். எனது கணவரோ 'என்னால் சன நெருக்கத்திற்குள் வர முடியாது ' என மறுத்து விட்டார். நானும் எனது புதல்வர்களும் சனத்திரளினுள் நுழைந்து ஒருவாறு தேரடியிற்குச் சென்று விட்டோம். தேர் கல்யாண மண்டபத்தின் அருகில் நின்றது. முன்னால் சென்ற பிள்ளையாரின் தேர் வடத்தை பிடிக்கச் சென்றோம். ஒருவாறு வடத்தின் நுனி கிடைத்து விட்டது. இளைய மகன் மாத்திரம் பிடித்துக் கொண்டார். மூத்த மகன் தன்னால் நெரிபட முடியாது எனக் கூற நானும் மூத்த மகனும் அருகில் சனங்களுடன் நின்று கொண்டோம். திடீரென பிள்ளையாரின் தேரின் வடத்தைப் பிடித்திருந்தவர்கள் எல்லாரும் திடுதிடென விழுந்து கொண்டிருந்தனர். எனது மகன் நின்ற இடத்தைப் பார்த்தேன். மகனைக் காணவில்லை. அவரின் மேல் எல்லாரும் விழுந்து கிடந்தனர். தேர் வந்து கொண்டிருந்தது. கண் மூடி முழிக்க முன் இவ்வளவும் நடை பெற்று விட்டது. நானும் மூத்த மகனும் கதறி விட்டோம்.

அருகில் நின்ற தொண்டர்கள் விழுந்தவர்களை இழுத்து வெளியே எறிந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஓடிச் சென்று பார்த்த போது எனது மகன் உடல் முழுவதும் மண் பூசப்பட்டு கீழே கிடந்து இழுத்து எறியப்பட்டார். நான் மகனைப் பிடித்துக் கொண்டேன். அறிவிழந்தோ உடற் காயத்துடனோ இருப்பாரென நினைத்த எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. எந்தவித உடல் நோவுமின்றி சாதாரணமாக எழுந்து வந்தார். இது அன்னையின் அருளன்றி வேறேது.

**திருமதி. ஸ்ரீதேவி**
**சிவரெட்ணராஜா**

## படிப்புக்கு உதவுவாள்

1990ம் ஆண்டு ஆடி மாதம் அன்று திருமலை எங்கும் ஒரே குழப்பம். எல்லாருமே தத்தமது உயிரைக் காப்பாற்ற தம் கால் போன போக்கில் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள் அவ்வாறு ஓடியவர்களில் என் அண்ணாவும் ஒருவர். என்ன செய்வது ஏது செய்வது என்று ஒன்றுமே புரியாத நிலையில் எல்லோருடனும் சேர்ந்து யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தார். இங்கு வீட்டிலோ நானும் அம்மாவும் மட்டுமே. அப்பாவோ வெளிநாட்டில் அப்போது நான் ஆண்டு ஐந்தில் படித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அண்ணாவோ அந்த ஆண்டில் ஆவணி மாதத்தில் உயர் தர பரீட்சை விஞ்ஞான பிரிவில் எழுதவிருந்தார்.

இந்த நிலையில் என் அம்மாவுக்கோ அளவு கடந்த யோசனை என்ன செய்வது மகன் பரீட்சை எடுக்க வேண்டிய நேரத்தில் இப்படி நடந்து விட்டதே. அம்பாளே நான் என்ன செய்வேன்? எனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனாலும் வைராக்கியமான எண்ணம் அன்று எழுந்தது. அவன் எப்படியும் பரீட்சை எழுதுவான், அம்பாள் நிச்சயம் எழுத வைப்பாள் என்ற இந்த நம்பிக்கையில் அம்மா முதலில் எடுத்தது பாதுகாத்தது அண்ணாவின் பாடப் புத்தகங்களையும் கொப்பிகளையும் தான். ஆனால் ஆவணி மாதமும் வந்து பரீட்சைகளும் முடிந்து விட்ட நிலையில் அண்ணா மட்டும் வரவில்லை.

ஆனால் அவர் அப்படியே யாழில் இருந்து இந்தியா சென்று விட்டதாக தகவல் கிடைத்தது. ஆனால் அம்மா விடவில்லை. அண்ணாவின் புத்தகங்களை கொண்டு சென்று பூஜை அறையுள் அம்பாளின் படத்துக்குக் கீழாக வைத்தார். அம்பாளின் காலடியில் வைத்த பூக்களை புத்தகங்களின் மேல் வைத்து கண்களில் நீர் மல்க தினமும் மனமுருகி அம்பாளின் முன் நின்று வேண்டுவார். அம்மா இப்படி புத்தகங்களை வைத்துப் பாதுகாப்பதைக் கண்ட சிலரோ இந்த புத்தகங்களை வைத்து பாதுகாத்து என்ன செய்யப் போகிறீர்கள் இவை தானா உங்களுக்குப் பின்னால் உதவப் போகின்றன? என்று கேலியாகக் கேட்டு கிண்டல் பண்ணினார்கள். ஆனால் அம்மா சிறிதும் அசையவில்லை. அந்த நேரம் அவருக்குத் தெரிந்ததெல்லாம் அம்பாள். அண்ணாவின் பரீட்சை, அந்தப் புத்தகங்கள் மட்டுமே.

இந்த நேரத்தில் 1991ம் ஆண்டு பங்குனி மாத இறுதியில் ஏற்கனவே 90ம் ஆண்டு பரீட்சை எடுக்காத மாணவர்களுக்காக மீண்டும் விஷேட பரீட்சை ஒன்று நடக்க விருப்பதாக தெரிய வந்தது. இதனை அறிந்த அம்மா உடனடியாக அண்ணாவை திருமலைக்கு வரும்படி கடிதம் எழுதி அனுப்பினார். இனி இல்லை என்கிற அளவுக்கு க்'டப்பட்டு அண்ணாவை இங்கு வரவழைத்தார். அவர் இங்கு வரும் போது கொண்டு வந்தவை அனைத்தும் இந்தியாவில் இருந்த அம்பாளின் அழகிய படங்களே. அவர் இங்கு வந்தது 91ம் ஆண்டு தை மாதம்.

ஆனால் அண்ணா வந்திறங்கியதும் கூறியது, 'நான் பரீட்சை எடுக்க மாட்டேன். நான் சரியான முறையில் பாடத் திட்டங்களை முடிக்கவில்லை. எனவே என்னால் முடியாது.' இப்படி முடிவாகக் கூறி விட்டார். ஆயினும் இறுதியாக அம்பாளின் அநுக்கிரகத்தாலும் அம்மாவினதும் ஒரு ஆசிரியரினதும் வற்புறுத்திலின் பேரில் பரீட்சை எடுக்க ஒத்துக் கொண்டார்.

அண்ணாவின் பரீட்சை நாளன்று அம்மா திருநீறு எடுத்து அம்பாளின் காலில் வைத்து அவளை நினைத்து வணங்கிய பின் அண்ணாவின் நெற்றியில் பூசி விடுவார். ஆனால் பரீட்சை தொடங்கிய அன்று மாலை என் தந்தையின் தாயார் இறந்து விட்டார். ஆனாலும் இப்படியான நிலையிலும் அண்ணா ஒருவாறு பரீட்சைகளை எழுதி முடித்தார்.

இறுதியாக அம்பாளின் அருளினால் அந்த பரீட்சையில் அவருக்கு சிறந்த பெறுபேறு கிடைத்து மாவட்டத்தில் முதலாவதாக வந்தார். இப்படியாக எந்த நேரத்திலும் எமக்கு அரணாக நின்று எம்மைக் காப்பவள் அவளே.

சந்தனக் காப்பிலும் குங்குமக் காப்பிலும் அழகுடன் மிளிரும் அவள் முகத்தைப் பார்த்ததுமே பரவசம் உண்டாகி கவலைகள் தம்மை விட்டு விலகுவதை எவர் தான் உணராதிருப்பார்?

**செல்வி அகல்யா சந்திரகாந்தன்**

## மகளின் நோய் போக்கியவள்

நான் எனது கணவருடனும் பிள்ளைகளுடனும் திருக்கோணமலையில் 1970ம் ஆண்டு தொடக்கம் 1974ம் ஆண்டு வரை வசித்து வந்தேன். அப்போது எனது கோயில் வணக்கத்தில் காளி கோயிலும் கோணேச கோயிலும் முக்கிய இடத்தைப் பிடித்தன.

எனது மகள் சிறு பிள்ளையாக புனித மரியாள் கல்லூரியில் கற்கும் போது அவருக்கு மூக்கில் ஒரு பீனிச நோய் ஏற்பட்டது. அதனால் அவர் காலையில் தும்மி தும்மி கஷ்டப்பட்டார். அத்துடன் அவருக்கு செங்க மாரி நோயும் ஏற்பட்டது. இப்பிரச்சினையை தீர்க்க விரும்பி காளி அம்பாளை தினமும் வேண்டி வந்தேன்.

எனது மகளின் பீனிச நோயை குணப்படுத்த அக்காலத்தில் திருக்கோணமலைக்கு அநுராதபுரத்தில் இருந்து தான் விசேடதுறை வைத்தியர்கள் வருவார்கள். கண், காது, மூக்கு, விசேட வைத்தியர் சதானந்தன் கிழமையில் ஒரு நாளைக்கு வருவார். அநுராதபுர பிராந்திய சுகாதார அத்தியட்சகர் வைத்தியக் கலாநிதி வேதாரணியம் கடமை ஆற்றினார். அவர் எங்கள் குடும்ப சிநேகிதர். அவர் ஒரு முறை திருக்கோணமலைக்கு வந்த போது எனது மகளை திருகோணமலை அரசினர் வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று வைத்திய கலாநிதி சதானந்தனிடம் காட்டினேன். அவர் மகளை சோதித்த பின்பு ஒரு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும். சுவாத்திய மாற்றமும் தேவை என ஆலோசனை வழங்கினார். எனக்கோ திருக்கோணமலையை விட்டுச் செல்லவும் விரும்பவில்லை. சத்திரசிகிச்சை செய்விப்பதற்கும் பயமாக இருந்தது. நான் காளி அம்பாளை உருகி உருகி இப்பிரச்சினையைத் தீர்க்கும் படி பிரார்த்தித்தேன் எனது வேண்டுகோள் பூர்த்தி செய்யப்பட்டது. எனது மகள் 3மாதங்களில் குணமடைந்ததும் இற்றை வரை அவருக்கு அந்த பிரச்சனையே இல்லை.

நான் வைத்த நேர்த்தி காளி கோயில் திருவிழாக் காலத்தில் கற்பூரச் சட்டி எடுத்தல். நான் இந்த நேர்த்திக்கடன் பல ஆண்டுகள் தொடர்ந்து செய்து வந்தேன். சீரற்ற நாட்டு நிலமையால் நான் கற்பூரச் சட்டி எடுப்பது தடைபட்டது. நான் இன்றும் காளி அம்பாளை பிரார்த்தித்துக் கொண்டே வாழ்கிறேன். இப்படித் தமது அனுபவத்தைக் கூறுகிறார் திருமதி புஷ்பவதி சபாநாயகம். இவரது கணவர் திருகோணமலையில் நீண்ட காலம் கல்விப் பணிப்பாளராகக் கடமை ஆற்றினார்.

பத்திரகாளி அம்பாள் தன்னை நம்பி பூரண சரணாகதி அடைந்தவருக்கு கனவிலோ அன்றி அருபியாக அற்புதச் செயல்கள் வாயிலாகவோ தன்னை உணர்த்தி அருள் பாலிக்கின்றாள். இதை பக்தர்கள் உணர்ந்து வியக்க முடியுமே தவிர ஊனக் கண்களால் கண்டு களிக்க முடியாது. நம்பிக்கை வைத்தவர்களுக்கு அம்பிகை அருள் கிட்டும்.

இந்நகரில் ஐந்து தலைமுறைகளைக் கண்ட சைவப் பெண்மணியை நன்கு அறிவேன். அவரது நெற்றியின் வலப் பக்கம் சிரசில் ஓர் அழகான வடு இருப்பது கண்டு அது எவ்வாறு ஏற்பட்டதென வினாவினேன். அதற்கு அம்மாது சிரோன்மணி 'எல்லாம் காளி ஆச்சியின் விளையாட்டு' என்று கூறித் தன் வாழ்க்கையில் இளம் காலத்தில் நிகழ்ந்த நிகழ்வினை விபரித்தார். தனக்குத் திருமணமாகி முதலில் ஒரு ஆண் மகவும் அடுத்து ஒரு பெண்மகவும் கிடைத்தது. அப் பெண்குழந்தைக்கு எட்டு மாதமாக இருக்கும் போது, துறைமுகத்தில் நிற்கும் கப்பலைப் பார்த்துச் சந்தோஷமாக வீடு திரும்புகையில் இருட்டி விட்டதால் வழியில் இருந்த காளி ஆச்சியை தரிசிக்காமல் விரைவில் வீடு சேர்ந்ததாகவும், அன்று இரவு கனவில் சிவப்புச் சேலை அணிந்து ஒரு முதாட்டி வந்து 'ஏன் என்னிடம் குழந்தையைக் காட்டாமால் வந்தநீ உன் குழந்தை மிக அழகாக இருக்கிறாள் என்னிடம் தா சிறிது நேரம் விளையாடி விட்டுத் தருகிறேன் என்றாராம். அப் பெண்மணி பயந்து குழந்தையை இறுக அணைத்துக் கொண்டு 'குழந்தையை தரமாட்டேன்போ' என்று கூறினாராம். பின் திடீரென குழந்தை அழுவது கேட்டு கண் விழித்து குழந்தையை வாரியெடுத்து அமுதூட்டினாராம். அவ்வேளை குழந்தை சிரித்தபடியே பாலருந்தவும் புரையேறி மூச்சுத் திணறி தலை சாய்த்ததாம். அப்பெண் வீறிட்டு அலறி அருகேயிருந்த பேடகத்தில் தலையை மோதி மயங்கி விட்டாராம். ஆரவாரங் கேட்டு அங்கு வந்த அனைவரும் தாய் தந்தையரும் நிலைமையை அறிந்து மிகவும் துன்புற்று மகளின் மயக்கத்தை தெளிவிக்கவும் அப் பெண் தான் கனவில் கண்டவற்றை பெரியவர்களுக்கு கூறினாராம்.

இவ்வாறு கவலையுடன் சில தினங்கள் கழியவும் ஓர் நாள் மீண்டும் அந்த மூதாட்டி கையில் ஒரு குழந்தையுடன் அப் பெண்ணின் கனவில் தோன்றினாராம். பெண் கோபங் கொண்டு ஏசவும், 'நீ என்னை அறியாயா? முற்றவெளி முன் இருக்கிறேன். அந்தக் குழந்தைக்கு அற்ப ஆயுள். அதனால் விரைவில் என்னிடம் வந்து விட்டாள். இதோ இக் குழந்தையைப் பிடி. இவள் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீண்ட நாட்கள் நலமே என் ஆலயத்துக்கருகில் வாழ்வாள். இவளும் இவளுடைய சந்ததியும் என்பணிகள் செய்வார். பயப்படாதே' எனக் கூறி அப்பெண்ணின் முந்தானையில் குழந்தையை வளர்த்திச் சென்றாளாம். விடிந்ததும் கனவில் நடந்தவற்றை தனது தந்தையிடம் கூறவும் அவர் ' எல்லாம் ஈஸ்வரிக்குத் தெரியும்' நீ அவளை வேண்டிக் கொள் என ஆறுதல் கூறினாராம். அடுத்த வருடத்தில் மீண்டும் அப் பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை கிடைத்ததாம். அக் குழந்தை பிறந்தது முதல் செல்வம் பெருகியதாகவும், அக்குழந்தை மணம் முடித்து அம்பாளின் ஆலயச் சூழலில் வாழ்ந்து வருவதாகவும் அக்குழந்தை நிரம்ப புத்திர சந்தானம்,, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இருப்பதாகவும் அப் பெண்மணி கூறினார். ஆரம்பத்தில் கனவை நம்பாதிருந்தாலும் காளிதேவி கூறியது போல பெண்ணின் வாழ்க்கை அமைவது கண்டு இறைவியின் அற்புதச் செயலை வியக்காமல் இருக்க முடியவில்லை, என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். இப்படி கூறுகிறார் ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி மணிமேகலை கார்த்திகேசு.

## இறைவற்கொரு பச்சிலை

மலர்ந்த நறுமணம் வாய்ந்த மலர்களே அர்ச்சனைக்கு உகந்தவை மொட்டுக்கள் மணமற்ற பூக்கள், வாடிய பூக்கள் அர்ச்சனைக்கு ஏற்றவை அல்ல

ஒவ்வொரு நாமத்தை உச்சரிக்கும் போதும் ஒவ்வொரு பூவை இறைவிக்குச் சமர்ப்பணம் செய்வதே நல்லது - கிள்ளிப் போடல் நல்லதல்ல. ஒரு நாமத்துக்குப் பல பூக்களை போடுவதோ, பூக்களை அறவே போடாமல் விடுவதோ நன்றன்று.

மலர்கள் எமது ஆசைகளைக் குறிப்பன. ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு ஆசையாகும். ஐம்பொறிகளைக் குறிக்கும் ஐந்து விரல்களாலும் பூவினை வலது கையில் மெதுவாக எடுத்து விரல்களை மேலே உயர்த்தி இறைவி திருவடிகளில் பணிவுடன் சாத்திட வேண்டும்

ஆசை அறுமின் என்ற திருமூலர் கூற்றுப்படி இப்படி அர்ச்சனை நடைபெறும்.

விளக்கேற்றும் போது புதிய திரியையே நாம் உபயோகிக்க வேண்டும். பஞ்சுத் திரி, பட்டுத் திரி, தாமரை, நூல் திரி பாவிப்பது விரும்பத்தக்கது. எரிந்த பாதித்திரி ஏற்றதல்ல. விளக்கின் தலையில் மலர் சாத்தலாகாது. அடிப்பாகத்தில் சாத்தலாம். திரி எரிந்த புகை மணம் வருவது நல்லதல்ல.

துளசி, வில்வம், ஆகிய இலைகளாலும் அம்பாளை அர்ச்சிக்கலாம்.

வில்வத்தைப் பொறுத்தவரை இரு வகைகள் உள. அவை கசப்பு, சாதா எனப்படும். வாசமுடைய சிறிய வில்வமிலைகள் பூசைக்கு ஏற்றவை. கொழுந்து மிகவும் உகந்தது. வில்வம் கிடைக்காத போது பூசைக்கு உபயோகித்த வில்வத்தை கழுவி மீண்டும் சாத்தலாம். 'வில்வத்துக்கு மேல் பத்திரமில்லை' என்பார்கள்.

'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை' என்பார் திருமூலர்.

## காளியின் அன்புக்கு பாத்திரராவோம்

இறைவழிபாட்டில் நாம் ஈடுபடும் போது சமய சடங்குகளைப் பேணுகின்ற அதே வேளை, அச்சடங்குகளுக்கு அப்பால் மிளிரும் உணர்வுகளை உணர வேண்டும்.

இறைவியிடத்துக் காதல் மிகக்கூறி, கசிந்து கண்ணீர் மல்க பக்தி செலுத்தும் போது, நாம் இறைவியை நேசிப்பவர்களாவோம்.

அதே போன்று இறைவியால் நேசிக்கப் படுபவர்களாக நாம் மாற வேண்டும். இறைவி நேசிக்கும் பக்தர்களாக நாம் மாறுவதற்கு நாம் அருகதை பெற வேண்டும். அத்தகைய அருகதை பெறுவதற்கு நாம் பக்குவமடைய வேண்டும்.

சேவை மூலம் அன்பு பெருகும் அருளுணர்வு பெருகும். எளிமை உண்டாகும். யான் எனது என்ற செருக்கு அகலும். நான் ஒரு கருவி மட்டுமே என்ற தெளிவு பிறக்கும். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற பயன் கருதாத மனப்பாங்கு, நிஷ்காமிய சேவை உணர்வு தலை தூக்கும்.

அப்போது நாம் இறைவியை நேசித்தாலும், நேசிக்காவிட்டாலும், இறைவி எம்மை நாடுவார். எமக்கு இன்னருள் பொழிவாள்.

## காளி என் தாயே

சம்பந்தர் பாப்புனைந்த கோணமலையுறை பத்திரகாளி அம்மன் மீது பாடியவை

கோணமலைத் திருத்தலத்தைக்
காவல்செய் காளி!
ஊராரைக்
காத்திடுவாள் காளி

சிங்கத்தில் உலாவந்து
சீர்செய்வாள் காளி
சிங்கார வடிவினளே
செய்யவளே காளி!

கௌரிநோன்பு காப்பார்
தெய்வம்நீ காளி!
மாங்கல்யம் தந்திடுவாய்
மாரித்தாய் காளி!

தாலாட்டு வீட்டில்
தையலர்கள் பாட
சீராட்டச் சேய்கள்
சேர்த்திடுவாள் காளி!

சந்தானச் செல்வம்
சளைக்காமல் எய்திட
சந்தனக் காப்பில்
சுடர்விடும் காளி


சிந்தனையில் நினைவிருத்திச்
சிந்திட்டோம் கண்ணீர்
தந்திடுவாய் மாங்கல்யம்
தையலர்க்குக் காளி!

பூப்பெய்த வைத்தவள் நீ!
மாங்கல்யம் தந்தவள் நீ!
மழலைமொழி கேட்கவும் நீ
மனமிரங்காய் காளி!

குணக்குன்றாம் மகளிர்
கூப்பினர் கரங்கள்
மணவாழ்வை நல்கிடாய்
மங்கைநீ காளி!

சந்தோஷ சந்தோஷ என்று
சந்தானம் பெற்றிட
சந்தனம் சாத்தினோம்
தாயேநம் காளி!

(பாடியவர் வே. வரதசுந்தரம்)



# நன்றி

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

தட்சண கைலாயமெனப் போற்றப்படும் கிழக்கிலங்கையின் திருக்கோணமலையில் வீற்றிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேற உதவி புரிந்த உள்ளங்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

"கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்ற கூற்றுக் கிணங்க அம்பாளுக்கு இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணிக்கு பொருளுதவி, நிதி உதவி வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களுக்கும், இரவுபகல் பாராது சரியைத் தொண்டு புரிந்தவர்களுக்கும் இராஜ கோபுர கட்டுமானப் பணிகளிலீடுபட்ட ஸ்தபதிகள், ஆசாரிமார்கள், சிற்பங்களை அழகுற செய்து தந்த இந்தியாவிலிருந்து வருகைதந்த ஸ்தபதிகள், ஆசாரியர்களுககும் வர்ண வேலைகள் புரிந்த ஆசாரியார்களுக்கும், கோபுர கலசங்களைச் செய்துதந்த ஆசாரியாருக்கும் கும்பாபிஷேகக் கிரியைகளை பக்திவயப்பட செய்துதவிய சிவாச்சாரியப் பெருந்தகைகளுக்கும் முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை நேரடியாக ஒலிபரப்புச் செய்துதவிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர்க்கும் ஏனைய வெளிநாட்டு வானொலிச் சேவையினர்க்கும், கும்பாபிஷேகத்தை நேரடியாக காணமுடியாத அடியார்களுக்குப் பின்னர் கண்டுமகிழும் வகையில் ஒளிபரப்புச் செய்துதவிய இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினர்க்கும், எண்ணெய்காப்பு முதல் கும்பாபிஷேகம் வரையிலான நாட்களில் சிறந்த சேவையினை வழங்கிய திருக்கோணமலை மாவட்ட சாரணர்களுக்கும், சென்ஜோன்ஸ் ஸ்தாபனத்தினர்க்கும், மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், சிறந்த முறையில் ஒலி, ஒளி அமைப்புசெய்தவர்களுக்கும் இசைக் கலைஞர்களான நாதஸ்வர, தவில் வித்துவான்களுக்கும் மண்டலாபிஷேக காலங்களில் 45 நாட்களுக்கும் நிகழ்சிகள் தந்துதவியவர்களுக்கும் எனது உளம்கனிந்த நன்றிகள்.

கும்பாபிஷேகத்தை நினைவுபடுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த மலரிற்கு ஆக்கங்களைத் தந்தவர்களுக்கும், அழகாக அச்சிட்டுத் தந்துள்ள ஸ்ரீ கணேசா அச்சகத்தினர்க்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி வழங்கிய உள்நாட்டு வெளிநாட்டு அடியார்கள் அன்பர்கள் ஆகியோர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அனைவருக்கும் அன்னை பத்திரகாளி அம்பாள் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்தருள வேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம்
"வேதாகமமாமணி"
**பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**
ஆதினகர்த்தா, பிரதமகுரு
பத்திரகாளி கோயில் தேவஸ்தானம்
திருக்கோணமலை.



Graphics Designed & Printed by: Unie Arts (Pvt) Ltd., Col-13, Tel.: 330195